## அர்ப்பணம்...

வானொலி மற்றும் தொலைக்காட்சியில் வெளிவந்த தேவசெய்திகளை எட்டாவது புத்தகமாக வெளியிடுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றோம்.

இப்புத்தகம் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்யும் ஊழியர்களுக்கும், சபை விசுவாசிகளுக்கும் பயனுள்ளதாக இருக்குமென்று நம்பி இப்புத்தகத்தை அவர்களுக்கு அர்ப்பணிக்கிறோம். 52 செய்திகளும் உங்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு உதவியாக இருக்க ஜெபிக்கிறோம். இப்புத்தகத்தை வாசித்த பின்பு உங்களுடைய உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் கொடுத்து உதவிடுங்கள். கர்த்தருடைய செய்தி தமிழகமெங்கும் மேலும் உலகமெங்கிலுமுள்ள தமிழ்பேசும் அனைவருக்கும் சென்றடையவேண்டும் என்ற உயர்வான நோக்கத்தோடு வெளியிடுகிறோம்.

நாம் சத்தியத்தை அறிந்துகொண்டதுபோல ஒவ்வொருவரும் சத்தியத்தை அறிகிற அறிவை அடைய வேண்டும். இப்புத்தகத்திற்கு ஓய்வு வேண்டாம். படித்து உங்களுடைய மேலான கருத்துக்களை எங்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்துவின் பணியில்,
**B. Arjunan & Glory Arjunan**


Order From
World Literature Publications
P.O.Box.5, Batlagundu - 624 202, South India.
E-mail:arjunanglory@gmail.com
Our Mobile : 9443558041 & 6379350509

Sharon Print System, Madurai - 2, Phone - 99439-33377


ரேடியோ மற்றும் டெலிவிஷன் தேவச் செய்திகள் 2013

கிறிஸ்துவின் சபையார் வழங்கும்

# கிறிஸ்துவின் வசனம்

ரேடியோ மற்றும் டெலிவிஷன்
தேவச் செய்திகள்

**2013**




செய்தியாளர்
**B. அர்ஜுனன்**

*Published by*
**The Word of Christ**

Vol.8

# THE WORD OF CHRIST

God's Message of Radio & Television
Presented by
Church of Christ

**2013**


Preacher

**B.ARJUNAN**

Published by
**THE WORD OF CHRIST**

**கிறிஸ்துவின் வசனம்**
**ரேடியோ மற்றும் டெலிவிஷன் தேவச் செய்திகள்**
**வெளியீடு**
**செய்தியாளர்: B. அர்ஜுனன்**

| | | | | |
|---|---|---|---|---|
| பாகம் - 1 | (2005 - 2006) | 2007 | - | 51 செய்திகள் |
| பாகம் - 2 | (2006 - 2007) | 2012 | - | 53 செய்திகள் |
| பாகம் - 3 | (2007 - 2008) | 2014 | - | 60 செய்திகள் |
| பாகம் - 4 | (2009) | 2019 | - | 52 செய்திகள் |
| பாகம் - 5 | (2010) | 2019 | - | 52 செய்திகள் |
| பாகம் - 6 | (2011) | 2020 | - | 53 செய்திகள் |
| பாகம் - 7 | (2012) | 2021 | - | 52 செய்திகள் |
| பாகம் - 8 | (2013) | 2021 | - | 52 செய்திகள் |




மாத இதழ் "**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**" மற்றும் மேற்கண்ட புத்தகங்கள் தேவைக்கு எங்களோடு தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளவும்.

**Whatsapp மூலம் பெற்றுக்கொள்ளலாம்**

**6379350509**

**Copyright: 2021**
**The Word of Christ Publications**
**First Printing, Tamilnadu - 2021**
**This Printing - 1000 Copies**



## ஆசிரியரைப் பற்றி...

அன்பான வானொலி மற்றும் தொலைக்காட்சி நேயர்களே, வாசகர்களே, நான் முதன் முறையாக சகோ.அர்ஜுனன் அவர்களை திண்டுக்கல் மாவட்டத்தில் சக்கையநாயக்கனூர் என்னும் கிராமத்தில் சபையின் சுவிசேஷ ஊழியத்திற்காகச் சென்றிருந்த பொழுது 1995 ஆம் ஆண்டில் சந்தித்தேன். அப்பொழுதிருந்தே சகோதரரையும் அவர் மனைவி சகோதரி குளோரி அர்ஜுனன் அவர்களையும், அவர்களுடைய ஊழிய வாஞ்சையையும், அர்ப்பணிப்பையும் நன்கு அறிந்திருக்கிறேன். சகோ.அர்ஜுனன் அவர்கள் வாசகரை அணுகும் முறை மிக நேர்த்தியானது. விசேஷமாக கேள்வி - பதில் முறையில் போதிக்கும் விதம் யாவரும் எளிதில் புரிந்து கொள்ளத்தக்க வகையில் உள்ளது.

மாவட்ட வாரியாக அவர் குடும்பமாக **"தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்"** பத்திரிகை கருத்தரங்கம், தேவ ஊழியர்களுக்கான ஐக்கியக்கூட்டம், வத்தலக்குண்டு பிராந்திய சபை ஊழியம், தபால்முறை வேதபாட வகுப்புகள், தமிழ்நாடு மாநில அளவிலான கிறிஸ்துவின் சபை ஊழியர்களுக்கான குடும்ப ஐக்கியக் கூட்டம். தேவ ஊழியர்கள் செய்துவரும் கிறிஸ்துவின் சபை ஊழியங்களில் தாமாகவே குடும்பமாக பங்கு பெற்று, சபைகளை ஸ்திரப்படுத்தி ஆவிக்குரிய வளர்ச்சிக்கு மிகுந்த பக்கபலமாக இருந்து வருகிறார்கள்.

கிறிஸ்துவின் வசனம் வானொலி செய்தி தொடர்பாக இலங்கைக்கு அவர்கள் குடும்பமாக பயணம் செய்வதற்கான ஆயத்தப்பணிகளில் எனது சிறிய பங்களிப்பு இருந்ததை சகோதரர் அர்ஜுனன் அவர்கள் நன்றியுடனே என்னுடன் பகிர்ந்து கொள்வதுண்டு. அவ்வகையில் ஆசிரியரைப் பற்றி நான் எழுதுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். "சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் திருவசனத்தை ஜாக்கிரதையாய்

பிரசங்கம்பண்ணு" என்று அப்.பவுல் 2தீமோ.4:1 ல், தீமோத்தேயுவுக்கு எழுதியதற்கு ஏற்ப சகோதரர் ஜாக்கிரதையாய் வசனத்தைப் பிரசங்கம் பண்ணுவது மாத்திரமல்ல, மற்ற ஊழியர்களையும் அவ்வாறு செய்யும்படி உற்சாகப்படுத்தி வருகிறார்கள். அவ்வகையான உற்சாகம் ஒவ்வொரு நாளும் பலவகையில் ஒளிர்கிறது என்பது மிகையல்ல. எனவே இந்த கிறிஸ்துவின் வசனம் வானொலி மற்றும் தொலைக்காட்சி செய்திகள் மிகுந்த பயன் உள்ளதாக இருக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. நீங்கள் யாவரும் இப்புத்தகத்தை ஆழ்ந்து கற்றறிந்து அழிவில்லாத தேவனுடைய நித்திய ராஜ்யத்தின் பலன்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

தேவகிருபையும் சமாதானமும் நம் அனைவரோடும் கூட இருப்பதாக!

கர்த்தரின் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,
K.R.K. **ரவி ஆசீர்,** சபை போதகர்
கிறிஸ்துவின் சபை, தூத்துக்குடி
*25th Dec. 2021*



# பொருளடக்கம்


1. **இடைவிடாமல் உன் தேவனை நம்பிக்கொண்டிரு – Wait On Your God Always**
2. **தடுக்கல் – Stumbling block**
3. **ஆத்துமா ஈடேற நாம் செய்யவேண்டியதென்ன? – What Should We Do To The Saving Of Soul?**
4. **பெரிய தீங்கு – A Great Evil**
5. **ஆதி அன்பு – The First Love**
6. **கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம் – For to Me, to Live Is Christ and Die Is Gain**
7. **விசுவாசத்தின் கதவு – The Door of Faith**
8. **எதற்காக வேதாகமம் கொடுக்கப்பட்டது? – For What was the Bible Given?**
9. **உனக்காக வேண்டிக்கொண்டேன் – I Have Prayed for You**
10. **கர்த்தர் தம்மை தாமே ஒப்புக்கொடுத்த விதம் – The Way, the Lord gave Himself**
11. **கர்ப்பவேதனை – Pains of Childbirth**
12. **சத்தியத்தின் பயன்கள் – The Uses of the Truth**
13. **தீர்க்கதரிசியின் மதிகேடு – The Madness of the Prophet**
14. **கிருபையில் பலப்படு – Be Strong In the Grace**
15. **வாக்குத்தத்தம் – Promise**
16. **எனக்குள் வாசமாயிருக்கிற பாவம் – Sin that Dwelth in Me**
17. **இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள் – Pray Without Ceasing**
18. **கர்த்தரிடத்திலே அநியாயம் இல்லை – There is No Iniquity with the Lord**
19. **எசேக்கியா - Isakkiya**
20. **விழித்திரு – Watch**
21. **நற்சீர் பொருந்துங்கள் – Become Complete**
22. **நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள் – Hold Fast What is Good**
23. **இக்கட்டிலும் வேதத்தைப் பற்றிக்கொண்ட தாவீது – David, Who grabed the Scripture in His Trouble**
24. **நான் உமது அடியேன் – For I Am Your Servant**
25. **பாவம் எப்படி நிவர்த்தியாகும்? – How is Sin Purged?**
26. **ஒரே மந்தை, ஒரே மேய்ப்பன் – One Flock and One Shepherd**

27. துணிவு – Boldness
28. தேவனால்வரும் ஆசீர்வாதம் – Blessing Comes from God
29. எருசலேம் – Jerusalem
30. ஊக்கமான அன்பு – The Fervent Love
31. உன் நம்பிக்கை வீண்போகாது – Your Hope Will not Cut Off
32. ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள் – Serve One Another
33. அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பது சவாலான ஒன்று – Enter His Rest is the Challenge
34. நாம் தேவனிடம் செல்ல வேண்டுமா? அல்லது அவர் நம்மிடம் வரவேண்டுமா? – Should We Go To God? or Should He Come To Us?
35. அழிவில்லா வித்து - Incorruptible Seed
36. எனக்கு அதிகாரமுண்டு – Permissible for Me
37. முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான், பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார் – The First man Adam Became Living Being, The Last Adam Became a Life Giving Spirit
38. புது இருதயம் புது ஆவி – A New Heart and A New Spirit
39. நீதியினிமித்தம் துன்பம் – Persecuted for Righteousness
40. இயேசு கிறிஸ்து – Jesus Christ
41. ஞானம் மற்றும் புத்தி – Wisdom and Understanding
42. உபத்திரவத்திலே மேன்மை பாராட்டுகிறோம் – We Also Glory In Tribulation
43. எச்சரிக்கை – Admonition
44. பிரதான கட்டளை – The Great Commission
45. தகுதி – Worth
46. கர்த்தருக்குப் பிரியம் – Acceptable to the Lord
47. அவருடைய தீர்மானம் – His Purpose
48. உங்கள் வாசல்களில்... – In Your Gates...
49. உங்கள் பக்திவிருத்திக்காக... – ... For Your Edifing
50. நான் வெட்கப்படேன் – I Am Not Ashamed
51. மேய்ப்பரே கர்த்தருடைய வார்த்தையை கேளுங்கள் – Shepherds, Hear the Word of the Lord
52. உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செவ்வைப்படுத்துங்கள் – Straight Paths for Your Feet



## 1. இடைவிடாமல் உன் தேவனை நம்பிக்கொண்டிரு Wait On Your God Always

இப்புத்தாண்டில் இது உங்களுடைய தீர்மானமாய் இருக்கட்டும். இடைவிடாமல் உன் தேவனாகிய கர்த்தரை நம்பிக்கொண்டிருக்கும் போது கர்த்தர் பெரியகாரியங்களை உங்களில் செய்வார். தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலருக்கு, கர்த்தர் தீர்க்கதரிசியாகிய ஓசியா மூலமாக பேசும்போது; "இப்போதும் நீ உன் தேவனிடத்தில் திரும்பு; தயவையும் நியாயத்தையும் கைக்கொண்டு, இடைவிடாமல் உன் தேவனை நம்பிக்கொண்டிரு" என்று சொல்லப்பட்டது (ஓசியா 12:6). இந்நாட்களில் ஜீவிக்கிறதான நீங்களும், நானும் இஸ்ரவேலின் தேவனை நாம் இடைவிடாமல் நம்பும்போது வாக்குமாறாத தேவன் நம்முடைய வாழ்க்கையிலும் பெரிய காரியங்களைச் செய்வார். முதலாவது தேவன் நம்மிடம் எதிர்பார்ப்பது என்னவென்றால்; **நாம் தேவனிடத்திற்கு திரும்ப வேண்டும்.** தேவனிடத்திற்கு திரும்பாமல் ஒரு ஆசீர்வாதத்தையும் அவருடைய சமுகத்தில் பெற்றுக்கொள்ள முடியாது.

நினிவேயின் ஜனங்கள் மனந்திரும்பும்படியான ஒரு வாய்ப்பை தம்முடைய தீர்க்கதரிசியாகிய யோனா மூலமாக நினிவேயின் ஜனங்களுக்கு கொடுத்தார். அப்பொழுது இருந்த ஜனங்கள் யோனாவின் மூலமாக கொடுக்கப்பட்ட தேவனுடைய எச்சரிப்பின் வார்த்தைக்கு செவிகொடுத்து உடனே இரட்டுடுத்திக்கொண்டார்கள். "அவர்கள் தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பினார்களென்று தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து, தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தார்" என யோனா 3:10-ம் வசனத்தில் படிக்கிறோம். நினிவேயின் ஜனங்களும் அந்த ராஜாவும் மனந்திரும்பும்போது தேவன் அவர்களை மன்னித்து அந்தப்பட்டணங்களை அழிக்காது காத்து அவர்களை இரட்சித்தார்.

இன்றைக்கு நாமும் தேவனுடைய சத்தம்கேட்டு அவரிடத்திற்கு மனந்திரும்பும்போது நாமும் மன்னிப்பை அவருடைய சமுகத்தில் பெற்றுக்கொள்ளுவோம். ஆகையால் இவ்வருட துவக்கத்தில் நீங்கள் உங்களை முழுவதுமாக ஆண்டவருடைய சமுகத்தில் ஒப்புக்

கொடுங்கள். உங்களுடைய பொல்லாத வழியை விட்டு தேவனிடத்திற்கு திரும்புங்கள்.

இயேசு சொல்லும் ஒரு உவமையில் மனந்திரும்பிய ஒரு இளைய மகளைக்குறித்து லூக்கா 15:20-ம் வசனத்தில் படிக்கிறோம். அவன் "எழுந்து புறப்பட்டு, தன் தகப்பனிடத்தில் வந்தான். அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு, மனதுருகி, ஓடி அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்தான்" என்று வாசிக்கிறோம். மனந்திரும்பிய இளைய மகளை அவன் கண்டுகொள்ளாமல் இல்லை.

மனந்திரும்பி வந்த அவனை அவன் அன்போடு ஏற்றுக்கொண்டு, அவனுக்குவேண்டிய வஸ்திரங்களை தரித்து, அவனுக்கு மோதிரத்தையும், அவன் கால்களுக்கு பாதரட்சைகளையும் போட்டு, கொழுத்த கன்றை அடித்து சந்தோஷமாயிருந்தான். அதைப்போல மனந்திரும்புகிற எந்த ஒரு மகனையும், மகளையும் கர்த்தர் தம்மிடம் சேர்த்துக்கொள்ளும்படியாக ஆவலாக உள்ளார். நீங்கள் தேவனிடத்திலிருந்து பிரிந்துபோன ஒரு மனிதனாக இருக்கிறீர்களா? இன்றைக்கு தேவனிடத்திற்கு திரும்புங்கள். நீங்கள் இழந்துபோன ஆசீர்வாதங்களை இவ்வருடத்தில் திரும்பவும் பெற்றுக்கொள்ளுவீர்கள்.

**இரண்டாவது தயவையும் நியாயத்தையும் கைக்கொண்டிரு:** தேவனிடத்தில் திரும்பிய நீங்கள் மீண்டும் பாவியாகவே வாழ்ந்துகொண்டிருப்பதை தேவன் விரும்பவில்லை. அவருடைய சமுகத்தில் தயவையும் நியாயத்தையும் கைக்கொண்டு நடக்கவேண்டும். தேவன் இரக்கமுள்ளவராயிருக்கிறார். அவருடைய இரக்கத்திற்கு அளவே இல்லை. அவைகளைக்குறித்து நாம் வேதத்தில் படிக்கிறோம். முற்பிதாக்களின் காலத்தில் வாழ்ந்த எஸ்றா என்ற தேவனுடைய மனுஷன் " கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதின்படி செய்யவும், இஸ்ரவேலிலே கட்டளைகளையும் நீதிநியாயங்களையும் உபதேசிக்கவும் எஸ்றா தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான்" (எஸ்றா 7:10).

நீங்கள் இந்த எஸ்றாவைப்போல உங்களுடைய இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருக்கிறீர்களா? நம்முடைய இருதயம் பக்குவப்படும்



போது தேவனுடைய தயவையும் இரக்கத்தையும் பெற்றுக் கொள்ளுவோம். அவருடைய சமுகத்தில் இரக்கத்தைப் பெற்ற நாம் மற்றவர்களுக்கு இரக்கம் பாராட்டவேண்டும். நியாயமில்லா இந்த உலகத்தில், நியாயத்தையும் தயவையும் கைக்கொண்டு நடக்க வேண்டும். என்னதான் நியாயமாக நடந்தாலும் அக்கிரமக்காரர்களுக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியவில்லையே என்று நீங்கள் அங்கலாய்ப்பீர் களானால் உங்களுடைய பெலன் குறுகினதாயிருக்கும். முற்பிதாக்களின் நடபடிகளை நாம் திரும்பிப்பார்க்கவேண்டும். எஸ்றாவைப்போன்ற அநேக தேவனுடைய தாசர்கள் வேதத்தை முக்கியப்படுத்தி அதன்படி நடக்கவும், அதன்படி செய்யவும் தங்களை ஒப்புக்கொடுத்திருக்கிறதை நாம் பார்க்கிறோம். வேதத்தை நேசிக்கிறவர்களை கர்த்தர் நேசிப்பார். நாம் வேதத்தை நேசிக்கும்போது நம்முடைய இருதயம் பக்குவப்படும். நாம் தேவனுக்கு ஏற்றவர்களாவோம்.

அப்போஸ்தலனாகிய பவுல் ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது; "ஆகையால், தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார்; விழுந்தவர்களிடத்திலே கண்டிப்பையும், உன்னிடத்திலே தயவையும் காண்பித்தார்; அந்தத்தயவிலே நிலைத்திருப்பாயானால் உனக்குத் தயவு கிடைக்கும்; நிலைத்திராவிட்டால் நீயும் வெட்டுண்டுபோவாய்" என்கிறார் (ரோமர் 11:22). நாம் ஒலிவமரத்தில் ஒட்டவைக்கப்பட்ட கிளைகளாயிருக்கிறோம். தேவன் இஸ்ரவேலில் கண்டிப்புள்ளவராயிருந்தார். நம்மிடத்தில் தயவையும் இரக்கத்தையும் காண்பித்திருக்கிறார்.

அந்தத்தயவை நினைத்துப்பார்த்து நிலைத்திருக்கவேண்டும். நிலைத்திருந்தால் அந்த இரக்கம் நமக்கு உதவிடும். நிலைத்திராவிட்டால் ஆகாத கிளைகளை வெட்டிப்போடுவதுபோல நம்மையும் வெட்டிப்போடுவார். நாமும் தள்ளுண்டுபோவாம். ஆகையால் "சில கிளைகள் முறித்துப்போடப்பட்டிருக்க, காட்டொலிவமரமாகிய நீ அவைகள் இருந்த இடத்தில் ஒட்டவைக்கப்பட்டு, ஒலிவமரத்தின் வேருக்கும் சாரத்துக்கும் உடன்பங்காளியாயிருந்தாயானால், நீ அந்தக் கிளைகளுக்கு விரோதமாய்ப் பெருமைபாராட்டாதே; பெருமை பாராட்டுவாயானால், நீ வேரைச் சுமக்காமல், வேர் உன்னைச் சுமக்கிறதென்று நினைத்துக்கொள். நான் ஒட்டவைக்கப்படுவதற்கு

அந்தக் கிளைகள் முறித்துப்போடப்பட்டதென்று சொல்லுகிறாயே. நல்லது, அவிசுவாசத்தினாலே அவைகள் முறித்துப்போடப்பட்டன, நீ விசுவாசத்தினாலே நிற்கிறாய்; மேட்டிமைச் சிந்தையாயிராமல் பயந்திரு. சுபாவக்கிளைகளைத் தேவன் தப்பவிடாதிருக்க, உன்னையும் தப்பவிடமாட்டார் என்று எச்சரிக்கையாயிரு" என்கிறார் (ரோமர் 11:17-21). இந்த எச்சரிப்பின் சத்தம் வேதாகமத்தில் தொனித்துக் கொண்டேயிருக்கிறது. எச்சரிப்பின் சத்தம்கோட்டு தயவையும் நியாயத்தையும் கைக்கொண்டு நடவுங்கள்.

**மூன்றாவதாக இடைவிடாமல் உன் தேவனை நம்பிக்கொண்டிரு** என்று ஓசியா 12:6-ல் வாசித்தோம். ஆம், நாம் இடைவிடாமல் தேவனை நம்பிக்கொண்டிருக்கவேண்டும். உங்களுடைய நம்பிக்கை எப்படிப்பட்டதாக இருக்கிறது? இன்று இருந்து நாளை அடுப்பிலே போடப்படும் புல்லைப்போல உங்களுடைய நம்பிக்கை இருக்கக்கூடாது. கன்மலையின் மேல் அஸ்திபாரம் போடப்பட்டவர்களாக இருந்துகொண்டு உங்கள் தேவனை இடைவிடாமல் நம்பிக்கொண்டிருக்கவேண்டும். சங்கீதக்காரன் சொல்லுகிறான்; "நான் கர்த்தரை நோக்கி; நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன்" என்கிறார் (சங்.91:2). அந்த சங்கீதம் முழுவதும் அவருடைய நம்பிக்கையை நாம் காணமுடிகிறது.

தேவனே நம்முடைய நம்பிக்கையும் அடைக்கலமுமாயிருக்கிறார். அவரை நம்பிக்கையாக கொண்டவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போனதில்லை. தாவீதை தேவன் பெலப்படுத்தினார். ஆடுகளின் பின்னே சென்ற அவனை அழைத்து தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலை வழிநடத்தும்படியாக தெரிந்துகொண்டார். அவரை சார்ந்துகொண்டு அவருடைய ஆலோசனைகளைப் பெற்று இஸ்ரவேலை அற்புதமாக வழிநடத்திக்கொண்டு வந்தான். அவனுடைய ராஜ்யபாரத்தை கர்த்தர் ஆசீர்வதித்தார். அவனுடைய ராஜ்யபாரத்தில் ஜனங்கள் நிம்மதியோடிருந்தார்கள்.

அவனுடைய ராஜ்யபாரத்தில் தேவன் அவனுக்கு வெற்றியைக் கட்டளையிட்டார். அவர்களுக்கு தேவன் அரணும்கோட்டையுமாக இருந்தார். அவருடைய சமுகம் அவர்களைவிட்டு பிரியாதிருந்தது. தாவீது



தன்னுடைய நாட்களில் அதிகமாக தேவசமுகத்தையே நாடினார். அப்படியென்றால் இடைவிடாமல் தன் தேவனை நம்பிக்கொண்டிருந்தார் என்றே சொல்லலாம்.

அப்போஸ்தனாகிய பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதின கடிதத்தில் "இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்" என்று எழுதுவதை வாசிக்கிறோம் (1தெச.5:17). தேவனுக்கும் நமக்கும் இடைவெளி வந்துவிடாது ஜெபிக்கிறவர்களாக இருக்கவேண்டும். சிலர், சிலருடன் பேசுவதில்லை. அதற்கு காரணம் என்ன? அவர்களுக்குள் ஏதோ கருத்துவேறுவாடு அல்லது ஏதோ பிடிக்காத சில செயல்பாடுகள் ஏற்பாட்டு இருவரும் பிரிந்து விட்டனர் என்று சொல்லப்படுவதை கேள்விப்படுகிறோம். தேவனுக்கும் நமக்கும் இடையில் பிரிவு என்பது உண்டாகவே கூடாது. அப்படி உண்டாகுமானால் நாம் தேவனுக்கு ஏற்காத ஏதோ சில காரியங்களை செய்திருக்கிறோம்.

ஆகையால் ஜெபம் தடைபட்டுவிட்டது என அறிகிறோம். இடைவிடாமல் ஜெபத்தில் நிலைத்திருக்கிறோம் என்றால்; நாம் கேட்டவைகளை பெற்றுக்கொள்ளுகிறோம். தேவன் நம்முடைய ஜெபத்தைக் கேட்டு அதற்குச் செவிகொடுக்கிறார். நாமும் அவருடைய வார்த்தைகளைக் கேட்டு அதன்படி வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறோம். தேவன் அந்த வாழ்க்கையை பார்த்து ஆசீர்வதிக்கிறார். இது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. இடைவிடாது ஜெபத்தில் தரித்திருப்பதற்கு வழியாகவும் இருக்கிறது.

சிமியோன் என்றவன் இஸ்ரவேலின் ஆறுதல்வரக் காத்திருந்தான். அவன் நீதியும் தேவபக்தியும் உள்ளவனாயும் இருந்தான் அவன்மேல் பரிசுத்த ஆவி இருந்தார் என லூக்கா 2:25-ல் காண்கிறோம். இவனுடைய நம்பிக்கை வீண்போகவில்லை. ஆறுதலின் தேவனை தன்கைகளில் ஏந்திக்கொண்டு கர்த்தரை ஸ்தோத்திரித்தான். இடைவிடாது கர்த்தர் மீது நம்பிக்கையுள்ள ஒரு மனுஷனாக இருந்தான். இவ்விதமாக ஜீவிப்பவர்கள் இன்றும் கர்த்தரால் ஆசீர்வததிக்கப் படுகிறார்கள். நீங்கள் இவர்களைப்போல ஆசீர்வதிக்கப்பட இடைவிடாது உங்கள் தேவனை நம்பிக்கொண்டிருங்கள்.

### கேள்வி நேரம்

**தானியேலின் பக்தி எப்படிப்பட்டதாயிருந்தது?**

தானியேலைப்பற்றி அறியாதவர்களே இருக்கமுடியாது. அவன் தரியுவின் ராஜ்யபாரத்தில் வாழ்ந்தவனாயிருந்தான். அவனுடைய பக்தியைப்பற்றி தரியுவின் ராஜ்யபாரம் எங்கும் பேசப்பட்டது. தரியு ராஜாவும் அவனுடைய பக்தியை அறிந்திருந்தார். ஒரு முறை தானியேல் குற்றஞ்சாட்டப்பட்டு சிங்கங்களின் கெபியில் அடைக்கப்பட்டார். அவர் ஒரு குற்றமும் செய்யவில்லை. எருசலேமுக்கு நேராகப் பலகணிகள் திறந்திருக்க அங்கே தான் முன் செய்துவந்தபடியே, தினமும் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழுங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, ஸ்தோதிரம் செலுத்திவந்தார். இந்த குற்றத்திற்காக அவர் சிங்கங்களின் கெபியில் அடைக்கப்பட்டார். சிங்கங்களை உண்டாக்கின கர்த்தர் ஒரு குற்றமும் செய்யாத தானியேலை சிங்கங்கள் கடித்துவிடாதிருக்க சிங்கங்களின் வாய்களை கட்டிப்போட்டார்.

தரியு ராஜாவோ இராமுழுதும் போஜம்பண்ணாமலும், கீதவாத்தியம் முதலானவைகளைத் தனக்கு முன்பாக வரவொட்டாமலும் இருந்து காலமே கிழக்கு வெளுக்கும்போது சிங்கங்களின் கெபிக்குச் சென்று "தானியேலே, ஜீவனுள்ள தேவனுடைய தாசனே, நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைச் சிங்களுக்குத் தப்புவிக்க வல்லவராயிருந்தாரா என்று கேட்டான். அப்பொழுது தானியேல்; ராஜாவே, நீர் என்றும் வாழ்க" என்று சொன்னான் (தானி.6:20,21). தானியேலின் பக்தியினால் தரியுவின் ராஜ்யபாரம் எங்கும் கர்த்தரை அறிந்து கொண்டு இடைவிடாமல் கர்த்தரை ஆராதித்தனர். உங்களுடைய பக்தியும் அப்படியாக இருக்கட்டும்.

## 2. தடுக்கல்
## Stumbling block

**இ**டையூறு செய்யும் அநேகரை நாம் அநுதின ஜீவியத்தில் காண்கிறோம். இதினால் அநேகர் மனவேதனை அடைகின்றனர். ஒவ்வொரு மனிதனும் அன்றாட வாழ்க்கையில் சந்திக்கவேண்டிய காரியங்கள் அதிகமாக இருக்கிறது. அவனவனுடைய தேவைகளை சந்திப்பதற்கே நேரமில்லாமல் மனிதன் கஷ்டப்படுகிறான். இதில்



ஒருவனுக்கு விரோதமாக மற்றொருவன் தடுக்கலையும், இடையூரு செய்வதையும் கேள்விப்படுகிறோம். இவ்விதமாக இடையூறு செய்கிறவர்களைக் குறித்து வேதம் என்ன போதிக்கிறது என்பதை இச்செய்திவேளையில் தியானிப்போம். அப்போஸ்தலனாகிய பவுல் ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதின கடிதத்தில் "இப்படியிருக்க, நாம் இனிமேல் ஒருவரையொருவர் குற்றவாளிகளென்று தீர்க்காதிருப்போமாக, ஒருவனும் தன் சகோதரனுக்கு முன்பாகத் தடுக்கலையும் இடறலையும் போடலாகாதென்றே தீர்மானித்துக்கொள்ளுங்கள்" என எழுதுகிறார் (ரோம.14:13). பவுலும் தன்னுடைய வாழ்க்கையில் இப்படிப்பட்ட இடற்பாடுகளுக்கு மத்தியில் வாழ்ந்திருக்கிறார்.

உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; "கன்னானாகிய அலெக்சந்தர் எனக்கு வெகுதீமை செய்தான்; அவனுடைய செய்கைக்குத்தக்கதாகக் கர்த்தர் அவனுக்குப் பதிலளிப்பாராக. நீயும் அவனைக் குறித்து எச்சரிக்கையாயிரு; அவன் நம்முடைய வார்த்தைகளுக்கு மிகவும் எதிர்த்துநின்றவன்" என்கிறார் (2தீமோ.4:14,15). பவுலுக்கு அலெக்சந்தர் வெகு தீமைசெய்ததாக எழுதுகிறார். இவ்வளவு தீமைகளை செய்திருந்தபோதும் பவுல் அலெக்சந்தருக்கு ஒரு தீங்கும் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஒரு வார்த்தை பேசினால் பத்து வார்த்தைபேசுவார்கள். இல்லையென்றால் சிலருக்குத் தூக்கம் வராது. ஆனால் இத்தனை தீங்குகளையும் அநுபவித்துக்கொண்டு ஒரு பொல்லாப்பையும் செய்யாது தன்னைக் காத்துக்கொண்டவர் அப்போஸ்தலனாகிய பவுல். ஏனெனில் அவனுடைய செய்கைக்குத்தக்கதாகக் கர்த்தர் அவனுக்குப் பதிலளிப்பாராக என்று தேவ சமுகத்திற்கு அதைவிட்டுவிட்டார்.

நம்மில் எத்தனைபேர் இந்தவிதமாக கர்த்தர் பார்த்துக் கொள்ளுவார் என்று விட்டுவிடுகிறோம். அவனுக்கு பதிலுக்கு பதிற்செய்வேன் என்று நீங்கள் சொல்லுவீர்களானால் இன்னும் நீங்கள் நியாயப்பிரமாணத்தின்படி வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள் என்றுதான் அர்த்தம். நியாயப்பிரமாணத்தை நிறைவேற்ற வந்த ஆண்டவரின் சத்தம் கேட்டு அவ்வசனத்திற்கு உங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுங்கள். இந்த பவுல் ஒருகாலத்தில் இந்த கிறிஸ்தவ மார்க்கத்தார்களை மிகவும் துன்பப்படுத்தினவன். அவன் சொல்லும்போது; "நான் இந்த

மார்க்கத்தாராகிய புருஷரையும் ஸ்திரீகளையும் கட்டி, சிறச்சாலைகளில் ஒப்புவித்து, மரணபரியந்தம் துன்பப்படுத்தினேன்" என்கிறான் (அப்.22:4). அப்படியிருந்த இந்த பவுலை கர்த்தர் ஒருமுறை சந்தித்தார்; கர்த்தர் தம்மை சந்தித்த விதத்தை அவன் விவரித்துச் சொல்லுகிறான். "சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று என்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான்: ஆண்டவரே, நீர் யார் என்றேன், அவர்; நீ துன்பப்படுத்துகிற நசரேயனாகிய இயேசு நானே என்றார்" (அப்.22:7,8).

இந்த சந்திப்புக்குப் பின் அவன் கர்த்தரை ஏற்றுக்கொண்டு அவரையும் அவருடைய இரட்சிப்பையும் அறிவிக்கும் ஒரு மாபெரும் அப்போஸ்தலனாக மாற்றப்பட்டான் என காண்கிறோம். அநேகருக்கு தடுக்கலை உண்டாக்கிய பவுல் அநேகர் இரட்சிக்கப்படுவதற்கு ஏற்ற கருவியாக மாற்றப்பட்டான். ஆகையால் அவன் சொல்லும்போது ஒருவனும் தன் சகோதரனுக்கு முன்பாக தடுக்கலைப்போடக்கூடாது என்று எழுதுகிறான்.

யோசேப்பின் சகோதரர்கள் யோசேப்பின் மீது பொறாமைகொண்டு அவனுக்கு இடையூரு செய்தார்கள். அவன் ஒருமுறை தன்சகோதரர்களை காணும்படியாக சென்று இருந்தபோது அவர்கள் "ஒருவரை ஒருவர் நோக்கி: இதோ, சொப்பனக்காரன் வருகிறான், நாம் அவனைக் கொன்று, இந்தக் குழிகள் ஒன்றில் அவனைப் போட்டு, ஒரு துஷ்டமிருகம் அவனைப் பட்சித்தது என்று சொல்லுவோம் வாருங்கள்; அவனுடைய சொப்பனங்கள் எப்படி முடியும் பார்ப்போம் என்றார்கள்" (ஆதி.37:19,20). ஆனால் நடந்தது என்ன? யோசேப்பு தேவனால் உயர்த்தப்பட்டான்.

தனக்கு விரோதமாக இடையூறு செய்த தன் சகோதரர்களுக்கு அவன் பதிற்செய்யாமல் அவர்களுக்கு உதவி செய்தான். இயேசுவானவர் சொல்லும்போது; "இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல. உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து, அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய்" என்கிறார் (மத்.18:14,15).



நாமும் இச்சிறியரில் ஒருவனையும் அற்பமாக எண்ணாமலும் அவர்களுக்கு இடையூறு செய்யாமலும் இருந்து அவர்களுடைய குற்றத்தை உணர்த்த முற்படுவோம்.

மேலும், கர்த்தர் சொல்லும்போது; "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல்லைக் கட்டி, சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும்" என்கிறார் (மத்.18:6). மற்றவர்களுக்கு இடையூறு செய்கிறவர்களை கர்த்தர் பார்க்கிறார். அதிலும் குறிப்பாக அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்களுக்கு இடறல் உண்டாக்குகிறவர்களை தண்டியாமல்விடார்.

ஆகையால் கர்த்தருடைய சகோதரருக்கு விரோதமாக இடையூறு செய்யாதிருங்கள். "இடறல்களிமித்தம் உலகத்துக்கு ஐயோ, இடறல்கள் வருவது அவசியம், ஆனாலும் எந்த மனுஷனால் இடறல் வருகிறதோ, அவனுக்கு ஐயோ!" என்கிறார் (மத்.18:7). நீங்கள் எப்படி வாழ்ந்துகொண்டு இருக்கிறீர்கள்? மற்றவர்களுக்கு இடறலாக வாழ்ந்துகொண்டு இருக்கின்றீர்களா! அப்படியானால் உங்களுக்கு ஐயோ என வேதம் சொல்லுகிறது.

பேதுரு ஒருமுறை ஆண்டவருக்கு ஆலோசனை சொன்னான்; "அவரோ திரும்பிப் பேதுருவைப் பார்த்து: எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய்; தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய் என்றார்" (மத்.16:23). அவர் தம்முடைய மரணத்தைக்குறித்துப் பேசிக்கொண்டிருந்தார். அவனோ இது உமக்கு நேரிடக்கூடாதே என்றான். ஆகையால் அவனைப் பார்த்து சாத்தானே நீ எனக்கு இடறலாயிருக்கிறாய் என்றார். இவ்விதமாக அநேகர் மற்றவர்களுக்கு இடறலாக இருந்துகொண்டு தேவனுடைய சித்தத்தை செய்யவிடாமல் தடுக்கிறவர்களாக இருப்பார்கள். அவர்களுடைய என்னமெல்லாம் அவர்களுக்காக பரிந்துபேசுவதுபோல் இருக்கும் ஆனால் அப்படிப்பட்டவர்கள் இடறலாக இருப்பார்கள். சவுல் தன் மகனுக்கு நல்லது சொல்வதைப்போல சொன்னான். அது

யோனத்தானுக்கு இடறலாக இருந்தது. ஆகையால் "யோனத்தான் தன் தகப்பனாகிய சவுலுக்குப் பிரதியுத்தரமாக: அவன் ஏன் கொல்லப்பட வேண்டும்? அவன் என்ன செய்தான் என்றான்" (1சாமு.20:32). தாவீதை பலிவாங்கும் எண்ணத்தில் சவுல் பல திட்டங்களை தீட்டினான் ஒன்றும் பழிக்காமற்போனது. யோனத்தானும் தாவீதும் நல்ல சிநேகிதர்களாக இருந்தார்கள். இதை பிரிக்கும்படியாக சவுல் பல தந்திரங்களை கையாண்டான். தேவன் சகோதர சிநேகத்தை விரும்புகிறார்.

எபிரெய ஆசிரியர் எழுதும்போது; "சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்கடவது" என்று எழுதுகிறார் (எபி.13:1). சகோதரர்கள் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை இன்பமானது என தாவீது பாடுகிறார். சகோதர சிநேகம் என்பது அன்பின் அடையாளமாக இருக்கிறது. சகோதர சிநேகத்தில் தேவனுடைய உதவிகரம் இருக்கிறது. ஆகையால் இப்படிப்பட்ட சிநேகத்தில் இடறல் உண்டாக்காதிருக்க வேண்டும்.

கடைசியாக பவுல் ரோம.14:13-ம் வசனத்தை முடிக்கும்போது தடுக்கலையும் இடறலையும் போடலாகாதென்றே தீர்மானித்துக் கொள்ளுங்கள் என்று எழுதுகிறார். இந்த விஷயத்தில் நாம் தீர்மானமாக இருக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். ஏனெனில்; "அன்பானது பிறனுக்குப் பொல்லாங்குசெய்யாது; ஆதலால் அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது" (ரோம.13:10). அன்பு இருக்கும் இடம் தேவன் இருக்கும் இடம். தேவன் அன்பாகவே இருக்கிறார் என்று அறிகிறோம்.

அன்பு நிறைவானது. அன்பு நிறைந்தவன் எல்லாவற்றிலும் பூரணப்பட்டவன். ஆகையால் இயேசுவானவர் சொல்லும்போது; "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்ளுபவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான்" என்கிறார் (மத்.5:22). எனவே, ஒருவனையும் வீண்வார்த்தைகளினாலே திட்டி மேற்கண்ட தீர்ப்புக்கு ஏதுவாயிராதபடிக்கு எச்சரிக்கையாயிருப்போம். அவன் நின்றாலும்



விழுந்தாலும் தேவனுக்கே கணக்கு ஒப்புவிக்கவேண்டிய வனாயிருக்கிறான். கூடுமானால் நம்மால் முடிந்த அளவு யாவருக்கும் நன்மைசெய்யக்கடவோம். தேவன் நல்லோர்மேலும் தீயோர் மேலும் நீதியின் சூரியனை உதிக்கப்பண்ணியிருக்கிறார். அவருக்கே நாம் எல்லோரும் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். மேலும் யாக்கோபு சொல்லும்போது; "சகோதரரே ஒருவருக்கொருவர் விரோதமாய்ப் பேசாதிருங்கள்; சகோதரனுக்கு விரோதமாய்ப் பேசி, தன் சகோதரனைக் குற்றப்படுத்துகிறவன் நியாயப்பிரமணத்திற்கு விரோதமாய்ப்பேசி நியாயப்பிரமாணத்தைக் குற்றப்படுத்துகிறான்; நியாயப்பிரமாணத்தைக் குற்றப்படுத்துவாயானால், நீ நியாயப் பிரமாணத்தின்படி செய்கிறவனாயிராமல், அதற்கு நியாயாதிபதி யாயிருப்பாய்" என்கிறார் (யாக்.4:11). ஆகையால் சகோதரனை குற்றப்படுத்துகிற விஷயத்தில் நாம் மிகவும் கவனமுள்ளவர்களாக எச்சரிக்கையாக இருந்து அப்படிப்பட்டவர்களுக்கு முன்பாக தடுக்கலையும் இடறலையும் போடலாகாதென்றே தீர்மானமாக இருக்கவேண்டும்.

கர்த்தர் ஒருவரே அவர்களை விசாரிக்கிறவராயிருக்கிறார். "தன் சகோதரனைப் பகைக்கிறவன் இருளிலே இருந்து இருளிலே நடக்கிறான்; இருளானது அவன் கண்களைக் குருடாக்கினபடியால் தான் போகும் இடம் இன்னதென்று அறியாதிருக்கிறான்" என்று 1யோவா.2:11-ல் படிக்கிறோம். இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு நண்பரே, நீங்கள் உங்கள் சகோதரனுக்கு முன்பாக தடுக்கலையும் இடறலையும் போடாதிருக்க தீர்மானித்துக்கொள்ளுங்கள். உங்களைப்போல அவர்களையும் கர்த்தர் நேசிக்கிறார். அவர்களும் இயேசுவின் இரத்தத்தினாலே கழுவப்பட்டவர்கள். உங்களால் முடிந்தால் சபையைச் சார்ந்த சகோதரர்களுக்கு உதவிசெய்யுங்கள்.

### கேள்வி நேரம்

**சகோதரனிடத்தில் அன்புகூராதவன் எதிலே நிலை கொண்டிருக்கிறான்?**

மரணத்தில் நிலைகொண்டிருக்கிறான் என 1யோவா.3:14-ங்கு சொல்லுகிறது. சகோதரரிடத்தில் அன்புகூருகிறவன் மரணத்தைவிட்டு

நீங்கி ஜீவனுக்குட்பட்டிக்கிறான். நீங்கள் மரணத்தில் நிலைகொண்டிருக்கிறீர்களா? அல்லது ஜீவனுக்குட்பட்டிருக்கிறீர்களா என்பதை தீர்மானித்துக்கொள்ளுங்கள். வாழ்க்கையின் முடிவில் ஒவ்வொருவரும் ஏதோ ஒன்றைச் சந்தித்தே ஆகவேண்டும். அதுவும் அது நித்தியமான முடிவாயிருக்கும் என்பதையும் அறிந்து கொள்ளவேண்டும். இங்கே நாம் என்னவேண்டுமானாலும் பேசலாம் எப்படிவேண்டுமானாலும் நடக்கலாம். ஆனால் இறுதியாக நியாயத்தீர்ப்பு என்று ஒன்று இருக்கிறது. அதற்கு யாரும் தப்பிக்கொள்ளமுடியாது. நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே ஒவ்வொருவரையும் தம்முடைய வார்த்தையின்படியே தீர்ப்பார்.

ஆகையால் நம்மைப்போல மாம்சத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிற ஒவ்வொருவரும் நம் சகோதர சகோதரிகளாக இருக்கிறார்கள் என்ற உணர்வோடு அப்படிப்பட்டவர்கள் செய்யும் தவறுகளை மன்னித்து அவர்களுக்கு விரேதமாக தடுக்கலையும், இடறலையும் உண்டு பண்ணாமல், அவர்களிடத்தில் அன்பு செலுத்தி அவர்களும் தேவனுடைய சமுகத்தை வந்தடையத்தக்கதாக நம்மால் முடிந்த உதவிகளை அப்படிப்பட்டவர்களுக்குச் செய்து உலக சமுதாயம் கர்த்தரை அறிந்துகொள்ள பாடுபடுவோம். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 3. ஆத்துமா ஈடேற நாம் செய்யவேண்டியதென்ன?
## What Should We Do To The Saving Of Soul?

**ந**ம்முடைய ஆத்துமா விலையேறப்பெற்றது. இந்த ஆத்துமா அழிவில்லாதது. அது ஈடேற வேண்டுமானால் அதற்கான ஆலோசனையை கொடுக்கும் வேதாகமத்தின் வசனங்களுக்கு நாம் முதலாவது செவிகொடுக்கவேண்டும். எபிரெய ஆசான் சொல்லும்போது; "மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள்" என்கிறார் (எபி.10:35).

ஆத்துமாக்களில் அநேகர் சோர்ந்துபோய் யோனாவைப்போல போதும் கர்த்தவே நான் இருக்கிறதைப் பார்க்கிலும் சாவதே மேல் என்று சொல்லிவிடுகிறார்கள். கர்த்தர் சகலத்தையும் அறிகிறார். நாம் எந்த ஒரு விஷயத்திலும் சோர்ந்துபோகாதிருக்க வேண்டும். நமக்கு இருக்கிறதான



பெலத்தோடு போராடவேண்டியவர்களாக இருக்கிறோம். வெளிப்படுத்தின விசேஷத்தில் ஏழு சபைகளுக்கு கர்த்தர் திருவுளம்பற்றும்போது; அதில் "உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; உனக்குக் கொஞ்சம் பெலன் இருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்" என்று சொல்லுகிறார் (வெளி.3:8).

ஒவ்வொரு சபைகளிலும் ஒவ்வொரு குறைகளை சுட்டிக்காட்டிக் கொண்டு வரும் கர்த்தர் இங்கே இந்த சபையை ஒரு விஷயத்தில் பாராட்டுகிறதை நாம் காண்கிறோம். உனக்கு கொஞ்சம் பெலன் இருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல் என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன் என்கிறார். இந்த சபையானது தனக்கு இருக்கிறதான கொஞ்ச பெலத்தோடே நிலைத்திருந்திருக்கிறதை நாம் காண்கிறோம். ஒவ்வொருவரும் இப்படியாக கர்த்தருக்குள் இருக்கிற அந்த கொஞ்ச பெலத்தோடே அவருடைய நாமத்தை என்னபோராட்டங்கள் வந்தாலும் மறுதலியாமல் இருந்து கொண்டு போராடுவார்களேயானால், அப்படிப்பட்டவர்களுக்கு திறந்தவாசல் வைக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய ஆத்துமாவும் ஈடேற வாய்ப்பு இருக்கிறது.

எபி.10:36-ல் வாசிக்கிறோம். "நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதைப் பெறும்படிக்கு பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது" என்று சொல்லுகிறார். மிக நல்ல விசுவாசிகள் கூட சிலவேளைகளில் பொறுமையை இழந்து விடுகிறார்கள். ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் கிறிஸ்தவ சகோதரிகளுக்கும் பொறுமை மிகவும் அவசியமான ஒன்றாகவே இருக்கிறது. நம்முடைய தேவன் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். அவரைப்பின்பற்றுகிறதான நாமும் நீடிய பொறுமையுள்ளவர் களாயிருக்கவேண்டுமென அவர் எதிர்பார்க்கிறார். ஆகையால் நாம், தேவன் வாக்குத்தத்தம் செய்த ஆசீர்வாதங்களைப் பெறும்படிக்கு பொறுமையோடிருக்க போதிக்கப்படுகிறோம். "என் பொறுமையைக் குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின்மேலெங்கும்

வரப்போகிற சோதனைகாலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்'' என்கிறார் (வெளி.3:10). வசனத்தை வாசிப்பதோடு நின்றுவிடக்கூடாது. சொல்லப்பட்டுள்ள வசனங்களை நம்முடைய நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்தவேண்டும். அப்பொழுது கர்த்தருடைய கரம் நமக்கு உதவியாயிருக்கும். யோபு என்ற தாசன் பொறுமையோடிருந்து இரட்டிப்பான ஆசீர்வாதங்களை தேவனுடைய சமுகத்தில் பெற்றுக்கொண்டான். தேவனுடைய செயலை யோபுடைய வாழ்க்கையில் நாம் காண்கிறோம்.

அதைப்போல நாமும் பொறுமையாக இருக்கவேண்டிய இடத்தில் பொறுமையுடன் இருக்கும்போது வரப்போகிறதான சோதனைக் காலத்திற்கு நம்மை தப்புவிப்பார். நாம் கர்த்தருடைய வசனங்களுக்கு கீழ்ப்படியும்போது அவர் நம்மை காக்கிற தேவனாயிருக்கிறார் என்தை நாம் அறிந்துகொள்ளுகிறோம்.

எபி.10:37-ல் ''வருகிறவர் இன்னுங் கொஞ்சகாலத்தில் வருவார், தாமதம்பண்ணார்'' என காண்கிறோம். இயேசுகிறிஸ்து வருவார் வருவார் என போதித்துக்கொண்டே இருக்கிறார்கள். ஆனால் அவர் இன்னும்வரவில்லையே என்று அநேகர் தங்களுடைய ஆத்துமாக்களில் சோர்ந்துபோகிறார்கள். நம்முடைய ஆத்துமா ஈடேற சோர்ந்துபோகாமல் அவருடைய வருகையை எதிர்நோக்கியவர்களாக காத்திருக்கவேண்டும். பத்து கன்னிகைகளில் ஐந்துபேர் எண்ணையோடு மணவாளனை எதிர்கொண்டுபோக ஆயத்தமுள்ளவர்களாக காத்திருந்து, மணவாளன் வரும்போது ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடேகூட கலியாண வீட்டுக்குள் பிரவேசித்தார்கள். அதைப்போல நாமும் ஆயத்தமுள்ளவர் களாய் இருக்கும்போது அவரோடே ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப் படுவோம். ஆகையால் ''இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக் கொண்டிரு'' என்கிறார் (வெளி.3:11).

நமக்கு இருக்கிற நம்பிக்கையோடே காத்திருக்கவேண்டும். அந்த நம்பிக்கையில் எள்ளளவும் சந்தேகம் கொள்ளாது நிலைத்திருக்கும்போது தேவனுடைய நித்தியமான இடத்தை சுதந்தரித்துக்கொள்ளுவோம். நம்முடைய நம்பிக்கை என்பது நமக்கு கொடுக்கப்பட்ட கிரீடத்தைப் போன்றது ஆகையால் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடி



உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு என்கிறார். யாராவது தனக்கு கிடைக்கப்பெற்ற கிரீடத்தை சாதாரண இடத்தில் வைப்பார்களா என்பதை எண்ணிப்பாருங்கள். அதை பாதுகாப்பான இடத்தில் வைப்பார்கள் அல்லவா? அதைப்போல உங்களுடைய நம்பிக்கையை பாதுகாத்துக்கொள்ளுங்கள் அதைப் பற்றிக்கொண்டிருங்கள். அப்பொழுது உங்களுடைய ஆத்துமா ஈடேறும். கர்த்தருடைய வருகை தாமதம் ஆவதால் அநேகர் தங்களுடைய நம்பிக்கையில் சோர்ந்துபோகிறார்கள். சிலர் விசுவாசத்திலிருந்து பின்வாங்கிப்போகிறார்கள். இப்படிப்பட்டவர்கள்மேல் அவர் பிரியமாயிரார் என காண்கிறோம்.

எபி.10:38-ல் ''விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின்வாங்கிப்போவானானால் அவன்மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார்''. ஆம் பின்வாகிப்போகிறவர்களை கர்த்தர் நேசிப்பதில்லை ஒருவேளை அப்படிப்பட்டவர்கள் மனந்திரும்பவேண்டும் என எதிர்பார்க்கிறார். ஒரு விசுவாசி தன்னுடைய விசுவாசத்தினாலே நிலைத்திருக்கும்போது அவன் தேவனால் ஆசீர்வதிக்கப்படுகிறான். அவன் பிழைக்கவே பிழைப்பான். ''ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன், அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை; என் தேவனுடைய நாமத்தையும் என் தேவனால் பரலோகத்திலிருந்திறங்கிவருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும், என் புதிய நாமத்தையும் அவன்மேல் எழுதுவேன் என்கிறார்'' (வெளி.3:12).

கிறிஸ்தவ வாழ்க்கையில் வெற்றியடைகிறவர்களுக்கு அநேக வாக்குத்தத்தங்களை கர்த்தர் வைத்திருக்கிறார். தேவனுடைய ஆலயத்திலே தாங்கி நிற்கிற தூண்களைப்போல அவர்கள் என்றென்றும் நிலைத்திருப்பார்கள். புதிய நாமத்தினாலும் அவர்கள் அழைக்கப் படுவார்கள். இத்தனை ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ள நாம் செய்யவேண்டியது பின்வாங்கிப்போகாமல் விசுவாசத்திலே நிலைத்திருக்கவேண்டும். தேவனுடைய சமுகத்தில் நாம் பெற்றுக் கொண்ட நம்முடைய ஆத்துமா ஈடேற தேவனுடைய வசனங்களில் நம்பிக்கைகொண்டு அவைகளில் வளர்ச்சியடைய வேண்டும். ஏசா என்ற மனிதனை அறிவீர்கள். அவன் தன்னுடைய சேஷ்டபுத்திர பாகத்தை விற்றுப்போட்டு ''பிற்பாடு அவன் ஆசீர்வாதத்தைச்

சுதந்தரித்துக்கொள்ள விரும்பியும் ஆகாதவனென்று தள்ளப்பட்டதை அறிவீர்கள்; அவன் கண்ணீர்விட்டு, கவலையோடே தேடியும் மனம் மாறுதலைக் காணாமற்போனான்" என்று எபிரெய ஆசான் குறிப்பிடுகிறார் (எபி.12:17). இவ்விதமாக பின்மாற்றம் அடைகிறவர்களை கர்த்தர் விரும்புவதில்லை. தனக்கு இருக்கிற விசுவாசத்தோடும், நம்பிக்கையோடும் நிலைத்திருக்கிறவர்களையே தேவன் விரும்புகிறார். அப்படிப்பட்டவர்களுக்கு அநேக வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை வைத்து வைத்திருக்கிறார் என காண்கிறோம். அவைகளைப் பெற்றுக்கொள்ள உங்களுடைய ஆத்துமா ஈடேற கர்த்தருடைய வசனத்திற்கு உங்களை ஒப்புக்கொடுங்கள்.

எபி.10:39-ல் "நாமோ கெட்டுப்போகப் பின்வாங்குகிறவர் களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம்" என்கிறார். ஆம் நம்முடைய ஆத்துமா கெட்டுப்போய்விடாதிருக்க நம்முடைய விசுவாத்தை வர்த்திக்கப்பண்ணவேண்டும். "ஆகையால் நீ கேட்டுப் பெற்றுக்கொண்ட வகையை நினைவுகூர்ந்து, அதைக் கைக்கொண்டு மனந்திரும்பு, நீ விழித்திராவிட்டால், திருடனைப்போல் உன்மேல் வருவேன்; நான் உன்மேல் வரும்வேளையை அறியாதிருப்பாய்" என்கிறார் (வெளி.3:3). வசனத்தை ஒவ்வொரு வாரமும் தவறாது கேட்கிறவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவைகளை தங்களுடைய வாழ்க்கையில் கடைபிடிக்கிறார்களா? என்று பார்த்தால் அவைகளை கேட்பதோடு நின்று விடுகிறார்கள்.

தங்களுடைய நடைமுறை வாழ்க்கையில் அவைகளை கடிபிடிக்க தவறிவிடுகிறார்கள். நீ கேட்டுப்பெற்றுக்கொண்ட வகையை நினைவுகூர்ந்து, அதைக் கைக்கொண்டு மனந்திரும்பு என்ற எச்சரிப்பின் சத்தம்கேட்டும், கைக்கொள்ளாமலும் மனந்திரும்பாமலும் இருக்கும்போது திருடனைப்போல் கர்த்தருடைய வருகையானது இருக்கும். அப்பொழுது அவருடைய சமுகத்திலிருந்து தள்ளப்படுவோம். ஆகையால் அன்பான சகோதரனே, சகோதரியே, "உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள். நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்



கொண்டிருப்போமாகில், கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர் களாயிருப்போம்" என தெளிவாக எபிரெய ஆசான் சொல்லுகிறார் (எபி.3:13,14). ஆரம்பவிசுவாசத்தை விட்டுவிடாதிருக்க நாம் போதிக்கப்படுகிறோம். ஆரம்பவிசுவாசம் நம்முடைய இருதயத்தில் ஆணிவேராயிருக்கிறது. அது முறியும்போது நம்முடைய ஜீவியம் ஆட்டம் காணும். அந்த நம்பிக்கையை விட்டுவிடாதிருப்போமானால் ஆண்டவரோடு இணைந்தவர்களாக இருப்போம்.

ஆகையால் உங்களுடைய ஆத்துமா ஈடேற உங்களுடைய விசுவாச ஜீவியத்தில் உங்களுடைய தைரியத்தை விட்டுவிடாதிருங்கள். அத்தோடு பொறுமையாயிருங்கள், கர்த்தருடைய வருகையை எதிர்நோக்கி காத்திருங்கள், இப்படி நிலைத்திருக்கும்போது "உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்துமரட்சிப்பை அடைகிறீர்கள்" (1பேது.1:9). இந்த ஆத்தும இரட்சிப்பு மிகவும் அருமையானது. அதைப்பெற்றுக் கொள்ள கர்த்தரோடு நிலைத்திருங்கள்.

### கேள்வி நேரம்

**நம்முடைய ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதிருக்க நாம் செய்யவேண்டியதென்ன?**

இதற்கான மருந்து வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அது என்னவென்றால்; "நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்" என்கிறார் எபிரெய ஆசிரியர் (எபி.12:3). இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவர் யாரென்றால்; நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து. அவரையே நமக்கு வரக்கூடிய பாடுகளிலும், சோதனைகளிலும், சோர்வுகளிலும் நாம் நினைக்கவேண்டும். தமக்கு விரோதமாக செய்த காரியங்களை அவர் சிலுவை மட்டும் பொறுமையோடிருந்து சகித்தார். அவர்களை மன்னித்து, அவர்களுக்காக பிதாவாகிய தேவனை நோக்கி வேண்டிக்கொண்டார். தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாது செய்கிறார்கள் அவர்களை மன்னியும் என்று ஜெபித்தார். அவரைப்பிதாவாகிய தேவன் மூன்றாம் நாள் உயிரோடு எழுப்பினார். நீங்களும் உங்களுடைய வாழ்க்கையில்

வரக்கூடிய பிரச்சனைகளை இயேசுவைப்போல சகித்து உங்களுடைய ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாமல் இயேசுவை நினைத்து உங்களைத்தேற்றிக்கொள்வீர்களானால் உங்களுடைய ஆத்துமா ஈடேறும். இல்லையேல் சோர்ந்துபோய் என்னைக் கர்த்தர் கைவிட்டுவிட்டாரே என்று உங்களுடைய விசுவாசத்தை மறுதலித்தவர் களாக போய்விடுவீர்கள். அப்படிபோய்விடாதிருக்க இயேசுவையும் அவருடைய வசனங்களையும் கவனியுங்கள்.

## 4. பெரிய தீங்கு
## A Great Evil

**தீ**ங்கு ஒரு மனிதனுக்கு பல வகையில் வருகிறது. அவனை அறியாமல் வருகிறது, சிலவேளைகளில் அவனுக்கு தெரிந்தே வருகிறது. "ஒருவன் புத்தி, யுக்தி, நிதானத்தோடு பிரயாசப்படுகிறான்; ஆகிலும் பிரயாசப்படாதிருந்த வேறொருவனுக்கு அவன் அதைச் சொந்தமாக விட்டுவிடவேண்டியதாகும். இதுவும் மாயையும் பெரிய தீங்குமாய் இருக்கிறது" என பிரசங்கி சொல்லுகிறான் (பிர.2:21). வீடு கட்டுகிறவர்கள் சகல நிதானத்தோடும் புத்தியோடும் யுக்தியோடும் மிக அழகாகவும் நேர்த்தியாகவும் அதை கட்டிமுடிக்கிறார்கள். அதற்காக அவர்கள் பட்ட பிரயாசத்திற்கு அளவே இல்லை என்றுதான் சொல்லவேண்டும். அந்த அளவு அதற்காக முயற்சி எடுத்து கட்டிமுடிக்கிறார்கள். இரவு பகலாக கண்ணுறக்கமில்லாமல் அந்த வேலைகளை செய்து முடிக்கிறார்கள். அதைப்போல ஒரு குடும்பத்தை கட்டுகிறதிலும் அதின் தலைவனும் அவனுடைய மனைவியும் அதற்காக எடுத்துக்கொள்ளுகிற முயற்சி பெரும் முயற்சியாக இருக்கிறது. ஆனால் கட்டுகிறவர்கள் வேதாகமத்தில் சொல்லியபடி தங்களுடைய வீட்டையும் தங்களுடைய குடும்பத்தையும் கட்டுகிறார்களா என்றால் அதிகமானோர் அந்தவிதமாக செய்வதில்லை.

இயேசு சொல்கிறார்: "என்னிடத்தில் வந்து, என் வார்த்தைகளைக் கேட்டு, அவைகளின்படி செய்கிறவன் யாருக்கு ஒப்பாயிருக்கிறானென்று உங்களுக்குக் காண்பிப்பேன். ஆழமாய்த் தோண்டி, கற்பாறையின்மேல் அஸ்திபாரம் போட்டு, வீடுகட்டுகிற மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான்; பெருவெள்ளம் வந்து, நீரோட்டம் அந்த வீட்டின்மேல் மோதியும், அதை அசைக்கக் கூடாமற்போயிற்று; ஏனென்றால் அது



கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது" என்றார் (லூக்.6:47,48). முதலாவது இயேசுவினிடத்தில் வந்து அவருடைய வார்த்தைகளைக்கேட்டு அவைகளின்படியாக ஒரு வீட்டையும் குடும்பத்தையும் கட்ட முயற்சிக்கவேண்டும். அப்படிக்கட்டப்படுகிற குடும்பங்கள் ஆழமாய்த் தோண்டி கற்பாறையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்ட குடும்பங்களாக இயேசுவில் நிலைத்திருந்து அநேக ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டு சாட்சியுள்ளவர்களாக தொடர்ந்து நிலைத்திருப்பார்கள். அநேகர் தங்களுடைய யோசனையின்படியும் மற்ற நண்பர்களுடைய யோசனையின்படியும் தங்களுடைய குடும்பத்தை கட்ட துவங்குகின்றனர். நாளடைவில் அந்தக்குடும்பங்களில் பிரச்சனைகளும், போராட்டங்களும் ஏற்பட்டு பிரிந்துபோகின்றார்கள். இது அவர்களுடைய வாழ்க்கையில் ஏற்படும் மாபெரும் தீங்காயிருக்கிறது.

கர்த்தருடைய வேலையைச் செய்கிற விஷயத்தில் பவுல் சொல்லுகிறார்; "அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளங்கப்பண்ணும், ஏனெனில் அது அக்கினியிலே வெளிப்படுத்தப்படும்; அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும். அதின்மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான்" என்கிறார் (1கொரி.3:13,14). தேவனுடைய சித்தத்தின்படியாக கட்டப்பட்டவைகள் நிலைத்திருக்கும். மற்றவைகள் அக்கினியால் பரிசோதிக்கப்படும்போது அவைகள் வெளிப்பட்டுவிடும். பொன்னை அக்கினியானது பரிசோதிப்பதுபோல அவனவனுடைய வேலைப்பாடு கர்த்தருடைய நாளிலே சோதித்துப்பார்க்கப்படும். அவன் சரியாக கன்மலையாகிய கிறிஸ்துவின் மீது அஸ்திபாரத்தைப்போட்டு தன்னுடைய வேலையைத் துவங்கியிருப்பானேயானால் அது நிலைத்திருக்கும். அவன் கர்த்தருடைய சமுகத்தில் வாடாத ஜீவ கிரீடத்தைப் பெறுவான். இல்லையேல் அவருடைய கோபக்கினையின் பாத்திரமாயிருப்பான்.

ஒருவன் புத்தி, யுத்தி, நிதானத்தோடு பிரயாசப்பட்டு அப்படிப் பிரயாசப்படாதிருந்த வேறொருவனுக்கு அவன் அதைச் சொந்தமாக விட்டுவிடவேண்டியதாகும் என பிரசங்கி குறிப்பிடுகிறாரே, இது மிகவும்

வேதனையான ஒன்றாகவே இருக்கிறது. அதே நேரத்தில் சிந்திக்கவேண்டிய ஒன்றாகவும் இருக்கிறது. நாம் எதற்காக இப்படிப்பிரயாசப்படுகிறோம். யாரோ ஒருவன் இதை அனுபவிக்க நாம் ஏன் இப்படி பிரயாசப்படுகிறோம் என்று அவன் சிந்திப்பதுமில்லை. மேலும் நாம் பார்க்கும்போது; "ஒருவனுக்கு செல்வத்தையும் சம்பத்தையும் கனத்தையும் கொடுக்கிறார்; அவன் என்ன இச்சித்தாலும் அதெல்லாம் அவனுக்குக் குறைவில்லாமல் கிடைக்கும்; ஆனாலும் அவைகளை அநுபவிக்கும் சக்தியைத் தேவன் அவனுக்குக் கொடுக்கவில்லை; அந்நிய மனுஷன் அதை அநுபவிக்கிறான்; இதுவும் மாயையும் கொடிய நோயுமானது" என பிரசங்கி குறிப்பிடுகிறார் (பிர.6:2). சொந்தமாக மாந்தோப்பு இருக்கிறது வருடத்திற்கு 1000 டன் மாம்பழம் கிடைக்கிறது.

ஆனால் அந்த பழங்களில் ஒரு மாம்பழத்தைக்கூட அவனால் சாப்பிட முடியாது ஏன் என்றால் அவனுக்கு சக்கரை வியாதி, இன்னும் இதைப்போல அநேக சம்பத்துக்கள் இருக்கிறது ஆனால் அவனால் அவைகளை அநுபவிக்க முடியாது. இருந்தபோதும் அவன் இச்சித்தவைகளை எல்லாம் அவனுடைய தேவன் அவனுக்கு கொடுக்கிறார். ஆனால் அவைகளை அவன் அநுபவிக்க முடியவில்லையே இது கொடிய நோய்போன்றது என்கிறார்.

ஆம் அன்பானவர்களே, இந்த உலகத்தில் பசிக்கிறவனுக்கு அவன் இச்சித்தது கிடைக்கவில்லை. கிடைத்தவனுக்கு அதை உட்கொள்ள முடியாத சூழ்நிலை அவனை வாட்டுகிறது. இவைகள் மாயையும் மனதுக்கு சஞ்சலமுமாயிருக்கிறது. இவைகள் பெரிய தீங்குமாயிருக்கிறது என காண்கிறோம்.

லூக்.6:49-ல் வாசிக்கிறோம் "என் வார்த்தைகளைக் கேட்டும் அவைகளின்படி செய்யாதவனோ அஸ்திபாரமில்லாமல் மண்ணின்மேல் வீடுகட்டினவனுக்கு ஒப்பாயிருக்கிறான்; நீரோட்டம் அதின்மேல் மோதினவுடனே அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்". ஆம் அன்பானவர்களே, உங்களால் ஒன்றும் செய்யமுடியாமற்போகிறது அதற்கு காரணம் என்ன? நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்யவில்லை. கர்த்தருடைய வசனத்தின்படி உங்களுடைய அஸ்திபாரத்தை போடவில்லை.



மண்ணின்மேல் வீடுகட்டின மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள். ஆழமாய்தோண்டி அஸ்திபாரம் போட்ட வீடு நிலைத்திருக்கும்.

கடைசியாக பிரசங்கி இதுவும் மாயையும் பெரிய தீங்குமாயிருக்கிறது என்கிறான். ஆம், புத்தியோடும் யுத்தியோடும் நிதானத்தோடும் பிரயாசப்பட்டு கனவுகண்டு கட்டப்பட்ட வீட்டை விட்டுவிடுகிறான். அதை பிரயாசப்படாதிருந்த வேறொருவன் வந்து அநுபவிக்கிறான். அவன் கண்ட கனவுகள் எல்லாம் வீணாய் போய்விட்டன. இது அவனுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட பெரிய தீங்காயிருக்கிறது. வேதாகமம் சொல்லுகிறபடி தன்னுடைய அஸ்பாரத்தை போட்டிருப்பானேயானால் அந்த வீடு நிலைத்திருக்கும். அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு சொல்லும்போது; "உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம்" என்கிறார் (1தீமோ.6:8).

மனிதனுக்கு இந்த உலகத்தில் தேவையானவை இரண்டு. உண்ண உணவும், உடுக்க உடையும். இந்த இரண்டையும் ஆதியிலே பிதாவாகிய தேவன் ஆதாமுக்கு கொடுத்தார். இது இன்றுவரை குறைவில்லாமல் இப்பூமி கொடுத்துக்கொண்டே இருக்கிறது. அவன் தங்குவதற்கு பறந்துவிரிந்த உலகத்தில் எங்குவேண்டுமானாலும் தங்கிக்கொள்ளலாம் அந்த அளவு பெரிய உலகத்தை கொடுத்திருக்கிறார். இதை மனிதன் அறியாது தனக்காக/ தன்னுடைய இச்சைகளை நிறைவேற்றும்படியாக இரவுபகலாக பிரயாசப்படுகிறான். கடைசியில் வருத்தத்தையும் சஞ்சலத்தையும் அடைகிறான். அத்தோடு பலவிதமான நோய்களையும் உடையவனாய் மரிக்கிறான்.

லாசரு என்ற ஒரு மனிதனைக்குறித்து நாம் வேதத்தில் படிக்கிறோம். "அவன் பருக்கள் நிறைந்தவனாய், அந்த ஐசுவரியவானுடைய வாசலருகே கிடந்து, அவனுடைய மேஜையிலிருந்து விழுந்த துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான்; நாய்கள் வந்து அவன் பருக்களை நக்கிற்று. பின்பு அந்தத் தரித்திரன் மரித்து, தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய்விடப்பட்டான்; ஐசுவரியவானும் மரித்து அடக்கம் பண்ணப்பட்டான். பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது, தன்

கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான். அப்பொழுது அவன்: தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பவேண்டும்; இந்த அக்கினிஜீவாலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிட்டான். அதற்கு ஆபிரகாம்; மகனே, நீ பூமியிலே உயிரோடிருக்குங் காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய், லாசருவும் அப்படியே தீமைகளை அநுபவித்தான், அதை நினைத்துக்கொள்; இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான், நீயோ வேதனைப்படுகிறாய்" என்றார் (லூக்.16:20-25).

லாசரு பூமியில் இருக்கும் நாட்களில் கஷ்டத்தை அநுபவித்தாலும் அவன் முடிவில் நல்ல ஒரு இடத்தில் கொண்டு செல்லப்பட்டான். ஒரு மனிதனுக்கு பூமி நிலையானது அல்ல. நிலையான இடம் ஒன்று தேவனுடைய இருப்பிடம் அல்லது தேவனால் நியமிக்கப்பட்ட பாதாளம். ஐசுவரியவானோ பாதாளத்திலே தள்ளப்பட்டு வேதனையை அநுபவித்தான்.

அன்பானவர்களே, தேவன் ஒருவரும் கெட்டுப்போக விரும்பாமல் எல்லோரும் இரட்சிக்கப்படவேண்டும் என்று விரும்புகிறார். ஆனால் உலக சம்பத்துக்களையும் உலக ஆசீர்வாதங்களையும் நம்பி ஏமாற்றப்படுவோர் கோடிக்கணக்கில் இருக்கின்றனர். என்னதான் சொன்னாலும், எப்படிப்பட்ட போதனைகளை வேதாகமத்திலிருந்து எடுத்துச் சொன்னாலும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும், சத்தியத்தை நேசிக்கிறவர்களுமே செவிகொடுத்து இரட்சிக்கப் படுகிறார்கள். மற்றவர்கள் செவிட்டு விரியனைப்போல காதுகளை அடைத்துக்கொள்ளுகிறார்கள்.

இந்த ஐசுவரியவானும் பூமியில் இருக்கும்போது சம்பிரமமாய் வாழ்ந்து பாதாளத்திற்கு சென்றபின்பு; ஐயோ, வரக்கூடாத இடத்திற்கு வந்துவிட்டோமே என்று சொல்லி வேதனைப்பட்டு தன்னுடைய உறவினர்களும் இந்த இடத்திற்கு வந்துவிடாதபடி யாரையாவது இங்கிருந்து அனுப்பவேண்டும் என்று ஆபிரகாமைப் பார்த்து கேட்டுக்கொள்ளுகிறதை நாம் வேதத்தில் படிக்கிறோம். பூமியிலே



மனந்திரும்பவேண்டிய மனிதன் பாதாளத்திலே திரும்பி என்ன பயன்? நடுவே பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது என்று ஆபிரகாம் பதில் கொடுக்கிறார். பாதாளத்திற்கு சென்றவன் ஒருக்காலும் ஏறிவரமுடியாது என காண்கிறோம். அவர்கள் நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள். இச்செய்தியை படித்துக் கொண்டிருக்கும் அன்பு நண்பரே, நீ புத்தியோடும், யுக்தியோடும், நிதானத்தோடும், சகல சம்பத்தையும் பெற்று வேறொருவனுக்கு அநுபவிக்கும்படி அதை விட்டு செல்ல ஆயத்தமாயிருக்கிறாயா? இது உன்னுடைய வாழ்க்கையில் ஏற்படப்போகும் ஒரு பெரிய தீங்கு அல்லவா? வேதம் சொல்லுகிறபடி நீ உன் அஸ்திபாரத்தை கர்த்தர் மீதும் அவருடைய வல்லமையுள்ள வசனத்தின் மீதும் வைப்பாயானால். நிலையான ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக்கொள்ளுவாய். இன்றே கர்த்தருடைய வசனத்திற்கு செவி கொடு.

## கேள்வி நேரம்

**காரியத்தின் கடைத்தொகை என்ன?**

பிரசங்கி சொல்லுகிறான்; "காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே. ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும் நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்" (பிர.12;13-14).

ஒவ்வொரு மனிதனும் சிந்திக்கவேண்டிய வசனமாக இது இருக்கிறது. கணக்கு பார்க்கிறவர்கள் மீதம் என்ன என்று கணக்கிடுவார்கள். அது அவர்களுடைய கணக்கின் முடிவாக இருக்கிறது. அதைப்போல ஒவ்வொரு மனிதனும் வாழ்ந்த வாழ்க்கை அவனுடைய செயல்பாடுகள் என்ன? இவைகளை பார்க்கும்போது அதுவே அவனுடைய முடிவாக இருக்கிறது.

பிரசங்கி எல்லாம் மாயை மாயை என்று சொல்லிவிட்டு காரியத்தின் கடைத்தொகைக்கு வருகிறார். வெளிக்கு வராத விஷயம் ஒன்றும் இல்லை. எல்லாவற்றையும் தேவன் கொண்டுவருவார். இங்கே மற்றவர்களுக்கு முன்பாக தன்னை நீதிமான்போல் ஒருவர்

காட்டிக்கொள்ளக்கூடும். அவர் உண்மையிலே நீதிமானா? அல்லது துன்மார்க்கனா? என்பது நியாயத்திலே தெரியவரும். இதில் ஒருவரும் தப்பிக்கொள்ளமுடியாது. ஏனெனில் தீர்ப்பு தேவனுடையதாயிருக்கிறது. ஆகையால் தேவனுக்கு பயந்து கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 5. ஆதிஅன்பு
## The First Love

**ஆ**திஅன்பு மிகவும் சிறப்பானது. அந்த அன்பில் தொடர்ந்து நிலைத்திருக்கவேண்டுமென நம்முடைய தேவனாகிய கர்த்தர் விரும்புகிறார். அநேகர் ஆதிஅன்பை விட்டுவிடுகின்றனர். ஆகையால் வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்பட்ட சபைகளுக்கு கர்த்தர் திருவுளம்பற்றும்போது; "நீ ஆதியிலே கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு" என்று எழுதுகிறார் (வெளி.2:4). ஞானஸ்நானம் எடுத்து பல நல்ல தீர்மானங்களோடு ஜீவிக்கிற சிலர் நாளடைவில் தங்களுடைய விசுவாசத்தில் ஆட்டம் காண ஆரம்பித்துவிடுகிறார்கள். பல விதமான சோதனை வருகிறது என்ன செய்வதென்று தெரியவில்லை. முன்னே இந்தவிதமான பாடுகள் எல்லாம் வரவில்லை, இப்பொழுது பாடுகளும் பிரச்சனைகளும் வந்து வேதனையளிக்கிறது என்பார்கள். பாடுகளும் பிரச்சனைகளும் இல்லாத வாழ்க்கை கிறிஸ்தவ வாழ்க்கையில்லை. தனக்கு வரக்கூடிய சோதனைகளை சகித்து வெற்றியுள்ள ஒரு கிறிஸ்தவனாக, கிறிஸ்தவளாக வாழவேண்டும்.

"ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருக்கக்கடவது; ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருந்தால், நீங்களும் குமாரனிலும் பிதாவிலும் நிலைத்திருப்பீர்கள்" என்கிறார் அப்போஸ்தலனாகிய யோவான் (1யோவா.2:24). துவக்கத்தில் இருக்கிற அன்பும் விசுவாசமும் குறைவதற்கு காரணம். ஆதிமுதல் கேள்விப்பட்ட வசனம் உங்களில் நிலைத்திராதிருப்பது. அந்த வசனத்தை உங்களுடைய இருதயத்தில் வைத்துக் காக்கவேண்டிய பொருப்புடையவர்களாக இருக்கிறீர்கள். ஒரு நிலத்தில் விதைக்கப்பட்ட விதை எப்படி அந்த நிலத்தில வைத்து



பாதுகாக்கப்படும்போது அது வளர்ந்து மரமாகவும், பயிராகவும் வளர்ந்து பலன் கொடுக்கிறதோ அதைப்போல தேவனுடைய வசனத்தை நீங்கள் உங்களுடைய இருதயத்தில் வைத்து பாதுகாக்கும்போது, நீங்களும் பாதுகாப்பாக இருப்பீர்கள். பிதாவிலும் நிலைத்திருப்பீர்கள்.

"தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்துவைத்திருக்கிறார்" என யூதா குறிப்பிடுகிறார் (யூதா 6). தேவனுடைய பார்வையில் மனிதர்களாக இருந்தாலும், தேவதூதர் களாயிருந்தாலும் தவறு செய்தவர்களை தேவன் தண்டியாமல் விடார் என காண்கிறோம். தவறு செய்த தேதூதர்களை அதாவது ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாதவர்களை நித்திய சங்கிலி களினாலே கட்டி அந்தகாரத்தில் அடைத்துவைத்திருக்கிறார். தேவதூதர்களையே தேவன் தப்பவிடாதிருக்கும்போது, ஆதிஅன்பில் குறைவாக உள்ள உங்களையும் என்னையும் சும்மாவிடுவாரா, ஆகையால் ஆதிஅன்பில் நிலைத்திருங்கள்.

எபிரெய ஆசான் சொல்லும்போது; "ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சற்றி நெருக்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" என்கிறார் (எபி.12:1). நம்மிலே விசுவாசத்தை துவக்குகிறவர் நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து அதை முடிக்கிறவரும் அவரே என காண்கிறோம். நம்மிலே விசுவாசத்தை துவக்கின அவர் மற்றவற்றையும் அருளாதிருப்பாரா! அவர் சகலத்தையும் செய்யவல்லவராயிருக்கிறார்.

நாம் நமக்கு நியமிக்கப்பட்ட ஓட்டத்திலே பொறுமையோடே ஓடவேண்டும். அநேகர் தங்களுக்கு நியமிக்கப்பட்ட ஓட்டத்தை விட்டுவிட்டு வேறுமாதிரியாக நடக்கவும், ஓடவும் முயற்சிக்கின்றனர். அப்பட்டிப்பட்டவர்கள் நாளடைவில் விசுவாசத்தில் நிலைத்திராமற் போய்விடுகிறார்கள். ஆண்டவர் பேதுருவிடம் பேசும்போது; "சீமோனே,

சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்; நீ குணப்பட்டபின்பு உன்சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார்" (லூக்.22:31,32). விசுவாசத்தை துக்குகிற கர்த்தர் அந்த விசுவாசம் ஒழிந்துபோகாதபடி வேண்டிக்கொள்ளவும் செய்கிறார். ஒருவேளை அவர் நமக்காக வேண்டிக்கொள்ளாவிட்டால் நம்முடைய நிலைமை என்னவாகும் என்பதை யோசித்துப்பாருங்கள். இதையெல்லாம் அறிந்தபடியால் பிசாசு இப்படியாக கேட்டுக்கொண்டான்.

இன்றைக்கு அநேகர் சுளகில் உள்ள பதரைப்போல வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். சுளகினால் புடைத்தால் கோதுமை மணிகள் மட்டுமே நிலைத்திருக்கும் பதர் எல்லாம் பறந்தேபோகும். நீங்கள் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருக்கிறீர்கள்? உங்களுடைய விசுவாசம் எப்படிப்பட்டதாயிருக்கிறது? உங்களுடைய ஆதிஅன்பு குறைந்திருக்கிறதா? அல்லது அப்படியே இருக்கிறதா? அல்லது விசுவாசத்திலே வளர்ந்திருக்கிறீர்களா? பவுல் சொல்லும்போது; "நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன்" என்கிறார் (பிலி.3;12).

தேவன் நம்மை எதற்காக தெரிந்துகொண்டுள்ளார் என்பதை நாம் முதலாவது அறிந்துகொள்ளவேண்டும். அதை அறிந்துகொண்டு நாம் அவர்வழியே செல்லவேண்டும். அநேகர் எதற்காக கர்த்தரை ஏற்றுக்கொண்டோம் என்பதை அறியாமலே போய்கொண்டிருக் கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் வேறு ஒருநபர் ஒரு காரியத்தை சொன்னால் அதுவும் சரிதான் என்று அந்தவழியே போக முயற்சிப்பார். ஆகையால் இயேசு சொல்லும்போது; "என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசிநாளில் நான் அவனை எழுப்புவேன்" என்கிறார் (யோவா.6:44). நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட வராயிருந்தால் தேவனுடைய வசனத்திற்கு செவி கொடுத்து ஆதிஅன்பில் நிலைத்திருங்கள்.



மேலும், "அவரைப் பற்றும் விசுவாசத்தால் அவருக்குள் நமக்குத் தைரியமும் திடநம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டாயிருக்கிறது" என பவுல் சொல்லுகிறார் (எபே.3:12). விசுவாசத்தினாலே என்ன பலன் என்று அநேகர் நினைக்கின்றனர். நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் என வாசிக்கிறோம். நம்முடைய முற்பிதாக்கள் விசுவாசத்தினாலே ராஜ்யங்களை ஜெயித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள். நாமும் அவரைப் பற்றும் விசுவாசத்தால் அவருக்குள் தைரியம் அடைகிறோம். திடநம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் பாக்கியத்தையும் பெறுகிறோம். எல்லோரும் தேவனிடத்திற்கு சென்று விடமுடியாது. இயேசு சொல்லுகிறார்; "என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்று" இயேசு இல்லாமல் தேவனிடத்திற்கு ஒருவரும் செல்லமுடியாது.

மேலும் திடநம்பிக்கை என்று பார்க்கும்போது; பேதுரு ஒரு முறை "ஆண்டவரே, காவலிலும் சாவிலும் உம்மைப் பின்பற்றிவர, ஆயத்தமாயிருக்கிறேன் என்றான்" (லூக்.22:33). இவனுடைய நம்பிக்கை திடமானதா? என்றால் இல்லை. கொஞ்நேரத்திலே இயேசுவை மூன்றுதரம் மறுதலித்தான். சரீர பயம் அவனை ஆட்கொண்டது. கர்த்தர் சொன்னபடியாக அன்று இரவிலே மூன்று முறையும் இயேசுவை மறுதலித்தான். ஆனால் அவனுடைய அறிக்கை எப்படிப்பட்டதாயிருந்தாது, காவலிலும் சாவிலும் உம்மைப்பின்பற்றி வர ஆயத்தமாயிருக்கிறேன் என்றான்.

அநேகர் சபைக்கு இனிமேல் தவறாது கலந்துகொள்ளுவேன் என்பார்கள். சொன்ன மறுவாரமே சபைக்கு வரமாட்டார்கள். இன்னும் அநேகர் நான் அதைச் செய்கிறேன் இதைச் செய்கிறேன் என்று சொல்லுவார்கள் அப்படிப்பட்டவர்கள் ஒன்றுமே செய்யமாட்டார்கள். நாம் வாயினாலே சொல்லுவதைக்காட்டிலும் வாழ்க்கையில் நடந்து காண்பிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். விசுவாசத்தை கிரியைகளினாலே காண்பிக்கவேண்டும் அதுவே விசுவாசம் இல்லையேல் அப்படிப்பட்ட விசுவாசம் செத்ததாயிருக்கிறது.

இயேசுவினிடத்தில் விசுவாசம் கொண்ட ஒரு நூற்றுக் அதிபதியைக்குறித்து நாம் வேதத்தில் படிக்கிறோம். அவன் "இயேசுவைக்குறித்துக் கேள்விப்பட்டபோது, அவர் வந்து தன் வேலைக்காரனைக் குணமாக்கவேண்மென்று, அவரை வேண்டிக்கொள்ளும்படி யூதருடைய மூப்பரை அவரிடத்தில் அனுப்பினான். அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து, அவரைக் கருத்தாய் வேண்டிக்கொண்டு; நீர் இந்தத் தயவு செய்கிறதற்கு அவன் பாத்திரனாயிருக்கிறான். அவன் நம்முடைய ஜனத்தை நேசிக்கிறான் நமக்கு ஒரு ஜெபஆலயத்தையும் கட்டினான் என்றார்கள். அப்பொழுது இயேசு அவர்களுடனே கூடப்போனார் வீட்டுக்குச் சமீபமானபோது, நூற்றுக்கு அதிபதி தன் சிநேகிதரை நோக்கி நீங்கள் அவரிடத்தில் போய், ஆண்டவரே! நீர் வருத்தப்படவேண்டாம்; நீர் என் வீட்டு வாசலுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல, நான் உம்மிடத்தில் வரவும் என்னைப் பாத்திரனாக எண்ணவில்லை; ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான். நான் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும் எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற சேவகருமுண்டு; நான் ஒருவனைப் போவென்றால் போகிறான், மற்றொருவனை வாவென்றால் வருகிறான் என் வேலைக்காரனை, இதைச்செய்யென்றால் செய்கிறான் என்று நான் சொன்னதாகச் சொல்லுங்கள் என்று அவர்களை அனுப்பினான். இயேசு இவைகளைக் கேட்டு அவனைக் குறித்து ஆச்சரியப்பட்டு, திரும்பி ஜனங்களை நோக்கி: இஸ்ரவேலுக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (லூக்.7:3-8).

இந்த அதிபதியினுடைய விசுவாசம் இஸ்ரவேலிலே இல்லாத விசுவாசம். இயேசுவானவர் இவனுடைய விசுவாசத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார். இன்றைக்கு உங்களுடைய விசுவாசம் எப்படிப் பட்டதாயிருக்கிறது? கர்த்தரை நோக்கி வேண்டிக்கொள்ளுகிறவர்கள் தங்களுடைய குடும்பத்தில் உள்ளவர்களுக்காக அல்லது உறவினர்களுக்காக வேண்டிக்கொள்ளுவார்கள். ஆனால் இந்த நூற்றுக்கு அதிபதியோ தன் வேலைக்காரனுக்காக ஆண்டவரை நோக்கி வேண்டிக்கொண்டான். அப்படியானால் அவன் எப்படிப்பட்ட ஒரு எஜமானன் என்று பாருங்கள். இப்படிப்பட்ட ஒரு எஜமானனிடம்



வேலைபார்த்த அந்த வேலைக்காரன் உண்மையிலே ஆசீர்வதிக்கப்பட்டவன். நீங்கள் ஒரு எஜமானனாக இருந்தால் இந்த நூற்றுக்கு அதிபதியைப்போல இருங்கள். நீங்கள் ஒரு வேலைக்காரனாக இருந்தால் நூற்றுக்கு அதிபதியினிடத்தில் வேலைபார்த்த அந்த வேலைக்காரனைப்போல உங்களுடைய எஜமானனுக்கு கீழ்ப்படிந்திருங்கள்.

ஆண்டவர் சொல்லும்போது; "என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான் என்றார்" (லூக்.7:23). நீங்கள் இயேசுவினிடத்திலும் அவருடைய வசனத்திலும் நம்பிக்கை கொள்ளுங்கள். அப்பொழுது தேவனுடைய மகத்துவங்களைப் பார்ப்பீர்கள். அநேக யூதர்கள் அவருடைய வசனத்தின் நிமித்தம் இடறலடைந்தார்கள். அதைக்குறித்து சீஷர்கள் ஆச்சரியப்பட்டார்கள். உங்களுடைய விசுவாசமும் ஆதிஅன்பும் எப்படிப்பட்டதாயிருக்கிறது? தொடர்ந்து ஆதிஅன்பில் நிலைத்திருங்கள்.

### கேள்விநேரம்

**ஆரம்பத்தில் கொண்ட நம்பிக்கையும் முக்கியமானதா?**

ஆம், "நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம்" (எபி.3:14). எகிப்திலிருந்து கானான் தேசம் வரை 40 ஆண்டுகளாக உறுதியாக நிலைத்திருந்தவர்களுக்கே அந்த தேசத்தில் பங்குகிடைத்தது. அதை நம் முற்பிதாக்கள் பங்கிட்டுக்கொடுத்தார்கள்.

அதைப்போல நாம் ஆரம்பத்தில் இயேசுவை ஏற்றுக்கொள்ளும் போது கொண்டுள்ள நம்பிக்கையை விட்டுவிடாது காத்து முடிவுபரியந்தமும் கஷ்டத்திலும், நஷ்டத்திலும், கர்த்தருடையவர்களாக இருக்கும்போது அவரிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம். அவருடைய ஆசீர்வாம் நமக்குக் கிடைக்கும். நாம் நித்தியத்தில் அவரோடு பிரவேசிக்கும் சிலாக்கியத்தையும் இயேசுவின் மூலமாக பெற்றுக் கொள்ளுவோம். ஆகையால் ஆரம்பத்தில் கொண்ட நம்பிக்கையை அசட்டை செய்துவிடாதிருங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 6. கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்

## For to Me, to Live Is Christ and Die Is Gain

**அ**ப்போஸ்தலனாகிய பவுல் இந்த வார்த்தைகளைச் சொல்லுகிறார்; "கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்" என்று (பிலி.1:21). ஒருவனுக்கு கிறிஸ்து எப்படி ஜீவனாயிருக்கமுடியும் என்று நீங்கள் நினைக்கலாம். இதற்கான விடையை பவுல் அதற்கு மேலுள்ள வசனத்தில் குறிப்பிட்டுள்ளார். "நான் ஒன்றிலும் வெட்கப்பட்டுப் போகாமல், எப்பொழுதும்போல இப்பொழுதும், மிகுந்த தைரியத்தோடே ஜீவனாலாகிலும், சாவினாலாகிலும், கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுவாரென்று எனக்கு உண்டாயிருக்கிற வாஞ்சைக்கும் நம்பிக்கைக்கும் தக்கதாய், அப்படி முடியும்" (பிலி.1:20).

தேவனுடைய மனுஷன் உயிரோடிருக்கும்போதும். அவன் சாட்சியுள்ள மனிதனாக வாழும்போதும், சரீரத்திலே அங்கும் இங்கும் சென்று தேவனுடைய சுவிசேஷவசனத்தை பிரசங்கிக்கும்போதும், கிறிஸ்துவின் நாமத்தின்னிமித்தம் மற்றவர்களுக்கு நன்மைசெய்யும் போதும், அவர்கள் மூலமாக கிறிஸ்துவானவர் மகிமைப்படுகிறார். ஒருவன் கிறிஸ்தவனாயிருந்தும் கிரியை செய்யாதவனாயிருந்தால் அவன் மரித்த சரீரத்திற்கு ஒப்பாக இருப்பான். "சர்தை சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்; தேவனுடைய ஏழு ஆவிகளையும் ஏழு நட்சத்திரங்களையும் உடையவர் சொல்லுகிறதாவது; உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன், நீ உயிருள்ளவனென்று பெயர்கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய்" என்கிறார் (வெளி.3:1).

இன்றைக்கு இப்படிப்பட்ட சபைகளை பார்க்கிறோம். முதல் நூற்றாண்டிலும் இப்படிப்பட்ட சபைகள் இருந்திருக்கிறது. நீ கிரியை செய்யாத ஒரு கிறிஸ்தவனாக வாழ்ந்துகொண்டிருப்பாயானால் நீயும் சர்தை சபையைப்போல இருப்பாய். ஆகையால் உயிருள்ளவனென்று பெயர்கொண்டிருந்தும் செத்தவனாயிராமல் மனந்திரும்பி தேவனுடைய சித்தம் செய்ய உன்னை ஒப்புக்கொடு.



பவுல் சொல்லுகிறார்; "கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப் பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்" என்கிறார் (கலா.2:20). பவுல் கிறிஸ்துவோடுகூட சிலுவையிலறையப்பட்டதாகவும் இருந்தபோதும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறதாகவும் சொல்லுகிறார்.

ஆம், ஒவ்வொருவரும் பாவத்திற்கு செத்து நீதிக்கு பிழைத்தவர் களாயிருக்கிறோம். ஞானஸ்நானத்திலே அவரோடுகூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும் இருக்கிறோம். ஆக, இவ்விதமாக அவரோடுகூட மரித்த நாம் அவரோடுகூட பிழைத்தும் இருக்கிறோம். ஆகையால் பிழைத்திருக்கிற ஒவ்வொருவரும் அவருக்காக பிழைத்திருக்கிறோம். அநேகர் சொல்லக்கேள்விப்பட்டிருப்பீர்கள். நான் பிழைத்திருக்கிறதோ என்னுடைய பிள்ளைக்காக பிழைத்திருக்கிறேன் அல்லது என்னுடைய பேரப்பிள்ளைகளுக்காக பிழைத்திருக்கிறேன் என்று சொல்லுவதை. ஒரு பிள்ளையோ அல்லது பேரப்பிள்ளையோ நம்மை பாவத்திலிருந்து மீட்கவில்லை என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும். எந்த ஒரு மனிதனும் ஒருமனிதனுடைய பாவத்தை மன்னிக்கவோ அல்லது அந்த பாவத்திலிருந்து அந்த மனிதனை மீட்கவோ முடியாது.

நாம் இன்று பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு ஜீவனுள்ளவர்களாயிருக்கிறோம் என்றால் அதற்கு மூலகாரணமாக இருப்பவர் இயேசு. இதை அறிந்த பவுல் நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன் என்கிறார். நீங்களும் நானும் இன்று யாருக்காக வாழ்ந்துகொண்டிருக்கிறோம்?

இவ்வுலகத்தின் உறவு உலகத்தில் இருக்கும்வரை இருக்கும். நாம் உலகத்தார் அல்ல என்பதை நீங்கள் நினைவு கூரவேண்டும். அவர் உலகத்தார் அல்லாததுபோல நாம் உலகத்தார் அல்ல. நம்முடைய குடியிருப்போ பரலோகத்தில் தேவனோடு இருக்கிறது. ஆகையால்

எப்பொழுதும் கிறிஸ்துவின் நாமம் மகிமைப்படும்படியாக வாழுங்கள். "கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்கிறார் (2கொரி.2:14). ஆசிய முழுமைக்கும் அப்போஸ்தலனாகிய பவுலை தேவன் எடுத்து பயன்படுத்தினார். பவுல் சென்ற எல்லா இடங்களிலும் கர்த்தருடைய சபை ஆரம்பிக்கப்பட்டது. அநேகர் கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்டனர். இயேசுவின் வாசனையை வெளிப்படுத்துகிறவர்களாக இருந்தனர். அநேகர் தேவதூதர்கள் மனுஷரூபம் கொண்டு வந்திருக்கின்றனர் என்று சொல்லி பவுலை மெர்குரி என்றும் பர்னபாவை யூப்பித்தர் என்றும் சொன்னார்கள். அந்த அளவு தேவன் அவர்களை வல்லமையாக எடுத்துப்பயன்படுத்தினார்.

ஆகையால் பவுல் சொல்லும்போது; எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணினார் என்கிறார். கிறிஸ்து எனக்கு ஜீவன் என்று சொல்லுகிறாரே என்றால் உண்மையிலே அவருக்கு ஆண்டவர் ஜீவனாகவே இருந்தார். இன்று ஒவ்வொரு கிறிஸ்தவ சகோதரனும் சகோதரியும் இப்படிப்பட்டவர்களாகவே வாழவேண்டும் என் வேதம் எதிர்பார்க்கிறது. உயிரோடிருந்து செத்தவர்களாக வாழ்ந்து கொண்டிருப்பதை தேவன் விரும்பவில்லை. கிறிஸ்துவின் வாசனையை வெளிப்படுத்துகிற கிறிஸ்தவர்களாக எங்கிருந்தாலும் வாழவேண்டியவர் களாயிருக்கிறோம். சூழ்நிலைகளைக் காரணமாக சொல்லக்கூடாது. தேவன் நமக்கு நாட்களை கூட்டிவழங்கிக்கொண்டிருக்கிறார். நாம் செய்யவேண்டிய பணிகள் அதிகமாக இருக்கிறது. ஆகையால் கிறிஸ்துவுக்காக எப்பொழுதும் ஜீவனுள்ளவர்களாக நடந்து கொள்ளுங்கள்.

இரண்டாவது சாவு எனக்கு ஆதாயம் என்று சொல்லுகிறாரே அது எப்படியாகும்? என்ற கேள்வி அநேகருக்கு எழும்புகிறது. ஒரு மனிதனுடைய சாவு ஆதாயமாக இருக்குமா? நிச்சயமாக கிறிஸ்துவுக்குள்ளாக ஒரு மனிதன் வாழ்ந்து சாகும்போது அது அவனுடைய வாழ்க்கையில் ஆதாயமாகவே இருக்கிறது. நாம் வாசித்தபடி "நான் ஒன்றிலும் வெட்கப்பட்டுப்போகாமல், எப்பொழுதும்போல இப்பொழுதும், மிகுந்த தைரியத்தோடே,



ஜீவனாலாகிலும், சாவினாலாகிலும், கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுவாரென்று எனக்கு உண்டாயிருக்கிற வாஞ்சைக்கும் நம்பிக்கைக்கும் தக்கதாய் அப்படி முடியம்" என்றார் அல்லவா? அந்தப்படியாக இந்தவசனத்தின் பிற்பகுதியில் சாவினாலாகிலும் கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுவாரென்று சொல்லியிருக்கிறார். இன்றைக்கு இந்த வசனத்தை படிக்கிறோம் என்றால் அது அப்போஸ்தலனாகிய பவுல் முதல் நூற்றாண்டு காலத்தில் செய்த ஊழியம். அவர் மரித்தும் அவருடைய வசனங்கள் நம்மை கிறிஸ்துவுக்கு நேரே வழிநடத்துகிறது. பல கல்லறைகளைப் பார்க்கிறோம். ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன் என்ற வசனத்தை எழுதிவைத்திருப்பார்கள். அந்த நபர் தன்னுடைய விசுவாசத்தை காத்துக்கொண்டதையும் அவர் ஒரு கிறிஸ்தவராக இருந்து மரணம்வரை சத்தியத்திற்காக நிலைத்திருந்திருப்தையும் அந்த வசனம் நமக்கு நினைப்பூட்டுகிறது. அவர் மரித்தாலும் கிறிஸ்துவின் நாமம் அவருடைய கல்லறையின் மூலமாக அங்கே மகிப்படுகிறதை நாம் அறிகிறோம்.

அதைப்போல யோப்பா பட்டணத்தில் வாழ்ந்த தொற்களைக்குறித்து நாம் அப்.9:36-39 முடியவசனங்களில் நாம் வாசிக்கிறோம். "யோப்பா பட்டணத்தில் கிரேக்குப் பாஷையிலே தொற்காள் என்று அர்த்தங்கொள்ளும் தபீத்தாள் என்னும் பேருடைய ஒரு சீஷி இருந்தாள்; அவள் நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்துகொண்டுவந்தாள். அந்நாட்களில் அவள் வியாதிப்பட்டு மரணமடைந்தாள். அவளைக் குளிப்பாட்டி, மேல்வீட்டிலே கிடத்திவைத்தார்கள். யோப்பா பட்டணம் லித்தா ஊருக்குச் சமீபமாபடியினாலே, பேதுரு அவ்விடத்தில் இருக்கிறானென்று சீஷர்கள் கேள்விப்பட்டு, தாமதமில்லாமல் தங்களிடத்தில் வரவேண்டுமென்று சொல்லும்படி இரண்டு மனுஷரை அவனிடத்திற்கு அனுப்பினார்கள். பேதுரு எழுந்து, அவர்களுடனே கூடப்போனான். அவன் போய்ச் சேர்ந்தபொழுது, அவர்கள் அவனை மேல்வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனார்கள். அப்பொழுது விதவைகளெல்லாரும் அழுது, தொற்காள் தங்களுடனேகூட இருக்கையில் செய்திருந்த அங்கிகளையும் வஸ்திரங்களையும் காண்பித்து அவளைச் சூழ்ந்துநின்றார்கள்". தொற்காள் மரித்தபோதும் அவள் கிறிஸ்துவுக்குள் வாழ்ந்த வாழ்க்கை

அந்தப்பட்டணத்திலே உள்ள விதவைகள் மூலமாக வெளிப்படுவதைக் காண்கிறோம். அவளுடைய செயல்பாடுகள் மூலமாக கிறிஸ்துவின் நாமம் மகிமைப்பட்டது.

கிறிஸ்தவனுக்கு சாவு ஆதாயமாக இருக்கிறது. ஏனெனில் அவன் மீண்டும் உயிரோடு எழுப்பப்படுவான். அவனை கர்த்தர் எழுப்ப வல்லவராயிருக்கிறார். "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" (1கொரி.15:22). நாம் ஒவ்வொருவரும் ஆதாமுக்குள் மரிக்கிறோம். ஆதாம் மூலமாக பாவம் செய்யதாவர்களையும் பாவம் ஆண்டுகொண்டது என்பதை அறிவீர்கள்.

ஆகையால் எல்லோரும் பாவத்தின் கீழ் அடிமைகளானோம். இப்பொழுதோ, கிறிஸ்துவுக்குள் எல்லோரும் உயிர்ப்பிக்கப்படுகிறார்கள். "பின்பு பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்; அது: கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் என்றெழுது; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்; ஆவியானவரும் ஆம் என்று திருவுளம் பற்றுகிறார் என்று சொல்லிற்று" (வெளி.14:13). சாவு எனக்கு ஆதாயம் என்று பவுல் சொல்லுகிறாரே என்றால்; கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள். ஏனெனில்; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுகிறார்கள்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு சகோதரனே, சகோதரியே, கிறிஸ்துவானவர் உன்னுடைய வாழ்க்கையில் உனக்கு ஜீவனாக இருக்கிறாரா? சாவுக்காக பயந்துகொண்டிருக்கும் உலகத்தில் சாவு உனக்கு எப்படிப்பட்டதாகயிருக்கிறது? நீங்கள் கிறிஸ்துவுக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களா? அல்லது உலகத்தானைப்போல வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களா? உலகம் உலகம் என்று உலகத்தை நேசித்து வாழ்ந்தவர்கள் இன்று உலகத்தில் இல்லை என்பதை அறிந்துகொள். வானமும் பூமியும் அக்கினிக்கு இறையாக வைக்கப்பட்டுள்ளது. இதை அறிந்த ஒரு கிறிஸ்தவன் அவனை பாவத்தின்பிடியிலிருந்து மீட்டுடெடுத்த ஆண்டவருக்காகவும், அவருடைய சபைக்காகவும் வாழவேண்டும். இன்றே



அப்போஸ்தலனாகிய பவுலைப்போல அவருக்காக வாழுங்கள் அப்பொழுது கிறிஸ்து உங்கள் மூலமாக மகிமைப்படுவார்.

**கேள்வி நேரம்**

**கிறிஸ்துவை மரித்தோரிலிருந்த எழுப்பினவர் உங்களில் இருந்தால் என்ன நடக்கும்?**

பவுல் சொல்லுகிறார்; "கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும். அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்" (ரோம.8:10,11). சாவுக்கேதுவான நம்முடைய சரீரங்கள் உயிர்ப்பிக்கப்படும் என காண்கிறோம்.

ஆக, நம்முடைய சரீரம் சாவுக்கேதுவான சரீரம் இந்த சாவுக்கேதுவான சரீரத்தை தேவன் உயிர்ப்பிக்கவல்லவராயிருக்கிறார். எந்த ஒரு மனிதனும் செய்யக்கூடாத காரியத்தை கர்த்தர் செய்வார். உலகத்தில் உள்ள அனைவருமே மரித்தவுடன் ஒரு சிலநாட்கள் வைத்திருந்து அடக்கம்செய்திடுவார்கள். ஆனால் இங்கே கர்த்தருடைய வல்லமையானது சாவுக்கேதுவான இந்த சரீரத்தை எத்தனை நாட்களானாலும் அந்த சரீரத்தை அவர் உயிர்ப்பிக் வல்லவர் என காண்கிறோம். இப்படி உயிர்ப்பிக்க வல்லவருக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள். கிறிஸ்துவை உங்களுடைய ஜீவனாகவும், சாவை உங்களுடைய ஆதாயமாகவும் எண்ணுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 7. விசுவாசத்தின் கதவு
## The Door of Faith

**உ**லகத்தில் உள்ள அனைவரையும் தேவன் இரட்சிக்கும்படியாக திட்டமிட்டுள்ளார். ஆகையால் விசுவாசத்தின் கதவு இப்பொழுது திறக்கப்பட்டுள்ளது. "எந்த ஜனத்திலாயினும் அவருக்குப்பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும்

நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்" என பேதுரு தம்முடைய பிரசங்க வாக்கியத்தில் குறிப்பிட்டுள்ளார் (அப்.10:35). குறிப்பாக யூதர்கள் தங்களுக்கு மட்டுமே தேவனுடைய இரட்சிப்பு இருப்பதாக எண்ணிக்கொண்டிருந்தனர். புறஜாதிகளும் இரட்சிக்கப்படும்படியாக தேவன் திட்டம் கொண்டார். உலகத்தில் எவர்கள் அவருக்குப் பயந்து நீதியைச் செய்கிறார்களோ அப்படிப்பட்டவர்களை கர்த்தர் நேசிக்கிறார். அவர்களுக்கு தம்முடைய வழியைப்போதிக்கிறார். ஆகையால் சத்தியவான் எவனும் அவருடைய சத்தம் கேட்கிறான். "பிதாவானவர் குமாரனை உலகரட்சகராக அனுப்பினாரென்று நாங்கள் கண்டு சாட்சியிடுகிறோம்" என்று அப்போஸ்தலனாகிய யோவான் குறிப்பிடுகிறார் (1யோவா.4:14).

ஆம், உலகத்தை இரட்சிக்கும்படியாக தேவன் தம்முடைய குமாரனை தெரிந்துகொண்டார். பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும் பிதாக்களுக்குத்திருவுளம்பற்றின தேவன் இந்தக்கடைசி நாட்களில் தம்முடைய குமாரன் மூலமாக திருவும்பற்றினார். "உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்" (யோவா.3:17). இயேசுவின் பிறப்பு உலகத்திற்கு கிடைத்த நற்செய்தியாக இருந்தது. ஏனெனில் அவர் மூலமாக உலகத்தை இரட்சிக்க தேவன் அவரை உலகத்தில் பிறவேசிக்கச் செய்தார். இயேசுவராமலிருந்தால் உலகத்திற்கு மீட்பு என்பதில்லை. அவராலே உலகம் இரட்சிப்படுகிறது என காண்கிறோம்.

இயேசுவானவர் யூதா கோத்திரத்தில் தோன்றினார் என்பது பிரசித்தமாயிருக்கிறது. ஆனால் அந்த யூதர்கள் இயேசுவின் போதனைகளை நிராகரித்தனர். பேதுரு தமது முதல் பிரசங்கத்தில் குறிப்பிடும்போது; "ஆகையால் நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றான்" (அப்.2:36). எந்த கோத்திரத்தில் இயேசுவானவர் தோன்றினாரோ அந்த கோத்திரத்தாரே இயேசுவை சிலுவையில் அறைந்து கொலைசெய்ய அதிக காரணமாயிருந்தார்கள். இந்த



யூதர்களுக்கு ஆண்டவருடைய போதனைகள் முறன்பாடாக தோன்றியது. அநேக பழைய ஏற்பாட்டு சம்பவங்களையும் ஆண்டவர் தம்முடைய போதனைகள் மூலமாக எடுத்துரைத்தார். மேலும் தான் தேவனிடத்தில் வந்தவர் என்பதை அவர்களுக்கு நிரூபிக்க அநேக அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்தார். அவர்களோ அவரை புறம்பாக்கிப்போட்டார்கள். இன்றைக்குங்கூட யூதர்கள் ஆலய வழிபாடு செய்து நியாயப்பிரமாணத்தின்படி வாழவும், மோசேயின் கட்டளைகளைக் கைக்கொள்ளவும் பழையபிரமாணத்தின்படி ஜீவிக்கவுமே விரும்புகின்றனர்.

மேலும், எருசலேமைக்குறித்து கர்த்தர் சொல்லும்போது; "எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும் வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று" என்கிறார் (லூக்.13:34). அந்தப்படியாக அனுப்பப்பட்டவர்களை தாம் நேசித்த ஜனங்கள் புறம்பாக்கிப் போட்டார்கள். ஆண்டவர் தம்முடைய சீடர்களை அனுப்பும்போது கூட இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு போங்கள் என்று முதலாவது அவர்களிடத்தில் அனுப்பினார்.

பவுல் பர்னபா போன்றோர் அவர்கள் மத்தியில் பேசும்போது அநேகர் விசுவாசித்தனர். அப்படிப்பட்டவர்களுக்கு அவர்கள் சில புத்திமதியான வார்த்தைகளைக்கொடுத்தனர். "ஜெபஆலத்தில் கூடின சபைகலைந்துபோனபின்பு, யூதரிலும் யூதமார்க்கத்தமைந்த பக்தியுள்ளவர்களிலும், அநேகர் பவுலையும் பர்னாவையும் பின்பற்றினார்கள். அவர்களுடனே இவர்கள்பேசி, தேவனுடைய கிருபையிலே நிலைகொண்டிருக்கும்படி அவர்களுக்குப் புத்தி சொன்னார்கள்." (அப்.13:43). சிலர் பொறாமைகொண்டு எதிரிடையாக பேசினார்கள். எல்லா இடங்களிலும் பொறதமைப்படக்கூடிய ஜனங்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் தேவனுடைய நியமத்திற்கு எதிராக நின்றார்கள். "அப்பொழுது பவுலும் பர்னபாவும் தைரியங்கொண்டு அவர்களை நோக்கி: முதலாவது உங்களுக்கே தேவவசனத்தைச்

சொல்லவேண்டியதாயிருந்தது; நீங்களோ அதைத் தள்ளி, உங்களை நித்தியஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக் கொள்ளுகிறபடியினால், இதோ, நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம்" என்று சென்றுவிட்டார்கள் (அப்.13;46). மேலும் "யூதர்கள் பக்தியும் கனமுள்ள ஸ்திரீகளையும் பட்டணத்து முதலாளிகளையும் எடுத்துவிட்டு, பவுலையும் பர்னபாவையும் துன்பப்படுத்தும்படி செய்து, தங்கள் எல்லைகளுக்குப் புறம்பாக அவர்களைத் துரத்திவிட்டார்கள்" (அப்.13;50). ஆதிமுதலாக தேவன் அவர்களைத் தெரிந்துகொண்டு ஆசீர்வதித்து வந்தார். அவர்களோ அதற்கு அபாத்திரமாக போனார்கள். அப்போஸ்தலர்களும் முதாவது அவர்களுக்கே சுவிசேஷத்தை அறிவிக்கும்படியாக சென்றார்கள். அவர்களோ அந்த சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளாமல், அப்போஸ்தலர்களை துன்பப்படுத்தவும், தங்களுடைய எல்லைகளை விட்டுபோகும்படியாகவும் செய்தார்கள். அப்போஸ்தலர்களோ ஏற்றுக்கொள்ளாத இங்களில் உங்கள் கால்களில் படிந்த தூஷியையும் உதரிப்போடுங்கள் என்று ஆண்டவர் சொன்னபடி அந்தபட்டணங்களைவிட்டு புறஜாதியார் நாடுகளுக்கு சுவிசேஷம் அறிவிக்கும்படியாக கடந்து சென்றார்கள்.

புறஜாதிகள் கர்த்தருடைய வசனத்தை கேட்பதில் மிகவும் தீவிரமாக இருந்தார்கள். அப்போஸ்தலர்கள் "யூதருடைய ஜெபஆலயத்ததிலிருந்து புறப்படுகையில், அடுத்த ஒய்வுநாளிலே இந்த வசனங்களைத் தங்களுக்குச் சொல்லவேண்டும் என்று புறஜாதியார் வேண்டிக் கொண்டார்கள்" (அப்.13:42). அப்போஸ்தலர்கள் போதித்தது யூதர்களுடைய ஜெபஆலயத்தில் அதை வாஞ்சையோடு கேட்டவர்கள் புறஜாதிகள். அப்பொழுது விசுவாசத்தின் கதவு திறக்கப்பட்டுள்ளதை அறிகிறோம். இந்த சந்தோஷத்தை அப்போஸ்தலர்கள் மூப்பர்களுக்கும் சபையாருக்கும் தெரியப்படுத்தினார்கள்.

"அவர்கள் அங்கே சேர்ந்தபொழுது சபையைக் கூடிவரச் செய்து, தேவன் தங்களைக் கொண்டு செய்தவைகளையும், அவர் புறஜாதிகளுக்கு விசுவாசத்தின் கதவைத்திறந்ததையும் அறிவித்து, அங்கே சீஷருடனேகூட அநேகநாள் சஞ்சரித்தார்கள்" என அப்.14:27,28 வசனங்களில் படிக்கிறோம். முதல் நூற்றாண்டு காலத்தில் புறஜாதிகளுக்கும் விசுவாசத்தின் கதவு திறக்கப்பட்டதைக்குறித்து



அப்போஸ்தலரும் சபையாரும் மிகவும் சந்தோஷப்பட்டு புறஜாதிநாடுகளுக்கு தொடர்ந்து சென்று சுவிசேஷத்தை சொல்லுவதில் தீவிரமாக இருந்து செயல்பட்டிருக்கக்கூடும். ஆகையினாலே நம்மைப்போன்ற புறஜாதிநாடுகளும் கர்த்தரையும் அவருடைய வல்லமையுள்ள வசனங்களையும் அறிந்துகொண்டது. எல்லோரும் இரட்சிக்கப்படவேண்டுமென தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார். ஒருவரும் கெட்டுப்போவது தேவனுடைய விருப்பமில்லை. எல்லோரும் இரட்சிக்கப்படவேண்டுமென தேவன் நீடிய பொறுமையுள்ள வராயிருக்கிறார் என காண்கிறோம்.

கொர்நேலியு வீட்டார் இரட்சிப்பு விஷயத்தில் பேதுருவுக்கு சில காரியங்கள் உணர்த்தப்பட்டது. "வானம் திறந்திருக்கிறதாகவும் நாலுமுனைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப்போல ஒருவிதமான கூடு தன்னிடத்தில் இறங்கித் தரையில் விடப்பட்டிருக்கிறதாகவும், அதிலே பூமியிலுள்ள சகலவிதமான நாலுகால் ஜீவன்களும், காட்டுமிருகங்களும், ஊரும் பிராணிகளும் இருக்கிறதாகவும் கண்டான். அல்லாமலும்; பேதுருவே, எழுந்திரு, அடித்துப் புசி என்று அவனுக்குச் சொல்லும் ஒரு சத்தம் உண்டாயிற்று. அதற்குப் பேதுரு: அப்படியல்ல, ஆண்டவரே, தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றையும் நான் ஒருக்காலும் புசித்ததில்லை என்றான். அப்பொழுது; தேவன் சுத்தமாக்கினவைகளை நீ, தீட்டாக எண்ணாதே என்று இரண்டாந்தரமும் சத்தம் அவனுக்கு உண்டாயிற்று. மூன்றாந்தரமும் அப்படியே உண்டாயிற்று. பின்பு அந்தக்கூடு திரும்ப வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது" (அப்.10:11-16).

இந்த தரிசனத்தின்படி பேதுரு உணர்த்தப்பட்டு கொர்நேலியுவின் வீட்டாருக்கு சுவிசேஷத்தை அறிவிக்கும்படியாக அனுப்பப்பட்டான். கொர்நேலியுவின் வீட்டில் கூடியிருந்தவர்களை பேதுரு நோக்கி: "அந்நிய ஜாதியானோடே கலந்து அவனிடத்தில் போக்குவரவாயிருப்பது யூதனானவனுக்கு விலக்கப்பட்டிருக்கிறதென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்; அப்படியிருந்தும் எந்த மனுஷனையும் தீட்டுள்ளவனென்றும் அசுத்தனென்றம் நான் சொல்லாதபடிக்கு தேவன் எனக்குக் காண்பித்திருக்கிறார்" என்றும் சொன்னான். மேலும் கொர்நேலியுவே, உன் ஜெபம் கேட்கப்பட்டது, உன் தானதருமங்கள்

தேவசந்நிதியில் நினைத்தருளப்பட்டது. யோப்பா பட்டணத்துக்கு ஆள் அனுப்பி, பேதுரு என்று மறுபேர்கொண்ட சீமோனை வரவழைப்பாயாக, அவன் கடலோரத்திலே தோல்பதனிடுகிறவனாகிய சீமோனுடைய வீட்டிலே தங்கியிருக்கிறான்; அவன் வந்து உன்னிடத்தில் பேசுவான் என்றார். "அந்தப்படியே நான் உடனே உம்மிடத்திற்கு ஆள் அனுப்பினேன்; நீர் வந்தது நல்ல காரியம்; தேவனாலே உமக்குக் கட்டளையிடப்பட்ட யாவையும் கேட்கும்படிக்கு நாங்கள் எல்லாரும் இப்பொழுது இங்கே தேவசமுகத்தில் கூடியிருக்கிறோம் என்றான். அங்கே பேதுருவின் பிரசங்கத்தை கேட்டு தங்களை கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தார்கள். அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்டளையிட்டான் என காண்கிறோம்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு நண்பனே, நீ கர்த்தராகிய இயேசுவையும் அவருடைய உபதேசத்தையும் அறிந்துள்ளாயா? அவர் உனக்காக சிலுவையில் மரித்தார். அவருடைய மரணத்தினாலே நாம் பாவமன்னிப்பை பெறுகிறோம். உலகத்தில் உள்ள யாவரையும் தேவன் இரட்சிக்கும்படியாக தம்முடைய குமாரனை சிலுவையில் மரிக்கும்படியாக ஒப்புக்கொடுத்தார். புறஜாதிகளுக்கும் விசுவாசத்தின் கதவு இப்பொழுது திறக்கப்பட்டுள்ளது. இதை நீ விசுவாசித்தால் கொர்நேலியு வீட்டாரைப்போல நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள். இன்றே இரட்சிக்கப்பட உங்களை சுவிசேஷத்திற்கு ஒப்புக்கொடுங்கள்.

### கேள்வி நேரம்

**உங்களில் விசுவாசத்தை துவக்குகிறவர் யார்?**

ஒவ்வொருவருக்கும் விசுவாசம் மிகவும் அவசியம். விசுவாசம் இல்லாமல் தேவனுக்குப் பிரியமாய் இருப்பது கூடாத காரியம். இந்த விசுவாசம் எப்படி வரும். விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் என நாம் ரோமர் 10;17-ம் வசனத்தில் படிக்கிறோம். இந்த விசுவாசத்தை துவக்குகிறவர் இயேசு. கொர்நேலியுவுக்கு விசுவாசத்தை துவக்கினவர் இயேசு. அவன் பேதுருவை சந்திக்கும்படியாக ஆட்களை அனுப்பினான். பேதுரு கொர்நேலியுவின் வீட்டாருக்கு சென்று சுவிசேஷம் அறிவித்தார் அவனும்



அவனுடைய வீட்டாரும் இரட்சிக்கப்பட்டார்கள். அதைப்போல உங்களில் விசுவாசத்தை துவக்கும் இயேசுவுக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள். "ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றிநெருக்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" என்கிறார் எபிரெய ஆசான் (எபி.12:1).

பூமியிலே எல்லோரும் ஒரு ஓட்டம் நியமிக்கப்பட்டிருக்கிறது. அநுதினமும் ஓடிக்கொண்டிருக்கிற வால்கிளாக் போன்ற நம்முடைய வாழ்க்கையில் இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் ஓடவேண்டும். அப்பொழுதே நிலையான ஆசீர்வாதத்தை, ஓட்டத்தை துவக்கின இயேசுவிடம் பெறமுடியும். நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள். உலகத்தையும் அதிலுள்ளவைகளையும் பார்த்து ஏமாற்றப் பட்டுபோய்விடாதிருங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 8. எதற்காக வேதாகமம் கொடுக்கப்பட்டது?

## For What was the Bible Given?

**ப**ரிசுத்த வேதாகமம் எதற்காக கொடுக்கப்பட்டது என்பதை குறித்து அநேகர் தெரியாது இருக்கிறார்கள். பலர் பலவிதமான கருத்து உடையவர்களாக இருக்கிறார்கள். சங்கீதம் 78-ல் வேதாகமம் கொடுக்கப்பட்ட நோக்கத்தை நாம் தெரிந்துகொள்ளுகிறோம். "அவர் யாக்கோபிலே சாட்சியை ஏற்படுத்தி, இஸ்ரவேலிலே வேதத்தை ஸ்தாபித்து, அவைகளைத் தங்கள் பிள்ளைகளுக்கு அறிவிக்கும்படி நம்முடைய பிதாக்களுக்குக் கட்டளையிட்டார்" என சங்கீதம் 78:5-ல் படிக்கிறோம்.

தேவன் இஸ்ரவேலிலே முதலாவது வேதத்தை ஸ்தாபித்தார் அல்லது கொடுத்தார். அதற்கு முன்பாக தேவன் முற்பிதாக்களோடு நேரடியாக தம்முடைய வார்த்தைகள் மூலம் பேசிக்கொண்டுவந்தார். அப்பொழுது அவர்களுக்கு வேதம் இல்லை. சீனாய் மலையில் மோசே மூலமாக பத்துக்கட்டளைகளைக் கொடுத்தார். தம்முடைய ஜனங்கள் நீதி

நியாயங்களில் நடக்கவும் வருங்கால சந்தியாகி தம்முடைய பிள்ளைகளுக்கு அவைகளை அறிவிக்கும்படியாகவும் அவர்கள் அதன்படி நடக்கும்படியாகவும் வேதாகமம் கொடுக்கப்பட்டது. "இனிப் பிறக்கும் பிள்ளைகளாகிய பின்சந்ததியார் அதை அறிந்துகொண்டு, அவர்கள் எழும்பித் தங்கள் பிள்ளைகளுக்கு அவைகளைச் சொல்லும்படிக்கும்" என காண்கிறோம் (சங்.78:6).

இஸ்ரவேலின் சந்ததியார் அதை அறிந்துகொண்டு அவர்கள் எழும்பித் தங்கள் பிள்ளைகளுக்கு அவைகளைச் சொல்லவேண்டும் என்ற கட்டளையிருந்தது. இஸ்ரவேலில் அநேகர் கர்த்தரையும் கர்த்தருடைய கட்டளைகளையும் அதன் மகத்துவங்களையும் அறியாது போய்விட்டார்கள். ஆகையால் அவர்களுடைய பிள்ளைகளாவது தேவனுடைய வேதாகமத்தை சரியாக அறிந்துகொள்ளவேண்டுமென தேவன் விரும்பினார்.

ஆதலால், "நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக்குறித்துப்பேசி" என உபாகமம் 6:7-ல் சொல்லப் பட்டிருந்தது. அநேகர் பிள்ளைகளுக்கு வேதாகமத்தை கற்றுக்கொடுக்க தவறிவிடுகின்றனர். மேற்கண்ட வசனத்தின்படியாக வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோது, வழியில் நடக்கிறபோது, படுத்துக் கொள்ளுகிறபோது, எழுந்திருக்கிறபோது வேதாகமத்தைக்குறித்தும் அதிலுள்ளவைகளைக்குறித்தும் தங்களுடைய பிள்ளைகளுக்கு போதிக்க தவறிவிடுகின்றனர். பிள்ளைகளுக்கு நல்ல உலக கல்வியைக் கொடுக்கும்படியாகவே பெற்றோர்கள் விரும்புகிறார்கள். தங்களுடைய பிள்ளைகள் வளர்ந்து சிறப்பான உத்தியோகத்தில் இருக்கவேண்டுமென ஆசைப்படுகின்றனர். நல்லதுதான் அதேவேளையில் நம்மை உண்டாக்கின தேவன் நமக்குக் கொடுத்த கட்டளைகளையும் உபதேசங்களையும் அவர்கள் அறிந்துகொண்டு அவைகளில் நிலைத்திருந்து தேவனுடைய திருச்சித்தத்தை நிறைவேற்ற வேண்டுமென ஒவ்வொரு பெற்றோரும் நினைக்கவேண்டுமல்லவா? ஒவ்வொருவரும் தங்களுடைய பிள்ளைகளுக்கு முதலாவது ஒரு வேதாகமத்தை வாங்கிக்கொடுக்கவேண்டும். தங்களுடைய பிள்ளைகள்



அழகாயிருக்க வேண்டுமென விரும்பி பல பொருட்களை வாங்கிக் கொடுக்கிறார்கள். ஆனால் ஒரு பரிசுத்த வேதாகமத்தை வாங்கிக்கொடுத்து அதை தினமும் படிக்கவைக்கவேண்டும். சில பெற்றோர்கள் பிள்ளைகள் பெரிய பெரிய உத்தியோகத்திற்கு வரவேண்டுமென விரும்புகின்றனர். பதவி பட்டங்கள் எல்லாம் மண்ணோடு மண்ணாக பேய்விடும் என்பதை அறிந்தும் அவர்கள் அந்தவிதமான வேலைகளையே அதிகமாக நாடுகிறார்கள்.

அப்போஸ்தலனாகிய யோவான் சொல்லும்போது; "பிதாவினால் நாம் பெற்ற கற்பனையின்படியே உம்முடைய பிள்ளைகளில் சிலர் சத்தியத்திலே நடக்கிறதை நான் கண்டு மிகவும் சந்தோஷப்பட்டேன்" என்கிறார் (2யோவா.4). பிள்ளைகள் சத்தியத்திலே நடப்பதே நமக்கு சந்தோஷம். ஒவ்வொரு பெற்றோருக்கும் அது பெருமையைக் கொண்டுவரும். பிள்ளைகள் உதாரித்தனமாகவும் அல்லது மற்றவர்களோடு சண்டையிடுகிறவனாகவும், திருடுகிறவனாகவும் இருந்தால் அவனைக்குறித்து நீங்கள் கேள்விப்படும்போது உங்களுடைய மனது சந்தோஷம் கொள்ளுமா? வேதனை யடையுமல்லவா? இப்படிப்பட்ட வேதனையிலிருந்து விடுபட உங்களுடைய பிள்ளையை சத்தியத்திலே நடக்கும்படியாக பயிற்றுவியுங்கள். ஏலியைக்குறித்து அறிவீர்கள் அவன் தன் பிள்ளைகளை சரியான விதத்தில் வளர்க்கத்தவறிவிட்டான். "ஏலியின் குமாரர் பேலியாளின் மக்களாயிருந்தார்கள்; அவர்கள் கர்த்தரை அறியவில்லை" (1சாமு.2;12).

இந்தவிதமாக அநேக குடும்பங்களில் பிள்ளைகள் கர்த்தரை அறியாதவர்களாகவே போய்விடுகிறார்கள். தகப்பன் சபைபோதகனாயிருப்பதால் பிள்ளைகள் வேதாகமத்தில் வல்லவர் களாயிருப்பார்கள் என்று நாம் நம்பிவிடமுடியாது. ஏனெனில்; அவர்களுக்கு வேதாகமத்தைக்குறித்த போதனைகள் படுக்கும் போதும், எழுந்திருக்கும்போதும், நடக்கும்போதும், சாப்பிடும்போதும், உட்கார்ந்திருக்கும்போதும் நேரம் கிடைக்கும்போதெல்லாம் அவைகளைக்குறித்துப் அந்த குடும்பத்தலைவன் பேசியிருக்கும்போது அந்த அறிவு அவர்களுக்கு கிடைக்கும். அவர்கள் கர்த்தரையும்

அவருடைய உபதேசங்களையும் அறிந்துகொண்டு சாட்சியுள்ளவர் களாக வாழமுடியும். பிள்ளையானவன் நடக்கவேண்டிய விதத்திலே அவனை நடத்தவேண்டும். அப்பொழுது முதிர்வயதிலும் அவைகளை விட்டுவிடாதிருப்பான்.

அன்பான சகோதரனே, சகோதரியே, பரிசுத்த வேதவசனங்களை உன் பிள்ளைகளுக்கு கருத்தாய் போதிக்கும்படியான கட்டளை தேவன் உனக்குக் கொடுத்திருக்கிறார் என்பதை அறிந்து அவைகளை உன் பிள்ளைகளுக்கு போதிக்கும்படியாக ஆயத்தப்படு. அப்பொழுது உன் குடும்பத்திலுள்ளவர்கள் கர்த்தரை அறியும் அறிவை அடைவார்கள்.

தேவன் மேல் நம்பிக்கை வைக்கும்படியாக நாம் அவர்களை பயிற்றுவிக்கவேண்டும். உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அவர்கள் அன்பு வைத்து வீணராய்போய்விடாதிருக்க நாம் அவர்களை கர்த்தருடைய சமுகத்துக்கு வழிநடத்தவேண்டியவர்களாயிருக்கிறோம். "தேவன்மேல் அவர்கள் தங்கள் நம்பிக்கையை வைத்து, தேவனுடைய செயல்களை மறவாமல், அவர் கற்பனைகளைக் கைக்கொள்ளும் படிக்கும்" என சங்.78:7-ல் படிக்கிறோம். வாலிபர்கள் தங்களுடைய நம்பிக்கையை அழிந்துபோகும் பொருட்கள்மீது வைத்து சிற்றின்பத்திற்கு தள்ளப்படுகிறார்கள். ஜீவனுள்ள தேவனிடத்தில் நம்பிக்கை வைக்கும்போது அவர்களுடைய நம்பிக்கையை கர்த்தர் ஆசீர்வதித்து அவர்களுக்கு கேடகமாயிருப்பார்.

சங்கீதக்காரன் சொல்லும்போது "கர்த்தரை நம்பி நன்மைசெய்; தேசத்தில் குடியிருந்து சத்தியத்தை மேய்ந்துகொள்" என்று சொல்லுகிறான். ஆம், சத்தியத்தை உட்கொள்ளும்போது காலமெல்லாம் அது நம்மை காக்கும். அநேகர் தேவனிடத்தில் அன்புகூருகிறேன் என்று சொல்லி சத்தியத்திற்குவிரோதமாக நடக்கிறார்கள். வசனம் சொல்லுகிறது; "நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுவதே அவரிடத்தில் அன்புகூருவதாகும்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல" (1யோவா.5:3). யேசுதாஸ் என்று பெயர் வைத்து ஒருவர் முள்வேலிகளை திருடிக்கொண்டு இருந்திருக்கிறார். ஒருநாளில் அவனை எல்லோரும் கையும் களவுமாக பிடித்து அந்த முள்வேலிகளை அவனுடைய தலையில் வைத்து இப்படித்தான் உங்கள் ஆண்டவருக்கும்



முள்முடியை சூட்டினார்கள் என்று சொல்லி அவனை ஏளனம்பண்ணினார்கள். அவன் பெயர் மட்டும் வைத்துக்கொண்டு செய்த வேலைகளைப் பார்த்தீர்களா? இப்படி பெயர் கிறிஸ்தவர்களாக இருந்துகொண்டு கற்பனைகளைக் கைக்கொண்டு நடவாதவர் களாயிருந்தால் நாமும் பொய்யர்களாகவும், தேவனுடைய நாமத்திற்கு மகிமைக்குறைச்சலை ஏற்படுத்துகிறவர்களாகவும் இருப்போம். நாம் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுவதே அவரிடத்தில் அன்புகூருவதாகும்.

யோசபாத் என்ற ராஜா தேவனுடைய கற்பனைகளின்படி நடந்தான் என 2நாளா.17:3,4 வசனங்களில் படிக்கிறோம். "கர்த்தர் யோசாபத்தோடிருந்தார்; அவன் பாகால்களைத் தேடாமல், தன் தகப்பனாகிய தாவீது முன்நாட்களில் நடந்த வழிகளில் நடந்து, தன் தகப்பனுடைய தேவனைத் தேடி, இஸ்ரவேலுடைய செய்கையின்படி நடவாமல், அவருடைய கற்பனைகளின்படி நடந்துகொண்டான்" என காண்கிறோம். அநேக ராஜாக்கள் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாமல் பாகால்களைத்தேடி மோசம்போனார்கள். ஆனல் யோசபாத் ராஜா தன் தகப்பனாகிய தாவீது வழிகளில் நடந்து தேவனைத் தேடினான். இவனோ இஸ்ரவேலரைப்போல முரட்டாட்டம் பண்ணாமல் கற்பனைகளைக் கைக்கொண்டான். தம்முடைய வேதத்தின்படி ஒவ்வொருவரும் நடக்கவேண்டுமென தேவன் எதிர்பார்க்கிறார். அதற்காக வேதாகமம் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும் வேதாகமம் எதற்காக கொடுக்கப்பட்டுள்ளது என்றால்; "இருதயத்தைச் செவ்வைப்படுத்தாமலும், தேவனை உறுதியாய்ப்பற்றிக்கொள்ளாமலும் இருந்த முரட்டாட்டமும் கலகமுமுள்ள சந்ததியாகிய தங்கள் பிதாக்களுக்கு அவர்கள் ஒப்பாகாதபடிக்கும், இவைகளைக் கட்டளையிட்டார்" (சங்.78:8).

முற்பிதாக்களைப்போல வரக்கூடிய சந்ததி போய்விடாதிருக்க வேதாகமத்தை கொடுத்தார். அவைகளின்படி நடந்து அவர்கள் இரட்சிக்கப்படும்படியாக கட்டளைகளையும் கற்பனைகளையும் எழுதிக்கொடுத்தார் என அறிகிறோம். இஸ்ரவேலர் முரட்டாட்டமுள்ள சந்ததியாகவும் கலகமுள்ள சந்ததியாகவும் இருந்தார்கள். இவர்களைப்போல பின் சந்ததியும் கெட்டுப்போய்விடக்கூடாது

என்பதற்காக வேதாகமத்தைக் கொடுத்தார். "அவர்கள் தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் தீக்கடக்கப்பண்ணி, குறிகேட்டு நிமித்தங்கள் பார்த்து, கர்த்தருக்குக் கோபமுண்டாக்க அவர் பார்வைக்கு பொல்லாப்பானதைச் செய்கிறதற்குத் தங்களை விற்றுப்போட்டார்கள்" (2இரா.17:17). இன்றைக்கும் இந்தவிதமான பழக்கங்கள் இருக்கிறது. தீ மிதிக்கப்பண்ணுகிறதினால் பக்திமான்களாக எண்ணிக் கொள்ளுகிறார்கள். அவைகள் வீணாணவைகள் என்று நாம் பார்க்கிறோம். இவைகள் கர்த்தருக்கு விரோதமான காரியங்கள். இவைகளைச் செய்கிறவர்கள் தவறு செய்து விட்டு எதிலும் சத்தியம் பண்ண துணிந்து நிற்பார்கள். அப்படிப்பட்டவர்கள் தங்கள் தவறிலிருந்து மனந்திரும்பவேண்டுமென தேவன் விரும்புகிறார். இவர்களோடு போராடி வந்த மோசேயைக் கர்த்தர் பார்த்து; "இந்த ஜனங்களைப் பார்த்தேன்; இவர்கள் வணங்காக்கழுத்துள்ள ஜனங்கள்" என்றார் (யாத்.32:9).

இப்படிப்பட்ட வணங்கா கழுத்துள்ள ஜனங்களுக்காக மோசே ஜெபித்தார். ஐயோ, இந்த ஜனங்கள் பொன்னினால் தங்களுக்குத் தெய்வங்களை உண்டாக்கி மகா பெரிய பாவம் செய்திருக்கிறார்கள் என்றார். இப்படி தேவனுக்கு விரோதமாக ஈடுபட்டு கர்த்தருக்கு எரிச்சலை உண்பண்ணினார்கள். பின்சந்தியார் இவ்விதமாக போயிவிடாதிருக்க அவர்களுடைய பிள்ளைகளுக்கு போதிக்கும்படியாக வேதாகமத்தை கர்த்தர் கொடுத்தார் என காண்கிறோம்.

### கேள்வி நேரம்

**வேதவாக்கியங்களெல்லாம் எதினாலே அருளப்பட்டிருக்கிறது?**

"வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினாலே அருளப் பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவை களாயிருக்கிறது" (2தீமோ.3:16,17). இது சாதாரண மனிதனுடைய ஞானத்தினாலும் புத்தியினாலும், எழுதப்பட்டது அல்ல. தேவ மனிதர்கள் தேவனுடைய ஆவியினாலே ஏவப்பட்டு எழுதினார்கள். அவர்கள்



தங்களுடைய சுயகருத்துக்களையோ போதனைகளையோ இதில் எழுதவில்லை. தேவன் என்ன சொன்னாரோ அவைகளையே அவர்கள் அவருடைய ஆவியின் ஏவுதலினாலே எழுதினார்கள். பலர் பலவிதமான இடங்களிலிருந்து எழுதியிருக்கிறார்கள். அவைகளை நாம் ஒப்பிட்டுப்பார்க்கும்போது ஒத்தவைகளாயிருக்கிறது. ஆகையால் இது தேவனுடைய ஆவியின்படியாக எழுதப்பட்டுள்ளது என அறிகிறோம். நீங்கள் வேதாகமத்தின் உபதேசங்களுக்கு உங்களை ஒப்புக் கொடுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

## 9. உனக்காக வேண்டிக்கொண்டேன்

## I Have Prayed for You

நமக்காக யாராவது பரிந்துபேசமாட்டார்களா என்று ஏங்கிக்கொண்டிருக்கும் அநேகரைக் குறித்து நாம் கேள்விப்படுகிறோம். உங்களையும் என்னையும் மீட்கும்படியாகவும், நமக்காக பரலோக பிதாவை நோக்கி வேண்டிக்கொள்ளும்படியாகவும் ஆண்டவராகிய இயேசு இவ்வுலகிற்கு கடந்துவந்தார். அவர் அப்போஸ்தலர்களில் ஒருவனாகிய பேதுருவை நோக்கி சொல்லும்போது; " பின்னும் கர்த்தர்; சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்; நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார்"(லூக்.22:31,32).

நம்மில் விசுவாசத்தை துவக்குகிறவரும் அதை முடிக்கிறவரும் ஆண்டவர் இயேசுவே. அவரில் நாம் கொண்டுள்ள விசுவாசம் காக்கப்பட நமக்காக வேண்டிக்கொள்ளுகிற ஆண்டவராயிருக்கிறார். சிலவேளைகளில் நாம் விசுவாசத்தில் குறைந்துவிடுகிறோம். கர்த்தர் நம்மிடம் எதிர்பார்ப்பது கடுகளவு விசுவாசம். இந்த கடுகளவு விசுவாசத்தை நாம் விட்டுவிடாதிருக்கவேண்டும். ஏனென்றால் குணமாக்கப்பட்ட அநேகரிடம் கர்த்தர் கேட்ட கேள்வி நீ விசுவாசிக்கிறாயா என்று கேட்டார். நமக்கு விசுவாசம் மிகவும் அவசியமான ஒன்றாயிருக்கிறது. அந்த விசுவாசம் வளரும்போது தேவனுடைய

மகிமையான காரியங்களை நாம் காணமுடியும். இந்த விசுவாசத்தை ஒழித்துப்போடவும் அதை குழைத்துபோடவும் பிசாசு முயற்சிப்பான். ஆகையால் அந்த விசுவாசம் நம்மில் ஒழிந்துபோகாதிருக்க நமக்காகவேண்டுதல் செய்கிறார். நாம் ஒருவரையொருவர் விசுவாச விஷயத்தில் உற்சாகப்படுத்தவேண்டியவர்களாயிருக்கிறோம்.

யோபுவை பிசாசு சோதிக்கும்போது; அவனில் இருக்கும் விசுவாசத்தை எடுத்துப்போடும்படியாக வகைதேடினான். "சாத்தான் கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக; தோலுக்குப் பதிலாகத் தோலையும், தன் ஜீவனுக்குப் பதிலாகத் தனக்கு உண்டான எல்லாவற்றையும், மனுஷன் கொடுத்துவிடுவான். ஆனாலும் நீர் உம்முடைய கையை நீட்டி, அவன் எலும்பையும் அவன் மாம்சத்தையும் தொடுவீரானால்; அப்பொழுது அவன் உமது முகத்துக்கு எதிரே உம்மைத் தூஷிக்கானோபாரும் என்றான்" (யோபு 2:4,5). பிசாசினால் யோபு மிகவும் வாதிக்கப்பட்டார். அவருடைய தோல் முதலானவைகள் அழுகி நாற்றம் எடுக்கும் அளவுக்கு கொடிய பருக்களால் யோபுவை வாதித்தான். யோபு தன்னுடைய வாயை திறந்து தேவனை தூஷிக்கவேண்டும் என்பதுவே பிசாசின் நோக்கமாயிருந்தது. ஆனால் கர்த்தர் யோபுவை அறிவார். அவனுடைய சோதனைக்காலங்கள் முடிந்தவுடன் கர்த்தர் அவனை பண்மடங்காக ஆசீர்வதித்தார்.

சங்கீதக்காரன் சொல்லும்போது; " தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், கர்த்தர் சமீபமாயிருக்கிறார். அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து, அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டு, அவர்களை இரட்சிக்கிறார்" என்ற சங்.145:18,19 வசனத்தின்படி யோபுவை கர்த்தர் இரட்சித்தார். நீங்கள் உங்களுக்கு வரக்கூடிய சோதனை, வேதனைகளிலிருந்து கர்த்தரை நோக்கி கூப்பிடுகிறீர்களா? அல்லது தேவனை தூஷிக்கிறீர்களா? நாம் கர்த்தரை பற்றிக்கொண்டிருப்பதில் உண்மை காணப்படவேண்டும். அநேகர் கர்த்தரைப் பற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களிடம் உண்மையில்லை. நாம் பற்றிக்கொண்டிருக்கும் கர்த்தர் சத்தியபரர். அவர் ஒரு மனிதனைப்போல பொய்பேசுகிறவர் அல்ல. உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் கர்த்தர் சமீபமாயிருக்கிறார்.



மேலும், கர்த்தர் தமது மூலமாய் சேருகிறவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறார். இன்றைக்கு மனிதர்களை நம்பி அநேகர் சபைக்கு செல்லுகிறார்கள். ஊழியக்காரர்களை நம்பி சபையில் சேருகிறார்கள் அல்லது உறவினர்களை நம்பி சபையில் சேர்க்கப்படுகிறார்கள். வேதம் சொல்லுகிறது இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் சபையிலே அநுதினமும் சேர்த்துக்கெண்டுவந்தார் என்று அப்.2:47. மேலும், "தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்" (எபி.7:25).

இன்றைக்கு மனிதன் இரட்சிக்கப்பட ஒரே ஒரு வழி மட்டுமே உள்ளது அது இயேசுகிறிஸ்துவானவர் ஏற்படுத்தின வழி. அந்த வழி ஜீவ வழியாக இருக்கிறது. இவ்வழியே செல்ல அவரில்லாமல் செல்ல முடியாது என்பதுவே உண்மை. ஆகையால் என்னாலே அல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்றார். ஆகையால் அவர் மூலமாக செல்ல முற்படுங்கள். மனிதன் ஒவ்வொருநாளும் தான் செய்துவருகிற தவறை திரும்ப திரும்ப செய்கிறான். எந்த ஒரு மனிதனும் அல்லது மனுஷியம் உங்களை இரட்சிக்கமுடியாது.

பிதாவாகிய தேவன் உலகத்திலே மனிதனை இரட்சிக்கும்படியாக ஆண்டவராகிய இயேசுவை அனுப்பினார். இவரே பிதாவின் சித்தத்தை பூரணமாக நிறைவேற்றியவர். இவர் வானத்திலிருந்து வந்த கர்த்தர். பரிசுத்தர், உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கும்படியாக தேவன் தெரிந்துகொண்ட தேவஆட்டுக்குட்டி என்றெல்லாம் நாம் வேதத்தில் வாசிக்கிறோம். எனவே இவர் தமது மூலமாய் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யக்கூடியவராகவும், உயிரோடிருக்கிறவராகவும் இருக்கிறார். இயேசுவைப் பெற்றெடுத்த மரியாள் மரித்துவிட்டாள். ஆனால் அவள் உயிர் பெறவில்லை. இயேசுவானவர் மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். பிதாவாகிய தேவன் அவரை மரித்தோரிலிருந்து உயிர்ப்பித்தார். அவர் உயிரோடிருந்து நமக்காக வேண்டுதல் செய்யக்கூடிய பிரதான ஆசாரியராயிருக்கிறார். மேலும் கர்த்தர் சொல்லுகிறார்; "நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை

விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்" என்கிறார் (யோவா.17:20). இவ்வசனத்தின்படி உலகம் இருக்கும்வரை ஆண்டவருடைய வசனத்தை கேட்டு விசுவாசிக்கிற யாவருக்காகவும் அவர் பிதாவை நோக்கி வேண்டிக்கொள்ளுகிறவராயிருக்கிறார். இப்படி நமக்காக பிதாவிடம் பரிந்துபேசும் ஆண்டவர் ஒருவர் உயிரோடிருக்கும்போது உங்களுடைய கவலைகளையெல்லாம் அவர்மீது வைத்துவிடுங்கள். கர்த்தர் உங்களை பாதுகாத்துக்கொள்ளுவார். நீங்கள் இயேசுவோடு நெருங்கி சேர ஒரு வழி இருக்கிறது. அது அவருடைய இரத்தம். இதைக்குறித்து பவுல் சொல்லும்போது; "முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்" (எபே.2:13).

இயேசுவின் இரத்தத்தை விசுவாசிக்காத ஒருவர் அவருடைய சமுகத்திற்கு நெருங்கிசேரமுடியாது. இன்றைக்கு பெயர் அளவில் அநேக கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய நிலைமை என்ன? அவர்கள் பாரம்பரியமாக கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்திருக்கிறார்கள் ஆனால் அவர்களுக்கு கிறிஸ்துவைப்பற்றியும் அவருடைய அன்பைப்பற்றியும் ஒன்றும் தெரியாது. அவர் தங்களுடைய குடும்பத்தின் கடவுள் என்றே சொல்லுவார்கள். இப்படிப்பட்டவர்கள் கிறிஸ்துவின் இரத்தத்திற்கு சமீபமாகவரவில்லை மிகவும் தூரமாக இருக்கிறார்கள்.

இயேசுவானவர் இப்பொழுது எங்கே இருக்கிறார் என்ற கேள்வி எழும்புமென்றால்; அவர் "பரலோகத்திலேதானே இப்பொழுது நமக்காகத் தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார்" (எபி.9:24). இந்த வசனத்தில் நமக்காக என்ற ஒரு வார்த்தையை நாம் வாசிக்கிறோம். நமக்காக வேண்டிக்கொள்ளும்படியாக தேவனுடைய சமுகத்தில் பிரவேசித்திருக்கிறார். பூமியிலே நம்முடைய பாவங்களை போக்கும்படியாக தம்முடைய சொந்த இரத்தத்தை சிந்தினார். மேலும், நாம் பாவத்தின்பிடியில், அதாவது பாவத்தின் வஞ்சனையில் சிக்கிக்கொள்ளாதிருக்கவும், மீண்டும் பாவத்தில் வீழ்ந்துபோகக் கூடியவர்களுக்காகவும் பிதாவிடம் பரிந்துபேசுகிறவராயும் இருக்கிறார். எனவே "அவர் பரலோகத்திற்குப்போய், தேவனுடைய வலதுபாரிசத்தில் இருக்கிறார்" என பேதுரு குறிப்பிடுகிறார் (1பேது.3:22).



அப்போஸ்தலனாகிய யோவான் குறிப்பிடும்போது; "என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவரா யிருக்கிறார்" (1யோவா.2:1). பாவத்திலிருந்து மீட்டு எடுக்கப்பட்ட ஒருவன் மீண்டும் பாவஞ்செய்யாதபடி தன்னைக்காத்துக்கொள்ளவேண்டும். ஒருவேளை எதிர்பாராதவிதமாகவோ அல்லது பிசாசினால் வாஞ்சிக்கப்பட்டோ அவன் பாவஞ்செய்வானானால் அப்படிப்பட்ட மனிதனுக்காக அவர் பரிந்துபேசுகிறவராயிருக்கிறார்.

ஒரு முறை மாயவித்தைக்காரனாகிய சீமோன் என்பவன் அப்போஸ்தலர் தங்கள் கைகளை அவர்கள்மேல் வைத்ததினால் பரிசுத்த ஆவி தந்தருளப்படுகிறதைச் சீமோன் கண்டபோது, அவர்களிடத்தில் பணத்தைக் கொண்டுவந்து நான் எவன்மேல் என் கைகளைவைக்கிறேனோ, அவன் பரிசுத்தஆவியைப் பெறத்தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும் என்றான். இது சீமோன் செய்த மாபெரும் பாவமாக இருந்தது. ஆகையால் பேதுரு அவனை நோக்கி; தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக்கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால் உன் பணம் உன்னோடேகூட நாசமாய்ப்போகக்கடவது. உன் இருதயம் தேவனுக்குமுன்பாகச் செம்மையாயிராதபடியால், இந்த விஷயத்திலே உனக்குப் பங்குமில்லை பாகமுமில்லை.

ஆகையால் நீ உன் துர்க்குணத்தைவிட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள்; ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம் என்றான். இப்படி அநேகர் சத்தியத்தை அறிந்த பின்பும் பாவம் செய்யக்கூடும். அவர்களுக்கு ஒருவேளை அவர்களுடைய பாவம் மன்னிக்கப்படலாம். அவர்கள் அறியாது செய்திருக்கலாம். இதற்காக இயேசுவானவர் பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருந்து நமக்காக பரிந்துபேசுகிறார். அவர் அப்படியே பரிந்துபேசிக்கொண்டே இருப்பார் நாம் பாவம் செய்துகொண்டே இருக்கலாம் என்று அர்த்தமல்ல. பாவத்திற்கு விலகி நாம் நீதியை செய்யத்தக்கதாக கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டுள்ளோம். ஆகையால் நம்முடைய பரிசுத்தத்தை பரிசுத்தஆவியானவரின் உதவியோடு பாதுகாத்துக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம்.

### கேள்வி நேரம்

**இயேசுவானவர் சர்வலோகத்தின் பாவத்தையும் நிவர்த்திசெய்கிற பலியாயிருக்கிறாரா?**

ஆம், அவர் "நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்திசெய்கிற பலியாயிருக்கிறார்" என அப்போஸ்தலனாகிய யோவான் 1யோவா.2:2-ல் குறிப்பிட்டுள்ளார். இதோ உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவஆட்டுக்குட்டி என இயேசுவுக்கு முன்னோடியாக வந்த யோவான் இயேசுவைப் பார்த்து சொன்னான்.

ஆம், அவர் சர்வலோகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிறதேவ ஆட்டுக்குட்டியாக வந்தார். அந்தப்படியாக உலகத்தாருடைய பாவத்தை சிலுவையில் சுமந்துதீர்த்தார். அவரை விசுவாசிக்கிற நீங்கள் அவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெறுவீர்கள். பலவிதமான பலிகளை செலுத்திவந்த காலங்கள் கடந்து இப்பொழுது ஒரே பலியாக இயேசுவை தேவன் பாவத்திற்காக ஒப்புக்கொடுத்தார். அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே பாவத்தை சிலுவையில் கொன்று வெற்றிசிறந்தார். இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் விசுவாசித்தால் உங்களுடைய ஆத்துமா பாவத்திலிருந்து காக்கப்படும்.

இயேசுவின் இரத்தத்தினாலே பாவமறகழுவப்படுவீர்கள். இன்றே உங்களை கர்த்தருக்கு ஒப்புக்கொடுங்கள். அவரை விசுவாசித்து பற்றிக்கொள்ளுங்கள். அவர் உங்களுக்காக பரிந்துபேசுகிற பிரதான ஆசாரியராயும், சதா காலமும் உயிரோடிருக்கிறவராயும் இருக்கிறார். அவரை பிதாவாகிய தேவன் தெரிந்துகொண்டார். அவர்மூலமாக பிதாவிடம் சேரும் சிலாக்கியத்தையும் நீங்கள் பெறுவீர்கள். நீங்களும், உங்களுடைய குடும்பமும் இரட்சிக்கப்பட கர்த்தருடைய வசனத்திற்கு செவிகொடுங்கள், ஒரு முறை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக தைரியமாய் போராடுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



## 10.கர்த்தர் தம்மை தாமே ஒப்புக்கொடுத்த விதம்
## The Way, the Lord gave Himself

"**அ**வர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்யப் பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்" என்று தீத்து 2:14-ல் அப்போஸ்தலனாகிய பவுல் சொல்வதை நாம் பரிசுத்த வேதாகமத்தில் படிக்கிறோம். இவ்வசனத்தில் மூன்று விதமான நோக்கத்தைப் பார்க்கிறோம். ஒன்று அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொள்ளவும். இரண்டாவது தமக்குரிய சொந்த ஜனங்களாக தெரிந்துகொள்ளவும். மூன்று நற்கிரியைகளைச் செய்யப் பக்திவைராக்கியமுள்ளவர்களாக நிறுத்தவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார் என காண்கிறோம். இந்த நோக்கத்தை முதலாவது ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் அறிந்துகொண்டு அந்த நோக்கத்தை கிறிஸ்தவ வாழ்க்கையில் நிறைவேற்றப் பாடுபட வேண்டும்.

ஒன்று சகல அக்கிரமங்களினின்று நம்மை மீட்டுக்கொண்டார். அப்படியானால், நாம் முன்னே எப்படியிருந்தோம்? பவுல் சொல்கிறார்; "முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களையும் பரிசுத்தராகவும் குற்றமற்றவர் களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்" என்கிறார் (கொலோ.1:21).

ஆம், நாம் முன்னே தேவனுக்கு விரோதிகளாகவும், அவரை அறிகிற அறிவு இல்லாதவர்களாகவும் இருந்தோம். இப்படிப்பட்ட நம்மை இயேசுவினுடைய மரணத்தினாலே ஒப்புரவாக்கினார். மேலும் சொல்லும்போது; "அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கை யில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர் களென்று நினைத்துக்கொள்ளுங்கள்" என்பதை பவுல் நமக்கு

நினைப்பூட்டுகிறார் (எபே.2:12). கிறிஸ்துவுக்கும் நமக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லாதவர்களாயிருந்தோம். அப்படியிருந்த நம்மை சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொள்ளும்படியாக இயேசுவை பிதாவாகிய தேவன் ஒப்புக்கொடுத்தார். அப்பொழுது நம்முடைய பாவங்கள் மிகவும் கொடூரமாகவும், ஒருவராலும் பரிசுத்தமாக்கக் கூடாதவையாகவும் இருந்தது. ஏசாயா சொல்லும்போது; "வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போலவெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பரச்சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்" என்கிறார் (ஏசா.1:18). கர்த்தர் நம்முடைய பாவங்களை மன்னித்து நம்மை ஏற்றுக்கொள்ள சித்தமாயிருந்தார்.

ஆகையால் எப்பேர்பட்ட பாவியும் கர்த்தராகிய இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே கழுவப்பட்டு தேவனுடைய பிள்ளையாக மாறும் பாக்கியத்தை பெறுகிறான். நீங்கள் இயேசுவின் இரத்தத்தினாலே மீட்கப்பட்டு உள்ளீர்களா? அவர் சிலுவையில் ஒப்புக்கொடுக்கப்பட்டதின் நோக்கம்: உங்களை சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொள்ளும்படியாக என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

**இரண்டாவது** தமக்குரிய சொந்த ஜனங்களாக உங்களைத் தெரிந்துகொள்ளும்படியாக ஒப்புக்கொடுத்தார். இது குறித்து பேதுரு சொல்லும்போது; "நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" என்கிறார் (1பேது.2:9). ஒவ்வொரு கிறிஸ்தவனும் இருளிலிருந்து வெளிச்சத்தின் பிள்ளையாக மாற்றப்படுகிறான்.

ஆகையால் அவன் ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படி தெரிந்துகொள்ளப்பட்ட வனாயிருக்கிறான். மேலும் அவன் பரிசுத்த ஜாதியாகவும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாகவும் இருக்கிறான். அவருக்குச் சொந்த ஜனமாக அவருடைய மந்தையில் சேர்க்கப்படுகிறான். இது எத்தனை



ஆசீர்வாதமான பாக்கியம். இந்த பாக்கியத்தை அடையவேண்டுமானால்; ஒவ்வொருவரும் அவருடைய மந்தையின் ஆடுகளாயிருக்கவேண்டும். பவுல் சொல்லும்போது; "நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து" என எழுதுகிறார் (எபே.2:19). முன்னே நாம் அந்நியர்களாயிருந்தோம். இப்பொழுதோ, அவரால் கழுவப்பட்டு, அவருக்குரிய சொந்த ஜனங்களாக தெரிந்துகொள்ளப்பட்டு இருக்கிறோம். ஆகையால் இனி நாம் அந்நியர்கள் அல்ல, தேவனுடைய வீட்டாராயிருக்கிறோம். உலகத்திலே அநேக கூட்டுக்குடும்பங்களைப் பார்க்கிறோம்.

எஸ்.கே குரூப்ஸ், எம். எம் குரூப்ஸ் இப்படி அநேக குரூப்ஸ் எழும்புகிறது இவர்கள் எல்லோரும் கூட்டுக்குடும்பத்தார்கள் என அழைக்கப்படுகின்றனர். ஆனால் இக்கூட்டுக்குடும்பங்கள் நிலைத்திருக்கின்றனவா என்றால் இல்லை. நாளடைவில் சண்டையிட்டு பிரிந்துபோகிறார்கள். ஆனால் தேவனால் ஏற்படுத்தப்பட்ட வீடு என்றும் நிலைத்திருக்கிறது. அதற்கு தலையாக இயேசுவானவர் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார். அந்த சந்ததி பரிசுத்த சந்ததியாகவும் தேவனை மகிமைப்படுத்துகிற சந்ததியாகவும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாகவும் இருக்கிறது. நீங்கள் அந்த சந்ததியில் உங்களை இனைத்துக் கொள்ளுங்கள். தமக்குரிய சொந்த ஜனங்களாக இருக்கும்படியாக அந்த சந்ததியை பிதாவாகிய தேவன் தெரிந்துகொண்டார். "நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்; உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை" (1யோவா.3:1).

**மூன்றாவது** நற்கிரியைகளைச் செய்யப் பக்திவைராக்கிய முள்ளவர்களாக இருக்கும்படியாக ஒப்புக்கொடுத்தார். நீங்கள் நற்கிரியைகளை செய்துகொண்டிருக்கிறீர்களா? அப்படியில்லை என்றால் இன்றே உங்களுடைய பணியை துவக்குங்கள். கர்த்தர் ஒப்புக்கொடுத்த விதத்தை நாம் ஒவ்வொரு நாளும் நிறைவேற்ற கடனாளி களாயிருக்கிறோம். பவுல் தீத்துவுக்கு சொல்லும்போது; "துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் கீழ்ப்படிந்து அடங்கியிருக்கவும், சகலவிதமான நற்கிரியைகளையும் செய்ய

ஆயத்தமாயிருக்கவும், ஒருவனையும் தூஷியாமலும், சண்டை பண்ணாமலும், பொறுமையுள்ளவர்களாய் எல்லா மனுஷருக்கும் சாந்தகுணத்தைக் காண்பிக்கவும் அவர்களுக்கு நினைப்பூட்டு" என்கிறார் (தீத்து 3:1,2).

உலகம் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். இப்படிப்பட்ட உலகத்தில் கர்த்தருடைய அன்பையும் அவருடைய சகல விதமான நற்கிரியைகளையும் அவர்களுக்கு முன்பாக நாம் நடப்பிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். ஒவ்வொரு நாளும் கிறிஸ்தவர்களை இந்த உலகம் பார்த்துக்கொண்டிருக்கிறது. ஆகையால் நாம் எல்லா மனுஷருக்கும் முன்பாக சாந்தகுணத்தைக் காண்பிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். ஒருவேளை உங்களுடைய நாவு உங்களுக்கு கீழ்படியாவிட்டால் என்னுடைய நாவுக்கு காவல் வையும் ஆண்டவரே எனறு தேவனை நோக்கி வேண்டிக்கொள்ளுங்கள். ஏனென்றால், நாவு நெருப்புபோன்றது. நாவை அடக்க ஒருவனாலும் கூடாது அது பொல்லாங்குநிறைந்தது என வேதம் சொல்லுகிறது. ஆகையால் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக சிருஷ்டிக்கப்பட்ட நாம் கிறிஸ்துவுக்கேற்ற கிரியைகளை செய்வோம்.

மேலும் பவுல் தீத்துவுக்கு சொல்லும்போது; "இந்த வார்த்தை உண்மையுள்ளது; தேவனிடத்தில் விசுவாசமானவர்கள் நற்கிரியைகளைச் செய்யஜாக்கிரதையாயிருக்கும்படி நீ இவைகளைக்குறித்துத் திட்டமாய்ப் போதிக்கவேண்டுமென்று விரும்புகிறேன்; இவைகளே நன்மையும் மனுஷருக்குப் பிரயோஜனமுமானவைகள்" என்கிறார் (தீத்து 3:8).

மனிதர்கள் பெரும்பாலும் கர்த்தருக்காக எதையாவது செய்யவேண்டுமென்று எண்ணி சபை கட்டிடங்களிலும், சபை சார்ந்த இடங்களிலும், பெயர் சொல்லும்படியாக செய்துவிடுகிறார்கள். ஆனால் தேவன் இவைகளை எதிர்பார்க்கவில்லை. அவர்களுடைய நற்கிரியைகளை எதிர்பார்க்கிறார். ஒரு கிறிஸ்தவானாக இருந்துகொண்டு கொள்ளையடிக்கிறவனாகவும், கொலை செய்கிறவனாகவும், பிறனுடைய பொருட்களை இச்சிகிறவனாகவும் வாழ்ந்து கொண்டிருந்தால் ஜனங்கள் அவனை சபிப்பார்கள். அவன் ஒரு



சாட்சியுள்ள மனிதனாக கிறிஸ்துவை பிரதிபலிப்பவனாக வாழவேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார். ஆகையால் தேவனிடத்தில் விசுவாசமானவர்கள் நற்கிரியைகளைச் செய்ய அவர்களுக்கு திட்டமாக போதிக்கவேண்டும். இவைகளின்படி ஒரு கிறிஸ்தவன் நடக்கும்போது அது அவனுக்கு பிரயோஜனமாக இருக்கும். அவனை கர்த்தர் அதிகமான நேசிப்பார். அவனாலே அவனை சுற்றியுள்ள ஜனங்கள் கர்த்தரை அறிந்துகொள்ளுவார்கள். தேவனுடைய நாமம் மகிமைப்படும். எனவே "சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்து கொள்ளுங்கள் " என கொலோ. 1:10-ல் காண்கிறோம்.

ஆம், சகல விதமான கனிகளை கர்த்தருக்குள்ளாக கொடுக்க முடியும். நீங்கள் கிறிஸ்துவோடும், கிறிஸ்துவானவர் உங்களோடும் இருந்தால் இந்தவிதமான கனிகளைக் கொடுக்கமுடியும். ஆவிக்குரிய கனிகள் ஒன்பது உங்களுடைய வாழ்க்கையில் காணப்படவேண்டும். கனியற்ற மரத்தை எந்த ஒரு தோட்டக்காரனும் வைத்திருக்கமாட்டான் அதை விரும்பாமல் வெட்டிப்போடும்படியாக முயற்சிப்பான். அதைப்போல தேவனுடைய சமுகத்தில் ஆவிக்குரிய கனிகளை கொடுக்காதவர்களாக இருப்போமானால் தேவன் நம்மை அவருடைய தோட்டத்திலிருந்து எடுத்துப்போடுவார்.

நாம் அவரை அறிகிற அறிவில் வளர்ச்சியடையவேண்டும். ஆகையால் அநுதினமும் வேதம் வாசிக்கும் பழக்கத்தை இன்றே துவக்குங்கள். அதைப்போல நேரம் கிடைக்கும்போதெல்லாம் தேவனை நோக்கி ஜெபியுங்கள். பிதாவே நான் என்ன செய்யசித்தமாயிருக்கிறீர் என்று கேளுங்கள். ஒவ்வொரு நாளும் நற்கிரியைகளை செய்யும்படியாக உங்களை தேவனுடைய சமுகத்தில் ஒப்புக்கொடுங்கள்.

நம்மை சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொள்ளும் படியாகவும், தமக்குரிய சொந்த ஜனங்களாயிருக்கும்படியாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்திவைராக்கியமுள்ளவர்களாயிருக்கும் படியாகவும் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த இயேசுவின் நோக்கத்தை நிறைவேற்றும்படியாக உங்களையும் ஒப்புக்கொடுங்கள்.

**கேள்வி நேரம்**

**தேறின கிறிஸ்தவன் எந்தவிதமான சிந்தையுடையவனாயிருக்க வேண்டும்?**

கிறிஸ்து இயேசுவிலிருந்து சிந்தையுடையவனாயிருக்கவேண்டும். அப்பொழுது பிசாசு அவனை மேற்கொள்ளமுடியாது. "ஆகையால், நம்மில் தேறினவர்கள் யாவரும் இந்தச் சிந்தையாயிருக்கக்கடவோம்; எந்தக் காரியத்திலாவது நீங்கள் வேறே சிந்தையாயிருந்தால், அதையும் தேவன் உங்களுக்கு வெளிப்படுத்துவார்" என்கிறார் பவுல் (பிலி.3:15). உங்களுடைய சிந்தை எப்படிப்பட்டதாக இருக்கிறது? உலகப்பிரகாரமாக எதை வாங்குவோம், எதை விற்போம், என்னத்தை உடுத்துவோம், இப்படிய உலகத்துக்குரிய காரியங்களை சிந்தித்துக்கொண்டு இருக்கிறீர்களா? உலகம் கொடுக்கக்கூடாத சமாதானத்தையும் சந்தோஷத்தையும் கொடுக்க வல்லவராகிய இயேசுவுக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள்.

நீங்கள் தேர்ச்சியடைந்த கிறிஸ்தவராக இருந்துகொண்டு அநேகருக்கு முன்மாதிரியாக வாழுங்கள். உங்களுடைய வாழ்க்கை பிறருக்கும் முன் மாதிரியாக இருக்கட்டும். பவுல் கிறிஸ்து இயேசுவை என் சரீரத்திலே தரித்துக்கொண்டேன் என்றுசொல்வதைப்போல நீங்களும் உங்களை மறைத்து கிறிஸ்துஇயேசுவை தரித்துக்கொள்ளுங்கள். பெயரளவில் கிறிஸ்தவர்களாயிருப்பதைக்காட்டிலும் நடைமுறையில் ஜனங்கள் மத்தியில் கிறிஸ்துவை பிரதிபலிக்கிறவர்களாக வாழுங்கள். கிறிஸ்துவானவர் எப்பொழுதும் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றும்படியாக ஜெபித்துக்கொண்டிருந்ததைப்போல நீங்கள் ஜெபியுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 11. கர்ப்ப வேதனை
## Pains of Childbirth

அப்போஸ்தலர்களிலே அதிகமாக ஊழியத்தைக்குறித்து கர்ப்பவேதனை அடைந்தவர் அப்போஸ்தலனாகிய பவுல். அவர் கலாத்திய சபையாருக்கு எழுதிய கடிதத்தில்; "என் சிறுபிள்ளைகளே, கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்பவேதனைப்படுகிறேன்" என்றார் (கலா.4:19). கர்ப்பவேதனை ஒரு



ஸ்திரீக்குத்தான் தெரியும். அந்த அளவு அப்போஸ்தலனாகிய பவுல் வேதனைப்பட்டிருக்கிறார். இந்த கர்ப்பவேதனையானது கலாத்திய சபையாரிடத்தில் கிறிஸ்துவானவர் உருவாகவேண்டுமென்பதுவே பவுலுடைய நோக்கமாயிருந்தது. ஆகையால் மறுபடியும் கர்ப்பவேதனைப்படுகிறேன் என்கிறார். அவர்கள் மத்தியில் ஊழியம் செய்து அவர்களை கிறிஸ்துவுக்குள் பெற்றெடுத்திருக்கிறார். அவர்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்திற்கு உட்படும்போது அவர்களை மறுபடியும் புதுப்பிக்கவேண்டியிருக்கிறபடியால் மறுபடியும் கர்ப்பவேதனைப்படுகிறேன் என்றார். மேலும் அவர்களுக்கு எழுதும்போது; "அப்பொழுது நீங்கள் கொண்டிருந்த ஆனந்த பாக்கியம் எங்கே? உங்கள் கண்களைப் பிடுங்கி எனக்குக் கொடுக்கக்கூடுமானால், அப்படியும் செய்திருப்பீர்கள் என்று உங்களுக்குச் சாட்சியாயிருக்கிறேன்" என்றார் (கலா.4:15).

கலாத்திய சபையார், அப்போஸ்தலனாகிய பவுலின்மீது அளவில்லா அன்பு கொண்டிருந்தனர். ஆகையால் கண்களைப் பிடுங்கி எனக்குக் கொடுக்கக்கூடுமானால் அப்படியும் செய்திருப்பீர்கள் என்று எழுதுகிறார். அந்த அன்பு இல்லாதபடியால் மறுபடியும் உங்களுக்காக கர்ப்பவேதனைப்படுகிறேன் என்கிறார். "ஸ்திரீயானவளுக்குப் பிரசவகாலம் வந்திருக்கும்போது அவள் துக்கமடைகிறாள்; பிள்ளைபெற்றவுடனே ஒரு மனுஷன் உலகத்தில் பிறந்தானென்கிற சந்தோஷத்தினால் அப்புறம் உபத்திரவத்தை நினையாள்" எனக் காண்கிறோம் (யோவா.16:21). அப்.பவுல் அதைப்போல கர்ப்ப வேதனைப்பட்டார்.

இன்றைக்கும் ஆதிஅன்பு சபையில் குறையும்போது வழிநடத்துகிற ஊழியர்கள் மிகவும் கஷ்டப்படுகிறதை அறிகிறோம். அவர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் வளரும்போது அதைப்பார்த்து அந்த சபையின் ஊழியர் மிகவும் சந்தோஷம் அடைவார். ஒரு மந்தையின் மேய்ப்பனுக்கு ஆடுகள் நன்கு வளர்ச்சியடையவேண்டும். மந்தைகள் சிதறப்படவும், மந்தை நாளுக்கு நாள் குறையவும் காணப்பட்டால் எந்த ஒரு மெய்ப்பனுக்கும் சந்தோஷம் ஏற்படாது அவன் மந்தையை நினைத்து கவலைகொள்ளுவான். கலாத்திய சபையாரைப்பார்த்த பவுல்; "ஆவியினாலே ஆரம்பம்பண்ணின நீங்கள் இப்பொழுது

மாம்சத்தினாலே முடிவு பெறப்போகிறீர்களோ? நீங்கள் இத்தனை புத்தியீனரா? என கேள்வி எழுப்புகிறார் (கலா.3:3). அநேகர் ஆவியினாலே சத்தியத்திற்கு கீழ்ப்படிந்து விட்டு பின்பு உலகப்பிரகாரமாக மாம்சசிந்தைகொண்டு சத்தியத்திற்கு எதிராக அநேக காரியங்களில் ஈடுபடுவார்கள். அதாவது பரமஈவை ருசிபார்த்து விட்டு ஒரு மனிதன் பாதாளத்தை விரும்பினால் எப்படியிருக்கும்? கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புறண்டால் எப்படியிருக்கும்? அதைப்போல மாம்ச சிந்தை கொள்ள ஆரம்பித்தனர். ஆகையால் நீங்கள் இத்தனை புத்தியீனரா? என்கிறார். புத்தியில்லாத மிருகங்களைப்போல அநேகர் மாறிவிடுகின்றனர்.

இது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. கிறிஸ்துவுக்குள்ளாக வந்து பலவருடங்கள் சபையில் நிலைத்திருப்பவர்கள்கூட பின்மாற்றமாகிப் போகிறதைக்குறித்து மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. அவர்களுடைய நம்பிக்கை என்னவாயிற்று? ஏன் இப்படியானார்கள்? என்ற கேள்வி நமக்குள் எழும்புகிறதல்லவா? அதைப்போல பவுலுக்கும் எழும்பிற்று.

மேலும் பவுல் கலாத்திய சபையாருக்கு எழுதின கடிதத்தில்; "அப்படியே நாமும் சிறுபிள்ளைகளாயிருந்த காலத்தில் இவ்வுலகத்தின் வழிபாடுகளுக்கு அடிமைப்பட்டவர்களாயிருந்தோம்" என்கிறார் (கலா.4:3). தகப்பன் ஒரு விக்கிரகாராதனைக்காரன் என்றால் அந்தப்பிள்ளையும் அறியாமல் தகப்பனுடைய வழியில் அறியாமல் விக்கிரகாராதனை செய்கிறது. நாமும் அந்தப்படியாக இவ்வுலகத்தின் வழிபாடுகளுக்கு அடிமைப்பட்டவர்களாயிருந்தோம். அவைகள் நம்மை ஆண்டுவந்தது. "நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார்" என தெளிவாக எழுதியிருக்கிறார் (எபே.4:14,15).

ஆகையால் கர்த்தருக்குள் வளர்ச்சியடைந்த ஒருவன் இனி குழந்தையல்ல. மேலும் மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகங்களைக் கேட்டு அங்குமிங்கும் செல்லாமல் அன்புடன் சத்தியத்தைக் கைக்கொள்ளவேண்டும். இவ்விஷயத்தில்



அநேகர் குழந்தைகளாகவே இருக்கின்றனர், ஆகையால் வஞ்சிக்கப்படுகிறார்கள். சத்தியத்தை சீர்தூக்கி பார்க்க அவர்களுக்குத் தெரியவில்லை, மனுஷருடைய மாயத்தினாலும், வஞ்சகத்தினாலும் சிக்கிக்கொள்ளுகிறார்கள். காற்றினால் அடியுண்டோடுகிற மேகத்தைப் போலவும், கடலலைகளைப்போலவும் ஒரு இடத்தில் நிலைத்திராமல் அங்குமிங்கும் அலைந்துதிரிகிறதைப் பார்க்கிறோம். இவர்கள் மார்க்கம் தப்பி அலைகிற நட்சத்திரங்களைப்போல இருக்கிறார்கள் என யூதா குறிப்பிடுகிறார். நீங்கள் எப்படிப்பட்டவராயிருக்கிறீர்கள். நீங்கள் குழந்தைகள் அல்ல. குழந்தைகளாயிருந்த காலத்தில் குழந்தைகளைப் போல சிந்தித்தீர்கள், பேசினீர்கள், செய்தீர்கள்.

இப்பொழுது நீங்கள் கர்த்தருக்குள் வளர்ச்சியடையக்கூடிய பூரணபுருஷராயிருக்கிறீர்கள். ஆகையால் கிறிஸ்துவானவர் உங்களில் இருக்கும்படிக்கும், அவருடைய சிந்தை உங்களில் எப்பொழுதும் இருக்கும்படி, தேவனுக்குரியவைகளை சிந்தியுங்கள், செயல்படுங்கள். தேவனுடைய நாமம் மகிமைப்படும்படி எப்பொழுதும் ஒரு வெற்றியுள்ள கிறிஸ்தவனாக வாழ பிரயாசப்படுங்கள். வேதாகமம் இதையே உங்களில் எதிர்பார்க்கிறது.

மேலும் "நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொண்டு, நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக" என்று கொலோசெய சபையாருக்கு பவுல் எழுதுகிறதை நாம் கொலோ.2:6,7-வசனங்களில் படிக்கிறோம். ஒவ்வொருவரும் இயேசுவை எப்படி ஏற்றுக் கொள்ளுகிறார்களோ அந்தப்படியே அவருக்குள் வேர்கொண்டவர்களாக வளர்ச்சியடைய வேண்டும்.

ஆகையால் இயேசுவானவர் சொல்லும்போது; என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள்" என்றார். இயேசுவை அல்லாமல் நீங்கள் கனிகொடுக்கமுடியாது. நீங்கள் அவரில் நிலைத்திருக்கவேண்டும்.

அவருக்குள் வேர்கொள்ளவேண்டும். சிலர் வேர்கொண்டிருக்கிறார்கள், ஆனால் அந்த வேர் கிறிஸ்துவில் நிலைத்திருக்கக்கூடிய வேர் அல்ல, மனிதர்கள் மீது தங்களுடைய நம்பிக்கையை வைத்திருக்கிறார்கள். அவர்கள் பாறைகளின்மீது முளைத்திருக்கும் செடிகளைப் போன்றவர்கள், கொஞ்சகாலம் நிலைத்திருப்பார்கள், தண்ணீர் அற்றசமயத்தில் கருகிப்போகும் செடிகளைப்போல அவர்கள் கருகிப்போவார்கள். கர்த்தருக்குள் நிலைத்திருக்கமாட்டார்கள். ஆகையால் ஒவ்வொருவரும் இயேசுவில் வேர்கொள்ளவேண்டும், அவர்மேல் கட்டப்படவும் வேண்டும்.

மூலைக்கல்லாகிய அஸ்திபார கல்லை பிதாவாகியதேவன் எருசலேமிலே வைத்தார் அதன்மீது கட்டப்படுகிறவர்கள் வெட்கப்பட்டுப்போவதில்லை, ஏனெனில் அது பரீட்சிக்கப்பட்ட கல் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட கல். இந்தக்கல்லின்மீது எவன் விழுவானோ அது அவனை நொருக்கிப்போடும். இந்தக்கல்லின் மீது எவன் அஸ்திபரம்போட்டு கட்டுவானோ அவன் என்றென்றுமாய் நிலைத்திருப்பான்.

அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் இவர்மீது கட்டப்பட்டனர். "அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார். அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக்கட்டப்பட்டுவருகிறீர்கள்" என மிகதெளிவாக எழுதப்பட்டுள்ளது (எபே.2:20-22). நீங்கள் இவ்விதமாக கட்டப்பட்டுள்ளீர்களா? அல்லது மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட சபைகளில் கட்டப்பட்டு இருக்கிறீர்களா? உங்களை வேதவசனத்துடன் ஒப்பிட்டுப்பாருங்கள்.

கிறிஸ்துவின்மீது நீங்கள் கட்டப்பட்டவர்களாக இருக்க, அவருக்குள் நடந்துகொண்டு, தேவசித்தம் செய்யவேண்டும். ஏனெனில் நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினால் அழைக்கப்படுகிறீர்கள், ஆகையால் அவர் போதித்தபடியே நடந்து, அப்படியே விசுவாசத்தில் உறுதிப்பட்டு ஸ்தோத்திரத்தோடே பெருகவேண்டும். ஒரு கிறிஸ்தவனுக்கு அடித்தலம் விசுவாசம். இந்த விசுவாசத்திலே ஒவ்வொரு கிறிஸ்தவனும்



நிலைத்திருக்கிறான். விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாய் இருப்பது கூடாதகாரியம். விசுவாசத்தினாலே நம்முடைய முற்பிதாக்கள் இராஜ்யங்களை ஜெயித்தார்கள் வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள். சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள் என்றெல்லாம் பார்க்கிறோம். இவர்களைப்போல நாமும் விசுவாச வீரர்களாக இருந்து கர்த்தருக்குள் வளர்ச்சியடைய வேண்டும்.

பலர் உலகக்காரிங்களில் விழுந்துபோய்விடுகின்றனர். ஆகையால் "லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளைகொண்டுபோகாதபடிக்கு எச்சரிக்கை யாயிருங்கள்; அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலகவழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல" என பவுல் எச்சரிக்கிரதை காண்கிறோம் (கொலோ.2:8). உலகம் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது என்பதை நாம் அறிவோம்.

எனவே லௌகீக ஞானம் ஆவிக்குரிய மனிதனையும் பற்றிப்பிடிக்கக்கூடியதாக இருக்கிறது. இந்தவிதமான ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும் ஒருவனும் உங்களைக் கொள்ளை கொண்டுபோகாதபடிக்கு எச்சரியக்கையாயிருங்கள் என்கிறார் பவுல். அந்தவிதமான தந்திரத்தில் தேமா போன்றோர் சிக்கி உலககாரியங்களுக்கு ஊழியம்செய்யும்படியாக சென்றுவிட்டனர். இவைகள் மனுஷர்களின் பாரம்பரியம் என கூறுகிறார்.

இது கிறிஸ்துவைப்பற்றினது அல்ல. கிறிஸ்துவானவர் பிசாசு கொண்டுவந்த காரியங்களில் அவர் வெற்றிசிறந்தார். ஒவ்வொருவரும் இவ்விதமாக பிசாசு கொண்டுவரும் தந்திரமான வார்த்தைகளை நம்பி மோசம்போய்விடாதிருக்க எச்சரிக்கையாயிருக்க போதிக்கப்படுகிறோம். "ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது. மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்" என்கிறார் (கொலோ.2:9,10). நீங்களும் கர்த்தருக்குள் பரிபூரணமாயிருப்பீர்கள் என நம்புகிறோம்.

### கேள்வி நேரம்

**ஒரு ஊழியனின் வேலை ஒவ்வொருவரையும் கிறிஸ்துவுக்குள் தேர்ச்சியடைய செய்வதா?**

ஆம், அப்பொழுதே அவன் எஜமானிடம் கூலியைப்பெறுவான். ஒருவேலைக்காரன் தன்னுடைய வேலையை தினமும் சரியாகசெய்து எஜமான் வரும்போது அவைகளை ஒப்புவிப்பான். அதைப்போல பிரதான ஆசாரியராகிய இயேசு மீண்டும் வரப்போகிறார். அதற்குள்ளாக மேய்ப்பர்கள் மந்தையை சிறப்பாக மேய்த்து பிரதான மெய்ப்பனுக்குக் கணக்கு ஒப்புவிக்கவேண்டும். இதையே பவுல்; "எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷனுக்கு எல்லா ஞானத்தோடும் உபதேசம்பண்ணுகிறோம்" என்கிறார் (கொலோ.1:28).

ஒரு ஆசிரியர் மாணவர்கள் பரீட்சையில் பாஸ்பண்ண வேண்டுமென மாணவர்களுக்கு கற்றுக்கொடுக்கிறார்கள். அதைப்போல ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்துவுக்கு முன்பாக தேர்ச்சியடைந்தவனாக நிறுத்தவேண்டும், அது ஒரு ஊழியனுடைய வேலை அதற்காக நாங்கள் அவரை அறிவித்து எல்லா ஞானத்தோடும் உபதேசம்பண்ணுகிறோம் என்கிறார் பவுல். நீங்களும் அந்தப்படியாக கிறிஸ்துஇயேசுவுக்குள் வளர்ச்சியடைய உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 12. சத்தியத்தின் பயன்கள்
## The Uses of the Truth

**ச**த்தியம் சத்தியம் என்று எங்கும் எப்பொழுதும் பேசப்படுகிறது. அந்த சத்தியம் யார்? சத்தியத்தின் பயன்கள் என்ன? என்பதைக்குறித்து இச்செய்திவேளையில் தியானிக்கவுள்ளோம். ஆண்டவராகிய இயேசு சத்தியத்தின் வாசலாகவும் அவரே சத்தியபரராகவும் இருக்கிறார். அவர் சொல்லும்போது; "நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான் எனறார்" (யோவா.10:9). இவர் வழியாய் ஒருவன் சொல்லாவிட்டால் அவன் இரட்சிக்கப்படமுடியாது. அதாவது அவனுடைய ஆத்துமா காப்பாற்றபட



முடியாது என்று சொல்லுகிறார். அவருடைய வழி சத்தியமாகவும் அது ஜீவனாகவும் இருக்கிறது. அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலரே. அதில் நீங்கள் ஒருவராக இருக்கவேண்டும். அநேகர் கேட்டுக்குப்போகிற வாசல்வழியே போகவிரும்புகின்றனர். அதை அநேகர் தெரிந்து கொள்ளுகின்றனர். ஜீவனுக்குப்போகிற வாசல் வழி நெருக்கமும் இடுக்கமுமாயிருக்கிறது. சத்தியபரராகிய இயேசு நல்ல மேய்ப்பராயிருக்கிறார். "நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காக தன் ஜீவனைக் கொடுக்கிறான்" என்றார் (யோவா.10:11). வேலைக்காரன் ஓநாய் வருகிறது என்றால் ஓடிவிடுவான். ஆனால் நல்லமேய்ப்பராகிய இயேசு ஆடுகளுக்காக தன் ஜீவனை சிலுவையில் ஒப்புக்கொடுத்தார்.

ஓநாயைக்காட்டிலும் மிகவும் கொடூரமான பிசாசின் பிடியிலிருந்து நம்மை விடுவிக்கும்படியாக பாவ பலியாக இயேசு தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார். அவர் சிந்திய இரத்தத்தினாலே பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெறுகிறோம். மேலும் அவர் சொல்லும்போது; "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும் உம்முடைய வசனமே சத்தியம் என்கிறார்" (யோவா.17:17). ஆம், கர்த்தருடைய வசனம் பரிசுத்தமானது, அது ஒருமனிதனை பரிசுத்தமாக்க வல்லது. ஆகையால் உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும் என்கிறார். இன்றைக்கு உலகத்தில் அநேக பரிசுத்தவான்கள் இருக்கிறார்கள் என்றால் அதற்கு காரணம் அவருடைய வசனம் அவர்களை சகல அசுத்தத்திலிருந்து விடுவித்திருக்கிறது. அவர்கள் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறார்கள். பயங்கரமான பாவப்பிடியிலிருந்தவர்களை கர்த்தருடைய வசனம் விடுவித்து நீதிக்கு அடிமைகளாக்கியிருக்கிறது.

இந்த சத்தியம் ஒருவ்வொரு மனிதனையும் போஷிக்கிறதாயும் இருக்கிறது. அவரைப்பின்பற்றின சீஷர்கள் மீன்பிடிக்கும்படியாக சென்று மீன்கள் அகப்படாதபடியால் வருத்தத்துடன் இருந்தார்கள். கர்த்தர் அவர்களைப் பார்த்து வலைகளை படவுக்கு வலதுபுறமாக போடுங்கள் என்றார். அவர்கள் அவருடைய வார்த்தையின்படியே போட்டு திறளான மீன்களைபிடித்து வலையை இழுக்கமாட்டாதிருந்தார்கள். அவர் அவர்களை கரைக்கு அழைத்து வாருங்கள் போஜனம்பண்ணுங்கள்

என்று சொல்லி "அப்பத்தையும் மீனையும் எடுத்து, அவர்களுக்குக் கொடுத்தார்" (யோவா.21:13). சத்தியபரராகிய இயேசு நேசித்ததோடல்லாமல் அவர்களைப் போஷிக்கவும் செய்தார். மேலும் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணுகிறவராயும் இருந்தார் எனக் காண்கிறோம். "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்" என்றார் (யோவா.14:23).

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற நீங்கள் அவரில் அன்பாயிருக்கிறீர்களா? அவரில் அன்பாயிருந்தால் அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுங்கள். அநேகர் அவரை நேசிக்கிறோம், அவருடைய பிள்ளையாக இருக்கிறோம், அவர் வழியே நடக்கிறோம் என்பார்கள். ஆனால் கடுகளவும் வேத வசனத்தின்படி நடக்கமாட்டார்கள். இப்படிப்பட்டவர்களிடத்தில் கர்த்தர் வாசமாயிரார். நாம் வசனத்தை கைக்கொள்ளும்போது தேவத்துவம் நம்மோடிருக்கும். நாமும் பரிசுத்தமுள்ளவர்களாயிருப்போம். மேலும் சத்தியம் நமக்கு ஜீவத்தண்ணீரைக்கொடுக்கும் என பார்க்கிறோம்.

இயேசு ஒரு முறை சமாரிய பெண்ணிடம் பேசிக்கொண்டிருக்கும் போது; "நீ தேவனுடைய ஈவையும், தாகத்துக்குத்தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால், நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருப்பார் என்றார்" (யோவா.4;10). தாகமாயிருக்கிறவர்களுக்கு கர்த்தர் ஜீவத்தண்ணீரைக் கொடுக்கக்கூடிய வராயிருக்கிறார். ஒருவன் தாகமாயிருந்தால் அவன் என்னிடத்தில் வந்து பணமும் இன்றி விலையும் இன்றி பாணம்பண்ணக்கடவன் என தீர்க்கதரிசன புத்தகங்களில் வாசிக்கிறபடி கர்த்தர் தம்மிடத்தில் வருவோருக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுக்கிறார் என அறிகிறோம்.

மேலும் சத்தியம் சமாதானத்தைக் கொடுக்கும். இன்றைக்கு நாட்டில் சமாதானமில்லை, வீட்டில் சமாதானமில்லை எங்கும் சமாதானமில்லை என்று வாழ்ந்துகொண்டிருக்கும் கோடிக்கணக்கான மக்களைப் பார்க்கிறோம். இதற்கு தீர்வு சத்தியத்தினிடத்தில் இருக்கிறது. இயேசு சொல்கிறார்; "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன்,



என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" என்கிறார் (யோவா.14:27). தம்மைப் பின்பற்றிய சீஷர்களுக்கு இயேசுவானவர் சமாதானத்தை விட்டுச் சென்றார். மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை எனக் காண்கிறோம். அவருக்கு ஒரு இராஜ்யம் இருந்தது. ஆனால் அரண்மனை இல்லை, அவருக்கு அநேக சீஷர்கள் இருந்தார்கள். ஆனால் ஆயுதங்கள் இல்லை. இப்படி உலகப்பிரகாரமான காரியங்கள் அவரிடம் இல்லை. ஆனால் அவர்களுக்கு நிரந்தரமான சமாதானத்தை வைத்துப்போனார்.

ஆகையால் இன்றுவரை கிறிஸ்தவர்கள் சமாதானத்தைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். அநேக குடும்பங்களில் சொத்து இருக்கிறது. ஆனால் சமாதானமில்லை. ஒருவரையொருவர் தாக்கி சண்டையிட்டு ஒன்றுமில்லாமற்போகிறார்கள். ஆனால் சத்தியம் தம்மை நேசிப்பவர்களுக்கு சமாதானத்தைக் கொடுக்கிறது. இந்த சமாதானத்தை உங்களுடைய வாழ்க்கையில் பெற்றுக்கொள்ள சத்தியத்தை முதலாவது நேசியுங்கள் அதைப் பற்றிக்கொள்ளுங்கள். இந்த சத்தியம் ஒருவனை பாவத்திலிருந்து விடுதலைசெய்யும். "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்" (யோவா.8:32). தம்மை விசுவாசித்த யூதர்களுக்கு இந்த உபதேசத்தை கொடுத்தார்.

நீங்கள் இயேசுவை அதாவது சத்தியபரரை விசுவாசிப்பீர்களானால் சத்தியத்தையும் அறிவீர்கள் அந்த சத்தியம் உங்களை விடுதலையாக்கும். சத்தியத்தை ஒருவன் அறிந்துகொள்ளாமல் பாவத்திலிருந்து விடுதலையடைய முடியாது. அநேகர் பொருட்களை கடைகளில் விலைகொடுத்து வாங்கிவிடுவதுபோல சத்தியத்தையும் வாங்க முயற்சிக்கின்றனர், அதுகூடாது. சத்தியத்தை வாங்கு அதை விற்காதே என வேதத்தில் படிக்கிறோம். சத்தியத்தை வாங்கு என்றால் அதற்காக செலவு செய்து அதை அடைந்துகொள் என்பதே பொருள். அது ஒரு இடத்தில் கிடைக்கும் பொருள் அல்ல. அதை புதையல்களைத் தேடுவதுபோல தேடு அப்பொழுது கண்டடைவாய். சத்தியத்தை நீ அடையும்போது அது உன்னை பாவத்திலிருந்தும், சபாத்திலிருந்தும் விடுதலையாக்கும். இது ஒரு கூட்ட ஜனங்களுக்கு மட்டுமல்ல உலகத்தில்

உள்ள எல்லோரையும் பாவத்திலிருந்து விடுவிக்கும்படியாக கொடுக்கப்பட்டது. ஆகையால் சத்தியம் பாரபட்சம் அற்றது. அது தம்மை நேசிக்கிறவர்களையும், தம்மைத்தோடுகிறவர்களையும், தம்மை நம்புகிறவர்களையும் விடுதலையாக்கும். இவைகளை அறிந்துகொள்ள முயற்சி எடு.

இந்த சத்தியம் நமக்காக வேண்டுதல் செய்யும். பாவத்திலிருந்து காப்பாற்றி விடுவதோடல்லாமல், மேலும் நம்மைப்போல அனைவரும் இரட்சிக்கப்படும்படியாக வேண்டுதல் செய்கிறவராயிருக்கிறார். "நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன் என்கிறார்" (யோவா.17:20). இந்த சத்தியத்தில் நிலைத்திருக்கும்போது நிலையான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுவோம். இயேசு சொல்கிறார்; "என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சசெடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள்" (யோவா.15:4).

சத்தியத்தில் நாம் நிலைத்திருக்கும்போது சத்தியம் நம்மில் இருக்கும். சத்தியத்தை விட்டு நாம் விலகும்போது சத்தியமும் நம்மைவிட்டு விலகும். எப்படி திராட்சசெடியில் நிலைத்திருக்கிற கொடிகள் கனிகொடுக்கிறதோ, அதைப்போல மெய்யான திராட்சசெடியாகிய இயேசுவில் நாம் நிலைத்திருக்கும்போது நாம் அவரில் கனிகொடுக்கமுடியும்.

சத்தியத்தை நேசிக்கிறவர்களுக்கு கிடைக்கும் மிகப்பெரிய ஆசீர்வாதம் என்னவென்றால்; நித்தியமான பரலோக பிதாவை இந்த சத்தியபரராகிய இயேசுவின் மூலமாக சந்திக்கும் சிலாக்கியத்தை அவர் மூலமாக பெறுவோம். "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்றார் (யோவா.14:6). தேவனை சந்திக்க பலவிதமான முயற்சிகளை ஜனங்கள் எடுக்கிறார்கள். பலவிதமான தவங்களை மேற்கொள்ளுகிறார்கள். இருந்தாலும் அவர்களால் தேவனை சந்திக்கமுடியவில்லை. ஒரே ஒரு வழியை தேவன்



ஏற்படுத்தியிருக்கிறார். அந்த வழி சத்தியத்தின் மூலமாக இருக்கிறது. அந்த சத்தியபரராகிய இயேசுவை அறியாமல் ஒருவன் தேவனை தரிசிக்க முடியாது. அவருடைய சமுகத்திற்கு செல்லவும் முடியாது. ஆகையால் இயேசு சொல்லும்போது, என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்றார். அது யாராக இருந்தாலும், எப்பேர்பட்ட பதவியிலிருந்தாலும், அவர்கள் இயேசு பிறந்த யூத கோத்திரத்தில் பிறந்தவர்களாயிருந்தாலும், அவர்கள் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிற இயேசுவின் வழியாக செல்லாமல் அவரை, அதாவது பிதாவை சந்திக்கமுடியாது.

மேலும் இந்த சத்தியம் நமக்கு நித்திய வாழ்வை கொடுக்கும் என பார்க்கிறோம். "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும் என்றார்" (யோவா.3:36). இந்த உலகத்தில் பிறந்து வாழ்ந்து நித்திய வாழ்வை அதாவது அழியாத வாழ்வை கொடுக்கும் சத்தியபரராகிய இயேசுவை விசுவாசியாமல் ஒருவன் மரிப்பானேயானால், அவன் இந்த உலகத்தில் வாழ்ந்து பயன் ஒன்றுமில்லை என்றே சொல்லவேண்டும். ஒரு மனிதனுக்கு வீடு, வாசல், சொத்து, சுகம் ஒன்றும் இல்லாமற் போனாலும், அவன் இயேசுவை விசுவாசித்து பற்றிக்கொள்ளும்போது நிலையான ஜீவனை பெற்றுக்கொள்ளுகிறான். தேவனுடைய ஆசீர்வாதம் அவனோடே இருக்கும். சத்தியம் நமக்கு அநேக நன்மைகளைக் கொடுக்கிறது என்று தியானித்தோம். இந்த நன்மைகளை பெற்றுக்கொள்ளாதிருக்கிறவர் களுக்கு சத்தியத்தின் பயன்களை எடுத்துச் சொல்லுங்கள்.

### கேள்வி நேரம்

**எவர்கள் இந்த சத்தியத்திற்கு செவிகொடுப்பார்கள்?**

உலகத்திலே பலதரப்பட்ட ஜனங்கள் வாழ்ந்துவருகிறார்கள். இதில் சத்தியத்தை நேசிக்கிற ஒரு கூட்டம் இருக்கத்தான் செய்கிறது. அவர்களை நாம் கண்டுகொள்ளவேண்டும். இயேசு பிலாத்துவினிடத்தில் பேசும்போது; "பிலாத்து அவரை நோக்கி: அப்படியானால் நீ ராஜாவோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக: நீர் சொல்லுகிறபடி நான் ராஜாதான்;

சத்தியத்தைக்குறித்துச் சாட்சிகொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றார்" (யோவா.18:37). நீங்கள் ஒரு சத்தியவனாக இருந்தால் ஆண்டவராகிய இயேசுவின் வார்த்தைகளுக்குச் செவி கொடுப்பீர்கள். ஏனென்றால் அவர் சத்தியத்தைக்குறித்து சாட்சிகொடுக்கும்படியாக இந்த உலகத்தில் வந்தார். அவரிடத்தில் ஒரு குற்றத்தையும் ஒருவரும் கண்டுபிடிக்கமுடியவில்லை. பாவத்திற்கு விலகினவராகவும், பாவத்தைப்போக்கும் பலியாகவும் தம்மை ஒப்புக்கொடுத்தார். அவர் சத்தியபரராகையால் எல்லோரையும் நேசித்தார், போஷித்தார், விடுவித்தார், சுகமாக்கினார், சமாதானத்தை வைத்துப்போனார், தம்மை விசுவாசிக்கிறவர்களுக்கு நித்திய ஜீவனைக்கொடுக்கிறார். நீங்களும் சத்தியத்தை விசுவாசித்து பற்றிக்கொள்ளுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 13. தீர்க்கதரிசியின் மதிகேடு

## The Madness of the Prophet

**தீ**ர்க்கதரிசிகளின் மூலம் நம்முடைய பிதாவாகிய தேவன் மக்களோடு பேசி வந்தார். இந்த தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய வார்த்தையைப் பெற்று அதை அப்படியே ஜனங்களுக்கு சொல்லுகிறவர்களாயிருந்தார்கள். அதில் ஒரு சில தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்காமால் பணத்தின்மீது ஆசை கொண்டு கர்த்தருடைய வார்த்தைக்கு விரோதமாக செயல்பட்டனர். அவர்களில் குறிப்பாக பிலேயாம் என்ற தீர்க்கதரிசியும் ஒருவன். இவனைக்குறித்து பேதுரு தமது நிருபத்தில் குறிப்பிடும்போது; "செம்மையான வழியைவிட்டுத் தப்பிநடந்து, பேயோரின் குமாரனாகிய பிலேயாமின் வழியைப் பின்பற்றிப்போனவர்கள்; அவன் அநீதத்தின் கூலியை விரும்பி" என எழுதுகிறார் (2பேது.2:15).

இவ்விதமாக அநேக போதகர்கள் அநீதத்தின் கூலியை விரும்புகிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு பிலேயாம் ஒரு எடுத்துக்காட்டாக சொல்லப்பட்டுள்ளது. "இவர்களுக்கு ஐயோ! இவர்கள் காயீனுடைய வழியில் நடந்து, பிலேயாம் கூலிக்காகச்செய்த வஞ்சகத்திலே விரைந்தோடி, கோரா எதிர்த்துப்பேசின பாவத்திற்குள்ளாகி,



கெட்டுப்போனார்கள்" (யூதா11). காயீன், ஆதாம் ஏவாளுக்குப்பிறந்த முதல் மகன். ஆனால் அவனோ முதல் கொலையாளியானான். தன் சகோதரனாகிய ஆபேலைக் கொலைசெய்து போட்டான். இன்றைக்கு அநேகர் இவனுடைய வழியைத் தெரிந்துகொள்ளுகிறார்கள். அதைப்போல பிலேயாம் கூலிக்காகச் செய்த வஞ்சகத்திலே விரைந்தோடியதைப்போல கூலிக்காக எதையும் செய்யும்படியாக தங்களை ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள். மேலும் கோரா, தாத்தான் கூட்டத்தார் மோசேக்கும் ஆரோனுக்கும் எதிர்த்து நின்றதுபோல தேவனுடைய மனிதர்களுக்கு விரோதமாக பேசவும் அவர்களுக்கு எதிர்த்துநிற்கவும் சிலர் துணிந்திருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு ஐயோ! என வேதம் சொல்லுகிறது.

யூதாஸ் என்பவன் பணத்திற்காக இயேசுவை காட்டிக்கொடுக்கும்படி வகைதேடினான். "நான் அவரை உங்களுக்குக் காட்டிக்கொடுக்கிறேன், நிங்கள் எனக்கு என்ன கொடுக்கிறீர்கள் என்றான். அவர்கள் அவனுக்கு முப்பது வெள்ளிக்காசைக் கொடுக்க உடன்பட்டார்கள்" (மத்.26:14,15). இயேசுவோடு உண்டு உறங்கி அநேக அற்புதங்களை கண்களால் கண்டவன் யூதாஸ். இத்தனை காரியங்களையும் பார்த்திருந்தும் அவன் பணத்திற்கு ஆசைப்பட்டு இயேசுவை முப்பது வெள்ளிக்காசுக்கு காட்டிக்கொடுக்க பிரதான ஆசாரியரிடத்திற்குப்போய் சம்மதித்தான். இவனைக்குறித்து இயேசுவானவர் சொல்லும்போது; "தீர்மானிக்கப்பட்ட படியே மனுஷகுமாரன் போகிறார், ஆனாலும் அவரைக் காட்டிக்கொடுக்கிற மனுஷனுக்கு ஐயோ என்றார்" (லூக்.22:22). ஐயோ! என்ற வார்த்தை மிகவும் ஆபத்தானது. இந்த வார்த்தைக்கு பாத்திரவான் பிறவாதிருந்தால் நலமாயிருக்கும். அவ்வளவு மோசமான சூழ்நிலைக்கு அவன் தள்ளப்படுவான்.

பிலேயாமைக்குறித்து மேலும் பேதுரு சொல்லும்போது; "தன்னுடைய அக்கிரமத்தினிமித்தம் கடிந்துகொள்ளப்பட்டான்; பேசாத மிருகம் மனுஷர்பேச்சைப் பேசித் தீர்க்கதரிசியினுடைய மதிகேட்டைத் தடுத்தது" (2பேது.2:16). ஒரு தீர்க்கதரிசியானவன் தேவனுடைய வார்த்தைகளைப்பேசுகிறவன். அவன் தேவனுக்கு விரோதமாக போகும்போது வேறொரு தீர்க்கதரிசி அவனுக்கு உணர்த்தவேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலையில்லாதபடியால் தேவன் அவன் ஏறிப்போன

கழுதையின் வாயை திறந்தார். அவனுடைய அக்கிரமத்தினிமித்தம் கடிந்துகொள்ளப்பட்டான். பேசாத மிருகத்தின் வாயைத்திறந்து பேசும்படியாகவும் அவனுடைய மதிகேட்டைத்தடுக்கும்படியாகவும் கழுதையின் வாயை கர்த்தர் திறந்தார். என்னநடந்தது என்றால்; "கர்த்தருடைய தூதனானவர் உருவின பட்டயத்தைத் தம்முடைய கையிலே பிடித்துக்கொண்டு வழியிலே நிற்கிறதைக் கழுதை கண்டு, வழியை விட்டு வயலிலே விலகிப்போயிற்று; கழுதையை வழியில் திருப்ப பிலேயாம் அதை அடித்தான்" (எண்.22:23).

கழுதை விலகாமல் போயிருக்குமானால் அவன் தேவதூதனால் வெட்டப்பட்டிருப்பான். ஆனால் கழுதை அவனை காப்பாற்றியது என்றே சொல்லவேண்டும். ஏனெனில் அவனுக்கு அது விசுவாசமாயிருந்தது. மீண்டும் அவன் பயணிக்கும்போது; "கழுதை கர்த்தருடைய தூதனைக் கண்டு, பிலேயாமின் கீழ்ப் படுத்துக்கொண்டது; பிலேயாம் கோபம் மூண்டவனாகி, கழுதையைத் தடியினால் அடித்தான். உடனே கர்த்தர் கழுதையின் வாயைத் திறந்தார்; அது பிலேயாமைப் பார்த்து, நீர் என்னை இப்பொழுதும் மூன்றுதரம் அடிக்கும்படி நான் உமக்கு என்ன செய்தேன் என்றது" (எண்.22:27,28).

இங்கே ஒரு தீர்க்கதரிசியின் மதிகேட்டை தடுக்க கழுதையின் வாயை கர்த்தர் திறந்தார் எனக்காண்கிறோம். இவ்வுலகத்திலே நாம் என்ன செய்துகொண்டிருக்கிறோம் என்பதை நம்மை சுற்றியுள்ள அனைத்தும் பார்த்துக்கொண்டிருக்கிறது. ஏனெனில் அது தேவனால் உண்டாக்கப்பட்டது. நாம் செய்கிற காரியங்களை யார் அறிவார் என்று ஒருவர் கேட்கக்கூடும். இந்த பிலேயாமின் சம்பவம் ஒரு எடுதுக்காட்டாக இருக்கிறது. ஒருவேளை பிலேயாம் நினைத்திருக்கலாம் நம்மை யார் தடுப்பது என்று ஆனால் அவனுக்கு புத்திபுகட்ட அவன் ஏறிச்சென்ற அவனுடைய கழுதையைத் தேவன் பயன்படுத்தினார். "கர்த்தருடைய தூதனானவர் அவனை நோக்கி; நீ உன் கழுதையை இதனோடே மூன்றுதரம் அடித்ததென்ன? உன் வழி எனக்கு மாறுபாடாயிருக்கிற தினால், நான் உமக்கு எதிரியாகப் புறப்பட்டு வந்தேன். கழுதை என்னைக் கண்டு, இந்த மூன்றுதரம் எனக்கு விலகிற்று; எனக்கு விலகாமல் இருந்ததானால், இப்பொழுதும் நான் உன்னைக் கொன்றுபோட்டு, கழுதையை உயிரோடே வைப்பேன் என்றார்"



(எண்.22:32,33). இவ்விதமாக தேவதூதனால் பிலேயாம் எச்சரிக்கப்பட்டான். பேசாத மிருகம் மனுஷர் பேச்சை பேசி பிலேயாமின் மதிகேட்டை தடுத்தது.

இந்தப் பிலேயாமைப்போன்றவர்களுக்கு என்ன வைக்கப் பட்டிருக்கிறது? இவ்வுலகத்திலே தேவனுடைய சித்தத்தின்படி வாழ்ந்து மரிப்பவர்களுக்கு வாடாத ஜீவகிரீடம் வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பிலேயாமைப்போன்றவர்களுக்கு காரிருளே வைக்கப்பட்டிருக்கிறதாக பேதுரு சொல்லுகிறார். "இவர்கள் தண்ணீரில்லாத கிணறுகளும், சுழல்காற்றினால் அடியுண்டோடுகிற மேகங்களுமாயிருக்கிறார்கள்; என்றென்றைக்குமுள்ள காரிருளே இவர்களுக்கு வைக்கப்பட்டிருக்கிறது" என்கிறார் (2பேது.2:17).

தண்ணீரில்லாத கிணறுகள் தேவையற்ற ஒன்று. அதைப்போல அநேகர் தண்ணீர் நிற்காக தொட்டிகளை தங்களுக்குக் கட்டிக்கொண்டு வாழ்ந்துகொண்டு வருகிறார்கள். இவர்களால் ஒருவருக்கும் பிரயோஜனமில்லை. இவர்கள் தண்ணீரற்ற மேகங்களைப்போல இருக்கிறாகள். இங்கும் அங்கும் நிலையில்லாமல் வாழக்கூடியவர் களாக இருக்கிறார்கள். இப்படிப்பட்ட அநேகரை நாம் உலகத்தில் பார்க்கிறோம். எதிலும் திருப்தியில்லாதவர்கள் என்றே இப்படிப்பட்டவர்களைக் குறித்து சொல்லவேண்டும். மேகங்கள் எப்படி அங்குமிங்கும் பறந்துபோகிறதோ, அதைப்போல இவர்களும் நிலையற்றவர்களாயிருக்கிறார்கள்.

இப்படிப்பட்டவர்களுக்கு தேவன் காரிருளை வைத்து வைத்திருக்கிறார். அதில் அவர்கள் பங்கடைவதினால் அவர்களுடைய நித்திய வாழ்க்கை இருளாயிருக்கும். நித்தியமானவரை ஆராதிக்கிற நீங்கள் எப்படிப்பட்டவர்களாயிருக்கிறீர்கள்? அவர் வாக்குமாறாதவர். ஆனபடியால் நீங்களும் உங்களுடைய ஜீவியத்தில் வாக்குமாறாதவர் களாயிருங்கள். தேவன் ஒரு முறை சொல்லியவற்றை மாற்றுகிறவரல்ல. இதை அறியாத பிலேயாமைப்போன்ற தீர்க்கதரிசிகள் அறியவில்லை. இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற நீங்கள் முதலாவது கர்த்தரையும் அவருடைய வல்லமையுள்ள வனங்களையும் அறிந்து கொள்ளுங்கள். மேலும் அவரை அறிகிற அறிவில் வளர்ச்சியடையுங்கள்.

"மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு; அதின் முடிவோ மரண வழிகள்" என நீதிமொழிகள் புத்தகத்தை எழுதின சாலொமோனுடைய நீதிமொழிகள் 16:25-ல் படிக்கிறோம். ஆம், மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி அவனுடைய பார்வைக்கு அது நல்லவழியாகத்தோன்றும் ஆனால் அதனுடைய முடிவோ மரணவழியாக இருக்கிறது. இன்றைக்கு அநேகர் கண்போன போக்கிலே போய்க்கொண்டு அது சிறப்பான வழி என்று எண்ணிக்கொண்டு இருக்கிறார்கள். முடிவிலே அவர்கள் ஏமாற்றப்படுவார்கள். அப்பொழுது அவர்களுடைய பிரயாசம் எல்லாம் வீணாய்ப்போய்விடும்.

அன்பான சகோதரனே, சகோதரியே சற்றே உன் வழிகளை ஆராய்ந்துபார். தேவன் ஒரே ஒரு வழியே ஏற்படுத்தியிருக்கிறார். அது ஜீவ வழியாக இருக்கிறது. அதைத் தெரிந்துகொள். நீ மாம்சத்திலே இருந்துகொண்டு எனக்கு எல்லாம் தெரியும் என்று சொல்லாதே; "உன் மாம்சத்தைப் பாவத்துக்குள்ளாக்க உன் வாய்க்கு இடங்கொடாதே; அது புத்திபிசகினால் செய்தது என்று தூதனுக்கு முன் சொல்லாதே; தேவன் உன் வார்த்தைகளினாலே கோபங்கொண்டு, உன் கைகளின் கிரியையை அழிப்பானேன்?" (பிர.5:6). அநேகர் செய்யக்கூடிய காரியத்தைச் செய்து விட்டு புத்திபிசகினால் செய்துவிட்டேன், சாரி என்று சற்றும் யோசிக்காமல் செய்து விட்டு சொல்லுகிறதை நாம் கேள்விப்படுகிறோம். தேவன் பலமுறை நம்மை எச்சரிக்கிறார். எனக்கு யாரும் சொல்லவில்லை என்று ஒருவனும் தேவனுடைய சமுகத்தில் சொல்லிவிடமுடியாது.

உலகம் முடிவுமட்டும் மனுஷர்கள் எப்படி நடக்கவேண்டுமென்பதை பரிசுத்தவேதம் மிக தெளிவாக போதித்திருக்கிறது. ஒருவரும் சாக்குபோக்கு சொல்ல இடமில்லை. தேவனுடைய வார்த்தைகளை புறம்பாக்கிப்போட்டு விடக்கூடியவர்கள் உங்கள் மத்தியில் இருப்பார்கள். "இவர்கள் உங்கள் அன்பின் விருந்துகளில் கறைகளாயிருந்து, பயமின்றிக்கூட விருந்துண்டு, தங்களைத் தாங்களே மேய்த்துக்கொள்ளுகிறார்கள்; இவர்கள் காற்றுகளால் அடியுண்டோடுகிற தண்ணீரற்ற மேகங்களும், இலையுதிர்ந்து கனியற்று இரண்டுதரஞ் செத்து வேரற்றுப்போன மரங்களும், தங்கள் அவமானங்களை



நுரைதள்ளுகிற அமளியான கடலலைகளும், மார்க்கந்தப்பி அலைகிற நட்சத்திரங்களுமாயிருக்கிறார்கள்; இவர்களுக்காக என்றென்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டிருக்கிறது" என யூதாவும் எழுதியுள்ளார் யூதா12,13 வசனங்கள். மதிகேடாய் நடந்த பிலேயாமைப்போலவும், பணத்திற்கு ஆசைப்பட்டு குற்றமற்ற இரத்தத்தைக் காட்டிக்கொடுத்த யூதாசைப்போலவும் மேலும் தண்ணீரற்ற மேகங்களைப்போலவும் கனியற்று இரண்டுதரஞ்செத்து வேரற்றுப்போன மரங்களைப்போலவும் தங்கள் அவமானங்களை நுரைதள்ளுகிற அமளியான கடலலைகளைப் போலவும், மார்க்கந்தப்பி அலைகிற நட்சத்திரங்களைப்போலவும் இல்லாதிருந்து, கர்த்தர் உங்களை தெரிந்துகொண்டதின் நோக்கத்தை அறிந்துகொண்டு அதற்கு ஏற்றார்போல செயல்படுங்கள்.

## கேள்வி நேரம்

**ஒரு தீர்க்கதரிசியானவன் எப்படியிருக்கவேண்டும்?**

"ஆசாரியனுடைய உதடுகள் அறிவைக்காக்கவேண்டும்; வேதத்தை அவன் வாயிலே தேடுவார்களே; அவன் சேனைகளுடைய கர்த்தரின் தூதன்" என மிக தெளிவாக மல்கியா2:7-ல் காண்கிறோம். இப்படியிருக்கவேண்டிய ஒரு தேவனுடைய மனுஷன் கர்த்தருடைய வார்த்தைகளை மீறி நடக்கலாமா? உலக காரியங்களில் சிக்குண்டு பணஆசைக்கு அடிபணிந்துபோகலாமா? அவனுடைய உதடுகள் அறிவைக்காக்க வேண்டுமல்லவா, அவனுடைய வாயிலே ஜனங்கள் வேதத்தை தேடுவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறதே, இன்று அநேகர் கர்த்தர் சொல்லாத காரியங்களை சொல்லி ஜனங்களை வஞ்சிக்கிறார்கள். இப்படிப்பட்ட மனிதர்கள் தேவனால் தெரிந்துகொள்ளப் பட்டவர்களா? அன்பானவர்களே, அவர்கள் தேவனுடைய வார்த்தைகளை சொல்லுகிறார்களா என்பதை நீங்கள் வேதவசனத்தோடு ஒப்பிட்டுப்பாருங்கள். அப்படி சொல்லாதவர்கள் மதிகெட்ட தீர்க்கதரிசியாக இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை நம்பி மோசம்போகாதிருங்கள். நீங்கள் ஒரு ஆசாரியனாக அதாவது தேவனுடைய ஊழியனாக இருப்பாயானால் உன்னுடைய வாயிலே தேவனுடைய வார்த்தைகளை மட்டும் வை அதனோடே ஒன்றையும் கூட்டாதே குறைக்கவும் செய்யாதே. கூட்டினால் உன்னோடு வாதைகளை தேவன் கூட்டுவார் என்பதை அறி. உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

# 14.கிருபையில் பலப்படு
# Be Strong In the Grace

**கி**ருபை என்றால் இரக்கம். நம்முடைய பிதாவாகிய தேவனும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் கிருபையுள்ளவர்களாயிருக்கிறார்கள். இந்த கிருபை நமக்கும் அவசியமாயிருக்கிறது. பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; "என் குமாரனே, நீ கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையில் பலப்படு" என்று எழுதுகிறார் (2தீமோ.2;1). இயேசுகிறிஸ்துவின் கிருபை அளவற்றது. இந்த கிருபையில் பலப்படும்படியாக புத்திசொல்லுகிறார். "இந்தச் சுவிசேஷத்தினிமித்தம் நான் பாதகன்போலக் கட்டப்பட்டு, துன்பத்தை அநுபவிக்கிறேன்; தேவவசனமோ கட்டப்பட்டிருக்கவில்லை" (2தீமோ.2:9). கிருபையுள்ள வசனத்திற்கு ஒப்புக்கொடுத்த பவுல் சுவிசேஷத்தினிமித்தமாக துன்பத்தை அநுபவித்ததாக சொல்லுகிறார்.

சுவிசேஷத்தினிமித்தமாக பவுல் பல பாடுகளை சந்திக்கநேர்ந்தது, அதைப்போல பேதுரு மற்றும் அப்போஸ்தலர்களும் மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது என்று சுவிசேஷத்திற்காக தங்களை அற்பணித்திருந்தார்கள். அந்நாட்களில் ஆலோசனை சங்கத்தாரிடத்தில் ஒப்புவிக்கப்பட்டார்கள். பிரதான ஆசாரியர்கள் நீங்கள் அந்த நாமத்தைக்குறித்துப் போதகம்பண்ணக்கூடாதென்று நாங்கள் உங்களுக்கு உறுதியாய்க் கட்டளையிடவில்லையா?

அப்படியிருந்தும், இதோ, எருசலேமை உங்கள் போதகத்தினாலே நிரப்பி, அந்த மனுஷனுடைய இரத்தப்பழியை எங்கள்மேல் சுமத்தவேண்டுமென்றிருக்கிறீர்கள் என்று சொன்னான். அதன்பின்பு ஆலோசனை சங்கத்தார்கள்; "அவனுடைய யோசனைக்கு உடன்பட்டு, அப்போஸ்தலரை வரவழைத்து, அடித்து, இயேசுவின் நாமத்தைக்குறித்துப் பேசக்கூடாதென்று கட்டளையிட்டு, அவர்களை விடுதலையாக்கினார்கள். அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய், தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்"



(அப்.5:40-42). இயேசுகிறிஸ்துவிலுள்ள கிருபையில் பலப்படும்படியாக கிருபையுள்ள வசனத்திற்கு தங்களை ஒப்புக்கொடுத்து அந்நாட்களில் அப்போஸ்தலர்கள் பலபாடுகளை கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் அநுபவித்தார்கள். இன்றைக்கு ஒரு சிலபாடுகள் வந்தவுடன் ஆண்டவர் என்னை கைவிட்டார் என்று சொல்லி மறுதலித்துப்போகிற ஒரு கூட்டம் இருக்கிறது. அப்போஸ்தலர்களை வரவழைத்து அடித்தார்கள் என்று வாசிக்கிறோம். அந்த அடியை யாருக்காக வாங்கினார்கள் ஆண்டவர் இயேசுவின் நாமத்தின் நிமித்தமும், சுவிசேஷத்தை அறிவித்ததினிமித்தமும் அடி வாங்கினார்கள். ஆனாலும் அவர்கள் வெட்கப்படவில்லை. அவருடைய நாமத்திற்காக அவமானமடைவதை சந்தோஷமாக எண்ணினார்கள்.

இவ்விதமாக ஆண்டவர் நிமித்தமாக பாடுகள் வந்தவுடன் அதை வருத்தமாக நினைக்கிறீர்களா? அல்லது அதை சந்தோஷமாக நினைக்கிறீர்களா? இயேசுவானவர் சொல்லும்போது; "உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள்" என்றார் (லூக்.6:36). பிதாவானவர் எல்லோரும் இரட்சிக்கப்படவேண்டுமென சித்தமுள்ளவராயிருக்கிறார். அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் நீதியின் சூரியனை உதிக்கப் பண்ணுகிறார். அவர் ஒருவருக்கும் தூரமானவரல்ல. எல்லோரையும் நேசிக்கிறார். ஆண்டவர் தம்மை நிந்தித்தவர் களுக்காகவும், தம்மை துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணினார். தம்மிடம் வந்த ஒருவரையும் அவர் புறம்பே தள்ளாமல் அவர்களுக்கு நன்மைசெய்தார்.

தேவனுடைய வார்த்தைகளை பிரசங்கிப்பதில் அவர் எப்பொழுதும் தொய்வில்லாமல் அவர்களுக்கு அவருடைய வார்த்தைகளை பிரசங்கித்துக் கொண்டுவந்தார். அவரை சில கிராமங்கள் ஏற்றுக்கொள்ள வில்லை. ஆகையால் மற்ற கிராமங்களுக்குச் சென்று தேவனுடைய வார்த்தைகளை பிரசங்கித்துக்கொண்டு வந்தார் என காண்கிறோம். நாமும் அவருடைய வார்த்தைகளை சொல்லுவதிலும் கேட்பதிலும் பெலப்படுவோம். கிருபையுள்ள வசனங்களுக்கு நம்மை ஒப்புக் கொடுப்போம்.

அவருடைய கிருபையில் பலப்பட நாம் சகிக்க கற்றுக்கொள்ள வேண்டும். சகிப்புத்தன்மை என்பது நமக்குள் உருவாக வேண்டிய ஒன்று. பவுல் தீமோத்தேயுவுக்கு சொல்லும்போது; "தெரிந்துகொள்ளப் பட்டவர்கள் கிறிஸ்து இயேசுவினால் உண்டான இரட்சிப்பை நித்திய மகிமையோடே பெற்றுக்கொள்ளும்படி, சகலத்தையும் அவர்கள் நிமித்தமாகச் சகிக்கிறேன்" என்கிறார் (2தீமோ.2:10). அழுகிப்போன உடல்நிலையோடு ஒருவன் மருத்துவரை அநுகும்போது அந்த மருத்துவர் சகிப்புத்தன்மையோடு அவனுக்கு சிகிச்சை அளிக்க வேண்டும். அவருக்கு சகிப்புத்தன்மை இல்லை யென்றால் அவர் அவனுக்கு சிகிச்சை அளிக்க முடியாது. பவுல் மற்றவர்களுடைய இரட்சிப்புக்காக சகலத்தையும் சகிக்கிறேன் என்கிறார். நாமும்கூட இவ்விதமான சகிப்புத்தன்னை உடையவர்களாக மாறவேண்டும்.

இயேசுவை நோக்கிப்பாருங்கள்: "அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக் கொள்ளுங்கள்" (எபி.12:2,3). ஒவ்வொருவரும் சகிக்க கற்றுக்கொள்ள ஆண்டவர் இயேசுவை நோக்கிப் பார்க்க வேண்டும். அவர் சிலுவையில் எவ்வளவாய் பாடுபட்டு சகித்தார். தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் சிலாக்கியத்தை எண்ணிப்பார்க்கும்போது இந்த பாடுகள் பெரியவைகள் அல்ல. அதைப்போல நமக்கு வைக்கப்பட்டிருக்கிற பரலோகபாக்கியத்தை நாம் நினைக்கும்போது இவ்வுலகபாடுகள் எம்மாத்திரம்.

அப்போஸ்தலனாகிய பவுல்; "பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும், தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன்" என்கிறார் (2கொரி.11:27). ஆதி முதலாக எந்த ஒரு தீர்க்கதரிசியும், எந்த ஒரு தேவனுடைய ஊழியனும் சுகபோகமாக வாழ்ந்ததாக நாம் வேதத்தில் எங்கும் வாசிக்கமுடியாது. அநேக பாடுகளிலும் உபத்திரவங்களிலும் வாழ்ந்திருக்கிறார்கள். பவுல் ஆசிய முழுமைக்கும் சுவிசேஷத்தை



அறிவித்து பலபாடுகளை சந்தித்திருக்கிறார். வருத்தம் அவருடைய வாழ்க்கையின் உணவாக இருந்திருக்கிறது. இன்று நான் கர்த்தருக்குள்ளாக ஒரு குறையுமின்றி வாழ்கிறேன் என்று சொல்லுகிறார்கள் அதிகம். ஆனால் பவுல் பசியிலும், தாகத்திலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்ததாக சொல்லுகிறார். இவ்வளவு வல்லமையான ஊழியத்தைச் செய்துகொண்டு வந்த அப்போஸ்தலனாகிய பவுல் சுவிசேஷத்தினிமித்தம் துன்பத்தை அநுபவித்தார்.

கர்த்தருடைய ஊழியத்தை அவருடைய சிந்தையோடு செய்கிற ஒவ்வொருவருக்கும் பாடுகள் பிரச்சனைகள் இருக்கத்தான் செய்யும். அந்த பாடுகளோடு செய்யும் ஊழியமே கர்த்தருடைய ஊழியமாக இருக்கிறது. பாடுகள் இல்லையென்றால் அது கர்த்தருடைய ஊழியம் அகாது. ஏனெனில் அவர் பிறப்புமுதல் மரணம் வரை பாடுபட்டார் என நாம் நான்கு சுவிசேஷபுத்தகங்களிலும் படிக்கிறேம். இயேசுவானவர் பிதாவினாலே தேற்றப்பட்டார். அதைப்போல நாமும் அவருடைய கிருபையினால் தேற்றப்படுவோம்.

நாம் "அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்; நாம் அவரை மறுதலித்தால், அவரும் நம்மை மறுதலிப்பார்" (2தீமோ.2;12). நாம் இயேசுகிறிஸ்துவோடு நித்தியத்தில் பிரவேசிக்கப்போகிறோம், இந்த ஆசீர்வாதத்தை நாம் பெறுகிறவர்களாயிருப்போமானால் அவரோடு சேர்ந்து இங்கே பாடுகளையும், அவர் நாமத்தினிமித்தமாக சகிக்க வேண்டும். எனக்கு பாடுகள் வேண்டாம் பரலோகம் மட்டும் வேண்டும் என்று சொல்லுவோமானால், ஆண்டவருடைய கஷ்டத்தில் பங்குகொள்ளாதவர்களாக இருப்போம்.

பரலோகத்தில் ஒரு சத்தம் உண்டானதாக வெளிப்படுத்தலில் படிக்கிறோம். யார் இவர்கள், எங்கிருந்து வந்தவர்கள் என்ற கேள்வி எழும்பும்போது; "அதற்கு நான்; ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன், அப்பொழுது அவன்: இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள். ஆனபடியால் இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும்

அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள்; சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார். இவர்கள் இனி பசியடைவதுமில்லை, இனி தாகமடைவதுமில்லை; வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள்மேல் படுவதுமில்லை" என்று படிக்கிறோம் (வெளி.7:14-16).

இந்த பூமியில் இயேசுவின் நாமத்திற்காக கஷ்டப்படுகிறவர்களுக்கு பரலோகத்தில் இளைப்பாறுதல் இருக்கிறது. அவர்கள் தங்களுடைய துன்பத்தையும் வேதனைகளையும் விட்டு நீங்குவார்கள். அவர்களுக்கு இனி ஒருபோதும் துன்பம் இருக்காது அவர்கள் பசியடைவதுமில்லை இனி தாகமடைவதுமில்லை, ஏனெனில்; அவர்கள் நித்தியமானவரோடு நித்திய நித்தியமாக வாழ்வார்கள்.

இந்த நித்தியமான வாழ்க்கை வாழவேண்டுமானால், நீங்கள் அவருடைய கிருபையில் பலப்படவேண்டும். அப்போஸ்தலர்கள் அவருடைய கிருபையில் பலப்பட்டார்கள். தீமோத்தேயுவைப்போன்ற உண்மையுள்ள ஊழியர்களையும் அவருடைய கிருபையில் பலப்படும்படியாக ஆலோசனை கொடுத்தார்கள். இச்செய்தியை படித்துக்கொண்டிருக்கிற நீங்களும் அவருடைய கிருபையில் பலப்படவேண்டும். அவரைப்போல இரக்கசிந்தை உள்ளவர்களாக இருக்கவேண்டும்.

கர்த்தருடைய கிருபையில் பலப்பட்டு சாட்சியுள்ளவர்களாக வாழும்போது; நித்தியமான வாழ்வை பெற்றுக்கொள்ளுவோம். அப்படிப்பட்டவர்களை "சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து, இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்; தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர்யாவையும் துடைப்பார்" என வெளி.7:17-ல் படிக்கிறோம்.

பூமியில் கண்ணீரோடு வாழ்க்கை வாழ்கிறவர்களுடைய கண்ணீர்யாவையும் துடைப்பார். அங்கே துன்மார்க்கன் இருப்பதில்லை, களவு செய்கிற கூட்டம் இருப்பதில்லை. அங்கே இயேசுவின் இரத்தத்தினால் கழுப்பட்டவர்கள், பரிசுத்தமாக்கப்பட்டவர்கள், தேவனுடைய நாமத்திற்காக பிரித்தெடுக்கப்பட்டவர்கள். சிங்காசனத்தின்



மத்தியில் காணப்படுவார்கள். ஆட்டுக்குட்டியானவரோடு நித்திய நித்தியமாக அவரோடு வாழுவார்கள். இந்த பரலோகபாக்கியத்தை பெற்றுக்கொள்ள இயேசுகிறிஸ்துவின் கிருபையில் பலப்படுங்கள்.

**கேள்வி நேரம்**

**பவுலுடைய வேண்டுதலுக்கு கர்த்தர் கொடுத்த பதில் என்ன?**

அப்போஸ்தலனாகிய பவுல், தன்னுடைய வாழ்க்கையில் ஒரு முள் கொடுக்கப்பட்டதாக சொல்லுகிறார். அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது என்கிறார். அது என்னைவிட்டு நீங்கும்படிக்கு நான் மூன்றுதரம் கர்த்தரிடத்தில் வேண்டினேன் அதற்கு அவர்: "என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்தில் என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால் கிறிஸ்துவின் வல்லமை தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நாம் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்" என்கிறார் (2கொரி.12;8,9).

இரக்கம் பாராட்டுகிறவர்களுக்கு இரக்கம் கிடைக்கும். அப்போஸ்தலனாகிய பவுலுக்கு கர்த்தருடைய கண்களில் இரக்கம் கிடைத்தது. என் கிருபை உனக்குப்போதும் என்றார். இந்த இரக்கம் இல்லாமல் இன்றைக்கு அநேகர் தங்களை உருவக்குத்திக் கொண்டிருக்கிறார்கள். நிம்மதியாக வாழமுடியாமல் கஷ்டப்படுகிறார்கள். தேவனுடைய சமுகத்தில் கிருபை அதாவது இரக்கம் கிடைப்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. இரக்கமில்லாதவர்களுக்கு இரக்கமில்லாத தீர்ப்பு கிடைக்கும். பவுல் கிருபையில் பலப்பப்பட்ட ஒருவர் ஆகையால் அவருக்கு கிருபை கிடைத்தது. நீங்களும் இரக்க சிந்தையுள்ளவர்களாயிருங்கள். உங்களுக்கும் இரக்கம் கிடைக்கும். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 15. வாக்குத்தத்தம்
## Promise

**க**ர்த்தருடைய வாக்குத்தத்தமானது "நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம்" என அப்போஸ்தலனாகிய யோவான் குறிப்பிடுகிறார் (1யோவா.2:25). இந்த வாக்குத்தத்தமான ஆசீர்வாதத்தை நாம் கிறிஸ்து இயேசுவுக்குள்

பெற்றுக்கொள்ளுகிறோம். இயேசுவுக்கு முன்னோடியாக வந்த யோவான் சொல்லும்போது; "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்" என்றான் (யோவா.3:36). நாம் இயேசுவை விசுவாசிப்போம் என்றால் நித்திய ஜீவனை உடையவர்களாகவும் அந்த ஆசீர்வாதத்திற்கு பாத்திரவான்களாகவும் இருக்கிறோம். அநேகர் அவரை விசுவாசிக்கும்படியாக அவர் யார்? அவரை நான் ஏன் விசுவாசிக்க வேண்டும் என்ற கேள்வியோடிருக்கின்றனர்.

மனிதனை பாவத்திலிருந்து மீட்டு நித்தியமான ஆசீர்வாதங்களை கொடுக்கும்படியாக வந்தவர் ஆண்டவர் இயேசு. இவரை பிதாவாகிய தேவன் தெரிந்துகொண்டார். இயேசுவை விசுவாசிக்கிறவர்கள் நித்திய வாக்குத்தத்தமான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுவார்கள். விசுவாசியாதவர்கள் ஆசீர்வாதங்களைப் பெறமுடியாது, தேவனுடைய கோபம் அவர்கள்மேல் நிலைநிற்கும். எனவே இயேசுவானவர் சொல்லும்போது; "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு, அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டுநீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (யோவா.5:24).

இந்த வாக்குத்தத்தமான நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள நமக்கு இருக்கவேண்டியவை, ஒன்று விசுவாசம் மற்றொன்று பொறுமை. இந்த இரண்டையும் பெற்றிருந்த நம்முடைய முற்பிதாக்களை நாம் நோக்கிப்பார்க்கவேண்டியவர்களாயிருக்கிறோம். "நீங்கள் அசதியாயிராமல், வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களைப் பின்பற்றுகிறவர்களாயிருந்து" என எபிரெய நிருபத்தில் வாசிக்கிறோம் (எபி.6:11).

விசுவாசம் ஒவ்வொரு மனிதனுக்கும் அடித்தளமாக அமைகிறது. விசுவாசமில்லாமல் தேவனுக்குப்பிரியமாய் இருப்பது கூடாத காரியம். "விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக்குறித்து தேவஎச்சரிப்புப் பெற்று, பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை



இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணினான்; அதினாலே அவன் உலகம் ஆக்கினைக்குள்ளாதென்று தீர்த்து, விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்குச் சுதந்தரவாளியானான்" (எபி.11:7).

ஒரு துளியும் மழையில்லா காலத்தில் தேவனுடைய எச்சரிப்பைப் பெற்று நோவா கொப்பேர் மரத்தினால் ஒரு பேழையை உண்டுபண்ணினான். அது அவனுடைய விசுவாசமாயிருந்தது. தேவன் சொல்லியபடி செய்வார் என்ற அழமான நம்பிக்கை அவனுக்குள் இருந்தது. அதினாலே அவனுடைய குடும்பம் இரட்சிக்கப்பட்டது. இன்றைக்கு நாமும் இவ்விதமான விசுவாசத்தோடு இருப்போமானால் வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை தேவனுடைய சமுகத்தில் பெற்றுக்கொள்ளுவோம்.

"விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான்" (எபி.11:8). விசுவாசம் என்பது காணாததை நம்புவதே விசுவாசம். ஒரு அடி நிளம் கூட அவனுடைய கையாட்சிக்கு கிடைக்காதபோது அவனுக்குள் தேவன் சிறப்பான தேசத்தைக் கொடுப்பார் என்ற அசையாத நம்பிக்கை இருந்தது. இதுவே விசுவாசம். இந்த விசுவாசத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள் அப்பொழுது ஆபிரகாமின் குமாரரும் குமாரத்தியுமாயிருப்பீர்கள்.

"விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவசந்தோஷங்களை அநுபவிப்பதைப்பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டு, இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான்" (எபி.11:24-26).

இராஜ வாழ்க்கையை ஒருவரும் புறம்பே தள்ளமாட்டார்கள். ஆனால் தான் யார் என்பதை அறிந்த மோசே பார்வோனுடைய ராஜ அரன்மனை வாழ்க்கையை விரும்பாமல் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிக்கும்படியாக சோர்ந்துகொண்டான். நல்ல வாழ்க்கை கிடைத்திருக்கும்போது கடினமான வாழ்வை யாரும்

விரும்பமாட்டார்கள். ஆனால் மோசேயோ, அந்தவிதமான வாழ்க்கைதான் தனக்கு தேவை என் ஜனங்கள் துன்பப்படும்போது தான் மட்டும் சுகபோகமாக வாழ்வதா? என்ற கேள்வி அவனுக்குள் எழும்பியிருக்கும். எனக்கு அன்பானவர்களே, நீங்கள் என்றாவது தேவனுடைய ஜனங்கள் துன்பப்படுவதை கேள்விப்பட்டு, உங்களால் முடிந்து உதவியை செய்யும்படியாக யோசித்ததுண்டா? நாம் அநேக வேளைகளில் தனக்கானவைகளையே நாடுகிறோம். பிறருக்கானவைகளையும் நோக்கவேண்டும் என வேதம் சொல்லுகிறது. நீங்கள் உங்களுடைய வாழ்க்கையில் நாம் தியானித்த இந்த மோசேயைப்போலவும், ஆபிரகாமைப்போலவும், நோவாவைப் போலவும் விசுவாசமுள்ளவர்களாயிருந்து தேவனுடைய ராஜ்யத்தில் அதிக கனிகளைக்கொடுக்கும் கிறிஸ்தவர்களாக வாழும்படியாக உங்களை தேவனுடைய சமுகத்தில் ஒப்புக்கொடுங்கள்.

வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களைப் பெறவேண்டுமானால் வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக்கொண்ட நம்முடைய முற்பிதாக்களை நோக்கிப்பார்க்கவேண்டியது அவசியமாயிருக்கிறது. காலம் தாழ்த்தாமல் இன்றே கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மேலும் இந்தவிதமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள நமக்கு பொறுமை அவசியமாயிருக்கிறது. பொறுமை எவ்வளவு காலத்திற்கு என்று கேட்டுவிடாதீர்கள். "சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடையவேண்டுமென்று, முன்மாரியும் பின்மாரியும் வருமளவும், நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான். நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதங்களை ஸ்திரப்படுத்துங்கள்; கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே" என்கிறார் யாக்கோபு யாக். 5:7,8 வசனங்கள். பொறுமைக்கு எல்லையில்லை எல்லாவற்றிற்கும் எல்லையுண்டு. ஆனால் பொறுமைக்கு எல்லையில்லை எனக்காண்கிறோம்.

ஒன்று கர்த்தர் வருமளவும் பொறுமையாயிருந்தால் போதும். ஒரு நல்ல உதாரணத்தை யாக்கோபு நமக்கு எடுத்துரைக்கிறார். ஒரு விவசாயி எப்படி தான் விதைத்த பலனைப்பெறும்படி பொறுமையோடே



காத்திருக்கிறானோ அதைப்போல நாமும் காத்திருக்க வேண்டியவர் களாயிருக்கிறோம். அப்படி காத்திருக்கும்போது வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை தேவனுடைய கரத்தில் பெற்றுக்கொள்ளுவோம்.

பொறுமைக்கு மேலும் உதாரணமாக யாக்கோபு தீர்க்கதரிசிகளை திருஷ்டாந்தமாக வைத்துக்கொள்ளுங்கள் என்கிறார். "என் சகோதரரே, கர்த்தருடைய நாமத்தினாலே பேசின தீர்க்கதரிசிகளைத் துன்பப்படுதலுக்கும் நீடிய பொறுமைக்கும் திருஷ்டாந்தமாக வைத்துக் கொள்ளுங்கள்" (யாக். 5:10). நாம் யாரை நம்முடைய பொறுமைக்கு உதாரணமாக வைத்திருக்கிறோம். நம்முடைய உறவினர்களையா? அல்லது நண்பர்களையா? அநேகர் பேசும்போது என்னுடைய மாமாவைப்போல நானும் பொறுமையாயிருப்பேன் என்பார்கள்.

அவர்களுடைய மாமா ஒரு பொல்லாத மனுஷனாக இருப்பார். கொஞ்சம் பொறுமைசாளியாக இருக்கலாம். அதற்காக அவரை நாம் உதாரணமாக வைக்க முடியாது. ஒருவேளை என்னுடைய நண்பன் எல்லாவிதத்திலும் பொறுமையானவன் என்று சொல்லலாம். அவனைக்குறித்து நாம் கேள்விப்பட்டால் அவனைப்போல ஒரு மோசமானவன் எவனுமில்லை என்று மற்றவர்கள் சொல்லக் கேள்விப்படுவீர்கள். ஆகையால் நாம் யாரைத்தான் பொறுமைக்கு உதாரணமாக வைப்பது? வேதம் தீர்க்கதரிசிகளை பொறுமைக்கு உதாரணமாக வைத்துக்கொள்ளுங்கள் என்று நமக்கு ஆலோசனை சொல்லுகிறது.

ஏசாயா, எரேமியா, தானியேல், ஆமோஸ் யோவான்ஸ்நானகன் போன்ற தீர்க்கதரிசிகள் எல்லோரும் கர்த்தர் நிமித்தமாக பலபாடுகளை அநுபவித்தவர்கள். மேலும் யாக்கோபு சொல்லும்போது; "இதோ, பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென்கிறோமே? யோபின் பொறுமையைக்குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்; கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள்; கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுமுள்ளவராயிருக்கிறாரே" என்கிறார் (யாக். 5:11). யோபுவுக்கு வந்த பாடுகள் பிரச்சனைகள் ஒருவருக்கும் வந்திருக்க வாய்ப்பில்லை என்றே சொல்லவேண்டும். அத்தனை பாடுகளை அநுபவித்தார். ஒரு மனிதனுக்கு மிகவும் துணையாக இருப்பது அவனுடைய மனைவி மட்டுமே. ஆனால் யோபுவின் மனைவியோ

அவனைப்பார்த்து நீ இன்னும் உன்னுடைய உத்தமத்தில் உறுதியாயிருக்கிறீரோ, தேவனை தூஷித்து ஜீவனை விடும் என்றால். ஏன் இப்படிச் சொன்னால்? யோபுக்கு அந்தவிதமான பாடுகள் வந்தது. இதையெல்லாம் பார்த்துக்கொண்டு சும்மாயிருக்கும் அந்த கர்த்தரை நீ ஏன் ஆராதிக்கிராய் அவரை தூஷித்து உயிரை விட்டுவிடு என்பதாய் சொன்னாள். அதற்கு யோபிவின் பதில் என்ன? பயித்திக்காரிபேசுகிறதுபோல பேசுகிறாய், இவ்வள காலமாக நாம் நன்மைகளைப் பெற்று இருக்க அவருடைய சமுகத்தில் தீமைகளையும் பெறவேண்டாமோ? என்றான்.

கஷ்டகாலத்தில் கர்த்தரை மறந்துவிடுவார்கள் ஆனால் யோபு, தேவனுடைய சமுகத்தில் நன்மைகளைப் பெற்ற நாட்களை துன்பத்தின் வேளையில் நினைத்தான். இது வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை சுதந்தரிக்க பேதுமான விசுவாசமாயிருந்தது. இப்படிப்பட்டவிசுவாசத்தை நீங்கள் பெற்றுக்கொள்ள யோபுவைப்போல உங்களுக்கு வரக்கூடிய பாடுகளிலும் பிரச்சனைகளிலும் இவ்விதமான தேவ மனுஷர்களை நினைத்துப்பாருங்கள். "நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது" என எபிரெய ஆசான் குறிப்பிடுகிறார் எபி.10;36-ம் வசனம்.

இச்செய்தியைக் வாசித்துக் கொண்டிருக்கும் அன்பு வாசகரே, நீங்கள் உங்களுடைய வாழ்க்கையில் அசதியாயிராமல் வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும் சுதந்தரித்துக்கெள்ளுகிற ஆதி முற்பிதாக்களையும், தீர்க்கதரிசிகளையும் தேவனுடைய மனுஷர்களையும் பார்த்து உங்களை பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

**கேள்வி நேரம்**

**தேவன் கொடுக்கிற நித்திய ஜீவனுக்குரிய வாழ்வு எவரிடம் உள்ளது?**

"தேவன் நமக்கு நித்தியஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம். குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்" என 1யோவா.5:11,12-ல்



வாசிக்கிறோம். ஜீவன் இல்லாதவன் என்றால் உயிர் இல்லாதவன். நீங்கள் ஜீவனுள்ளவர்களாயிருக்க விரும்பினாலும் கர்த்தராகிய இயேசுவை உங்களுடைய சொந்த இரட்சகராகவும் மீட்பராகவும் ஏற்றுக்கொண்டு, நீங்கள் அவருடைய சுவிசேஷ வசனத்திற்கு செவி கொடுத்து, அதற்கு கீழ்ப்படிந்து, அவரை தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று உங்களுடைய வாயினாலே அறிக்கையிட்டு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது அவர் உங்களை தம்முடைய சபையில் சேர்த்துக்கொள்ளுவார். நீங்களும் அவருடையவர்களாவீர்கள். ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருக்கும்போது பழையவைகள் ஒழிந்துபோகிறது, அவனுடைய வாழ்க்கையில் எல்லாம் புதிதாகிறது. ஒரு புது சிருஷ்டியாக அவன் காணப்படுவான். அப்பொழுது அவனுக்குள் கிறிஸ்துவானவர் வந்து வாசம்பண்ணுவார்.

அவன் ஒரு கிறிஸ்தவனாக கிறிஸ்துவை தன்னுடைய சரீரத்தில் தரித்தவனாகிறான். இவர்களே குமாரனை உடையவர்கள். நீங்கள் இப்படிப்பட்டவர்களாயில்லாவிட்டால் இன்றே உங்களை அவருக்கு ஒப்புக்கொடுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 16. எனக்குள் வாசமாயிருக்கிற பாவம்
## Sin that Dwelth in Me

**பா**வம் ஒரு மனிதனை பல வழிகளில் ஆண்டு வருகிறது. ஒரு கிறிஸ்தவன் பாவத்திலிருந்து இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்கப்படுகிறான். அப்படி மீட்கப்பட்ட ஒருவனை பாவம் மீண்டும் ஆண்டுகொள்ளுமா என்றால் ஆண்டுகொள்ளும். அது எப்படி? என்று நீங்கள் கேட்கக்கூடும். அவனுள் பாவம் வாசமாயிருக்கும்போது பாவம் அவனை ஆண்டுகொள்ளும்.

பவுல் ரோமகிறிஸ்தவர்களுக்கு எழுதிய கடிதத்தில் "ஆதலால் நான் அல்ல எனக்குள் வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது" என்கிறார் (ரோம. 7:17). இந்த வசனத்தில் கவனியுங்கள் நான் அல்ல எனக்குள் வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது என்கிறார். அப்படியானால் அவருக்குள் பாவம் வாசமாயிருக்கிறது. "எப்படியெனில், நான் செய்கிறது எனக்கே சம்மதியில்லை; நான் விரும்புகிறதைச் செய்யாமல், நான் வெறுக்கிறதையே செய்கிறேன்" என்கிறார் (ரோம.7:15). சிலரைப்

பாருங்கள் அவர்களுக்கு சிலவிஷயங்கள் பிடிக்காது இருந்தாலும் அதை செய்துகொண்டிருப்பார்கள். அதைப்போன்றது பாவம். கோபம் கொள்ளாதிருக்கவேண்டும் என்று நினைப்பவர்கள் சிலவேளைகளில் கோபித்துவிடுகிறார்கள் அல்லவா. இந்த கோபம் அவர்களில் எப்படிவருகிறது. ஏதோ ஒரு மூலையில் அவர்களுக்குள்ளாக ஒட்டிக்கொண்டிருக்கிறது. அது தூண்டப்பட்டு, அவர்களில் எரிமலையைப்போல சீற ஆரம்பித்துவிடுகிறது. அது முடிவில் பாவத்தில் கொண்டுபோய்விட்டுவிடும். இப்படி அநேகர் விரும்பாததைச் செய்து பாவத்தின்கீழ் தள்ளப்படுகின்றனர்.

மேலும் பவுல் சொல்லும்போது; "அந்தப்படி நான் விரும்பாததை நான் செய்தால், நான் அல்ல, எனக்குள் வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது" என்கிறார் (ரோம.7:20). பாவம் நமக்குள் வாசமாயிருந்தால் அதினால் நாம் தூண்டப்படுவோம். எந்த விஷயத்தில் நீங்கள் பெலவீனமாக இருக்கிறீர்கள் என்பதை பாவத்தை தூண்டும் பிசாசு அறிந்தவனாயிருக்கிறான். "மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவை களெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்" என அப்போஸ்தலனாகிய யோவான் சொல்லுகிறார் (1யோவா.2:16). பிசாசு உலகத்தில் இந்த மூன்று பெரிய பாவங்களை விதைத்துவைத்திருக்கிறான். இந்த மூன்றில் ஏதாவது ஒன்றிலாவது வீழ்ந்துபோவது மனிதனுடைய இயல்பாக இருக்கிறது. அவரவருடைய பெலவீனங்களுக்கு தக்கதாக இவைகளை அவர்களுக்குள் கொண்டுவருவான்.

ஆகையால் பவுல் மேலும் சொல்லும்போது; "ஆகிலும் என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன்; அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக் கொள்ளுகிறது" என்கிறார் (ரோம.7:23). முழுவதும் கழுவப்பட்ட ஒருவனில் ஒருசில காரியங்கள் ஒற்றிக்கொண்டிருக்கும்போது அதன் வழியாக பிசாசு மற்றஅவயவங்களையும் சிறையாக்கிப்போடுவான். ஒரு துளி விஷம் முழுவதையும் விஷமாக்கிவிடுவதுபோல நம்முடைய ஆயுல் சக்கரத்தையும் கறைபடுத்திவிடும்.



இந்த பாவத்தை முழுவதும் போக்க வழி என்னவென்றால்; பாவம் நம்மை ஆள இடங்கொடாதிருக்கவேண்டும். இதையே பவுல் விளக்கமாக கூறும்போது; "ஆகையால், நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக. நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக் கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள். நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால் பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது" என்கிறார் (ரோம.6:12-14). இந்த சரீரம் சாவுக்கேதுவான சரீரம் என்பதை அநேகர் மறந்துவிடுகின்றனர். இந்த சரீரத்தில் பாவம் ஆள இடங்கொடாதிருக்கவேண்டும்.

செடிகளில் பூச்சி பிடித்துவிட்டால் அவைகளை போக்க மருந்து தெளிக்கிறோம். நம்மில் பாவம் ஆட்சிசெய்யாதிருக்க அவைகளை அவ்வப்போது வேதவசனத்தைக் கொண்டு நம்மை சுத்திகரித்துக் கொண்டே இருக்கவேண்டும். இல்லையேல் பாவம் கொஞ்சம் கொஞ்சமாக நமக்குள்ளாக உள்ளே புகுந்து முழுஅவயவத்தையும் கறைபடுத்திவிடும். சிலர் நியாயப்பிரமாணத்தின்படி நடக்க விரும்புகின்றனர். கண்ணுக்கு கண், பல்லுக்குப் பல் என்ற கட்டளைபடி பழி வாங்கும்படி யோசிக்கின்றனர். அப்படியோசிக்கும்போது நாம் கிருபையின் பிரமாணத்தை தள்ளிவிடுகிறோம் அல்லது அதற்கு கீழ்ப்படியாமற்போகின்றோம்.

நாம் இப்பொழுது நியாயப்பிரமாணத்திற்கு கீழானவர்கள் அல்ல அதினின்று விடுதலையாக்கப்பட்டு நீதிக்கு அடிமைகளானோம். எனவே நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்கு கீழ்ப்பட்டிருக்கிற படியால் பாவம் உங்களை மேற்கொள்ளாது. அப்படி மீறி பாவம் உங்களில் தங்கியிருக்கிறது என்றால் நீங்கள் நியாயப்பிரமாணத்தின்படி செய்யப்பார்க்கிறீர்கள். தேவன் கலகத்திற்கு தேவனாயிராமல் சமாதானத்திற்கு தேவனாயிருக்கிறார். "உங்கள் மாம்ச பலவீனத்தினிமித்தம் மனுஷர் பேசுகிறபிரகாரமாய்ப் பேசுகிறேன், அக்கிரமத்தை நடப்பிக்கும்டிபடி முன்னே நீங்கள் உங்கள்

அவயவங்களை அசுத்தத்திற்கும் அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுத்ததுபோல, இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள்" (ரோம.6:19). இப்படி ஒப்புக்கொடுக்கும்போது பாவம் ஒருக்காலும் உங்களில் ஆட்சி செய்யாது. நீங்கள் தேவனுக்கேற்ற பிள்ளைகளாக பரிசுத்தமுள்ளவர்களாக இருக்கமுடியும்.

மேலும் "கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே" என்கிறார் பவுல் (ரோம.8:2). கர்த்தருடைய வார்த்தைக்கு ஒரு மனிதன் கீழ்ப்படியும்போது ஆவியின் பிரமாணம் அவனை பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்குகிறது. இவைகளை நாம் எப்படி அறிந்துகொள்ளுகிறோம் என்றால் விசுவாசத்தினாலே அறிகிறோம். நம்முடைய கீழ்ப்படிதல் மூலமாக அறிகிறோம். வசனத்தின்படி சரியாக ஒப்புக்கொடுக்கும்போது அதன்மூலமாக அறிகிறோம்.

கணக்கு பரீட்சையில் ஒரு மாணவன் 100 சதவீத தேர்ச்சியடைகிறான் என்றால் அவன் கணக்கை சரியாக செய்திருக்கிறான், ஆகையால் 100 மதிப்பெண் எடுத்து தேர்ச்சியடைகிறான். அதைப்போல ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்துவின் கட்டளைப்படி அவன் தன்னை கீழ்ப்படிய ஒப்புக்கொடுக்கும்போது அவரால் இரட்சிக்கப்படுகிறான். பாவத்திலிருந்து அவனை ஆவியின் பிரமாணம் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்குகிறது. மேலும் "கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும்" (ரோம.8:10).

கிறிஸ்தவனுக்குள்ளாக கிறிஸ்து வாசம் செய்யவேண்டும். அநேக பிரிவினை சபைகளில் பரிசுத்தஆவியைப் பெற்றுவிட்டீர்களா? என்று கேட்கிறார்கள். நான் கேட்கிறேன். ஒரு கிறிஸ்தவன் முதலாவது கிறிஸ்துவுக்குள்ளாக வாழும்போது பரிசுத்த ஆவியானவர் அவனுக்குள்ளாக வாழுவார். அவன் பரிசுத்தமுள்ளவனாகவும் ஒரு கிறிஸ்தவனாகவும் வாழாமல் இருக்கும்போது அவனுக்குள் பரிசுத்த ஆவியானவர் எப்படி வந்து வாசம் செய்வார். விஜயனின் இருதயம் என்ற



ஒரு கைபிரதியை பல வருடங்களுக்கு முன்பாக நான் வாசித்திருக்கிறேன். அதில் அவனுடைய இருதயத்தில் பாவம் வாசம் செய்யும்போது ஆவியானவர், ஆண்டவராகிய இயேசு, பிதாவாகிய தேவன் அவனுடைய இருதயத்தை விட்டு வெளியே போய்விடுவார்கள் என்பதைப்போல படம் போடப்பட்டிருக்கும். அவனுடைய இருதயத்தை விட்டு பாவம் வெளியேறும்போது; தேவத்துவம் அவனுக்குள் வாசம் பண்ணும். அவனும் ஒரு கிறிஸ்தவனாயிருப்பான். கிறிஸ்து நமக்குள் இருப்பாரானால் நிச்சயமாக நம்முடைய சரீரம் பாவத்தினிமித்தம் செத்ததாயிருக்கும். உங்களுடைய சரீரம் பாவத்திற்கு செத்து நீதிக்கு பிழைத்திருக்கிறதா? இன்றே வசனத்தின்படி உங்களை ஆராய்ந்து பாருங்கள்.

இயேசுவானவர்: "திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்" என பவுல் தெளிவாக எழுதியிருக்கிறார் (எபே.5:26,27).

ஒரு தாய் தன் பிள்ளையை பள்ளிக்கு அனுப்பும்போது அவனை குளிப்பாட்டி நல்ல வஸ்திரங்களை உடுத்துவித்து அனுப்பிவைக்கிறாள். அதைப்போல நம்முடைய ஆண்டவராகிய இயேசு ஒருவரும் அவருடைய மந்தையை குற்றப்படுத்திவிடாதிருக்க கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக்கொள்வதற்கு தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்திருக்கிறார். அதை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நமக்கும் இருக்கிறதல்லவா? திருவசனத்தின் மூலமாக கழுவப்பட்ட நாம் கறைபட்டு விடாது பாதுகாத்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். மேலும் நாம் பாதுகாக்கப்பட இயேசுவைத் தரித்துக்கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறோம்.

பவுல் சொல்லுகிறார்; "இனிமேல் ஒருவனும் எனக்கு வருத்தம் உண்டாக்காதிருப்பானாக; கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக்

கொண்டிருக்கிறேன்" என்கிறார் (கலா.6:17). ஒரு யுத்தவீரனுக்கு அவனுடைய கவசம் பாதுகாப்பானது, அப்படியே பாவத்திலிருந்து மீட்கப்பட்ட ஒரு பாவிக்கு பரிசுத்தரின் அச்சடையாளங்கள் அவனை பாதுகாக்கும். நமக்கு வேறொரு அடையாளம் கொடுக்கப்படவில்லை. நம்மை மீட்கும்படியாக வந்த ஆண்டவரை நம்முடைய சரீரத்தில் தரித்துக்கொள்ளும்போது அவருடைய சிந்தை நமக்குள்ளிருக்கும். அடையாளம் என்று சொல்லும்போது அங்கி போட்டுவிட்டால் போதாது; அவருடைய சிந்தை, அவருடைய குணநலன்கள் நம்மில் காணப்படவேண்டும், இரக்கம், சமாதானம், நீடியபொறுமை, தயவு போன்ற நல்ல குணங்கள் உடையவர்களாக இயேசுவைப்போல நன்மைசெய்கிறவர்களாக எங்கும் காணப்படவேண்டும்.

இச்செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் நண்பரே, உனக்குள் பாவம் வாசம் செய்ய இடங்கொடாதே, ஆவியின் பிரமாணம் உன்னை முழுவதுமாக ஆண்டுகொள்ள இடங்கொடு. இயேசுவை உன்னுடைய சரீரத்தில் தரித்துக்கொள். அப்பொழுது கிறிஸ்து உன் மூலமாக பிரகாசிப்பார்.

### கேள்வி நேரம்

**பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டுகொண்டதுபோல, கிருபை நித்தியஜீவனுக்கு ஏதுவாக ஆண்டுகொண்டதா?**

ஆம், "பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டுகொண்டதுபோல, கிருபையானது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நீதியினாலே நித்தியஜீவனுக்கு ஏதுவாக ஆண்டுகொண்டது" (ரோம.5:21). ஆதாம் மூலமாக பாவம் செய்யாதவர்களையும் பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டுகொண்டதைப்போல கிருபையானது அதாவது தேவனுடைய இரக்கமானது இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நீதியினாலே நித்தியஜீவனுக்கு ஏதுவான ஆண்டுகொள்ளும். இதனாலே நாம் பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டோம்.

இது தேவனுடைய இரக்கம். நம்முடைய நீதியின்படி தேவன் நம்மை இரட்சிக்காமல் தமது இரக்கத்தின்படி நம்மை மறுஜென்ம முழுக்கினாலும் பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார். இவ்விதமாக நீங்கள் இரட்சிக்கப்பட்டு இருக்கிறீர்களா?



அப்படியில்லை என்றால் உங்களுடைய இரட்சிப்பை குறித்து வேதவசனங்களோடு ஒப்பிட்டுப் பாருங்கள். கிருபையுள்ள வசனத்திற்கு ஒப்புக்கொடுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 17. இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள் Pray Without Ceasing

**ஜெ**பம், நாம் தேவனோடு தொடர்புகொள்ளுவதற்கான வழியாக இருக்கிறது. ஜெபத்தை இயேசுவின் மூலமாக ஜெபிக்கிறோம். அதாவது இயேசுவின் நாமத்தில் பிதாவினிடத்தில் கேட்கின்றோம். ஏனெனில் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் எவைகளைக் கேட்பீர்களோ அவைகளை பெற்றுக்கொள்வீர்கள் என்று நம்முடைய ஆண்டவர் சொல்லியிருக்கிறபடியால் நாம் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். அநேகர் இயேசுவை நோக்கி சிலவேளைகளில் ஜெபிக்கின்றனர். அப்படிஜெபிக்கும்போது நாம் இயேசுவானவர் சொன்னபடி ஜெபிக்க தவறிவிடுகிறோம். மற்றொன்று நாம் ஜெபித்தும் அதனுடைய பலனை அடையாமற்போகின்றோம்.

இயேசுவானவர் பிதாவைநோக்கி ஜெபிக்கும்போது; "இப்பொழுதும் நான் உம்மிடத்திற்கு வருகிறேன்; அவர்கள் என் சந்தோஷத்தை நிறைவாய் அடையும்படி உலகத்தில் இருக்கையில் இவைகளைச் சொல்லுகிறேன்" என்று ஜெபித்தார் (யோவா.17:13). இந்த ஜெபத்தில் தான் எங்கிருந்து வந்தாரோ அந்த இடத்துக்கு மீண்டும் போவதற்காக தம்மை அனுப்பின பிதாவானவரை நோக்கி ஜெபிக்கின்றார்.

அதுமட்டுமல்ல, அவர்கள் என் சந்தோஷத்தை நிறைவாய் அடையும்படி உலகத்தில் இருக்கையில் இவைகளைச் சொல்லுகிறேன் என்று ஜெபித்தார். அவர் அடைந்த சந்தோஷத்தை நாம் ஒவ்வொருவரும் அடையவேண்டும் என்பதுவே இயேசுவானவருடைய ஜெபமாக இருந்தது. அவர் எப்படி ஜெபித்தாரோ அப்படியே நாமும் தேவனுடைய குமாரர்களாக இருப்பதால் நாம் தேவனை நோக்கி இயேசுவின் நாமத்தில் ஜெபித்து தேவனுடைய ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள தகுதியுள்ளவர்களாயிருக்கிறோம். இன்றைக்கு எங்கு பார்த்தாலும் சமாதானமில்லை, சந்தோஷம் இல்லை என்று எங்கும்பேசப்படுகிறதை

நாம் கேள்விப்படுகிறோம். மனிதன் தேவனைவிட்டு வெகுதூரம் கடந்துசென்றுவிட்டான். பாவம் அவனை அவ்விதமாக கொண்டு சென்றுவிட்டது. அவன் மறுபடியும் மனந்திரும்பவேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார். அவன் மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கு என்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போது கர்த்தர் அவனை மன்னித்து தம்முடைய மந்தையில் சேர்க்கிறார். அவன் நிறைவான சந்தோஷத்தையும் சமாதானத்தையும் பெற்றுக்கொள்ளுகிறான்.

இதற்காகவே இயேசுவானவர் பூமியில் இருக்கும்போது தாம் தேவனோடு கொண்டுள்ள உறவைப்போல ஒவ்வொருவரும் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று அவர்கள் என் சந்தோஷத்தை நிறைவாய் அடையும்படி வேண்டுவதாக சொல்லுகிறார். அவர் பூமியில் இருக்கும்போது ஏதோ நினைத்தபோது ஜெபிக்கவில்லை. அவருடைய முப்பத்துமூன்றரை வருடங்களில் அதிகமாக ஜெபத்திலே தேவனோடு தரித்திருந்தார். இடைவிடாமல் ஜெபிக்கிறவராயிருந்தார். அநேகர் வருடத்திற்கு ஒரு முறை ஜெபிக்கிறவர்கள் உண்டு. சிலர் மாதத்திற்கு ஒரு முறை சபைக்கு சென்று ஜெபிக்கிறவர்கள் உண்டு. இன்னும் சிலர் வாரத்திற்கு ஒரு முறை மட்டுமே ஜெபிக்கிறவர்களாக காணப்படுகிறார்கள். இது இடைவிடாமல் ஜெபிப்பதை குறிக்காது.

யோனா என்ற தீர்க்கதரிசியை அறிவீர்கள் அவன் ஜெபிக்கும்போது; "என் நெருக்கத்தில் நான் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன்; அவர் எனக்கு உத்தரவு அருளினார்; நான் பாதாளத்தின் வயிற்றிலிருந்து கூக்குரலிட்டேன் நீர் என் சத்தத்தைக் கேட்டீர்" என்று ஜெபித்தான் (யோனா2:2). இவன் ஜெபிக்கின்ற வேளையில் மீனவயிற்றில் இருந்தான். மீன் யோனாவை மூன்று நாள் வரை தன் வயிற்றில் வைத்திருந்தது. கடல் ஆழங்களில் அவனைக் கொண்டு சென்றிருக்கும். அநேகர் நெருக்கத்தில் கர்த்தரை மறந்துவிடுகிறார்கள். அவர் என்னை மறந்தார் ஆகையால் நான் இன்று சபைக்கு செல்லவில்லை. என் தேவைகளை கர்த்தர் சந்திக்கவில்லை அல்லது நான் எதிர்பார்த்த காரியம் கைகூடிவரவில்லை இப்படிப்பட்ட அநேக சாக்குபோக்கான காரியங்களைச் சொல்லி கர்த்தரை மறக்கிற ஜனங்களைப் பார்க்கிறோம். யோனாவோ, நெருக்கத்திலும் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டதாக சொல்லுகிறார்.



மோசே என்ற தேவனுடைய மனுஷன் "நாங்கள் எங்கள் வாழ் நாளெல்லாம் களிகூர்ந்து மகிழும்படி, காலையிலே எங்களை உமது கிருபையால் திருப்தியாக்கும்" என்பதாய் ஜெபிக்கிறார் (சங்.90:14). மோசே தேவனுடைய ஜனங்களோடேகூட துன்பத்தை அநுபவிக்கும்படி எகிப்தின் பொக்கிஷங்களை விட்டு வந்த மனுஷன். வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து மகிழக்கூடிய சந்தோஷத்தை கர்த்தர் ஒருவரே கொடுக்க முடியும். இதை அறிந்த மோசே காலையில் எங்களை உமது கிருயால் திருப்தியாக்கு என்று சொல்லி ஜெபித்தார்.

ஒவ்வொரு நாளும் நாம் கர்த்தரை நோக்கி ஜெபிக்கிறவர்களாக இருக்கவேண்டும். சிலர் தோத்திரம், தோத்திரம் என்று சொல்லிக்கொண்டே இருந்தால்தான் இடைவிடாமல் ஜெபிப்பதாக கருதுகிறார்கள். அப்படியல்ல இடைவிடாமல் என்பது தொடர்ந்து ஒரு நாளைக்கு பல முறை அல்லது ஐந்து ஆறுமுறை ஜெபிப்பது. இது இடைவிடாமல் ஜெபிப்பதைக்குறிக்கும். ஆண்டவர் தம்முடைய சீஷர்களை அழைத்துக்கொண்டு ஒலிவமலைக்கும் கெத்செமனே தோட்டத்திற்கு அதிகமாக ஜெபிக்கும்படியாக சென்றுள்ளதை நாம் வேதத்தில் காணமுடிகிறது அவ்விதமாக நீங்களும் பலமுறை ஜெபிக்கும்படியாக தினமும் முயற்சி எடுங்கள். அதினால் தேவனாடு சஞ்சரிக்கும் பாக்கியத்தை பெறுவீர்கள்.

ஜெபம் அது விசுவாசமுள்ள ஜெபமாக இருக்கவேண்டும். யாக்கோபு என்ற தேவனுடைய மனுஷன் எழுதிய வேத புத்தகத்தில் படிக்கிறோம்; "விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்" (யாக்.5:15). விசுவாசமுள்ள எவனும் பெற்றுக் கொள்ளுகிறான். அப்படிப்பட்டவனுடைய ஜெபம் நோயாளியையும் சுகம் ஆக்கக்கூடியதாக இருக்கிறது. அவனுடைய ஜெபத்தைக்கேட்டு தேவன் பிணியாளியை காப்பாற்றுகிறார்.

பேதுரு, பவுல் போன்றோர் ஜெபிக்கும்போது அநேகர் சுகமாக்கப்பட்டுள்ளதை நாம் அப்போஸ்தலர் புத்தகத்தில் படிக்கிறோம். சபையின் மூப்பர்கள் விசுவாசிகளுக்காக ஜெபிக்கவேண்டும் என்று காண்கிறோம். ஏனெனில் அவர்கள் மந்தையின் கண்காணிகளா இருக்கிறார்கள். அவர்களுக்கு மந்தையின்மீது கவனம் வேண்டும்.

விசுவாசமுள்ள மூப்பர்களை சபையில் அவசியம் நியமிக்கவேண்டும். அப்படிப்பட்டவர்களுடைய ஜெபத்தை கர்த்தர் கேட்கிறார்.

ஜெபிக்கும்போது சோதனைக்குட்படாதபடிக்கு ஜெபிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆண்டவர் தம்முடைய சீஷர்களை நோக்கி சொல்லும்போது; "நீங்கள் நித்திரைபண்ணுகிறதென்ன? சோதனைக்குட்படாதபடிக்கு, எழுந்திருந்து ஜெபம்பண்ணுங்கள் என்றார்" (லூக்.22:46). அவர்களோ நித்திரையின் ஆவியினால் தூங்கிக்கொண்டிருந்தார்கள். அநேகரை பிசாசு இந்தவிதமான ஆவியினால் சோரப்பண்ணுகிறான். பைபிளை எடுத்தவுடன் அநேகருக்கு தூக்கம் வந்துவிடுகிறது. உடனே பைபிளை மூடிவைத்துவிட்டு நித்திரைக்கு சென்று விடுகின்றனர்.

மீண்டும் மறுநாள் பைபிளை எடுத்தவுடன் தூக்கம் வருகிறது, நித்திரைக்கு சென்று விடுகின்றனர். ஆனால் டிவியை விடிய விடிய பார்த்தாலும் தூக்கம் வருவதில்லை. ஏனென்றால் அதனுடைய காட்சிகள் அவர்களை அப்படியே ஈர்த்து விடுகிறது. இவ்விதமாக அநேகர் சோதனைக்குள்ளாக தள்ளப்படுகின்றனர். நாம் எந்த அளவு ஜெபத்தில் தரித்திருக்கிறோமோ அந்த அளவு ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுவோம். ஜெபம் கடல் கடந்து இருக்கிறவர்களைக்கூட இரட்சிக்கும். நமக்கு வரக்கூடிய நித்திரையோ அருகாமையில் உள்ளவர்களைக்கூட காப்பாற்றாது. ஆகையால் விழித்திருந்து ஜெபியுங்கள்.

இடைவிடாமல் ஜெபித்தவர்களைக்குறித்து வேதாகமத்தில் படிக்கிறோம். அப்போஸ்தலனாகிய பவுல் அதில் ஒருவர். அவர் எபேசிய சபைக்கு எழுதும்போது; "இடைவிடாமல் உங்களுக்காக ஸ்தோத்திரம்பண்ணி, என் ஜெபங்களில் உங்களை நினைத்து" என எழுதுகிறார் (எபே.1:16). அவர் எபேசிய கிறிஸ்தவர்களை நினைக்கும் போதெல்லாம் அவர்களுக்காக இடைவிடாது ஜெபித்திருக்கிறார். நீங்கள் உங்களுடைய நண்பர்களுக்காக அல்லது உங்களை வழிநடத்துகிறவர் களுக்காக இடைவிடாது இவ்விதமாக ஜெபித்திருக்கிறீர்களா? எங்களோடு சேர்ந்து ஊழியத்தில் பங்குகொள்ளும் ஒருவர் வெளிநாட்டில் இருக்கிறார். அவர் ஒருமுறை எங்களுக்கு கடிதம் எழுதும்போது நாங்கள் ஒவ்வொருநாளும் உங்களுக்காக எங்களுடைய ஜெபத்தில் உங்களை



நினைத்து ஜெபிக்கிறோம் என்று எழுதியிருந்தார். அநேக சகோதரர்கள் எங்களுக்கு உண்டு ஆனாலும் இவ்விதமாக சொன்னவர்கள் இவர்கள் மட்டுமே. அந்த கடிதத்தை படித்தவுடன் நமக்காக வேண்டுதல் செய்யக் கூடியவர்களை தேவன் ஏற்படுத்தியிருக்கிறாரே என்று சந்தோஷம் அடைந்தோம். நாங்களும் அவர்களுக்காக ஒவ்வொருநாளும் ஜெபிக்க தவறுவதில்லை. நாம் ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்கும்படியாக போதிக்கப்படுகிறோம். அதை நீங்கள் ஒவ்வொருநாளும் செய்ய வேண்டும். அப்படிசெய்யாவிட்டால் இன்றே உங்களுடைய ஜெப வாழ்க்கையை துவக்குங்கள். கர்த்தர் நிச்சயம் உங்களை ஆசீர்வதிப்பார்.

தானியேல் என்ற தேவனுடைய மனுஷன் ஒவ்வொரு நாளும் மூன்றுமுறை ஜெபித்திருக்கிறான் என்று படிக்கிறோம். "தானியேலோவென்றால், அந்தப் பத்திரத்துக்குக் கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்தபோதிலும், தன் வீட்டுக்குள்ளேபோய், தன் மேல் அறையிலே எருசலேமுக்கு நேராகப் பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்துவந்தபடியே, தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான்" என காண்கிறோம் (தானி.6:10).

அந்நாட்களில் ராஜாவை தவிர எவரையும் நோக்கிப்பார்க்கக்கூடாது என்று பத்திரத்தில் கையொப்பம் வைக்கப்பட்டுள்ளது அதை மீறி தானியேல் ஜெபித்தார். அதினால் அவரை தூக்கி சிங்கங்களின் கெபியில் போட்டார்கள். அந்த சிங்கங்கள் அவரை கடிக்கவில்லை. தேவன் அவைகளின் வாய்களைக் கட்டிப்போட்டார். தானியேல் இடைவிடாமல் ஜெபித்த தாசன். அவனை பிதாவாகிய தேவன் காப்பாற்றினார். அவன் கர்த்தருக்காக வைராக்கியமுள்ள தேவமனுஷனாக வாழ்ந்தான். இன்றைக்கு உங்களுடைய வாழ்க்கை எப்படிப்பட்டதாக இருக்கிறது. மற்றவர்களுக்காக பயந்துபோய் சபைக்கு செல்லாமல், ஜெபிக்காமல் மற்றவர்களைப் பிரியப்படுத்தும்படியாக வாழ்ந்துகொண்டு இருக்கிறீர்களா? அந்த வாழ்க்கை உங்களை இரட்சிக்காது. இடைவிடாது ஜெபித்து தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள். நாட்டிற்காக அனைத்து ஜனங்களுக்காக, ஒவ்வொருநாளும் மருத்துவமனையில் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிற நோயாளிகளுக்காக,

சிறைச்சாலையில் துன்பத்தை அநுபவிக்கும் கைதிகளுக்கா இன்னும் இதைப்போல யாவருக்காகவும் ஜெபிக்க கடனாளிகளாக இருக்கிறோம். தொடர்ந்து இடைவிடாது ஜெபியுங்கள்.

**கேள்வி நேரம்**

**தானியேலைப்போல ஒரு நாளைக்கு மூன்று முறை ஜெபித்தால் மட்டும் போதுமா?**

தானியேல் தினமும் மூன்றுவேளை தான் செய்து வந்தபடியே ஜெபித்தார் என படிக்கிறோம். அதற்காக அவரைப்போலவே மூன்று வேளை மட்டும் ஜெபித்தால் போதும் என்று நினைக்கக்கூடாது. அவருடைய நாட்களில் அது போதுமானதாக இருந்திருக்கலாம் ஆகையால் அவர் மூன்று முறை மட்டுமே ஜெபித்தார். ஒருவேளை அவர் இன்று இருப்பாரானால் இன்றை உலகத்தைப்பார்த்து ஆண்டவர் இயேசுவைப்போல எப்பொழுதும் ஜெபிக்கிறவராக இருந்திருப்பார்.

ஆகையால் அன்பு சகோதரனே, சகோதரியே உன்னை முழுவதுமாக தேவனுடைய சமுகத்தில் ஊற்றி ஜெபி. அநேகர் ஏதோ ஜெபிக்கவேண்டும் என்பதற்காக ஜெபிப்பார்கள். சிலர் ஜெபத்தை முடிக்காமல் இழுத்துக்கொண்டே போகின்றாரே என்று முனுமுனுத்துக் கொண்டிருப்பார்கள். இவ்விதமாக சங்கடத்தோடும், அதற்குரிய மகிமையைச் செலுத்தாமல் ஒருமனமில்லாமல் ஜெபத்தில் கலந்து கொண்டிருப்பதினால் எந்தவிதமான பயனுமில்லை. ஒருமனப்பட்டவர் களாக ஜெபிக்க வேண்டும். அந்த ஜெபம் மிகவும் பெலனுள்ளதாக இருக்கிறது. எஸ்தர் தன்னுடைய தாதிமார்களோடு உபவாசித்து ஜெபித்தாள். யூதர்களுக்கு விடுதலை கிடைத்தது. கானானிய ஸ்திரீ கர்த்தரை விடாது பற்றிக்கொண்டு வேண்டினாள். நீங்களும் அவ்விதமாக ஜெபியுங்கள்.

## 18. கர்த்தரிடத்திலே அநியாயம் இல்லை
## There is No Iniquity with the Lord

**உ**லகத்திலே அநியாயம் மற்றும் முகதாட்சிணியம் செய்யும் ஜனங்களையும் நம்முடைய வாழ்க்கையில் அன்றாட காண்கிறோம். ஆனால் இவைகள் கர்த்தரிடத்தில் இல்லையென்று யோசபாத் ராஜா



சொல்லியிருக்கிறான். "கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் உங்களிடத்தில் இருக்கக்கடவது; எச்சரிக்கையாயிருந்து காரியத்தை நடத்துங்கள்; உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்திலே அநியாயமும் முகதாட்சிணியமும் இல்லை, பரிதானமும் அவரிடத்திலே செல்லாது" என்கிறான் (2நாளா.19:7). என் பிள்ளைக்கு அநியாயம் செய்துவிட்டார்கள், என் பிள்ளையை அநியாயமாக கொன்றுவிட்டார்கள் என்று சொல்லி ஓலமிடும் அநேக பெற்றோர்களை குறித்து நாம் கேள்விப்படுகிறோம். மற்றவர்களால் அவர்களுடைய பிள்ளைக்கு செய்த அநியாயத்தை பொறுத்துக்கொள்ளமுடியாமல், மனநிம்மதியற்று சிலர் பைத்தியம் பிடித்தவர்கள்போல் மாறிவிடுகிறார்கள்.

அவர்களுடைய கனவு எல்லாம் ஒன்றுமில்லாமற்போயிற்று, தங்களுடைய பிள்ளைகளைக்குறித்த நம்பிக்கை அவர்களைவிட்டுப் போயிற்று ஆயைால் மனநோயாளியாகவோ அல்லது உலகத்தை வெறுத்தவர்களாகவோ மாறிவிடுகின்றனர். இதற்கு காரணம் அவர்களுடைய பிள்ளைகளுக்கு ஏற்பட்ட அநியாயத்தை அவர்களால் பொறுத்துக்கொள்ளமுடியவில்லை. இவைகளையெல்லாம் அநுதினமும் உற்று கண்ணோக்கிப்பார்த்துக்கொண்டிருக்கும் பரலோக பிதாவாகிய தேவன் துன்மார்க்கனுக்கும் அநியாயக்காரனுக்கும் துணை போவதில்லை. "துன்மார்க்கனுடைய வீட்டில் கர்த்தரின் சாபம் இருக்கிறது; நீதிமான்களுடைய வாசஸ்தலத்தையோ அவர் ஆசீர்வதிக்கிறார்" என நீதி.3:33-ல் வாசிக்கிறோம்.

ஆம், கர்த்தர் ஒருபோதும் துன்மார்க்கனுக்கு துணை போவதில்லை. அப்படிப்பட்டவர்களுடைய வீட்டில் கர்த்தர் தம்முடைய சாபத்தை வைத்து வைத்திருக்கிறார். அவர்கள் ஒருபோதும் தண்டனைக்கு தப்பிப்போவதில்லை. ஆகையால் துன்மார்க்கனும் அநியாயக்காரனும் தேவனிடத்திற்கு மனந்திரும்பவேண்டும். "உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப்பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது" (ஏசா.59:2). தேவன் ஒருவருக்கும் தூரமானவர் அல்ல, நாம் தேவனுக்கு விரோதமான காரியங்களில் ஈடுபடும்போது அந்த அக்கிரமங்களே நடுவாகப்பிரிவினையை உண்டாக்குகிறது. தேவன்

ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லோரும் மனந்திரும்பவேண்டுமென எதிர்பார்க்கிறார். ஆகையால் துன்மார்க்கர்களும், அநியாயக்காரர்களும் சிந்திக்கவேண்டிய விஷயம் என்னவென்றால்; "அநியாயமாய் வந்த அதிக வருமானத்திலும், நியாயமாய் வந்த கொஞ்ச வருமானமே உத்தமம்" என்ற நீதி.16:8-ம் வசனத்தின்படி கொஞ்சமாக இருந்தாலும் யாரையும் அநியாயமாய் கொள்ளையிடாத வருமானம் என்ற மனநிறைவோடும், வேதவசனத்தின்படியான வருமானமுமாயிருக்கிறது என்ற சந்தோஷத்தோடும், அவைகளை ஏற்றுக்கொள்ளவேண்டும். மற்றவர்களை ஏமாற்றுவதிலும், கொள்ளையிடுவதிலும் சிலர் சந்தோஷமடைகிறார்கள். உங்களுடைய ஆத்துமா ஒருநாளில் கொள்ளையிடப்படும் அப்பொழுது என்னசெய்வீர்கள்? நீங்கள் எதை விதைத்தீர்களோ, அதையே அறுப்பீர்கள். ஆகையால் கர்த்தரிடத்திலே இல்லாத அநியாத்தை உங்களைவிட்டு அகற்றிப்போடுங்கள்.

கர்த்தரிடத்திலே முகதாட்சிணியமும் இல்லை என்று காண்கிறோம். முகஸ்துதி செய்கிறவர்கள் முகத்தைப்பார்த்து ஒன்று சொல்லுவார்கள். அதே நபர் நமக்குபின்பாக சென்று நம்மை ஏளனம் செய்வார்கள். சங்கீதத்தில் வாசிக்கிறோம்; "எதுவரைக்கும் நீங்கள் அநியாயத் தீர்ப்புசெய்து, துன்மார்க்கனுக்கு முகதாட்சிணியம் பண்ணுவீர்கள்" (சங்.82:2). சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுவிட்டால், அநியாயக்காரர்கள் பெருகிவிடுவார்கள். ஆகையால் நாடும் தேசமும் சட்டத்தை காக்கவேண்டிய பொறுப்பில் இருக்கிறது.

சில இடங்களில் அநியாயத்தீர்ப்பு நடைபெறுகிறது. ஏன் இப்படி நடைபெறுகிறது என்று கேட்க மக்கள் அச்சப்படுகின்றனர். உயர் பதவியில் இருக்கிறவர்களை பிரியப்படுத்தும்படியாக அல்லது முகதாட்சிணியம் செய்யும்படியாக இப்படி செய்கிறார்கள். இது துன்மார்க்கனை கட்டவிழ்த்துவிட்ட செயலாக இருக்கிறது. மேலும் மேலும் துன்மார்க்கன் தன்னுடைய துன்மார்க்கத்தில் நிலைத்திருந்து அநேக கேடுகளை உண்டாக்குவான். ஆகையால் வசனம் சொல்லுகிறது; "வழக்கிலே நீதிமானைத் தோற்கடிக்கிறதற்கு, துன்மார்க்கனுக்கு முகதாட்சிணியம்பண்ணுவது நல்லதல்ல" என்று (நீதி.18:5). தேவன் ஒருபோதும் துன்மார்க்கத்திற்கு துணைபோகிறவர் அல்ல. தம்முடைய தாசனாகிய பவுல் மூலம் கர்த்தர் பேசும்போது; "நீ பட்சபாதத்தோடே



ஒன்றும் செய்யாமலும், விசாரிக்குமுன் நிருணயம் பண்ணாமலும், இவைகளைக் காத்து நடக்கும்படி, தேவனுக்கும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும், தெரிந்துகொள்ளப்பட்ட தூதருக்கும் முன்பாக, உறுதியாய்க் கட்டளையிடுகிறேன்" என்று உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதியிருக்கிறார் (1தீமோ.5:21).

அநேக சபைகள் இந்த வசனத்தை கைக்கொள்ள தவறிவிடுகின்றன. கொடுக்கப்பட்டுள்ள வசனத்தைக் கைக்கொண்டு நடக்க நாம் போதிக்கப்படுகிறோம். தங்களுக்கு சாதகமான சில வசனங்களை மட்டும் எடுத்துக்கொண்டு பின்பற்றுவோமானால் தேவனால் நாம் வாந்திபண்ணப்படுவோம். மேலுள்ள வசனத்தை பவுல் சற்று அழுத்தமாகவும் உறுதியாகவும் சொல்லியிருக்கிறார். அதுவும் தேவனுக்கும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும், தெரிந்து கொள்ளப்பட்ட தூதருக்கும் முன்பாக அவைகளை உறுதியாகக் கட்டளையிடுகிறார். இப்படி உறுதிபண்ணப்பட்ட வசனத்தை மீறி ஒரு கிறிஸ்தவன் நடப்பானேயானால் அவனை பிதாவாகிய தேவன் ஏற்றுக்கொள்ளுவாரா என்பதை சற்றுயோசித்துப்பாருங்கள்.

**அதைபோல பரிதானமும் அவரிடத்தில் செல்லாது என காண்கிறோம்.** அநியாயமும் முகதாட்சிணியமும் அவரிடத்தில் இல்லை. பரிதானம் அவரிடத்தில் செல்லாக்காசாக இருக்கிறது. செல்லாக்காசை நாம் வைத்துக்கொண்டு ஒரு பொருளை வாங்கமுடியாது. இந்த பரிதானம் ஒரு செல்லாக்காசாக இருக்கிறது. அநேகர் தங்களுடைய வீடுகளில் லஞ்சப்பணத்தினால் பொருட்களை குவித்துவைக்கிறார்கள். அதினால் அவர்கள் சந்தோஷமும் அடைகிறார்கள். அவைகள் தேவனுடைய பார்வையில் செல்லாதவைகளாயிருக்கிறது.

பூமியிலே ஒரு மனிதன் லஞ்சம் கொடுத்து எதையும் சாதித்துவிடலாம். ஆனால் பரலோக பாக்கியத்தை எந்த ஒரு மனிதனும் லஞ்சம் கொடுத்து வாங்கிவிட முடியாது. சிலர் சொல்வதைக் கேள்விப்பட்டிருக்கிறேன். நாங்கள் நினைத்தால் அந்த ஆண்டவனையே விலைகொடுத்து வாங்கிவிடுவோம் என்பார்கள். அப்படி ஒன்றும் நடைபெறப்போவதில்லை. வாய்கு வந்தபடியெல்லாம் மனிதன் பேசிவிடுவான். ஆனால் அவைகளைக் குறித்து அவன் கணக்கு

ஒப்புவிக்கவேண்டிய நாள் வரும் அந்நாளில் அவன் வாயை பொத்திக்கொண்டு நிற்பான்.

இயேசுவை பிசாசு சோதிக்கும்படியாக " நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான். அப்பொழுது இயேசு; அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்" (மத்.4:9,10). தேவனால் அனுப்பப்பட்ட ஆண்டவர் இயேசுவுக்கே பரிதானம் கொடுக்கும்படியாக பிசாசு அவரை அண்டினான். அநேக தீர்க்கதரிசிகளை அவன் ஒருவேளை ஏமாற்றியிருக்கக்கூடும். ஆனால் இயேசுவிடம் அது செல்லாததாகிவிட்டது. அப்பாலே போ சாத்தானே என்றார். பிசாசு கொடுத்த வெகுமதி கொஞ்சமல்ல இந்த உலகத்தையே தருவாதாக சொன்னான். இன்றைக்கு சில அற்ப வெகுமதிகளுக்காக ஆண்டவர் இயேசுவை மறுதலிக்கிற கூட்டத்தை காண்கிறோம்.

பிசாசு தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கும்படியாக நமக்கு பிடித்தமான வெகுமதிகளைக் கொண்டுவந்து நம்முன் நிறுத்துவான். அவைகளில் நீங்கள் இச்சித்து வழிவிலகிப்போகாமல் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். ஆண்டவர் இயேசுவைப்போல அவனை வசனத்தினாலே அவர் நமக்குக் கொடுத்த பெலத்தினாலே அவனை மேற்கொள்ளவேண்டும். உலகம் கொடுக்கக்கூடாத சமாதானத்தையும் சந்தோஷத்தையும் நம்முடைய ஆண்டவர் இயேசு நமக்குக் கொடுத்துள்ளார். அவர் கொடுத்துள்ள இந்த மேலான சந்தோஷத்தைக்காட்டிலும் பிசாசு கொடுக்கிற சந்தோஷம் நமக்கு நிம்மதியைக் கொடுக்காது என்பதை புரிந்துகொள்ளுங்கள். அவன் கொல்லவும் அழிக்கவுமே வருகிறான். ஆண்டவர் இயேசுவோ அவைகள் ஜீவன் அடையும்படியாகவும் அது பரிபூரணப்படவும் வந்தார். அந்தப்படியாக கிறிஸ்துவுக்குள் இருக்கிறவர்கள் இந்தவிதமான பரிபூரணமான ஆசீர்வாதங்களைப் பெற்றவர்களாக இருக்கிறார்கள்.

முதல் நூற்றாண்டு காலத்தில் அப்போஸ்தலர்களை தேவன் வல்லமையாக பயன்படுத்திக்கொண்டுவந்தார். அந்தவேளையில் மாயவித்தைக்காரன் சீமோன் மனந்திரும்பினான். "அப்போஸ்தலர்



தங்கள் கைகளை அவர்கள்மேல் வைத்ததினால் பரிசுத்தஆவி தந்தருளப்படுகிறதைச் சீமோன் கண்டபோது, அவர்களிடத்தில் பணத்தைக் கொண்டுவந்து; நான் எவன்மேல் என் கைகளை வைக்கிறேனோ, அவன் பரிசுத்தஆவியைப் பெறத்தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும் என்றான். பேதுரு அவனை நோக்கி: தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக்கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால் உன் பணம் உன்னோடேகூட நாசமாய்ப் போகக்கடவது" என்றான் (அப்.8:18-20). மாயவித்தைக்காரனாகிய சீமோனுடைய ஆசை தேவனுடைய பார்வையில் செல்லாதவையாக இருந்தது. கர்த்தர் வேண்டிக்கொள்வதற்கும் நினைப்பதற்கும் அதிகமாக நமக்கு நன்மைசெய்கிற தேவனாக இருக்கிறார். ஆனால் இந்த மாயவித்தைக்காரனாகிய சீமோனின் நினைவு சரியானது அல்ல. பணத்தையே மையமாக வைத்து வாழ்ந்துகொண்டு வந்த அவன் பரிசுத்தஆவியையும் பணத்தினாலே சம்பாதித்துக்கொள்ளலாம் என நினைத்தான்.

அநேகர் பணத்தை வைத்துக்கொண்டு ஊழியக்காரர்களை நாடி எதையாவது சாதிக்கலாம் என்று நினைக்கிறார்கள். பிலேயாமைப் போன்ற ஊழியக்காரர்கள் பணத்திற்கு அடிமைப்பட்டு விடுகிறார்கள். பேதுருவைப்போன்ற ஊழியர்கள் அவர்களை கடிந்துகொண்டு மனந்திரும்பும்படியாக எச்சரிக்கிறார்கள். இங்கே பேதுரு உன் பணம் உன்னோடேகூட நாசமாய்ப் போகக்கடவது என்று சொல்லி தேவனிடத்தில் மனந்திரும்பி வேண்டிக்கொள் என்று அனுப்பி விடுகிறதைப்பார்க்கிறோம். "பொருளாசைக்காரன் தன் வீட்டைக் கலைக்கிறான்; பரிதானங்களை வெறுக்கிறவனோ பிழைப்பான்" என நீதி.15:27-ல் படிக்கிறோம். நீங்கள் இவைகளை விரும்புகிறீர்களா? பரிதானம் உங்களை பாதாளத்திற்கு கொண்டு செல்லும். பரிசுத்தமுள்ள கைகள் உங்களை பரலோகம் கொண்டு சேர்க்கும். நீங்கள் எப்படி நடக்கப்போகிறீர்கள்? அநியாயமும் முகதாட்சிணியமும் இல்லாத கர்த்தரைப்போல மாறுங்கள். மேலும் பரிதானம் கர்த்தரிடத்தில் செல்லாது அதைப்போல என்னிடத்திலும் அது செல்லாது என்று சொல்லுங்கள். அப்பொழுது கர்த்தருடைய பிள்ளைகளாயிருப்பீர்கள்.

**கேள்வி நேரம்**

**இருதங்களை சோதித்தரிகிறவர் யார்?**

"வெள்ளியைக் குகையும், பொன்னைப் புடமும் சோதிக்கும்; இருதயங்களைச் சோதிக்கிறவரோ கர்த்தர்" என்று வாசிக்கிறோம் (நீதி.17:3). ஆம், மனிதன் மற்றொரு மனிதனை சில விஷயங்களில் சோதித்து அறிகிறான். ஆனால் இருதயங்களை சோதித்தரிகிறவர் கர்த்தர். அவர் ஒருவருக்கே மனிதனுடைய இருதயங்களில் உள்ள விஷயங்களை அறிந்துகொள்ளமுடியும்.

உங்களுடைய இருதயம் தேவனுடைய பார்வையில் எப்படிப்பட்டதாக இருக்கிறது. வேதாகமத்தின்படியாக நீங்கள் நடப்பீர்கள் என்றால் உங்களுடைய இருதம் தேவனுடைய பார்வையில் செம்மையானதாயிருக்கும். அப்படிப்பட்ட இருதயத்தை அவர் மிகவும் நேசிக்கிறார். அப்படிப்பட்டவர்களோடு கர்த்தர் சதாகாலமும் இருந்து செயல்படுவார். நீங்கள் ஒரு நடமாடும் தேவாலயமாக செயல்பட வேண்டும். இயேசு அவ்விதமாக எங்கும் நன்மைசெய்கிறவராய் சுற்றித்திரிந்தார். நீங்களும் அவ்விதமாக இருக்க உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 19. எசேக்கியா
## Isakkiya

**எ**சேக்கியா யூதாவின் ராஜாவாக இருந்தான். அவனுடைய நாட்களில் ஏசாயா தீர்க்கதரிசியாக இருந்தார். எசேக்கியாவின் நாட்களில் சிலைகளைத் தகர்த்து, விக்கிரகத்தோப்புகளைவெட்டி, மோசே பண்ணியிருந்த வெண்கலச் சர்ப்பத்தை உடைத்துப்போட்டான்; அந்நாட்கள்மட்டும் இஸ்ரவேல்புத்திரர் அதற்குத் தூபங்காட்டி வந்தார்கள்; அதற்கு நிகுஸ்தான் என்று பேரிட்டான். அவன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின்மேல் வைத்த நம்பிக்கையிலே, அவனுக்குப் பின்னும் அவனுக்கு முன்னும் இருந்த யூதாவின் ராஜாக்களிலெல்லாம் அவனைப்போல் ஒருவனும் இருந்ததில்லை" என 2இரா.18:4,5 வசனங்களில் படிக்கிறோம். இப்படிப்பட்ட இந்த ராஜாவுக்கு ஏசாயா தீர்க்கதரிசியின் மூலமாக ஒரு மரணசெய்தி கர்த்தரால் சொல்லி



அனுப்பப்பட்டது. பொதுவாக எல்லோருமே நல்ல செய்திகளையே விரும்புவோம். யாருக்கும் துக்கமான செய்தி ஒன்று வந்ததென்றால் மிகவும் வருத்தமாக இருக்கும். எசேக்கியா ராஜா தேவனுடைய பார்வையில் மிகவும் சிறப்பானவனாக ஆட்சிசெய்தான். ஆனாலும் அவன் மரணத்துக்கு ஏதுவானவியாதி கொண்டிருந்தபோது மரணசெய்தி அனுப்பப்பட்டது. அதுஎன்னவென்றால்; "நீர் உமது வீட்டுக்காரியத்தை ஒழுங்குபடுத்தும், நீர் பிழைக்கமாட்டீர் என்று கர்த்தர் சொல்லுகிறார்" என்றான் (ஏசா.38:1). இச்செய்தி யாருக்கு வந்தாலும் அது மிகவும் கஷ்டமாகத்தான் இருக்கும். மரிக்கும் தருவாயில் இருக்கும் ஒரு நபரைப்பார்த்து பிழைக்கமாட்டீர் என்று சொன்னால், நான் யாருக்கு என்ன செய்தேன். நான் யாருக்கும் எந்த கெடுதலும் செய்ததில்லை பின்பு ஏன் எனக்கு இந்த மரணம் என்று சொல்லி கலங்குவார்கள்.

எசேக்கியா இந்த வார்த்தைகளை கேட்கவே சுவர்ப்புறமாகத் திரும்பிக்கொண்டு கர்த்தரை நோக்கி: "ஆ கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக மன உத்தமமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும் என்று விண்ணப்பம்பண்ணி, எசேக்கியா மிகவும் அழுதான்" (ஏசா.38:3). இஸ்ரவேலின் தேவன் கண்ணீரைக் காண்கிற தேவன். ஆகையால் அவனுக்கு இரக்கம் செய்தார்.

ஏசாயா தீர்க்கதரிசியின் மூலமாக; "உன் தகப்பனாகிய தாவீதின் தேவனாயிருக்கிற கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்; உன் விண்ணபத்தைக் கேட்டேன்; உன் கண்ணீரைக் கண்டேன்; இதோ, உன் நாட்களோடே பதினைந்து வருஷம் கூட்டுவேன். நான் உன்னையும் இந்த நகரத்தையும் அசீரியா ராஜாவின் கைக்குத்தப்புவித்து, இந்த நகரத்துக்கு ஆதரவாயிருப்பேன். இதோ, ஆகாசுடைய சூரியகடியாரத்தில் பாகைக்குப் பாகை இறங்கின சாயையைப் பத்துப்பாகை பின்னிட்டுத் திருப்புவேன் என்றார். தாம் சொன்ன இந்த வார்த்தையின்படி கர்த்தர் செய்வார் இது கர்த்தரால் உனக்கு அடையாளமாயிருக்கும் என்று சொல் என்றார்; அப்படியே கடியாரத்தில் இறங்கியிருந்த சூரியசாயை பத்துப்பாகை திரும்பிற்று" (ஏசா.38:5-8). பொதுவாக ஜனங்கள் நன்றாக இருந்தால் கர்த்தரைத் தேடுவார்கள். ஏதாவது ஒரு பிரச்சனை வந்துவிட்டால் உடனே தேவனை

மறுதலிப்பார்கள் அல்லது பின்மாற்றமாகி போய்விடுவார்கள். இந்த எசேக்கியா ராஜா அந்தவிதமாக செய்யவில்லை. அவன் துக்கச்செய்தி கேட்டு கர்த்தரை நோக்கி ஜெபிக்க ஆரம்பித்தான். தேவன் ஜீவிக்கிற தேவன். ஜெபத்தைக்கேட்கிற தேவன். அவர் நீதிமானின் ஜெபத்தை கேட்டு அதற்கு நியாயம்செய்வார். கர்த்தர் எசேக்கியாவின் விண்ணப்பத்தையும் அவனுடைய கண்ணீரையும் கண்டு அவனுடைய ஜீவிய நாட்களில் பதினைந்து வருடத்தை கூட்டினார். உங்களுடைய வாழ்க்கையிலும் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் வரலாம். நீங்கள் சோர்ந்துபோகாமல் எசேக்கியாவைப்போல கர்த்தரை நோக்கி அழுது உங்களுடைய காரியத்தைத் தெரியப்படுத்துங்கள். எசேக்கியாவுக்கு இரங்கின கர்த்தர் உங்களுக்கும் இரக்கம் செய்வார்.

தேவனுடைய சமுகத்தில் இரக்கத்தைப்பெற்ற எசேக்கியா அப்படியே அந்த சந்தோஷத்தை அநுபவிக்கவில்லை. அதை எல்லோரும் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக அதை எழுதிவைத்தான். பின் சந்ததிகள் கர்த்தரின் கிருபையை அறிந்துகொள்ளவேண்டும் என்றும் அவைகளை எழுதிவைத்தான். அது என்னவென்றால்; "நான் என் பூரண ஆயுசின் வருஷங்களுக்குச் சேராமல் பாதாளத்தின் வாசல்களுக்குட்படுவேன் என்று என் நாட்கள் அறுப்புண்கிறபோது சொன்னேன். கர்த்தரை, நான் இனி உயிரோடிருக்கிறவர்களின் தேசத்திலே தரிசிப்பதில்லை; இனி பூலோகக் குடிகளோடே இருந்து மனுஷரை நான் காண்பதில்லை. என் ஆயுசு மேய்ப்பனுடைய கூடாரத்தைப்போல என்னைவிட்டுப் பெயர்ந்துபோகிறது; நெய்கிறவன் பாவை அறுக்கிறதுபோல என் ஜீவனை அறுக்கக் கொடுக்கிறேன்; என்னைப் பாவிலிருந்து அறுத்துவிடுகிறார்; இன்று இரவுக்குள்ளே என்னை முடிவடையப்பண்ணுவீர். விடியற்காலமட்டும் நான் எண்ணமிட்டுக்கொண்டிருந்தேன்; அவர் சிங்கம்போல என் எலும்புகளையெல்லாம் நொறுக்குவார்; இன்று இரவுக்குள்ளே என்னை முடிவடையப்பண்ணுவீர் என்று சொல்லி, நமுட்டைப்போலும், தகைவிலான் குருவியைப்போலும் கூவினேன், புறாவைப்போல் புலம்பினேன்; என் கண்கள் உயரப் பார்க்கிறதினால் பூத்துப்போயின; கர்த்தாவே, ஒடுங்கிப்போகிறேன்; என் காரியத்தை மேற்போட்டுக்கொள்ளும் என்றேன். நான் என்னசொல்லுவேன்? அவர்



எனக்கு வாக்கு அருளினார்; அந்தப் பிரகாரமே செய்தார்; என் ஆயுசின் வருஷங்களிலெல்லாம் என் ஆத்துமாவின் கசப்பை நினைத்து நடந்துகொள்ளுவேன். ஆண்டவரே, இவைகளினால் மனுஷர் பிழைக்கிறார்கள்; இவைகளெல்லாம் என் உயிர்க்கு உயிராயிருக்கிறது; என்னைச் சொஸ்தப்படவும் பிழைக்கவும் பண்ணினீர். இதோ, சமாதானத்துக்குப் பதிலாக மகா கசப்பு வந்திருந்தது, தேவரீரோ என் ஆத்துமாவை நேசித்து அழிவின் குழிக்கு விலக்கினீர்; என் பாவங்களையெல்லாம் உமது முதுகுக்குப் பின்னாக எறிந்துவிட்டீர். பாதாளம் உம்மைத் துதியாது, மரணம் உம்மைப்போற்றாது; குழியில் இறங்குகிறவர்கள் உம்முடைய சத்தியத்தை தியானிப்பதில்லை. நான் இன்று செய்கிறதுபோல, உயிரோடிருக்கிறவன், உயிரோடிருக்கிறவனே, உம்மைத் துதிப்பான், தகப்பன் பிள்ளைகளுக்கு உமது சத்தியத்தை தெரிவிப்பான். கர்த்தர் என்னை இரட்சிக்கவந்தார்; ஆகையால் எங்கள் ஜீவநாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்திலே என் கீதவாத்தியங்களை வாசித்துப் பாடுவோம் என்று எழுதிவைத்தான்" (ஏசா.38:10-20).

வாழ்க்கையில் சோர்ந்துபோய் இருக்கிறவர்களுக்கு எசேக்கியா ராஜாவின் வார்த்தைகள் மருந்தாக அமையும் என்று நான் நம்புகிறேன். இத்தோடு கதை முடிந்துவிட்டது என்று நாம் நினைத்துவிடக்கூடாது. கர்த்தர் ஒருபோதும் கைவிடாத தேவன். அவர் இரக்கம் செய்கிற கர்த்தர். எசேக்கியா ராஜாவின் பாவங்களை தமது முதுகுக்குப்பின்னாக எறிந்துவிட்டார். மனந்திரும்புகிற எப்பேர்பட்ட பாவியாக இருந்தாலும் அவனை மன்னித்து ஏற்றுக்கொள்ளுகிறார். இச்சிறியரில் ஒருவராகிலும் கெட்டுப்போவத பரலோக பிதாவின் சித்தமல்ல என்று நம்முடைய ஆண்டவரும் சொல்லியிருக்கிறார். ஆகையால் அவர் மனந்திரும்பவேண்டுமென எதிர்பார்க்கிறார்.

எசேக்கியா ராஜா நம்பிக்கையற்ற சூழ்நிலையில் இருந்தார். இன்று இரவுக்குள்ளே என்னை முடிவடையப்பண்ணுவீர் என்று சொல்லி, நமுட்டைபோலும், தகைவிலன் குருவியைப்போலும் கூவிக் கொண்டிருந்தார். அப்படிப்பட்ட ராஜாவுக்கு கர்த்தர் கிருபையாய் இரங்கி பதினைந்து வருடங்களை அவனுடைய நாட்களில் கூட்டிவழங்கினார். இதற்கு நன்றி கடனாக எசேக்கியா ராஜா செய்த காரியம் என்னவென்றால்; கர்த்தர் என்னை இரட்சிக்கவந்தார்; ஆகையால்

எங்கள் ஜீவநாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்திலே என் கீதவாத்தியங்களை வாசித்துப்பாடுவோம் என்று சொன்னான். நம்மை எவ்வளவோ வியாதியிலிருந்தும், வருத்தத்திலிருந்தும் எசேக்கியாவைப்போல கர்த்தர் இரட்சித்திருக்கிறார். நாம் எடுத்த தீர்மானம் என்ன? இவனைப்போல ஜீவநாளெல்லாம் கர்த்தருடைய சமுகத்தை நாடுகிறோமா? என்பதை எண்ணிப்பாருங்கள். எவ்வளவோ நன்மைகளை நாம் பெற்று அத்தனை நன்மைகளையும் மறந்தவர்களாக வாழ்ந்துகொண்டிருக்கிறோம். அன்பானவர்களே, நாம் சாட்சியுள்ள மக்களாக கர்த்தரை துதித்துப்பாடுகிறவர்களா இருக்கவேண்டும். புதிய ஏற்பாட்டில் தேவாலயத்திற்கு முன்பாக பிறந்ததுமுதல் சப்பானியாக இருந்து பிச்சை கேட்டுக்கொண்டிருந்த ஒருவன் பேதுரு, யோவானால் தூக்கிவிப்பட்டபோது அவன் குதித்து எழுந்து கர்த்தரை துதித்துக்கொண்டே தேவாலயத்திற்கு சென்றான் என படிக்கிறோம் (அப். 3:8).

தேவன் அவனுக்கு இரங்கி பேதுருவினால் அவனை சுகமாக்கினார். இந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்ட அவன் முதலாவது வீட்டிற்கு போகவில்லை, தன்னுடைய உறவினர்களிடம் செல்லவில்லை, அவன் தன் தேவனுக்கு நன்றி சொல்லும்படியாக தேவாலயத்திற்கு அவர்களோடு சென்றான். அதுவும் தேவனை துதித்துக்கொண்டு சென்றான் என்றுபடிக்கிறோம். அநேகருக்கு துதிப்பது என்றாலே மிகவும் சோர்வாக இருக்கிறது. பாடல் அதிகமாக பாடிவிட்டால் சபையில் முனுமுனுக்க ஆரம்பித்துவிடுவார்கள். தாவீதுடைய வெற்றியின் இரகசியம் அவனுடைய துதிப்பாடல் என்றே சொல்லுவேன். துதிக்கும்போது கர்த்தர் வெற்றியைக் கட்டளையிடுவார். கொஞ்ச காலம் தேவனை தொழுதுவிட்டு பின்பு அவரை அப்படியே மறந்துவிடுவது என்பதல்ல. ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தரை துதிக்கிறவர்களாக இருக்கவேண்டும். எசேக்கியா தன் மரணம் வரை கர்த்தரை பற்றிக்கொண்டு துதிக்கிறவனாயிருந்தான்.

"அத்திப்பழத்து அடையைக் கொண்டுவந்து, பிளவையின்மேல் பற்றுப்போடுங்கள்; அப்பொழுது பிழைப்பார் என்று ஏசாயா சொல்லியிருந்தான்" (ஏசா. 38:21). அந்தப்படியாக பிளவையின்மேல் ஏசாயா தீர்க்கதரிசியின் வார்த்தையின்படியே பற்றுப்போட்டார்கள்



எசேக்கியா ராஜா பிழைத்தான். கர்த்தருடைய தீர்க்கதரிசிகளை மதித்து வந்தான் எசேக்கியா. அவர்களுடைய வார்த்தையை அவன் புறம்பாக்கிப்போடவில்லை. அன்பானவர்களே, கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லும் தேவனுடைய ஊழியர்களை நாம் நேசிக்கும்போது அவர்களாலே நமக்கு நன்மைகள் கிடைக்கும். அவர்கள் தேவனால் ஏற்படுத்தபட்ட அவருடைய வேலையாட்களாயிருக்கிறார்கள். கர்த்தர் அப்படிப்பட்டவர்களோடு அவருடைய வார்த்தையின்மூலமாக பேசிக்கொண்டுவந்தார். இக்கடைசி நாட்களில் தம்முடைய குமாரன் மூலமாக திருவுளம்பற்றியிருக்கிறார்.

ஆகையால் கிறிஸ்துவின் வார்த்தைக்கு நாம் செவி கொடுத்து அவரையும், அவருடைய வசனங்களையும் அறியும்படியாக உங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுங்கள். அவர்முலமாக இரட்சிக்கப்படும் வழி புதியஏற்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ளது. அவ்வழியாக இரட்சிக்கப்படவும் அவ்வழியாக தேவனை தொழுகொள்ளவும், அவ்வழியாக உங்களுடைய ஜீவியத்தை மாற்றிக்கொள்ளவும் கர்த்தருடைய வசனத்திற்கு செவிகொடுங்கள்.

## கேள்வி நேரம்

**கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயம் எங்கே ஸ்தாபிக்கப் பட்டது?**

ஏசாயா தீர்க்கதரிசி சொல்லியபடி: "கடைசிநாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள். திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து; நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப்போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்" என்ற ஏசா. 2:2,3 வசனங்களின்படி கர்த்தருடைய சபையானது எருசலேமிலே இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப்பின்பு மூவாயிரம் அங்கத்தினர் களுடன் ஆரம்பிக்கப்பட்டது. அங்கிருந்து உலகமெங்கிலும் கர்த்தரின் வசனம் வெளிப்பட்டது. எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள் என்ற

வசனத்தின்படி உலகத்தில் உள்ள அனைத்து தரப்பினரும் இயேசுவின் சுவிசேஷத்தினால் பாவமற கழுவப்பட்டு பரிசுத்தவான்களாக தேவனுடைய ராஜ்யமாகிய சபையில் சேர்க்கப்படுகிறார்கள். இயேசுவை தங்களுடைய மேய்ப்பராகவும், இரட்சகராகவும் ஆண்டவராவும் ஏற்றுக்கொண்டு அவர்கள் இரட்சிக்கப்படுகிறார்கள்.

எங்கும் பிதாவை தொழுதுகொள்ளும் காலம் வரும் என்ற வசனத்தின்படி ஆங்காங்கே கர்த்தரை தங்கள் முழுஇருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும் தொழுதுகொண்டு வருகிறார்கள். நீங்களும் இவ்விதமாக தொழுதுகொண்டு இரட்சிக்கப்படுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 20. விழித்திரு
## Watch

**தூ**ங்குகிறவர்களைப் பார்த்து விழித்திரு எழுந்திரு என்றால் அவர்களுக்கு அது கடினமாகத்தான் தோன்றும். சரியான நேரத்திலே வந்து இப்படி தொல்லை கொடுக்கிறார்களே என்று சலித்துக்கொள்ளுவார்கள். நம்முடைய வாழ்க்கையில் எப்பொழுதும் விழிப்புணர்வு உள்ளவர்களாக இருக்கவேண்டும். விழிப்பாக இல்லாவிட்டால் அநேக ஆசீர்வாதங்களை நாம் இழக்கநேரிடும். இயேசுவானவர் சொல்லும்போது; "நான் உங்களுக்குச் சொல்லுகிறதை எல்லாருக்கும் சொல்லுகிறேன், விழித்திருங்கள் என்றார்" (மாற்கு 13:37). இதை அப்போஸ்தலர்களுக்கு மட்டுமல்ல எல்லாருக்கும் சொல்லுகிறார். அவரைப்பின்பற்றுகிற யாவரும் விழித்திருக்கும்படியாக சொல்லுகிறார்.

நம் ஆண்டவர் இயேசு எப்பொழுதும் விழித்திருந்து ஜெபம் பண்ணினார் எனக்காண்கிறோம். ஆகையால் "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்" (மத்.26:41). ஆவி ஆவிக்குரிய காரியங்களை நினைக்கிறது. மாம்சமோ மாம்சத்துக்குரிய காரியங்களை நினைக்கிறது. ஒன்றுக்கொன்று விரோதமாக இருக்கிறது. இதில் ஆவி உற்சாகமுள்ளதாக இருக்கிறது. இந்த ஆவியில் நீங்கள் சோர்ந்துபோகாது விழித்திருந்து ஜெபிக்க



வேண்டும். பாருங்கள் பொதுவாக ஜெபம் என்றவுடன் அநேகருக்கு தூக்கம் வந்துவிடும். அதுவரை உற்சாகமாக இருப்பார்கள். ஆனால் ஜெபம்பண்ணுவோம் என்றால் தூக்கம் வருகிறது என்பார்கள். இவைகளை மேற்கொண்டு நாம் விழித்திருந்து ஜெபிக்க போதிக்கப்படுகிறோம். கர்த்தருடைய வருகை மிக சமீபமாக இருக்கிறபடியால் நாம் விழித்திருந்து ஜெபிக்கவேண்டும். "அக்காலத்தை நீங்கள் அறியாதபடியால் எச்சரிக்கையாயிருந்து விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள் என்கிறார்" (மாற்.13:33).

கர்த்தருடைய வருகை சமீபமாய்யிருக்கிறது என்று பல வருடங்களாக சொல்லிக்கொண்டுதான் வருகிறார்கள். இன்னும் அவர் வரவில்லை 2000-மாவது ஆண்டில் வருவதாக சொன்னார்கள் வரவில்லை. 2010-ல் அவர் வருகிறார் என்றார்கள் வரவில்லை என்று நாம் மெத்தனமாக இருந்துவிடக்கூடாது. அவர் வரும் வேளையை ஒருவரும் அறியார்கள். தேவதூதர்களும் அறியார்கள் எனக்காண்கிறோம். ஆனால் அவர் சீக்கிரமாய் வருகிறார் என்ற செய்தியை நாம் வேதத்தில் காண்கிறோம். ஆகையால நாம் எச்சரிக்கையாயிருந்து ஆவியில் விழித்திருந்து ஜெபம்பண்ண வேண்டும்.

"உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம்பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டதே" (எபி.13:17). கர்த்தருடைய ஊழியர்கள் விழித்திருந்து மந்தையை காக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் உங்களுடைய ஆத்துமாக்களுக்கு உத்தரவாதம்பண்ணுகிறவர்களாய் இருக்கிறார்கள்.

ஆகையால் அப்படிப்பட்டவர்களை நீங்கள் மதித்து அவர்கள் சந்தோஷத்தோடே கர்த்தருடைய ஊழித்தைச் செய்யும்படி அவர்களுக்கு கீழ்ப்படிந்து இருக்கும்படியாக போதிக்கப்படுகிறோம். ஒருவேளை அவர்களைப்பார்த்து முறுமுறுத்துக்கொண்டோ அல்லது அவர்களுக்கு விரோதமாகவோ செயல்படுவோமானால் நாம் மோசேக்கு விரோதமாக

முறுமுறுத்த மக்களாகிய; கோராகு, தாத்தான் கூட்டத்தாரை நினைத்துப்பார்க்கவேண்டும். அவர்களை பூமி விழுங்கிப்போட்டது. தேவனால் நியமிக்கப்பட்ட ஊழியர்களை மதித்து அவர்களுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவேண்டும். அவர்கள் சந்தோஷத்தோடே ஒவ்வொருநாளும் ஊழித்தைச் செய்யும்படிய அவர்களை ஊக்கப்படுத்தவேண்டும். அவர்கள் ஒருவேளை துக்கத்தோடே அந்த ஊழியத்தை செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாய் இருக்காது.

"ஏறக்குறைய எண்பத்துநாலு வயதுள்ள (அன்னாள் என்ற) அந்த விதவை தேவாலயத்தை விட்டு நீங்காமல், இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம்பண்ணி, ஆராதனை செய்து கொண்டிருந்தாள்" என லூக்.2:37-ல் படிக்கிறோம். இவள் தன்னுடைய விதவையின் காரியத்தை நினைத்து, நினைத்து வேதனைப்பட்டிருப்பாளேயானால்; இவள் இந்த அளவு தேவாலயத்தை விட்டு நீங்காமல் ஜெபித்திருக்க முடியாது. தன் தேவனை சந்திக்க வேண்டும். பூமியில் உள்ளளவும் தேவனுடைய திருசித்தத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற விடாமுயற்சியில் விழிந்திருந்து ஜெபிக்கிற ஒரு மகளாக இருந்துவந்தாள். 60 வயதைக் கடந்துவிட்டாலே வயதாகிவிட்டது என்னால் எங்கும் வரமுடியாது என்று சொல்லிவிடுவார்கள். ஆனால் 84 வயதிலும் உறுதியுடனிருந்த இந்த அன்னாளை நாம் வாசிக்கும்போது நாமும் சோர்ந்துபோகாமல் ஜெபிக்க கற்றுக்கொள்ளவேண்டும் என உற்சாகப்படுத்தப்படுகிறோம்.

**இரண்டாவது விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்.** ஏன் விழித்திருந்த ஜெபம்பண்ணுங்கள் என வேதம் சொல்லுகிறது என்றால்; "மனுஷர் நித்திரைபண்ணுகையில் அவனுடைய சத்துரு வந்து, கோதுமைக்குள் களைகளை விதைத்துவிட்டுப் போனான்" ஆகையால் விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள் என்றார் (மத்.13:25). அநேகருடைய வாழ்க்கையில் களைகள் காணப்படுவதற்கு காரணம் இவைகள்தான். சத்துரு அந்த வேலையைச் செய்கிறான். எனவே நாம் விழித்திருக்க வேண்டியது அவசியம். "ஒரு மனுஷன் தன் வீட்டைவிட்டு, புறத்தேசத்துக்குப் பிரயாணம்போக எத்தனிக்கும்போது, தன் ஊழியக்காரருக்கு அதிகாரங்கொடுத்து, அவனவனுக்குத் தன் தன் வேலையையும் நியமித்து, விழித்திருக்கும்படிக்குக் காவல்காக்கிறவனுக்குக் கற்பிப்பான்" என மாற்.13:34-ங்கில்



வாசிக்கிறோம். ஏனெனில் எஜமான் இல்லாநேரத்தில் திருடர்கள் கண்ணமிட்டு திருடுவார்கள். ஆகையால் வேலைக்காரர்களை பார்த்து விழித்திருக்கும்படியாக அவர்களை எச்சரிப்பான். நாமும் கர்த்தருடைய வார்த்தையினாலே எச்சரிக்கப்படுகிறோம். நாம் விழித்திருந்து ஜெபிக்கவேண்டும். நாம் அயர்ந்து தூங்கும்போது சத்துரு அவிசுவாச களைகளை விதைப்பான். அவைகள் நமக்குள்ளாக வளரும்போது நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தை அது அழிவுக்கு நேரே கொண்டுசெல்லும். ஆதியிலே தேவனாகிய கர்த்தர் ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தை உண்டாக்கி அதில் ஆதிமனிதனைக் கொண்டுபோய் வைத்து, அதை அவன் பண்படுத்தவும் காக்கவும் செய்தார்.

இங்கே முதலாவது தன் வேலையை ஆரம்பித்தான் சத்துரு; களைகளை விதைக்கும்படியாக அவர்களிடம் சென்று விலக்கப்பட்ட அந்த தோட்டத்தில் உள்ள கனியை பறித்து புசிக்கும்படியாக ஆலோசனை கொடுத்தான். இவனுடைய வார்த்தைக்கு செவிகொடுத்த ஆதாமும் ஏவாளும் பாவத்தின் கீழானார்கள். இன்றுவரை களைகளை சத்துரு தேவனுடைய ஜனங்கள் மத்தியில் விதைத்துக்கொண்டிருக்கிறான். ஆகையால் வேதம் திரும்பதிரும்ப விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள் என நம்மை எச்சரித்துக்கொண்டேயிருக்கிறது.

நேகேமியாவின் நாட்களில் சத்துருவின் வேலைகளை அறிந்த அவர்கள்; "நாங்கள் எங்கள் தேவனை நோக்கி ஜெபம்பண்ணி, அவர்கள் நிமித்தம் இரவும்பகலும் ஜாமங்காக்கிறவர்களை வைத்தோம்" என்றார்கள் (நெகே.4:9). நாட்டை பாதுகாக்க எல்லைப்படைகளை ஒவ்வொரு நாடும் குவித்து வருகிறது. அவர்கள் இரவு பகலாக நாட்டை காத்து வருகிறார்கள். அதைப்போல ஒவ்வொரு சபையும் மூப்பர்களைக்கொண்டும் உதவிக்காரர்களைக் கெண்டும், பிரசங்கிமார்களைக் கொண்டும் பல ஊழியர்களைக் கொண்டும் காக்கப்படுகிறது.

அவரவர் அவரவருடைய வேலையில் கவனமாக இருந்து விழித்திருந்து காக்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள். இதில் ஒருவர் தவறும்பட்சத்தில் சத்துரு அவனுடைய வேலையை சுலபமாக முடித்திடுவான். ஒவ்வொருவரும் ஜாமங்காக்கிறவர்களைப்போல எப்பொழுது விடியும் என்று காத்திருப்பவர்களைப்போல காக்கவேண்டும்.

**மூன்றாவது தூங்காதபடி விழித்திருக்கவேண்டும்.** தூக்கம் ஒரு மனிதனுக்கு மிகவும் அவசியம். அதேவேளையில் விழித்திருக்கவேண்டிய நேரத்தில் தூங்கிக்கொண்டிருந்தால் அநேக நன்மைகளை இழக்கநேரிடும். ஒரு வீட்டெஜமானுடைய வரும் வேளையை வேலைக்காரன் அறியாதிருக்கிறபடியால் அவன் மிகவும் ஆயத்தமாக இருக்கவேண்டுமல்லவா; "நீங்கள் நினையாதவேளையில் அவன் வந்து, உங்களைத் தூங்குகிறவர்களாகக் கண்டுபிடியாதபடிக்கு விழித்திருங்கள்" என மாற்.13;36 படிக்கிறோம்.

ஒருவேளை அவன் தூக்கிங்கொண்டிருந்தால் என்னவாகும் அவனுடைய வேலைபோகும். வீட்டில் உள்ள பொருட்களை திருடர்களை எடுத்துக்கொண்டுபோய் விடுவார்கள். வேலைக்காரன் தன்னுடைய எஜமானனுக்கு கணக்கு கொடுக்கவேண்டியவனாவான். ஒரு முறை ஆண்டவர் தம்முடைய சீஷர்களோடு ஜெபிக்கும்படியாக சென்றபோது; அவர்களை ஜெபிக்கும்படியாக சொல்லிவிட்டு சற்றுதூரம் சென்று அவர் பிதாவைநோக்கி ஜெபித்துக்கொண்டிருந்து பின்பு தம்முடைய சீஷர்களிடம் வந்தார். அவர்களோ அயர்ந்த நித்திரை செய்து கொண்டிருந்தார்கள். ஒரு மணிநேரமாவது என்னோடே கூட விழித்திருக்கக்கூடாதா என்றார். மீண்டும் சென்று விட்டு வரும்போது மீண்டும் அவர்கள் தூங்கிக்கொண்டிருந்தார்கள். "அப்பொழுது, அவர்; என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது; நீங்கள் இங்கே தங்கி, என்னோடேகூட விழித்திருங்கள் என்றார்" (மத்.26:38).

இந்த வசனத்தை சற்று கவனியுங்க என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது என்றார். ஆம் அன்பானவர்களே, இயேசுவின் கடைசி நேரம் அது அவர் மிகவும் வியாகுலப்பட்டார். உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற வேளை நெருங்கிக்கொண்டிருக்கும்போது அவர் அந்த பாடுகளை நினைத்து மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டார். ஆகையால் தம்முடைய சீஷர்களை பார்த்து விழித்திருந்து ஜெபியுங்கள் என்றார். நமக்கு மிகவும் நெருக்கமான ஒருவர் மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் இருக்கும்போது நாம் நித்திரை செய்துகொண்டிருப்போமா? நமக்கு நித்திரை வராது அல்லவா, அந்த நெருக்கமானவர்களோடு அவர்கள்



படும் கஷ்டத்தில் நாமும் பங்குகொள்ளுவோமல்லவா? அந்தப்படியாக தம்மோடு விழித்திருந்து ஜெபிக்கும்படியாக கேட்டுக்கொண்டார்.

மத்.25:5 வசனத்தில் பத்துகன்னிகளைப் பற்றிப்படிக்கிறோம். "மணவாளன் வரத் தாமதித்தபோது, அவர்கள் எல்லாரும் நித்திரைமயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள்". இந்த பத்துப்பேரும் மணவாளனுக்கு எதிர்கொண்டுபோக ஆயத்தமாக வந்தவர்கள்தான். ஆனால் ஐந்துபேர் இதில் புத்தியுள்ளவர்களாக இருந்தார்கள் மற்ற ஐந்துபேர் புத்தியற்றவர்களாக இருந்தார்கள். அவர்கள் எண்ணையை எடுத்துக்கொண்டுபோகவில்லை. மணவாளன் வருகிறார் என்ற சத்தம்கேட்டவுடன் புத்தியுள்ளவர்கள் தங்கள் தீவிட்டிகளை ஆயத்தப்படுத்தினார்கள். புத்தியில்லாதவர்கள் எண்ணையை கேட்கும்போது அவர்களை கடைகளுக்கு சென்று வாங்கும்படி ஆலோசனை சொன்னார்கள்.

மணவாளனோ ஐந்து கன்னிகைகளோடே அங்கே பிரவேசித்தார். இங்கே தூங்கினவர்கள் தங்களுடைய பணியை சரியாக செய்யமுடியாது போனார்கள். மேலும் ஆயத்தமில்லாதவர்களாவும் இருந்திருக்கிறார்கள் ஆகையால் அவர்கள் மணவாளனோடு சேர்ந்து போகமுடியவில்லை. நம்முடைய வாழ்க்கையிலும் நாம் விழித்திருந்து ஜெபிக்காவிட்டால் அநேக ஆசீர்வாதங்களை இழந்துவிடுவோம். எனவே விழித்திருந்து ஆயத்தமாயிருங்கள்.

### கேள்வி நேரம்

**கர்த்தருடைய சமுகத்திலே காத்திருக்கிற மனுஷன் எப்படிப் பட்டவன்?**

"என் வாசற்படியில் நித்தம் விழித்திருந்து, என் கதவு நிலையருகே காத்திருந்து, எனக்குச் செவிகொடுக்கிற மனுஷன் பாக்கியவான்" என நீதி.8:34-ல் படிக்கிறோம். ஆம், ஆண்டவருடைய சமுகத்தில் நித்தம் விழித்திருந்து காத்திருக்கவேண்டும். இன்று என்னை முற்றிலும் வழிநடத்தும் என்று முழுவதுமாக ஒப்புக்கொடுத்து ஜீவிக்கும்போது, கர்த்தர் அற்புதவிதமாக ஒவ்வொரு நாளும் வழிநடத்துவார்.

அவருடைய ஆலோசனைக்கு செவிகொடுக்கவேண்டும். வேதம் சொல்லுகிறபடியான வாழ்க்கையை வாழ்ந்து காட்டவேண்டும்.

கர்த்தருடைய வார்த்தைக்கு செவி கொடுத்தவர்கள் கணக்கில்லாமல் ஆசீர்வதிக்கப்பட்டனர் என்று நாம் வேதத்தில் படிக்கிறோம். அவ்விதமாக நீங்களும் ஆசீர்வாதிக்கப்பட உங்களை கர்த்தருக்கு ஒப்புக்கொடுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 21. நற்சீர் பொருந்துங்கள்

## Become Complete

**உ**லகத்தில் உள்ள எல்லோருமே நல்ல சீரும் சிறப்புடன் வாழவேண்டுமென விரும்புவார்கள். எவரும் குறைவான வாழ்க்கையை விரும்புவதில்லை. ஒருவர் உலக ஆசீர்வாதங்களைப் பெற்றவுடன் சீரும் சிறப்புமாக வாழ்க்கின்றார் என்று அர்த்தமாகிவிடாது. அவர் ஆவிக்குரிய விஷயத்தில் எப்படி வாழ்கிறார் என்பது மிகவும் முக்கியமானது. அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்திய சபையாருக்கு எழுதிய கடிதத்தில் "நாங்கள் பலவீனரும் நீங்கள் பலமுள்ளவர் களுமாயிருக்கையில், சந்தோஷப்படுகிறோம்; நீங்கள் நற்சீர்பொருந்தும் படிக்கு விண்ணப்பம்பண்ணுகிறோம்" என்று எழுதுகிறார் (2கொரி.13:9). கொரிந்திய சபையார் நற்சீர்பொருந்த வேண்டும் என்பதுவே பவுலுடைய வேண்டுதலாயிருந்தது. உலக சம்பத்துக்கள் ஒரு மனிதனுடைய வாழ்வில் நிம்மதியைக் கொடுக்காது. அது அவனை இரட்சிக்கவும் முடியாது.

கிறிஸ்துவுக்குள்ளான சகல ஆசீர்வாதத்தையும் அவன் பெற்றுக்கொள்ளும்போது நற்சீர்பெறமுடியும். மேலும் பவுல் பிலிப்பிய சபையாருக்கு எழுதிய கடிதத்தில்; "சுவிசேஷம் உங்களுக்கு அறிவிக்கப்பட்ட நாள்முதல் இதுவரைக்கும் நீங்கள் அதற்கு உடன்பட்டவர்களானபடியால், நான் பண்ணுகிற ஒவ்வொரு விண்ணப்பத்திலும் உங்கள் அனைவருக்காகவும் எப்போதும் சந்தோஷத்தோடே விண்ணப்பண்ணி, உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி, நான் உங்களை நினைக்கிற பொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்" என்றார் (பிலி.1:3-6). நற்சீர்பொருந்தினவர்கள் சுவிசேஷத்திற்கு பங்காளிகள். அப்படிப்பட்டவர்கள் மூலமாக கிறிஸ்துவின் சுவிசேஷப்பணி



செயல்படுகிறது. நற்சீர்பொருந்தினவர்கள் கிறிஸ்துவின் வாசனையை வெளிப்படுத்துகிறவர்களாயிருக்கிறார்கள். நற்கிரியைகளை செய்யும்படியாக தெரிந்துகொள்ளப்பட்டவர்களாயுமிருக்கிறார்கள். இவர்களிலே கிறிஸ்துவுக்கேற்ற சிந்தையை நாம் காணமுடியும். இப்படிப்பட்ட நிறைவை கொலோசெய கிறிஸ்தவர்களிடம் அப்போஸ்தலனாகிய பவுல் கண்டார். ஆகையால் அவர்களுக்கு எழுதும்போது; "சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர் களாயிருக்கிறீர்கள்" என்கிறார் (கொலோ.2:10).

இந்த பரிபூரணம் என்ற வார்த்தை நற்சீர்பொருந்தியவர்களுக்கே பொருந்தும். அவர்களே பரிபூரணம் அடைந்தவர்கள். இவர்களிலே வேற்றுமையான உபதேசங்களை காணமுடியாது, பிரிவினைகளை காணமுடியாது, ஒரே சிந்தையுடையவர்களாயும், தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிறவர்களாயும் இருப்பார்கள். இப்படிப்பட்ட சபையாரை வேதாகமம் புதிய ஏற்பாட்டில் அடையாளம் காட்டுகிறது. அவர்களே முதல் நூற்றாண்டு சபையார். அவர்கள் கிறிஸ்துவின் நாமத்தை மகிமைப்படுத்துகிறவர்களாயிருந்தனர். அவர்கள் கிறிஸ்துவின் சபையார் என அழைக்கப்பட்டனர். எருசலேமிலே இந்த சபையானது முதல் முதல் ஆரம்பிக்கப்பட்டது. ஆராதனையில் ஐந்து காரியங்களை ஒழுங்கும் கிரமுமாய் செய்து வந்தார்கள். சபை வளர்ச்சியடைந்த நாட்களில் முப்பர்கள் நியமிக்கப்பட்டார்கள். இயேசுவின் கடைசி கட்டளையை தங்கள் தோல்களில் ஏற்றுக்கொண்டு உலகமெங்கும் சுவிசேஷம் அறிவிக்கும்பணியில் ஈடுபட்டனர். இவ்விதமான சிந்தையுள்ள ஒவ்வொருவரும் பூரணப்பட்டவர்களாயும், நற்சீர்பொருந்தினவர்களாயும் இருக்கிறார்கள்.

இப்படிப்பட்டவர்களுக்கு பவுல் கொடுக்கும் மற்றுமொரு ஆலோசனை என்னவென்றால்; "நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர் களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொண்டு, நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக" என்கிறார் (கொலோ.2:6,7). அநேக சபைகள் ஏற்றுக்கொண்ட விசுவாசத்தை

நாளடைவில் விட்டுவிட்டு வேற்றுமையான உபதேசங்களைக் கைக்கொள்ளவும், போதிக்கவும் ஆரம்பித்துவிடுகின்றனர். தங்களுக்கு ஏற்றபோதகர்களை சபையார் தெரிந்துகொள்ளவும், தங்களுடைய விருப்பத்தின்படி நடக்கவும் முற்படுகின்றனர். பவுல் சொல்வதைப்போல அவருக்குள் வேர்கொள்ளவேண்டும். இயேசு நானே மெய்யான திராட்சச்செடி என்கிறார். ஆனபடியால் அவருக்குள் நாம் வேர்கொள்ளவேண்டும். அவரில் நிலைத்திராத கொடி கனிகொடுக்கவும் முடியாது, அது நிலைத்திருக்கவும் முடியாது. அதைப்போல நம்முடைய அஸ்திபாரம் கிறிஸ்துவின் மீது கட்டப்பட்டதாக இருக்கவேண்டும். பிதாவாகிய தேவன் மூலைக்கல்லாக இயேசுவை வைத்துள்ளார். இவர்மீது கட்டப்படும் கட்டிடம் நிலைத்திருக்கும். மனிதர்கள் மீது நம்பிக்கை வைத்து கட்டப்படும் கட்டிடங்கள் அவர்களுக்கு பின்பு அவைகள் அழிந்துபோம்.

ஆண்டவர் இயேசுவோ அழிவில்லாதவர். ஆகையால் உங்களுடைய அஸ்திபாரத்தை கிறிஸ்துவின் மீது வைத்து உங்களுடைய ஆவிக்குரிய சபையை உருவாக்குங்கள். மேலும், அவருக்குள் நடந்துகொண்டு, நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுங்கள். ஸ்தோத்திரத்தோடே அதில் பெருகுங்கள் என்றால்; எப்பொழுதும் ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம் என்று சொல்லிக்கொண்டிருப்பதல்ல. அநேகர் இதை தவறாக புரிந்துகொண்டு செயல்படுகின்றனர். ஆண்டவருக்கு அவர் செய்த நன்மைகளுக்கு நாம் ஸ்தோத்திரம் செலுத்தவேண்டியவர்களாயிருக்கிறோம்.

ஒரு மனிதன் உங்களுக்கு ஒரு நன்மையை செய்துவிட்டால் அவனுக்கு நன்றி சொல்லுகிறதைப்போல ஸ்தோத்திரம் செலுத்துங்கள். அந்த மனிதனைப் பார்க்கும் பொழுதெல்லாம் நன்றி நன்றி என்று சொல்வீர்களானால் அடுத்த முறை உங்களைப் பார்க்கும்போது அவர் ஓடிவிடுவார். நாம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் வளரும்போது நம்மை நற்சீர்பொருந்தினவர்களாக்கும்.

நற்சீர்பொருந்தினவர்கள் கர்த்தருக்குள் நிலைத்திப்பார்கள். பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதிய கடிதத்தில்; "நீ கற்று நிச்சயித்துக் கொண்டவைகளில் நிலைத்திரு; அவைகளை இன்னாரிடத்தில் கற்றாய்



என்று நீ அறிந்திருக்கிறதுமல்லாமல்..." என்று எழுதுகிறார் (2தீமோ.3:14). அநேகர் கற்றுக்கொள்ளுகிறார்கள். அவைகளில் நிலைத்திருக்க தவறிவிடுகிறார்கள். இது எப்படியிருக்கிறது என்றால்; வீடுகட்டி அதில் குடியில்லாமற்போகும் ஜனங்களைப்போல இருக்கிறார்கள். வேதாகமம் நிலையான ராஜ்யத்திற்கு நேரே நம்மை வழிநடத்திக்கொண்டு செல்கின்றது. இதை நாம் விசுவாசத்தினாலே பெற்றுக்கொள்ளுகிறோம். நித்திய நித்தியமாக அவரோடு வாழ்வோம் என்ற நம்பிக்கையோடே செயல்படுகிறோம்.

ஆகையால் ஒவ்வொரு கிறிஸ்தவனும் கற்று நிச்சயித்துக் கொண்டவைகளில் நிலைத்திருந்து, மற்றவர்களுக்கு சாட்சியுள்ள மகனாக, மகளாக வாழவேண்டும். நாம் ஒரு காரித்தை சரியாக செய்யாமல் மற்றவர்களைப் பார்த்து அதைசெய்யும்படியாக அவர்களை உற்சாகப்படுத்துவது கூடாதகாரியம். அதை அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இயேசுவானவர் நமக்கு மாதிரியை வைத்துப் போயிருக்கிறார். அதில் நிலைத்திருக்கும்போது நாம் பூரணப்பட்டவர் களாக இருப்போம்.

"இயேசுகிறிஸ்துவைக்கொண்டு தமக்குமுன்பாகப் பிரியமானதை உங்களில் நடப்பித்து, நீங்கள் தம்முடைய சித்தத்தின்படியேசெய்ய உங்களைச் சகலவித நற்கிரியையிலும் சீர்பெருந்தினவர்களாக்குவாராக; அவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென்." (எபி.13:21). நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துஇயேசுவுக்குள்ளாக மறுபடியும் சிருஷ்டிக்கப்படுகிறோம். எதற்கு என்றால் தேவனுக்கு முன்பாக அவருடைய சித்தத்தின்படியே நற்கிரியைகளை செய்யும் படியாக சிருஷ்டிக்கப்படுகிறோம். இயேசுவானவர் எங்கும் எப்பொழுதும் நன்மைசெய்கிறவராய் சுற்றித்திரிந்ததைப்போல நாமும் நற்கிரியைகளை கிறிஸ்துஇயேசுவுக்குள் செய்யவேண்டியவர்களாயிருக்கிறோம். ஆகையால், "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது" வேறே சிந்தையாயிருந்தால் அதை தேவன் உங்களுக்கு உணர்த்துவார்.

நீங்கள் கிறிஸ்துவில் நிலைத்திருப்பீர்கள் என்றால் அவருடைய மரணத்தை நினைவு கூருகிற ஒருவராயிருப்பீர்கள். "என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன் என்னிலே

நிலைத்திருக்கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன்" என்றார் (யோவா.6:56). நீங்கள் கிறிஸ்து இயேசுவில் நிலைத்திருபதற்கு இது அடையாளமாயிருக்கிறது. அவரில் நிலைத்திராதவன் அவருடைய மரணத்தை வாரந்தோறும் நினைவுகூர மாட்டான். அப்படிப்பட்டவன் கர்த்தரில் நிலைத்திருக்கவில்லை என்று காண்கிறோம்.

"கடைசியா, சகோதரரே, சந்தோஷமாயிருங்கள், நற்சீர் பொருந்துங்கள், ஆறுதலடையுங்கள்; ஏகசிந்தையாயிருங்கள், சமாதானமாயிருங்கள், அப்பொழுது அன்புக்கும் சமாதானத்துக்கும் காரணராகிய தேவன் உங்களோடேகூட இருப்பார்" (2கொரி.13:11). அநேகர் தேவன் தங்களோடே இருக்கவேண்டுமென நினைக்கிறார்கள். ஆனால் வேதவாக்கியத்தின்படியாக தங்களை மாற்றியமைத்துக்கொள்ள யோசிக்கிறார்கள்.

மேற்கண்ட காரியங்களில் நம்மில் காணப்படுமேயானால் சமாதானத்தின் தேவன் நம்மோடிருப்பார். ஈசாக்கை அறிவீர்கள் அவனுடைய விரோதிகள் அவனைப் பார்த்து; "நிச்சயமாய்க் கர்த்தர் உம்மோடேகூட இருக்கிறார் என்று கண்டோம். ஆகையால் எங்களுக்கும் உமக்கும் ஒரு ஆணை ஏற்பாடு உண்டாகவேண்டும் என்று நாங்கள் நிர்ணயம்பண்ணினோம்" என்றார்கள் (ஆதி.26:28). தேவன் ஈசாக்கோடு இருந்தார். அவன் கர்த்தருக்குப் பிரியமானதை அந்த தேசத்தில் செய்தான். எந்த மனிதரோடும் வீணாக போராடவில்லை. ஆசீர்வதிக்கும் கர்த்தருக்கும், கர்த்தருடைய உபதேசத்திற்கும் கீழ்ப்படிந்தவனாக வாழ்ந்தான். கர்த்தர் அவனை விட்டுவிலகாமல் அவனை ஆசீர்வதித்துக் கொண்டுவந்தார். அதைப்போல எசேக்கியா என்ற ஒரு ராஜாவை நீங்கள் அறிவீர்கள்; "கர்த்தர் அவனோடிருந்தார்; அவன் போகிற இடமெங்கும் அவனுக்கு அனுகூலமாயிற்று; அவன் அசீரியா ராஜாவைச் சேவிக்காமல், அவன் அதிகாரத்தை தள்ளிவிட்டான்" (2இரா.18:7).

சிலர் ராஜாக்களுக்காக பயந்து தேவனுடைய கட்டளைகளை புறம்பாக்கிவிடுவார்கள். ஆனால் எசேக்கியாவோ தன் தேவனுடைய கட்டளைகளின்படி நடக்கவும் தாவீதின் தேவனுடைய உடன்படிக்கைகளைக் கைக்கொள்ளவும் விக்கிரகங்களை தன்னுடைய ராஜ்யபாரமெங்கும் அகற்றவும் நடவடிக்கை எடுத்தான். ஆகையால்



கர்த்தர் அவனோடிருந்தார். அவன் போகிற இடமெங்கும் அவனுடைய காரியங்களை வாய்க்கச்செய்தார். இவ்விதமாக நாமும் ஆசீர்வாதத்தோடே ஜீவிக்கவேண்டுமென ஆசைப்படுகிறோம். ஆனால் தேவன் நம்மோடி இல்லை. அப்படியானால் நாம் செய்யவேண்டியது என்ன? ஈசாக்கை பாருங்கள், எசேக்கியாவைப்பாருங்கள் அவர்கள் கர்த்தருடைய உடன்படிக்கையை எப்படிக் கைக்கொண்டார்கள். அந்தப்படியாக நீங்களும் கைக்கொள்ளுவீர்களானால் சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார். நீங்கள் உங்களுடைய வாழ்க்கையில் சந்தோஷமாகவும், நற்சீர்பொருந்தியவர்களாகவும், ஆறுதலடைந்தவர் களாகவும், ஏகசிந்தையுள்ளவர்களாகவும், சமாதானமுள்ளவர்களாகவும் இருப்பீர்களானால் சமாதானத்தின் தேவன் உங்களோடு கண்டிப்பாக இருப்பார். உங்களுடைய காரியங்களையும் வாய்க்கச்செய்வார்.

**கேள்வி நேரம்**

**நற்சீர்பொருந்தியவர்களிடம் காணப்படும் இரகசியம் என்ன?**

இயேசு சொல்கிறார்; "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம்" என்கிறார் (யோவா.14:23). நற்சீர்பொருந்தியவர்கள் இயேசுவினிடத்தில் அன்பாக இருக்கிறார்கள். அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறார்கள். ஆகையால் அவர்களிடத்தில் பிதா அன்பாயிருக்கிறார். ஆனபடியால் தேவன், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து, பரிசுத்த ஆவியானவர் இம்மூவரும் அப்படிப் பட்டவர்களில் தங்கியிருந்து அவர்களோடு வாசம்பண்ணுகிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை செலுமையாக இருக்கிறது. அவர்கள் நற்சீர்பொருந்தியவர்களாக காணப்படுகிறர்கள். நீங்கள் இவ்விதமாக இருக்க ஜெபிக்கிறோம்.

## 22. நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்

## Hold Fast What is Good

**ப**ரிசுத்த வேதாகமம்; "எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லுகிறது

(1தெச.5:21). எந்த ஒரு பொருள் வாங்கினாலும் அதை நாம் சோதித்துப்பார்த்து வாங்குகிறோம். நாம் சில காரியங்களைப் பற்றிக்கொள்ளும்போதுகூட அவைகளை சோதித்துப் பார்த்து பற்றிக்கொள்ளவேண்டும். பாவத்தை நாம் சோதித்துப்பார்க்க தேவையில்லை. அது நமக்குத் தெரியும் பாவம் என்று பின்னே ஏன் அதை நாம் சோதித்துப்பார்க்க வேண்டும். எல்லாவற்றையும் சோதித்துப்பாருங்கள் என்றால் தேவையற்றவைகளையெல்லாம் என்று அர்த்தமல்ல. நமக்குத் தெரியும் எவைகளை சோதிக்கவேண்டும் எவைகளை சோதித்துப்பார்க்கவேண்டிய அவசியமே இல்லை என்பதும். பாவமான காரியங்களை நாம் சோதிக்கவேண்டிய அவசியம் இல்லை. அது பாவமே.

நாம் சோதித்துப் பார்க்கவேண்டிய சிலவற்றை வேதாகமம் நமக்குப்போதிக்கிறது; "பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள். தேவஆவியை நீங்கள் எதினால் அறியலாமென்றால்; மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது. மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல; வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திகிறிஸ்துவினுடைய ஆவி அதுவே, அது இப்பொழுதும் உலகத்தில் இருக்கிறது" (1யோவா.4:1-3).

இன்றைக்கு இப்படிப்பட்டவர்கள் அதிகமாக உள்ளார்கள். அவர்களை நாம் சோதித்து அறியவேண்டும். தேவனைப்பற்றி சொல்லுகிறார்கள், பழைய ஏற்பாட்டு வசனங்களை சொல்லுகிறார்கள் ஆனால் கிறிஸ்துவையும் அவருடைய மேன்மையான உபதேசங் களையும் மறைக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் ஒருவகையில் அந்திகிறிஸ்துவாக இருக்கிறார்கள். தங்கள் வயிற்றுக்காக ஊழியம் செய்கிறார்கள். இன்னும் பலர் பரிசுத்தஆவியைப்பற்றி பேசுவார்கள் ஆனால் இயேசுவையும் அவருடைய பாடுகளையும் மரணம் அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலையும் குறித்து பேசமாட்டார்கள். எப்பொழுது பார்த்தாலும் பரிசுத்தஆவியைப் பெற்றுவிட்டீர்களா? என்ற ஒரு



கேள்வியை கேட்டு ஜனங்களை குழப்பத்தில் தள்ளிவிடுவார்கள். இவர்கள் கர்த்தரையும் கர்த்தருடைய மகிமையான வசனங்களையும் விட்டு விட்டு காணாதவைகளில் துணிவாய் நுழைந்து தங்களுடைய சிந்தையில் இருமாப்புள்ளவர்களாயிருக்கிறார்கள். இவர்களும் கிறிஸ்துவை மகிமைப்படுத்தாமல் இருக்கிறபடியால் இவர்களும் அந்திகிறிஸ்துவின் ஆவியை உடையவர்களாயிருக்கிறார்கள்.

முற்பிதாக்களின் காலத்திலும் இப்படிப்பட்டவர்கள் இருந்தார்கள். "கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள்; அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணி, தங்களைக் கிரயத்துக்குக்கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக்கொள்ளுவார்கள். அவர்களுடைய கெட்ட நடக்கையை அநேகர் பின்பற்றுவார்கள்; அவர்கள் நிமித்தம் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படும்" (2பேது.2:1-2).

உலக அளவில் வளர்ச்சியடைந்த சபைகள் மிகவும் பெருமையோடு இருக்கிறார்கள். அவர்கள் கேட்டுக்கேதுவாக வேதத்தைப்புரட்டி ஜனங்களை தவறாக வழிநடத்தி, பாவத்தை தண்ணீரைப்போல பருகுகிறார்கள். அவர்களாலே சத்திய மார்க்கம் தூஷிக்கப்படுகிறது. எப்படிவேண்டுமானாலும் வாழலாம். நீ ஒரு கிறிஸ்தவனாயிருந்தால்போதும் என்று சொல்லி ஜனங்களை மோசம்போக்கிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய தவறான போதனையை அநேகர் ஏற்றுக்கொண்டு அதைப்பின்பற்றுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் கள்ளப்போதகர்களாக சபைகளில் துணிந்து செயல்படுகிறார்கள். "இவர்களுக்கு ஐயோ! இவர்கள் காயீனுடைய வழியில் நடந்து, பிலேயாம் கூலிக்காகச்செய்த வஞ்சகத்திலே விரைந்தோடி, கோரா எதிர்த்துப்பேசின பாவத்திற்குள்ளாகி, கெட்டுப்போனார்கள். இவர்கள் உங்கள் அன்பின் விருந்துகளில் கறைகளாயிருந்து, பயமின்றிக்கூட விருந்துண்டு, தங்களைத் தாங்களே மேய்த்துக்கொள்ளுகிறார்கள்; இவர்கள் காற்றுகளால் அடியுண்டோடுகிற தண்ணீரற்ற மேகங்களும், இலையுதிர்ந்து கனியற்று இரண்டுதரஞ் செத்து வேரற்றுப்போன மரங்களும், தங்கள் அவமானங்களை நுரைதள்ளுகிற அமளியான கடலலைகளும், மார்க்கந்தப்பி அலைகிற

நட்சத்திரங்களுமாயிருக்கிறார்கள்; இவர்களுக்காக என்றென்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டிருக்கிறது" (யூதா 11-13). கள்ளத்தீர்க்கதரிசிகளும், கள்ளப்போதகர்களும் காயீன் பிலேயாம் போன்றவர்களின் போதனையின்படி நடப்பவர்கள். அவர்களுடைய நடக்கைகளை நாம் அறிவோம். காயீன் ஒரு கொலைகாரன், பிலேயாம் கூலிக்காக வஞ்சனை செய்யும்படியாக விரைந்து ஓடினவன் பணஆசையுள்ளவன். இதைப்போல மோசே மற்றும் ஆரோனை எதிர்த்தவர்கள் கோராகு கூட்டத்தார்கள். அவர்களுடைய முடிவு பூமி அவர்களை விழுங்கிப்போட்டது.

இப்படிப்பட்ட கள்ளப்போதகர்களும், கள்ளத்தீர்க்கதரிசிகளும் உங்களுக்குள்ளும் இருப்பார்கள் அவர்களை நீங்கள் அடையாளம் கண்டு கொண்டு அவர்களுடைய ஐக்கியத்தில் பங்குகொள்ளாதிருக்க வேண்டும். அவர்கள் தவறுசெய்தால் அது அவர்களைத்தானே தண்டிக்கும் என்று நினைத்துவிடக்கூடாது. அவர்களோடு நீங்களும் இசைவாக இருக்கிறபடியால் அது உங்களையும் தண்டிக்கக்கூடியதாக இருக்கிறது. இப்படிப்பட்டவர்களுக்கு காரிருள் வைக்கப்பட்டுள்ளது எனக் காண்கிறோம். அமாவாசை அன்று விளக்குகளும் அனைந்துவிட்டால் நாம் அந்த இருளில் எவ்வளவு கஷ்டப்படுகிறோம். அதைப்போல பன்மடங்கு காரிருள் எப்படியிருக்கும் அந்தவிதமான இருளே அவர்களுக்கு வைக்கப்பட்டுள்ளது.

மேலும், கள்ளத்தீர்க்கதரிசிகளை அடையாளம் கண்டுகொள்ள நாம் வேதம் சொல்லுகிற ஆலோசனைக்கு செவிகொடுக்கவேண்டும். "ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டு வராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழத்துதல் சொல்லாமலும் இருங்கள். அவனுக்கு வாழத்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாகிறான்" (2யோவா.10,11).

கிறிஸ்துவினுடைய உபதேசத்தை கொண்டு வராத எந்த ஒரு நபரையும் நாம் ஏற்றுக்கொள்ளக்கூடாது. அது உறவினர்களாக இருந்தாலும் சரி, அந்நியர்களாக இருந்தாலும் சரி, வெளிநாட்டு மிஷனரிகளாக இருந்தாலும் சரி அவர்களை நாம் ஏற்றுக்கொள்ளக் கூடாது. அப்படி மீறி நாம் ஏற்றுக்கொண்டு அவர்களுக்காக முகஸ்துதி



செய்வோமானால் அவர்களுடைய துர்க்கிரியைகளுக்கும் நாமும் பங்குள்ளவர்களாகிறோம். தேவன் நம்மை தண்டியாமல் விடார். கள்ளப்போதனை செய்கிறவர்கள்; "கள்ள அப்போஸ்தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள், கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக்கொண்டவர்களாயிருக்கிறார்கள். அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே. ஆகையால் அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டால் அது ஆச்சரியமல்லவே; அவர்கள் முடிவு அவர்கள் கிரியைகளுக்குத்தக்கதாயிருக்கும்" (2கொரி.11:13-15).

அப்போஸ்தலர்களே இல்லாத இக்காலக்கட்டங்களில் தங்களை அப்போஸ்தலர்கள் என்று சொல்லி அழைத்துக்கொண்டும், அப்போஸ்தல பட்டங்களை மற்றவர்களும் சூட்டிக்கொண்டு வலம்வருகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் கள்ள அப்போஸ்தலர்களாகவும் கபடமுள்ள வேலையாட்களாகவும் இருக்கிறார். அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்ளுவானே என்ற வசனத்தின்படியாக ஓனாய் ஆட்டுத்தோலை போர்த்திக்கொண்டு ஆட்டுமந்தைகளுக்குள் நுழைவதைப்போல இவர்கள் அப்போஸ்தரின் வேஷத்தில் கர்த்தருடைய மந்தையை சேதப்படுத்துகிறார்கள். இப்படிப்பட்டவர்களை நாம் சோதித்து அறியவேண்டும்.

வெளிப்படுத்தின விசேஷத்திலே சொல்லப்பட்ட ஏழு சபைகளில் எபேசு சபை இப்படிப்பட்டவர்களை அடையாளம் கண்டுகொண்டது. "உன் கிரியைகளையும், உன் பிரயாசத்தையும், உன் பொறுமையையும், நீ பொல்லாதவர்களைச் சகிக்கக்கூடாமலிருக் கிறதையும், அப்போஸ்தலரல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தல ரென்று சொல்லுகிறதை நீ சோதித்து அவர்களைப் பொய்யரென்று கண்டறிந்ததையும்" அறிந்திருக்கிறோன் என வெளி.2:2 எழுதுப்பட்டுள்ளதை நாம் வாசிக்கிறோம். நாம் கர்த்தருடைய சபையை சார்ந்தவர்களாக இருப்போமானால் இப்படிப்பட்டவர்களை நாம் சோதித்து அவர்கள் பொய்யர் என்பதை கண்டுகொள்ளவேண்டும்.

சோதித்து அறிந்த பின்பு நாம் நலமானதை பிடித்துக்கொள்ள வேண்டும் என வாசித்தோம். ஆம், நலமானதை எல்லோரும் விரும்புவார்கள். பரலோகராஜ்யம் சகலவிதமான மீன்களையும் சேர்த்து

வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது என மத்.13:47-50 வசனங்களில் படிக்கிறோம். அந்த வலையை கறையில் இழுத்து வந்து நல்லவைகளை சேர்த்துவிட்டு ஆகாதவைகளை எறிந்துபோடுவார்கள். அந்தப்படியாக நீங்கள் நலமானதை பிடித்துக்கொண்டு சுடர்களைப்போல பிரகாசமாயிருங்கள். நலமானதைப்பிடித்துக்கொண்டதற்கு அடையாளம் நிலைத்திருப்பது. பவுல் தீமோதேயுவுக்கு எழுதும்போது; "நீ கற்று நிச்சயித்துக்கொண்டவைகளில் நிலைத்திரு; அவைகளை இன்னாரிடத்தில் கற்றாய் என்று நீ அறிந்திருக்கிறதுமல்லாமல்" என எழுதுகிறார் (2தீமோ.3;14).

கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு என்பார்கள். நாம் எந்தஅளவு கற்றுக்கொண்டுள்ளோமோ அவைகளில் முதலாவது நிலைத்திருக்கவேண்டும். அதையே வேதம் எதிர்பார்க்கிறது. பவுல் சொல்லும்போது; "நான் அடைந்தாயிற்று அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன். சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தையப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" என்கிறார் (பிலி.3:12-14).

தேவன் நம்மை அழைத்த அழைப்பு மாறதவைகளாகவே இருக்கிறது. அதை நாம் முதலாவது புரிந்துகொண்டு அவைகளைப் பற்றிக்கொண்டு கழுகுகளைப்போல செட்டைகளை அடித்து எழும்பவேண்டும். ஆகாயத்தில் சிலம்பம் பண்ணுவதால் ஒருவருக்கும் பிரயோஜனம் இல்லை. ஆகையால் பவுலைப்போல பரம அழைப்பின் பந்தையப்பொருளுக்காக இலக்கை நோக்கி தொடருங்கள். மேலும் "உங்களுக்குள்ளதை நான் வருமளவும் பற்றிக்கொண்டிருங்கள். ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு, நான் என் பிதாவினிடத்தில் அதிகாரம் பெற்றதுபோல, ஜாதிகள்மேல் அதிகாரம் கொடுப்பேன். அவன் இருப்புக்கோலால் அவர்களை ஆளுவான்; அவர்கள்



மண்பாண்டங்களைப்போல நொறுக்கப்படுவார்கள். விடிவெள்ளி நட்சத்திரத்தையும் அவர்களுக்குக் கொடுப்பேன்" என்றார் (வெளி.2:25-28). எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து நலமானதைப் பற்றிக் கொள்ளும் அனைவருக்கும் நலமான ஆசீர்வாதங்களை ஆண்டவர்வைத்து வைத்திருக்கிறார். ஆகையால் உங்களுக்கு உள்ளதைப் பற்றிக்கொண்டு பெலப்படுங்கள்.

**கேள்வி நேரம்**

**என்னுடைய வாழ்நாள் வீணாய் போய்விடாதிருக்க நான் என்ன செய்யவேண்டும்?**

"நான் வீணாக ஓடினதும் வீணாகப் பிரயாசப்பட்டதுமில்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு, ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப்போலப் பிரகாசிக்கிற நீங்கள், கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு, எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்" என்கிறார் பவுல் (பிலி.2:14-16). இவ்விதமாக இருக்க உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 23. இக்கட்டிலும் வேதத்தைப் பற்றிக்கொண்ட தாவீது

## David, Who grabed the Scripture in His Trouble

**ஜ**னங்கள் பொதுவாக இக்கட்டானநேரத்தில் கர்த்தரை மறந்துவிடுவார்கள். ஆனால் தாவீது சொல்கிறான்; "இக்கட்டும் நெருக்கமும் என்னைப் பிடித்தது, ஆனாலும் உம்முடைய கற்பனைகள் என் மனமகிழ்ச்சி" என்கிறான் (சங்.119:143). ஒருவனுக்கு மனமகிழ்ச்சி எப்பொழுது வரும்? அவனுடைய திருமணநாளில் அல்லது அவனுடைய பிறந்த நாளில், அல்லது அவனுடைய வெற்றியின் நாளில் மனமகிழ்ச்சியாயிருப்பான். தாவீதோ, இக்கட்டும் நெருக்கமும் உண்டான நாளிலே கர்த்தருடைய கற்பனைகள் அவனுடைய மனமகிழ்ச்சியாயிருந்தன. அப்படியானால் அவனுடைய

முழுநம்பிக்கையும் கர்த்தருடைய கற்பனையின்மேல் இருந்தது. அது அவனை உற்சாகப்படுத்தினது, பெலப்படுத்தினது ஆகையால் சோர்ந்துபோன அவனுக்கு அது பெலன் தந்தது.

கர்த்தருடைய வார்த்தைகள் ஜீவனும் வல்லமையுள்ளது மாயிருக்கிறது. மனமகிழ்ச்சியானால் உள்ளமும் இல்லமும் மகிழ்ச்சியாயிருக்கும். மனதே எல்லாவிதமான நோய்களுக்கும் காரணமாயிருக்கிறது. இந்த மனமகிழ்ச்சியடைய தாவீதை நோக்கிப் பாருங்கள். அவன் எப்பொழுதும் மனமகிழ்ச்சியோடே இருந்ததற்கான காரணம். அவருடைய கற்பனையின்மேல் தாகமாயிருந்தான்.

"தங்கள் ஆபத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள், அவர்கள் இக்கட்டுகளிலிருந்து அவர்களை விடுவித்தார்" என சங்கீதக்காரன் பாடுகிறான் (சங்.107:6). ஆபத்து நாளில் என்னை நோக்கி கூப்பிடு அப்பொழுது உங்களை விடுவிப்பேன் என்று கர்த்தர் சொன்னபடியாக இஸ்ரவேலர் தங்களுடைய ஆபத்து நாளில் கர்த்தரை நோக்கி கூப்பிட்டார்கள் அவர்களை கர்த்தர் அவர்களுடைய இக்கட்டுகளிலிருந்து விடுவித்தார். அநேகர் ஆபத்து நேரங்களில் தங்களுடைய உறவினர்களையும், நண்பர்களையும் நாடிப்போய் ஏமாற்றமடைந்து வீடுதிரும்புகின்றனர். கர்த்தர் சகல ஜனங்களையும் சகல தேசங்களையும் ஆளுகிறார். அவருடைய ஆளுகை சூரியன் உதிக்கிற திசை தொடங்கி சூரியன் அஸ்தமிக்கிற திசைவரையும் உள்ளது. அவருக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை. அவர் உங்களை காண்கிற தேவனாக இருக்கிறார். உங்களுடைய வழியை அவர் அறிவார். உங்களுக்கு எதிராக செயல்படுகிறவர்களையும் அவர் அறிகிறார். உங்களுக்கு வரும் உபத்திரவத்தையும், பாடுகளையும், பிரச்சனைகளையும் அறிகிறார்.

நீங்கள் கர்த்தரையும் அவருடைய வல்லமையுள்ள வசனங்களையும் நம்பி உங்களை அவருக்கும் அவருடைய வசனங்களுக்கும் ஒப்புக்கொடுக்கும்போது; கர்த்தர் உங்களை எல்லாவிதமான இக்கட்டுகளிலிருந்தும் விடுவிப்பார். தாவீதைப் போலவும், இஸ்ரவேலரைப்போலவும் இக்கட்டிலும் ஆபத்திலும் கர்த்தரை நோக்கிப்பாருங்கள்.



இக்கட்டைப்போல மற்றொன்று நிந்தையும் அவமானமும். இவைகளையும் தாவீது சகித்தார். "நிந்தையையும் அவமானத்தையும் என்னை விட்டகற்றும்; நான் உம்முடைய சாட்சிகளைக் கைக்கொள்ளுகிறேன்" என்றார் (சங்.119:22). மனிதன் எதைவேண்டு மானாலும் சகித்துக்கொள்ளுவான் ஆனால் நிந்தையையும் அவமானத்தையும் சகிக்கமாட்டான். தாவீதோ இவைகளை என்னை விட்டு அகற்றும் என்று கர்த்தரை நோக்கி வேண்டிக்கொள்ளுகிறார். நிந்தையும் அவமானமும் இரு பெரும் ஆயுதங்கள். இவைகள் மனிதனை கொஞ்சம் கொஞ்சமாக கொன்றுவிடும்.

அநேகர் இவ்விதமான நிந்தைக்குள்ளும் அவமானத்திற்குள்ளும் உட்படுத்தப்பட்டு அழிவை சந்திக்கிறார்கள். பெரிய பெரிய நட்சத்திரங்கள் தீடிரென்று அவமானத்தை தாங்க முடியாமல் சூசைட் செய்துகொள்ளுகிறார்கள். சிலர் நாட்டைவிட்டும் வீட்டைவிட்டும் சென்று விடுகிறார்கள். சிலர் பைத்தியமாகி தாங்கள் இருக்கும் இடம் தெரியாமல் தெருக்களில் திரிகிறதை நாம் காண்கிறோம். இவர்கள் எல்லோருமே நிந்தையையும் அவமானத்தையும் சகிக்க முடியாமற்போனவர்கள். சிலர் இந்த விஷயத்தில் ஒவ்வொருவருக்கும் வந்தால்தானே தெரியும் வேதனை என்பார்கள். ஆம், ஒவ்வொருவருடைய கஷ்டங்கள் அவர்களுக்குத்தான் தெரியும். அதே நேரத்தில் இவ்விதமான நிந்தையையும் அவமானத்தையும் சகித்த தாவீதை நாம் பார்க்க வேண்டும். அவன் ராஜாவாயிருக்கும்போது சிலர் தாவீது மீது கற்களை எறிந்தார்கள். அப்பொழுது அவர்கள் எறியட்டும் இவ்விதமாக எறிய தேவன் அவர்களை அனுமதித்தார் என்று சொல்லி அந்த விதமான அவமானத்தை சகித்தார்.

ஏன், நம் ஆண்டவர் இயேசுவை நோக்கிப்பாருங்கள். பிறப்பு முதல் சிலுவை வரை அவருக்கு ஏற்பட்ட அவமானத்தை அவர் சகித்தார். "அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்" (எபி.12:2). அவர் பாடுபடுவதற்கு முன்பே அவருக்கு தேவனுடைய வலது பாரிசத்தில் இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த சந்தோஷத்தின்பொருட்டு அவருக்கு ஏற்பட்ட அந்த அவமானத்தை எண்ணாமல் சிலுவையைச் சகித்தார். அவரை

உமிழ்ந்து துப்பினார்கள், குட்டினார்கள், முற்கிரீடத்தை அவருடைய சிரசில் சூட்டினார்கள். உம்மை அடித்தவன் யார் என்று சொல்லி கன்னத்தில் அறைந்தார்கள். நீ தேவனுடைய குமாரனேயானால் சிலுவையிலிருந்து இறங்கி வா என்று சொல்லி ஏளனம் செய்தார்கள். இத்தனை அவமானங்களையும் அவர் சகித்தார். அவருக்கு ஏற்பட்ட ஒரு அவமானங்கள் கூட உங்களுக்கு ஏற்பட்டிருக்க வாய்ப்பு இல்லை என்று நினைக்கிறேன். அப்படியிருக்கும்போது, நமக்கு ஏற்படும் சின்ன சின்ன அவமானங்களைக்கூட நம்மால் சகிக்க முடியாவிட்டால் மேலான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுவது எப்படி? இயேசுவோடு சேர்ந்து பாடுகளை அநுபவிக்கும்போது அவரோடு சேர்ந்து ஆளும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்ளுவோம். ஆகையால் உங்களுக்கு வரும் பாடுகளிலும், நிந்தைகளிலும், அவமானத்திலும் இவ்விதமான விபரீதங்களை சகித்த இயேசுவை நினைத்துக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்களுக்கு வரும் நிந்தைகளையும் அவமானத்தையும் ஜெயித்து கர்த்தருக்கு சாட்சியுள்ளவர்களாக வாழமுடியும்.

தாவீது இத்தனை பாடுகள் வந்து அவர் விட்டுவிடாதிருந்தது எது வென்றால் வேதத்தை என காண்கிறோம். மனிதனுக்கு பிரச்சனை என்று வந்துவிட்டால் ஒன்று தனக்கு எதிரே இருக்கிறவர்களிடம் கோபம் கொள்ளுவார் அல்லது பொருட்களை எடுத்து நாசம்பண்ணுவார். ஆனால் தாவீதோ அப்படியல்ல; "துன்மார்க்கரின் கூட்டங்கள் என்னைக் கொள்ளையிட்டும், உம்முடைய வேதத்தை நான் மறக்கவில்லை" என்கிறார் (சங்.119:61). பொருட்கள் காணாமற்போனாலோ அல்லது தொலைந்துபோனாலோ யாருக்குமே மனது மிகவும் கஷ்டமாக இருக்கும். கஷ்டப்பட்ட பொருளை இப்படி கொள்ளையடித்து சென்றுவிட்டார்களே என்று சொல்லி மனம் படாத பாடுபடும்.

ஒருவேளை தேவன் இதை அனுமதித்துவிட்டாரே என்று சொல்லி தேவனை தூஷிக்கவும் செய்திடுவார்கள். தாவீதை துன்மார்க்கரின் கூட்டங்கள் கொள்ளையிட்டும் அவர் கர்த்தருடைய வேதத்தை மறக்காமல் அதை கைக்கொண்டிருக்கிறார். அந்த மாதிரியான வேளைகளிலும் அதை படித்திருக்கிறார் என்றே சொல்லவேண்டும். அநேகர் சந்தோஷமாக இருந்தால் வேதம் வாசிப்பார்கள் அல்லது சபைக்கு சென்றால் வேதம் வாசிப்பார்கள். வேதபாடசாலைகளுக்கு



சென்றால் வேதம் வாசிப்பார்கள். தாவீது எல்லா சூழ்நிலையிலும் வேதத்தை பற்றிக்கொண்டவராயிருந்தார். ஆகையாலே கர்த்தர் தாவீதைக் குறித்து சொல்லும்போது என் தாசன் என்கிறார்.

மேலும், அவர் சொல்லும்போது; "ஆயிரம் நாளைப்பார்கிலும் உமது பிராகாரங்களில் செல்லும் ஒரே நாள் நல்லது; ஆகாமியக் கூடாரங்களில் வாசமாயிருப்பதைப்பார்க்கிலும் என் தேவனுடைய ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பதையே தெரிந்துகொள்ளுவேன்" என்கிறார் (சங்.84:10). சங்கீதக்காரனுடைய நம்பிக்கை எப்படிப் பட்டதாயிருந்திருக்கிறது என்று பார்த்தீர்களா? அநேகர் பல்லாண்டு வாழவேண்டும் என நினக்கின்றனர். அவ்விதமாக மற்றவர்களை ஆசீர்வதிக்கின்றனர். எவ்வளவு நாள் வாழ்கிறோம் என்பது முக்கியமல்ல எப்படி வாழ்கிறோம் என்பதுவே முக்கியம்.

ஆகையால் ஆயிரம் நாளைப்பார்க்கிலும் உமது பிராகாரங்களில் செல்லும் ஒரே நாள் நல்லது என்கிறார். இதை எத்தனைபேர் விரும்புவார்கள். வேதத்தை நேசிக்கிறவர்களும், அதைக்கைக் கொள்ளுகிறவர்களும் இதை விரும்புவார்கள். கொஞ்சநாள் வாழ்ந்தாலும் அந்த புண்ணிவான் அநேகருக்கு நல்ல காரியங்களை செய்துவிட்டு போனாரு என்பார்கள். அதே ஊரில் பொல்லாதவன் பல ஆண்டுகளாக வாழ்ந்துகொண்டிருப்பான் அவனைப்பார்த்து அல்லது அவனுக்கு தெரியாமலோ மற்றவர்களிடம் இவனுக்கு சாவு வரமாட்டேங்குது இவன் இருந்து நாட்டுக்கு என்ன பயன், வீட்டுக்கு என்ன பயன் என்பார்கள். ஆக அன்பானவர்களே, நாம் ஆயிரம் நாளை விரும்பாமல் கிடைத்திருக்கிற கொஞ்ச நாளிலே கர்த்தருடைய வசனத்தின்படி வாழ்ந்து சாட்சியுள்ளவர்களா இருக்க விரும்புவோம்.

கொள்ளையடிக்கும் கூட்டத்தார்கள் கோடிக்கணக்கான பணத்தையும் பொருட்களையும் வைத்திருப்பார்கள். அவர்களோடிருந்தால் ஒன்றுக்கும் கவலையில்லை என்பார்கள். துன்மார்க்கரோடு இருக்கவும் அப்படிப்பட்டவர்களோடு அநேகர் ஐக்கியம் கொள்ளவும் ஒன்றிற்கும் குறைவில்லாமல் வாழவும் விரும்புவார்கள். தாவீதோ ஆகாமியக்கூடாரங்களில் வாசமாயிருக்கவிரும்பவில்லை; தேவனுடைய ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பதையே தெரிந்துகொண்டார். அப்படியானால் அவர் ஒவ்வொருமுறையும்

தேவனுடைய ஆலோசனையைப் பெற்று வழிநடந்தார். தன்னுடைய யோசனையினால் அவர் ஒன்றையும் செய்யவில்லை. அவருடைய சமுகத்தில் நித்தம் விழிந்திருந்து ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டார். இயேசு சொல்கிறார் நானே வாசல் என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால் அவன் இரட்சிக்கப்படுவான். இந்த வாசலை தாவீது அவருடைய நாட்களிலே தெரிந்துகொண்டு, கர்த்தருடைய வாசலிலே காத்திருந்தார். அவருடைய ஆலோசனைக்காக. இன்றைக்கு எத்தனைபேர் கர்த்தருடைய வேதத்தின்படியான வாழ்க்கையை துவங்குகிறார்கள்.

தேவனை அறியாதவர்கள் ஜேசியத்தை நம்புகிறார்கள். தேவனை ஏற்றுக்கொண்டவர்கள், சாஸ்திரத்தை நம்புகிறார்கள். இது எத்தனை வேதனையான காரியமாயிருக்கிறது. கல்லினிடத்திலும், மரத்தினிடத்திலும் ஆலோசனை கேட்கிறார்கள். தேவன் தம்முடைய வார்த்தைகளை என்றும் அழியாத வார்த்தைகளாக எழுதிகொடுத்திருக்கிறார். தேவவசனத்தை சொல்லும் போதகனையும் அவர்களை மதிப்பதில்லை, கர்த்தருடைய வார்த்தையையும் மதிப்பதில்லை. எவ்வளவு தூரம் தேவனுக்கு விரோதமாக செயல்படமுடியுமோ அவ்வளவு தூரம் செய்படுகிறார்கள். தாவீது தன்னுடைய ஜீவிய நாட்களில் தன்னுடைய பாவத்தை கர்த்தரிடம் அறிக்கையிட்டு மனஸ்தாபப்பட்டான். எந்நாளும் வேதத்தை பற்றிக்கொண்டு நடந்தான். இக்கட்டிலும், நெருக்கத்திலும், நிந்தையையும், அவமானத்தையும் எண்ணாமல் வேதத்தை நேசித்து அதைப்பற்றிக்கொண்டான். இச்செய்தியை வாசிக்கும் சகோதரனே சகோதரியே, உன்னுடைய வாழ்க்கையில் வரக்கூடிய இப்படிப்பட்டதான பாடுகளிலும் தாவீதைப்போல வேதத்தைப் பற்றிக்கொள். அப்பொழுது தாவீதோடு இருந்த கர்த்தர் உம்மோடும் எந்நாளும் இருப்பார்.

**கேள்வி நேரம்**

**தாவீது ஒருபோதும் கர்த்தருடைய கட்டளைகளை மறக்காதவராயிருந்தாரா?**

ஆம், "நான் ஒருபோதும் உம்முடைய கட்டளைகளை மறக்கமாட்டேன்; அவைகளால் நீர் என்னை உயிர்ப்பித்தீர்" என்கிறான் (சங்.119:93). தம்முடைய வசனத்தினாலே உயிர்ப்பித்த



ஆண்டவருடைய கட்டளைகளை மறக்கமாட்டேன் என்றான். உயிர்கொடுத்த ஆண்டவர் இயேசுவை நீங்கள் மறக்கலாமா? உங்களுக்காக சிலுவையில் அவர் இரத்தம் சிந்தினார். அவருடைய தழும்புகலால் குணமானீர்கள்.

கர்த்தருடைய வசனம் ஒருவனை பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும் காக்கிறது. அவர் சொல்ல அது அப்படியே நடந்தது. அவ்வசனங்கள் உங்களை நித்தியத்திற்கு கொண்டுசெல்லும். வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. அதை ஒரு மனிதனுடைய இருதயத்தில் விதைக்கும்போது அவன் உயிரடைகிறான். அவனுடைய ஆவி ஆத்துமா சரீரம் காக்கப்படும். தேவனுடைய பார்வையில் குற்றமற்றதாயிருக்கும். நீங்கள் எப்படிப்பட்டவராயிருக் கிறீர்கள்? நீங்கள் உயிர்ப்பிக்கப்படத்தக்கதாக கர்த்தருடைய வசனத்திற்கு ஒப்பக்கொடுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 24. நான் உமது அடியேன்
## For I Am Your Servant

**ப**ரிசுத்த வேதாகமத்தில் தன்னை முழுவதுமாக ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்த மூன்று நபர்களைக்குறித்து இந்நாளின் செய்திவேளையில் தியானிக்கவுள்ளோம். முதலாவது தாவீதைப் பார்க்கலாம்: "உம்முடைய கிருபையின்படி என் சத்துருக்களை அழித்து, என் ஆத்துமாவை ஒடுக்குகிற யாவரையும் சங்காரம்பண்ணும்; நான் உமது அடியேன்" என்கிறார் (சங்.143:12). தாவீது ஒரு ராஜாவாக இருந்தும் தேவனுடைய சமுகத்தில் நான் உமது அடியேன் என்று தாழ்த்துகிறதை நாம் காண்கிறோம்.

உயர்வான பதவியில் இருக்கிறவர்கள் நமக்கு மேலாக யார் இருக்கிறார்கள் என்ற ஆணவம் இருக்கும். ஆனால் தாவீதோ தன் எஜமானாகிய கர்த்தருக்கு தன்னை ஒரு அடிமையைப்போல ஒப்புக்கொடுத்திருந்தார். "தாவீது தன் செய்கைகளிலெல்லாம் புத்திமானாய் நடந்தான்; கர்த்தர் அவனோடே கூட இருந்தார்" (1சாமு.18:14). சகலத்தையும் உண்டாக்கின தேவன் நம்மோடு கூட இருந்தால் எப்படியிருக்கும் என்பதை சற்று சிந்தித்துப்பாருங்கள்.

தாவீதின் வெற்றிக்கும் அவன் புத்திமானாய் நடப்பதற்கும் முழுமையான காரணம் அவனுடைய தேவனாகிய கர்த்தர் அவனோடிருந்தார். அவனுடைய வேண்டுதல்; "உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும், நீரே என் தேவன்; உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக" என்று ஜெபித்தார் (சங்.143:10).

ஜெபிக்கிறவர்கள் தங்களுடைய கோரிக்கைகளை முதலாவது தேவசமுகத்தில் வைப்பார்கள். தாவீதின் ஜெபம் அப்படியல்ல; உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும் என வேண்டிக் கொண்டார். தேவனுக்கு பிரியமானதைச் செய்யும்படியாக நாம் இப் பூமியில் உண்டாக்கப்பட்டோம் என்பதை அறிவீர்களா? பரலோகத்தில் இருக்கிற பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவர்கள்தான் பரலோகத்தில் பிரவேசிக்க முடியும். மற்றபடி அவரை நோக்கி; கர்த்தாவே, கர்த்தாவே என்று கூப்பிட்டாலும் அவருடைய சித்தம் செய்யாமல் தேவராஜ்யத்தைக் காணமுடியாது. மேலும் தாவீது சொல்லும்போது; "கர்த்தாவே, உமது வசனத்தின்படி உமது அடியேனை நன்றாய் நடத்தினீர்" என்கிறார் (சங்.119:65). தாவீது தேவனால் வழிநடத்தப்பட்டான். அவன் தன்னை முழுவதுமாக கர்த்தருக்கு அர்ப்பணித்தபடியால் அவனை அவருடைய வசனத்தின்படி நடத்தினார். அவருடைய ஆடுகளாகவும் அவருடைய மேய்ச்சலின் மந்தையாகவும் இருப்போமானால் திருப்தியுள்ளவர்களாக இருப்போம்.

தாவீது தன் வாழ்க்கையில் கர்த்தரை முன்வைத்தார். "பெலிஸ்தனை நோக்கி: நீ பட்டயத்தோடும் ஈட்டியோடும் கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய்; நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்தினாலே உன்னிடத்தில் வருகிறேன்" என்றான் (1சாமு.17:45). கோலியாத்தை கண்டு பட்டாளமே நடுங்கியது. ஆனால் தாவீதோ கர்த்தருடைய நாமத்தினாலே சென்று அவனை வீழ்த்தினான். இது இஸ்ரவேலில் மாபெரும் வெற்றியாயிருந்தது.

இரண்டாவது சாமுவேலைப்பற்றி தியானிக்கலாம். சாமுவேல் தேவனுடைய சமுகத்தில் வளர்க்கப்பட்டவன். அவன் வளர்ந்து வரும்வேளையில் "கர்த்தர் வந்து நின்று, முன்போல; சாமுவேலே என்று கூப்பிட்டார்; அதற்குச் சாமுவேல்; சொல்லும், அடியேன் கேட்கிறேன்



என்றான்" (1சாமு.3:10). சாமுவேல் முதலாவது ஆசாரியனாகிய ஏலி தான் கூப்பிடுகிறார் என்று நினைத்தான். ஏலி கர்த்தர் சாமுவேலைக்கூப்பிடுகிறார் என்று அறிந்து இனி கூப்பிட்டால் இவ்விதமாக சொல் என்று சொல்லியிருந்தான். அந்தப்படியாக சொன்னான். சிறுபிராயத்திலும் சாமுவேல் ஆசாரியனுக்கு கீழ்ப்படிந்து நடந்திருக்கிறதை நாம் காணமுடிகிறது. தன்னுடைய இளையவயதில் கர்த்தரையும் கர்த்தருடைய ஜனங்களையும் பற்றிக்கொண்டவன் சாமுவேல். "சாமுவேல் வளர்ந்தான்; கர்த்தர் அவனுடனேகூட இருந்தார்; அவர் தம்முடைய எல்லா வார்த்தைகளிலும் ஒன்றையாகிலும் தரையிலே விழுந்துபோக விடவில்லை" (1சாமு.3:19).

தாவீதோடு கர்த்தர் இருந்ததைப்போல சாமுவேலோடும் இருந்தார். "சாமுவேல் கர்த்தருடைய தீர்க்கதரிசிதான் என்று தாண்முதல் பெயெர்செபா மட்டுமுள்ள சகல இஸ்ரவேலருக்கும் விளங்கினது" என 1சாமு.3:20-ல் படிக்கிறோம். கர்த்தருடைய ஊழியத்தை செய்யும் சில ஊழியர்களைக்குறித்து பக்கத்து தெருவில் போய்கேட்டால் கூட அவரைப்பற்றி தெரியவில்லை. ஆனால் சாமுவேலைப்பற்றி அந்நாட்டிலே தாண்முதல் பெயர்செபா மட்டுமுள்ள சகல இஸ்ரவேலருக் குள்ளும் அவர் நன்கு அறியப்பட்டவராயிருந்தார். அப்படியானால் அவர் எந்த அளவு அநேக இடங்களுக்குச் சென்று கர்த்தருடைய ஊழியத்தைச் செய்திருப்பார் என நாம் அறியமுடிகிறது. இன்று இவ்விதமான ஊழியர்கள் எழும்பவேண்டும். அப்பொழுது நம் தேசம் கர்த்தரை அறிகிற அறிவில் வளர்ச்சியடையும்.

சாமுவேல் கர்த்தரோடு மிகவும் நெருக்கமானவர். ஒரு முறை கர்த்தர் "நான் சவுலை ராஜாவாக்கினது எனக்கு மனஸ்தாப மாயிருக்கிறது; அவன் என்னைவிட்டுத் திரும்பி, என் வார்த்தைகளை நிறைவேற்றாமற்போனான் என்றார்; அப்பொழுது சாமுவேல் மனம் நொந்து, இராமுழுவதும் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான்" என காண்கிறோம் (1சாமு.15:11). இங்கே நீங்கள் தான் அவனை ராஜாவாக்கினீர்கள் என்று கர்த்தரை நோக்கி அவன் சொல்லவில்லை. ஏனெனில் அவனை முதல் ராஜாவாக கர்த்தருடைய அனுமதியின்பேரில் அபிஷேகம் பண்ணினவனே இந்த சாமுவேல் தான். ஆகையால் கர்த்தருடைய மனஸ்தாபத்திலே அவனும் பங்குகொண்டு

இராமுமுதுவம் கர்த்தரை நோக்கி வேண்டிக்கொண்டான். இந்தவிதமாக தேவனுடைய சித்தத்தை நாம் முதலாவது புரிந்துகொண்டு அதற்கு ஏற்றார்போல வாழவேண்டும். ஆண்டவர் இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி என்னோடு கூட விழித்திருந்து ஜெபியுங்கள் என்றார் எத்தனைபேர் அவரோடு விழித்திருந்து ஜெபித்தார்கள். இன்றும் அப்படித்தான் இருக்கிறோம். தேவனோடு இசைந்தவர்களா அவருடைய ஊழியத்தைச் செய்யவேண்டும். சாமுவேல் அந்தவிதமான ஒரு தீர்க்கதரிசியாக இருந்து செயல்பட்டார். ஆகையால் தேவனாகிய கர்த்தர் அவனோடு இருந்தார் என காண்கிறோம்.

முதல் ராஜாவாகிய சவுல் அப்படி என்ன காரியம் செய்தார் என நீங்கள் நினைக்கத்தோன்றும். கர்த்தருடைய சொல்லை கேளாமல் கொள்ளையின்மேல் பறந்து, கர்த்தருடைய சமுகத்தில் பொல்லாப்பானதைச் செய்தான். ஆகையால் சாமுவேல்; "கர்த்தருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம். இரண்டகம் பண்ணுதல் பில்லிசூனியப் பாவத்துக்கும், முரட்டாட்டம்பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிரகாராதனைக்கும் சரியாய் இருக்கிறது; நீர் கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்தபடியினால், அவர் உம்மை ராஜாவாயிராதபடிக்குப் புறக்கணித்துத் தள்ளினார் என்றான்" (1சாமு.15:22,23).

அநேகர் கர்த்தருடைய சமுகத்தில் புறம்பாக்கப்படுகிறார்கள் என்றால் இப்படிப்பட்டவைகளைச் செய்கிறபடியால் அவர்கள் புறம்பாக்கப்படுகிறார்கள். கர்த்தருக்குப்பிரியமானது இன்னதென்று சோதித்து அறியுங்கள். சாமுவேல் கர்த்தருக்குப்பிரியமானதை இளம்பிராயத்திலிருந்து செய்து வந்த ஒரு அருமையான தீர்க்கதரிசி சவுல், தாவீது போன்றோரை ராஜாவாக அபிஷேகம் செய்தவன். பலிகளையும் காணிக்கைகளையும் கர்த்தர் விரும்பவில்லை. அவைகளை கர்த்தரிடமே வாங்கி அவருக்கே கொடுக்கிறோம். அவர் கீழ்ப்படிதலைத்தான் அதிகமாக எதிர்பார்க்கிறார். இதை சவுலுக்கு உணர்த்தினார் சாமுவேல். அநேகர் சபைக்காக நாங்கள் அதைச்



செய்கிறோம். இதைச் செய்கிறோம் என்கிறார்கள். ஆனால் அப்படிப்பட்டவர்கள் ஒழுங்காக ஆராதனைக்கு வரமாட்டார்கள். அதை சரி செய்வதற்காக ஊழியக்காரனை நோக்கி நாங்கள் சபைக்காக அதைச் செய்யலாம் என்று இருக்கிறோம் என்று சொல்லுவார்கள். இதைக் கேட்ட சபை ஊழியர் அந்த பணத்திற்கு மயங்விடுவர். எல்லோரும் அப்படியல்ல. சாமுவேலைப்போல கடிந்து கொண்டு போதிக்கிற ஊழியர்களும் இருக்கிறார்கள். மேலும் சாமுவேல் சொல்லும்போது ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம் என்கிறான். ஆம், கர்த்தருடைய வசனத்திற்கு முதலாவது செவி கொடுக்க வேண்டும். யாருக்கோ எவருக்கோ சொல்லப்பட்டதைப்போலவும் கண்டும் காணாதவர்களாகவும் இருக்கக்கூடாது. கவனமாக கர்த்தருடைய வார்த்தை செவி கொடுத்து அதற்கு கீழ்ப்படிய தேவன் எதிர்பார்க்கிறார். பில்லிசூனிய பாவத்தைக்குறித்து கேள்விப்படுகிறோம்.

பில்லிசூனிய செய்யும்படியாக அப்படிப்பட்ட நபர்களை சிலர் நாடுகிறார்கள். அது மாபெரிய பாவமாக இருக்கிறது. அதற்கு சரியாக இரண்டகம் பண்ணுதல் இருக்கிறது. அதைப்போல முரட்டாம்பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிரகாராதனைக்கும் சரியாய் இருக்கிறது என்கிறான். கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற அநேகர் உலகஅளவில் பார்க்கும்போது விக்கிரகாராதனை செய்கிறவர்களாயிருக்கிறார்கள். இது தேவனுடைய பார்வையில் அருவருப்பான காரியமாகவும், தேவன் விக்கிரகாராதனை செய்கிறவர்களை தண்டியாமல் விடார் என்றும் காண்கிறோம். தேவன் வெறுக்கிற காரியத்தை நாம் அநுதின வாழ்வில் செய்துகொண்டு கர்த்தருக்கு பிரியமாய் வாழமுடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? ஒரு நாளும் முடியாது.

சவுல் இந்த விதமான காரியங்களை செய்தபடியால் அவனை ராஜாவாக இராதபடி புறம்பாக்கிப்போட்டார். தேவன் உங்களையும் புறம்பாக்கிப்போடாதிருக்க அவைகளை விட்டுவிலகி தேவனுக்குப் பிரியமானதை செய்யுங்கள். சாமுவேலோடும், தாவீதோடும் கூட இருந்த கர்த்தர் உங்களோடும் இருப்பார்.

மூன்றாவது மரியாள். இவளும் தாவீது சாமுவேலைப்போல கர்த்தருக்கு தன்னை முழுவதுமாக ஒப்புக்கொடுத்தவள். "இதோ, நான்

ஆண்டவருக்க அடிமை, உம்முடைய வார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது என்றாள். அப்பொழுது தேவதூதன் அவளிடத்திலிருந்து போய்விட்டான்" (லூக்.1:38). இயேசுவை பிள்ளையாக சுமப்பதற்கு தன்னை முழுமையுமாக ஒப்புக்கொடுத்தவள். ஐயோ என்னை ஜனங்கள் என்ன நினைப்பார்கள். ஒரு கன்னி கற்பவதியாகி ஒரு பிள்ளையைப் பெற்றாள் அவளை இந்த சமுதாயம் ஏற்றக்கொள்ளுமா? போன்ற கேள்விகளை மற்றவர்களாக இருந்தால் கேட்டிருப்பார்கள். ஆனால் மரியாளோ அவ்விதமாக கேட்கவில்லை; தேவதூதனை சந்தித்தபோது இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை என்றாள்.

அநேக பெண்களுக்கு கிடைக்ககூடாத பாக்கியத்தை அந்நாட்களில் வாழ்ந்த இந்த மரியாள் பெற்றாள். இதனால் அவள் கிருபை பெற்றவளானாள். "அவள் இருந்த வீட்டில் தேவதூதன் பிரவேசித்து; கிருபை பெற்றவளே, வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார், ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றான்" (லூக்.1:28). கர்த்தர் மரியாளோடு கூட இருந்தார். கர்த்தரை மாம்சத்தில் சுமக்கிற ஒரு தாயாகவும் இருந்தாள். மேலும் அவள் சொல்லும்போது; "அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப்பார்த்தார்; இதோ, இதுமுதல் எல்லாச் சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள்" என்றாள் (லூக்.1:48).

ஆம், இன்றுவரை அவளை அநேகர் பாக்கியவதி என்று சொல்லுகிறார்கள். அந்த பாக்கியத்திற்கு ஏற்றவளாக தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப்பார்த்தார் என்றாள். அவள் தன்னை முழுவதுமாக தேவசமுகத்தில் அடிமையாக ஒப்புக்கொடுத்திருந்தாள். தன்னைத்தான் தாழ்த்துகிற எவனும் உயர்த்தப்படுவான் என்ற வசனத்தின்படி கர்த்தரால் உயர்த்தப்பட்டாள். கர்த்தரைப் பெற்று எடுத்த தாயாக மரியாள் இருந்தபோதும். அவள் கர்த்தருடைய வசனத்திற்கு கீழ்ப்படிந்தவளாகவும், அவருடைய உபதேசத்தின்படி நடக்கிற மற்றவர்களைப்போலவும் இருந்தாள். கானாவூர் கலியான வீட்டில் திராச்சரசம் குறைவு பட்டபோது, அவளுக்கு தகவல் கொடுக்கப்பட்டது. அங்கே அவள் என் மகன் என் வார்த்தையின்படி செய்வான் என்றோ அல்லது நான் சொன்னால் தட்டமாட்டான் என்றோ தான் அவரை பெற்ற தாய் என்றோ உரிமை பாராட்டியதாக வசனத்தில் இல்லை. மாறாக



"வேலைக்காரரை நோக்கி: அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதன்படி செய்யுங்கள் என்றாள்" (யோவா.2:5). இது அவளுடைய கீழ்படிதலையும், அடிமையாக ஒப்புக்கொடுத்தலையும் காட்டுகிறது.

**கேள்வி நேரம்**

**நான் உமது அடியேன் என்று சொல்ல நீங்கள் செய்யவேண்டியது என்ன?**

தாவீதைப்போலவும், சாமுவேலைப்போலவும், மரியாளைப் போலவும் ஒப்புக்கொடுங்கள். உங்களுக்காக ஜெபிக்கின்றோம்.

## 25. பாவம் எப்படி நிவர்த்தியாகும்?
## How is Sin Purged?

**த**ன்னுடைய பாவத்தைப் போக்க மனிதன் பல வழிகளை கையாளுகிறான். உயர்ந்த மலைகளுக்கும், கடல்களுக்கும், ஆற்றுஓரங்களிலும் சென்று தன்னுடைய பாவத்தை போக்க முயற்சிக்கிறான். இதனால் அவனுடைய பாவம் போகும் என நம்புகிறான். ஆனால் அவனுடைய பாவத்தை அவனே கழுவமுடியாது என்பதை அறியாது வீணாக பிரயாசம் கொள்ளுகிறான். பாவத்தைப் போக்கும் வழியை பரிசுத்த வேதாகமம் தெளிவாக நமக்குப்போதிக்கிறது. "கிருபையினாலும் சத்தியத்தினாலும் பாவம் நிவிர்த்தியாகும்; கர்த்தருக்குப் பயப்படுகிறதினால் மனுஷர் தீமையை விட்டு விலகுவார்கள்" (நீதி.16:6).

கிருபை என்பது இரக்கம். சத்தியம் என்பது தேவன் சத்தியபரர். தேவன் கிருபையாய் இரங்கி நம்மை இரட்சிக்கும்போது பாவம் நிவிர்த்தியாகும். இதினால் நடைபெறுகிற காரியம் என்ன? மனுஷர் தீமையை விட்டு விலகுவார்கள். நாடும் வீடம் நலமாக இருக்கும். இந்த கிருபையையும் சத்தியத்தையும் நாடாதபடியால் நாடும் வீடும் சண்டையிட்டுக்கொண்டே இருக்கிறது. பாவமும் தேசத்தில் பெருகிக்கொண்டே இருக்கிறது. வளர்க்கவேண்டிய சத்தியத்தை தேசம் நோக்கிப்பார்க்கவேண்டும். ஒரு நாடு மற்றொரு நாட்டோடு சண்டை இடுவதற்கான ஆயத்தப்பணிகளை செய்கிறது. பாவம் பெருகியிருக்கிறதை உணரவில்லை. "நியாயப்பிரமாணம் மோசேயின்

மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின" (யோவா.1:17). கிருபைக்கும் சத்தியத்திற்கும் மூலகாரணமாயிருப்பவர் ஆண்டவர் இயேசு. இவர் மூலமாகவே தேவன் உலகத்தை இரட்சிக்க திட்டம் கொண்டார்.

"இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று" (ரோம.5:12). எப்படி மனுஷனுடைய உடலில் ஒரு பகுதியில் நோய்கிருமிகள் தொற்றிக்கொண்டு உடல் முழுவதிலும் பாதிப்பை ஏற்படுத்துகிறதோ அதைப்போல முதல் முதலாக தேவனால் உண்டாக்கப்பட்ட மனுஷன் மூலமாக பாவம் உள்ளே பிரவேசித்து மரணத்தை உண்டாக்கியது.

இந்த பாவத்தை போக்க, பரம வைத்தியராகிய தேவன் ஏசாயா தீர்க்கன் மூலமாக சொல்லும்போது; "வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார், உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பரச்சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்" என்கிறார் (ஏசா.1:18). எப்பேர்பட்ட பாவியையும் அவன் மனந்திரும்பும்போது; கர்த்தர் மன்னிக்கவும் அவனுடைய பாவத்தை கழுவவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார். இன்றே உங்களுடைய பாவங்கள் கழுவப்பட சத்தியபரராகிய இயேசுவுக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள். "பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்" (ரோம.6:23).

பாவத்திற்கு கீழ்ப்படிந்த ஆதாம் மரித்தான். பாவம் ஒரு மனிதனுக்கு பரிசாக மரணத்தை மட்டுமே கொடுக்கமுடியும். ஆனால் சத்தியத்திற்கு ஒருவன் கீழ்ப்படியும்போது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்ளமுடியும். "ஆதலால் பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டுகொண்டதுபோல, கிருபையானது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நீதியினாலே நித்தியஜீவனுக்கு ஏதுவாக ஆண்டுகொண்டது" என காண்கிறோம்



(ரோம.5:21). நீங்கள் எந்த ஆளுகைக்குள் இருக்கின்றீர்கள்? பாவத்தின் ஆளுகைக்குள்ளா? அல்லது கிருபையின் ஆளுகைக்குள்ளா?

கிருபை என்று பார்க்கும்போது, "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" என வாசிக்கிறோம் (யோவா.3:16). இயேசுவை விசுவாசிக்கிறவன் கெட்டுப்போகாமல் நித்திய வாழ்வை அடையவேண்டும் என்பதற்காக அவரைத் தந்தருளினார். பாவத்தில் இருக்கும் மனிதனை மீட்க பாவமற்ற பரித்தரை கொடுத்து தேவன் நம்மீது அன்புகொண்டார். இந்த அன்பு எப்படிப்பட்ட அன்பு? "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்" (ரோம.5:8). இந்த அன்பை நீங்கள் புரிந்துகொள்வீர்களானால் பாவத்துக்கு செத்து நீதிக்கு பிழைப்பீர்கள்.

தேவன் நமது சிருஷ்டிகராயிருக்கிறார். அவரால் மனுஷன் ஆதியிலே சிருஷ்டிக்கப்பட்டான். தேவனுடைய சாயலாகவும் மனுஷன் இருக்கிறான். ஆனபடியாலே தேவன் உலகத்தில் உள்ள எல்லாவற்றைக்காட்டிலும் மனுஷனை அவர் நேசித்தார். மனுஷன் தேவனுடைய ஆவியைப் பெற்றபடியினாலே, மனுஷன் மரித்தபின்பு அவனுடைய ஆவி தன்னைத்தந்த தேவனிடத்தில் செல்லுகிறது. இதை நீங்கள் அறிவீர்களா?

கர்த்தருடைய இரக்கத்தினாலே நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம் என பவுல் தீத்துவுக்கு எழுதின கடிதத்தில் வாசிக்கிறோம். "தமது கிருபையினாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டு, நித்திய ஜீவனுண்டாகும் என்கிற நம்பிக்கையின்படி சுதந்தரராகத்தக்கதாக...". தேவனுடைய கிருபை ஒரு மனிதனை நீதிமானாக்குகிறது. எந்த ஒரு மனிதனும் தேவனுடைய கிருபையில்லாமல் நீதிமானாக முடியாது. சிலர் சொல்ல கேள்விப்பட்டிருப்பீர்கள். அவர் மிகவும் நல்லவர் என்று சொல்லுவார்கள். அவர் நல்லவரா அல்லது கெட்டவரா என்தை தீர்மானிக்கவேண்டியவர் தேவன். தேவன் ஒருவரே மனுஷனை அறிவார், மற்றொருவரும் அறியார்கள். இரட்சிப்பு தானாக ஏற்படுவதில்லை; "தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய

மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப் பட்டீர்கள்" (எபே.2:4,5). நாம் இரட்சிக்கப்பட்டது அவருடைய கிருபையினால் உண்டானது. நம்முடைய நீதியினாலே அல்லது நற்காரியங்களினாலோ நாம் இரட்சிக்கப்பட முடியாது என்பதை இவ்வசனங்கள் நமக்கு போதிக்கிறது. அநேகர் நற்கிரியைகளைச் செய்தால் புண்ணியம் கிடைக்கும் மோட்சம் கிடைக்கும் என்று பலவிதமான தான தர்மங்களை செய்கிறார்கள்.

அவைகளை ஒவ்வொரு மனிதனும் கட்டாயம் செய்யவேண்டும். ஆனால் அந்தவிதமான தான தர்மங்களே அந்த மனிதனை இரட்சிக்கப்போதுமானது அல்ல என்பதை புரிந்துகொள்ளுங்கள். பாவத்திலே கிடக்கிற மனுஷனை பரிசுத்த ஆண்டவர் இயேசுவின் இரத்தம் மாத்திரமே கழுவ வல்லது. எந்த ஒரு மனிதனும் தன்னைத்தானே கழுவிக்கொள்ளமுடியாது. எந்த மனுஷம் நல்லவன் அல்ல. எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களானோம் என வேதம் போதிக்கிறது. ஆகையால், "கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு" என பவுல் நமக்கு தெளிவு படுத்துகிறார் (எபே.2:8).

பாவத்தைக்குறித்தும் கிருபையைக்குறித்தும் பார்த்தோம். இனி சத்தியத்தைக்குறித்து தியானிப்போம்; சத்தியம் சத்தியம் என்று எங்கும்பேசப்படுகிறது. இயேசு சொல்கிறார்; "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று (யோவா.14:6). இந்த சத்தியபரராகிய இயேசுவை ஒருவர் அறியாமல் பாவத்திலிருந்து விடுதலையடைய முடியாது. இவர் ஒருவரே பாவத்திற்கான பரிகாரி.

பாவத்தில் கிடக்கும் ஒருவரை, பாவத்தில் ஜீவித்துக்கொண்டு இருக்கும் அல்லது அந்த பாவியைப்போல பாவமுள்ள உலகத்தில் இருக்கும் ஒருமனிதனால் மீட்க முடியாது. ஏனெனில் அவனும் பாவத்தில் இருக்கும் ஒரு பாவியாக இருக்கிறான். சேற்றில் விழுந்து கிடக்கும் இருவரை கரையில் இருக்கும் ஒருவர் காப்பாற்றவேண்டும். சேற்றில்



கிடக்கும் இருவரில் ஒருவர் ஒருவரை காப்பாற்ற முடியாது அல்லவா! அதைப்போல பாவத்தில் வீழ்ந்துகிடக்கும் ஒரு பாவியை மீட்க பாவமில்லாத இடத்திலிருந்து வந்த இயேசுவாலே முடியும். ஆகையால், "நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்" (1யோவா.2:2). பாவத்தைப்போக்கும் பலியாக இயேசுவை பிதாவாகிய தேவன் தெரிந்துகொண்டார். அவர் சர்வலோகத்தின் பாவத்தையும் போக்கும் பலியாக இருக்கிறார்.

இயேசுவுக்கு முன்னோடியாக வந்த யோவான்ஸ்நானகன் இவரைக்குறித்து சொல்லும்போது; "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" என்றான் (யோவா.1:29). ஆட்டுக்குட்டிகள் மனிதனுடைய பாவத்தைப்போக்க முற்பிதாக்களின் காலங்களில் செலுத்தப்பட்டு வந்ததை நாம் அறிவோம். ஆகையால் யோவான்ஸ்நானன் சொல்லும்போது; உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி என்றான். ஆம், அவர் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட தேவ ஆட்டுக்குட்டி. வாய்திறவாத ஆட்டுக்குட்டியைப்போல பாவத்திற்கான பலியாக தம்மை ஒப்புக்கொடுத்தார். அவர் எதிர்பேசவுமில்லை, கூக்குரல் இடவுமில்லை. பிதாவினிடத்தில் ஆவியை ஒப்புக்கொடுத்தார். இவரை நீ விசுவாசிக்கிறாயா? இயேசுவை நீ விசுவாசித்தால் நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்ளுவாய், உன்னுடைய பாவங்களை கர்த்தர் மன்னித்து தம்முடைய சபையில் சேர்ப்பார். நித்திய காலமெல்லாம் அவரோடே இருக்கும் பாக்கியத்தை அடைவாய்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் வாசகரே, உங்களுடைய பாவங்கள் கழுவப்பட அல்லது மன்னிக்கப்பட கிருபையும் சத்தியமும் வேண்டும். இவை இரண்டையும் உடையவர் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து. அவரை பிதாவாகிய தேவன் தெரிந்து கொண்டார். "அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது"

(யோவா.1:44). இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக கிருபையும் சத்தியமும் நிறைந்த ஆண்டவர் அவர்களுக்குள்ளோ மனிதர்கள் பார்க்கும்படியாக வாழ்ந்தார். அவருடைய மகிமையைக் கண்டார்கள். அது ஒரே பிதாவுடைய ஒரே பேறானவருடைய குமாரனுடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது. சத்தியத்தின் சொருபியாக உருவமாக இப்பூமியில் வந்தார். அவரைப்பார்த்தார்கள், அவரோடு உண்டு உறங்கினார்கள், அவருடைய அற்புதங்களை பார்த்தர்கள், பெற்றுக்கொண்டார்கள், அதிசயமானவைகளை கண்டு ஆச்சரியப் பட்டார்கள். எந்த ஒரு மனுஷனாலும் செய்ய முடியாதவைகளை கர்த்தர் அந்நாட்களில் செய்து தான் தேவனிடத்திலிருந்து வந்தவர் என்பதை உறுதிப்படுத்தினார். அன்பானவர்களே, இவரைப்பற்றிக்கொண்டு உங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட உங்களை ஒப்புக்கொடுங்கள்.

### கேள்வி நேரம்

**கர்த்தர் ஒவ்வொருவரையும் எப்படி பரிசுத்தமாக்குகிறார்?**

கறைகள் பட்டுவிட்டால் தண்ணீர் வைத்து கழுவுகிறோம் அல்லது பலவிதமான சோப்புகளை பயன்படுத்தி அதை சரிசெய்கிறோம். மனிதனுடைய பாவத்தை போக்குவது இயேசுவின் இரத்தம். இந்த இரத்தம் கழுவப்படுவதற்கு முன்பு அவர் தம்முடைய வசனத்தை முதலாவது கொடுக்கிறார். "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்" என காண்கிறோம் (யோவா.17:17). இயேசுவானவர் எந்த ஒரு பாவியையும் அப்படியே எடுத்து தாம் சிந்திய இரத்தத்தினாலே அவனுடைய பாவத்தைக் கழுவுவதில்லை. அவன் முதலாவது அவரைநோக்கி வரவேண்டும். விசுவாசம் கேள்வியினாலே வரும் கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் என்ற வசனத்தின்படி ஒருவருக்குள் தேவனுடைய வசனத்தைக்கேட்டு விசுவாசம் எழும்பவேண்டும்.

இந்த விசுவாசமும் வசனத்தினாலே ஏற்படவேண்டும். தேவன் சத்தியமுள்ளவர் ஆகையால் ஒவ்வொருவரையும் சத்தியத்தின்படியே இரட்சிக்க சித்தமுள்ளவராயிருக்கிறார். எனவே கர்த்தருடைய வசனத்திற்கு அதாவது சத்தியத்திற்கு முதலாவது செவிகொடுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



## 26. ஒரே மந்தை, ஒரே மேய்ப்பன்
## One Flock and One Shepherd

**வே**தாகமத்தில் அநேக ஒன்றுகளைப் பார்க்கிறோம். அதைப்போல கர்த்தருக்கு அநேக சபைகள் இல்லை. அநேக இடத்தில் சபையாக கூடிவந்தாலும் அது கர்த்தருடைய சபையாகத்தான் இருக்கிறது. அதற்கு ஒரே மேய்ப்பராக இயேசுவானவர் இருக்கிறார். "இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவரவேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்" (யோவா.10:16). இயேசுவின் சத்தம் கேட்டு அவருடைய வசனத்திற்குக் கீழ்ப்படிகிற யாவரையும் அவருடைய மந்தையில் சேர்க்கிறார். அப்பொழுது அது ஒரே மந்தையாக இருக்கிறது. ஒரே மேய்ப்பன் அதற்கு இருக்கிறார்.

ஒரே மந்தை என்று பார்க்கும்போது; "மோசே ஆரோன் என்பவர்களின் கையால், உமது ஜனங்களை ஒரு ஆடுமந்தையைப் போல வழிநடத்தினீர்" என்று சங்கீதக்காரன் சொல்லுகிறான் (சங்.77:20). இஸ்ரவேலை வழிநடத்தின கர்த்தர் ஒரு ஆடுமந்தையைப் போல அவர்களை வழிநடத்தினார். ஆறு லட்சம்பேர் நாற்பது ஆண்டுகளாக வனாந்திரத்தில் வழிநடத்தப்பட்டார்கள். அவர்களை வழிநடத்தின தேவன் அநேக அற்புதங்களினாலும் அடையாளங் களினாலும் அவர்களுக்கு முன்னே சென்றார். ஒவ்வொருவனும் ஒரு பொருளை தனக்குள்ளது என்று சொல்லவில்லை. அனைவரையும் மன்னாவினாலும், காடைகளினாலும், கன்மலையிலிருந்து புறப்பட்ட தண்ணீரினாலும் போஷித்து வழிநடத்தினார். ஏசாயா சொல்லும்போது; "மேய்ப்பனைப்போலத் தமது மந்தையை மேய்ப்பார்; ஆட்டுக்குட்டிகளைத் தமது புயத்தினால் சேர்த்து, தமது மடியிலே சுமந்து, கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார்"(ஏசா.40:11).

இஸ்ரவேலை அந்த விதமாக நாற்பது ஆண்டுகள் வழிநடத்தினார். அவர்களுடைய வஸ்திரம் பழையதாய் போவில்லை, அவர்களுடைய பாதரட்சை தேய்ந்துபோகவில்லை. ஒரே மந்தையை அவர் தெரிந்துகொண்டபடியால் அந்த மந்தைக்கு வேண்டியவற்றை

மேய்ப்பனானவன் போஷிக்கிறதுபோல தமது மந்தையை போஷித்தார். "பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்" என்று யூத ஜனங்களுக்கு சொல்லப்பட்டது (லூக்.12:32). யூதர்கள் உலகளவில் ஒரு சிறுமந்தையாக இருந்தார்கள். அந்த சிறுமந்தையில் உலகத்தை இரட்சிக்கும் இரட்சகர் இயேசு பிறந்தார்.

யூதேயாவிலே ஆயிரங்களுக்குள்ளே பெத்லகேம் சிறிதாக இருந்தாலும் இஸ்ரவேலை ஆளும் இராஜா உன்னிடத்திலிருந்து புறப்படுவார் என்று சொல்லப்பட்ட தீர்க்கதரிசனத்தின்படி இயேசுவானவர் யூதேயாவில் உள்ள பெத்லகேம் என்னும் சிற்றூரில் பிறந்தார். பின்பு நாசரேத்தில் வளர்க்கப்பட்டார் என காண்கிறோம்.

இந்த சிறுமந்தை தேவனுடைய மந்தையாக இருக்கிறது. ஆகையால், "உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள்" (1பேது.5:2,3).

மந்தைக்கு மாதிரிகளாக மூப்பர்களும் உதவிக்காரர்களும் பணியாற்றுகிறவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் கிறிஸ்துவுக்கு அடுத்தபடியாக இருந்துகொண்டு சபையின் காரியங்களை கண்காணிப்புச் செய்யவேண்டியவர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்குறிய தகுதியாம்சங்களை தீமோத்தேயு, தீத்து போன்ற புத்தகங்களில் படிக்கிறோம். இவர்கள் தேவனுடைய மந்தையை மேய்க்கவேண்டும் ஆனால் கட்டாயத்தினால் அல்ல. மனப்பூர்வமாக, அவலட்சணமான ஆதாயத்திற்கு அல்ல, உற்சாக மனதோடு கர்த்தருடைய பணியைச் செய்யவேண்டியவர்கள். பிரதான மேய்ப்பராகிய இயேசு மந்தைக்காக ஜீவனைக் கொடுத்தார். அவர் ஏதாவதென்றை எதிர்பார்த்து தன் ஜீவனைக் கொடுக்கவில்லை. மந்தையை மீட்கும்படியாகவும், அதை பரிசுத்தமுள்ளவையாக தமக்கு முன் நிறுத்திக்கொள்வதற்காகவும் ஒப்புக்கொடுத்தார். அதைப்போல மூப்பர்களும், உதவிக்காரர்களும் மந்தைக்கு மாதிரியாக இருந்து கண்காணிப்பு செய்யவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.



இவர்களிடத்தில் உக்கிராண உத்தியோகம் கொடுக்கப்பட்டுள்ளது. சில மூப்பர்களைக்குறித்து நாம் கேள்விப்படுகிறோம். மந்தையை அடித்து சாப்பிடும் மூப்பர்களாகவும், அவைகளைப் பங்கிட்டுக்கொள்ளும் கொள்ளையர்களாகவும் செயல்படுவதாக கேள்விப்படுகிறோம். இவர்கள் பிரதாதான மேய்ப்பர் வெளிப்படும்போது; மந்தையைக்குறித்த கணக்கை ஒப்புவிக்கவேண்டியவர்களாக இருப்பார்கள். மந்தைக்காக தம்ஜீவனைக் கொடுத்தவர் அவர்களுக்கு நியாயாதிபதியாக வருவார். ஒருவரும் தப்பிக்கொள்ள முடியாது. யாவரும் கணக்குகொடுத்தாக வேண்டும்.

இந்த மந்தை உலகத்தில் பிரித்தெடுக்கப்பட்ட மந்தை, இவர்கள் தேவனுடைய சமுகத்தில் பிரவேசிப்பார்கள். இவர்கள் இனி வருத்தப்படுவதுமில்லை, சஞ்சலப்படுவதுமில்லை. பசியடைவது மில்லை, தாகமடைவதுமில்லை ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து ஜீவதண்ணீரண்டை நடத்துவார். இந்த மந்தையில் உங்களை நீங்கள் இணைத்துக்கொண்டீர்களா? உலகத்தில் அநேக மந்தைகள் அவருடைய நாமத்தை தரித்துக்கொண்டு நாங்கள் அவருடைய மந்தையின் ஆடுகள் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். உண்மையில் அவர்கள் அவருடைய மந்தையின் ஆடுகளா? அப்படியானால் அவருடைய வசனத்தின்படி வாழ்கிறார்களா? அவர் ஏற்படுத்தின சபையில் அங்கமாயிருக்கிறார்களா? அவர் ஒரே மந்தையை ஏற்படுத்தியுள்ளார்.

அந்த மந்தை சத்தியத்திற்கு தூணும் ஆதாரமுமாயிருக்கிறது. கர்த்தருக்கு சாட்சியுள்ள சபையாக இருக்கிறது, கிறிஸ்துவின் வாசனையை வெளிப்படுத்துகிறது. அநேகரை அவருடைய மந்தையில் சேர்க்கிறது. பிரிவினையை வண்மையாக கண்டிக்கிறது. இந்த மந்தையை அடையாளம் கண்டுகொண்டு அந்த மந்தையில் இருக்கப் பிராயசப்படுங்கள்.

ஒரே மேய்ப்பன். ஒரே மந்தை என்றால் அந்த ஒரே மந்தைக்கு ஒரே மேய்ப்பன் மாத்திரமே இருக்கமுடியும். அநேக உடன்மேய்ப்பர்கள் இருக்கலாம் அவர்களெல்லாம் அந்த மந்தையின் மேய்ப்பனாகிவிட முடியாது. அந்த மந்தையின் மேய்ப்பன் அந்த மந்தைக்காக ஜீவனைக் கொடுத்தவர். பவுல் சொல்லும்போது பவுலா உங்களுக்காக சிலுவையில்

அறையப்பட்டான், பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள் என்று கேட்கிறான். ஆகையால் சிலுவையில் இரத்தம் சிந்தியவர் மந்தையை தம்முடைய இரத்தத்தினாலே விலைக்கு வாங்கியிருக்கிறார். அவர் மந்தையின் மேய்ப்பனாக இருக்கிறார். முற்பிதாக்களின் காலத்தில் மோசே தாவீது போன்ற மேய்ப்பர்களை தேவன் அவர்களுக்கு ஏற்படுத்திக்கொடுத்தார்.

ஜனங்கள் தாவீதை நோக்கி: "சவுல் எங்கள்மேல் ராஜாவாயிருக்கும்போதே இஸ்ரவேலை நடத்திக்கொண்டுபோனவரும் நடத்திக்கொண்டுவந்தவரும் நீரே; கர்த்தர்: என் ஜனமாகிய இஸ்ரவேலை நீ மேய்த்து, நீ இஸ்ரவேலின்மேல் தலைவனாயிருப்பாய் என்று உம்மிடத்தில் சொன்னாரே என்றார்கள்" (2சாமு.5:2). இப்படிப்பட்ட தலைவர்கள் அதாவது ராஜாக்கள் அவர்களை மந்தைக்கு மாதிரிகளாக இருந்து கண்காணித்தார்கள். தாவீதை என் தாசன் என்று கர்த்தர் பல இடங்களில் சொல்லியிருக்கிறார். அவனுக்கு பின் வந்த ராஜாக்களை எச்சரிக்கும்போது தாவீதைப்போல நீ செம்மையாய் என்னைப்பின்பற்ற வில்லை என்று தம் தீர்க்கதரிசிகளைக்கொண்டு அவர்களோடு பேசிவந்தார். அந்த அளவு தாவீதை எல்லாவற்றிலும் ஒரு சிறப்பான மேய்ப்பனாக கண்டார். இந்த தாவீது தான் ஒரு நல்ல மேய்ப்பன் என்று பிரபகண்டா செய்துகொள்ளவில்லை.

அவன் சொல்லும்போது; "கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்" என்கிறான் (சங்.23:1). தாவீது ராஜாவாக இருந்தபோது அவனுடைய மேய்ப்பராக கர்த்தர் இருந்தார். இன்றைக்கு இவனைப்போல அந்த ஒரே மேய்ப்பரை உங்களுடைய மேய்ப்பராக கொள்ளுவீர்களானால் மெய்யான மேய்ச்சலைக் கண்டடைவீர்கள். அப்பொழுது நீங்கள் தாழ்ச்சியடையாமல் புஷ்டியும் செலுமையுமாக இருப்பீர்கள். "என் ஆடுகளை நான் மேய்த்து, அவைகளை நான் மடக்குவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்" (எசே.34:15). நீங்கள் அவருடைய ஆடுகளாயிருப்பீர்களானால் அவர் உங்களை மடக்கும்போது அவருடைய சத்தம்கேட்டு கீழ்ப்படிகிற ஆடுகளாக இருக்கவேண்டும். பெயரளவில் அவருடைய ஆடுகளாக இருந்துகொண்டு, உங்களுடைய விருப்பப்படியும் அல்லது உங்களை வழிநடத்துகிறவர்கள் விருப்பப்படியும் செய்வீர்களானால் நீங்கள்



கர்த்தருடைய மந்தையின் ஆடுகளாயிராமல் உலகத்தின் ஆடுகளாயிருப்பீர்கள். உங்களைப் பார்த்து ஒருவர் இப்படிச் சொல்லுகிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். இவர் ஞாயிற்றுகிழமை சபைக்கு செல்லமாட்டார். ஆனாலும் இவர் தன்னை கிறிஸ்தவர் என்று சொல்லிக் கொள்ளுவார்.

இந்த இடத்தில் உங்களைப் பார்த்து சொன்ன ஒருவரின் வார்த்தைப்படி நீங்கள் நடந்துகொள்வீர்களானால்; உங்களுக்காக இரத்தம் சிந்தி உங்களை பாவத்திலிருந்து விடுவித்து உங்களை பரிசுத்தப்படுத்தி, உங்களை தன்னுடைய மந்தையின் ஆடுகளாக வைத்திருக்கும் அந்த மேய்ப்பனுக்கு எப்படியிருக்கும் என்பதை சற்றே சிந்திக்கும்படி உங்களை கேட்டுக் கொள்ளுகிறேன். நீங்கள் அவருடைய மந்தையின் ஆடுகள் என்று சொல்வீர்களானால் நீங்கள் கர்த்தருடைய வசனத்தின்படி நடந்துகொள்ளுங்கள். அப்பொழுது அது உங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும்.

"நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்" என்றார் (யோவா.10:11). கூலியால் ஓநாய் வருவதைக் கண்டவுடனே மந்தையை விட்டு தன் ஜீவன் தப்ப ஓடிவிடுவான். ஏனென்றால், அவன் கூலியால் கூலிக்கா வேலை செய்கிறவன். அவன் மந்தையைக்குறித்து கவலைப்படமாட்டான். ஆண்டவர் மந்தைக்காக தன் ஜீவனைக் கொடுத்தவர். அவர் மந்தையின் மீது கவனமுள்ளவராயிருக்கிறார். தன் ஆடுகளை முடிவிலே தேவனுடைய சமுகத்திற்கு கொண்டுபோய் சேர்ப்பார். அப்பொழுது முடிவு உண்டாகும். அதுவரை அவர் தம்முடைய மந்தையை போஷித்து, நேசித்து, பாதுகாத்து, பராமறித்து வழிநடத்துகிறார் என காண்கிறோம்.

அன்பு வாசகரே, மந்தையின் ஆடுகளே, நீங்கள் அவருடைய ஆடுகளாயிருப்பீர்களானால்; அவருடைய சத்தம் கேட்டு கீழ்ப்படிந்து மற்ற ஆடுகளும் ஒரே மந்தையில் சேர ஒத்துழைப்பாயிருங்கள். ஒருவேளை நீங்கள் அருடைய மந்தையின் ஆடுகளாயிராவிட்டால் இன்றே அவருடைய மந்தையில் சேர்க்கப்பட பிரயாசப்படுங்கள். உலகத்திற்கே வெளிச்சம் கொடுக்கும் ஒரே சூரியன் அநேக நன்மைகளை நமக்கு கொடுப்பதைப்போல, உலகத்தில் உள்ள அனைத்து ஆத்துமாக்களையும்

நேசிக்கும் ஆண்டவர் ஒரே மேய்ப்பராயிருக்கிறார். அவர் உலகத்தையே இரட்சிக்கும் இரட்சகராயிருக்கிறார். அவரே வழியாகவும் சத்தியமாகவும் ஜீவனாகவுமிருக்கிறார். அவருடைய மந்தையின் ஆடுகளாயிருந்து ஆசீர்வதிக்கப்படுங்கள்.

**கேள்வி நேரம்**

**அவருடைய மந்தையின் ஆடுகளாகிய நாம் யார்?**

மனுஷர் என்று வேதம் போதிக்கிறது. தேவன் மனிதனை மண்ணினாலே உண்டாக்கினார். நாசியிலே அவர் ஜீவசுவாசத்தை ஊதும்போது; மனுஷன் ஜீவஆத்துமாவானான் என காண்கிறோம். இவன் அவருடைய மந்தையின் ஆடுகளாயிருக்கிறான். "என் மந்தையும் என் மேய்ச்சலின் ஆடுகளுமாகிய நீங்கள் மனுஷர்; நான் உங்கள் தேவன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொல் என்றார்" (எசே.34:31).

நாம் மனுஷர் என்றும், மண்ணிலிருந்து எடுக்கப்பட்டவர்கள் என்பதை நாம் என்றுமே மறந்துபோய்விடாதிருக்க வேண்டும். மனிதன் கொஞ்சம் கற்றுக்கொண்டவுடன் தன்னை மறந்து மேட்டிமை கொள்ள ஆரம்பிப்பான். மனிதனால் ஒரு சிறு காரியத்தைக்கூட தானாக செய்ய முடியாது என்பதுவே உண்மை. ஆனபடியால் நாம் அவருடைய மேய்ச்சலின் ஆடுகளாக இருந்துகொண்டு கர்த்தர் கொடுக்கிறவைகளை புஷித்துக்கொண்டு அவர் சத்தம் கேட்டு கீழ்ப்படிகிற ஆடுகளாக இருந்து தேவனை மகிமைப்படுத்த வேண்டும். மிருக ஜீவன்களும், பறவைகளும் அவரை நன்றியுடன் துதிக்கின்றன என சங்கிதம் 150-ல் வாசிக்கிறோம். நாம் அவைகளைக் காட்டிலும் சிறப்பாக உண்டாக்கப்பட்டவர்கள். ஆகையால் அவருடைய மந்தையின் ஆடுகளாக இருங்கள். உங்களுக்கா ஜெபிக்கிறோம்.

## 27. துணிவு
## Boldness

**ந**ல்விஷயத்தில் துணிவு மிகவும் அவசியம். துணிந்தவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் வெற்றியை அடைந்திருக்கிறார்கள். கர்த்தருக்குள் துணிந்து செயல்பட்ட ஒரு சிலரைக்குறித்து



இச்செய்திவேளையில் தியாணிக்கவுள்ளோம். முதலாவது எஸ்தர் என்ற பெண்மணியைக்குறித்து தியாணிக்கலாம். இவள் இந்து தேசம்முதல் எத்தியோப்பியா தேசம்வரைக்குமுள்ள 127 நாடுகளையும் அரசாண்ட அகாஸ்வேருவின் நாட்களில் வாழ்ந்தவள். மொர்தெகாய், ஆத்தாகு என்ற பிரதானியிடம்; "யூதர்களை அழிக்கும்படி சூசானில் பிறந்த கட்டளையின் நகலையும் அவனிடத்தில் கொடுத்து, அதை எஸ்தருக்குக் காண்பித்துத் தெரியப்படுத்தவும், அவள் அகத்தியமாய் ராஜாவிடத்திற் போய், அவனிடத்தில் தன் ஜனங்களுக்காக விண்ணப்பண்ணவும் மன்றாடவும் வேண்டுமென்று அவளுக்குச் சொல்லச் சொன்னான்" (எஸ்த.4:8).

இதை அறிந்த எஸ்தர் தன் குலத்தாருக்கு விரோதமாக பிறப்பிக்கப்பட்ட கட்டளையை நினைத்து கலங்கினவளாக, மொர்தெகாய்க்கு பிரதியுத்தரமாக; "யாராவது அழைப்பிக்கப்படாமல், உள்முள்ளத்தில் ராஜாவினிடத்தில் பிரவேசித்தால், புருஷரானாலும் ஸ்திரீயானாலும் சரி, அவர்கள் பிழைக்கும்படிக்கு அவர்களுக்கு ராஜா பொற்செங்கோலை நீட்டினாலொழிய மற்றபடி சாகவேண்டும் என்கிற ஒரு தவறாத சட்டமுண்டு, இது ராஜாவினுடைய சகல ஊழியக்காரருக்கும், ராஜாவினுடைய நாடுகளிலுள்ள சகல ஜனங்களுக்கும் தெரியும்; நான் இந்த முப்பது நாளளவும் ராஜாவினிடத்தில் வரவழைப்பிக்கப்படவில்லை என்று சொல்லச் சொன்னாள்" (எஸ்த.4:11).

அந்நாட்களில் அழைப்பிக்கப்படாமல் ராஜாவினிடத்தில் செல்வது என்பது மிகவும் கடுமையான சட்டமாக இருந்தது. ராஜா பொற்செங்கோலை நீட்டாவிடில் அவர்களுக்கு மரணம் நிச்சயம். இப்படிப்பட்ட தவறாத சட்டம் இருந்தது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் யூதர்களை அழிக்கும்படியாக ஆமான் மூலமாக வெளியான இச்சட்டத்தை தடுத்த நிறுத்த எஸ்தர் ராஜாவை பார்க்கவேண்டிய நிலையில் இருந்தாள். ஆகவே ஒரு தீர்மானம் எடுத்து மொர்தெகாய்க்கு பிரதியுத்தரமாக: "நீர் போய், சூசானில் இருக்கிற யூதரையெல்லாம் கூடிவரச்செய்து, மூன்றுநாள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலுமிருந்து, எனக்காக உபவாசம்பண்ணுங்கள்; நானும் என் தாதிமாரும் உபவாசம்பண்ணுவோம்; இவ்விதமாக சட்டத்தை மீறி, ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன்; நான் செத்தாலும் சாகிறேன் என்று

சொல்லச்சொன்னாள்'' (எஸ்த.4:16). எஸ்தர் துணிந்து நான் செத்தாலும் சாகிறேன் என்று சொன்னாள். அவளுடைய துணிவு எப்படிப்பட்டதென்று பார்த்தீர்களா? துணிந்தவர்களுக்கு முன்னிருக்கிற காரியம் தூசிபோன்றது. ராஜாவுடைய கண்களில் இவளுக்கு தயவு கிடைத்தது. இதினாலே தன் குலமக்களுக்கு வரவிருந்த ஆபத்திலிருந்து 127 நாடுகளிலும் இருந்த யூதர்களை காப்பாற்றினாள்.

ஒருவளுடைய துணிச்சலினால் அநேகர் காப்பாற்றப்பட்டார்கள். ஒருவேளை இவள் தன் உயிரை பெரிதாக கருதியிருப்பாளேயானால் என்ன நடந்திருக்கும்? இவள் சுகபோகமாக வாழ்ந்திருப்பாள். ஆனால் யூதருக்கு இரட்சிப்பு வேறுவழியில் வந்திருக்கும். இவள் தன்னை முழுவதுமாக அர்ப்பணித்தபடியில் யூதர்களுக்கு இருந்த சஞ்சலம் சந்தோஷமாகவும், அவர்கள் துக்கம் மகிழ்ச்சியாகவும் மாறினது. இதினாலே பூரீம் பண்டிகை வந்தது.

**இரண்டாவது யோசேப்பின் துணிவு:** இந்த யோசேப்பு இயேசுவின் அந்தரங்க சீஷன். வெளிப்பிரகாரமாக வாழ்ந்த பன்னிரெண்டு சீஷர்களும் இயேசுவைப் பிடித்தவுடன் நான்கு திசைகளிலும் சிதறப்பட்டுப்போனார்கள். ''மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும் என்று எழுதியிருக்கிறபடி'' எல்லோரும் சிதறப்பட்டுப்போனார்கள். இதினாலே ஆண்டவர் இயேசு சோர்ந்துபோகவில்லை; ''தீர்க்கதரிசிகள் எழுதியிருக்கிற வசனங்கள் நிறைவேறும்படி இவைகளெல்லாம் சம்பவிக்கிறது என்றார். அப்பொழுது சீஷர்களெல்லாரும் அவரைவிட்டு ஓடிப்போனார்கள்'' (மத்.26:56).

தலைவனுக்கு ஒரு பிரச்சனை என்றால்; அவனுடைய தொண்டர்கள் இந்நாட்களில் பல இடங்களில் தீயிடுதலும், பஸ்மறியலும், அரசுக்கு பல சேதங்களை ஏற்படுத்துகிறார்கள். ஆனால் இயேசுவைப் பிடித்தவுடன் மூன்றரை ஆண்டுகளாக அவரோடு உண்டு, உறங்கி, பலவிதமான அற்புதங்களை தங்கள் கண்களாலே கண்ட அப்போஸ்தலர்கள் தங்களையும் பிடித்து கொலைசெய்து போடும்படியாக கொண்டுபோவார்கள் என்று அறிந்து தங்களுடைய ஜீவன் தப்ப ஓடிப்போனார்கள். அவர்கள் மெதுவாக கடந்து சென்றார்கள் என்று வசனம் சொல்லவில்லை; மாறாக ஓடிப்போனார்கள். அப்படியென்றால்



அவர்களுக்கு எவ்விதமான பயம் இருந்திருக்கிறது என்பதை நாம் அறியமுடிகிறது. அன்பு நண்பரே, கிறிஸ்துவில் விசுவாசமாயிருக்கும் விசுவாசியே உன் விசுவாசம் ஆண்டவர் மீது எப்படிப்பட்டதாக இருக்கிறது? உனக்காக மரித்த ஆண்டவர் இயேசுவை நீ எந்த அளவு நேசிக்கிறாய்? உன்னுடைய அன்பு எப்படிப்பட்டதாக இருக்கிறது?

அந்தரங்க சீஷனாகிய யோசேப்பை பற்றி வேதம் இவ்விதமாக சொல்லுகிறது; ''கனம்பொருந்திய ஆலோசனைக்காரனும் அரிமத்தியா ஊரானும் தேவனுடைய ராஜ்யம் வரக் காத்திருந்தவனுமாகிய யோசேப்பு என்பவன் வந்து, பிலாத்துவினிடத்தில் துணிந்துபோய், இயேசுவின் சரீரத்தைக் கேட்டான்'' (மாற்.15:43). அந்தரங்க சீஷனுக்கு வந்தது துணிவு. இது எப்படி வந்தது? இயேசுவின் மீது கொண்ட அன்பு, அவரில் கொண்ட விசுவாசம். அவன் ஒரு உண்மையுள்ள சீஷன் என்பதை இது எடுத்துக்காட்டுகிறது. அந்நாட்களில் இயேசுவின் சரீரத்தை துணிந்து கேட்க பயப்பட்டார்கள். ஆனால் யோசேப்பு பிலாத்துவினிடத்தில் துணிந்து இயேசுவின் சரீரத்தை கேட்டு அதை வாங்கி தான் வெட்டிவைத்திருந்த புதிய கல்லறையில் அவரை வைத்தான். யாரும் வைக்கப்படாத கல்லறை அது. அப்படியே இன்று வரை அதில் யாரையும் வைக்கவில்லை.

அநேக கல்லறைகளை பார்க்கிறோம். அதில் அநேகரை வைத்திருப்பார்கள். அவரவர் அவரவருடைய உறவினர்களை அதில் அடக்கம்செய்வார்கள். ஆனால் இயேசுவுக்கு கொடுக்கப்பட்ட கல்லறை ஒருவரும் வைக்கப்படாத கல்லறை. இயேசுவுக்காக கொடுத்தவர்கள் எவரும் விலைமதிப்புள்ளவற்றையே கொடுத்திருக்கிறார்கள் என்று அறிகிறோம். இயேசுவின் பிறப்பின்போது, தங்கம், தூபவர்க்கம், வெள்ளைப்போலம் இவைகளை சாஸ்திரிகள் காணிக்கையாக கொண்டுவந்தனர். இயேசுவுக்கு பரிமளதைலம் பூசியவள் விலையேறப்பெற்ற தைலத்தைப் பூசினாள் என்றெல்லாம் பார்க்கிறோம். அன்பானவர்களே, உங்களுடைய காணிக்கை எப்படிப்பட்டதாக இருக்கிறது. உன்னதமானவருக்கு உங்களுடைய செலவுகள் போக மீதமானதை காணிக்கையாக கொடுக்கிறீர்களா? அல்லது முதல் தரமானவற்றையும், உங்களுக்கு உள்ளவைகளில் முதலிடத்தை

கர்த்தருக்கு காணிகையாக கொடுக்கிறீர்களா? யோசேப்பு தனக்காக வெட்டி வைத்திருந்த கல்லறையையே கொடுத்தான். இயேசுவுக்கு ஒரு டம்ளர் தண்ணீர் கொடுக்க பயந்த நாட்களில் அவன் தன் கல்லறையையே கொடுத்து துணிந்து இயேசுவின் சரீரம் பாதுகாக்கப்பட தேவனில் அன்பு செலுத்தினான். நீங்களும் இவ்விதமாக உங்களை ஒப்புக்கொடுங்கள்.

**மூன்றாவது பர்னபா,** பவுல் போன்றவர்கள் முதல் நூற்றாண்டில் துணிந்து செயல்பட்டனர். ஆகையால் "பர்னபாவை யூப்பித்தர் என்றும், பவுல் பிரசங்கத்தை நடத்தினவனானபடியினால் அவனை மெர்க்கூரி என்றும் சொன்னார்கள்" (அப்.14:12). அந்த அளவு ஜனங்கள் மத்தியில் பிரகாசமாக காணப்பட்டார்கள். தேவர்கள் மனுஷர்களின் ரூபமெடுத்து நம்மிடத்தில் வந்திருக்கிறார்கள் என்று சொல்லும் அளவுக்கு அவர்களுடைய முகம் பிரகாசமாக இருந்தது. அவர்கள் வெளிச்சத்தின் பிள்ளைகளாக இருப்பதினால் அவர்கள் முகம் அந்தவிதமாக இருந்தது. இன்றைக்கு நம்முடைய முகங்கள் சிலவேளைகளில் மாறிவிடுகிறது என்ன காரணம்? நாம் கர்த்தருக்கு ஏற்ற காரியங்களை சிந்திக்காமல் உலகபிரகாரமாக சிந்திக்கும்போதும், பிசாசுக்கு இடம்கொடுக்கும்போதும் நம்முடைய முகங்கள் மாறிவிடுகின்றன.

மோசே மலையிலிருந்து வரும்போது அவனுடைய முகத்தை ஜனங்கள் பார்க்கமுடியாத அளவு பிரகாசமாக இருந்தது. எப்படி? அவன் தேவனோடு பேசிவிட்டு வந்தான். ஆகையால் அவனுடைய முகம் பிரகாசமாயிருந்தது. நீங்கள் தேவனோடு ஜெபத்தின் மூலமாக தரித்திருப்பீர்களென்றால் நீங்களும் அவ்விதமாக இருப்பீர்கள். வசனங்களுக்கு செவிகொடுத்து வசனத்தின்படி வாழும்படியாக உங்களை ஒப்புக்கொடுப்பீர்களானால் உங்கள் மூலம் கிறிஸ்து வெளிப்படுவார். நீங்களும் வெளிச்சத்தின் பிள்ளைகளாக நடந்துகொள்வீர்கள்.

பவுல் பர்னபா போன்றோர் வெறும் வார்த்தையோடு நின்று விடவில்லை. செயலிலும் காண்பித்தார்கள். "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" என்று பிலிப்.1:21-ல் சொல்லியபடி அவர்கள் எருதுகளையும் பூமாலைகளையும் அவர்களுக்கு செலுத்தும்படியாக வரும்போது ஏன் இப்படிச்செய்கிறீர்கள் என்று சொல்லி தங்களுடைய



வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு கூட்டத்திற்குள் ஓடி நாங்களும் உங்களைப்போல பாடுள்ள மனுஷர்கள் தான் என்று அறிக்கையிட்டார்கள். சில மனிதர்கள் தங்களை உயர்வாக ஜனங்கள் நினைத்துவிட்டால் போதும் அதை அப்படியே ஏற்றுக்கொள்வார்கள். ஆனால் இங்கு பர்னபாவும் பவுலும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. தங்களை அவர்கள் பூஜிப்பதை விரும்பவில்லை. வானத்தையும் பூமியையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கினவரை அறிவிக்கிற ஒரு ஊழியக்காரர்களாக தங்களை காண்பிக்கவே விரும்பினர்.

ஆகையால் இவர்களை அனுப்பின எருசலேம் சபையார் சொல்லும்போது; "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திற்காகத் தங்கள் பிராணனையும் ஒப்புக்கொடுக்கத் துணிந்தவர்களும் எங்களுக்குப் பிரியமானவர்களுமாயிருக்கிற பர்னபா பவுல் என்பவர்களோடுங்கூட, எங்களால் தெரிந்துகொள்ளப்பட்ட சில மனுஷரை உங்களிடத்திற்கு அனுப்புகிறது ஒருமனப்பட்டுக் கூடின எங்களுக்கு நலமாகக் கண்டது" என்று சொல்வதை நாம் அப்போஸ்தலர் 15:25,26 வசனங்களில் படிக்கிறோம். தங்கள் பிராணனையும் ஒப்புக்கொடுக்க துணிந்தவர்கள்தான் பர்னபா, பவுல் போன்றவர்கள். ஆகையால் இந்த கனமாக ஊழியத்தை கர்த்தருடைய சமுகத்தில் பெற்றுக்கொண்டார்கள்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற நீங்கள் துணிவுள்ளவர் களாக, இருந்துகொண்டு துணிந்து செயல்படுகின்றீர்களா? எஸ்தர் என்ற பெண்மணி துணிந்து செயல் பட்டாள். யோசேப்பு என்ற தேவமனிதன் துணிந்து பிலாத்துவினிடத்தில் சென்று இயேசுவின் சரீரத்தை பெற்று தன்னுடைய புதிய கல்லறையில் அவரை அடக்கம்செய்தான். பர்னபா மற்றும் பவுல் போன்றோர் இயேசுவின் நாமத்திற்காக துணிந்து பிரசங்கித்தவர்கள். முதல் நூற்றாண்டில் இப்படிப்பட்டவர்களாலே ஆசிய முழுமைக்கும் சுவிசேஷம் பரவ காரணமாயிருந்தது. உங்களுடைய துணிச்சல் எப்படிப்பட்டதாக இருக்கிறது. துணிந்து செயல்படுங்கள் இவர்களோடு இருந்து இவர்களை வழிநடத்திய கர்த்தர் உங்களோடும் இருந்து உங்களை வழிநடத்துவார்.

**கேள்வி நேரம்**

**நம்முடைய கிரியைகளை கர்த்தர் அறிவாரா?**

ஆம், அவர் சகலத்தையும் அறிவார். "உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; உனக்குக் கொஞ்சம் பெலன் இருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்" என்கிறார் (வெளி.3:8). நமக்கு இருக்கிற கொஞ்ச பெலத்தினாலே நாம் நிலைத்திருக்கிறோம் என்பதுவே உண்மை. மேலும் முழுதைரியத்தையும், முழுபெலத்தையும் கர்த்தருடைய சமூகத்தில் பெற்றுக்கொள்ள தொடர்ந்து கர்த்தருடைய வசனத்தைக் கைக்கொள்ளவேண்டியவர்களாயிருக்கிறோம்.

ஆதி அப்போஸ்தலர்களை கர்த்தருடைய வசனம் வழிநடத்தினது. அது இன்றும் அவருக்குக் கீழ்ப்படிகிறவர்களை வழிநடத்துகிறது. இதோ திறந்த வாசல் வைக்கப்பட்டிருக்கிறது. இதை தடைசெய்ய ஒருவனாலும் கூடாது ஆகையால் துணிந்து செயல்படுங்கள். கர்த்தர் உங்களைக் கொண்டு பெரிய காரியங்களைச் செய்வார். ஆதி முற்பிதாக்களையும், முதல் நூற்றாண்டு சீஷர்களையும் பயன்படுத்திய தேவன் உங்களையும் பயன்படுத்துவார். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 28. தேவனால்வரும் ஆசீர்வாதம்
## Blessing Comes from God

**தே**வ ஆசீர்வாதம் வேண்டுமென அநேகர் விரும்புகின்றனர். நல்லதுதான் ஆனால் அந்த ஆசீர்வாதத்தைப் பெறுவது எப்படி? தங்களுடைய என்னத்தின்படியாகவும், தவறான போதகத்தின் மூலமாகவும் ஆசீர்வாதத்தைப் பெற்றுவிட முடியாது. "தன்மேல் அடிக்கடி பெய்கிற மழையைக் குடித்து, தன்னிடத்தில் பயிரிடுகிறவர்களுக்கேற்ற பயிரை முளைப்பிக்கும் நிலமானது தேவனால் ஆசீர்வாதம் பெறும்" என திருமறை நமக்குப்போதிக்கிறது (எபி.6:7). இங்கே ஒரு விவசாய நிலத்தை ஒப்பிட்டுப் பேசப்பட்டுள்ளது. அடிக்கடி பெய்கிற மழை நீரைக்குடித்து விவசாயம் செய்கிறவர்களுக்கு ஏற்ற நிலமாக, நல்ல கனிகளைக் கொடுக்கும் நிலமாக, இருக்கும்போது அந்த தோட்டத்தில்



பயிர் செய்கிறவன் சந்தோஷப்படுவான். தன்னிடத்தில் பெய்கிற மழைநிரை உள்வாங்கிக்கொள்ளாமல் விட்டுவிடக்கூடிய நிலம் சீக்கிரத்தில் பயிர்கள் அல்லது மரங்கள் வாடிப்போய்விடும். இதினாலே நல்ல பலனைக்கொடுக்கமுடியாது. அப்படிப்பட்ட நிலத்தின் மீது பயிர்செய்கிற விவசாயி சந்தோஷமாக இருக்கமாட்டான். அதைப்போல கர்த்தருடைய வசனத்தை அவ்வப்போது கேட்டு அதற்கு ஏற்றார்போல தன்னை மாற்றியமைத்துக்கொண்டு, ஆவிக்குரிய கனிகளைக் கொடுப்போமானால் தேவனாலே ஆசீர்வதிக்கப்படுவோம்.

இயேசு சொல்கிறார்; "நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக் கிறீர்கள்; மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது. விக்கைக் கொளுத்தி மரக்காலால் முடிவைக்காமல், விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும். இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" என்றார் (மத்.5:14-16).

நாம் எப்படி இவ்வுலகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்? எப்படி வாழவேண்டும்? இவைகளைக்குறித்து நீங்கள் சிந்தித்ததுண்டா? நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள். உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிற சூரியன் இருண்டுவிட்டால் மனிதர்களின் நிலைமை என்னவாகும்? அதைப்போல மற்றவர்களுக்கு மாதிரியாக இருக்கவேண்டிய நீங்கள் இருளடைந்துவிட்டால் மற்றவர்களுடைய நிலைமை என்னவாகும்? மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் காணவேண்டும். உங்களுடைய ஜீவியம் ஒரு விளக்கைப் போன்றதாகவும், மலையின்மேல் இருக்கிற பட்டணத்தைப்போன்று இருக்க வேண்டும். அப்பொழுதே பிதாவின் நாமம் மகிமைப்படும்.

"விதைக்கிறவன் வசனத்தை விதைக்கிறான். வசனத்தைக் கேட்டவுடனே சாத்தான் வந்து, அவர்கள் இருதயங்களில் விதைக்கப்பட்ட வசனத்தை எடுத்துப் போடுகிறான்; இவர்களே வசனம் விதைக்கப்படுகிற வழியருகானவர்கள்" (மாற்.4:14,15). விதைக்கப்படும் விதை அனைத்தும் முளைப்பதில்லை. வழியருகே விதைக்கப்படுகிற

விதைகளை பறவைகள் எடுத்துக்கொண்டுபோய்விடும். அதைப்போல சரிவர கவனியாதவர்களுடைய இருதயத்திலிருந்து வசனத்தை பிசாசு எடுத்துப்போடுகிறான். ஆனால் "நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவனோ, வசனத்தைக் கேட்கிறவனும் உணருகிறவனுமாயிருந்து, நூறாகவும் அறுபதாகவும் முப்பதாகவும் பலன் தருவான்" (மத்.13:23).

நீங்கள் எப்படிப்பட்ட நிலமாக இருக்கிறீர்கள்? மரியாள் என்ற மகள்; "தன்னைவிட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள்" (லூக்.10:42). வசனத்தை கேட்கும்போது நல்ல பங்கைத் தெரிந்துகொள்ளுகிறோம். அநேகர் வசனத்தைக் கேட்கவேண்டிய நேரத்தில் தூங்குவார்கள் அல்லது முக்கியமான வேலை இருக்கிறது என்று சொல்லி அந்த வேலையைச் செய்ய சென்று விடுவார்கள். இப்படிப்பட்டவர்கள் மத்தியில் உள்ள கொஞ்ச வசனத்தையும் சாத்தான் எடுத்துப்போடுவான். அவர்களால் கனிகொடுக்க முடியாமல் பொறாமையோடும், வண்கண்ணோடும் ஜீவித்து பின்பு தேவ கோபக்கினையின் பாத்திரங்களாக சென்றுவிடுவார்கள். வசனத்தைக் கேட்டு, அதைக்குறித்து ஆராய்ந்து அவைகளில் நிலைத்திருந்து ஆவிக்குரிய கனிகளைக் கொடுக்கிறவர்களாக மாறவேண்டுமென வேதம் எதிர்பார்க்கிறது. நீங்கள் தேவனுடைய ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள மரியாளைப்போல நல்ல பங்கைத் தெரிந்து கொள்ளுங்கள்.

இரண்டாவது தன்னிடத்தில் பயிரிடுகிறவர்களுக்கு ஏற்ற நிலத்தைப் பார்க்கிறோம். நிலம் நன்றாக இருந்தால்தான் பயிரிடுகிறவர்களுக்கு ஏற்ற நிலமாக இருக்கமுடியும். சபையை நடத்துகிறவர்கள் பிரசங்கியார்கள், போதகர்கள், மூப்பர்கள், உதவிக்காரார்கள். இவர்களுக்கு ஏற்றார்போல ஒவ்வொரு விசுவாசியும் மாறவேண்டுமென வேதம் போதிக்கிறது. "உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்கு உத்தரவாதம்பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே" (எபி.13:17). சபைகளில் அநேகர் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்த கோராகு, தாத்தான் கூட்டத்தாரைப்போல



முறுமுறுக்கிறவர்களாகவே இருக்கின்றனர். இப்படியிருந்தால் உங்களுக்கு அது பிரயோஜனப்படாது. கோராகு தாத்தான் முறுமுறுத்தபடியால் அவர்களை பூமி விழுங்கிப்போட்டாது. அவர்கள் ஒரு நொடிப்பொழுதில் அழிக்கப்பட்டார்கள். உங்களை வழிநடத்துகிறவர்கள் உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம்பண்ணக்கூடியவர்கள். ஆகையால் அவர்கள் சந்தோஷத்தோடே ஊழியம் செய்யும்படி அவர்களுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து அடங்கவேண்டும். கடல் அலைகளைப்போல எழும்பாமல் அடங்கவேண்டும். இப்படி அடங்காதவர்கள் சபையை விட்டுப்போய்விடுகிறார்கள். கேட்டால் ஊழியனை சரமாரியாக குற்றப்படுத்துவார்கள்.

அன்பானவர்களே, "பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது. நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது" (யாக்.3:17,18). ஆரோனைப்போல அழைக்கப்படாவிட்டால் ஒருவரும் இந்த கனமான ஊழியத்தைச் செய்யமுடியாது. ஆகையால் பரத்திலிருந்து பெற்றுக்கொண்டவர்களே இவ்வூழியத்தைச் செய்கிறார்கள். சமாதானத்தை நடப்பிக்கிற ஊழியர்களாலே சமாதான வார்த்தைகள் விதைக்கப்படுகிறது. அவைகளை பெற்று ஆவிக்குரிய வளர்ச்சியடைந்து கனிகளைக் கொடுங்கள். அந்த ஊழியன் சரியில்லை, இந்த ஊழியன் சரியில்லை என்று சொல்லாமல் கர்த்தருடைய வசனத்திற்கு செவிகொடுங்கள். பவுல் சொல்லும்போது; "நான் நட்டேன், அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினான் தேவனே விளையச்செய்தார்" (1கொ.3:6). ஆகையால் நடுகிறவனாலும் நீர்ப்பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை விளையச்செய்கிற தேவனாலே எல்லாமாகும்.

மூன்றாவது மேற்கண்ட இரண்டை செய்கிற மனுஷன் தேவனால் ஆசீர்வாதத்தைப் பெறுவான். "நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதனால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்" (யோவா.15:8). இயேசுவானவர் சொல்லும் இவ்வசனத்தில் இரண்டு நன்மைகள் காணப்படுகிறது. ஒன்று மிகுந்த

கனிகளைக் கொடுக்கும்போது பிதா மகிமைப்படுகிறார். மற்றொன்று இயேசுவுக்கு சீஷராயிருக்கிறோம். இயேசுவுக்கு சீஷராயிருப்பதற்கு தகுதி மிகுந்த கனிகளைக் கொடுக்கவேண்டும். கனியற்ற வாழ்க்கை கால் வாழ்க்கை என்பதை மறவாதிருங்கள். ''என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ, அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார்'' என்று இயேசு குறிப்பிடுகிறார் (யோவா.15:2).

எந்த ஒரு விவசாயும் கனிகொடாதிருக்கிற கொடிகளை அப்படி வைத்திருக்க மாட்டான் அதை அறுத்துப்போடுவான். கனிகொடுக்கிற கொடிகளை அநுதினமும் பராமரிப்பான். அதைப்போல கனிகொடுக்கிறவர்களை கர்த்தர் நேசித்து அதிக கனிகளைக் கொடுக்கும்படியாக அவர்கள் மேல் நோக்கமாயிருக்கிறார். உள்ளவன் எவனோ அவனுக்குக் கொடுக்கப்படும் இல்லாதவனிடத்திலிருந்து உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும் என்ற வசனத்தைப்போல கர்த்தர் கனிகொடுக்கிறவர்கள் இன்னும் அதிக கனிகளைக் கொடுக்கும்படியாக அவர்களை ஆசீர்வதிக்கிறார் என காண்கிறோம். உங்களுடைய வாழ்க்கை கனிகள் நிறைந்த வாழ்க்கையாக இருக்கட்டும்.

யோசேப்பு ஒரு கனிதரும் செடியாக இருந்தான். அவனுடைய தகப்பன் அவனை ஆசீர்வதிக்கும்போது அப்படியாக ஆசீர்வதித்தார். அந்தப்படியாகவே அவன் கனிகள் நிறைந்தவனாக வாழ்ந்தான். அநேகருக்கு ஆசீர்வாதம் என்று பெயர் வைத்திருப்பார்கள். அந்த பெயருக்கு ஏற்றார்போல வாழாமல் அநேகருக்கு ஆசீர்வாதக்குறைவை கொடுக்கும் மகனாக வாழ்ந்துகொண்டிருப்பார்கள். ஆனால் யோசேப்போ கனிதரும் செடியைச் போலவே அவனுடைய வாழ்க்யைானது இருந்தது. அவனுடைய சமுகத்தில் அவனுடைய சகோதர்கள் அடைக்கலம் புகுந்தார்கள். விரோதித்த அவர்களுக்கு நன்மை செய்தான்.

கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது என்ற பழமொழியைப்போல மிகவும் சிறியவனாக இருந்தபோதும் அவன் சிறப்பானவனாக கனிகொடுக்கிற மனிதான வாழ்ந்தான். ''பரலோகராஜ்யம் கூட கடுகு விதைக்கு ஒப்பாக பேசப்பட்டிருக்கிறது; '' அதை ஒரு மனுஷன் எடுத்துத் தன் நிலத்தில் விதைத்தான். அது சகல விதைகளிலும் சிறிதாயிருந்தும்,



வளரும்போது சகல பூண்டுகளிலும் பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள் அதின் கிளைகளில் வந்து அடையத்தக்க மரமாகும்'' (மத்.13:31,32). அதைப்போல இந்த யோசேப்பு தன் குடும்பத்தாருக்கு அடைக்கலமாக இருந்தான். இஸ்ரவேலர் இவனால் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். இவனுடைய வார்த்தைகளை கேட்காமல் இவனை அவர்கள் தூக்கி குழியில் போட்டு, பின்பு அவனை விற்றுப்போட்டபடியால் யோசேப்பின் சகோதர்கள் பல வருடங்கள் வறுமையை அநுபவித்தார்கள். பின்பு இவனுடைய வார்த்தைக்கு செவிகொடுத்து எகிப்துக்கு வரும்போது இவனால் ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

ஒவ்வொரு ஊழியனும், தான் வழிநடதுகிற சபையில் இருக்கிற ஒவ்வொரு விசுவாசியும், நலமுடன் இருக்கும்படியாகவும் தேவனுடைய ஆசீர்வாதங்களை அவர்கள் பெற்று சந்தோஷமாக இருக்கும்படியாவும் முயற்சிக்கிறான். இதை புரிந்துகொண்டவர்கள் பயனடைகிறார்கள். பவுல் சொல்லும்போது; ''எந்த மனுஷனையும் கிறிஸ்துஇயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம்பண்ணுகிறோம்'' என்கிறார் (கொலோ.1:28). ஏன் இப்படிச்செய்கிறார்கள். பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது அவனவனுடைய வேலைப்பாடு வெளிப்படும். ஆகையால் ஒவ்வொரு ஊழியக்காரனும் எல்லோரையும் தேர்ச்சியடையச்செய்ய பாடுபடுகிறார்கள். நீங்கள் தேவனாலே ஆசீர்வதிக்கப்பட மேற்கண்ட காரியங்களுக்கு ஒத்துழைப்பாக இருந்து ஆசீர்வதிக்கப்படுங்கள்.

### கேள்வி நேரம்

**ஊழியனுக்கு பொறுமை அவசியமா?**

ஆம், கர்த்தருடைய ஊழியனுக்கு இருக்கவேண்டிய குணங்களில் ஒன்று பொறுமையும் கூட. ''சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடையவேண்டுமென்று, முன்மாரியும் பின்மாரியும் வருமளவும், நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான். நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்; கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே'' (யாக்.5:7,8).

பொறுமையை இழந்துபோகாமல் பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடைய காத்திருக்கிறான். அதைப்போல ஒவ்வொரு கர்த்தருடைய ஊழியனும் பொறுமையாயிருக்க வேண்டியவனா யிருக்கிறான். மற்றவர்களுக்காக வேலைசெய்கிறவனாயிருக்கக்கூடாது. கர்த்தர் வருமளவும் அவன் நீடிய பொறுமையோடிருக்க போதிக்கப்படுகிறான். தேவனால்வரும் ஆசீர்வாதத்தைப் பெற விசுவாசிகள் அடிக்கடி வசனத்தை கேட்டு கனிகொடுக்கவேண்டும். அதைப்போல வசனத்தைப்போதிக்கும் போதகனுக்கு பொறுமை மிகவும் அவசியம். நீங்கள் ஒரு ஊழியனாக இருந்தால் பொறுமையாக இருந்து ஊழியம் செய்யுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 29.எருசலேம்
## Jerusalem

**எ**ருசலேம் தேவனுடைய நகரம் என்றும் தாவீதின் நகரம் என்றும் அழைக்கப்பட்டு வந்தது. தேவனாகிய கர்த்தர் எருசலேமை ஆதிமுதலாக தெரிந்துகொண்டார். இப்படி தெரிந்துகொள்ளப்பட்ட எருசலேம் தேவன் எதிர்பார்க்கிறபடி மனந்திரும்பாமற்போனபடியால்; ‘‘உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும், இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது’’ என்று கர்த்தர் எருசலேமைப்பார்த்து சொன்னார் (லூக்19:42). பிசாசானவன் நலமானவைகளை பார்க்காதபடி குருடாக்கிப்போடுகிறான். அவனால் பிடிக்கப்பட்டவர்கள் மயக்கம் தெளிந்து பார்ப்பது கடினமான காரியமாக இருக்கிறது. இப்படியாக அநேகரை பிசாசு குருடாக்கி வைத்திருக்கிறான். ஒரு நாள் பிறப்பதை நாம் அறியோம்.

ஒவ்வொரு நாளும் கர்த்தர் உண்டுபண்ணின நாள்; ஆகையால் தாவீது சொல்வதைப்போல; ‘‘இது கர்த்தர் உண்டுபண்ணின நாள்; இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம்’’ (சங்.118:24). காலை விழிப்பே கர்த்தரின் சாயல் என பாடுகிறோம். எத்தனைபேர் காலை எழுந்தவுடன் கர்த்தரை துதிக்கிறோம் அல்லது ஜெபிக்கிறோம். சகல சிருஷ்டிகளையும் கண்ணோக்கிப்பாருங்கள் காலையில் கர்த்தரை ஒவ்வொன்றும் துதிக்கும். மனிதன் மட்டும் அநேக வேளையில் கர்த்தரைத் துதிக்க



மறந்துபோகின்றான். ஆகையால் கர்த்தர் சொல்லும்போது உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்திற்கு ஏற்றவைகளை அறிந்தால் நலமாயிருக்கும் என்றார். நாடும், வீடும், காலை எழுந்தவுடன் எவர்களோடு சண்டையிடலாம் என்பதை பற்றியே சிந்திக்கின்றனர். உலகம் உண்டானது முதல் இன்றுவரை சண்டை ஓய்ந்தபாடில்லை. கர்த்தர் சமாதானத்தை விரும்புகிறார். மனிதர்கள் கர்த்தரிடத்தில் மனந்திரும்ப வேண்டும் என எதிர்பார்க்கிறார். ‘‘நாளையத்தினத்தைக் குறித்துப் பெருமைபாராட்டாதே; ஒருநாள் பிறப்பிப்பதை அறியாயே’’ என வேதம் போதிக்கிறது (நீதி.27:1).

உலகத்தில் எத்தனையோ ஞானவான்கள் நியமங்களை கனிக்கிறவர்களாயிருக்கிறார்கள் ஆனால் ஒருவராலும் நாளைக் இன்னது நடக்கும் என்று சொல்லிவிடமுடியாது. ‘‘நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக்காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப் போலிருக்கிறதே. ஆதலால்; ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால், இன்னின்னதைச் செய்வோம் என்று சொல்லவேண்டும்’’ (யாக்.4:14,15). நாளைக்கு நடப்பது தெரியாமல் ஜனங்கள் தங்களுடைய கனவு உலகில் மிதக்கிறார்கள். அவர்களுடைய உபாயம் வெறும் பொய்யே, ஒன்றுமில்லாமற்போகிறது.

மேலும் கர்த்தர் எருசலேமைப்பார்த்து சொல்லும்போது; இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது என்கிறார். பெருமையுள்ளவர்களுக்கு வசனம் தெரிவதில்லை. ஏனெனில் அவர்கள் மேட்டிமையுள்ளவர்களாக இருப்பதினாலும், பிசாசின் மக்களாக இருப்பதினாலும் அவர்களுடைய கண்களுக்கு அவைகள் மறைவாயிருக்கிறது. கொஞ்சம் வளர்ச்சியடைந்தவுடன் நண்பர்களையும், மற்றவர்களையும் கண்டுகொள்ளாதிருக்கிற அநேகரை நாம் உலகத்தில் பார்க்கிறோம். அதைப்போல எருசலேம் மேட்டிமைகொள்ள ஆரம்பித்தது. ஆகையால் கி.பி 70-ல் எருசலேம் அழிவைக்கண்டது. அங்கிருந்த தேவாலயமும் இருக்கிற இடம்தெரியாத அளவுக்கு சிதைக்கப்பட்டது. அவர்கள் தேவனுடைய சித்தத்தை புரிந்து சமாதானத்திற்கான காரியங்களை சிந்தித்திருப்பார்களேயானால் அது காக்கப்பட்டிருக்கும். அநேக தீர்க்கதரிசிகளை தேவன் அவர்களுக்கு

கொடுத்துக்கொண்டே இருந்தார். இறுதியில் தம்முடைய ஒரே பேறான குமாரனையே ஒப்புக்கொடுத்தார். அவரை ஊருக்கு புறம்பாக்கி சிலுவையில் அறைந்து கொன்றார்கள். தாவீதைப்போன்றவர்கள் சொல்லும்போது; ''உம்முடைய வேதத்தை மனுஷர் காத்துநடவாதபடியால், என் கண்களிலிருந்து நீர்த்தாரைகள் ஓடுகிறது'' என்கிறார் (சங்.119:136). தாவீதின் நாட்களிலிருந்து மனுஷர் வேதத்தை காத்துநடவமலே இருந்திருக்கிறார்கள் என தெரியவருகிறது. இயேசுவும் எருசலேமைப் பார்த்து கண்ணீர் விட்டார். இன்றைக்கு அநேக பரிசுத்தவான்கள் கண்ணீரோடு கர்த்தர்நோக்கி ஜெபிக்கிறார்கள். தேசம் கர்த்தரை அறிந்துகொள்ளவும்.

தேவனுடைய சித்தம் பரலோகத்திலே நடைபெறுவதைப்போல பூமியிலேயும் நடைபெறவேண்டும் என இரவு பகலாக ஜெபிக்கும் சகோதர, சகோதரிகள் உண்டு. இச்செய்தியை படித்துக்கொண்டிருக்கும் அன்பு நண்பனே, நீ கர்த்தராகிய இயேசுவையும் தேவனையும் அறிந்திருக்கிறாயா? அப்படி அறிந்திருந்தாயானால் நீ தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றும்படியாக சமாதானத்திற்கான காரியங்களைக் குறித்து சிந்தி, மற்றவர்களுக்கும் அதைக்குறித்து தெரியப்படுத்து. கர்த்தருடைய வசனம் ''கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது'' என்கிறான் சங்கீதக்காரன் (சங்.119:105) உனக்கும் கர்த்தருடைய வசனம் தீபமாக இருக்கிறது. அந்த தீபத்தை எடுத்துக்கொண்டு இருளுள்ள ஸ்தலத்தில் உண்மையை கண்டுகொள்ளுங்கள். மயக்கத்திலுள்ள ஜனங்களுக்கு கர்த்தருடைய வசனத்தை சாந்தமாக உபதேசிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். இதுகுறித்து பவுல் சொல்லும்போது; ''பிசாசானவனுடைய இச்சையின்படிசெய்ய அவனால் பிடிபட்டிருக்கிற அவர்கள் மறுபடியும் மயக்கந்தெளிந்து அவன் கண்ணிக்கு நீங்கத்தக்கதாகவும், சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்கவேண்டும்'' (2தீமோ.2:26).

மண்பானை செய்கிறவர்கள் மிகவும் கவனத்துடன் அதை அறுத்து எடுத்து மெதுவாக வைப்பார்கள். சற்று பலமாக வைத்துவிடுவோமானால் அவைகள் மீண்டும் பழைய நிலைக்கு வந்துவிடும். அப்படியே அவைகள் காய்ந்தபின்பும் கவனமாக எடுத்துவரவேண்டும். மற்றபாத்திரங்களைப் போல அவைகளை வைப்போமானால் அவைகள் உடைந்துபோய்



விடும். அந்தப்படியாக பிசாசின் இச்சையின்படியாக பிடிபட்டவர்கள் மயக்கந்தெளிந்து அவனுடைய கண்ணிக்கு நீங்கத்தக்கதாக அவர்களுக்கு சாந்தமாய் உபதேசம் செய்யவேண்டும்.

மேலும், ''உன்னைச் சந்திக்குங்காலத்தை நீ அறியாமற்போன படியால், உன் சத்துருக்கள் உன்னைச் சூழ மதில்போட்டு, உன்னை வளைந்துகொண்டு, எப்பக்கத்திலும் உன்னை நெருக்கி, உன்னையும் உன்னிலுள்ள உன் பிள்ளைகளையும் தரையாக்கிப்போட்டு, உன்னிடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்குச் செய்யும் நாட்கள் உனக்கு வரும் என்றார்'' (லூக்.19:43,44). இவ்வளவு சொல்லியும் எருசலேம் சமாதானத்திற்கு ஏற்றவைகளை சிந்திக்கவுமில்லை மனந்திரும்பவுமில்லை. ஒரு கல்லின்மேல் ஒரு கல் இராதபடி இடிபட்டுப்போகும் என்ற வசனத்தின்படி எருசலேம் தேவனுக்கு விரோதமான ஜனங்களாலே இடிக்கப்பட்டது. முற்றிலும் தங்கத்தினாலும் விலையேறப்பெற்ற மரத்தினாலும் செய்யப்பட்டிருந்த எருசலேம் தேவாலயம் குரங்கு கையில் கிடைத்த பூமாலையைப்போல போனது.

பல வருடங்களாக கனவு கண்டு தாவீது தேவாலயத்திற்கு வேண்டியவற்றை சவதரித்துவைத்திருந்தான். அவைகளெல்லாம் கர்த்தருடைய வார்த்தையின்படியே ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடி இடித்து அத்தனையும் கொள்ளையடித்தும் தீக்கொளுத்தியும் போட்டார்கள். இது யூதர்களுக்கு பெரிய பின்னடைவாக இருந்தது. இன்றைக்கும் அநேக நாடுகள் தங்களுடைய ஆயுதங்களை எடுத்துக்கொண்டும் யுத்தத்திற்கும் அனிவகுத்து நிற்கின்றன. ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு நாளும் பயந்து கொண்டு நாளைக்கு என்னநடக்குமோ என்ற அச்சத்தோடு வாழ்ந்துகொண்டிருக்கிறது.

எருசலேமைத் தெரிந்துகொண்ட கர்த்தர் இஸ்ரவேலுக்கு எச்சரிப்பை அவ்வப்போது கொடுத்துக்கொண்டே வந்தார் என காண்கிறோம். ஆமோஸ் புத்தகத்தில் வாசிக்கிறோம்; ''இஸ்ரவேலே, இந்தப் பிரகாரமாக உனக்குச் செய்வேன்; இஸ்ரவேலே, நான் இப்படி உனக்குச் செய்யப்போகிறபடியினால் உன் தேவனை சந்திக்கும்படி ஆயத்தப்படு'' என்றார் (ஆமோ.4:12). சிலர் இதை ஏற்றுக்கொண்டார்கள் பலர் அப்படியும் இப்படியுமாக நடந்தார்கள். இஸ்ரவேல் வணங்கா

கழுத்துள்ளவர்களாக போனார்கள். இஸ்ரவேலிலே பல நன்மைகளை கர்த்தர் செய்திருந்தும் அவர்கள் தன் தேவனை சந்திக்கும்படி ஆயத்தமில்லாதவர்களாக போனார்கள். இன்றைக்கு வாழ்ந்துகொண்டிருக்கிற நமக்கும் தேவன் பல எச்சரிப்புகளை கொடுக்கிறார். உலகப்பிரகாரமாக வாழ்ந்தவர்கள் எவரும் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற முடியவில்லை. நாமும் அப்படிப்பட்டவர்களை நோக்காது. தாவீது போன்ற தாசர்களையும் அவர்களுடைய சரித்திரத்தையும் நோக்கிப்பார்த்து வேத வசனங்களுக்கு செவி கொடுத்து கர்த்தரையும் அவருடைய திரு சித்தத்தையும் அறிந்துகொண்டு அவருக்குப் பிரியமாய் இருக்க பிரயாசப்படுவோம்.

இக்காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் நமக்கு வேதம் கொடுக்கும் எதிர்பார்ப்பான காரியம் என்னவென்றால்; கர்த்தருடைய வருகை. ‘‘கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம். இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்!’’ (2பேது.3:10,11).

பல முறை தீர்க்கதரிசிகளால் எச்சரிக்கப்பட்டும்; சமயமும், காலமும் கொடுக்கப்பட்டும் எருசலேம் தேவனை சந்திக்க ஆயத்தப்படவில்லை. இன்று கர்த்தருடைய வருகையை எதிர்நோக்கி இருக்கிற நமக்கு மேலுள்ள வசனம் ஒரு எச்சரிப்பை கொடுக்கிறது. உலகமும் அதிலுள்ளவைகளும் எரிந்து அழிந்துபோம். இப்படி எரிந்து அழிந்துபோகும் பொருளுக்காக ஒவ்வொரு நாளும் வாழ்ந்துகொண்டு வருகிறீர்களா? அல்லது உங்களை இரட்சித்த கர்த்தர் மீண்டும் உங்களை பிதாவிடம் சேர்க்க வரப்போகிறார் அவரை எதிர்நோக்கி செல்ல ஆயத்தமாயிருக்கிறீர்களா? என்பதை இன்று நீங்கள் சிந்திக்கும்படியாக உங்களை கேட்கிறேன். அவருடைய வருகை திருடனைப்போல இருக்கும். திருடன் இன்ன ஜாமத்தில் வருவேன் என்று எவரிடமும் சொல்லி வரமாட்டான். அதைப்போல கர்த்தருடைய வருகையை எவரும் அறியார்கள். ஆகையால் ஆயத்தமாயிருங்கள். அவருடைய



வருகையின்போது பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லும் அன்பரே கவனியுங்கள். அப்பொழு நாம் காண்கிற வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம். செங்கல் சூளை (காளவாசல்) சென்று பாருங்கள் சில கல் வெந்து அப்படியே உருகிப்போயிருக்கும் அந்த கல்லை எந்த ஒரு வேலைக்கும் பயன்படுத்த முடியாது அதைப்போல நாம் காண்கிற அனைத்தும் உருகிப்போம்.

ஆக பேதுரு தமது நிருபத்தில் தெளிவாக எழுதுகிறார்; இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்! உங்களுடைய நடக்கை எப்படிப்பட்டதாயிருக்கிறது? பரிசுத்தமில்லாமல் ஒருவரும் கர்த்தரை தரிசிப்பதில்லை என வேதம் மிகவும் தெளிவாக போதிக்கிறது. ஏனெனில் அவர் பரிசுத்தர் ஆகையால் நாமும் பரிசுத்தமுள்ளவர்களாக இருக்கவேண்டும். இன்றே நீ ஆயத்தப்படு, பின்பு உன் குடும்பத்தை ஆயத்தப்படுத்து.

## கேள்வி நேரம்

**ஒரு சுவிசேஷகனைப் பற்றி வேதம் கூறுவது என்ன?**

‘‘சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து, இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்தி: உன் தேவன் ராஜரிகம் பண்ணுகிறாரென்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன’’ (ஏசா.52:7). ஒரு தீர்க்கன் மூலமாகவே ஒரு சுவிசேஷகனுடைய பாதங்களைப் பற்றி பரிசுத்த ஆவியானவர் விளக்குகிறார். சுவிசேஷர்களை மதிக்காதவர்களும் உலகத்தில் இருக்கிறார்கள். சுவிசேஷகர்களை மதிக்கிறவர்களும் உலகத்தில் இருக்கிறார்கள். பாவியாகிய ஸ்திரீ இயேசுவின் கால்களை பரிமளதைலத்தினால் பூசி அதை தன் கூந்தலினால் துடைத்து ஓயாமல் அவருடைய கால்களை முத்தம் செய்தாள். இவள் சுவிசேஷகருடைய பாதங்களை எவ்வளவு அழகானவைகள் என்பதை அறிந்தவளாயிருந்தாள்.

இயேசுவை அழைத்த பரிசேயன் அவள் ஒரு பாவி என்பதை மட்டுமே அறிந்தான். அவனுடைய வீட்டிற்கு நற்செய்தியை கொண்டு

சென்ற அவரையும், உபதேசத்தையும் அறியவில்லை. ஆகையால் அவன் கால்களுக்கு தண்ணீர்கூட தரவில்லை. நீங்கள் எந்த அளவு சுவிசேஷகர்களை மதிக்கிறீர்கள்? சுவிசேஷகன் நற்செய்தியை அறிவிப்பவன் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

## 30. ஊக்கமான அன்பு
## The Fervent Love

**அ**ன்பைப் பற்றி பல முறை கேள்விப்படுகிறோம். வேதாகமம் அன்பைப் பற்றி சொல்லுவது என்ன? அன்பின் குணங்கள் 15-யை நாம் 1கொரிந்தியர் 13:4-8 வசனங்களில் காண்கிறோம். "அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது, அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும், சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும். அன்பு ஒருக்காலும் ஒழியாது, தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம்". இந்த குணங்கள் உங்களில் இருக்கின்றதா? இவைகளில் நிலைத்திருக்கிறவன் பூரணப்பட்டவன்.

அன்பாயிருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு அநேகர் அன்பின் குணங்களை உடையவர்களாயிராமல், எதிர்மாறாக நடக்கிறவர்களாயிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் தேவனால் உண்டானவர்கள் அல்ல. யோவான் தமது நிருபத்தில் "பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம்; ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து அவரை அறிந்திருக்கிறான்" என எழுதியுள்ளார் (1யோவா.4:7). அன்புடையவர் தேவன். அன்பிற்கு எதிரானவன் பிசாசு. அவனுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரனாகிய இயேசு அன்பின் ஆண்டவராக உலகத்தில் பிறந்தார். அவர் எல்லோரையும் நேசித்தார், குணமாக்கினார், பாவிகளை மன்னித்து தம்மண்டை சேர்த்துக்கொண்டார். ஏனெனில் "தேவன்



அன்பாகவே இருக்கிறார்" என 1யோவா.4:8-ல் வாசிக்கிறோம். ஆகையால் நாமும் ஒருவரிலொருவர் ஊக்கமாக அன்புகூரக்கடவோம். அன்பு செலுத்தி, அன்பு செலுத்தி எனக்குத்தான் கெட்ட பெயர் வருகிறது என்று அநேகர் அன்பு செலுத்துவதை குறைத்துக்கொள்ளுகிறார்கள். அன்பு சகலத்தையும் சகிக்கும் என வாசித்தோம்.

நாம் கைமாறு கருதாமல் அன்பு செலுத்தி நமக்கு வரக்கூடிய தீமைகளையும் ஏமாற்றத்தை சகிக்க வேண்டும். எபிரெய ஆசான் சொல்லும்போது; "ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்" என்கிறார் (எபி.12:3). ஆண்டவர் சிலுவையில் பட்ட பாடுகளை நாம் அறிவோம். அவரை ஏளனம் செய்தார்கள். சிலுவையிலிருந்து இறங்கி வா என்றும் உன்னை நீயே இரட்சித்துக்கொள் என்றும் ஏளனம் செய்தார்கள். அவரோ பிதாவே இவர்களை மன்னியும் இவர்கள் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாது செய்கிறார்கள் என்றார். இத்தனைபாடுகளையும் சிலுவையில் சகித்தார். நாமும் நமக்கு வரக்கூடிய ஏளனத்தையும், மற்றவர்கள் நம்மைப்பார்த்து தூசிப்பத்தையும் பொறுமையுடனிருந்து சகிக்க கற்றுக்கொள்ளவேண்டும். ஆகையால் உங்களுக்கு வரக்கூடிய பாடுகளில் இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அன்பின் ஆண்டவர் இயேசுவை நினைத்துக்கொள்ளுங்கள்.

நாம் ஒருவரிலொருவர் ஊக்கமான அன்பு கூரவேண்டியவர் களாயிருக்கிறோம். யோனத்தான் தாவீதை தன் உயிரைப்போல சிநேகித்தான். இப்படிப்பட்டதான சிநேகிதர்களை நாம் பார்ப்பது அறிதாக இருக்கிறது. "அவன் சவுலோடே பேசி முடித்தபின்பு, யோனத்தானுடைய ஆத்துமா தாவீதின் ஆத்துமாவோடே ஒன்றாய் இசைந்திருந்தது யோனத்தான் அவனைத் தன் உயிரைப் போலச் சிநேகித்தான்" (1சாமு.18:1). ஆனால் இப்படியாக யோனத்தானும் தாவீதும் இருப்பது சவுலுக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை. இவர்களை பிரிக்கும்படியாக முயற்சித்தான். ஆனால் அது கூடாரமற்போயிற்று. ஏனெனில் யோனத்தானும் தாவீதும் அந்த அளவு நெருக்கமுள்ளவர் களாயிருந்தார்கள். உண்மையான அன்பை யாராலும் பிரிக்கமுடியாது.

அப்.பவுல்: ஆண்டவர் இயேசுவின் மீதுகொண்டுள்ள அன்பை பிரிப்பவன் யார் என கேள்வி எழுப்புகிறார். அந்த அளவு அவரில் அவர் அன்பு வைத்திருந்தார். உங்களுடைய அன்பு எப்படிப்பட்டதாயிருக்கிறது. ஊக்கமாக ஆண்டவரில் அன்புகூருங்கள். சிலர் எமோசனல் அன்பு செலுத்துவதைப் பார்க்கிறோம். இந்தவிதமாக பேதுரு; ஆண்டவர்மீது தன் அன்பை வெளிப்படுத்தினான். ''ஆண்டவரே, காவலிலும் சாவிலும் உம்மைப் பின்பற்றிவர, ஆயத்தமாயிருக்கிறேன் என்றான்'' (லூக்.22:33). ஆனால் நடந்தது என்ன? அன்று இரவே இயேசுவை மூன்று முறை அவரை அறியேன் என்று மறுதலிக்கவும், சத்தியம் பண்ணவும் தொடங்கினான். இப்படிப்பட்ட அன்பு தற்காலிக அன்பு. இது நிலையில்லாதது, இவ்விதமாக அன்பு கூராமல் ஊக்கமாக அன்பு கூருவோம்.

பவுல் பிலேமோனுக்கு எழுதும்போது; ''நீர் செய்யத்தக்கதை உமக்குக் கட்டளையிடும்படிக்குக் கிறிஸ்துவுக்குள் நான் துணியத்தக்கவனாயிருந்தாலும், அப்படிச்செய்யாமல், அன்பினிமித்தம் மன்றாடுகிறேன்'' என்கிறார் (பிலே.9). அன்பு என்பது சினமடையாது அப்படியென்றால் கோபம் கொள்ளாது. பவுல் இங்கே அன்பினிமித்தம் மன்றாடுவதாக எழுதுகிறார். நாம் அன்பிற்கு அடிமைகளாக இருப்போமானால் அன்பின் நிமித்தமாக கேட்டவேண்டியவர்களா இருக்கிறோம். அதிகாரத்தோடு அல்லது கோபத்தோடு கேட்காமல் அன்பின் நிமித்தமாக கேட்டவேண்டும். உங்களுடைய மன்றாட்டு மற்றவர்களோடு எப்படிப்பட்டதாக இருக்கிறது. ''அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்'' (1யோவா.3:16).

இயேசுவானவர் எல்லாவற்றிலும் மாதியை நமக்குப் பின்வைத்துப்போயிருக்கிறார். அவரை பின்பற்றுகிற ஒவ்வொருவனும் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன் என்றார். நமக்கு வரக்கூடிய பாடுகளை சகித்துக்கொண்டு அவரை பின்பற்ற வேண்டியவர்களாயிருக்கிறோம். அவர் சிலுவையில் நமக்காக மரித்ததைப்போல நாமும் சகோதரர்களுக்கு ஒரு பிரச்சனை என்றால் அவர்களுக்கு நம்முடைய ஜீவனைக்



கொடுத்தாவது காப்பாற்ற வேண்டியவர்களாயிருக்கிறோம். எனவே ஜீவனை கொடுக்கவும் நாம் கடனாளிகளாயிருக்கிறோம் என்பதை யோவான் நமக்கு நினைப்பூட்டி எழுதுகிறார். ஜீவனையே கொடுக்க நாம் கடனாளிகளாயிருக்கும்போது மற்ற காரியங்கள் பெரிதானவைகள் அல்ல.

தேவன் முதலாவது நம்மில் அன்பு கூர்ந்தார். ''தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது'' (1யோவா.4:9). ஒருவரும் கெட்டுப்போவது தேவனுடைய விருப்பமல்ல. எல்லோரும் மனந்திரும்வேண்டும் என்பதற்காகவே தம்முடைய ஒரே பேறான குமாரனையே நமக்காக ஒப்புக்கொடுத்து அன்புகூர்ந்தார். ''தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்புகூர்ந்திருக்க, நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோம்'' (1யோவா.4:11).

உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் சிருஷ்த்த அவர் இப்படியாக நம்மில் அன்புகூர்ந்திருக்க நாமும் அன்புகூர கடனாளி களாயிருக்கிறோம். மற்றவர்களிடம் அன்புகூராதிருப்பது நாம் கடனாளிகளாகவே இருக்கிறோம் என்பதை நமக்கு நினைப்பூட்டுகிறது. நாம் அடைக்கவேண்டிய கடன் அதிகமாக இருந்தால் ஒவ்வொருநாளும் எந்த அளவு முயற்சிப்போம். அதைப்போல மற்றவர்களிடம் அன்பு செலுத்தி அந்த அன்பு கடனை அடைக்க ஒவ்வொரு நாளும் முயற்சிக்கவேண்டும். இப்படி நாம் செய்யும்போது; ''இதினாலே தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும், பிசாசின் பிள்ளைகள் இன்னாரென்றும் வெளிப்படும்; நீதியைச் செய்யாமலும் தன் சகோதரனில் அன்புகூராமலும் இருக்கிற எவனும் தேவனால் உண்டானவனல்ல. நாம் ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டு மென்பதே நீங்கள் ஆதிமுதல் கேள்விப்பட்ட விசேஷமாயிருக்கிறது. பொல்லாங்கனால் உண்டாயிருந்து தன் சகோதரனைக் கொலைசெய்த காயீனைப்போலிருக்கவேண்டாம்; அவன் எதினிமித்தம் அவனைக் கொலைசெய்தான்? தன் கிரியைகள் பொல்லாதவைகளும், தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமாயிருந்த தினிமித்தந்தானே'' (1யோவா.3:10-12). அன்பு தேவனால்

உண்டாயிருக்கிறது என்று முன்னமே வாசித்தோம். உலகத்தில் பிறந்த ஒவ்வொருவனும் பிறனில் அன்புகூரவேண்டும். இப்படி அன்புகூராமலும் தன் சகோதரனை நேசிக்கமலும் இருக்கிறவன் கொலைபாதகனாகவும், பிசாசின் மகனாகவும் இருக்கிறான். அப்படிப்பட்டவன்மேல் தேவனுடைய கோபம் நிலைத்திருக்கும். ஆகையால் உங்களில் ஒருவனும் காயீனைப்போல போய்விடாதிருக்க எச்சரிக்கையாயிருங்கள். ஒவ்வொரு நாளும் நீதிக்குறிய காரியங்களைக் குறித்துப் பேசுங்கள், அவைகளையே சிந்தியுங்கள்., செயல்படுத்துங்கள். அப்பொழுது ஆதிமுதலாக இருக்கிறவராகவே இருக்கும் ஆண்டவர் நம்மோடிருப்பார்.

கர்த்தருடைய சீஷர்கள் பன்னிரெண்டுபேரும் இயேசுவினிடத்தில் அன்பாயிருந்தனர். ஆனால் அவருக்கு ஒரு பிரச்சனை வந்தவுடன் எல்லோரும் ஓடிவிட்டனர். இது எப்படிப்பட்ட அன்பாக இருக்கிறது. இதை அறிந்த ஆண்டவர் அவர்கள் தம்மை விட்டு ஓடிப்போவார்கள் என்பதை அறிந்தவராகவும் வசனங்கள் நிறைவேறத் தக்கதாகவும் இதைச்சொன்னார். ‘‘மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையின் ஆடகள் சிதறடிக்கப்படும் என்று எழுதியிருக்கிறபடி, இந்த இராத்திரியிலே நீங்கள் எல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள் என்றார்’’ (மத்.26:31).

அந்தப்படியாக எல்லோரும் ஓடிப்போனார்கள். பேதுரு ஒருவன் மட்டும் அவருக்கு சம்பவிப்பதைப் பார்க்கும்படி மறைந்து சென்றான். அப்பொழுது அவர்கள் அவனை நோக்கி: உன்பேச்சு தெரிகிறது நீயும் அவர்களில் ஒருவன் என்றார்கள். அவனை அறியேன் என்றான். இப்படியாக மூன்று முறையும் மறுதலித்தான். இவர்கள் ஆதியிலே இயேசுவின் மீது கொண்ட அன்பு என்னவாயிற்று? அன்பானவர்களே, நாம் இவர்களைப் பார்க்கிலும் மேலானவர்கள் அல்ல. நமக்கும் இப்படிப்பட்ட சோதனைகள் வருகிறபொழுது நாம் இயேசுவை எப்படி அறிக்கையிடுகிறோம்?

ஒரு வேலை வாய்ப்பு கிடைக்கிறது. கிறிஸ்தவர்கள் என்றால் வேலை இல்லை. மற்ற மார்க்கத்தார்கள் என்றால் வேலை உண்டு என்று சொல்லிவிட்டால் போதும். நானும் அந்த மார்க்கத்தில் இருந்தேன். இப்போது இல்லை, என்னுடைய பெயர் கூட இன்னும்



மாற்றப்படவில்லை என்னுடைய சர்ட்டிபிகேட்டைப் பாருங்கள் என்று காண்பிக்கவும் செய்ய ஆரம்பித்துவிடுவோம். எந்த சூழ்நிலையிலும் இயேசுவை மறுதலிக்காமல் நாம் அவரிடம் கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்தவேண்டியவர்களாயிருக்கிறோம். அப்படிச்செய்யும்போது தேவன் நம்மில் சந்தோஷம் கொள்ளுவார். நாமும் அவருக்கு பிள்ளைகளாயிருப்போம். இப்படியாக ஊக்கமான அன்பு உள்ளவர்களாயிருங்கள்.

**கேள்வி நேரம்**

**உண்மையினால் அன்பு கூருவது என்பது எப்படி?**

பார்த்தால் ஒரு மாதிரி பார்க்காவிட்டால் ஒரு மாதிரி என்பார்கள். ஒரு கடையின் முதலாளி இருக்கும்போது அதில் வேலை பார்க்கிறவர்கள் மிகவும் பயத்தோடும் அவருக்கு உண்மையுள்ள வேலைக்காரனைப் போலவும் நடந்துகொள்ளுவார்கள். அவர் இல்லாதபோது அவன் கெடக்கிறான் மடையன். அவனைப்போல ஒருவனை நான் உலகத்தில் பார்க்கவில்லை என்று சொல்லுவானேயானால் அது எப்படியிருக்கும். அதைப்போல ஆளைக் கண்டு வேஷம் போடக்கூடாது. அன்பு அயோக்கியமானதைச் செய்யாது என பார்த்தோம். மேலும் அன்பு நிலையானது எல்லாம் ஒழிந்போனாலும் அன்பு ஒருக்காலும் ஒழிந்துபோகாது என படித்தோம். அன்பில் உண்மை காணப்பட வேண்டும்.

அன்பு உயிருள்ளது. ‘‘என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்’’ (1யோவா.3:18). அநேகர் எழுத்தோடு நின்று விடுவார்கள். இன்னும் பலர் நாவோடு நின்றுவிடுவார்கள். அதாவது உதட்டளவில் அன்புகூருவது. இவைகள் மாய்மாலமான அன்பாக இருக்கிறது. கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரவேண்டும். அது அகாப்பே அன்பு இப்படியாக அன்பு செலுத்தி தேவனுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள். "நாம் தேவனிடத்தில் அன்புகூாந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும்போது, தேவனுடைய பிள்ளைகளிடத்தில் அன்புகூருகிறோமென்று அறிந்துகொள்ளுகிறோம்" (1யோவான் 5:2). உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 31. உன் நம்பிக்கை வீண்போகாது
## Your Hope Will not Cut Off

**ந**ம்பிக்கையே வாழ்க்கையின் அஸ்திபாரமாயிருக்கிறது. நம்பிக்கையில்லாமல் வாழ்வது கூடாத காரியம். நம்பிக்கை வீண்போகாதிருக்க நாம் செய்யவேண்டியது என்ன? நான் நம்பினவர்கள் என்னை மோசம்போக்கிவிட்டார்கள் என்று சொல்லக் கேள்விப்படுகிறோம். இப்படியாக அநேகர் ஏமாற்றப்படுவதை அறிகிறோம். பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டபடி நாம் நடந்துகொள்ளுவோமானால் நம்முடைய நம்பிக்கை வீண்போகாதிருக்கும். “உன் மனதைப் பாவிகள்மேல் பொறாமைகொள்ள விடாதே; நீ நாடோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிரு. நிச்சயமாகவே முடிவு உண்டு; உன் நம்பிக்கை வீண்போகாது” (நீதி.23:17-18).

இந்த வசனத்தை ஒரு குடுகுப்பைக்காரன் சொல்வதைப்போல எடுத்துக்கொள்ளக்கூடாது. இன்று அநேகர் வசனத்தை வாசித்து அதை கர்த்தர் இந்நாளில் எனக்குத்தந்துள்ளார் என்று எண்ணிக்கொண்டு, குருட்டு நம்பிக்கை வைப்பார்கள். இவ்வசனங்கள் நமக்கு போதிக்கின்ற காரியம் என்ன என்று ஆழமாக சிந்திக்கவேண்டும்.

**முதலாவது** சொல்லும்போது உன் மதைப் பாவிகள்மேல் பொறாமைகொள்ள விடாதே என சொல்லப்பட்டுள்ளது. பொறாமை ஒரு எழும்புருக்கி போன்றது. தேவன் அவனவனுக்கு தக்கதாக கொடுக்கிறார். மற்றவர்களைப் பார்த்து பொறாமை கொள்ளுவது நமக்கு நாமே குழிவெட்டுவதைப்போன்றது. குறிப்பாக பாவிகள்மேல் பொறாமை கொள்ளுவதை தவிர்கவேண்டும். அவன் வந்தபிரகாரமே போகப் போகிறான். அவனுடைய ஆத்துமா பாதாளத்தை நோக்கி காத்திருக்கிறதை அவன் உணரான். அப்படிப்பட்டவன் மேல் பொறாமை கொண்டு உங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தைக் கெடுத்துக்கொள்ளாதிருங்கள்.

“ஏனெனில், முற்காலத்திலே நாமும் புத்தியீனரும் கீழ்ப்படியாதவர்களும், வழிதப்பி நடக்கிறவர்களும், பலவித இச்சைகளுக்கும், இன்பங்களுக்கும் அடிமைப்பட்டவர்களும்,



துர்க்குணத்தோடும் பொறமையோடும் ஜீவனம்பண்ணுகிறவர்களும், பகைக்கப்படத்தக்கவர்களும், ஒருவரையொருவர் பகைக்கிறவர் களுமாயிருந்தோம்” (தீத்.3:3). இப்பொழுது அப்படிப்பட்டவர்களாக நாம் இல்லை. இப்பொழுது கீழ்படிகிற பிள்ளைகளாக இருந்து சத்தியத்தை நேசித்து அதன்படி நம்முடைய வாழ்க்கையை மாற்றியமைத்துக் கொண்டோம். பொறாமைக்கும் நமக்கும் வெகுதூரமாக இருக்கிறது. ஏனெனில் “அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது” என 1கொரி.13:4-ல் படிக்கிறோம். நமக்குள் அன்பு இருக்குமானால் நாம் பொறாமைகொள்ள மாட்டோம்.

சங்கீதக்காரன் சொல்லுகிறான்; “பொல்லாதவர்களைக்குறித்து எரிச்சலடையாதே; நியாயக்கேடு செய்கிறவர்கள்மேல் பொறாமை கொள்ளாதே. அவர்கள் புல்லைப்போல சீக்கிரமாய் அறுப்புண்டு, பசும்பூண்டைப்போல் வாடிப்போவார்கள்” என்று (சங்.37:1,2). இது எத்தனை உண்மையான காரியம். பொல்லாதவர்களின் முடிவு வெகு சீக்கிரம். நீதிமான்களோ சீயோன் பர்வதத்தைப்போல என்றென்றும் நிலைத்திருப்பார்கள். இப்படிப்பட்ட நீங்கள் நியாயக்கோடு செய்கிறவர்கள்மேல் பொறாமை கொள்ளலாமா? அவர்களின் முடிவு புல்லுக்கு ஒப்பாக சொல்லப்பட்டுள்ளது.

**இரண்டாவது** எந்நாளும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிரு. ஒவ்வொரு நாளும் கர்த்தர் உண்டுபண்ணின நாள் அதில் அவரைப் பற்றும் பயத்தோடிருக்கவேண்டும். நாம் ஏன் பயப்படவேண்டும் நாம் என்ன குற்றம் செய்தோம் என்று சொல்லுவார்கள். ஒரு நியாயாதிபதி உட்கார்ந்து இருக்கும்போது யாராவது எதிர்த்துப்பேசுவார்களா? உலக நியாயாதிபதிகளுக்கே இவ்வளவு தூரம் பயப்படும்போது இந்த உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கினவருக்கு முன்பாக நாம் பயந்து நடக்கவேண்டாமா? “எப்பொழுதும் பயந்திருக்கிறவன் பாக்கியவான்; தன் இருதயத்தைக் கடினப்படுத்து கிறவனோ தீங்கில் விழுவான்” என காண்கிறோம் (நீதி.28:14).

நீங்கள் பாக்கியவான்களாக இருக்கவேண்டுமானால் தேவனுக்கு பயந்து ஜீவனம்பண்ணுங்கள். “பாவி நூறுதரம் பொல்லப்பைச் செய்து நீடித்து வாழ்ந்தாலும் என்ன? தேவனுக்கு அஞ்சி, அவருக்கு முன்பாகப்

பயந்திருப்பவர்களே நன்றாயிருப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன்'' என்கிறார் சாலொமோன் ஞானி (பிர.8:12). அநேகருடைய குற்றச்சாட்டு என்னவென்றால்; பாவிகள் நன்றாகத்தானே இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு கேடும் வருவதில்லை. நீதிமான்களுக்குத்தான் அநேக சோதனை வேதனைகள் வருகிறது என்பார்கள். உண்மைதான். அப்படிப்பட்ட பாவி பொல்லாப்பை தொடர்ந்து செய்து நீடித்து வாழும்போது நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம். நல்ல பயிர்களைவிட களைகள்தான் சீக்கிரமாய் வளருகின்றன.

அதற்காக அந்த களைகளை அப்படியே தோட்டக்காரன் விட்டுவிடுவானா? அவைகளை அழிக்கவேண்டிய காலத்தில் அதை அழித்து பயிர்களைக் காப்பான் அதைப்போல பாவியின் நாட்கள் என்னப்படுகிறது. ''ஊத்ஸ் தேசத்திலே யோபு என்னும் பேர் கொண்ட ஒரு மனுஷன் இருந்தான்; அந்த மனுஷன் உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந்தான்'' (யோபு1;1). இவனுக்கு வந்த கஷ்டம் ஒருவருக்கும் வந்திருக்க வாய்பில்லை. அவனுடைய தோல்முதலானவைகள் எல்லாம் அழுகிப்போனது. அவனுக்கு உண்டான எல்லாம் பரிபோனது. அவனோ தன்னுடைய உத்தமத்தில் உறுதியாயிருந்தான். அவன் தேவனை தூஷிக்கவும் இல்லை, தேவனைப் பற்றி குறைசொல்லவும் இல்லை. அவனுடைய தேவனாகிய கர்த்தர் அவனை இரட்சித்து அவனுக்கு முன்பு இருந்ததைக் காட்டிலும் இரட்டிப்பாக கொடுத்து அவனை ஆசீர்வதித்தார். இது ஒரு கதையல்ல உண்மையில் நடந்த சம்பவம்.

நமக்கு வரக்கூடிய கஷ்டங்கள் ஒரு பெரிய விஷயம் அல்ல. அதைவிட மேலான கஷ்டங்களை அனுபவித்தவர்கள் இந்த உலகத்தில் வாழ்ந்து சாட்சியாக மரித்திருக்கிறார்கள். ஆகையால் நிச்சயமாகவே முடிவு உண்டு. முடிவு எப்பொழுதுவரும்? அதைக் காண எத்தனை நாட்களாகும் என்று எண்ணாதிருங்கள். ''ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு; வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமயமுண்டு'' என பிரசங்கி சொல்லுகிறான் பிர.3:1-வது வசனம். எல்லாவற்றிற்கும் ஒரு காலமுண்டு. நாம் பிறக்க ஒரு காலம் இருந்தது. அதைப்போல நாம் மரிக்க ஒரு காலம் இருக்கிறது. மரம் செடி கொடிகள் ஆகாயத்துப்பறவைகள், பூமியில் வாழும் சந்துக்கள் இப்படி



எண்ணிலடங்கானவைகளை நாம் காண்கிறோம் அவைகள் எல்லாவற்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு என காண்கிறோம். அவர்களுக்கு வந்தது எனக்கு வராது என்பது அல்ல எல்லோருக்கும் எல்லாமே வரக்கூடியதாக இருக்கிறது. மண்ணான மனிதன் மண்ணுக்குப்போகும் வரை அவனுக்கு பலவிதமான பாடுகளும் பிரச்சனைகளும் இருக்கும். ஆனாலும் நிச்சயமாக முடிவு உண்டு. அந்த நம்பிக்கையோடு செயல்படவேண்டும். எனக்கு வந்தது யாருக்கும் வரவில்லை என்று ஒருவரும் சொல்லிவிடமுடியாது.

எபிரெய ஆசான் சொல்லுகிறார்; ''மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்'' என்கிறார் (எபி.13:1).

துவக்கம் ஒன்று இருந்தால் அதற்கு முடிவு என்று ஒன்று நிச்சயமாக உண்டு. அந்த முடிவை நோக்கி ஓடவேண்டியவர்களாக இருக்கிறோம். பாதிவழியில் களைத்துப்போய் என்னால் ஓட முடியாது, இனிமேல் ஒரு அடிகூட என்னால் எடுத்துவைக்க முடியாது என்று சொல்லுவோமானால் நாம் தகுதியை இழந்தவர்களாக காணப்படுவோம்.

நம்மை சூழ்ந்து இருக்கிற சாட்சிகளை நோக்கிப்பார்த்துக்கொண்டு நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தை தொடருவோம். இதை துவக்கினவரும் முடிக்கிறவரும், தமக்கு முன் வைத்த சோதனையையும் பாடுகளையும் ஜெயித்தவர். நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து அவரையே நாம் நோக்கிப்பார்த்து ஓடுவோம். ஓட்டத்தில் பொறுமை அவசியமான ஒன்றாக இருக்கிறது. அநேகர் பொறுமையை இழந்து ஓட்டத்தை இழக்கின்றனர். உங்களில் இருக்கிற பொறுமையை இழந்துவிடாதிருங்கள்.

''எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று; ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர் களாயிருங்கள்'' (1பேது.4:7). ஆண்டவர் ஊழியத்தின் நாட்களில் தம்முடைய பிதாவைநோக்கி எப்பொழுதும் ஜெபிக்கிறவராயிருந்தார். அதைப்போல நாமும் முடிவை சந்திக்க ஜெபித்து ஜெபித்து வெற்றியடைய

கற்றுக்கொள்ளுவோம். நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயமாக இருக்கிறது. பொறுமையோடிருந்து காரியத்தை நடப்பியுங்கள்.

கடைசியான மேலுள்ள வசனத்தில் உன் நம்பிக்கை வீண்போகாது என்கிறார். பொறாமை கொள்ளாமலும், எந்நாளும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிருந்து, நிச்சயமாகவே முடிவு உண்டு என்ற நம்பிக்கையில் பொறுமையோடிருந்து, நம்முடைய விசுவாசத்தை காத்துக்கொள்ளும்போது நம்முடைய நம்பிக்கை வீண்போகாது. ‘‘இம்மைக்காகமாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர் களாயிருந்தால், எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத் தக்கவர்களாயிருப்போம்’’ (1கொரி.15:19). அநேகர் இயேசுவை ஏற்றுக் கொள்ளுகிறார்கள் ஆனால் அவர்களுடைய நம்பிக்கை எப்படிப்பட்டதாக இருக்கிறது என்று பார்த்தால் இம்மைக்குறிய காரியங்களுக்காக கர்த்தரைத் தேடுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் சோதனைக்காலங்களில் சோர்ந்துபோவார்கள்.

கர்த்தர் இம்மைக்குரிய ஆசீர்வாதங்களையும் மறுமைக்குரிய ஆசீர்வாதங்களையும் வாக்குப்பண்ணியிருக்கிறார். உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக்கண்டடைவான் என்கிறார். அவர் நம்மோடு இருக்கும்போதும், நாம் அவருடைய மேய்ச்சலின் ஆடுகளாக இருக்கும்போதும், கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகளாக இருக்கும்போதும் இவ்விதமான ஆசீர்வதங்களுக்கு பாத்திரவான்காளாயிருப்போம். ‘‘கர்த்தர் உன் நம்பிக்கையாயிருந்து உன் கால் சிக்கிக்கொள்ளாதபடி காப்பார்’’ (நீதி.3:26). நீங்கள் யாரை நம்பி இருக்கிறீர்கள். நம்பினவர்கள் நட்டாற்றில் விட்டுவிடுவார்கள். ஆனால் நம்பிக்கையின் கர்த்தர் தம்மை நம்புகிறவர்களை ஒருபோதும் கைவிடார் என காண்கிறோம்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் சகோதரனே சகோதரியே, உன்னுடைய நம்பிக்கை வீண்போகாதிருக்க வேதாகமம் கொடுக்கும் ஆலோசனைக்கு செவிகொடுத்து அதன்படியாக ஒவ்வொரு நாளும் ஜீவித்து தேவனுடைய ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ளும் படியாக முயற்சிசெய். அப்பொழுது உன் நம்பிக்கை மோசம் போகாதிருக்கும். வாக்குப்பண்ணின கர்த்தர் உனக்கு வாடாத ஜீவ கீரிடத்தை உனக்கு தந்தருளுவார். நீ நித்திய காலமெல்லாம் அவரோடு வாழும் பாக்கியத்தை கண்டடைவாய்.



**கேள்வி நேரம்**

**அப்போஸ்தலர்களுடைய நம்பிக்கை எப்படிப்பட்டதாயிருந்தது?**

பவுல் சொல்லுகிறார்; ‘‘நாங்கள் எங்கள்மேல் நம்பிக்கையா யிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன்மேல் நம்பிக்கையா யிருக்கதக்கதாக, மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம். அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களைத் தப்புவித்தார், இப்பொழுதும் தப்புவிக்கிறார், இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம்’’ என்கிறார் (2கொரி.1:9,10). தங்களைத் தாங்களே நம்பி மோசம்போகிற கோடிக்கணக்கான ஜனங்களை உலகத்தில் பார்க்கிறோம்.

ஐயோ! என் புத்தியினாலே நான் மோசம்போனோனே என்பார்கள். ஆனால் பவுல் நாங்கள் எங்கள்மேல் நம்பிக்கையாயிராமல் என்று சொல்லுகிறார். நம்மை நாமே நம்பாவிட்டால் யாரை நம்புவது என்று கேட்பீர்கள். பவுல் போன்றோர் மரித்தோரை எழுப்புகிற தேவன்மேல் நம்பிக்கை வைத்தார்கள். அதையேதான் நாங்களும் உங்களுக்குச் சொல்லுகிறோம். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் என்று சொல்லும் ஆண்டவர் இயேசுவின் மீதும் அவரை தெரிந்துகொண்ட பிதாவாகிய தேவன் மீதும் உங்களுடைய நம்பிக்கையை வையுங்கள். அப்பொழுது நம்பிக்கையின் தேவன் உங்களுடைய நம்பிகையை ஆசீர்வதிப்பார். நீங்கள் தேவனால் ஆசீர்வதிக்கப்பட நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 32. ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள்
## Serve One Another

**ஒ**ருவருக்கொருவர் உதவிசெய்யும்படியாகவும் ஒன்றை ஒன்று சார்ந்திருக்கும்படியாகவும் தேவன் நம்மை சிருஷ்டித்துள்ளார். யாருடைய தயவும் எனக்கு தேவையில்லை யாரும் எனக்கு உதவிசெய்யவேண்டிய அவசியமில்லை என்று ஒருவரும் சொல்லிவிடமுடியாது. மருத்துவர் நோயாளிக்கு மருந்து கொடுத்து குணப்படுத்துகிறார். ஆசிரியர் பாடம் கற்றுக்கொடுக்கிறார். காவலாளர் காவல் காக்கிறார். அவரவர் அவரவருடைய வேலையைச்செய்யும்போது

நாடும் வீடும் சுகமாகவாழமுடிகிறது. எனக்கு மருத்துவர் வேண்டாம் என்று சொன்னால் நோய் வரும்போதுதான் தெரியும் நமக்கு வரக்கூடிய கஷ்டங்கள். பள்ளிக்கு செல்ல மறுக்கும் அநேகர் பின்பு வளர்ந்து வருகிற நேரத்தில் பாடத்தின் முக்கியத்துத்தை அறிந்து நான் படிக்காமல் என்னைக் கெடுத்துகொண்டேன் என்பார்கள். உதவி என்பது நமக்கு நாமே ஏற்படுத்திக்கொள்ளும் ஒன்றல்ல. மற்றவர்களிடமிருந்து வரவேண்டும். வேதம் சொல்லுகிறது; ''அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள்'' (1பேது.4:10). தேவன் ஒவ்வொருவருக்கும் சில வரங்களை பகிர்ந்துகொடுத்திருக்கிறார். எவரும் தேவனிடத்திலிருந்து எந்த வரத்தையும் பெறவில்லை என்று சொல்லிவிடமுடியாது. சிறு துரும்பும் பல் குத்த உதவும் என்று சொல்லுவார்கள்.

அந்தப்படியாக ஒவ்வொன்றும் மற்றவர்களுக்கு உதவக் கூடியவையாக இருக்கிறது. சிலருக்கு நன்கு போதிக்கும் அனுபவத்தைப் ஒருவர் பெற்றிருக்கலாம், சிலர் மற்றவர்களுக்கு கொடுத்து உதவக்கூடிய வசதிபடைத்தவராயிருக்கலாம், சிலர் தானதர்மங்களை செய்யும் எண்ணமுடையவராயிருக்கலாம் இப்படி பலவிதமான தகுதியாம்சங்களை தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார்.

பவுல் தீமோத்தேயுக்கு எழுதும்போது; ''மூப்பராகிய சங்கத்தார் உன்மேல் கைகளை வைத்தபோது தீர்க்கதரிசனத்தினால் உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப்பற்றி அசதியாயிராதே. நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கும்படி இவைகளையே சிந்தித்துக்கொண்டு, இவைகளிலே நிலைத்திரு. உன்னைக்குறித்தும் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு, இவைகளில் நிலைகொண்டிரு, இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக்கொள்ளுவாய்'' என்று எழுதுகிறார் (1தீமோ.4:15-16).

எஸ்றா என்பவன் தேறின வேதபாரகனாயிருந்தான். அவனைப்போல தீமோத்தேயும் உபதேச விஷயத்தில் தேறினவனாக இருக்கும்படியாக மூப்பராகிய சங்கத்தார் அவன் மீது கைகளை வைத்து



ஜெபித்தார்கள். அவன் பெற்றுக்கொண்ட உபதேசத்தில் நிலைத்திருக்கும் படியாகவும் அந்த உபதேசத்தைக்குறித்த விஷயத்தில் எச்சரிப்பாக இருக்கும்படியாகவும் போதிக்கப்பட்டான். ஆகையால் தீமோத்தேயு அந்தப்படியாக கிறிஸ்துவின் வாசனையை வெளிப்படுத்தும் ஒரு ஊழியக்காரனாயிருந்தான். மேலும் புதிய ஏற்பாட்டில் ''யோப்பா பட்டணத்தில் கிரேக்கப் பாஷையிலே தொற்காள் என்று அர்த்தங்கொள்ளும் தபீத்தாள் என்னும் பேருடைய ஒரு சீஷி இருந்தாள்; அவள் நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்துகொண்டுவந்தாள்'' (அப்.9:36).

இவள் நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்துகொண்டுவந்தாள் எனக்காண்கிறோம். ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள் என்ற வசனத்தின்படி தன்னை முழுவதுமாக அற்பணித்தவளாக தேவனுடைய நாமம் மகிமைப்படும்படியாக யோப்பா பட்டணத்தில் வாழ்ந்துகொண்டிருந்தாள். இவள் கர்த்தருடைய சீஷி என்பதை அந்தப்பட்டணத்து மக்கள் அறிந்து, மற்றவர்களும் கர்த்தரை ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு அவள் ஒரு கிறிஸ்தவளாக முன்மாதிரியாக ஜீவித்தாள் என காண்கிறோம்.

ஒவருவருக்கொருவர் உதவி செய்கிறதில் பகிர்ந்துகொடுப்பதிலும் ஆதிசபையார் முன்மாதிகளாக இருந்திருக்கிறார்கள். ''விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள். காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிரிந்துகொடுத்தார்கள்'' (அப்.2:44-45). ஒருமனம் இருக்கும் இடத்தில் இப்படிப்பட்டவைகளை செய்ய சாத்தியம் இருக்கிறது. ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்ற பழமொழியை கேள்விப்பட்டிருப்பீர்கள். விசுவாசிகள் எல்லாரும் ஒருமித்திருந்து சகலத்தையும் பொதுவாய் அநுபவித்தார்கள்.

ஒருவனும் தன்னுடையதை என்னுடையது என்றோ, தனக்கு சொந்தமானது என்றோ சொல்லவில்லை. அந்த அளவு பொதுவாக வைத்து அநுபவித்து ஊழியம் செய்தார்கள். மேலும் அவைகளை பகிர்ந்துகொடுத்தார்கள். இல்லாதவர்களை அடையாளம் கண்டு

அவர்களுடைய தேவையை அறிந்து பகிர்ந்துகொடுத்தார்கள். பகிர்ந்துகொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன் என்ற வசனத்தின்படி செயல்பட்டார்கள்.

யாக்கோபு சொல்லுகிறார்; "ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன? அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்" என்கிறார் (யாக்.2:15-17).

வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் திரிகிற அநேகரை நாம் பார்க்கிறோம். அப்படிப்பட்டவர்களுக்கு நாம் உதவி செய்கின்றோமா? என்றால் அநேக வேளைகளில் நாம் அவர்களை கண்டும் காணாதவர்கள்போல போய்விடுகிறோம் அல்லது அவர்களைப் பார்ப்பதற்கு எனக்கு நேரம் இல்லை என்று சொல்லுவோம். ஒரு நாள் பிறப்பதை அறியாத நாம் இப்படிச் சொல்வது தேவனுடைய பார்வையில் குற்றமாயிருக்கும். கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராதவன் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்? என வேதாகமம் கேள்வி எழுப்புகிறது. உங்களிடத்தில் கொடுக்க திராணியிருக்கும்போது அதைச் செய்யத்தக்கவர்களுக்கு செய்யும்படியாக முயற்சியுங்கள். இந்தப்பூமியிலே இல்லாதவர்களைப் பார்த்து நாம் ஏளனம் செய்யாதிருக்கவேண்டும். நம்மால் முடிந்த உதவிகளை அப்படிப்பட்டவர்களுக்கு செய்ய போதிக்கப்படுகிறோம்.

விசுவாசம் கிரியைகளில்லாதிருந்தால் அது தன்னிலேதானே செத்ததாயிருக்கிறது. நம்முடைய விசுவாசத்தை கிரியைகளினால் காண்பித்து நற்சாட்சியுள்ளவர்களாக வாழுவோம். மற்றவர்களுக்கு உதவி செய்கின்ற விஷயத்தில் கடன்வாங்கி கொடுக்கும்படியாக வேதம் போதிக்கவில்லை. ஏனென்றால் ஒன்றிலும் கடன்படாதிருங்கள் என்றே போதிக்கிறது. "ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்; ஒருவன் உதவிசெய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன்; எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக; அவருக்கே



மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்" (1பேது.4:11). தேவன் எந்த ஒரு நபரையும் பெலத்திற்கு மிஞ்சி உதவிசெய்யும்படியாக எங்கும் சொல்லவில்லை. பழைய ஏற்பாட்டில் கூட பலிசெலுத்தும்படியாக வரும்போது அவனுடைய பெலத்தின்படியாக புறா குஞ்சுகளையாவது அல்லது மெல்லிய மாவையாவது வந்து செலுத்தக்கடவன் என்றே சொல்லியிருக்கிறார்.

தேவன் கடன் வாங்கி செலுத்தவோ அல்லது கடன்வாங்கி மற்றவர்களுக்கு உதவி செய்யவோ சொல்லவில்லை. இவ்விஷயத்தில் அநேகர் கடன்பட்டு நான் அவனுக்காக பட்ட கடன். எனக்காக ஒன்றும் அந்த கடனை வாங்கவில்லை என்பார்கள். அன்பானவர்களே, தேவன் நமக்கு கொடுத்திருக்கிற பெலத்தின்படியாக மற்றவர்களுக்கு உதவி செய்வோமானால் நாம் ஒன்றிலும் கடன்படவேண்டிய அவசியமில்லை.

ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகையில் கள்ளர்கையில் அகப்பட்டான். அவனை அவர்கள் அவன் வஸ்திரங்களை உரிந்துகொண்டு, அவனைக் காயப்படுத்தி, குற்றுயிராக விட்டுப் போனார்கள். "சமாரியன் ஒருவன் பிரயாணமாய் வருகையில், அவனைக் கண்டு, மனதுருகி, கிட்ட வந்து, அவனுடைய காயங்களில் எண்ணெயும் திராட்சரசமும் வார்த்து, காயங்களைக் கட்டி, அவனைத் தன் சுயவாகனத்தின்மேல் ஏற்றி, சத்திரத்துக்குக் கொண்டுபோய், அவனைப் பராமரித்தான். மறுநாளிலே தான் புறப்படும்போது இரண்டு பணத்தை எடுத்து, சத்திரத்தான் கையில் கொடுத்து; நீ இவனை விசாரித்துக்கொள், அதிகமாய் ஏதாகிலும் இவனுக்காகச் செலவழித்தால், நான் திரும்பி வரும்போது அதை உனக்குத் தருவேன் என்றான்" (லூக்.10:33-35).

இந்த சமாரியன் அவனுக்கு உறவினன் அல்ல. ஆனால் சமாரியன் இரக்கமுள்ளவன். அவன்மீது இரக்கம்கொண்டு அவனை தன் சுயவாகனத்தில் ஏற்றி சத்திரத்துக்குக் கொண்டுபோய் பராமரித்தான். இதற்காக அவன் யாரிடமும் கடன்படவில்லை. தன்னிடத்தில் இருந்த எண்ணெயையும் திராட்சைரசத்தையும் அவனுடைய காயங்களில் வார்த்தான். தன்னிடத்தில் உள்ள இரண்டு பணத்தை கொடுத்தான். மேலும் தேவைப்பட்டால் நான் திரும்ப வரும்போது கொடுக்கிறேன்

என்றான். தேவன் அவனுக்கு கொடுத்த பலத்தின்படியே உதவி செய்தான். இந்த சமாரியனைப்போல நம்மால் முடிந்த உதவிகளை மற்றவர்களுக்குச் செய்யவேண்டும். இன்றைக்கு இப்படிப்பட்ட உதவி செய்தால் நம்மை போலீஸ் பிடித்து விசாரிப்பார்கள் என்று பயந்து அநேக நன்மைகளை செய்யாமற்போகின்றனர். இதை அறிந்த அரசு பல முறை தொலைக்காட்சிகளில் விளம்பரம் செய்கிறார்கள். ஆபத்தில் உயிருக்கு போராடிக்கொண்டு இருக்கும் ஒருவருக்கு நீங்கள் உதவி செய்தால் உங்களை போலீஸ் விசாரனை செய்யாது, உங்களை கோர்ட்டுக்கு இழுக்காது என்று. இப்படி இருக்கிறபடியால் நாம் ஆபத்தில் உள்ளவர்களுக்கு உதவி செய்ய முன்வரவேண்டும். உங்களில் இருக்கிற நன்மைகளை மற்றவர்களுக்கு பகிர்ந்துகொடுக்கவேண்டும்.

பேதுருவும் யோவானும் தேவாலயத்திற்கு போகும்போது; ஒரு சப்பாணி பிச்சை கேட்டான்: “அப்பொழுது பேதுரு; வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை; என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்; நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று சொல்லி; வலதுகையினால் அவனைப் பிடித்துத்தூக்கிவிட்டான்; உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் பெலன்கொண்டது. அவன் குதித்தெழுந்து நின்று நடந்தான்; நடந்து, குதித்து, தேவனைத் துதித்துக்கொண்டு, அவர்களுடனேகூடத் தேவாலயத்திற்குள் பிரவேசித்தான்” (அப்.3:6-8).

பேதுரு தன்னிடத்தில் இருந்த வரத்தை பயன்படுத்தி அவனை தூக்கிவிட்டார். சப்பாணி எதிர்பார்த்தது ஏதாவது கிடைக்கும் என்று; ஆனால் பேதுருவும் யோவானும் எங்களிடத்தில் பொன்னும் வெள்ளியும் இல்லை என்னிடத்தில் உள்ளதை உனக்கு தருகிறேன் என்று சொல்லி அவனை தூக்கிவிட்டார்கள். அநேகர் இந்தவிதமான வரம் எனக்கு இல்லை. தேவன் கொடுத்திருந்தால் எல்லா நேயாளிகளையும் சுகமாக்கிவிடுவேன் என்று சொல்லி சோம்பலாக தங்களுடைய வாழ்க்கையை கழித்துக்கொண்டிருக்கிறார்கள். சுகமாக்கும் வரம் இருந்தால் தான் அதை செய்வீர்களா? சமாரியனைப்போல உங்களுடைய பணத்தைக் கொண்டு ஒரு நேயாளியை சுகமாக்கமுடியாதா? தேவன் அதற்குரிய பெலனை உங்களுக்கு கொடுக்கவில்லையா? சிந்தியுங்கள் செயல்படுங்கள்.



**கேள்வி நேரம்**

**ஒருவர் பராத்தை ஒருவர் சுமக்கும்போது பிரமாணத்தை நிறைவேற்றுகிறவர்களாக இருப்போமா?**

ஆம், சுவிசேஷம் அறிவிப்பது ஒரு வழி. அதைப்போல சாட்சியாக வாழ்ந்து மற்றவர்கள் படுகிற உபத்திரவத்தில் அவர்களை விசாரிப்பதும் அப்படிப்பட்டவர்களுக்கு உதவி செய்வதும் கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுகிறதாயிருக்கிறது. பவுல் காலத்தியருக்கு எழுதிய நிருபத்தில் “ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்” என்கிறார் (கலா.6:2). நான் ஊழியம் செய்தால் இப்படித்தான் செய்வேன் என்று இல்லாமல் இயேசுவைப்போல நன்மைசெய்கிறவர்களாக எங்கும் சுற்றித் திரியுங்கள். அப்படிச்செய்வதாலே தேவனுடைய நாமம் மகிமைப்படும். அவனுக்கு வந்த பாரத்தை நான் ஏன் சுமக்கவேண்டும். அவன் ஒரு நன்றி கெட்ட மனிதன் என்று ஒதுக்காதிருங்கள். கர்த்தர் அப்படி ஒதுக்கியிருப்பாரானால் நாம் இரட்சிக்கப்பட்டிருக்க முடியாது. ஆகையால் மற்றவர்களுக்கு உங்களால் ஆன உதவியைச் செய்து பிரமாணத்தை நிறைவேற்றுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 33. அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பது சவாலான ஒன்று

## Enter His Rest is the Challenge

**க**டினமாக வேலைசெய்கிறவர்களுக்கு சற்று இளைப்பாறுதல் அவசியமாயிருக்கிறது. அதைப்போல பரலோக பிதா நமக்கு ஒரு நிறந்தரமான இளைப்பாறுதலை கொடுக்க அறிந்திருக்கிறார். இந்த இளைப்பாறுதல் இனிவருகிறதாக இருக்கிறது. அது மட்டும் நாம் இப்பூவியில் இயேசுவோடு பாடுபடவேண்டியவர்களாயிருக்கிறோம். ஆனால் சிலர் பரலோக இளைப்பாறுதலை இங்கே அனுபவிக்க வேண்டுமென விரும்புகின்றனர். ஆண்டவர் இயேசு முப்பத்து மூன்றரை ஆண்டுகள் இளைப்பாறுதலை காணாமல் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிறவராக எங்கும் சுற்றித்திரிந்தார். மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை என படிக்கிறோம். பரம

இளைப்பாறுதலை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற நாமும் ஆண்டவர் இயேசுவைப்போல தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றும்படியாக இரவு பகலாக பாடுபடும்படியாக நம்மை தேவராஜ்யத்தின் பணிக்காக ஒப்புக்கொடுப்போம். எபிரெயர் 3:1-4:16 வரை நாம் இளைப்பாறுதலைக் குறித்து அதிகமாக படிக்கிறோம். இளைப்பாறுதலில் பிரவேசிப்பது என்பது சவாலான ஒன்று என்றே சொல்லவேண்டும். இமயமலையில் ஏறுவது சவாலான ஒன்று. அதைப்போல ஓட்டத்தை முடித்து பரம இளைப்பாறுதலுக்குள் வெற்றி வீரர்களாக, விசுவாச வீரர்களாக, பரிசுத்தமுள்ளவர்களாக, சகலத்தையும் செய்து முடித்தவர்களாக பிரவேசிப்பது சவாலான காரியம்தான்.

பரீட்சையில் எல்லோரும் பாஸ் பண்ணுகிறார்களா? இல்லையே! அதைப்போல நியாயத்தீர்ப்பும் இருக்கும். விசுவாசத்தில் அநேகர் சோர்ந்துபோய் ஓட்டத்தை பாதியில் நிறுத்திவிடுகிறார்கள். இப்படி இஸ்ரவேலிலும் இருந்தார்கள். “ஆதலால், நான் அந்தச் சந்ததியை அரோசித்து, அவர்கள் எப்பொழுதும் வழுவிப்போகிற இருதயமுள்ள ஜனமென்றும், என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொல்லி; என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்” (எபி. 3:10,11).

இஸ்ரவேலில் அநேகர் எகிப்தை திரும்பி பார்த்தார்கள். கலப்பையின் மேல் தன் கைவைத்துவிட்டு பின்னிட்டு பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்திற்கு தகுதியுள்ளவன் அல்ல என்று நம்முடைய ஆண்டவரும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுமானவர் சொல்லியிருக்கிறார். நம்மில் எத்தனைபேர் பின்னிட்டு பாராதிருக்கிறோம். கர்த்தரை ஏற்றுக்கொண்ட ஒரு சிலர் முன்பு இருந்த வாழ்க்கை நன்றாக இருந்தது. சத்தியத்தை அறிந்த பின்பு அதற்கு பயந்து வாழ வேண்டியுள்ளது என்று சொல்லி முறுமுறுப்பார்கள்.

“சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்” என ஒரு எச்சரிப்பின் சத்தம் கொடுக்கப்பட்டுள்ளது (எபி. 3:12). பிசாசு எவனை விழுங்கலாமோ என வகைதேடி சுற்றித்திரிகிறான். அவன் அவிசுவாசமுள்ள



வார்த்தைகளை தூண்டுவான் அல்லது மற்றவர்கள் மூலமாக செயல்படுவான். உங்களுடைய இருதயம் அவிசுவாசமுள்ள இருதயமாக போய்விடாது பார்த்துக்கொள்ளுங்கள். என்னத்தைக் கண்டோம் பல வருடங்களா கிறிஸ்தவர்களாக இருக்கிறோம். நேற்று வந்த மனிதர்கள் எல்லாம் எப்படி எப்படியோ ஜீவிக்கிறார்கள் அவர்களையும் கர்த்தர் ஆசீர்வதிக்கிறார் என சலித்துக்கொண்டு, அவிசுவாச களைகள் வளர இடம்கொடாதிருங்கள். “உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள்” (எபி. 3:13).

அநேகர் பாவத்தினாலே கடிப்பட்டுப்போவதற்கு காரணம். சரியான புத்திமதியான வார்த்தைகள் அவர்களுக்கு கிடைக்கவேண்டிய நேரத்தில் கிடைக்கவில்லை. ஆகையால் துரிதமாக முடிவெடுத்து பாவத்தினால் வஞ்சிக்கப்படுகிறார்கள். ஆக, நாம் செய்யவேண்டியது என்ன? உன் சகோதரனையும் உன் சகோதரியையும் பார்ப்பாயானால் அவர்களுடைய விழுதலிலே சந்தோஷப்படாதே. அவர்களுக்கு கூடுமானவரை புத்திமதிகளை சொல்லி அவர்களை ஆதாயம் செய்ய முற்படுங்கள். “நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம்” (எபி. 3:14).

ஆரம்ப விசுவாசம் நாளடைவில் ஆட்டம் காண்கிறது. துரிதமாய் முளைத்த விதையைப்போல என்று சொல்லலாம். கற்பறையின் மேல் விழுந்த விதை அந்தவிதமாக முளைக்கும். நாமோ அப்படியில்லாதவர்களாக நல்ல நிலத்தில் விழுந்த விதையைப்போல கனிகொடுக்கிறவர்களாக மாறவேண்டும். ஆரம்ப விசுவாசம் அற்புதமானது. அவைகளில் நிலைத்திருக்க வேதம் நம்மை உற்சாகப்படுத்துகிறது. வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்திலுள்ள சபைகளுக்கு எழுதும்போது ஆரம்பத்தில் கொண்ட அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்கு குறைவுண்டு என்று கர்த்தர் சொல்லுகிறார். தேவன்: ஆரம்பத்தில் கொண்ட அந்த அன்பு விசுவாசம் இவைகளில் நிலைத்திருக்க வேண்டுமென எதிர்பார்க்கிறார். இந்த ஆரம்ப விசுவாசத்தை காத்துக்கொண்டால்தான் பரம இளைப்பாறுதலில்

பிரவேசிக்க முடியும். இதை காத்துகொள்ளாத பட்சத்தில் கைக்கு கிட்டியது வாய்க்கு கிட்டவில்லை என்பார்கள் அதைப்போல ஏமாற்றம் அடைந்தவர்களாக காணப்படுவோம். ஆகையால் உங்களிலுள்ள விசுவாசமும் அன்பும் பெருகும்படியாக ஒவ்வொருநாளும் ஆயத்தப்படுங்கள். குடும்பமாக இதற்காக முயற்சி எடுங்கள். நோவா தேவனுடைய எச்சரிப்பைப் பெற்று ஒரு பேழையை உண்டுபண்ணி தன் குடும்பத்தை இரட்சிக்க திட்டமிட்டான். அதற்காக தேவன் சொல்லியபடி ஒரு கொப்பேர் மரத்தை தெரிந்துகொண்டு இரவு பகலாக அதை தேவன் கொடுத்த அளவின்படி செய்து முடித்தான். பின்பு தேவன் தாம் சொல்லியபடி அப்பொழுது இருந்த உலகத்தை ஜலத்தினால் அழித்து நோவாவையும் அவனுடைய குடும்பத்தாரை இரட்சித்தார். இந்த நோவா குடும்பத்தைப்போல நீங்களும் குடும்பமாக இரட்சிக்கப்பட உங்களை ஒப்புக்கொடுங்கள்.

பரம இளைப்பாறுதலில் பிரவேசிக்க கர்த்தருக்கு பயப்படும் பயம் அவசியமாக இருக்கிறது. ‘‘ஆனபடியினாலே, அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்குகேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப்போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக் கடவோம்’’ (எபி.4:1). உலகத்தில் உள்ள மனுஷர்களுக்கு பயப்படும் பயத்தைப்போல கர்த்தருக்கும் பயப்படக்கூடாது. மனிதர்களுக்கு பயப்படுகிறவர்கள். மீண்டும் மீண்டும் அந்தத் தவறை செய்து கொண்டு மன்னிப்புக்கேட்டுக்கொண்டிருப்பார்கள்.

கர்த்தருக்கு பயப்படும் பயமானது. தேவன் ஒருபோதும் நம்மை மன்னிக்க மாட்டார் என்ற பயஉணர்வு இருக்கவேண்டும். அந்த விதமான பயம் நம்மை பாவத்திற்கு விலக்கி இரட்சிக்கும். தேவன் தம்மைப்பின்பற்றுகிறவர்களுக்கு நிலையான ஆசீர்வாதத்தை வாக்குப்பண்ணியிருக்கிறார். அந்த நிலையான ஆசீர்வாதம் இளைப்பாறுதலின் காலம். அது பூமியில் இல்லை. இந்த ஆசீர்வாதம் முற்பிதாக்களுக்கும் அறிவிக்கப்பட்டது. ‘‘ஏனெனில், சுவிசேஷம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதுபோல நமக்கும் அறிவிக்கப்பட்டது; கேட்டவர்கள் விசுவாசமில்லாமல் கேட்டபடியால், அவர்கள் கேட்ட வசனம் அவர்களுக்குப் பிரயோஜனப்படவில்லை’’ (எபி.4:2).



வசனத்தை கேட்பதற்கு விசுவாசம் மிகவும் அவசியம். அதை விசுவாசத்தோடு கேட்கவேண்டும். சிவந்த சமுத்திரம் இரண்டாக பிளந்தது அதில் இஸ்ரவேலர் கட்டாந்தரையில் நடப்பதுபோன்று நடந்துபோனார்கள் என்று வேதத்தில் வாசிக்கிறோம். இது எப்படி சாத்தியமாகும்? தண்ணீர் வற்றினாலும் சகதியாக இருக்குமே என்று ஒருவர் வாதிடுவாரானால் அவர் அதை விசுவாசிக்கவில்லை. இப்படிப்பட்டவர்கள் விசுவாசத்திற்கு அப்பாற்பட்டவர்கள். தேவன் நமக்கு ஏற்படுத்தியிருக்கிற இளைப்பாறுதலை ஒருவரும் கண்டதில்லை. இருந்தபோதும் நாம் அதை விசுவாசிக்கிறோம். இப்படிப்பட்ட விசுவாசமுள்ளவர்கள் மட்டுமே அதில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை அடைவார்கள். உங்களுடைய விசுவாசம் எப்படிப்பட்டதாயிருக்கிறது? நீங்கள் விசுவாசத்தோடு கர்த்தரை பின்பற்றுகிறீர்களா?

ஒரு முறை எலிசா தீர்க்கதரிசி ‘‘கர்த்தருடைய வார்த்தையை கேளுங்கள் நாளை இந்நேரத்திலே சமாரியாவின் வாசலிலே ஒரு மரக்கால் கோதுமை மா ஒரு சேக்கலுக்கும், இரண்டு மரக்கால் வாற்கோதுமை ஒரு சேக்கலுக்கும் விற்க்கப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். அப்பொழுது ராஜாவுக்கு கைலாகு கொடுக்கிற பிரதானி ஒருவன் தேவனுடைய மனுஷனுக்கு பிரதியுத்தரமாக; இதோ, கர்த்தர் வானத்தின் மதகுகளை உண்டாக்கினாலும் இப்படி நடக்குமா என்றான். அதற்கு அவன்; உன்னுடைய கண்களினால் அதைக் காண்பாய்; ஆனாலும் அதிலே சாப்பிடமாட்டாய் என்றான்’’ (2இரா.7:1,2).

அந்தப்படியாக அவன் விசுவாசிக்காமல் கேட்டபடியினாலே எலிசா சொன்னபடியாக ஒலிமுகவாசலிலே ஜனங்கள் வாங்குவதற்காக அங்குமிங்கும் கடந்துசெல்லும்போது கூட்ட நெரிசலில் சிக்கி ஜனங்கள் அவனை நெருக்கி மிதித்ததினாலே அவன் செத்துப்போனான். அவிசுவாசமுள்ள இதயத்திற்கு கிடைத்த பரிசை பார்த்தீர்களா? அன்பானவர்களே, முற்பிதாக்களிலே அநேகர் அவிசுவாசத்தினாலே அநேக ஆசீர்வாதங்களை அடையாமற்போனார்கள். இவைகள் நமக்கு திருஷ்டாந்தமாக இருக்கிறது. விசுவாசிக்கிறவர்களே பாக்கியவான்கள். ‘‘விசுவாசித்தவர்களாகிய நாமோ அந்த இளைப்பாறுதலில்

பிரவேசிக்கிறோம்; அவருடைய கிரியைகள் உலகத்தோற்றமுதல் முடிந்திருந்தும்; இவர்கள் என்னுடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லையென்று என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன் என்றார்'' (எபி.4:3). நீங்கள் விசுவாசிப்பீர்களென்றால் அந்த இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பீர்கள். இந்த இளைப்பாறுதலை யாரும் பணம் கொடுத்து வாங்கிவிடமுடியாது. அநேகருடைய கணவு உலகத்தையே பணம்கொடுத்து வாங்கிவிடுகிறார்கள். அதைப்போல இதையும் அடைந்துவிடலம் என்ற கணவோடு இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய நிலைமை ஏமாற்றமாகிவிடும்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு வாசகரே, சகோதரனே சகோதரியே, உன்னுடைய விசுவாசத்தை கடைசிவரை காத்துக்கொண்டிரு அப்பொழுது தேவன் வாக்குப்பண்ணி இளைப்பாறுதலில் பிரவேசிப்பாய். இது பேச்சாலே பேசுகிற ஒரு காரியம் அல்ல. சவாலான ஒன்று. பொல்லாத இந்த உலகத்தில் சத்தியத்தில் நிலைத்திருந்து சாட்சியுள்ளவர்களாக வாழ்ந்து ஓட்டத்தை முடிக்கவேண்டும். பந்தையத்திற்கு பேராடுகிற யாவரும் இச்சையடக்கமுள்ளவர்களாக இருந்து போராடுவார்கள். நாமும் இச்சையடக்க முள்ளவர்களாயும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாயும், பிசாசு கொண்டு வரும் சகல வஞ்சகத்திற்கும் விலகி நம்மை காத்துக்கொண்டவர்களாவும் இருந்து, அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் நம்மில் ஏற்படாதபடி பாதுகாத்து, ஆரம்பவிசுவாசத்தில் வளர்ந்து, பூமியிலே இளைப்பாறுதலை தேடாமல் தேவன் கொடுக்கும் பரம இளைப்பாறுதலுக்காக காத்திருப்போம்.

### கேள்வி நேரம்

**தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் எப்போது வரும்?**

''ஆகையால், தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாயிருக்கிறது. ஏனெனில், அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவன், தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்ததுபோல, தானும் தன் கிரியைகளை முடித்து ஓய்ந்திருப்பான்'' (எபி.4:9,10). அரசு வேலையில் இருப்பவர்களுக்கு பாதிபணியில் இருக்கும்போதே யாருக்கும் அரசு ஓய்வு கொடுப்பதில்லை. அந்த பணி



நிறைவடையும்போது ஓய்வு கொடுக்கிறார்கள். நன்றாக வீட்டில் ஓய்வுஎடுக்கும்படியாகவும் நல்ல ஓய்வு ஊதியத்தையும் அவர்களுக்கு கொடுத்து கௌரவிக்கிறார்கள். பரலோக பிதா எல்லோருக்குமே இளைப்பாறுகிற காலத்தை வைத்திருக்கிறார். அவர் எப்படி எல்லாவற்றையும் சிருஷ்டித்து ஓய்ந்திருந்தாரோ அதைப்போல கர்த்தருடைய ராஜ்யத்தில் வேலை பார்க்கிற அனைவருக்கு அவர் இளைப்பாறுதலைக் கொடுக்க அறிந்திருக்கிறார். ஆகையால் இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாயிருக்கிறது. அதுவரை காத்திருந்து வேலைசெய்யுங்கள். இப்போது ஓய்வு எடுக்கும் காலமுமல்ல, இளைப்பாறுகிற காலமுமல்ல. சுவிசேஷத்தை அறிவிக்கிற காலம். அதைச்செய்யுங்கள், உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 34. நாம் தேவனிடம் செல்ல வேண்டுமா? அல்லது அவர் நம்மிடம் வரவேண்டுமா?

## Should We Go To God? or Should He Come To Us?

**நா**ம் ஏன் தேவனை நாடிப்போக வேண்டும் அவர் நம்மிடம் வரக்கூடாதா? என்ற கேள்வி அநேகருக்கு இருக்கிறது. இப்படி நினைக்கிறவர்கள் தேவனை தங்களைக்காட்டிலும் கீழானவராக மதிப்பிடுகின்றனர். ஆகையால் அவர் என்னை வந்து சந்திக்கட்டும் அல்லது அவர் எனக்கு வெளிப்படட்டும் என்று தேவனோடு போர் செய்கிறவர்களாக இருக்கிறார்கள்.

அப்படிப்பட்டவர்களுக்கு கர்த்தருடைய பதில் என்னவாயிருக்கிறது; ''இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்'' என்றார் (வெளி.3:20). கர்த்தர் நமக்குத் தூரமானவரல்ல. உங்களுடைய இருதயக் கதவைத் தட்டிக் கொண்டிருக்கிறார். அவருக்கு உங்களுடைய இருதயத்தில் இடம் கொடுத்தால் அவரும் அவரை அனுப்பின பிதாவும் உங்களோடு வந்து வாசம் பண்ணுவார்கள்.

முற்றிலும் கண்பார்வையற்ற இரண்டு குருடரைப் பற்றி படிக்கிறோம். "இயேசு அவ்வழியே வருகிறார் என்று கேள்விப்பட்டு; ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும் என்று கூப்பிட்டார்கள். அவர்கள் பேசாதிருக்கும்படி ஜனங்கள் அவர்களை அதட்டினார்கள். அவர்களோ; ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும் என்று அதிகமாய்க்கூப்பிட்டார்கள்" (மத்.20:30,31). இந்த இரண்டு குருடரும் அவர் நம்மை சுகமாக்குவாரா இல்லையா என்று பார்ப்போம். அவர் தேவனிடத்திலிருந்து வந்திருந்தால் நம்மை கண்டுகொள்ளுவார். இதிலிருந்து அவர் யார் எப்படிப்பட்டவர் என்பதை அறிந்தகொள்ளலாம் என்று அவர்கள் அவரை சோதிக்கும்படியாக அமைதலாக இல்லை.

அவர் பாவிகளை இரட்சிப்பவர். நோய்வாய்பட்டவர்களை அவர் சுகப்படுத்த வல்லவர். அவர் மூலமாக அநேகர் பார்வையடைகிறார், சப்பாணிகள் நடக்கிறார்கள் மரித்தோர் உயிரோடு எழுந்திருக்கிறார்கள் போன்ற செய்தி யூதேயா, கலிலேயா, சமாரியா போன்ற நாடுகளில் பரவ ஆரம்பித்தது. ஆகையால் இவர்கள் இயேசுவின் அற்புதத்தைக்குறித்து கேள்விப்பட்டிருக்கவேண்டும். ஆகையால் இயேசு வருகிறார் என்று கேள்விப்பட்டவுடனே ஆண்டவரே தாவீதின் குமாரனே எங்களுக்கு இரங்கும் என்று கூப்பிட ஆரம்பித்தார்கள்.

அவர்களுக்கு கண்பார்வை வேண்டும் அது இயேசுவாலே மட்டுமே முடியும் என்பதை அறிந்து அவர்கள் இயேசுவை நோக்கி கூப்பிட ஆரம்பித்தார்கள். ஆனால் ஜனங்களோ அவர்களை அதட்டினார்கள். அதற்கு அவர்கள் பயந்துபோய் இயேசுவை கூப்பிடாமல் இல்லை. இன்னும் அதிக சத்தமாய் கூப்பிட ஆரம்பித்தார்கள். நமக்கு நன்மை வேண்டுமானால் நாம் தான் இயேசுவிடம் செல்ல வேண்டும். ஐயோ! இவர்கள் தடுக்கிறார்களே, அவர்கள் தடுக்கிறார்களே என்று மற்றவர்களைப் பாராமல் இந்த குருடர்களைப்போல உங்களுடைய சத்தத்தை உயர்த்துங்கள். அப்பொழுது குணமாக்கப்படுவீர்கள்.

சங்கீதக்காரன் சொல்லுகிறான்; "நான் கர்த்தரை நோக்கி; நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன்" என்கிறான் (சங்.91:2). உங்களுடைய நம்பிக்கையும், அடைக்கலமும் கோட்டையுமாக எவர் இருக்கிறார்?



அநேகர், மனிதர்களை தங்களுடைய தெய்வமாகக்கூட வைத்திருக்கிறார்கள். அவரால்தான் நாங்கள் வாழ்கிறோம். நாங்கள் இருப்பதே அவருக்காகத்தான் என்று மனிதனை மேன்மையாக வைப்பார்கள். மனிதன் மண்ணிலிருந்து எடுக்கப்பட்டான் அவன் மண்ணுக்கே திரும்புவான். கர்த்தர் வானத்திலிருந்து வந்தவர் வானத்திற்கே மறுபடியும் ஏறிப்போனார். அவர் மீண்டும் வருவார். ஆனால் மண்ணுக்குள் போகிறவன் திரும்ப வரான். உங்கள் தேவனாகிய கர்த்தரை சங்கீதக்காரனைப்போல அடைக்கலமும் கோட்டையுமாக கொள்ளுங்கள். அவர் ஆபத்துக்காலத்தில் உங்களுக்கு உதவிடுவார். யார் கைவிட்டாலும் கர்த்தர் ஒருபோதும் கைவிடார். அவரை நம்புகிறவர்கள் வெட்கப்பட்டுப்போதில்லை என வேதம் போதிக்கிறது.

தாவீது தன் இளம்பிராயத்தில் கர்த்தரை தன் தஞ்சமாக கொண்டார். ஆடு மேய்ப்பனாக இருந்த அவனை கர்த்தர் சீயோனிலே ராஜாவாக்கினார். ஆடுகளின் பின்னே சென்ற அவனை அரசனாக்கினார். தாவீதின் வெற்றியின் இரகசியம். அவன் தன் தேவனை முன்வைத்தான். தன் நம்பிக்கையை கர்த்தர் மீது வைத்தான். எப்பொழுதும் தேவனை நோக்கி துதிக்கிறவனாயிருந்தான். தன்னை நோக்கி ஜனங்கள் காத்திருப்பார்களேயானால் எவருக்கும் பெருமை வந்துவிடும். நம்மை நாடி ஜனங்கள் வருகிறார்கள் என்று மற்றவர்களை மதிக்கமாட்டார்கள். ஆனால் தாவீதோ அப்படியல்ல தம்மை ஜனங்கள் மதித்தாலும் தன் தேவனை அவன் மதிக்கிறவனாக அவருடைய சமுகத்தை நித்தம் நாடுகிறவனாக இருந்தான்.

ஆகையால் ஆடுகளை மேய்த்த அவன் பாடும்போது; கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார் நான் தாழ்ச்சியடையேன் அவர் என்னை புல்லுள்ள இடங்களில் மேய்த்து அமர்ந்த தண்ணீர்களண்டையில் என்னைக் கொண்டுபோய்விடுகிறார் என்று பாடுகிறான். அன்பானவர்களே, கர்த்தரை எந்நாளும் தேடினான் தாவீது. அவனை ஜனங்கள் நாடினார்கள். ஆனால் தாவீதோ தேவனை நாடினான். இன்று நீங்கள் எப்போர்பட்ட ஒரு மனிதனாகவும் இருக்கலாம். அதற்காக நீங்கள் தேவனைக் காட்டிலும் பெரியவராக இருக்க முடியாது. தேவன் உன்னதமானவர் சர்வத்தையும் சிருஷ்டித்தவர், உலகத்தையே

இரட்சிப்பவர், உலகத்தில் உள்ள சகலத்தையும் வழிநடத்துகிறவர். அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும். சகல அதிகாரமும் படைத்தவர். அவர் ஒருவருக்கே முழுங்கால் யாவும் முடங்கவேண்டும். அவரை தூஷிக்கிறவர்களும், அவருக்கு விரோதமான செயல்படுகிறவர்களும் பூமியிலிருந்து சீக்கிரம் அறுப்புண்டுபோவார்கள். அவரை துதிக்கிறவர்களையும், அவரை போற்றுகிறவர்களையும் கர்த்தர் நித்தமும் ஆசீர்வதித்து வழிநடத்துகிறார். அவருடைய மகத்துவங்களை அவர்கள் அறிகிறார்கள். நீங்களும் கர்த்தருடைய நாமத்தை நித்தமும் தேடுங்கள்.

நாம் புதிய ஏற்பாட்டில் அநேக ஸ்திரீகளைக் குறித்து படிக்கிறோம். அதில் குறிப்பாக "ஆசேருடைய கோத்திரத்தாளும், பானுவேலின் குமாரத்தியிமாகிய அன்னாள் என்னும் ஒரு தீர்க்கதரிசி இருந்தாள்; அவள் கன்னிப்பிராயத்தில் விவாகமானதுமுதல் ஏழுவருஷம் புருஷனுடனே வாழ்ந்தவளும், அதிக வயதுசென்றவளுமாயிருந்தாள். ஏறக்குறைய எண்பத்துநாலு வயதுள்ள அந்த விதவை தேவாலயத்தை விட்டு நீங்காமல், இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம்பண்ணி, ஆராதனை செய்து கொண்டிருந்தால்" என காண்கிறோம் (லூக்.2:36,37). இவள் தன் தேவனை ஒவ்வொரு நாளும் நாடினாள். இவள் இருந்த சூழ்நிலையில் நீங்களாக இருந்தால் இவளைப்போல இரவு பகலாக தேவனை ஆராதனை செய்கிறவர்களாக இருந்திருப்பீர்களா? என் கணவனை ஏழு வருடத்திலே எடுத்துக்கொண்ட தேவன் உண்மையான தேவன் அல்ல என்று ஒருவேளை நீங்கள் அவரை தூஷித்திருப்பீர்கள் அல்லது ஏன் என் கணவனை இவ்வளவு சீக்கிரமாய் கர்த்தர் எடுத்தார் என கேள்வி கேட்டிருப்பீர்கள்.

இன்றைக்கு அநேகர் இவ்விதமாக கேட்டுக்கொண்டு தேவனுடைய சித்தங்களை புரியாமல் தெரியாமற்போய்க்கொண்டிருக்கிறார்கள். அன்னாளோ, தேவனை நன்கு அறிந்தவள். எண்பத்திநான்கு வயதிலும் தளர்ச்சியடையாமல், தேவாலயத்தை விட்டு நீங்காமல் உபவாசித்துக் கொண்டிருந்தால். வயதாகிவிட்டாலே அங்கும் இங்கும் போகச் சொல்லும். சில வயதானவர்கள் அங்குமிங்கும் சென்று நிம்மதியற்றவர்களாக வாங்கிக்கட்டிக்கொண்டு வருத்தத்தோடே தங்களுடைய காலத்தை கழிப்பார்கள். அன்னாளும் உறவினர்கள்



இல்லாமல் இல்லை. அவள் ஆசேருடைய கோத்திரத்தை சேர்ந்தவள், பானுவேலின் குாரத்தி அவளோடு பிறந்தவர்கள் இருந்திருக்கலாம். இருந்தபோதும் அவள் யாரிடமும் செல்லவில்லை. தன்னை உண்டாக்கின தேவனை இரவு பகலாக ஆராதனை செய்து துதிக்கும்படியாக விருப்பமுற்று தொழுதுகொண்டாள். வயது அவளுக்கு தடையாயில்லை. அறுபது வயதிற்கு மேல் போய்விட்டால் என்னால் அங்குமிங்கும் வரமுடியாது. சபைக்கெல்லாம் வரமுடியாது. என்னால் நடக்கமுடியாது போன்ற சாக்குபோக்குகளை சொல்ல ஆரம்பித்திடுவார்கள். கிறிஸ்துவில் விசுவாசமாயிருக்கிற நாம் சரீர பெலத்தினால் அல்ல ஆவியின் பெலத்தினாலே நடக்கிறோம். சரீரம் அற்பபிரயோஜனமுள்ளது. தேவபக்தியோ இந்த ஜீவனுக்கும் இனிவரவிருக்கும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாக இருக்கிறது.

ஆகையால் அன்பானவர்களே, இந்த அன்னாளைப்போல தேவனுக்கு முதலிடம் கொடுங்கள். உலகம் உலகம் என்று சதா உலகத்தை பற்றிக்கொள்ளாதிருங்கள். உலகமும் அதின் ஆசை இச்சையும் ஒழிந்துபோம். அவருடைய வசனங்களோ ஒருக்காலும் ஒழிந்துபோகாது என காண்கிறோம்.

அன்னாளைப்போல நூற்றுக்கு அதிபதியும் கர்த்தரை நாடினான். அவனுடைய வேலைக்காரனுக்காக கர்த்தரை வேண்டிக்கொண்டான். இயேசு யூதருடைய மூப்பருடனே அவன் வீட்டுக்கு சமீபமானபோது "நூற்றுக்கு அதிபதி தன் சிநேகிதரை நோக்கி; நீங்கள் அவரிடத்தில்போய், ஆண்டவரே! நீர் வருத்தப்படவேண்டாம்; நீர் என் வீட்டு வாசலுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல; நான் உம்மிடத்தில் வரவும் என்னைப் பாத்திரனாக எண்ணவில்லை; ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்" என்றான் (லூக்.7:6,7). இந்த நூற்றுக்கு அதிபதியின் விசுவாசத்தைப் கர்த்தர் பார்த்து; இஸ்ரவேலுக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்றார்.

ஆம், நூற்றுக்கு அதிபதி அந்த அளவு கர்த்தரை மதித்து அவர் என் வீட்டுக்கு வர நான் பாத்திரன் அல்ல அதைப்போல் நான் அவரிடத்தில் செல்லவும் பாத்திரன் அல்ல என்றான். அதாவது அவரை சந்திக்கவோ அல்லது அவர் என் இல்லத்துக்கு வரவோ நான் தகுதியற்றவன் என்று

தன்னை முழுவதுமாக தாழ்த்தி அவரை உயர்த்தியிருக்கிறான். ஆண்டவர் இயேசுவே இவனுடைய விசுவாசத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு நண்பரே, சகோதரனே, சகோதரியே நீ தேவனை நாடிப்போக வேண்டுமா? அல்லது அவர் உன்னை நாடி வரவேண்டுமா? இன்றே தீர்மானம் செய்யுங்கள். உன்னதமான கர்த்தர் மனிதனை சந்திக்க வானத்திலிருந்து இரங்கி பூமிக்கு வந்தார். அவர் இன்னும் எங்கே வரவேண்டும்? உன் இல்லம் தேடிவரவேண்டுமா? கர்த்தரை நாடின இரண்டு குருடர்கள் பார்வையடைந்தார்கள். எண்பத்தி நான்கு வயதிலும் சோர்ந்துபோகாமல் வேண்டிக்கொண்ட அன்னாளின் ஜெபம் கேட்டு கர்த்தர் அவளை சமாதானத்தோடு தேவாலயத்தில் வைத்திருந்தார். நூற்றுக்கு அதிபதி தன் உறவினர்களுக்காகவும், தன் குடும்பத்தார் களுக்காகவும் வேண்டிக்கொள்ளமல் உலக எஜமான்களுக் கொல்லாம் உதாரணமாக தன் வேலைக்காரனுக்காக வேண்டிக் கொண்டான். அவன் வேண்டிக்கொண்ட அந்த நிமிடமே அவனுடைய வேலைக்காரன் சுகமானான். புத்தியுள்ள நூற்றுக்கு அதிபதி என்றே சொல்லவேண்டும். வேலைக்காரன் சுகமாயிருந்தால்தான் வீட்டிலுள்ள வேலைகள் நடைபெறும். அவனுடைய விருப்பத்தை கர்த்தர் உடனே நிறைவேற்றினார்.

### கேள்வி நேரம்

**நீங்கள் கர்த்தரிடம் செல்லும்போது கிடைக்கும் ஆசீர்வாதங்கள் என்ன?**

சங்கீதக்காரன் சொல்லுகிறான்; "எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உனக்குத் தாபரமாகக் கொண்டாய். ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது. உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்" (சங்.91:9-11). எப்பேர்பட்ட ஆசீர்வாதம் பார்த்தீர்களா? உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி உனக்காகத் தம்முடைய தூதர்களுக்கு கட்டளையிடுவார். ஒரு அமைச்சர் வருகிறார் என்றார் எல்ல இடங்களுக்கும் வயர்லெஸ் மூலம் தகவல் கொடுக்கப்பட்டு பாதுகாப்பு



பலப்படுத்தப்படுகிறது. அவர் செல்லும் இடமெங்கும் வலது இடது புறங்களில் காவலர்கள் நிறுத்தப்படுகிறார்கள். எவ்வளவு தூரம் அரசு அமைச்சருக்கு செலவு செய்கிறது. அப்படியிருந்தும் அவருடைய உயிருக்கு உத்தரவாதம் கிடையாது. ஆனால் நீங்கள் கர்த்தரை அடைக்கலமாக கொள்ளும்போது; அநேக தேவதூதர்களை தேவன் உங்களுக்கு முன்னே அனுப்புகிறார். இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 35. அழிவில்லா வித்து
## Incorruptible Seed

**நா**ம் பார்க்கிற இந்த உலகத்தில் உள்ள எல்லாம் ஒரு நாள் அழிந்துபோய்விடும். ஆனால் தேவனுடைய வசனம் ஒருக்காலும் அழிந்துபோகாது. "வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை" (மத்.24:35). மனிதர்கள் ஒழிந்துபோகும் பூமியில் நிலையாக இருக்கப்போவதைப்போல திடமான அஸ்திபாரத்தை போடுகிறார்கள். ஆண்டி முதல் அரசன் வரை வாழ்ந்தவர்களை இப்பூமி பார்த்திருக்கிறது.

எல்லோரும் மண்ணிலிருந்து வந்தார்கள் மண்ணுக்கே திரும்புகிறார்கள் தாங்கள் பிராயசத்தினால் பட்ட பலன் ஒன்றையும் அவர்கள் எடுத்துக்கொண்டுபோவதில்லை. அன்று முதல் இன்று வரையும் இனிமேலும் பிரசங்கித்துக்கொண்டே இருப்பது கர்த்தருடைய வசனமாக இருக்கிறது. இவ்வசனத்திற்கு உங்களுடைய செவியை சாய்த்து அதற்கு கீழ்ப்படியுங்கள். "கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்; உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்படுகிற வசனம் இதுவே" (1பேது.1:25). இவ்வசனம் இலவசமாக எல்லா இடங்களிலும் கொடுக்கப்படுகிறது. இதை பெற்றுக்கொள்ளாமல் மனிதன் ஒவ்வொரு நாளும் எதை எதையோ வாங்கும்படியாக முயற்சித்து வருகிறான்.

ஒரு அரசு மக்கள்மீது நலன் கொண்டு தடுப்பூசிகளை இலவசமாக வருடத்தில் இரண்டு முறை போடுகிறது அனைத்து குழந்தைகளும் இந்த தடுப்பூசி போட்டு போலியோ போன்ற வியாதிகளிலிருந்து

காக்கப்படுகிறார்கள். இது இலவசமாக கிடைக்கிறது என்று யாரும் மெத்தனமாக இருப்பதில்லை என்ன வேலையிருந்தாலும் அதை தள்ளிவைத்துவிட்டு உடனே அந்த நாளில் எங்கும் செல்லாமல் குழந்தைகளுக்கு வேண்டிய அந்த தடுப்பூசிகளை போட்டுக் கொள்ளுகிறார்கள். அதினால் குழந்தைகள் போலியோவிலிருந்து காக்கப்படுகிறார்கள்.

நம்முடைய பிதாவாகிய தேவன் ஒரு ஆத்துமாவும் கெட்டுப்போய்விடக்கூடாது என்பதற்காக அழிவில்லாத வித்தாகிய வசனத்தை இலவசமாக உலகமெங்கும் அவருடைய பரிசுத்தவான்களைக் கொண்டு விதைத்து வருகிறார். இது இலவசமாகத் தானே வருகிறது என்று அநேகர் உதாசினம் செய்கின்றனர். போலியோ மருந்தை உதாசினம் செய்தால் உங்களுடைய குழந்தைக்குத்தான் ஆபத்து. அதைப்போல கர்த்தருடைய வசனத்தை நீங்கள் புறம்பாக்கும்போது பாவத்தினால் மரிப்பீர்கள். பாவம் நித்தியமான அழிவை உங்களுடைய ஆத்துமாவில் ஏற்படுத்தும். ஆகையால் கர்த்தருடைய அழியாத வசனத்திற்கு செவிகொடுத்து உங்களுடைய ஆத்துமா காக்கப்பட முயற்சியுங்கள்.

பூமியில் இரண்டு விதமான பிறப்புகளை நாம் பார்க்கிறோம். ஒன்று மாம்சத்தினால் பிறப்பது மற்றொன்று ஆவியினால் பிறப்பது. “மாமிசத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்” (யோவா.3:6). இந்த பிறப்பைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம். நாம் ஒவ்வொருவரும் மாமிசத்தினாலே பிறந்து வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இப்படி வாழ்ந்துகொண்டிருக்கிற மனிதன் ஆவிக்குரிய பிறப்பை பெறவேண்டும். அதற்கு என்ன வழி; நிக்கொதேமு என்ற ஒரு பரிசேயன் இயேசுவிடம் வந்து ஒருவன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோ என்றான். “இயேசு பிரதியுத்தரமாக; ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்” (யோவா.3:5). அநேகர் பல விதமான பிறப்பு உண்டு அவனவன் செய்த காரியத்தின்படியாக ஏழு அவதாரம் அதற்கு மேலும் எடுத்து



மிருகங்களைப்போல வாழ்வார்கள் என்று நம்புகின்றனர். நிக்கொதேமு இயேசுவிடம் கேட்ட கேள்விக்கு அவர் ஒரு உண்மையான பதிலை சொன்னார். ஜலத்தினாலும் ஆவியினால் பிறக்கவேண்டுமென்று. அவனோ தன் தாயின் கருவில் மீண்டும் பிரவேசித்து பிறக்கக்கூடுமோ என்றான். இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடம் என்ன? மறுபிறப்பு என்பது மீண்டும் தாயின் வயிற்றிலிருந்தோ அல்லது மிருகங்களாகவோ அல்லது வேறுவகையிலோ அல்ல ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறப்பது. அப்படியென்றால் என்னவென்று நீங்கள் கேட்கக்கூடும். அழிவில்லாத வசனத்தை ஏற்று தண்ணீரில் முழுகி பாவமன்னிப்புக் கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போது ஆவிக்குரிய பிறப்பை அடைகிறோம்.

இந்த ஆவிக்குரிய பிறப்பைப் பெற்று இருக்கிறீர்களா? இல்லையென்றால் இன்றே பெற்றுக்கொள்ள முயற்சியுங்கள். “தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான்” (கலா.6:8). நிங்கள் எதற்கென்று விதைவிதைக்கிறீர்கள்? உலகத்திலே நுற்றுக்கு தொண்ணுருபேர் மாம்சத்திற்கென்று விதைவிதைக்கிறார்கள். எல்லாம் அந்த ஒரு சான் வயிற்றுக்காகத்தான் என்பார்கள். இப்படி விதைப்பீர்களானால் அழிவை அறுப்பீர்கள் என வேதம் சொல்லுகிறது. மாம்சம் மண்ணுக்குரியது ஆவி தேவனுக்கு சொந்தமானது. மாம்சத்தைப் பார்க்கிலும் ஆவி மேலானது.

நீங்கள் அழிந்துபோகக்கூடிய மாம்சத்திற்காக வாழப்போகிறீர்களா? அல்லது நித்தியநித்தியமாக தேவனோடு வாழப்போகும் ஆவிக்காக வாழப்போகிறீர்களா? என்பதை இங்கே இப்பொழுதே முடிவு செய்துகொள்ளுங்கள். அநேகர் முடிவு எடுப்பதில் மற்றவர்களை நாடுகிறார்கள். நான் கேட்கிறேன். உங்களுக்கு வயிறு பசித்தால் மற்றவர்களை கேட்டுத்தான் சாப்பிடுவீர்களா? உங்களுடைய பசியைபோக்க யாரிடத்தில் கேட்க வேண்டும். மற்றவர்களுக்காக நீங்கள் உணவு அருந்த முடியாது. உங்களுக்காக மற்றவர்களும் உணவு அருந்தமுடியாது. இது அவரவருடைய தேவையாயிருக்கிறது. ஆகையால் உங்களுடைய ஆத்துமா காக்கப்பட தாமதமில்லாமல் முடிவு எடுங்கள். உங்களுடைய முடிவு ஆவிக்குரியதாக இருக்கட்டும்.

மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுதல் என்பது அநேகருக்கு புரியாத புதிராகவே இருக்கிறது. மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுதல் என்பது மறுபடியும் பிறத்தல். ஞானஸ்நானத்திலே நடைபெறுகிறது. “அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே” என்கிறார் பேதுரு (1பேது.1:23). மாம்சத்தினால் பிறக்கும்போது அழிவுள்ள வித்தினாலே பிறந்தோம்.

ஆவிக்குரிய வித்து அது அழிவில்லாதது ஆகையால் அதினால் பிறக்கிறவர்களும் அழிவில்லாதவர்கள். எனவே அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே என்று பேதுரு எழுதுகிறார். அழிவில்லாத வித்தினாலே ஜெநிப்பிக்கப்பட்டவன். பாவத்திலிருந்தும், மரணத்திலிருந்தும் விடுவிக்கப்பட்டவனாயிருக்கிறான். அவனுடைய நாமத்தை தேவன் பரலோகத்திலே ஜீவ புத்தகத்திலே எழுதிவைக்கிறார். ஒரு மனிதன் பூமியிலே ஜெநிப்பிக்கப்பட்டவுடன் அந்த அரசு மக்கள் தொகை கணக்கில் அவனுடைய பெயரை பதிவு செய்கிறது. ஆவிக்குரிய பிறப்பை பரலோகம் பதிவு செய்கிறது. இப்பூமியில் பதிவு செய்யப்பட்டவை ஒரு நாளில் அழிந்துபோம். ஆனால் பரலோகம் என்றுமே அழியாதது. அதில் பதிவு செய்யப்பட்டவர்களும் அழியாதவர்கள். உங்களுடைய நாமங்கள் பரலோகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதா? இதை போய் யாரும் பார்க்கமுடியாது.

எவரிடமும் கேட்டு தெரிந்துகொள்ளமுடியாது. இது உங்களுடைய கரங்களில் இருக்கிறது. நீங்கள் ஆவிக்குரிய அழிவில்லாத வசனங்களுக்கு செவி கொடுத்து கர்த்தராகிய இயேசுவை விசுவாசித்து மனந்திரும்பி, அறிக்கையிட்டு, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போது கர்த்தர் தம்முடைய சபையில் உங்களைச் சேர்ப்பார். பின்பு உங்களுடைய நாமம் பரலோக ஜீவபுத்தகத்தில் எழுதப்படும். கடைசிநாட்களில் புத்தகங்கள் திறக்கப்பட்டு வாசிக்கப்படும் அவனவன் செய்த நன்மைகளின்படியே பங்கைப்பெறுவான்.

இந்த சத்தியத்தை கேட்டு கீழ்ப்படிந்தவர்களைப்பற்றி நாம் புதிய ஏற்பாட்டில் அநேக இடங்களில் பார்க்கிறோம். அப்.2-ம் அதிகாரத்தில் மூவாயிரம்பேர் இந்த சத்தியத்தை கேட்டு மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டனர். அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும்



அந்நியோந்நியத்திலும் நிலைத்திருந்தனர். ஒவ்வொருவரும் அந்தப்படியாக சபையில் நிலைத்திருந்து ஆவிக்குரிய கனிகளை கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஞானஸ்நானம் பெற்றுவிட்டவுடன் ஏதோ பரலோகத்திற்கு போவதற்கு டோக்கன் கிடைத்துவிட்டதைப்போல சந்தோஷப்பட்டுக்கொண்டு ஊரெல்லாம் சொல்லிக்கொண்டு திரியக்கூடாது. ஆதி கிறிஸ்தவர்கள் எப்படி சபையில் நிலைத்திருந்து சாட்சியுள்ள வாழ்க்கை வாழ்ந்தார்களோ அதைப்போல ஒவ்வொருவரும் வாழவேண்டியவர்களாக இருக்கிறார்கள். முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான் என அழிவில்லாத வசனம் மிகத்தெளிவாக சொல்லுகிறது.

முடிவுபரியந்தம் என்றால் இயேசுவின் இரண்டாம் வருகைவரை அல்லது அவரவருடைய மரணபரியந்தம் என்று அர்த்தம். இவ்வளவு விஷம் இருக்கிறதா என்று மலைத்துப்போக வேண்டாம். அதற்குரிய பெலத்தை தேவன் உங்களுக்கு அவருடைய அழிவில்லாத வசனத்தின் மூலம் தந்தருளுவார். நீங்கள் ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருங்கள்.

வசனத்திற்கு முக்கியத்துவம் கொடுங்கள். ஏனெனில் அழிவில்லாத வித்தாகிய கர்த்தருடைய வசனமே உங்களை காக்க வல்லதாயிருக்கிறது. அவைகளால் உங்களை வேலியடைப்பதைப்போல வேலியடைத்துப் பாதுகாத்துக்கொள்ளுங்கள். வசனமே வெளிச்சமாகவும், போதக சிட்சையாகவும் இருக்கிறது. உங்களுடைய வீட்டை அழியாத வசனத்தினாலே நிரப்புங்கள். பார்க்கிறவர்களுக்கும் உங்களுக்கும் அவைகள் ஜீவனைக் கொடுக்கும். அநேக வீடுகளில் விலையேறப்பெற்ற பொருட்களை வாங்கி குவித்துவைக்கிறார்கள். அவைகளை சுத்தம் செய்யவே அதிகநேரத்தை செலவிடுகிறார்கள். அவைகள் எல்லாம் ஒரு நாள் உங்களைவிட்டுப்போகும் அல்லது அவைகளை நீங்கள் விட்டுபோவீர்கள்.

கர்த்தருடைய வசனமோ உங்களை காலமெல்லாம் காத்து நித்திய வீட்டிற்கு அழைத்துச்செல்லும். ஆகையால் கர்த்தருடைய வசனங்கள் உங்கள் வீடுகளில் அலங்கரிக்கப்படவேண்டியவைகள். அவைகளை உள்ளும் புறம்புமாக எழுதுங்கள். அநேகருக்கு அவைகள் போதித்துக் கொண்டே இருக்கும்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு வாசகரே, அழிவில்லாத வித்து தேவனுடைய வசனம் என்று இன்றைய நாள் செய்தியில் மூலமாக அறிந்திருப்பீர்கள் என்று நம்புகிறோம். இந்த அழிவில்லாத வித்தை நீ பெற்றுக்கொண்டுள்ளாயா? அப்படி இல்லையென்றால் இன்றே ஒரு பரிசுத்த வேதாகமத்தை வாங்கி படி அது உன்னுடைய வாழ்வில் அநேக நன்மைகளை கொண்டுவரும்.

உன்னை இரட்சிப்புக்கு நேரே வழிநடத்தும். உன் வாழ்வை வழமுள்ளதாக மாற்றும். பாவத்திலிருந்து விடுபடுவதற்கான ஆலோசனையை உனக்கு கொடுத்து உன் ஆத்துமா காக்கப்பட உதவும். அவ்வசனங்களுக்கு செவி கொடுத்து மனந்திரும்பி மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட உங்களை ஒப்புக்கொடுங்கள்.

**கேள்வி நேரம்**

**ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருப்பார்கள்?**

தங்களைக் கறைப்படுத்தாது காத்துக்கொள்ளுவார்கள். அதாவது பாவமான காரியங்களில் ஈடுபடாது இருப்பார்கள். "ஸ்திரீகளால் தங்களைக் கறைப்படுத்தாதவர்கள் இவர்களே; கற்புள்ளவர்கள் இவர்களே; ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே; இவர்கள் மனுஷரிலிருந்து தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலனாக மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள்" (வெளி.14:4). அதற்காக திருமணமானவர்கள் தன் மனைவிக்கு விலகியிருக்கவேண்டும் என்பதல்ல; ஏனெனில் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். தேவன் விவாகத்தை ஆசீர்வதித்திருக்கிறார். அது பரிசுத்த மெய்விவாகம்.

ஆவிக்குரிய பிறப்பைப்பெற்றவன் ஆவிக்குரிய காரியங்களுக்கு முதலிடம் கொடுப்பான். அவன் தேவனுடைய சித்தம் செய்யும்படியாக கிறிஸ்துவைப்பின்பற்றுகிறவனாயிருப்பான். அதைப்போல சகோதர, சகோதரிகள் புதிதாய் பிறந்த குழந்தைகளைப்போல இருந்து பிதாவை மகிமைப்படுத்தவேண்டும். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



## 36. எனக்கு அதிகாரமுண்டு
## Permissible for Me

இன்றைக்கு தங்களுக்கு கிடைத்திருக்கிற அதிகாரத்தை அநேகர் தவறாக பயன்படுத்திவருகிறார்கள். பரிசுத்த வேதாகமத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் தனக்கு கிடைத்த அதிகாரத்தைக்குறித்து சொல்லும்போது; "எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் நான் ஒன்றிற்கும் அடிமைப்படமாட்டேன்" என்கிறார் (1கொரி.6:12). பவுல் அநுபவித்திருந்தால் அவரை யாரும் தடுக்க முடியாது. ஏனென்றால் ஆசிய முழுமைக்கும் சுவிசேஷம் அறிவித்தவர். அவருக்கு அநேக வெகுமதிகள் கிடைத்தன. ஆனால் அவர் உலகப்பிரகாரமான ஒருமனிதனைப்போல அநுபவிக்கவில்லை. ஏனென்றால் அது எனக்கு தகுதியாயிராது என்கிறார்.

இன்றைக்கு உணவு, உடை, இருப்பிடம், ஐக்கியம், உறவுமுறையில் எப்படி நடந்துகொள்ளுகிறார்கள். உணவு கட்டுப்பாடு கொள்ளுவதில்லை. எனக்கு எல்லாம் கிடைத்திருக்கிறது. நான் ஏன் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கவேண்டும் என்று சொல்லி வயிறு நிறைய நிறைய சாப்பிட்டு தங்களுடைய தொண்டைக்கு கத்திவைக்காதிருக்கிற அநேகரை நாம் பார்க்கிறோம். தன்னை யாரும் தடுக்க முடியாது என்று சொல்லி பெருவயிற்று சோம்பேறிகளாக மாறிவிடுகிறார்கள். அதைப்போல உடை நமக்கு மிகவும் அவசியம். ஆதியிலே ஆதாமும் ஏவாளும் நிர்வாணிகளாக இருந்தபடியால் அவர்களுக்கு கர்த்தர் தோல் உடைகளை கொடுத்தார். உடை நம்முடைய நிர்வாணத்தை மறைப்பதாக இருக்கவேண்டும்.

இன்றைய நாகரீக உடை தங்களுடைய சரீரத்தை மறைப்பதாக இல்லை. அது ஒரு கிறிஸ்தவனுக்கு தகுதியாயிராது. உலக மனிதர்கள் அந்தவிதமான உடைகளை தரிப்பார்கள். ஆனால் ஒரு கிறிஸ்தவ சகோதரனோ, சகோதரியோ இப்படித்தானிருக்கவேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். அதற்கு ஏற்றார்போல உடைகளை அணிய வேண்டும். அதைப்போல இருப்பிடம். தகுதிக்கு ஏற்றார்போல இருப்பிடத்தை அமைத்துக்கொள்ளவேண்டும். அநேகர் தகுதிக்கு மிஞ்சி மற்றவர்களைப் பார்த்து ஏமாற்றப்படுகிறார்கள். இதற்கும் உலக

மக்களைப் பார்த்து அநேக கிறிஸ்தவர்கள் கடன் வாங்கி வீடுகளைக்கட்டி அதை திரும்பசெலுத்தமுடியாமல் வீடு ஏலத்திற்கு வந்துவிடுகிறது. தேவன் எந்த ஒரு மகனையும், மகளையும் கடனாளியாக உண்டாகவில்லை என்பதை அறிந்துகொள்ளுங்கள். அவனவன் தன் தன் சுய இச்சையினால் சிக்குண்டு சோதிக்கப்படுகிறான். எல்லாவற்றையும் அநுபவிக்க நமக்கு அதிகாரம் இருந்தாலும் அது நமக்கு தகுதியாயிருக்குமா? என்ற ஒரு கேள்வியை நம்மில் எழுப்பவேண்டும். அதைப்போல ஐக்கியம் யாரோடு? ஐக்கியம் தகுதிக்கு மிஞ்சியவர்களோடு ஐக்கியம் கொள்ளாதிருக்க வேண்டும்.

ஒரு கிறிஸ்தவன் ஒரு கிறிஸ்தவனோடு ஐக்கியம் கொள்ள வேண்டும். பழகுவது பேசுவது இங்கே குற்றமாகாது. ஐக்கியம் என்பது திருமண காரியங்களில் அவிசுவாசிகளுடன் பிணைபடாதிருங்கள் என வேதம் எச்சரிக்கிறது. உலகப்பிரகாரமாக வசதி வாய்ப்புகளை பார்த்து ஐக்கியம் கொள்ள விரும்புகின்றனர். இது உங்களுடைய வாழ்க்கையில் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் கொண்டுவராது. ஆகையால் உறவுமுறை தேவனுடைய பிள்ளைகளோடு வைப்பது நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு உதவியாயிருக்கும்.

‘‘நீங்கள் கர்த்தருடைய பாத்திரத்திலும் பேய்களுடைய பாத்திரத்திலும் பானம்பண்ணக்கூடாதே; நீங்கள் கர்த்தருடைய போஜன பந்திக்கும் பேய்களுடைய போஜனபந்திக்கும் பங்குள்ளவர் களாயிருக்கக்கூடாதே’’ (1கொ.10:21). பேய்களோடு யாரும் ஐக்கியமாக இருக்கவிரும்பமாட்டார்கள். ஆனால் உறவுமுறை மாறி கொள்ளும்போது நாம் பேய்களோடே ஐக்கியமுள்ளவர்களாக மாற்றப்படுகிறோம்.

ஒருமுறை நான் எங்களுடைய கெத்சமனே தோட்டத்திற்கு சென்றிருந்தபோது அங்குள்ள காவல் நாய் ஒன்று தனக்கு உணவு போடும் தட்டை மிகவும் சுத்தமாக சாப்பிட்டு பார்ப்பதற்கு பள பளவென்று வைத்திருந்தது. அது என்னுடைய பார்வைக்கு ஒரு வெள்ளித்தட்டைப்போல அவ்வளவு சுத்தமாயிருந்தது. அதில் நாம் சாப்பாட்டை போட்டு சாப்பிட்டு விடலாம் அந்த அளவு சுத்தமாக இருந்தது. அதற்காக நான் அந்த தட்டில் சாப்பாடு போட்டு சாப்பிடுவேனா? ஒருபோதும் சாப்பிட மாட்டேன். ஏன்? அது நாய்க்காக வைக்கப்பட்டுள்ள



தட்டு. ஒருவேளை நான் அதில் போட்டு சாப்பிட்டால் எனக்கு வியாதிகள் ஏற்பட்டு மேசமான நிலைக்கு தள்ளப்படுவேன். மேலும் நான் நாய் நன்றியுள்ளது என கருதினாலும் அது சாப்பிடும் தட்டை நான் பயன்படுத்த மாட்டேன். அதைபோல தேவனை அறியாத மக்கள் அநேகர் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு தேவனுடைய அன்பைப் பற்றியும், அவருடைய வல்லமையுள்ள வசனங்களைப்பற்றியும் ஒன்றும் தெரியாது. அப்படிப்பட்டவர்களோடு நான் ஐக்கியப்பட்டால் என்னுடைய ஐக்கியம் பாவமாக மாறும்.

தேவனுடைய கட்டளையை மீறி நீங்கள் ஐக்கியம் கொள்ளுவீர் களானால் அது உங்களை மரணத்திற்கு நேரே வழிநடத்தும். ‘‘தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனால் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்’’ (ஆதி.2:16,17). இதை ஆதாமும் ஏவாளும் கேட்டார்கள் ஆனால் அதன்படியாக பயந்து நடந்துகொள்ளவில்லை. சாத்தான் அவர்களை வஞ்சித்தபடியால் தேவனுடைய கட்டளையை மீறி பறித்து புசித்தார்கள். ஆவியில் செத்தார்கள். பாவம் அவர்களை ஆண்டுகொண்டது.

பவுல் சொல்லும்போது நான் ஒன்றிற்கும் அடிமைப்படமாட்டேன் என்கிறார். அநேகரை பாவம் அடிமைப்படுத்திவிடுகிறது. கிறிஸ்து நம்மில் இருப்பாரானால் நாம் ஒன்றிற்கும் அடிமைப்படவேண்டியதில்லை. கிறிஸ்து நம்மில் இருக்க கர்த்தருடைய வசனத்திற்கு செவிகொடுங்கள். ‘‘இப்பொழுதோ நீங்கள் தேவனை அறிந்திருக்க, அல்லது தேவனாலே அறியப்பட்டிருக்க, பெலனற்றதும் வெறுமையானதுமான அவ்வழிபாடு களுக்கு நீங்கள் மறுபடியும் திரும்பி, மறுபடியும் அவைகளுக்கு அடிமைப்படும்படி விரும்புகிறதெப்படி?’’ (கலா.4:9).

மனுஷருடைய பாரம்பரியம் அநேகரை அடிமைப்படுத்துகிறது. பெலனற்றதும் வெறுமையானதுமான மார்க்கங்களை அநேகர் பற்றிக்கொண்டு இரட்சிக்க மாட்டாதவைகளையும், வீணான விக்கிரகங் களையும் தொழுதுகொண்டு மோசம்போகிறார்கள். சாலொமோன் மிகப்பெரிய ஒரு ராஜா அவனைப்போல ஞானமுள்ள ராஜாக்கள் எழும்பினதில்லை. அப்படிப்பட்ட ‘‘சாலொமோன் வயதுசென்றபோது,

அவனுடைய மனைவிகள் அவன் இருதயத்தை அந்நியதேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள்; அதினால் அவனுடைய இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப்போல, தன் தேவனாகிய கர்த்தரோடே உத்தமமாயிருக்கவில்லை'' (1இராஜா.11:4). வாலிப பிரயத்தில் இருக்கிற வைராக்கியம் வாஞ்சை வயதான காலத்தில் குறைய ஆரம்பித்துவிடுகிறது. சாலொமோன் வயதாகும்போது அந்நிய ஸ்திரீகள் அவனுடைய இருதயத்தை மாற்றினர். அந்நிய தேவர்களைப் பின்பற்றவும் அவைகளுக்கு கோவில்களைக் கட்டவும் அவனை இணங்கப்பண்ணினார்கள். ஆகையால் அவனுடைய கடைசி நாட்களின் வாழ்க்கை தாவீதின் வாழ்க்கையைப்போல இல்லாமல் கர்த்தரோடே உத்தமமாயிருக்கவில்லை. அவைகளுக்கு அடிமைப்பட்டுப்போனான்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு நண்பரே நீ பாவத்திற்கு அடிமைப்பட்டிருக்கிறாயா? அல்லது தவறான பழக்க வழக்கங்களுக்கு அடிமைப்பட்டிருக்கிறாயா? அவைகளிலிருந்து உன்னை விடுவித்துக்கொள். அவைகள் ஒருபோதும் உன்னுடைய ஆத்துமாவை இரட்சிப்புக்கு நேரே வழிநடத்தாது. பாவத்தின் சம்பளம் மரணம் என வேதம் சொல்லுகிறது.

மேலும் பவுல் சொல்லும்போது பக்திவிருத்தியை உண்டாக்காகது என்கிறார். ஆம், நாம் எதைச் செய்தாலும் அதை பக்திவிருத்திக்கேதுவாக செய்யவேண்டும். ஏனெனில்; ''நீங்கள் கூடிவந்திருக்கிறபோது, உங்களில் ஒருவன் சங்கீதம் பாடுகிறான், ஒருவன் போதகம் பண்ணுகிறான், ஒருவன் அந்நியபாஷையைப் பேசுகிறான், ஒருவன் இரகசியத்தை வெளிப்படுத்துகிறான், ஒருவன் வியாக்கியானம் பண்ணுகிறான். சகோதரரே, இது என்ன? சகலமும் பக்திவிருத்திக்கேதுவாகச் செய்யப்படக்கடவது'' (1கொரி.14:26). சபை ஆராதனையானது ஒழுங்கும் கிரமுமாய்யிருக்கவேண்டும். இன்றைய சபைகளில் உலக காரியங்கள் சபைக்குள் வந்திருக்கிறது. அதை அநேகர் வரவேற்றிருக்கிறார்கள். சபை ஆவிக்குரியது, அதில் உலக காரியங்கள் இடம்பெறக்கூடாது. ஆவிக்குரியவற்றை ஆவிக்குரியவைகளோடு சம்பந்தப்படுத்திப் பார்க்க வேண்டும். சபை கர்த்தருக்குச் சொந்தமானது. அதில் ஒன்றைக்கூட்டவோ அல்லது ஒன்றைக்குறைக்கவோ நமக்கு



அதிகாரமில்லை. பக்திவிருத்திக்கு ஏதுவாக செய்யவேண்டும். ''நான் என் சுயபிரயோஜனத்தைத் தேடாமல், அநேகருடைய பிரயோஜனத்தைத் தேடி, அவர்கள் இரட்சிக்கப்படும்படிக்கு, எவ்விதத்திலும் எல்லாருக்கும் பிரியமாய் நடக்கிறதுபோல; நீங்களும் யூதருக்கும், கிரேக்கருக்கும், தேவனுடைய சபைக்கும் இடறலற்றவர் களாயிருங்கள்'' (1கொரி.10:19,20).

இன்றைக்கு அநேக சபைகள் மற்ற சபைகளுக்கு இடையூராகவே இருக்கிறார்கள். அவர்கள் ஒரு நல்ல மாதிரியான சபைகளாக இல்லை. அவர்களுடைய தவறான போக்கை அநேகர் பின்பற்றி நடக்கும்படியாக, உலகப்பிரகாரமான காரியங்களை முன்வைத்து செய்கிறார்கள். அதை அநேகர் பற்றிக்கொண்டு மோசம்போய்க்கொண்டிருக்கிறார்கள். இவ்விதமான காரியங்கள் கொரிந்துசபையிலும் இருந்தது. அகையால் அவர்களுக்கு அப்போஸ்தலானகிய பவுல் எச்சரித்து இவைகளை எழுதியிருக்கிறார். இச்சிறியரில் ஒருவனுக்கு இடையூரு செய்கிறவன் கழுத்தில் எந்திரக்கல் கட்டப்படும் என்று ஆண்டவர் இயேசு சொன்ன காரியத்தை நினைத்துப்பாருங்கள். அப்படியிருக்க முழுசபைக்கும் இடையூராக நடப்பீர்களானால் உங்களுடைய நிலைமை என்னவாகும். தேவனோடு எதிர்த்து போர்செய்யாதிருக்கப்பாருங்கள்.

நாதாபு, அபியூ என்ற ஆரோனின் பிள்ளைகள் அந்நிய அக்கினியை எடுத்து தூபம் காட்டியபடியால் அவர்களை அக்கினி வானத்திலிருந்து வந்து பட்சித்துப்போட்டது. அதை தேவன் ஏற்றுக்கொள்ளவில்லை. அது அவர்களுக்கு மாத்திரமே நடந்தது நமக்கல்ல என்று இருக்கக்கூடாது. தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறார். அவர் விரும்பாத ஏற்றுக் கொள்ளாத ஒன்றை நாம் சபைகளில் செய்வோமானால் நம்முடைய நிலைமையும் அப்படியாகிவிடும். ஆகையால் வேதாகமத்தின்படியாக சபையை நடத்துங்கள். மற்றவர்களுக்கு இடையூராக ஜீவிக்காமல். பக்திவிருத்திக்கு ஏதுவான காரியங்களை சிந்தியுங்கள்.

தனக்கு அநுபவிக்க அதிகாரம் இருந்தபோதும் எல்லாம் தகுதியாயிராது என்று அவைகளை ஒதுக்கிய அப்போஸ்தலனாகிய பவுலைப்போல நீங்கள் கர்த்தருக்கு பிரியமுண்டாகும்படியாக தகுதியானவற்றைத் தேர்ந்தெடுங்கள். அதைப்போல பாவத்தில் அடிமைப்பட்டு அதிலிருந்து விடுபடமுடியாமல் தவிக்கும் மக்களைப்போல

இல்லாது அதிலிருந்து விடுபடவும், பாவத்திற்கு ஒருபோதும் அடிபணிந்துபோய்விடாதிருக்கவும் உங்களை வல்லமையுள்ள வசனத்திற்கு உங்களை ஒப்புக்கொடுங்கள்.

**கேள்வி நேரம்**

**உங்கள் சரீரங்கள் தேவனுடைய ஆலயமா?**

ஆம், ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவனுடைய ஆலயமாக இருக்கிறான். ஏனெனில்; "உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்" (1கொ.6:19,20). கட்டிடத்தில் தேவன் இருப்பதில்லை. அவர் நம்மில் வாசமாயிருக்கிறார்.

ஆகையால் ஒருவன் தேவன் தங்கியிருக்கிற வாசஸ்தலத்தைக் கெடுத்தால் அவனைத் தேவன் கெடுப்பார். தேவனுடைய வாசஸ்தலம் பரிசுத்தமாயிருக்கவேண்டும். ஆகையால் உங்களுடைய ஆவி ஆத்துமா சரீரம் மிகவும் பரிசுத்தமாக இருக்க பிரயாசப்படவேண்டும். குடிக்கிறவர்களைப் பார்த்து ஐயோ! தேவனுடைய சரீரத்தை இப்படி அசுத்தப்படுத்துகிறீர்களே என்று அநேகர் சொல்வதைக் கேள்விப்படுகிறோம். ஆம், அது பெரிய தவறான காரியம். அதைப் பார்க்கிலும் பெரிய தவறான காரியம் என்னவென்றால் கெட்ட சிந்தனைகொள்வது. இருதயத்திற்குள்ளாக வைத்துவைத்து அந்த தவறை செய்வது. ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்த்தாலே அவளோடு விபசாரம் செய்தாயிற்று என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் தங்கும் இடத்தில் இப்படிப்பட்ட சிந்தைக்கு இடம்கொடுக்கலாமா? சிந்தியுங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



## 37. முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான், பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார்
## The First man Adam Became Living Being, The Last Adam Became a Life Giving Spirit

**மு**தல் மனிதனை அறியாதவர்களே இருக்கமுடியாது. அவனை வேதம் முந்தின மனுஷன் ஆதாம் என்றழைக்கிறது. "முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான் என்றெழுதியிருக்கிறது; பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார்" என்று சொல்லுகிறது (1கொரி.15:45). இந்த முந்தின ஆதாமை பிதாவாகிய தேவன் தமது சாயலாக உண்டாக்கினார். அவனை மண்ணினால் உருவாக்கி அவனுக்கு ஜீவ சுவாசத்தைக் கொடுத்தார். அவன் ஜீவாத்துமாவானான். உயிரோடு வாழக்கூடிய ஒரு மனுஷனாக மாற்றப்பட்டான்.

இந்த மனிதனை பின்பு வந்த ஆதாம் அதாவது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து அவனை பாவத்திலிருந்து உயிர்ப்பிக்கிற ஆவியானார். ஆதாம் பாவம் செய்தபடியால் பாவம் அவனை ஆண்டுகொண்டது. அத்தோடு பாவம் விட்டுவிடவில்லை, ஆதாமுக்கு பின்பும் பாவம் அவனுடைய சந்ததியையும் ஆண்டுகொண்டது. ஆகையால் "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" (1கொரி.15:22).

ஆதாமுக்குள் எல்லலோருக்கும் கிடைக்கக்கூடியது மரணம். குழந்தைகள் பிறந்தவுடன் எப்படி பிறந்திருக்கான் பாரு அவனுடைய அப்பாவை அப்படியே உருச்சு வச்சிருக்கான் அல்லது அவனுடைய தாத்தாவைப்போல இருக்கிறான் என்றெல்லாம் சொல்லுவார்கள். ஆனால் அந்த சாயல் மரணத்தின் சாயல் ஏனெனில் ஆதாமுக்குள் எல்லோரும் மரிக்கிறோம். ஆனால் கிறிஸ்துவுக்குள் வரக்கூடிய ஆசீர்வாதம் உயிர்ப்பிக்கப்படுதல். ஆகையாலே ஒருவன் மறுபடியும் பிறக்கவேண்டும் என வேதம் சொல்லுகிறது. கிறிஸ்துவுக்குள் பிறக்கும் பிறப்பே நித்தியஜீவனை ஆண்டுகொள்ளும் பிறப்பாக இருக்கிறது. "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை

விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்'' என்றார் (யோவா.11:25). ஆதாமின் வழியில் வந்த ஒவ்வொருவரும் இயேசுவை விசுவாசிக்கும்போது அவர்கள் மரித்தாலும் பிழைக்கும் ஆசீர்வாதத்தைப்பெறுகிறார்கள். இதை ஆண்டவர் தாம் இருந்த நாட்களிலே செய்தார். லாசரு என்பவன் இயேசுவை விசுவாசித்தவன். அவன் மரித்தபொழுது அவனுடைய சகோதரி ஆண்டவரே நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான் என்றாள்; ஆண்டவர் அந்த மனிதனை அடக்கம்பண்ணின கல்லறைக்குச் சென்று; ''லாசருவே, வெளியே வா என்று உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார்'' (யோவா.11:43). மரித்தவன் வெளியே வந்தான். இந்த அதிகாரத்தை அவர் உடையவராக இருக்கிறார்.

கிறிஸ்துவுக்குள் மரிக்கிறவர்களும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் இயேசுவை விசுவாசிப்பதும் அவரை நீங்கள் உங்களுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளுவதும் உங்கள் சொந்த முயற்சியில் கூடாது. ஏனெனில் நீங்கள் பிதாவாகிய தேவனாலே தெரிந்துகொள்ளப்பட்டவராயிருக்க வேண்டும் அப்பொழுதே விசுவாசிப்பீர்கள். அழைக்கப்பட்டவர்கள் அநேகர் ஆனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சிலர் என்றார். ஆகையால், ''என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசிநாளில் நான் அவனை எழுப்புவேன் என்றார்'' (யோவா.6:44). நீங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டு தேவனுடைய பிள்ளையாக இருக்கிறீர்கள் என்றால் அது ஒரு பெரிய பாக்கியம். தேவன் உங்களை தெரிந்துகொண்டுள்ளார். அப்படியில்லை என்றால், நீங்கள் இயேசுவிடம் வந்திருக்க வாய்பில்லை. இதற்காக தேவனை ஸ்தோத்தரியுங்கள்.

முந்தின ஆதாம் மூலமாக பாவம் பிரவேசித்தது; ஆம் ''இப்படியாக ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால் மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும், இதுவுமாயிற்று'' (ரோம.5:12). நோய்கிருமிகள் உடலில் ஒரு இடத்தில் முதலாவது தொற்றிக் கொள்ளுகிறது. அதைப்போல பாவம் முதலாவது ஆதாமை தொற்றிக் கொண்டது. பின்பு அவனுடைய சந்ததிகளையும் தாக்கியது.



''மரணமானது ஆதாம் முதல் மோசேவரைக்கும், ஆதாமின் மீறுதலுக்கொப்பாய்ப் பாவஞ்செய்யதாவர்களையும் ஆண்டுகொண்டது; அந்த ஆதாம் பின்பு வந்தவருக்கு முன்னடையாளமானவன்'' (ரோம.5:14). பாவம் அவனுள் பிரவேசிக்க காரணம் அவனுடைய கீழ்ப்படியாமை என்றே சொல்லவேண்டும். தேவன் முன்னமே எச்சரித்து சொல்லியிருந்தும், அவருடைய வார்த்தையை அவன் மீறி பாவத்திற்குள்ளானான்.

ஒருவனுடைய கீழ்ப்படியாமையினாலே ஆண்டுகொண்ட பாவத்தை ஜெயிக்கும்படியாக ஒருவருடைய கீழ்ப்படிதலை தேவன் எதிர்பார்த்தார் அதை ஆண்டவர் இயேசுவானவர் இப்பூமியிலே நிறைவேற்றினார். அவருடைய அடிச்சுவடுகளை தொடர்ந்து நாம் ஒவ்வொருவரும் அதைநிறைவேற்றவேண்டியவர்களாயிருக்கிறோம்.

''அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்'' (ரோம.5:19). முள்ளை முள்ளால் எடுக்கவேண்டும் என்று சொல்லுவார்கள் அதைப்போல தேவன் ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகரை நீதிமான்காளாக்குகிறார். ஆகவே இயேசுவானவர் சொல்லும்போது; ''என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கிவந்தேன்'' என்றார் (யோவா.6:38). பரலோகத்திலிருக்கும்போது அவருடைய சித்தம் செய்கிறவராயிருந்தார். பூமிக்கு வந்தும் அவருடைய சித்தம் செய்கிறவராயிருந்தார். ஒருவரை மற்ற இடத்திற்கு அனுப்பும்போது அவர் சற்று மாறிவிடுகிறார். அவர் முன்புபோல் இல்லை என்பார்கள்.

ஆம், மனிதன் இடத்திற்கு இடம் ஏற்றார்ப்போல தன்னை மாற்றிக் கொள்ளும் பச்சோந்திபோல் இருக்கிறான். ஆனால் உங்களையும் என்னையும் இரட்சிக்கும்படியாக வந்த ஆண்டவர் இயேசு தேவனுடைய சித்தத்தின்படி ஜீவிக்கிறவராயிருந்தார். உலக ஆஸ்திகளை காண்பித்து தன் வசப்படுத்தும்படியாக வந்த பிசாசை அவருடைய வார்த்தையினால் ஜெயித்து அப்பாலே போ பிசாசே, என்று விரட்டியடித்தார். ஆதாம் இப்படி பிசாசை விரட்டி அடித்திருப்பானேயானால் பாவம் உலகத்தில் பிரவேசிக்க வாய்ப்பில்லை. நாமும் ஆண்டவர் இயேசுவைப்போல தேவனுடைய

சித்தத்தின்படியாக வாழ்வோமானால் ஆசீர்வதிக்கப்படுவோம். "இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்தியஜீவன்" (ரோம.6:22). இந்த நித்திய வாழ்வை சுதந்தரிக்க கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகளாக ஆண்டவருக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள்.

முந்தின ஆதாம் மண்ணானவன் என வேதம் சொல்லுகிறது; "முந்தின மனுஷன் பூமியிலிருந்துண்டான மண்ணானவன்; இரண்டாம் மனுஷன் வானத்திலிருந்து வந்த கர்த்தர்" (1கொ.15:47). நீங்கள் இப்பொழுது இந்த மண்ணானவனுடைய சாயலை தரித்துக் கொண்டு இருக்கிறீர்களா? அல்லது வானத்திலிருந்து வந்த கர்த்தரின் சாயலைத்தரித்துக்கொண்டிருக்கிறீர்களா? இதில் ஜென்ம சரீரமே முந்தினது என வேதம் சொல்லுகிறது. "ஆவிக்குரிய சரீரம் முந்தினதல்ல, ஜென்மசரீரமே முந்தினது; ஆவிக்குரிய சரீரம் பிந்தினது" (1கொரி.15:46)

நாம் மண்ணான சாயலில் இருக்கிற நாட்களில் நம்மை உண்டாக்கினவரை நினைக்கவேண்டும். அநேகர் நினைக்கவேண்டிய நாட்களில் அவரை நினைக்காமல், தேடவேண்டிய நாட்களில் அவரைத்தேடாமல் காலத்தை வீணாக்குகிறார்கள். "இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்கு முன்னும், அவரை உன் வாலிபப்பிராயத்திலே நினை" என வேதம் போதிக்கிறது (பிர.12:1).

அநேகருடைய வாதம் பின்னால் பார்த்துக்கொள்ளலாம் என்பதே. மழைவருவதற்கு முன்னே அணை கட்டவேண்டும். அதைப்போல காலத்தே பயிர்செய்ய வேண்டும். நம்முடைய ஆவி தேவனிடத்திற்கு போகும் முன்பு நாம் செய்யவேண்டிய பணிகள் நிறைய இருக்கிறது ஆகையால் காலத்தை பிரயோஜனப்படுத்திக்கொள்ளவேண்டும். இது ஒவ்வொருவரின்மேலும் விழுந்த கடமையாக இருக்கிறது. இதில் யாரும் சாக்கு போக்கு சொல்ல இடமில்லை.

பிந்தின ஆதாம் வானத்திலிருந்து வந்த கர்த்தர்: ஆம் "முந்தின மனுஷன் பூமியிலிருந்துண்டான மண்ணானவன்; இரண்டாம் மனுஷன் வானத்திலிருந்து வந்த கர்த்தர்" (1கொரி.15:47). ஆதாம்



பூமியிலிருந்து வந்தவன் என்பதை நாம் அறிவோம். ஆண்டவர் இயேசு வானத்திலிருந்து வந்தவர். ஆகையால் அவர் வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். ஆதாம் பூமியிலிருந்து வந்தவன் ஆகையால் அவனுடைய சரீரம் பூமிக்கு திரும்புகிறது. ஆவி மட்டும் தேவன் கொடுத்தபடியால் ஆவி தன்னைத்தந்த தேவனிடத்திற்கு செல்கிறது. மூன்றரை வருட காலங்கள் இயேசுவானவர் தம்முடைய சீடர்களோடு உண்டு உறங்கி அநேக அற்புதங்களையும் செய்து சுவிசேஷத்தை அறிவித்து வந்தார். சிலுவைக்குப் பின்பு நாற்பது நாள்அளவும் அவர்களுக்கு தம்மை உயிரோடிருக்கிறவராக காண்பித்தார்.

மரித்தவர்கள் எவரும் சில நொடிகள் கூட உயிரோடிருக்கிறவர் களாக உலகம் தோன்றினதிலிருந்து தங்களை உயிரோடிருக்கிறவர் களாக காண்பித்ததாக இல்லை. பெரிய பெரிய மகான்களாகவும் பலவிதமான வித்தைகள் செய்பவராகவும் வாழ்ந்திருக்கலாம். ஆனால் மரித்தபின்பு அவர்களுயை பெயர் முதலாய் ஒன்றுமில்லாமற்போகிறது. இயேசுவானவர் மரித்து நாற்பது நாட்கள் தம்மை வெளிப்படுத்தினார். அவர் எடுத்துக்கொள்ளப்படுகையில் "கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்" (அப்.1:11).

வானத்திலிருந்து மனுஷனை உயிர்ப்பிக்கும்படியாக வந்த ஆண்டவர் இயேசு மறுபடியும் வானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். அவரைப்போல நீயும் எடுத்துக்கொள்ளப்பட்டு அவரோடு சேர்ந்து நித்தியஜீவனுக்குள்ளாக பிரவேசிக்கவேண்டும். அதற்கு நீங்கள் செய்ய வேண்டியது என்ன? வானவருடைய சாயலை அணிந்துகொள்ளுங்கள். பாவத்தின் சாயலை களைந்துபோட்டு வானவருடைய சாயலை அணிந்துகொள்ளுங்கள்.

இச்செய்தியிலே நாம் தியானித்தபடியாக ஆதாம் மூலமாக பாவம் உள்ளே பிரவேசித்தது. அதனால் மனிதனுக்கு மரணம் ஏற்பட்டது. அவனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப் பட்டார்கள். பிந்தின ஆதாம் இயேசுவினாலே பாவத்திலிருந்து மீட்பு கிடைத்தது. அவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்காளாக்கப்

படுகிறார்கள். அவர் உயிர்ப்பிக்கிற ஆவியானார். அவர் தேவனுடைய சித்தம் செய்கிறவராயிருந்தார். அவரைப்போல நீங்களும் தேவனுடைய சித்தத்தின்படியாக கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகளாக வாழுங்கள். அப்பொழுது வாடாத ஜீவகிரீடத்தை அவர்மூலமாக பெற்றுக் கொள்ளுவீர்கள்.

**கேள்வி நேரம்**

**நீங்கள் ஆதாமின் சாயலா அல்லது இயேசுவின் சாயலா?**

“மண்ணானவன் எப்படிப்பட்டவனோ மண்ணானவர்களும் அப்படிப்பட்டவர்களே; வானத்துக்குரியவர் எப்படிப்பட்டவரோ, வானத்துக் குரியவர்களும் அப்படிப்பட்டவர்களே” என அப்போஸ்தலாகிய பவுல் மிகவும் தெளிவாக சொல்லியிருக்கிறார் (1கொ.15:48). உன் சரீரத்தைக் குறித்து மேன்மை பாராட்டுவாயானால் அது ஒன்றுமில்லை மண்ணுக்குரியது. வானத்துக்குரிய சரீரத்தைப்பெற்று மேன்மை பாராட்டுவாயானால் அது மகிமைக்குரியது. மண்ணான சரீரம் மண்ணிலிருந்து எடுக்கப்பட்டது.

அது மண்ணுக்கு மண்ணாய் போய்விடும். இயேசுவானவர் வானத்திலிருந்து வந்தவர் அவர் மனிதனுக்காக பலபாடுகள் பட்டு அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து பின்பு நாள்பது நாள்அளவும் தம்மை உயிரோடிருக்கிறவராக காண்பித்து பின்பு எடுத்துக்கொள்ளப்பட்டார். அவருடைய கல்லறை இன்றும் திறந்தே இருக்கிறது. அந்த வானவருடைய சாயலை நீ அணிந்து கொள்ளுவாயானால் நீயும் அவரோடு அவருடைய வருகையில் எடுத்துக்கொள்ளப்படுவாய். உங்களுடைய சாயல் எப்படிப்பட்டது என்பதை வசனத்தைக்கொண்டு தீர்மானியுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 38. புது இருதயம் புது ஆவி
## A New Heart and A New Spirit

**தே**வனாகிய கர்த்தர் மனுஷனை உண்டுபண்ணும்போது அவனுடைய இருதயம் புதியதாகவும் செம்மையானதாகவும் இருந்தது. பின்பு அவர்களுடைய கீழ்ப்படியாமையினாலும் செய்த துரோகத்தினாலும் இருதயம் கெட்டுவிட்டது. ஆகையால் தம்முடைய



ஜனங்களாகிய இஸ்ரவேலுக்கு எசேக்கியேல் தீர்க்கதரிசியைக்கொண்டு சொல்லும்போது; “நீங்கள் துரோகம்பண்ணின உங்களுடைய எல்லாத் துரோகங்களையும் உங்கள்மேல் இராதபடிக்கு விலக்கி, உங்களுக்குப் புது இருதயத்தையும் புது ஆவியையும் உண்டுபண்ணிக்கொள்ளுங்கள்; இஸ்ரவேல் வம்சத்தாரே, நீங்கள் ஏன் சாகவேண்டும்?” (எசே.18:31).

மனிதனுடைய துரோகத்தினிமித்தமாக பாவம் அவனுக்குள் வந்தது. பாவம் அவனை ஆண்டுகொண்டபடியால் அவனுக்கு மரணம் வந்தது. ஆகையால் நீங்கள் ஏன் சாகவேண்டும். பாவத்தை தள்ளிவிட்டு எல்லா துரோகமான காரியங்களையும் உங்களைவிட்டு விலக்கி உங்களுக்கு புது இருதயத்தையும் புது ஆவியையும் உண்டுபண்ணிக் கொள்ளுங்கள் என்கிறார். தங்களுடைய வஸ்திரங்களை கறைபடுத்திக் கொண்டு வரும் பிள்ளைகளைப் பார்த்து ஏன் கறைபடுத்தினாய் நீயே அதை சரிசெய்துகொள் என்பதைப்போல தம்முடைய ஜனங்களைப் பார்த்து கர்த்தர் சொன்னார்.

துரோகம் என்பது மிகவும் மோசமான செயலாக இருக்கிறது. தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேல் தேவனுக்கு துரோகம் செய்தார்கள். உண்டாக்கினவரை மறந்தார்கள். “உன் ஆதிதகப்பன் பாவஞ்செய்தான்; உனக்கு முன்னின்று பேசுகிறவர்களும் எனக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணினார்கள்” என்று கர்த்தர் சொல்லுகிறார் (ஏசா.43:27). தேவனுடைய திட்டத்தை முதல் மனிதனாகிய ஆதாம் மீறி பாவம் செய்தான். இது அவன் கர்த்தருக்கு செய்த துரோகமாயிருந்தது. அதைப்போல பின்வந்த சந்ததியாராகிய இஸ்ரவேலும் அவருக்கு விரோதமாக துரோகமான காரியங்களில் ஈடுபட்டனர்.

ஆகையால் தம்முடைய தீர்க்கதரிசியாகிய ஓசியாவைக்கொண்டு பேசும்போது; “உன் வாயிலே எக்காளத்தை வை; அவர்கள் என் உடன்படிக்கையை மீறி, என் நியாயப்பிரமாணத்துக்கு விரோதமாகத் துரோகம்பண்ணினபடியால், கர்த்தருடைய வீட்டின்மேல் சத்துரு கழுகைப்போல் பறந்துவருகிறான்” என்றார் (ஓசி. 8:1). அநேக தீர்க்கதரிசிகளைக்கொண்டு தமக்கு விரோதமாக செய்து வந்த காரியங்களை அவ்வப்போது எச்சரித்துக்கொண்டேவந்தார். உங்களுக்கு ஒருவர் துரோகம் செய்துவிட்டால் அதைக்குறித்து நீங்கள் எவ்விதமாக கவலைகொள்ளுவீர்கள். உங்களுடைய மனது என்ன

பாடுபடும். ஐயோ நான் நம்பினேனே எனக்கு அவன் மோசம் செய்துவிட்டானே, துரோகம் பண்ணிவிட்டானே என்று புலம்புவீர்கள் அல்லவா? கர்த்தர் மனிதர்களை எவ்வளவாய் நேசித்தார். உலகத்தில் உள்ள எல்லாவற்றைப்பார்க்கிலும் மனிதனை தம்முடைய சாயலில் சிருஷ்டித்தார்.

இதை அவன் மறந்தவனாக, பிசாசுக்கு செவிகொடுத்தவனாக, தம்முடைய ஆத்துமாவை கெடுத்துக்கொண்டவனாக, இஸ்ரவேலின் தேவனுக்கு விரோதமாக துரோகம் செய்கிறவனாக மாறினான். புதிய ஏற்பாட்டு புத்தகத்தில் உள்ள ஆசிரியராகிய லூக்கா யூதாசைப்பற்றி எழுதும்போது; ‘‘யாக்கோபின் சகோதரனாகிய யூதா, துரோகியான யூதாஸ்காரியோத்து என்பவர்களே’’ என்று எழுதுகிறார் (லூக்.6:16). ஏன் இவனை துரோகியான யூதாஸ்காரியோத்து என எழுதுகிறார்? இயேசுவை முத்தத்தினால் காட்டிக்கொடுத்தான்.

இயேசுவின் அன்புக்கு விரோதமாக தீங்கிழைக்கும்படி அவரை காட்டிக்கொடுத்தான். இயேசுவானவர் அவனை அப்போஸ்தலர்களில் ஒருவனாக தெரிந்துகொண்டார். அவனோ, அவருக்கு விரோதமாக எத்தனித்து அவரை காட்டிக்கொடுக்கிறேன் எனக்கு என்ன கொடுப்பீர்கள் என்று சொல்லி இழிவான காசுக்காக அவரைக் காட்டிக்கொடுத்தான். இது அவன் கர்த்தருக்கு விரோதமாக செய்த மாபெரும் துரோகமாக இருக்கிறது. ஆகையால் லூக்கா அவனை துரோகியான யூதாஸ்காரியோத்து என எழுதுகிறார். நம்முடைய வாழ்க்கையில் இப்படிப்பட்டதான எண்ணம்கொண்டவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறோமா? என்பதை சிந்திக்கவேண்டும்.

கர்த்தர் நமக்கு எப்போதும் நல்லவராகவே இருக்கிறார். அவர் ஒருவருக்கும் தீங்கிழைக்கிறவர் அல்ல. மனிதன் ஏன் சாகவேண்டும்? அவன் மனந்திரும்பவேண்டும். அவன் மனந்திரும்பி தனக்கு புது இருதயத்தையும் புது ஆவியையும் உண்டுபண்ணிக்கொள்ளவேண்டும் என அந்நட்களில் உள்ள மக்களுக்குக் கட்டளையிட்டிருந்தார். இதற்கு செவி கொடுத்த இஸ்ரவேலர்கள் தங்களுடைய வழியை மாற்றியமைத்துக்கொண்டு கர்த்தருடைய வசனத்திற்கு செவி கொடுத்து அவருடைய வசனத்தினால் தங்களுடைய வழியை மாற்றிக்கொண்டு புது இருதயத்தையும் புது ஆவியையும் உண்டுபண்ணிக்கொண்டு



கர்த்தருக்கு பிரியமாக வாழும்படியாக தங்களை கர்த்தருக்கும், கர்த்தருடைய உடன்படிக்கைக்கும் ஒப்புக்கொடுத்தார்கள்.

எசேக்கியேல் மூலமாக கர்த்தர் பேசும்போது; ‘‘மனந்திரும்புங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்; சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்’’ (எசே.18:32). அநேகர் சாவை விரும்புகிறார்கள். சாவை விரும்புவதற்கு என்ன காரணம்? இத்தோடு முடிந்துவிடும் இனிபாடுகள் இருக்காது இந்த உலகத்தைவிட்டு கடந்துபோவோம்.

மறுமையிலாவது நன்றாக இருக்கலாம் அல்லது இங்கிருக்கிற பாடுகளிலிருந்து விடுதலையடைந்தால் போதும் என்று நினைத்து தங்களை மாய்த்துக்கொள்ளுகிறார்கள். உண்மையில் நடப்பது என்ன? அவர்கள் ஒரு மோசமான முடிவை எடுத்தபடியால் அவர்கள் தேவனுடைய கோபத்திற்கு உள்ளாகின்றனர். நித்தியமான அழிவாகிய தண்டனையை அடைகின்றனர். எனவே சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார். அவன் மனந்திரும்பி தனக்கு புது இருதயத்தை உண்டுபண்ணிக்கொள்ளும்போது அவனுடைய வாழ்க்கை புதியவைகளாக மாறுகிறது என்கிறார்.

ஒரு நிலத்தில் விவசாயி பயிர்செய்கிறான் அந்த பயிர்கள் அனைத்தும் நசமாய்போவதாலே அவன் அந்த நிலத்தை அப்படியே விட்டுவிட்டு போய்விடுகிறானா? இல்லையே அவன் அந்த பயிர்களை அழித்துவிட்டு வேறு பயிர்வகைகளை கொண்டுவந்து பயிர்செய்கிறான். பின்பு நல்ல பலனைப் பெறுகிறான். அதைப்போல நம்முடைய இருதயம் தேவனுக்கு விரோதமாக பிசாசினால் கெடுக்கப்படும்போது நம்மை மாய்த்துக்கொள்ளுவதாலோ பலன் ஒன்றுமில்லை.

அந்த இருயத்தை தேவனுக்கு நேராக மாற்றும்போது நாம் நலமான காரியங்களை தேவனுடைய சமுகத்தில் பெற்றுக்கொண்டு நம்முடைய ஆத்துமா காக்கப்பட அது உதவியாயிருக்கும். ஆகையால் ஒவ்வொருவரும் தங்களுடைய பொல்லாத வழிகளைவிட்டு மனந்திரும்ப போதிக்கப்படுகிறோம்.

புதிய ஏற்பாட்டில் இயேசுவின் முதல் பிரசங்கமே ‘‘மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசிக்கத்

தொடங்கினார்" (மத்.4:17). அநேகர் இயேசுவின் இந்த பிரசங்கத்தைக் கேட்டு தங்களுடைய வழியை மாற்றிக்கொண்டு மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசித்தார்கள். திரள்திரளான ஜனங்கள் இயேசுவின் போதனையைக் கேட்கும்படியாக கூடிவந்தார்கள். அவராலே அநேக பிணியாளிகள் சுகமாக்கப்பட்டார்கள்.

இந்த விதமான மனந்திரும்புதலின் செய்தி இஸ்ரவேலுக்கும் கொடுக்கப்பட்டது. "இஸ்ரவேல் வம்சத்தாரே, நான் உங்களில் அவனவனை அவனவன் வழிகளுக்குத் தக்கதாக நியாயந்தீர்ப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்; நீங்கள் மனந்திரும்புங்கள், உங்களுடைய எல்லா மீறுதல்களையும் விட்டுத் திரும்புங்கள்; அப்பொழுது அக்கிரமம் உங்கள் கேட்டுக்குக் காரணமாயிருப்பதில்லை" (எசே.18:30). ஏன் ஒருவன் மனந்திரும்பவேண்டும்? என்பதற்கு இவ்வசனம் மிக நல்ல ஒரு காரணத்தை எடுத்துக்காண்பிக்கிறது. உங்களுடைய அக்கிரமம் உங்கள் கேட்டுக்குக் காரணமாயிருக்கும் ஆகையால் நீங்கள் உங்கள் அக்கிரமத்தினிமித்தம் மனந்திரும்பியே ஆகவேண்டும். இல்லையேல் உங்கள் அக்கிரமம் உங்கள் கேட்டுக்குக் காரணமாயிருக்கும்.

இன்றைக்கு பூமியில் தான் செய்த தவறை மறைக்க லஞ்சம் கொடுத்து மனிதன் தப்பிக்கொள்ளுகிறான். ஆனால் அவன் கடைசி நியாயத்தீர்ப்பில் கர்த்தருக்கு லஞ்சம் கொடுக்க முடியாது; ஏனெனில் அவர் பரிதானம் வாங்குகிறவர் அல்ல. ஒருபோதும் நியாயத்தி புரட்டுகிறவருமல்ல. அவனவனுடைய செய்கைகளின்படி அவனவனை தண்டிப்பார். ஒருவரும் அவருடைய பார்வைக்கு தப்புவதில்லை. ஆகையால் இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற அன்பு சகோதரனே, சகோதரியே, நீ மனந்திரும்பு உன் இருதயம் செம்மையாகட்டும் உன்னுடைய ஆவி புதுமையாகட்டும். பழையவைகளையும் பழைய செயல்பாடுகளையும் களைந்துபோட்டு நீ ஒரு புதியமனுஷனாக இருக்கப் பிரயாசப்படு.

புது இருதயமும் புது ஆவியும் எப்போது வருமென்றால் நாம் கர்த்தருடைய வசனங்களைக்கேட்டு நம்மை மாற்றிக்கொள்ளும்போது இவைகள் மாறும். பவுல் கொரிந்திய சபையாருக்கு எழுதிய கடிதத்தில்; "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டி



யாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" என்கிறார் (2கொ.5:17). இது கிறிஸ்துவுக்குள் நடைபெறுகிற ஒரு நிகழ்வாக இருக்கிறது. கிறிஸ்துவுக்குள் என்று சொல்லும்போது அவருடைய உபதேசத்திற்குள், சபைக்குள், கீழ்ப்படிதலுக்குள், அறிக்கைக்குள், ஞானஸ்நானத்திற்குள் இது நடைபெறுகிறது. இவைகளையெல்லாம் செய்யாமல் ஒருவன் கிறிஸ்துவுக்குள் வருவது கூடாதகாரியம். இன்றைக்கு அநேகர் கிறிஸ்துவுக்கு வெளியே நின்றுகொண்டு தங்களை ஒரு கிறிஸ்தவன் என்று அழைத்துக் கொண்டிருக்கிறார்கள். மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறாத ஒருவர் கிறிஸ்துவுக்குள் இல்லை. அவர் கிறிஸ்துவுக்கு வெளியே புற மனிதனைப்போலவே இருக்கிறார். மனந்திரும்புதல் என்பது பெயரளவில் இல்லை குற்ற உணர்வோடு திரும்பவேண்டும். நாம் பாவம்செய்துவிட்டோம், தேவனுக்கு விரோதமாக துரோகமாக வாழ்க்கை இவ்வளவு காலம் வாழ்ந்துவிட்டோம் என்ற குற்ற உணர்வு வேண்டும்.

நான் ஒருபாவமும் செய்யவில்லை என்று ஒருவர் சொல்லுவரானால் அவர் தன்னை நீதிமானாக காட்டுகிறார். அவர் தனக்குத்தானே நியாயாதிபதியாகவும், தேவனாகவும் எண்ணிக் கொள்ளுவார். அப்படிப்பட்ட எண்ணமுடையவர்கள் மனந்திரும்புவது கூடாதகாரியம். அவர்களுடைய ஆத்துமா வீணாய்போய்விடும்.

பணத்தினாலே எதையும் வாங்கமுடியும் என்று இருந்த ஒரு மாயவித்தைக்காரனைப்பற்றி நாம் படிக்கிறோம். அவன் மனந்திரும்பி, இயேசுவை ஏற்றுக்கொண்டு, ஞானஸ்நானம் பெற்றான். இருந்தபோதும் அவன் பூரணமான நிலைக்கு வரவில்லை. அப்போஸ்தலர்கள் கைகளை வைத்ததினால் பரிசுத்த ஆவி தந்தருளப்படுகிறதை அவன் கண்டபோது பணத்தைக்கெண்டுவந்து நான் எவன்மேல் கைகளை வைக்கிறேனோ, அவன் பரிசுத்தஆவியை பெறத்தக்கதாக எனக்கும் அந்த அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டான். இதை அறிந்த பேதுரு தேவனுடைய வரத்தை பணத்தினாலே சம்பாதித்துக்கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால் உன் பணம் உன்னோடேகூட நாசமாய்ப் போகக்கடவது; "உன் இருதயம் தேவனுக்குமுன்பாகச் செம்மையாயிராதபடியால், இந்த விஷயத்தில் உனக்குப் பங்குமில்லை பாகமுமில்லை"

என்றான் (அப்.8:21). நீ உன் துர்க்குணத்தை விட்டு மந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள் என்றான். இருதயம் மாற்றப்படாமல் ஒருவர் இரட்சிக்கப்படமுடியாது.

**கேள்வி நேரம்**

**நம்முடைய ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும் சுத்தமாக்கப்பட வேண்டுமா?**

ஆம், உள்ளம் சுத்தமாக இருந்தால் போதும் என்று அநுதினமும் குளிக்கிறார்கள். வேதம் சொல்லுகிறது; ''சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக, உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக'' (1தெச.5:23).

நம்மை அவருடைய இரத்தத்தினாலே கழுவி பரிசுத்தப்படுத்தியிருக்கிறார். இப்படி கழுவப்பட்ட ஒருவன் மீண்டும் தன்னை கறைபடுத்திக்கொள்ளக்கூடும். ஆகையால் அவர் வரும்போது நாம் ஆவி ஆத்துமா சரீரத்தில் குற்றமற்றவர்களாக இருக்க அநுதினமும் ஜெபித்து தேவவசனத்தினாலே நம்மை பரிசுத்தப்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். நீங்கள் எப்படிப்பட்ட வராயிருக்கிறீர்கள்? உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்.

## 39. நீதியினிமித்தம் துன்பம்
## Persecuted for Righteousness

**து**ன்பம் மனிதனுக்கு பல வழிகளில் வருகிறது. ''நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது'' என்கிறார் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து (மத்.5:10). எந்தவிதமான துன்பமும் இல்லாமல் இன்பமாக ஒவ்வொருநாளும் வாழவேண்டுமென எல்லோருமே விரும்புகின்றனர். ஆனால் சிலருக்கு நீதியினிமித்தமாக பலவிதமான துன்பங்களை அநுபவிக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அப்படி உண்மையிலே நீதியினிமித்தமாக துன்பங்களை அநுபவிக்கும்போது நாம் பாக்கியவான்கள் பட்டியலில் இடம்பெறுகிறோம். அவ்விதமாக வரக்கூடிய துன்பங்களைக்குறித்து நாம் துவண்டுபோகவேண்டிய அவசியமில்லை.



ஏனெனில் நாம் அவ்விதமான துன்பங்களை அநுபவிக்கும்போது பாக்கியவான்களாக கருதப்படுகிறோம். இதை எத்தனைபேர் எற்றுக் கொள்வார்களோ தெரியவில்லை. ஆனால் அவர்கள் நீதியினிமித்தமாக பாடுபடும்போது பாக்கியவான்களாக இருக்கிறார்கள். அதை சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். குற்றஞ்செய்து பாடுபடும்போது அதை ஏற்றுக்கொள்வதால் பாக்கியவான்களாக முடியாது.

உதவியற்ற சூழ்நிலையில் யோவான்ஸ்நானன் பாடுகளை அநுபவித்தார். அவர் ஏரோதியாளினிமித்தமாக காவலில் வைக்கப்பட்டார். பின்பு உண்மையைச் சொன்னதினால் அவருடைய தலைக்கு ஆபத்து வந்தது. அவருடைய தலை சிரச்சேதம் செய்யப்பட்டது. இதற்காக அவர் பயந்துபோய் உண்மையிலிருந்து விலகிச்செல்ல வில்லை. யோவான் சிரச்சேதம் பண்ணப்பட்டபோது இயேசுவானவர் ஊழியத்தில் இருந்தார். ''யோவான் காவலில் வைக்கப்பட்டான் என்று இயேசு கேள்விப்பட்டு, கலிலேயாவுக்குப் போய், நாசரேத்தை விட்டு, செபுலோன் நப்தலி என்னும் நாடுகளின் எல்லைகளிலிருக்கும் கடற்கரைக்கு அருகான கப்பர்நகூமிலே வந்து வாசம்பண்ணினார்'' என காண்கிறோம் (மத்.4:12,13).

இயேசுவினால் கூடாத காரியம் ஒன்றுமில்லை என்பதை நாம் அறிவோம். யோவான் காவலில் வைக்கப்பட்டான் என்பதையும் இயேசு கேள்விப்பட்டார். தனக்கு முன்னோடியாக அனுப்பப்பட்டவன் இந்த யோவான்ஸ்நானன் என்பதையும் தனக்கு ஞானஸ்நானம் கொடுத்தவன் என்பதையும் இயேசு அறிவார். ஆனால் அவனை காவலிலிருந்து விடுவிக்கவோ, அவனை சிரச்சேதம் செய்ய தடுக்கவோ இயேசுவானவர் முற்படவில்லை. தேவனுடைய சித்தம் நிறைவேற தன்னை ஒப்புக்கொடுத்தார்.

நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் என்று சொன்ன தம்முடைய வார்த்தைக்கு இணங்க யோவான் சிரச்சேதம் பண்ணப்படவேண்டும் என்பது தேவனுடைய சித்தம். யோவான் நீதியினிமித்தம் பாக்கியவானாக மாறவேண்டும் ஆகவே அதை தடுத்த நிறுத்தவோ அல்லது யோவானை தன்னுடைய அற்புதமான வல்லமையினாலே அவனுடைய தலையை ஒட்டவைக்கவோ

இயேசுவானவர் முயற்சிக்காமல், அவன் காவலில் வைக்கப்பட்டான் என்று அறிந்தும் நப்தலி போன்ற நாடுகளில் ஊழியம் செய்யும்படியாக கடந்துசென்றார். இது ஒருவேளை பெலவீனமாக இருக்கிறவர்களுக்கு சற்று கடினமாக இருக்கும். இப்படி அறிந்தும் உதவிசெய்யாமற்போனாரே என்று நினைக்கக்கூடும். இந்த இடத்தில் நீங்கள் தேவனுடைய சித்தத்தை மட்டுமே நினைக்கவேண்டும். எல்லா விதமான பாடுகளை அநுபவிக்கும்படியாக நாம் ராஜ்யத்தினிமித்தம் தெரிந்து கொள்ளப்படுகிறோம். ஆகையால் அப்படிப்பட்ட பாடுகள் வரும்போது அவைகளை ஏற்றுக்கொண்டு அநுபவிக்கவேண்டும் அப்பொழுது பாக்கியவான்களாயிருப்போம்.

ஆண்டவர் இயேசுவுக்கே அவ்விதமான பாடுகள் வருவதை அறிந்து முன்கூட்டியே தம்முடைய சீஷர்களுக்கு அவைகளை போதித்தார். ‘‘தீர்க்கதரிசிகள் எழுதியிருக்கிற வசனங்கள் நிறைவேறும்படி இவைகளெல்லாம் சம்பவிக்கிறது என்றார். அப்பொழுது, சீஷர்களெல்லாரும் அவரைவிட்டு ஓடிப்போனார்கள். ஒன்பதாம்மணி நேரத்தில் இயேசு; ஏலி! ஏலி! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம்’’ (மத்.26:56; மத்.27:46). கடைசிவேளையில் அவரை பின்பற்றி வந்த சீஷர்கள் எல்லாரும் அவரைவிட்டு ஓடிப்போனார்கள். அந்த நேரத்தில் இயேசுவுக்கு எப்படியிருந்திருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள்.

உங்களுடைய நண்பன் சரியான நேரத்தில் உங்களைவிட்டு நழுவிப்போனால் எப்படியிருக்கும். அதைப்போல இயேசுவின்மீது கைபோட்டவுடனே எல்லோரும் ஓடிப்போனார்கள். அவரோ தேவனை நம்பினவராக அவருடைய சித்தத்தை நிறைவேற்றும்படியாக ஒப்புக்கொடுத்தார். அவரை சிலுவையில் அரையும்படி கொண்டு போனார்கள். அப்பொழுது தேவன் அவரை காப்பாற்றும்படியாக இறங்கவில்லை. சிலுவையில் தன்னுடைய ஜீவனை ஒப்புக்கொடுக்கும் முன்பு என் தேவனை! என் தேவனே! ஏன் என்னைக் கைவீட்டீர் என்றார். அப்படியானால் தேவன் அவரை இமைப்பொழுது கைவிட்டார் என்றே சொல்லவேண்டும். ஏன் நீதியினிமித்தமாக, அநேகரை இரட்சிக்கும்படியாக பாவத்திற்கு பலியாக இயேசுவை ஒப்புக்கொடுத்தார்.



அன்பானவர்களே, நீதியினிமித்தமாக வரும்பாடுகளில் தேவன் நமக்கு உதவி செய்யவில்லையே என்று நாம் கலங்கவேண்டிய அவசியமில்லை. எல்லா நீதியையும் நிறைவேற்றவே அவ்விதமான பாடுகளுக்கு நம்மை உட்படுத்துகிறார் என்பதை நாம் அறியவேண்டும். இயேசுவோடு நாமும் பாடுபடுகிறவர்களாயிருந்தால் அவரோடு ஆளுகையும் செய்வோம் என்ற நம்பிக்கையோடிருங்கள்.

முதல் நூற்றாண்டில் அப்போஸ்தலர்களுக்கு பலவிதமான பாடுகள் வந்தது அவர்கள் சோர்ந்துபோகாமல் அதை சந்தோஷமாக எண்ணினார்கள். ஆகையால் சுவிசேஷம் தங்குதடையின்றி எடுத்துச் செல்லப்பட்டது. இன்றைக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்படாத அநேக இடங்கள் உண்டு அவைகளுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட உங்களை ஒப்புக்கொடுங்கள்.

முதல் நூற்றாண்டு காலத்தில் சுவிசேஷத்தை மிகவும் பக்திவைராக்கியத்தோடு அறிவித்தவர்களில் ஸ்தேவானும் ஒருவன். அவன் ஆபிரகாம் துவங்கி விவரமாக எடுத்துச் சொல்லிக்கொண்டு வந்ததை அநேக யூதர்கள் கேட்டுக் கொண்டிருந்தார். ‘‘வணங்கா கழுத்துள்ளவர்களே, இருதயத்திலும் செவிகளிலும் விருத்தசேதனம் பெறாதவர்களே, உங்கள் பிதாக்களைப்போல நீங்களும் பரிசுத்த ஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்துநிற்கிறீர்கள்’’ என்று தொடர்ந்து பிரசங்கித்தான் (அப்.7:51).

இதைக் கேட்டுக்கொண்டிருந்த அவர்கள்; ‘‘உரத்த சத்தமாய்க் கூக்குரலிட்டுத் தங்கள் காதுகளை அடைத்துக்கொண்டு, ஒருமனப்பட்டு அவன்மேல் பாய்ந்து, அவனை நகரத்துக்குப் புறம்பே தள்ளி, அவனைக் கல்லெறிந்தார்கள். சாட்சிக்காரர் தங்கள் வஸ்திரங்களைக் கழற்றி, சவுல் என்னப்பட்ட ஒரு வாலிபனுடைய பாதத்தினருகே வைத்தார்கள்’’ (அப்.7:57,58). நீதியை பிரசங்கித்த ஸ்தோவனை கல்லெறிந்து கொன்றார்கள். அதினால் அவனுடைய நீதி வீணாய்போகவில்லை. அவன் பாக்கியவானாக பரலோகத்தில் தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் ஆண்டவர் இயேசுவை பார்க்கிறவனாக மரித்தான். நீதிக்காக நீங்கள் மரிப்பீர்களானால் பாக்கியவான்களாக இருப்பீர்கள். உங்களுடைய சகோதரனோ, சகோதரியோ அல்லது மற்ற உறவினர்களோ நீதிக்காக பேசுபவராக இருப்பாரானால் அவர்

உண்மையிலே பாக்கியவானாக இருப்பார். நீங்களும் அப்படிப்பட்டவர்களுக்கு உறவினராக இருப்பதால் நீங்களும் ஆசீர்வதிக்கப்பட்டவராயிருப்பீர்கள்.

முதல் நூற்றாண்டு காலத்தில் எருசலேம் சபைக்கு மிகுந்த உபத்திரவம் உண்டாயிற்று. "அக்காலத்தில் எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அப்போஸ்தலர்தவிர, மற்ற யாவரும் யூதேயா சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப்போனார்கள்" (அப்.8:1). வல்லமையாக தேவனால் எடுத்துப்பயன்படுத்தப்பட்டுக்கொண்டு வந்த சீஷர்களுக்கும் அப்போஸ்தலருக்கும் பல பாடுகள் ஏற்பட்டது. இதனால் சபையானது சிதறடிக்கப்பட்டது. சபையை உடைக்கும்படியாக பிசாசு தீவிரமாக செயல்பட்டான்.

இன்றைக்கு அதே நிலை நீடிக்கிறது. ஒவ்வொரு சபையும் துவக்க காலத்தில் பலவிதமான பிரச்சனைகளைச் சந்திக்கிறது. அந்த சபையின் ஊழியக்காரரையோ அல்லது ஒரு விசுவாசியையோ நாம் சந்தித்துக் கேட்போமானால் அவர்கள் பட்ட கஷ்டங்களை நமக்கு விவரித்துச் சொல்லுவார்கள். எருசலேம் சபை பலவிதமான கஷ்டங்களை சந்தித்தபோதும் அவர்கள் சுவிசேஷத்தை மற்ற நாடுகளுக்கு எடுத்துச்செல்லும்படியாக அப்போஸ்தர்களையும் மற்ற சீஷர்களையும் அனுப்புவதில் சோர்ந்துபோகவில்லை. அப்படி சோர்ந்துபோயிருப்பார் களேயானால் இன்றைக்கு உலக முழுவதிலும் இருக்கிற சபைகள் இருந்திருக்காது ஊழியங்களும் இருந்திருக்க வாய்புஇல்லை. நமக்கு வரக்கூடிய சில பிரச்சனைகள் பெரிதாக நாம் எண்ணுவோமானால் நாம் ஆவிக்குரிய வளர்ச்சியில் குறைந்தவர்களாக காணப்படுவோம். நமக்கு வரக்கூடிய பிரச்சனைகளை குறித்து யோசிக்காமல் நீதியினிமித்தமாக பாடுபடுகிறார்களாக அதற்கு நம்மை ஒப்புக்கொடுக்கவோண்டும். தேவன் சகலத்தையும் அறிகிறார்.

தேவனால் வல்லமையாக எடுத்துப்பயன்படுத்தப்பட்டவர்களில் ஒருவன் அப்போஸ்தலனாகிய பவுலுங்கூட. அவன் ஆசியா முழுமைக்கும் சுவிசேஷத்தை அறிவித்தவன். அவன் நீதியினிமித்தமாக பலபாடுகளை அநுபவித்தவன். பவுலின் சகோதரியின் குமாரன் சேனாபதியை சந்தித்து பவுலின் காரியங்களை அவனுக்குத் தெரியப்படுத்தினான். என்னவென்றால்; "யூதர்கள் பவுலின் காரியத்தை



அதிக திட்டமாய் விசாரிக்க மனதுள்ளவர்கள்போல, நீர் நாளைக்கு அவனை ஆலோசனை சங்கத்தாரிடத்தில் கொண்டுவரும்படி உம்மை வேண்டிக்கொள்ள உடன்பட்டிருக்கிறார்கள். நீர் அவர்களுக்குச் சம்மதிக்கவேண்டாம்; அவர்களில் நாற்பதுபேருக்கும் அதிகமானவர்கள் அவனை கொலைசெய்யுமளவும் தாங்கள் புசிப்பதுமில்லை குடிப்பதுமில்லையென்று சபதம்பண்ணிக்கொண்டு, அவனுக்குப் பதிவிருந்து, உம்முடைய உத்தரவுக்காக இப்பொழுது காத்துக்கொண்டு ஆயத்தமாயிருக்கிறார்கள் என்றான்" (அப்.23:20,21).

நீதியைப் பிரசங்கித்த பவுலுக்கும் பிரச்சனைகள் இருந்தது. மரணபோராட்டம் இருந்தது. அவனை கொலைசெய்து போடும்படியாக நாற்பதுபேருக்கு அதிகமானவர்கள் புசிப்பதுமில்லை குடிப்பதுமில்லை என்று சபதம்பண்ணிக்கொண்டிருக்கிற காரியத்தை கேள்விப்பட்ட பவுலுக்கு எப்படியிருந்திருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள். அவன் தான் நீதியினிமித்தமாக துன்பப்படுவதை குறித்து கவலைப்படாமல் அதை பாக்கியமாக எண்ணினான். கர்த்தர் அவன் இன்னும் அதிகமாக ஊழியம் செய்யவேண்டுமென நினைத்து அந்த காரியத்திலிருந்து அவனை சேனாதிபதியின் உதவியினால் தப்பப்பண்ணினான். உங்களுக்கு வரக்கூடிய பாடுகளையும் பிரச்சனைகளையும் குறித்து கவலைப்படாதிருங்கள். நீதியினிமித்தமாக வரும் பாடுகள் உங்களை பாக்கியவான்கள் பட்டியலில் சேர்க்கும் அதற்காக கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள்.

### கேள்வி நேரம்

**ஆண்டவர் நிமித்தம் வரும் பாடுகளினாலே நமக்கு ஆறுதல் உண்டா?**

உண்டு. "எப்படியெனில், கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்களிடத்தில் பெருகிறதுபோல, கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகிறது" என்கிறார் பவுல் (2கொ.1:5). பாடுகள் இல்லையென்றால் பரலோகம் இல்லை என்றே சொல்லுவேன். பாடுகள் வந்தாலே அவன் கிறிஸ்தவன். அப்பொழுது அவனுக்கு ஆறுதல் கிடைக்கும். வெயிலின் கொடுமை நிழலில் தெரியும். பாடுகளில் இருக்கும் கஷ்டம் பின்பு சந்தோஷத்தையும் சமாதானத்தையும் நமக்குக்

கொண்டுவரும். கொஞ்காலம் பலவிதமான பிரச்சனைகளினாலே பாடுகளை அநுபவிக்கிறோம். இவைகள் தற்காலமாயிருக்கும். நிலையான ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள பாத்திரவான்களுக்கு இது பெரியவைகள் அல்ல.

நம்முடைய முற்பிதாக்களை பாருங்கள். அவர்களோடு இருந்து அவர்களை வழிநடத்திக்கொண்டுவந்த கர்த்தர் நம்மோடும் சதா காலமும் இருப்பதாக சொல்லியிருக்கிறார். ஆகையால் உங்களுக்கு வரும் பாடுகளில் சந்தோஷம் கொள்ளுங்கள். அப்பொழுது நீங்கள் பாக்கியவான்களாயிருப்பீர்கள். ஆகையினாலே அவ்விதமான பாடுகள் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது என்பதை நினைவுகூருங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 40. இயேசு கிறிஸ்து
## Jesus Christ

இயேசு கிறிஸ்துவைப்பற்றி நீங்கள் அறிந்து கொண்ட உண்மைகள் என்ன? வேதம் சொல்லுகிறது; "அவர் ஒருவரே வானங்களை விரித்து சமுத்திர அலைகளின்மேல் நடக்கிறவர்" (யோபு 9:8). மனிதன் ஒரு போர்வையை விரிக்க முடியும். வானலாவில் ஒரு கட்டிடத்தைக் கட்ட முடியும். ஆனால் எவ்வளவு பெரிய விஞ்ஞானியாக இருந்தாலும் அவர்களால் வானத்தை விரிக்க முடியாது. அதைப்போல சமுத்திர அலைகளின்மேல் சருக்கு பலகைகளை வைத்து அலைகளுக்கு ஏற்றார்போல சருக்க முடியும். ஆனால் அவைகள் இல்லாமல் ஒரு மனிதனாலும் அலைகளின்மேல் நடக்க முடியாது. இவை இரண்டையும் செய்ய வல்லவர் ஆண்டவர் இயேசு ஒருவரே.

அவர் உன்னதத்தில் மேலானவர். அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும். ஒருமுறை தம்முடைய சீஷர்களை படவில் அனுப்பிவிட்டு அவர் "இரவின் நாலாம் ஜாமத்திலே, இயேசு கடலின்மேல் நடந்து, அவர்களிடத்திற்கு வந்தார்" (மத்.14:25). இதைப் பார்த்த சீஷர்கள் ஆவேசம் அடைந்து பயப்பட்டனர். இதுவரை கண்டிராத அந்த காட்சியைப் பார்த்து ஆச்சரியப்பட்டனர். கடலையும் காற்றையும் உண்டாக்கியவர் சொல்படி அவைகள் கீழ்ப்படியும். அவர் தரையில் நடந்துவருவதுபோல கடல் அலைகளின்மேல் நடந்து அவர்களிடம்



வந்தார். அது நாலாம் ஜாமமாகவும் இருந்தது. இரவிலே தண்ணீரைக்கண்டாலே அநேகருக்கு பயமாக இருக்கும் அப்படிப்பட்ட வேளையில் இயேசு நடந்து வந்தார்.

மேலும் அவரைப்பற்றி படிக்கும்போது; "ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணிமுடியாது அதிசயங்களையும் அவர் செய்கிறார்" (யோபு 9:10). ஆம், இயேசுவின் அடையாளங்களும் அற்புதங்களும் எண்ணிமுடியாதவைகள். அத்தனை அற்புதங்களை இயேசு எருசலேமைச்சுற்றியுள்ள பட்டணங்களில் செய்தார். யோவான் சொல்லும்போது; "இயேசு செய்த வேறு அநேக காரியங்களுமுண்டு; அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன் என்கிறார்" ஆமென் (யோவா.21:25).

ஆண்டவர் இயேசு கிறிஸ்து செய்த அற்புதம். இதுவரை யாரும் செய்திராத காரியங்களைச் செய்தார். அந்த அற்புதங்களைப் பார்த்த ஜனங்கள் உலகம் தோன்றினது முதல் இதுவரை இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறவில்லை என்று ஆச்சரியத்துடன் அவருடைய அற்புதத்தை கண்டார்கள். இன்றைக்கும் அற்புதம் செய்கிறோம் என்று இயேசுவின் நாமத்தைக்கொண்டு பொய் சொல்லுகிற ஒரு கூட்டத்தைக் காணமுடிகிறது. அற்புதத்தை இயேசு எதற்காக செய்தார்? தாம் தேவனிடத்திலிருந்து வந்தவர் என்பதை நிரூபிக்கவும், வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் அவருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை ஜனங்கள் அறிந்து கொள்ளவும், பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரமுண்டு என்பதை அவர்கள் அறிந்து கொள்ளவும் இப்படிப்பட்ட அற்புதங்களை அவர் ஜனங்கள் மத்தியில் செய்தார். இன்று அற்புதம் செய்கிறோம் என்று பொய் சொல்லுகிறவர்கள் எதற்காக செய்கிறார்கள்?

கர்த்தர் ஒவ்வொருவரையும் அவருடைய வசனங்களை உலகமெங்கும் எடுத்துச் சொல்லும்படியாக சொல்லியிருக்கிறார். நம்மால் முடிந்த காரியத்தை அவர் நமக்குச் செய்யசொல்லியிருக்கும்போது; என்னிலும் மேலானவைகளைச் செய்வார்கள் என்ற வசனத்தை பிடித்துக்கொண்டு நாங்கள் இதைச் செய்கிறோம் அதைச்செய்கிறோம்

என்று சொல்லுகிறார்கள் ஆனால் ஒன்றும் நடந்ததாக தெரியவில்லை. அப்படி நடந்திருக்குமென்றால் நாம் செய்திதாள்களில் வாசித்திருப்போம் உலகமே அதை அறிந்திருக்கும். இயேசு செய்த அற்புதங்கள் ஒரு மூலையில் நடைபெற்றாலும் அவை உலகஅளவில் பிரசித்தமாயிற்று என்பதை நாம் அறிகிறோம்.

மேலும், ''தமது முதற்பேறானவரை உலகத்தில் பிரவேசிக்கச் செய்தபோது; தேவதூதர்கள் யாவரும் அவரைத் தொழுது கொள்ளக்கடவர்கள் என்றார்'' (எபி.1:6). உலகம் தோன்றினதுமுதல் ஒருவருக்கும் தேவன் கொடுக்காத ஒரு காரியத்தை அவருடைய குமாரனாகிய இயேசுவுக்கு கொடுத்தார். அது என்னவென்றால்; அவர் உலகத்தில் பிறந்தபோது; தேவதூதர்கள் யாவரும் அவரைத் தொழுது கொள்ளக்கடவர்கள் என்ற கட்டளையை பிறப்பித்தார்.

தேவனுடைய சமுகத்தில் உள்ள தேவதூதர்களின் எண்ணிக்கை எவ்வளவு? யாருக்காவது தெரியுமா? எவரும் அறியார்கள். அத்தனை தேவதூதர்களையும் நோக்கி அவரைத்தொழுதுகொள்ளவேண்டும் என்றார். இது எதைக் காட்டுகிறது. அவருக்கு சகல அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை காட்டுகிறது. தேவதூதர்களுக்கும் மேலாக ஆண்டவர் இயேசுவை உயர்த்தினார். தீர்க்கதரிசிகள் தேவதூதர்களுக்கும் கீழாக இருந்தார்கள். ஆகையாலே பிலேயாமைப் பார்த்து கழுதை விலகாதிருந்தால் உன்னை கொன்று போட்டிருப்பேன் என தேவதூதன் பிலேயாமைப்பார்த்து சொன்னான். ஆனால் இங்கே தேவதூதர்கள் யாவரும் அவரைத்தொழுதுகொள்ள வேண்டும் என்ற கட்டளையை பிதாவிடம் பெற்றனர்.

ஆகையால் ஆண்டவர் இயேசுவின் பிறப்பின்போது; தேவதூதர்கள் தோன்றி உன்னதத்திலே மகிமையும் பூமியிலே சமாதானமும் உண்டாவதாக என்று சொல்லி தேவனைத் துதித்தார்கள். தேவதூதர்கள் யாவரும் இயேசுவுக்கு கீழாக இருந்தார்கள். ஆகையால் அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி சொல்லும்போது; ''நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக்கொண்டால், அவர் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டா ரென்று நினைக்கிறாயா? என்றார்'' (மத்.26:53). ஒரு லேகியோன் என்பது ஆறாயிரம் காலாட்படைவீரர்களுக்குச் சமம். ஆக பன்னிரண்டு



லேகியோன் என்றால் எழுபத்திரண்டாயிரம் தூதர்களை தாம் வேண்டிக் கொண்டால் உதவிக்கு அனுப்புவார் என்று சொல்லுகிறார். இந்த இடத்தில் ஒரு வீரனுக்கு இருக்கவேண்டிய பலம் மட்டுமே தேவதூதனுக்கு இருக்குமா என்று எண்ணிவிடாதீர்கள். எண்ணிக்கைக்கு மட்டுமே இதைச் சொல்லுகிறேன். ஒரு தேவதூதன் ஒரு தேசத்தையே கலக்கமுடியும் அந்த அளவு வல்லமை பெற்றவனாயிருக்கிறான் என்பதை நீங்கள் அறியவேண்டும். தாவீதின் நாட்களில் அர்வனான் என்று சொல்லக்கூடிய ஒருவனுடைய களத்திற்கு நேரே தேவதூதன் நின்று ஜனங்களை சங்கரித்தான் அப்பொழுது ஜனங்களில் எழுதினாயிரம்பேர் செத்துப்போனார்கள்.

ஒரே ஒரு தேவதூதன் எத்தனைபேர்களை அழித்துப்போட்டான் என்று பார்த்தீர்களா? அப்படியானால் அந்த தேவதூதனுக்கு கொடுக்கப்பட்ட அதிகாரம் எத்தகையது. ஆண்டவர் இயேசு ஒரு முறை பிதாவைநோக்கி வேண்டிக்கொண்டால் எழுபத்திரண்டாயிரம் தேவதூதர்களை அனுப்பினால் இந்த உலகம் தாங்குமா என்பதை எண்ணிப்பாருங்கள். தேவன் உலகத்தை இரட்சிக்கும்படியாக இயேசுவை அனுப்பினார். ஆகையால் அவர் பிதாவை நோக்கி பன்னிரெண்டுக்கும் அதிகமான லேகியோன் அளவு தேவதூதர்களை அனுப்பும்படியாக வேண்டிக்கொள்ளாமல், தமக்கு விரோதமானவர் களை மன்னிக்கும்படியாக, சிலுவை வரை பிதாவை நோக்கி வேண்டிக்கொண்டு பன்னிரெண்டு சீடர்களை தெரிந்து கொண்டார்.

நம் ஆண்டவர் இயேசு ஒரு கன்னியின் வயிற்றில் உருவானவர். ''இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்'' (மத்.1:23). மோசேயின் நாட்களில் இதோ, இருக்கிறவராக இருக்கிறேன் என்றவர் உன்னை அனுப்பியதாக சொல் என்று சொல்லி மோசேயை இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியில் அனுப்பினார்.

இப்பொழுது அவர் என்றென்றும் நம்மோடிருக்கும் தேவனாயிருக்கிறார். இயேசுவின் பிறப்பு உலகத்திற்கு கிடைத்த மாபெரும் இரட்சிப்பின் செய்தி. ''ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு

ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகிய ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்'' (ஏசா.7:14). தேவன் தம்மை ஜனங்களுக்கு வெளிப்படுத்தும்போது ஒரு அற்புதத்தோடு தம்மை வெளிப்படுத்தியிருக்கிறார். தேவனால் தெரிந்துகொண்ட தாசர்கள் மூலமாகவும் அற்புதங்களை கொடுத்து அதன் மூலமாக தம்மை வெளிப்படுத்தியிருக்கிறதை நாம் வேதத்தில் படிக்கமுடிகிறது.

அதைப்போல இயேசுவை உலகிற்கு அனுப்பும்போது ஏதோ திடீரென்று அவர் தோன்றுவதை அவர் விரும்பாமல் உலகில் இதுவரை நடைபெறாத ஒரு செயல் மூலமாகவும் தாம் முன்னமே தீர்க்கதரிசிகளைக் கொண்டு உரைக்கப்பட்ட வாக்கின்படியும் கன்னி கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறும்படியாக மரியாளைத் தெரிந்துகொண்டார். அவள் இயேசுவை சுமக்கிற தாயானாள். இது அவளுக்கு கிடைத்த பாக்கியம்.

இயேசுவானவர் இப்படியாக உலகத்தில் பிரவேசித்தபடியாலும் அவர் நம்மோடிருக்கிறபடியாலும் இம்மானுவேல் என்றழைக்கப்பட்டார். அப்படியானால் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தம் என காண்கிறோம். இயேசுவானவர் இறுதியாக கட்டளைகளை தம்முடைய சீஷர்களுக்குக் கொடுக்கும்போதும் இதோ சதாகாலமும் உங்களோடிருக்கிறேன் என்றார். ஆம், அவருடைய நாத்தினாலே எங்கே இரண்டு மூன்று பேராவது கூடுகிறார்களோ அங்கே அவர்கள் மத்தியில் இருக்கிறார் என் அறிகிறோம்.

மேலும் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குக் கொடுத்தார். உலகமே அவருக்கு கீழ்ப்படியவேண்டும். ஏனெனில் அவர் உன்னதத்தின் ராஜா சர்வத்திற்கும் ராஜா என காண்கிறோம். ''இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்'' என பவுல் பிலிப்பியருக்கு எழுதின நிருபம் 2;10,11-வசனங்களில் வாசிக்கிறோம். நீங்கள் இந்த அதிகாரத்திற்கு கீழ்ப்பட்டவராயிருந்து முழுங்கால்படியிட்டு தேவனுக்கு மகிமையை



செலுத்துகிறீர்களா? இயேசுவை தேவனுடைய குமாரன் என்று உங்களுடைய வாயினாலே அறிக்கையிடுகிறீர்களா? என்னை அறிக்கையிடுகிறவனை நானும் என் பிதாவின் முன்பாக அறிக்கையிடுவேன் என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கவேண்டும். இது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அவரை எல்லா நாமத்திற்கும் மேலாக உயர்த்தியிருக்கிறார்.

ஆகையால் அவருடைய நாமத்தில் கூடுகிற சபையானது அவருடைய நாமத்தினாலே அழைக்கப்படுகிறது. கிறிஸ்துவின் சபையார் என்று அழைக்கப்படுகிறார்கள். நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? அப்படியானால் நீங்கள் தேவன் ஏற்படுத்திய மேலான நாமத்தை நீங்கள் அறிக்கையிடுகிறீர்களா? அல்லது ஒரு வகையில் பாரம்பரியத்தில் சிக்கிக்கொண்டேன் என்று சொல்லி மறுதலித்துக்கொண்டிருக்கிறீர்களா? தேவனுக்கு மகிமையாக வாழுங்கள்.

### கேள்வி நேரம்

**நாம் இரட்சிக்கப்பட இயேசுவை ஒவ்வொருவரும் அறிக்கையிட வேண்டுமா?**

ஆம், இரட்சிப்பு என்பது தேவனுடைய ஈவு. அது நம்மால் உண்டாவதல்ல. ஆனால் நாம் செய்யவேண்டிய காரியம் ஒன்று இருக்கிறது; ''என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப் படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்'' என்பதுவே (ரோம.10:9,10). இந்த அறிக்கையை செய்தவர்கள் கர்த்தருடைய சபையில் சேர்க்கப்படுகிறார்கள்.

கர்த்தரும் இரட்சிக்கப்படுகிறவர்களை சபையிலே சேர்த்துக் கொண்டுவருகிறார் என்பதை அப்.2:47-ம் வசனத்தின் மூலமாக அறிகிறோம். பிலிப்பு மந்திரி சம்பவத்தில் இருவரும் இரத்தைவிட்டு இறங்கி தண்ணீரில் இறங்கினார்கள் பிலிப்பு மந்திரிக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். அவன் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பு இயேசுவை

தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று விசுவாசித்து அறிக்கையிட்டு பின்பு பிலிப்புவினால் ஞானஸ்நானம் பெற்றான். இதையே பவுல் ரோமருக்கு எழுதிய புத்தகத்தில் குறிப்பிடுகிறார். ''நீதியுண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்'' என்று, நீங்கள் இயேசுவை அறிக்கையிட்டு ஞானஸ்நானம் அவருடைய சத்தியத்தின்படி அதாவது வேதவசனத்தின்படி எடுத்திருக்கிறீர்களா? அப்படியில்லாவிடில் உடனே சத்தியத்திற்கு செவிகொடுங்கள். நாங்கள் இவ்விஷயத்தில் உங்களுக்கு உதவி செய்ய காத்திருக்கிறோம். எங்களுக்கு உடனே தெரியப் படுத்துங்கள். நாங்கள் உங்களுக்கு ஞானஸ்நானத்தில் உதவி செய்கிறோம். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 41. ஞானம் மற்றும் புத்தி
## Wisdom and Understanding

**ஞா**னம் மற்றும் புத்தி இவ்வுலகில் வாழ்வதற்கு மிகவும் அவசியம். இவைகள் இல்லாமல் வாழ முடியுமா என்றால் முடியும். ஆனால் புத்தியற்ற மிருகத்தைப்போல வாழ முடியும். ஞானமுள்ள மனிதனாக அல்ல. ஆக, நம்முடைய வாழ்விற்கு மிகவும் அவசியம் இந்த இரண்டுமே என பார்க்கிறோம். வேதம் சொல்லுகிறது; ''ஞானத்தைக் கண்டடைகிற மனுஷனும், புத்தியைச் சம்பாதிக்கிற மனுஷனும் பாக்கியவான்கள்'' என்று (நீதி.3;13). இன்றைக்கு இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற நீங்கள் எவைகளைச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறீர்கள்? அநேகர் உலகத்தையும் உலகப்பொருட்களையும் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிச் சம்பாதிக்காத ஒருவனைப் பார்த்து உலகத்தைச் சம்பாதிக்கிறவன் ஏன் இப்படியிருக்கிறாய் இப்படியே இருந்துவிட்டால் நாளைக்கு உனக்கும் உன்னுடைய பிள்ளைகளுக்கும் என்னசெய்வாய்?

அவனைப் பார் நேற்று வந்தவன் இன்று அவன் பல லட்சரூபாய்க்கு அதிபதியாக இருக்கிறான். நீ ஒன்றும் சம்பாத்தியம் பண்ணாமல் சும்ம இருக்கின்றாயே என கேள்வி கேட்பான். உலகம் உலகத்தை சிநேகிக்கிறது, உலகத்தை சம்பாதிக்கவும் பண்ணுகிறது. ஆனால் நாம் சம்பாதிக்கவேண்டிய ஒன்றைக்குறித்து பரிசுத்த வேதம் நமக்கு போதிக்கிறது. அதை நீ சம்பாதிக்கும்படியாக முயற்சி பண்ணு.



''கர்த்தர் ஞானத்தினாலே பூமியை அஸ்திபாரப்படுத்தி புத்தியினாலே வானங்களை ஸ்தாபித்தார்'' என நீதி.3:19-ம் வசனத்தில் நாம் படிக்கிறோம். சர்வத்தையும் உண்டாக்கின கர்த்தர் தம்முடைய ஞானத்தினாலே பூமியை அஸ்திபாரப்படுத்தியுள்ளார். அவருடைய அநந்த ஞானம் எவ்வளவு பெரியது என்று பாருங்கள். ஒரு வேலையைச் செய்வதற்கு ஞானம் மிகவும் அவசியம்.

அந்த வேலையைச் செய்வதற்கு முன் பலர் பலவிதமாக சொல்லலாம். ஆனால் அதை செய்வதற்கு மிக சிறிய ஞானமான காரியம் தேவை அதை கண்டுபிடித்தோமானால் மிகவும் இலகுவாக அதை முடித்துவிடலாம். ஒரு பெரிய கல்லைப்புரட்டுவதற்கு அநேகர் தேவையில்லை. அதன் அடியில் ஒரு சிறு கல்லைவைத்து அதை புரட்டிவிடலாம். அதைப்போல எல்லாவற்றிற்கும் ஞானம் மிகவும் அவசியமாக இருக்கிறது. அதைப்போலவே புத்தியும் இருக்கிறது. ஒரு காரியத்தை செய்ய புத்தியும் அவசியமான ஒன்று. கர்த்தர் புத்தியினாலே வானங்களை ஸ்தாபித்தார் என காண்கிறோம்.

நாம் பார்க்கிற வானம் எட்டா உயரமாயிருக்கிறது. இதை அவர் தம்முடைய புத்தியினாலே செய்தார். ஒரு மாணவன் ஒரு பேப்பரில் ஒரு கோடு போட்டு மற்ற மாணவனைப் பார்த்து இந்த கோட்டை தொடாமல் பெரிய கோடு போடவேண்டும் என்றான். அந்த மாணவனுக்கு அது கடினமாக இருந்தது. புத்தியுள்ள ஒரு மாணவன் வந்து இது என்ன பெரிய விஷயமா என்று அந்த பேப்பரை வாங்கி அவன்போட்ட கோட்டிற்கு பக்கத்தில் ஒரு பெரிய கோடுபோட்டான். அவனுடைய புத்தியை அந்த மாணவன் பாராட்டினான். சிறு சிறு விஷயங்கள் ஆனால் அதில் புத்தியாய் செயல்படவேண்டிய காரியங்கள் நிறையவுண்டு.

நம்மை உண்டாக்கின சிருஷ்டிகர் வானத்தை அந்தவிதமாக புத்தியாக ஸ்தாபித்தார் என திருமறை நமக்குப்போதிக்கிறது. ஞானி சாலொமோன் சொல்லுகிறார்; இவைகள் ''முத்துக்களைப்பார்க்கிலும் அது விலையேறப்பெற்றது; நீ இச்சிக்கத்தக்கதொன்றும் அதற்கு நிகரல்ல'' (நீதி.3:15). இவைகளை நாம் விலைகொடுத்து வாங்கிவிடமுடியாது. நம்முடைய ஜீவியத்தில் நாம் வளர்த்துக்கொள்ளவேண்டிய ஒன்று. இதற்கு நிகராக நாம் எதையும் சொல்லிவிடமுடியாது. ஆகையால்

என்னத்தை சம்பாதித்தாலும் இவைகளை முதலாவது சம்பாதித்துக் கொள்.

"சாலொமோனின் இருதயத்திலே தேவன் அருளிய ஞானத்தைக் கேட்கிறதற்காக, சகல தேசத்தாரும் அவன் முகதரிசனத்தைத் தேடினார்கள்" (1இரா.10:24). அநேக இராஜாக்களுக்கு இல்லாத ஒரு பெரிய ஆசீர்வாதத்தை தேவன் சாலொமோனுக்குக் கொடுத்திருந்தார். அவன் வேண்டிக்கொள்ளும்போது பொன்னையும், பொருளையும், கேட்காமல் தேவன் தனக்கு கொடுத்த ஜனத்தை வழிநடத்தக்கூடிய ஞானத்தைக் கேட்டான். ஆகையால் அவனுக்கு அவனுடைய விருப்பத்தின்படியான ஞானத்தையும் அவன் கேட்காத பொன்னையும் பொருளையும் கொடுத்தார். அவனுடைய ஞானத்தைக் கேட்பதற்கு சுற்றியுள்ள நாட்டின் ராஜாக்களும், ராணிகளும் வந்தார்கள். வந்த அவனை சோதித்துப்பார்த்து அவர்கள் கேள்விப்பட்டதற்கும் அதிகமாக அவனிடத்தில் அதைக் கண்டார்கள். தேவன் அவனுக்கு கொடுத்த ஞானத்தைப் பார்த்தீர்களா?

அன்பானவர்களே, உலகத்திலே சம்பாதிக்கவேண்டிய இந்த ஞாத்தைப் பற்றியும் புத்தியைப் பற்றியும் வேதம் பேசுகிறது. இவைகளுக்கு செவிகொடுத்து நீங்கள் சம்பாதிக்கவேண்டிய அழிவில்லா சொத்தாகிய இந்த ஞானத்தையும் புத்தியையும் தேவனுடைய சமுகத்தில் பெற்றுக்கொள்ளுங்கள். "அதின் வலதுகையில் தீர்க்காயுசும், அதின் இடதுகையில் செல்வமும் கனமும் இருக்கிறது" (நீதி.3:16). இந்த இரண்டையும் ஒரு மனிதன் பெற்றுக்கொள்ளும்போது அவனுடைய வலதுகையில் தீர்க்காயுசும் அவனுடைய இடது கையில் செல்வமும் கனமும் இருக்கும். இவைகளை சாலொமோன் பெற்று அநுபவித்தான். கர்த்தருடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும் இந்த ஆசீர்வாதத்திற்கு பங்குள்ளவர்களாயிருக்கிறார்கள்.

சம்பாதிக்கிற பொருள், பணம் ஒன்றும் எங்களிடம் தங்குவதில்லை என்று அநேகர் வேதனைகொள்ளுகின்றனர். அதற்கான காரணத்தை அவர்கள் சிந்திப்பதில்லை. ஞானமில்லாமலும், புத்தியில்லாமலும் ஒரு காரியத்தைச் செய்யும்போது அதனுடைய வருமானம் அங்கே தங்குவதில்லை. அது பொத்தலான பைவழியாக சென்று கொண்டிருக்கும். ஞானவான் அதைக் கண்டுகொள்ளுவான்.



பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ் அரசாண்ட வருஷங்களில் தானியேல் ஒரு சொப்பனங்கண்டான். அப்பொழுது அவனுக்கு பயம் உண்டாயிற்று. அப்பொழுது மிகாவேல் தேவதூதன் "தானியேலே, பயப்படாதே; நீ அறிவை அடைகிறதற்கும், உன்னை உன்னுடைய தேவனுக்கு முன்பாகச் சிறுமைப்படுத்துகிறதற்கும், உன் மனதைச் செலுத்தின முதல்நாள் துவக்கி உன் வார்த்தைகள் கேட்கப்பட்டது; உன் வார்த்தைகளினிமித்தம் நான் வந்தேன்" என்றான் (தானி.10:12). இங்கே தேவதூதன் தானியேலுடைய மனதைப் பார்த்தார்: அறிவை அடைகிறதற்கும், தேவனுக்கு முன்பாகச் சிறுமைப்படுத்துகிறதற்கும் தானியேல் தன் மனதைச் செலுத்தின முதல்நாள் துவக்கி அவனுடைய வார்த்தைகள் தேவசமுகத்தில் கேட்கப்பட்டது.

என் ஜெபம் கேட்கப்படவில்லையே என நொந்துகொள்ளுகிற அநேகரை நாம் பார்க்கிறோம். நீங்கள் தேவனை அறியும் அறிவைப் பற்றிக்கொண்டிருக்கிறீர்களா? தேவனுக்கு முன்பாகச் சிறுமைப்படும்படி உங்களை தாழ்த்தி ஒப்புக்கொடுத்திருக்கிறீர்களா? அல்லது பரிசேயனைப்போல உங்களை தாழ்த்தாமல் மற்றவர்களை குறைசொல்லிக்கொண்டு நான் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுக்கிறேன் என்று உங்களை நீங்களே மெச்சிக் கொண்டிருக்கிறீர்களா? அன்பானவர்களே, உங்களுடைய ஜெபம் கேட்கப்படவும், நீங்கள் தேவனுடைய ஞானத்தையும் புத்தியையும் பெற்றுக்கொள்ள உங்களை தாழ்த்துங்கள் அப்பொழுது உயர்த்தப் படுவீர்கள்.

"ஞானத்தை வா என்று கூப்பிட்டு, புத்தியைச் சத்தமிட்டு அழைத்து, அதை வெள்ளியைப்போல நாடி, புதையல்களைத் தேடுகிறதுபோல் தேடுவாயாகில், அப்பொழுது கர்த்தருக்குப் பயப்படுதல் இன்னதென்று நீ உணர்ந்து, தேவனை அறியும் அறிவைக் கண்டடைவாய்" என நீதி.2:3- 5 வசனங்களில் படிக்கிறோம். ஞானத்தை நாடாத ஒருவனுக்கு ஞானம் எப்படி கிடைக்கும். புத்தியை அழைக்காதவனுக்கு அது எட்டாகனியாகிவிடும். இவைகளை வெள்ளியைப்போல நாடி புதையல்களைத் தேடுகிறதுபோல தேடு என பார்க்கிறோம். வீட்டிற்குள் புதையல் இருக்கிறது. உங்களுடைய முதாதையார் வைத்த அந்த புதையல் நுறு வருடங்களுக்கு முந்தையது. அவர்கள் உங்களிடம்

சொல்லாமல் இறந்துவிட்டார்கள் என்று ஒருவன் மூலமாக உங்களுக்கு செய்தி வந்தால் அந்த புதையலைக்குறித்து நீங்கள் என்ன நினைப்பீர்கள். அதை என்னுடைய பேரன் வந்து எடுத்துக்கொள்ளட்டும் என்று மெத்தனமாக இருப்பீர்களா? அதை இன்று இரவே தோண்ட வேண்டும் அதில் என்ன புதையல் இருக்கிறது என்பதை கண்டுகொள்ளவேண்டும் என்று முயற்சிப்பீர்கள் அல்லவா! அதைப்போல ஞானத்தையும் புத்தியையும் தேடுவாயாகில் அதைக் கண்டடைவாய். அத்தோடு கர்த்தருக்குப் பயப்படும் பயம் இன்னதென்பதை நீ உணர்ந்து கொள்ளுவாய் என வேதம் போதிக்கிறது.

எனக்கு புதையலும் வேண்டாம், அந்த பொருளும் வேண்டாம் என்று சொல்லுகிற மூடன், பின்பு அந்த புதையலுக்காக முயற்சித்து தன்னைக் காயப்படுத்திக்கொள்ளுவான். இது அவனுடைய சோம்பேறித்தனத்தையும், ஞானமற்ற செயலைக்காட்டுகிறது. நீங்கள் இவ்விரண்டையும் சம்பாதிக்க அதை வா என்று கூப்பிட்டு, சத்தமிட்டு அழையுங்கள் நலமானதைக் கண்டடைவீர்கள்.

"கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்" (நீதி.2:6). தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு அழியாத ஞானத்தையும் புத்தியையும் கொடுத்து அவர்களை வழிநடத்துகிறார். பெற்றோர்கள் அநேக பிள்ளைகளை சோம்பேறிகளாக மாற்றுகிறார்கள். ஒரு நல்ல தகப்பன் தன்னுடைய பிள்ளைகளுக்கு ஞானத்தைக் கற்றுக்கொடுக்கிறான்.

அழியாத கல்வி செல்வத்தைக் கொடுக்கிறான். ஞானத்தையும் புத்தியையும் பெற்றுக்கொள்ளாத தகப்பன் அதைக் குறித்த அறிவு இல்லாமையால் தன்னுடைய பிள்ளைகளுக்கு இவைகளுக்கு அப்பாற்பட்ட சொத்துக்களை சேர்த்துவைக்கிறான். அவைகளை அவர்களால் பராமரிக்க முடியாமல் வேறொருவன் அவைகளை ஆட்கொள்ளுகிறான்.

இன்றைய உலகத்தில் நாம் இவைகளை பார்க்க முடிகிறது. ஆகையால் தம்மை நேசிக்கிறவர்களுக்கும் தம்மைத் தேடுகிறவர்களுக்கும் கர்த்தர் ஞானத்தை தருகிறார். அவர் வாயின்று அறிவும் புத்தியும் வருகிறது. இவைகளைப் பெற்றுக்கொள்ள ஒவ்வொரு



நாளும் ஆயத்தமாக இருங்கள். இவைகளை தேவனுடைய சமுகத்தில் கேட்டுப்பெற்றுக்கொண்ட சாலொமோன் அவனுடைய ராஜ்யபாரம் ஆசீர்வதிக்கப்பட்டது. அநேக நாட்களாக எருசலேமில் அரசாண்டான். அவனுடைய கீர்த்தி அண்டை நாடுகளுக்கும் பரவியது.

ஒரு காரியத்தை சிறப்பாக செய்வதற்கு ஞானமே பிரதாணமாக இருக்கிறது இந்த ஞானத்தை உங்களுடைய பிள்ளைகளும் பெற்றுக்கொள்ள அவர்களை தேவனுடைய சமுகத்திற்கு நேராக வழிநடத்துங்கள். வானத்திற்கு ஏறி சந்திரனில் கால்வைத்தவர்கள் சாதனை படைத்தவர்கள். அதைப்போல உங்களுடைய பிள்ளைகள் ஞானமாய் நடந்துகொள்ளுவதால் பெற்றோர்களாகிய உங்களுக்கு அது கிரீடமாக இருக்கும்.

பிள்ளைகள் மூலமாக வருகிற நன்மதிப்பு உங்களை உயர்த்தும். ஆகையால் உங்களுடைய சம்பாத்தியம் ஞானம் மற்றும் புத்தியாக இருக்கட்டும். அதைப்போல உங்களுடைய பிள்ளைகளுடைய சம்பாத்தியமும் இதுவாகவே இருக்கட்டும். மற்றவைகள் உலகத்தோடு அழிந்துபோகக்கூடியவைகள். ஞானமும் புத்தியுமே உங்களை பாதுகாக்கும்.

## கேள்வி நேரம்

### இவைகளை விட்டு விலகாமல் இருக்கவேண்டுமா?

நாம் உலகத்தில் சம்பாதிக்கவேண்டியவை இந்த ஞானம் மற்றும் புத்தி. இவைகளை சம்பாதித்துவிட்டோம் என்று சொல்லிவிட்டு ஞானமாக நடந்துகொள்ளாவிட்டால் இவைகளை இழக்க நேரிடும். "ஞானத்தை சம்பாதி, புத்தியையும் சம்பாதி; என் வாயின் வார்த்தைகளை மறவாமலும் விட்டு விலகாமலும் இரு" என நீதி.4:5-ல் வாசிக்கிறோம். கற்றுக்கொண்ட காரியத்தில் நிலைத்திருக்கவேண்டும். அப்பொழுதே அந்த காரியங்கள் நமக்கு உதவியாயிருக்கும்.

கர்த்தருடைய வார்த்தைகள் நாம் மரணபரியந்தமும் கைக்கொள்ள வேண்டிய ஒன்று. இன்று இருந்த நாளைக்கு ஒழிந்துபோகும் புல்லின் பூவைப்போல நம்முடைய விசுவாசமும் நம்பிக்கையும் இருக்கக்கூடாது. கர்த்தருடைய வார்த்தைகளை ஒவ்வொருநாளும் மறவாமல்

அவைகளை நம்முடைய ஜீவியத்தில் கைக்கொள்ளவேண்டியவர்களாயிருக்கிறோம். அவைகளை ஒருநாளும் விட்டுவிடாதிருக்க போதிக்கப்படுகிறோம். நம்முடைய முற்பிதாக்கள் கர்த்தரை மறந்தார்கள், அவருடைய கற்பனைகளை விட்டு விட்டார்கள். ஆகையால் அவர்கள் மேல் தேவனுடைய கோபம் இருந்தது. நாமும் அவ்விதமாக கோபத்திற்கு ஆளாகாமலிருக்க கர்த்தருடைய வார்த்தைகளை மறவாமலும் அதை விட்டு விலகாமலும் இருப்போம். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 42. உபத்திரவத்திலே மேன்மை பாராட்டுகிறோம்

## We Also Glory In Tribulation

**உ**லகத்தில் யாரும் உபத்திரவத்தை விரும்ப மாட்டார்கள். உலகத்தில் இருக்கும் வரை நன்றாக சந்தோஷமாக இருக்கவே விரும்புவார்கள். ஆனால் அப்போஸ்தலனாகிய பவுல் “உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும், உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம்” (ரோம.5:3,4). ஆம், உபத்திரவம் பொறுமையை உண்டாக்குகிறது.

சிலவேளைகளில் நமக்கு வரக்கூடிய கஷ்டங்களால் நாம் செய்யவேண்டியவற்றை செய்யமுடியாமற்போகிறது ஆகையால் நாட்கள் தள்ளிப்போகிறது. இது ஒருவேளை நமக்கு பொறுமையை உண்டாக்குகிறதல்லவா. அந்த உபத்திரவத்தை அதாவது கஷ்டத்தை நாம் அனுபவியாதிருந்திருப்போமானால் இன்றைக்கு இருக்கிறபடி இருந்திருக்க மாட்டோம் என்று நினைப்போம் அல்லவா? எனவே நமக்கு வரக்கூடிய உபத்திரவம் பொறுமையை கொண்டுவருகிறது. ஆகையால் கர்த்தருக்கு நன்றிசொல்லுங்கள்.

“நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; ஜெபத்திலே உறுதியாய்த்தரித்திருங்கள்” என ரோம.12:12-ல் வாசிக்கிறோம். நம்பிக்கையிலே சந்தோஷமாயிருப்பதைப்போல உபத்திரவ காலத்தில் பொறுமையாயிருக்க கற்றுக்கொள்ளவேண்டும். எல்லாவற்றிக்கும் மேலாக ஜெபத்திலே உறுதியுடனிருந்து ஜெபிக்கவேண்டும். ஆண்டவர் சொல்லும்போது; “என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும்பொருட்டு



இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்” (யோவா.16:33). உலகத்தில் இருக்கும்வரை ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் உபத்திரவம் உண்டு. எனவே சோர்ந்துபோகாது உலகத்தையும் அதிலுள்ள பிசாசையும் ஜெயித்த ஆண்டவரை நோக்கி பாருங்கள்.

அவரை நோக்கிப்பார்த்து திடன்கொள்ளுங்கள். அவர் சதா காலமும் உங்களோடு இருக்கிறார். அவருடைய வல்லமையுள்ள வசனத்தினால் நீங்களும் உங்களுக்கு உபத்திரவத்தைக் கொடுக்கும் பிசாசை ஜெயிக்க முடியும். சிலவேளைகளில் பிசாசு கொண்டுவரும் உபத்திரவத்தை தேவன் அனுமதிக்கும்போது சோர்ந்துபோகாதிருங்கள். தேவன் நம்முடைய ஜீவியத்தில் ஒரு காரியத்தை அநுமதிப்பாரானால் அது நம்முடைய நன்மைக்காக இருக்கும். சங்கீதக்காரன் சொல்லுகிறான்; “நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது; அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்ளுகிறேன்” என்கிறான் (சங்.119:71). நீங்கள் இந்தவிதமாக சொல்லுவீர்களா? உபத்திரவம் நமக்கு பலநன்மைகளைக் கொண்டுவரும்.

நாம் உபத்திரவப்படாமலிருந்தால் அதனுடைய கஷ்டத்தையும், அதினால் வரக்கூடிய காரியங்களையும் மேற்கொள்ள அறியாது போய்விடுவோம். பொதுவாக நன்றாக இருக்கும்போது தேவனை தேடாமற்போய்விடுவார்கள். ஆனால் கஷ்டமான நேரத்தில் கர்த்தரை தேடுவார்கள். உபத்திவப்படும்போது வேதாகமத்தை வாசித்து அதினால் ஆறுதல் அடையும்படியாக முயற்சிப்பார்கள். சங்கீதக்காரனும் உபத்திரவப்பட்டதினால் கர்த்தருடைய பிரமாணங்களைக் கற்றுக் கொண்டிருக்கிறார். நாமும் உபத்திரவத்தில் பொறுமையாயிருந்து ஆண்டவருடைய பிரமாணங்களைக் கற்றுக்கொள்ளுவோம்.

இரண்டாவது பொறுமை பரீட்சையை உண்டாக்குகிறது என பார்க்கிறோம். யாக்கோபு சொல்லுகிறார்; “உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்” (யாக்.1:3). உபத்திரவம் எப்படி நம்முடைய வாழ்க்கையில் பொறுமையை உண்டாக்குகிறதோ, அதைப்போல விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை

உண்டாக்குகிறது. நம்முடைய முற்பிதாக்கள் விசுவாச விஷயத்தில் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டார்கள். அதினால் பொறுமையை கற்றுக் கொண்டார்கள். ஐயோ என்னுடைய விசுவாசம் சோதிக்கப்படுகிறதே என்று நாம் ஐயப்படவேண்டிய அவசியமில்லை. நாம் நூறு சதவீதம் விசுவாசமுள்ளவர்களாயிருக்கும்போது எப்படிப்பட்ட பரீட்சை வந்தால் என்ன அதை மேற்கொள்ள சந்தோஷமாக அவைகளை வரவேற்க வேண்டும். ஆபிரகாமின் விசுவாசம் பரீட்சிக்கப்படும்போது அவன் சற்றும்யோசிக்கவில்லை. தன்னுடைய ஒரேபேறான குமாரனை பலியிடும்படியாக அவனை அழைத்துச்சென்றான். அவனுடைய விசுவாசத்தைக் கர்த்தர் பார்த்தார்.

"ஆகையால், என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும் கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள்" (யாக்.1:19). மேலும் "என் சகோதரரே, கர்த்தருடைய நாமத்தினாலே பேசின தீர்க்கதரிசிகளைத் துன்பப்படுதலுக்கும் நீடிய பொறுமைக்கும் திருஷ்டாந்தமாக வைத்துக் கொள்ளுங்கள். இதோ, பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான் களென்கிறோமே! யோபின் பொறுமையைக்குறித்துக் கேள்விப் பட்டிருக்கிறீர்கள்; கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள்; கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுமுள்ள வராயிருக்கிறாரே" (யாக்.5:10,11).

பொறுமை பரீட்சையை உண்டாக்குகிறது. யோபுடைய வாழ்க்கையில் அவனுக்கு வந்த பரீட்சையில் அவன் வெற்றியடைந்தான். அவனுடைய சகோதரர்கள் அவனை குறித்து அவதூறாக பேசினார்கள். அவனுடைய மனைவி இன்னும் நீர் உம்முடைய உத்தமத்தில் உறுதியுடனிருக்கிறீரா தேவனை தூஷித்து ஜீவனை விடும் என்றாள். அவனுக்கு நெருக்கமானவனர்கள் அவனுடைய விசுவாசத்தை பரீட்சிக்கும்படியாக செய்தபோதும் அவன் தேவனை தூஷிக்கவுமில்லை, அவரைப் பற்றி குறைசொல்லவுமில்லை. தன்னுடைய நம்பிக்கையில் அசையாது இருந்தான்.

இன்றைக்கு நமக்கு வரக்கூடிய கஷ்டங்கள் பெரியது என்றோ அல்லது நமக்கு வரக்கூடிய பரீட்சை பெரியது என்றோ நாம் எண்ணுவோமானால் நம்மைக்காட்டிலும் அதிகமானவைகளை



அனுபவித்த அவர்களை நாம் துன்பப்படுதலுக்கும் நீடிய பொறுமைக்கும் திருஷ்டாந்தமாக வைக்கவேண்டும். அப்பொழுதே நமக்கு வரக்கூடிய துன்பங்களை நாம் மேற்கொள்ள முடியும். அதற்காகவே தேவன் நமக்கு நம்முடைய முற்பிதாக்களின் வாழ்க்கையின் வரலாறு அடங்கிய பரிசுத்த வேதாகமத்தை நமக்கு கொடுத்திருக்கிறார். வேதமே வெளிச்சம் போதகசிட்சையே ஜீவ ஊற்று எனக்காண்கிறோம். ஆகையால் வேதாகமத்தை வாசித்து அதன்படி உங்களை மாற்றியமைத்துக் கொள்ளுங்கள்.

மூன்றாது பரீட்சை நம்பிக்கையை உண்டாக்குகின்றது. ஆம் நாம் பரீட்சை எழுதியிருந்தால் பாஸ் ஆவோம் என நம்பிக்கை கொள்ளுகிறோம். பரீட்சையே எழுதாத ஒருநபர் பாஸ் ஆவது கூடாத காரியம். நமக்கு வரக்கூடிய பரீட்சை நம்முடைய வாழ்க்கையில் நம்பிக்கையை ஏற்படுத்தும். ஆகையால் அவைகளை சந்தோஷமாக ஏற்கவேண்டும். "சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்" (யாக்.1:12).

சோதனைகளை இந்த உலகத்தில் சகித்து அவன் பொறுமை யுடனிருக்கும்போது இந்த ஆசீர்வாதத்தை பெற தகுதியுள்ளவனாகிறான். பொன்னானது புடமிடப்படுகிறது. அது பொன் என்று கண்டுகொள்ள புடம் அவசியம். அதைப்போல ஒவ்வொருவனுக்கும் சோதனை, வேதனை வரும் அவைகளை அவர்கள் நலமென்று என்னவேண்டும். சந்தோஷமாக அவைகளை வரவேற்கவேண்டும். அப்பொழுதே அவர்கள் அவைகளில் வெற்றியடைய முடியும். சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான் என காண்கிறோம். அவன் அந்த சோதனையை சகிக்கிறபோது கர்த்தர் அவனுக்கு செய்த வாக்குத்தத்தத்தை அதினால் பெற்றுக்கொள்ளுகிறான்.

"கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள், என்றாலும், துன்பப்படவேண்டியது

அவசியமானதால், இப்பொழுது கொஞ்சகாலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள். அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்'' (1பேது.1:5-7).

சோதனை அநேகருக்கு வேதனையைக் கொண்டுவருகிறது. ஆம், சோதனை வேதனையையும் கஷ்டங்களையும் கொண்டுவரும். ஆனால் அவைகளை நாம் சகிக்கும்போது பாக்கியவான்களாக இருப்போம். இந்த சோதனையும் வேதனையும் எத்தனை நாட்கள் கொஞ்ச காலம் என வேதம் சொல்லுகிறது. இந்த கொஞ்சகாலம் இவைகளை நாம் அனுபவித்தே ஆகவேண்டும். இஸ்ரவேலர் எகிப்திலே பலவருடங்களாக செங்கல் சூளையில் வேலை செய்து மிகவும் கஷ்டப்பட்டார்கள். தேவன் அவர்கள் கூக்குரலைக்கேட்டு இறங்கி மோசேயைக் கொண்டு அவர்களை எகிப்தின் அதிபதியினிடமிருந்து விடுவித்து பலத்த செய்கைகளோடும், கர்த்தருடைய அற்புதமான கரத்தோடும் எகிப்தை விட்டு அவர்கள் வெளியேறினார்கள்.

நாற்பது வருட காலங்களாக அவர்களை அற்புதமாக போஷித்து இறுதியில் கானானை சுதந்தரமாக கொடுத்தார். கட்டாத வீடுகளையும், நடவு செய்யாத திராட்சைத் தோட்டங்களையும் தங்களுக்கு சொந்தமாக்கிக்கொண்டார்கள். ஆம், அதைப்போல கொஞ்சகாலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிற நமக்கு மகிமையிலே கிறிஸ்துவானவர் வெளிப்படும்போது புகழ்ச்சியும் கனமும் காணப்படும். நிலையான நித்திய வீட்டை நமக்கு பிதாவாகிய தேவன் கொடுப்பார். நித்திய நித்தியமாக தேவனோடு என்றென்றும் வாழும் பாக்கியத்தை அப்பொழுது அடைவோம். இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? விசுவாசத்திலே வராத யாவும் பாவம் என வேதம் சொல்லுகிறது. ஆகையால் உங்களுக்கு வரக்கூடிய உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள். பொறுமை உங்களுடைய வாழ்க்கையில் பரீட்சையையும், நம்பிக்கையும் உண்டாக்குமென்று அறிந்த அதை



சந்தோஷமாக எண்ணி அதைக்குறித்து மேன்மைபாராட்டுங்கள். உங்களுக்கு உள்ளவைகளைக்குறித்து மேன்மைபாராட்டுவதால் அது உங்களை உலக அழிவிலிருந்து இரட்சிக்காது. கர்த்தருடைய வசனம் நம்மை நமக்கு வரக்கூடிய சகல உபத்திரவத்திலிருந்தும் இரட்சிக்கும்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு வாசகரே, நீ ஆபிரகாமைப்போல விசுவாசத்தில் உண்மையாயிருந்து உனக்கு வரும் சோதனைகளிலும் பரீட்சையிலும் பொறுமையாயிரு. அதைப்போல யோபுடைய திருஷ்டாந்தத்தை மாதிரியாக கொள். இவைகளை துன்பப்படுதலுக்கும் நீடிய பொறுமைக்கும் மாதிரியாக வைத்துக்கொள். அப்பொழுது நீ உனக்கு வரக்கூடிய உபத்திரவத்திலும் பொறுமையாயிருந்து அவைகளிலே மேன்மைபாராட்டுவாய்.

## கேள்வி நேரம்

**மரணபரியந்தமும் உண்மையாயிருக்க வேண்டுமா?**

ஆம், உண்மை என்பது உலகத்தோடு முடிவதில்லை. அது ஆத்துமா இருக்கும் மட்டும். அப்படியானால் ஆத்துமா அழியாதது நித்தியமானது. எனவே நாமும் நித்திய நித்தியமாக உண்மையாயிருக்கவேண்டும். “நீ படப்போகிற பாடுகளைக்குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ, நீங்கள் சோதிக்கப்படும்பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்'' என்கிறார் (வெளி.2:10).

நமக்கு வரக்கூடிய பாடுகளையும் உபத்திரவத்தையும் நினைத்து கடுகளவும் பயந்து சோர்ந்துபோய்விடாதிருக்கவேண்டும். ஏனெனில் பிசாசானவன் எல்லோரையும் வஞ்சிக்கத்தக்கதாக கொடிய காரியங்களை செய்வான். அவனால் நம்முடைய ஆத்துமாவை ஒன்றும் செய்யமுடியாது. அவைகளினாலே நாம் சோர்ந்துபோய் விசுவாசத்தை மறுதலிப்போம் என அவன் எதிர்பார்க்கிறான். நாம் விசுவாச வீரர்களாக இருந்துகொண்டு கர்த்தரை மகிமைப்படுத்துங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

# 43.எச்சரிக்கை
# Admonition

பலவிதமான எச்சரிக்கையைக்குறித்து நாம் கேள்விப்படுகிறோம். நாம் வாழும் உலகில் அவ்வப்போது எச்சரிக்கப்படுகிறோம். பரிசுத்த வேதாகமும்கூட நாம் தேவனுடைய சித்தங்களைப் புரிந்துகொள்ளும் படியாக எச்சரிக்கிறது. குறிப்பாக அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபையாருக்கு எச்சரித்து சொன்ன பன்னிரண்டு வசனங்களை இச்செய்தி வேளையில் தியானிக்கவுள்ளோம். ‘‘இப்படியிருக்க சகோதரரே, நீங்கள் எவைகளை அறியவேண்டுமென்றிருக்கிறேனென்றால்; நம்முடைய பிதாக்களெல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள், எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்துவந்தார்கள். எல்லாரும் மேசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்’’ (1கொ.10:1,2).

இஸ்ரவேலராகிய ஒட்டுமொத்த ஜனங்களையும் ஒரு ஆட்டுமந்தையை நடத்துவதைப்போல தேவன் மோசேயைக் கொண்டு வழிநடத்திவந்தார். அவர்களும் நம்மைப்போல ஞானஸ்நானம் பெற்றார்கள் என பவுல் ஆசிரியர் சொல்லுகிறார். அப்படியானால் இஸ்ரவேலுக்கு முன்பாக சென்ற மேகத்தினாலும், சிவந்த சமுத்திரத்தின்வழியாக கடக்கும்போது சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பெற்றார்கள். ஒரே சிந்தையுள்ளவர்களாக அங்குமிங்கும் செல்லாமல் மேகத்திற்கு கீழாயிருந்தார்கள்.

அதைப்போல சிவந்த சமுத்திரத்தின் உலர்ந்த தரைவழியாக எல்லோரும் சென்றார்கள். ஆகையால் ஒட்டுமொத்த ஜனங்களும் மோசேயினுடைய வார்த்தைப்படி நடந்தார்கள். ஆகையால் அவர்கள் ஞானஸ்நானப்படுத்தப்பட்டார்கள்.

இன்றைக்கு ‘‘கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?’’ என்ற கேள்வியை பவுல் எழுப்புகிறார் (ரோ.6;3). அன்று மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பெற்றதைப்போல இன்று கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் வைக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் இப்படிப்பட்ட



ஞானஸ்நானத்தைப் பெற்றவர்களாயிருக்கிறீர்களா? அப்படியில்லை என்றால் உங்களுடைய ஞானஸ்நானம் ஞானஸ்நானமாக இருக்காது.

இஸ்ரவேலர் ‘‘எல்லாரும் ஒரே ஞானபோஜனத்தைப் புசித்தார்கள்’’ என 1கொ.10:3-ல் காண்கிறோம். அதைப்போல ‘‘அந்த ஒரே அப்பத்திலே நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால் அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்’’ என்கிறார் (1கொ.10:17). ஒரே அப்பம் என்று சொல்லும்போது கிறிஸ்து ஒருவரே நமக்காக மரித்து பின்பு எழுந்திருக்கிறார். அவருடைய சரீரத்திற்கு மாதிரியாக வைக்கப்படும் அப்பம். அந்த ஒரே அப்பத்திலே வாரந்தோறும் பங்குபெறவேண்டியவர் களாயிருக்கிறோம். அதைப்போல அவர்கள் ‘‘எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில் அவர்களோடேகூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்தக் கன்மலை கிறிஸ்துவே’’ (1கொ.10:4).

ஆதிமுதலாக தேவனோடிருந்த கர்த்தர் இஸ்ரவேலின் மத்தியில் இருந்தார். கன்மலையிலிருந்து அவர்களுடைய ஜீவனைக் காக்கும் தண்ணீராக கிறிஸ்து வெளிப்பட்டார். பாவத்தில் அடிமைப்பட்டு கிடக்கும் நம்மை மீட்கும்படியாக சிலுவையில் இரத்தம் சிந்தினார். அதை நாம் நினைவுகூரும்படியாக; ‘‘போஜனம்பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து; இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார்’’(லூக்.22:20). நமக்காக சிலுவையில் இரத்தத்தை சிந்தினார். இஸ்ரவேலைக் காக்க ஜீவத்தண்ணீரைக் கொடுத்தார். நம்முடைய ஜீவனைக் காக்க ஜீவனையே நமக்காக கொடுத்தார்.

இஸ்ரவேலரை இப்படியாக காத்து வழிநடத்திய தேவன் ஏன் அவர்களை அழிவுக்கு ஒப்புக்கொடுத்தார் என நீங்கள் நினைக்கலாம். ‘‘அவர்களில் அதிகமானபேர்களிடத்தில் தேவன் பிரியமாயிருந்ததில்லை; ஆதலால் வனாந்தரத்திலே அவர்கள் அழிக்கப்பட்டார்கள். அவர்கள் இச்சித்ததுபோல நாமும் பொல்லாங்கானவைகளை இச்சியாதபடிக்கு, இவைகள் நமக்குத் திருஷ்டாந்தங்களாயிருக்கிறது’’ (1கொ.10:5,6). அவர்கள் பொல்லாப்பானவைகளை இச்சித்தார்கள். இச்சை பாவத்தை

பிறப்பிக்கும். பாவம் மரணத்தை பிறப்பிக்கும். அந்தப்படியாக இன்றும் அழிவை நோக்கி அநேகர் செல்லுகிறார்கள். அவர்கள் யாரென்றால்; ‘‘தேவனை அறியாதவர்களுக்கும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்’’ (2தெச.1:7,10). இந்த எச்சரிப்பின் வசனத்தை கேட்டுக்கொண்டிருக்கிற நீங்கள் இந்த அழிவிலிருந்து காக்கப்பட வசனங்களுக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள். ‘‘ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து விளையாட எழுந்திருந்தார்கள் என்று எழுதியிருக்கிறபடி, அவர்களில் சிலர் விக்கிரகாராதனைக்காரர் ஆனது போல நீங்களும் ஆகாதிருங்கள்’’ (1கொ.10:7).

தேவனை அறிந்த எவரும் விக்கிரகாராதனைக்காரராக போய்விட தேவன் விரும்பவில்லை. ‘‘விக்கிரகங்களுக்குப் படைக்கப் பட்டவைகளைப் புசிக்கிறவிஷயத்தைப்பற்றி, உலகத்திலே விக்கிரகமானது ஒன்றுமில்லையென்றும் ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லையென்றும் அறிந்திருக்கிறோம்’’ என பவுல் தெளிவாக எழுதியிருக்கிறார் (1கொ.8:4). ஆகையால் நம்முடைய முற்பிதாக்காளைப்போல நீங்களும் விக்கிரகாராதனைக் காரராகாதிருங்கள்.

அதைப்போல வேசித்தனம். ‘‘அவர்களில் சிலர் வேசித்தனம் பண்ணி, ஒரேநாளில் இருபத்துமூவாயிரம்பேர் விழுந்துபோனார்கள்; அதுபோல நாமும் வேசித்தம்பண்ணாதிருப்போமாக’’ என்கிறார் (1கொ.10:8). வேசித்தனம் மிகவும் அருவருப்பான செயல். ‘‘வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள், மனுஷன் செய்கிற எந்தப் பாவமும் சரீரத்திற்குப் புறம்பாயிருக்கும்; வேசித்தஞ் செய்கிறவனோ தன் சுயசரீரத்திற்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறான்’’ (1கொ.6:18).

நீங்கள் ஒரு கிறிஸ்தவராயிருப்பீர்களானால்; கிறிஸ்துவினுடைய சரீரமாயிருக்கிறீர்கள். நீங்கள் கிறிஸ்துவினுடைய சரீரமாயிருப்பதினால் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமானது. தேவனுடைய ஆலயத்தை வேசியின் சரீரமாக



மாற்றக்கூடாது. ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் அவனைத் தேவன் கெடுப்பார். ஆகையால் அவனவன் தன்தன் சரீரத்தை பரிசுத்தமாக ஆண்டுகொள்ளவேண்டியவனாக போதிக்கப்படுகிறான்.

‘‘அவர்களில் சிலர் கிறிஸ்துவைப் பரீட்சைபார்த்து, பாம்புகளால் அழிக்கப்பட்டார்கள்; அதுபோல நாமும் கிறிஸ்துவைப் பரீட்சைபாராதிருப்போமாக’’ (1கொரி.10:9). கொள்ளிவாய் சர்ப்பங்கள் அவர்களை கடிக்கும்படி கர்த்தர் கட்டளையிட்டார். அது அவர்களை கடித்ததினால் அநேகர் இறந்துபோனார்கள். அவர்கள் மோசேயிடம் முறையிடும்போது கொள்ளிவாய் சர்ப்பத்தைப்போல வெண்கல சர்ப்பத்தைச் செய்து ஒரு கோளினால் உயர்த்தி கடிபட்டவன் நோக்கிப் பார்க்கும்படியாக உயர்த்திவைத்தான். அதினால் அநேகர் காப்பாற்றப்பட்டார்கள். ஆண்டவராகிய இயேசு ‘‘உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறதே’’ என்ற வசனத்தை பிசாசுக்கு உணர்த்தினார் (மத்.4:7).

அநேகர் கர்த்தரைப் பரீட்சை பார்க்கும் அளவுக்கு உயர்ந்து விடுகிறார்கள். நாம் அவரால் படைக்கப்பட்ட ஒரு கொசு. அவர் சர்வ வியாபி, சகலத்தையும் சிருஷ்டித்தவர், அவருக்கு முன்பாக நாம் எம்மாத்திரம். ஆகையால் இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற நீங்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இயேசுவை தன்னுடைய தந்திரத்தினாலே ஏமாற்றப்பார்த்த பிசாசு உங்களையும் தன்னுடைய தந்திரமான வார்த்தைகளினால் உங்களை ஏமாற்றிவிடுவான். ஆகையால் எச்சரியக்கையாயிருக்கும்படியாக இவைகள் எழுதப்பட்டிருக்கிறது.

அதைப்போல ‘‘அவர்களில் சிலர் முறுமுறுத்து, சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள்; அதுபோல நீங்களும் முறுமுறுக்காதிருங்கள்’’ (1கொ.10:10). முறுமுறுப்பு எரிச்சலை உண்டாக்கும். அநேகர் தங்களுடைய வாழ்க்கையை முறுமுறுப்பிலே கழிக்கிறார்கள். இருக்கப்போகும் கொஞ்சநாட்கள் சந்தோஷமாக இருந்துகொண்டு, தேவனுடைய சிருஷ்டிகளை கண்டு களித்துக்கொண்டு, அநேகருடைய நற்பெயரை சம்பாதித்துக்கொண்டு, தேவனுடைய சித்தத்தை

நிறைவேற்றும்படியாக பாடுபடவேண்டும். பேதுரு சொல்லுகிறார்; ‘‘முறுமுறுப்பில்லாமல் ஒருவரையொருவர் உபசரியுங்கள்’’ (1பேது.4:9). ஒரு சிநேகிதனுடைய வீட்டிற்கு போயிருக்கும்போது அந்த சிநேகிதன் உங்களை அன்போடு உபசரித்தால் ஒரு சில நாட்கள் அங்கு அவனோடு தங்குவீர்கள். அவன் உங்களைப் பார்த்து இவன் ஏன்தான் இங்கே வந்தானோ என்று முறுமுறுப்போடு உங்களை உபசரித்தால் அங்கு நீங்கள் இருப்பீர்களா? இருக்கமாட்டீர்கள். அதைப்போல உங்களுடைய இருதயத்தில் தேவனைக்குறித்த விஷயத்தில் முறுமுறுக்காதிருங்கள். அப்படி முறுமுறுத்தபடியால் இஸ்ரவேலில் சிலர் சங்காரத் தூதனாலே அழிக்கப்பட்டார்கள். அதைப்போல நீங்கள் அழிக்கப்படாதபடி எச்சரிக்கையாயிருங்கள்.

மேற்சொல்லப்பட்ட ‘‘இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டும் இருக்கிறது. இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கை யாயிருக்கக்கடவன்’’ (1கொ.10:11,12). இன்றைக்கு அநேகருக்கு அசையாத நம்பிக்கையுண்டு நல்லதுதான். அந்தவிதமான நம்பிக்கை உங்களுக்கு இருக்கவேண்டும். இப்படிப்பட்ட நம்பிக்கையோடிருந்த இஸ்ரவேலரில் சிலர் விக்கிரகாராதனைக்காரராகவும், சிலர் வேசித்தனம்பண்ணியும், சிலர் கிறிஸ்துவைப் பரீட்சைபார்த்தும், சிலர் முறுமுறுத்தும் அழிக்கப்பட்டார்கள் அல்லவா!

ஆகையால் கிறிஸ்துவில் உறுதியாக நிற்கிறேன் என்று எண்ணுகிற நீங்கள் கிறிஸ்துவைவிட்டு விலகிப்போய்விடாதபடிய எச்சரியக்கை யாயிருங்கள். அவருடைய கோபத்திற்குள்ளாக போய்விடாதிருங்கள். இந்த முடிவு காலத்திலுள்ள நமக்கு இவைகள் ஒரு எச்சரிப்பைக் கொடுக்கிறது. நாமும் ஒருவேளை இஸ்ரவேலரில் இருந்த சிலரைப்போல போய்விடுவோமானால் தேவன் நம்மீது பிரியமாயிரார். ஆகையால் அழைத்த தேவனைப் பிரியப்படுத்தும்படியாக ஒவ்வெருநாளும் வாழுங்கள். அழிந்துபோகிற உலகத்தில் அழியாத வேதவசனத்தை ஒவ்வொருநாளும் பின்பற்றி நடக்க உங்களை வசனத்திற்கு ஒப்புக்கொடுங்கள். இந்த எச்சரிப்பின் செய்தி உங்களுடைய வாழ்க்கையில் ஒரு எச்சரிப்பைக்கொடுத்திருக்கும் என்று நாங்கள்



நம்புகிறோம். இந்த எச்சரிப்பின் செய்தியை படித்த நீங்கள் மற்றவர்களையும் எச்சரித்துப் புத்திசொல்லுங்கள்.

### கேள்வி நேரம்

**நாம் விசுவாசத்தில் நிற்கிறோமா?**

ஆம், விசுவாசத்தினாலே எல்லாமே நிற்கின்றன, அசைகின்றன. அவருடைய செயலின்படியாக இவைகள் அனைத்தும் செயல்படுகிறது. ஆகையால் தேவன் விசுவாசத்தை மனிதனில் எதிர்பார்க்கிறார். நாம் தியானித்த செய்தியின்படியாக; ‘‘சில கிளைகளை முறித்துப்போடப்பட்டிருக்க, காட்டொலிவமரமாகிய நீ அவைகள் இருந்த இடத்தில் ஒட்டவைக்கப்பட்டு, ஒலிவமரத்தின் வேருக்கும் சாரத்துக்கும் உடன்பங்காளியாயிருந்தாயானால், நீ அந்தக் கிளைகளுக்கு விரோதமாய்ப் பெருமைபாராட்டாதே; பெருமைபாராட்டுவாயானால், நீ வேரைச் சுமக்காமல், வேர் உன்னைச் சுமக்கிறதென்று நினைத்துக்கொள். நான் ஒட்டவைக்கப்படுவதற்கு அந்தக் கிளைகள் முறித்துப்போடப்பட்டதென்று சொல்லுகிறாயே, நல்லது, அவிசுவாசத் தினாலே அவைகள் முறித்துப்போடப்பட்டன, நீ விசவாசத்தினாலே நிற்கிறாய்; மேட்டிமை சிந்தையாயிராமல் பயந்திரு. சுபாவக்கிளை களைத் தேவன் தப்பவிடாதிருக்க, உன்னையும் தப்பவிடமாட்டார் என்று எச்சரிக்கையாயிரு’’ என்கிறார் பவுல் (ரோம.11:17-21).

நாம் தேவனுடைய பிள்ளையாக மாற்றப்பட்டிருப்பதே ஒரு பெரும் பாக்கியம் என்றே சொல்லவேண்டும். தேவன் இஸ்ரவேலைத் தெரிந்துகொண்டார். இன்றைக்கு நீங்களும் நானும் அவர்கள் இருந்த இடத்தில் ஒட்டவைக்கப்பட்ட காட்டொலிவமரங்களாக இருக்கிறோம். நாம் பெருமை பாராட்ட இடமில்லை. ஆகையால் விசுவாசத்தில் நிற்கிறோம். பயத்தோடு நம்முடைய இரட்சிப்பு நிறைவேற பாடுபடுவோம். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 44. பிரதான கட்டளை
## The Great Commission

**க**ர்த்தர் தம்முடைய ஜனங்களுக்குக் கட்டளைகளைக் கொடுக்கும்போது அதிகமாக மலைப்பகுதியில் கொடுத்திருக்கிறார் என நாம் காண்கிறோம். இந்தக் கட்டளை உயர்வானது ஆகையால்

உயர்வான இடங்களில் வைத்துக்கொடுத்திருக்கிறார் என நினைக்கிறேன். எகிப்திலிருந்து இஸ்ரவேலரை அழைத்துக் கொண்டுவந்த தேவன் அவர்களுக்கு கட்டளையை சீனாய் மலையில் கொடுத்தார். தாம் தெரிந்துகொண்ட தாசனாகிய மோசேயைக் கொண்டு அவர்களுக்குக் கொடுத்தார். "மோசே மேகத்தின் நடுவிலே பிரவேசித்து, மலையின்மேல் ஏறி, இரவும் பகலும் நாற்பதுநாள் மலையில் இருந்தான்" என யாத்.24:18-ம் வசனத்தில் படிக்கிறோம்.

தேவனுடைய மனுஷனாகிய மோசே ஒரு நாள் இரண்டு நாட்கள் அல்ல நாற்பது நாள் தேவனுடைய சமுகத்திலிருந்து பத்துக்கட்டளைகள் அடங்கிய கற்பலகைகளைப் பெற்றுக்கொண்டான். இப்படிப்பெற்றுக்கொண்ட அந்த கற்பனையை இஸ்ரவேலில் அநேகர் பின்பற்றவில்லை, கைக்கொள்ளவுமில்லை என்பது மிகவும் வருந்தத்தக்கது.

தேவன் தமது ஜனங்களை நேசித்து அவர்கள் நடக்கவேண்டிய வழிமுறைகளை அவர்களுக்கு கொடுத்தார். அதை அந்நிய காரியமாக எண்ணினார்கள். ஒரு நாட்டிற்கு அந்நாட்டின் சட்டம் எவ்வளவு முக்கியமோ அதைப்போல ஒவ்வொரு தேவனுடைய மனுஷனுக்கும் மனுஷிக்கும் தேவன் கொடுத்த கட்டளை மிகவும் முக்கியம். அதை அநேகர் உணராமற்போகிறார்கள். சட்டத்தை மதிக்காதவனை சட்டம் தண்டிக்கிறது. அதைப்போல தேவனுடைய கற்பனைகளை ஏற்றுக்கொள்ளாதவனை ஒரு நாள் அந்தக்கற்பனை நிச்சயம் தண்டிக்கும். ஒருவரும் இதில் தப்பிக்கொள்ளமுடியாது என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

மோசேயை கர்த்தர் ஓரேப் எண்ணும் பர்வதத்தில் சந்தித்தார். அப்போது அவன் தன் மாமனாகிய எத்திரோவின் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தான் என யாத்திராகம புத்தகத்தில் வாசிக்கிறோம். அதைப்போல தீர்க்கதரிசியாகிய எலியா சோர்ந்துபோன நேரத்தில் அவனை தட்டி எழுப்பி அப்பமும் தண்ணீரும் கொடுத்து நீ பண்ணவேண்டிய பிரயாணம் வெகுதூரம் என்று சொல்லி அனுப்பினார். அவன் புசித்து பெலனடைந்து அந்த பெலத்தினால் ஓரேப் என்னும் தேவனுடைய பர்வதம் மட்டும் இரவு பகல் நாற்பதுநாள் நடந்து சென்றான் என 1இரா.19:1-8 வசனங்களில் படிக்கிறோம். கர்த்தர்



அதிகமாக தேவனுடைய ஜனங்களை சந்தித்தது மலைபாங்கான இடங்களில் என காண்கிறோம்.

ஆண்டவர் இயேசுவின் நாட்களில் தம்முடைய அப்போஸ்தலர்களை வரவழைத்து பிரதான கட்டளையை மலைப்பகுதியில் கொடுத்தார். "பதினொரு சீஷர்களும், கலிலேயாவிலே இயேசு தங்களுக்குக் குறித்திருந்த மலைக்குப்போனார்கள்" என்று மத்.28:16-ம் வசனத்தில் படிக்கிறோம். ஆண்டவர் கட்டளையை தம்முடைய சீஷர்களுக்கு கொடுப்பதற்காக கலிலேயாவிலுள்ள மலைக்கு வரவழைத்தார். அவருடைய ஊழியத்தின் நாட்களில் அநேக போதனைகளை அவர்கள் கேட்டார்கள் அந்தப்படியாக மற்றவர்களுக்கு அவைகளைக்குறித்து போதித்தார்கள்.

இரண்டு இரண்டுபேராக பலநேரங்களில் ஊழியத்திற்கு அனுப்பினார். இன்னும் பல சந்தேகங்களை அவரிடத்தில் கேட்டார்கள் அதற்கான விளக்கத்தை அவ்வப்போது அவர்களுக்கு சொல்லிக்கொண்டு வந்தார். ஆனால் பிராதான கட்டளை கொடுக்கும்போது அவர்களை மலைக்கு வரவழைத்தார். முன்னமே முற்பிதாக்கள் மூலமாக பெற்ற கட்டளையை அவர்கள் அறிந்திருந்தபோதும் அவர்களுக்கு பிரதான கட்டளையை தமது மூலமாக கொடுப்பதற்காக அவர்களை வரவழைத்தார். இந்தக் கட்டளையை இயேசுவினுடைய ஊழியத்தின் இறுதிநாட்களில் அதாவது பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் முன்பு இவைகளை அவர்களுக்குக் கொடுத்தார். இது பிரதான கட்டளையாக இருக்கிறது.

அது என்னவென்றால்; "இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்" (மத்.28:18-20). சகல அதிகாரமுள்ளவராக இந்தக்கட்டளையை அவர்களுக்கு ஆண்டவர் இயேசு கொடுத்தார். இந்த அதிகாரத்தை

பரலோக பிதாவிடம் ஆண்டவர் பெற்றவராயிருந்தார். பிதாவாகிய தேவன் அவரைத்தெரிந்துகொண்டு அவர்மூலமாக உலகத்தை இரட்சிக்கும்படியாக திட்டம்கொண்டார். இக்கட்டளையை அப்போஸ்தர்கள் பெற்றுக்கொண்டு உலக முழுவதும் சென்று சுவிசேஷத்தை அறிவித்து, இப்படியாக விசுவாசித்தவர்களுக்கு பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்து அவருடைய கட்டளையை நிறைவேற்றினார்கள். அதில் ஒருவனாகிய தோமா என்ற அப்போஸ்தலன் இந்திய தேசத்திற்கு முதல்நூற்றாண்டு காலத்தில் வந்து சுவிசேஷம் அறிவித்து இரத்த சாட்சியாக மரித்திருப்பதை சென்னையில் உள்ள செயின் தாமஸ்மவுண்ட் இன்றும் நமக்கு நினைவுபடுத்திக்கொண்டிருக்கிறது.

இந்த பிரதான கட்டளையை அப்போஸ்தலர்கள் ஏற்றுக்கொண்டு உலகமெங்கும் எடுத்துச்சென்றதைப்போல இன்றும் ஒவ்வொரு கிறிஸ்துவின் சபையும் எடுத்து பிரசங்கித்துக்கொண்டு வருகிறது. இக்கட்டளைக்கு விரோதமாக யூதர்கள் எழும்பினார்கள். அதைப்போல இன்றும் அநேகர் இக்கட்டளையை ஏற்றுக்கொள்ளாமல் வேறுவிதமாக போதிக்கும்படி முயற்சிக்கிறார்கள். இது தேவனையும், பிரதான கட்டளையைக் கொடுத்த ஆண்டவரையும் அவமதிக்கும் செயலாக இருக்கிறது. ஒரே வேதாகமத்தை தவறாக புரிந்துகொண்டு நடக்கிற சபைகள் ஒவ்வொருநாளும் பெருகிக்கொண்டே இருக்கிறது. இது வஞ்சக ஆவியின் வேலையாக இருக்கிறது. அன்பான சகோதரனே, சகோதரியே முதல் நூற்றாண்டில் ஏற்படுத்தப்பட்ட சபைக்கு திரும்புங்கள். ஆதி அப்போஸ்தலர்கள் கைக்கொண்ட போதனையின்படி நடக்கவும், போதிக்கவும் செய்யுங்கள்.

இயேசுவானவர் மலைப்பிரசங்கத்தில் அநேக போதனைகளைக் கொடுத்துள்ளார்; “அவர் திரளான ஜனங்களைக் கண்டு மலையின்மேல் ஏறினார்; அவர் உட்கார்ந்தபொழுது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்தார்கள். அப்பொழுது அவர் தமது வாயைத் திறந்து அவர்களுக்கு உபதேசித்துச் சொன்னது என்னவென்றால்: ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது. துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் ஆறுதலடைவார்கள். சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள்



பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள். நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள். இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள். இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள். சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள். நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது” இப்படி அநேக போதனைகளை மத்.5: அதிகாரமுதல் 7:29 வசனம் முடிய காண்கிறோம்.

இந்தப்போதனைகளை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் தேவனால் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். தேவனை அறியாத புறஜாதி மக்கள்கூட இவ்விதமான போதனைகளை கைக்கொள்ளுகிறார்கள். ஆனால் இந்தப்போதனைகளைக் கொடுத்த கர்த்தரை அறியாதிருக்கிறார்கள் என்பது வேதனைக்குறிய விஷயமாக இருக்கிறது.

ஆண்டவர் இயேசு “பாடுபட்டபின்பு, நாள்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிற வராகக் காண்பித்தார்” (அப்.1:3). பிரதான கட்டளையை கொடுத்த கர்த்தர் உயிர்த்தெழுந்த பின்பு நாற்பது நாளளவும் ராஜ்யத்துக்குரிய அதாவது அவருடைய சபைக்குரியவைகளை அப்போஸ்தலருடனே பேசினார். இது இயேசுவானவர் உயிர்த்தெழுந்த பின்பு அவர்களை பெலப்படுத்தவும், தான் உயிரோடிருக்கிறவராயிருக்கிறேன் என்பதை உறுதிப்படுத்தவும் உதவியாயிருந்தது. நாற்பது என்பது பல இடங்களில் நாம் வேதாகமத்தில் பார்க்கிறோம்.

மோசே தேவனுடைய சமுகத்தில் நாற்பது நாள் இருந்து கட்டளைகளைப் பெற்றுக்கொண்டான். அதைப்போல எலியா நாற்பது நாளளவும் தேவனுடைய பர்வதமாகிய ஓரேப் மட்டும் நடந்துபோனான். இயேசுவானவர் ஞானஸ்நானம் பெற்று இரவும் பகலும் நாற்பது நாளளவும் உபவாசமாயிருந்தார். அதைப்போல நாற்பது நாளளவும் தம்முடைய சீஷர்களுக்கு அநேக திருஷ்டாந்தங்களினாலே தம்மை உயிரோடிருக்கிறவராக வெளிப்படுத்தினார். இதனால் நாற்பது நாள்

என்பது மிகவும் முக்கியமான நாட்கள் என்று அநேகர் நாங்களும் நாற்பது நாள் உபவாசம் செய்கிறோம் என்று அநேக பெயர் கிறிஸ்தவர்கள் அதை ஒரு பண்டிகையாக மாற்றி நாற்பது நாள் உபவாசம் இருக்கிறார்கள். கர்த்தர் உபவாசம் இருந்த நோக்கம் வேறு இவர்கள் இருக்கும் நோக்கம் வேறு. உபவாசம் இருப்பவர்கள் முகவாடலாயிருக்கக்கூடாது. மற்றவர்களுக்கு தெரியும்படியாக இருக்கக்கூடாது என்றெல்லாம் பார்க்கிறோம்.

கடைசியாக கர்த்தர் நாற்பது நாட்களுக்குப் பின்பு; எருசலேமுக்குச் சமீபமாய் ஒரு ஓய்வுநாள் பிரயாண தூரத்திலிருக்கிற ஒலிமலை என்னப்பட்ட மலையிலிருந்து பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார் அப்போஸ்தலர்கள் எருசலேமுக்குத் திரும்பினார்கள் என அப்.1:12-ல் வாசிக்கிறோம். தேவதூதர்கள் அவர்களைப் பார்த்துச் சொல்லும்போது; "கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்துபார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்" (அப்.1:11).

இன்றும் அவருடைய வருகையை உலகம் எதிர்பார்த்து காத்திருக்கிறது. மணவாட்டியாகிய சபை ஆயத்தமாயிருக்கிறது. இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் வாசகரே, நீங்கள் இயேசுவின் பிரதான கட்டளையைக் கைக்கொண்டு நடக்கிற கிறிஸ்தவராயிருக் கிறீர்களா? அப்படியில்லையென்றால் அவருடைய பிரதான கட்டளைக்கு கீழ்ப்படிந்து அதன்படியாக நடந்துகொள்ளுங்கள். அப்பொழுது நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்.

**கேள்வி நேரம்**

**பிரதான கட்டளை வந்தபடியால் முந்தின கட்டளை என்னவானது?**

"முந்தின கட்டளை பெலவீனமுள்ளதும் பயனற்றது மாயிருந்ததினிமித்தம் மாற்றப்பட்டது. நியாயப்பிரமாணமானது ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை, அதிக நன்மையான நம்பிக்கையை வருவிப்பதோ பூரணப்படுத்துகிறது; அந்த நம்பிக்கையினாலே தேவனிடத்தில் சேருகிறோம்" (எபி.7:18,19). இந்த வசனத்தில் எபிரெய



ஆசான் மிகவும் தெளிவாக குறிப்பிட்டுள்ளார். முந்தின கட்டளை என்று சொல்லும்போது நியாயப்பிரமாணத்தைக்குறிக்கின்றார். அது ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை ஆகையால் அது மாற்றப்பட்டது. மாற்றப்பட்டது என்று சொல்லும்போது; பயனற்ற அந்த கட்டளை மிகவும் நல்லது என்று ஒருவர் அதைப் பின்பற்றுவரானால் அவர் நிஜத்தை விட்டு நிழலை நாடுகிறார். நிஜம் இருக்கும்போது நிழல் எதற்கு? அதிக நம்பிக்கையை கொடுக்கக்கூடியது கர்த்தருடைய புதிய ஏற்பாட்டு வசனங்கள். அது விசுவாசத்திற்குரியது. அதிக நன்மையான நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. இதினாலே நாம் தேவனிடத்தில் சேருகிறோம்.

பழைய பிரமாணம் ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை. பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் இரண்டு இணைக்கப்பட்டிருப்பது இரண்டையும் கைக்கொள்ளுவதற்காக அல்ல. முற்பிதாக்களின் சரித்திரத்தை நாம் தெரிந்துகொள்ளவும், புரிந்துகொள்ளவும். அவர்களுடைய வீழ்ச்சி நமக்கு ஒரு எச்சரிப்பைக் கொடுக்கக் கூடியதாகவும் இருக்கிறது. ஆகையால் புதிதும் ஜீவனுமான மார்க்கத்திற்கு திரும்புங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 45. தகுதி
## Worth

மனிதனுடைய வாழ்வில் தகுதியான சில காரியங்கள் இருக்கிறது. தகுதிக்கு மிஞ்சி நாம் எதையும் நினைப்பதில்லை. அப்படி நினைத்தால் வாழ்க்கையில் தோல்வி, பலவிதமான கஷ்டங்களை நாம் சந்திக்க நேரிடும். தேவன் நம்மை சிருஷ்டிக்கும்போது கடனாளியாகவோ, அல்லது அவன் ஒன்றுக்கும் தகுதியில்லாதவனாகவோ சிருஷ்டிக்கவில்லை. மிகவும் சிறப்பானவனாகவும், தமது சாயலில் நேர்த்தியாகவும் சிருஷ்டித்தார். இப்படி நேர்த்தியாக சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் தன்னுடைய தகுதியை ஒருபோதும் இழந்துவிடக்கூடாது. இதை நன்கு புரிந்துகொண்டவர்கள் அப்போஸ்தலர்கள்.

ஆகையால் பவுல் எழுதும்போது; "விசுவாசிகளாகிய உங்களுக்குள்ளே நாங்கள் எவ்வளவு பரிசுத்தமும் நீதியும் பிழையின்மையாய் நடந்தோமென்பதற்கு நீங்களும் சாட்சி, தேவனும்

சாட்சி" என்றார் (1தெச.2:10). பரிசுத்தம், நீதி, பிழையில்லா வாழ்க்கை மிகவும் அவசியம். எல்லாவகையிலும் இயேசுவைப்போல வாழ்ந்தவர்கள் அப்போஸ்தலர்கள். அவர்கள் விசுவாசிகள் மத்தியில் அவ்விதமாக வாழ்ந்திருக்கிறார்கள். இன்றைக்கு அநேகருடைய வாழ்க்கை, அவிசுவாசிகள் மத்தியில் கேள்விக்குறியாக இருக்கிறது. கிறிஸ்தவத்தை அநேகர் மதிக்கின்றனர். அது பரிசுத்தமான மார்க்கம் என்பதை ஒத்துக்கொள்ளுகின்றனர். அதில் இருப்பதற்கு சில தகுதிகள் அவசியம் என்பதை அவர்களே ஏற்றுக்கொள்ளுகின்றனர். அப்படி பரிசுத்தமும் நீதியுமுள்ள வழியை தெரிந்துகொண்ட ஒரு கிறிஸ்தவன் அந்த மார்க்கத்தில் எப்படியிருக்கவேண்டும்?

பேதுரு சொல்லும்போது; "உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லா வற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே" என்கிறார் (1பேது.1:15,16). பரிசுத்தமில்லாமல் ஒருவரும் கர்த்தரை தரிசிக்க முடியாது. அநேகருடைய வாழ்க்கையில் பாவக்கறை தொடர்ந்து தொற்றிக்கொண்டே இருக்கிறது. இப்படிப்பட்டவர்கள் தேவனுடைய சமுகத்திற்கு போவதுகூடாதகாரியம். தேவன் எப்படியிருக்கிறாரோ அந்தப்படியாகவே ஆதியிலே மனிதனை சிருஷ்டித்தார்.

இரண்டாவதாக நாம் தெசலோனிக்கேயர் புத்தகத்தில் வாசிக்கிறோம் நீதியும் என்று. நீதி என்று பார்க்கும்போது சரியான, நியாயமான, நேர்மையான காரியங்களைச் செய்வது. கர்த்தர் நீதிபரர். "நீதி அவருக்கு அரைக்கட்டும், சத்தியம் அவருக்கு இடைக்கச்சையு மாயிருக்கும்" என ஏசா.11:5-ல் படிக்கிறோம். இயேசு இவ்வுலகத்தில் நீதியாக தீர்ப்புச் சொன்னார். அவருடைய தீர்ப்பைப்பற்றி அநேகர் ஆச்சரியப்பட்டனர். விபசாரத்திலே கண்டுபிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரியை கொண்டு வந்து ஆண்டவரின் முன்பாக நிறுத்தி அவள் மீது பலவிதமான குற்றச்சாட்டுகளை சுமத்தினார்கள். ஆண்டவரோ அவர்களை நோக்கி: உங்களில் பாவமில்லாதிருக்கிறவன் முதலாவது இவள் மீது கல்லெறியக்கடவன் என்றார். இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் பெரியோர்முதல் சிறியோர்வரைக்கும் ஒவ்வொருவராய்ப் போய்விட்டார்கள். இயேசு அவளை நோக்கி: இனிப் பாவஞ்செய்யாதே



என அனுப்பிவிட்டார். மனிதனுடைய தீர்ப்புக்கும் ஆண்டவருடைய தீர்ப்புக்கும் அநேக வித்தியாசங்கள் இருக்கிறது. அவர் நீதியுடனும் நிதானத்துடனும் தீர்ப்புச் செய்வார். மேலும் பவுல் தெசலோனிக்கேய நிருபத்தில் சொல்லும்போது; பிழையின்மையுமாய் நடந்தோமென்பதற்கு நீங்களும் சாட்சி தேவனும் சாட்சி என்கிறார். மனிதனுடைய வாழ்க்கையில் பிழைகள் ஏற்படும் ஆனால் அவைகளை மாற்றியமைத்துக்கொள்ளவேண்டும். பிழையாகிவிட்டது என்று அதை அப்படியே யாரும் விட்டுவிடுவதில்லை. அதை திருத்துவதையே விரும்புகின்றனர். அப்போஸ்தலர்கள் பிழையற்ற வாழ்க்கை வாழ்ந்தனர்.

ஆண்டவர் இயேசு நம்முடைய பாவத்தைக் கழுவும்போது முழுவதுமாக கழுவினார். "கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்" (எபே.5:27). இந்த நோக்கத்தை புரிந்துகொண்ட அப்போஸ்தலர்கள் பிழையற்ற வாழ்க்கை வாழ்ந்தனர். இதை புரிந்துகொண்ட ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன்னைக் காத்துக்கொள்ள வேண்டியவனாயிருக்கின்றான். பிழையில்லாமல் வாழ்ந்ததற்கு அப்போஸ்தலர்கள் இரண்டு சாட்சிகளைக் சுட்டிக்காட்டுகிறார்கள். ஒன்று நீங்கள் மற்றொன்று தேவனே சாட்சி என்கிறார்கள். மனிதர்களும் நம்மைப்பார்க்கிறார்கள். தேவனும் அநுதினமும் நம்மைக்காண்கிறார்.

ஆக இரண்டு சாட்சிகள் நம்முடைய அன்றாட வாழ்க்கையை கவனிக்கிறார்கள். இந்த இடத்தில் மனிதனை ஒருவேளை நாம் ஏமாற்றிவிடாலாம் ஆனால் கண்காணிப்புக்கேமராவைக்காட்டிலும் உற்றுநோக்கிக்கொண்டிருக்கும் கர்த்தருடைய கண்களுக்கு மறைவாக நாம் ஒன்றையும் செய்துவிட முடியாது. ஆகையால் "தம்முடைய ராஜ்யத்திற்கும் மகிமைக்கும் உங்களை அழைத்த தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்கவேண்டுமென்று" பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதின முதலாம் புத்தகம் இரண்டாம் அதிகாரம் பதினொராம் வசனத்தில் காண்கிறோம். ஒரு மனிதனைப் பார்த்தவுடனே சொல்லவேண்டும் இவர் ஒரு கிறிஸ்தவர்போல் இருக்கிராறென்று. அந்த அளவு அவர்களுடைய செயல்பாடுகள் வெளிப்படவேண்டும். பாத்திரராய் என்றால் அதற்கு

தகுந்தார்போல நடக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். அப்போஸ்தலர்கள் மந்தைக்கு மாதிரிகளாக ஜீவித்தார்கள். அவர்களுடைய வாழ்க்கையில் பரிசுத்தம் காணப்பட்டது. நீதியாயும் ஜனங்களுக்குள்ளே நீதியாகவும் பிழையின்மையுமாக நடந்தார்கள். தங்களுடைய சொந்த கைகளினாலே வேலைசெய்து பாடுபட்டார்கள். தேவனுடைய நாமம் தங்கள் மூலமாக மகிமைப்படும்படியாக ஒவ்வொரு நாளும் உழைத்திருக்கிறதை நாம் அப்போஸ்தநடபடிகள் புத்தகத்தில் காணமுடிகிறது. முதல் நூற்றாண்டு சீஷர்களும் இதற்கு இசைவாக இருந்தார்கள். இன்றும் இவ்விதமாக ஒவ்வொருவரும் இருக்கவேண்டுமென்பதற்காகவே இவைகள் எழுதப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு கிறிஸ்தவ சகோதர, சகோதரிகளும் தகுதியானவர்களாயிருக்க அநேக உவமைகள் மூலமாக கர்த்தருடைய வசனம் பேசப்பட்டிருக்கிறது. ‘‘பரலோகராஜ்யம் தன் குமாரனுக்குக் கலியாணஞ்செய்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது என்ற உவமையில்; ‘‘விருந்தாளிகளைப் பார்க்கும்படி ராஜா உள்ளே பிரவேசித்தபோது, கலியாண வஸ்திரம் தரித்திராத ஒரு மனுஷனை அங்கே கண்டு: சிநேகிதனே, நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி வந்தாய் என்று கேட்டான்; அதற்கு அவன் பேசாமலிருந்தான். அப்பொழுது, ராஜா பணிவிடைக்காரரை நோக்கி: இவனைக் கையுங்காலும் கட்டிக்கொண்டுபோய், அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளிலே போடுங்கள் என்றான்’’ (மத்.22:11-13).

இந்த உவமையில் ராஜா கலியாண வஸ்திரம் தரித்திராதவனைப் பார்த்து இறக்கப்படவில்லை. தகுதியில்லாத இவனை கையுங்காலும் கட்டிக்கொண்டுபோய் அழுகையும் பற்படிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளிலே போடுங்கள் என்றான். தகுதியற்ற எந்த ஒரு நபராக இருந்தாலும் அவர்கள் முடிவிலே அடையப்போகிற இடம் இருளாகத்தானிருக்கும். அங்கே அக்கினி அவியாமலும் புழு சாவாமலும் இருக்கும். இதற்கு தப்பிக்கொள்ள தகுதி அவசியம். தகுதியான காரிங்களை சிந்திக்கவேண்டும், தகுதியான காரியங்களை பேசவேண்டும், தகுதியான காரியங்களை செயல்படுத்தவேண்டும். ஆகையால் பவுல் மேலும் சொல்லும்போது; ‘‘தகப்பன் தன்



பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல, நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தியு தேறுதலும் எச்சரிப்பும் சொன்னதை அறிந்திருக்கிறீர்கள்’’ என்கிறார் (1தெச.2:12). சொல்லப்பட்டுள்ள புத்திமதியான வார்த்தைகளைக் கவனிக்கவேண்டியவர் களாயிருக்கிறோம். எந்த ஒரு தகப்பனும் தன்னுடைய பிள்ளை கெட்டுப்போகட்டும் என நினைக்கமாட்டான். அவன் தன்னுடைய பெயரைக்காப்பாற்றவேண்டுமென்பதற்காக அவனுக்கு நலமான காரியங்களை செய்வான், சொல்லுவான்.

பவுல் அந்தவிதமாக நாம் கர்த்தருக்குள் வளரவேண்டும் என்பதற்காக இந்தவிதமான புத்திமதியான வார்த்தைகளைச் சொல்லியிருக்கிறார். தேற்றவும் செய்திருக்கிறார். தாய் தன்பிள்ளைகளை தேற்றுகிறதுபோல தேறுதலான வார்த்தைகள். எப்படியோ ஒழிந்துபோங்கள் என்று விட்டுவிடவில்லை. நம்மை காப்பாற்றும் படியாக சோர்ந்துபோன நம்மை தேற்றும்படியாக தகுதியான காரியங்களை சிந்திக்க உற்சாகப்படுத்துகிறதை பார்க்கிறோம்.

மேலும் எச்சரிப்பாக அநேக காரியங்களை நிருபங்களில் எழுதியிருக்கிறதை நாம் வாசிக்கிறோம். இந்த எச்சரிப்பு எதற்காக நம்மை காத்துக்கொள்ளும்படியாக கொடுக்கப்பட்ட எச்சரிப்பின் வார்த்தைகள். தகுதிக்கு மிஞ்சி எந்த ஒரு காரியத்தையும் செய்யாதிருக்க எச்சரிக்கப்படுகிறோம். எச்சரிக்கை போர்டுகள் வைத்திருக்கிறார்கள் எதற்காக அதைப் பார்த்து எச்சரிப்படையும்படியாக அவைகள் வைக்கப்பட்டிருக்கிறது. அதைப்பார்த்தும் படித்தும் மீறி ஒருவர் செயல்படுவரானால் அவருடைய முடிவு எப்படிப்பட்டதாக இருக்கும். அதைபோலவே நாமும் எச்சரித்துச் சொன்ன புத்திமதியான வார்த்தைகளை மீறுவோம் என்றால் நமக்கும் அப்படியாகும்.

‘‘அன்றியும், சகோதரரே, நீங்கள் இன்னின்ன பிரகாரமாய் நடக்கவும், தேவனுக்குப் பிரியமாயிருக்கவும் வேண்டுமென்று, நீங்கள் எங்களால் கேட்டு ஏற்றுக்கொண்டபடியே, அதிகமதிகமாய்த் தேறும்படிக்கு, கர்த்தராகிய இயேசுவுக்குள் உங்களை வேண்டிக்கொண்டு புத்திசொல்லுகிறோம்’’ என்கிறார் (1தெச.4;1). தகுதியாக நாம் எப்படி நடக்க முடியும் எப்படி நடக்கவேண்டும் என்ற காரியங்களைக்குறித்து பவுல் மிகவும் தெளிவாக தெசலோனிக்கேய

புத்திகத்தில் எழுதியிருக்கிறார். ஒவ்வொரு சகோதர சகோதரிகளுக்கும் இதுபோதுமானதாக இருக்கிறது. இவைகளை படித்தாலே நாம் தேவனுக்குப்பிரியமான ஒரு வாழ்க்கையை செய்ய முடியும். இவைகளிலே நாம் அதிகமதிகமாக தேர்ச்சியடையவேண்டுமென பவுல் விரும்புகிறார். பள்ளிமாணவன் எப்படி படித்து முதலிடத்தில் வருவதை அவனுடைய ஆசிரியர் விரும்புகிறாரோ அதைப்போல பவுல் விரும்புகிறார். மேலும் இந்த வசனத்தில் குறிப்பாக கர்த்தராகிய இயேசுவுக்குள் உங்களை வேண்டிக்கொண்டு புத்திசொல்லுகிறோம் என்கிறார். ஒரு தகப்பன் தன் பிள்ளையினிடத்தில் தயவாயும் மிகவும் உருக்கமாயும் வேண்டிக்கொள்வதைப்போல இங்கே வேண்டிக்கொண்டு புத்திமதியாக காரியங்களைச் சொல்லுகிறதைப் பார்க்கிறோம்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு நண்பரே, நீ தகுதியான காரியத்தை சிந்தித்து செயல்படுத்து. பரிசுத்தமும் நீதியும் பிழையின்மையுமாய் நடப்பதற்கு முயற்சி செய். அது உன்னை அழிவின் பாதைக்கு தப்புவிக்கும். மற்றபடி உன்னுடைய சரீரப்பிரகாரமான பிரயாசம் எல்லாம் வீணாய்போகும்.

### கேள்வி நேரம்

**பவுல் எல்லாவற்றையும் அநுபவிக்க அதிகாரமிருந்தும், அது ஏன் தகுதியாயிராது என்கிறார்?**

“நாம் கர்த்தருக்கு எரிச்சலை மூட்டலாமா? அவரிலும் நாம் பலவான்களா? எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது; எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் பக்திவிருத்தியை உண்டாக்காது” (1கொரிந்தியர்10:22,23). பக்திவிருத்திக்கேதுவான காரியங்களை சிந்தித்தவர், செயல்படுத்தியவர் அப்போஸ்தலனாகிய பவுல். ஒரு காரியத்தைச் செய்யும் முன்பு அது கர்த்தருக்குப் பரியமாயிருக்குமா? என்ற ஒரு கேள்வியை கேட்டு அதை செயல்படுத்த துவங்கியவர் பவுல். அநேகர் இதையெல்லாம் கர்த்தர் பெரிதாக நினைக்கமாட்டார் என்று தங்களுக்கு தாங்களே போதகர்களாக இருந்து கொண்டு தவறான அநேக காரியங்களை துணிந்துசெய்துவிடுவார்கள். ஆனால் பவுல் இந்த



விஷயத்தில் கர்த்தருக்குப்பிரியமானதை செய்யவே விரும்பினார். ஆகையால் அவரிலும் நாம் பலவான்களா? என கேள்வி எழுப்புகிறார். நாம் நேற்று உண்டானவர்கள். தேவனுடைய கரத்தின் கிரியைகளாயிருக்கிறோம். அவருடைய விருப்பத்தையும் செய்கையையும் நாம் வெளிப்படுத்தவேண்டும்.

ஆகையாலே எனக்கு எல்லாவற்றையும் அநுபவிக்க அதிகாரம் இருந்தபோதிலும் அது எல்லாம் பக்திவிருத்தியை உண்டாக்காது என்று அறிந்து அவைகளை விட்டுவிடுகிறார். நாமும் இப்படி செய்வோமென்றால் கர்த்தருக்கு பிரியமானபடி நடப்போம். தேவனுடைய நாமம் புறஜாதிகள் மத்தியில் மகிமைப்படும். இன்றே பவுலைப்போல தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 46.கர்த்தருக்குப் பிரியம்
## Acceptable to the Lord

**தே**வனை ஆராதிக்கிற அவரைத் தொழுதுகொள்ளுகிற ஒவ்வொருவரும் அவருக்குப் பிரியமானதைச் செய்யும்படியாக சிந்திக்கவேண்டும். வேதம் சொல்லுகிறது; “பலியிடுவதைப்பார்க்கிலும் நீதியும் நியாயமும் செய்வதே கர்த்தருக்குப் பிரியம்” என்று (நீதி.15:22). பொதுவாக ஜனங்கள் பலியிடுவதையே விரும்புகின்றனர். பலிசெலுத்திவிட்டால் போதும் நம்முடைய பாவங்கள் நிவர்த்தியாகிவிடும். பின்பு நம்முடைய விருப்பப்படி வாழலாம் என்று நினைக்கின்றனர். தேவன் பலிகளை ஏற்றுக்கொண்ட காலங்களில் நீதியும் நியாயத்தையும் விரும்பியிருக்கிறார். இக்காலக்கட்டத்தில் வாழ்கின்ற நாம் எத்தனை அதிகமாக அவைகளைக் குறித்து சிந்திக்கவேண்டியவர் களாயிருக்கிறோம் என்பதை எண்ணிப்பாருங்கள்.

சாமுவேல் என்ற தீர்க்கதரிசி சொல்லும்போது; “கர்த்தருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம்” என்கிறார் (1சாமு.15:22). சாமுவேல் காலத்திலே பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்

பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம் என சொல்வதை இவ்வசனத்தில் படிக்கிறோம். கர்த்தர் பலிகளையும் சடங்காசாரங் களையும் சுமந்து இளைத்துப்போனார். ஜனங்கள் பலிசெலுத்திவிட்டு மீண்டும் மீண்டும் அதே பாவத்தை தொடர்ந்து செய்கிறவர்களா யிருந்தனர். ஆகையால் செவி கொடுக்கவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார். தேவனுடைய சித்தங்களையும், அவருடைய நோக்கங்களையும் அவருடைய வசனங்கள் மூலமே நாம் அறியமுடியும். அவைகளை முதலாவது அறிந்துகொண்டு அதன்படியாக ஒவ்வொருவரும் நடக்கவேண்டுமென அவர் விருப்பமுள்ளவரா யிருக்கிறார்.

சாமுவேல் தேவனுடைய வார்த்தையின் சத்தத்தைக்கேட்டவுடனே சொல்லும் அடியேன் கேட்கிறேன் என்று கீழ்ப்படிதலோடு கேட்டவன். அதைப்போல ஒவ்வொருவரும் அவருடைய வசனத்திற்கு செவிகொடுத்து அதன்படியாக வாழக் கற்றுக்கொள்ளவேண்டும்.

ஏசாயா தீர்க்கதரிசி சொல்லுகிறார்; ''நீங்களெல்லாரும் கூடிவந்து கேளுங்கள்; கர்த்தருக்குப் பிரியமானவன் அவருக்குச் சித்தமானதைப் பாபிலோனில் செய்வான்; அவன் புயம் கல்தேயரின்மேல் இருக்கும் என்பதை இவர்களில் அறிவித்தவன் யார்?'' என்று ஏசா.48:14-ல் படிக்கிறோம். நீங்கள் கர்த்தருக்குப் பிரியமானவர்களாயிருப்பீர்களானால் அவருடைய சித்தத்தின்படியாக நடப்பீர்கள். சித்தம் என்பது அவருடைய விருப்பத்தின்படி செய்வது. இதுவே அவருடைய சித்தமாயிருக்கிறது. சிலர் அவருடைய சித்தத்தின்படி ஆகட்டும் என்று சொல்லிவிட்டு தங்களுடைய விருப்பத்தின்படி நடக்கவில்லையே என்று கவலை கொள்ளுவார்கள்.

நாம் அவருடைய சித்தத்திற்கு ஒரு காரியத்தை விட்டுவிட்டால் அது லாபமாக இருந்தாலும் நஷ்டமாக இருந்தால் அதுவே தேவனுடைய சித்தம் என ஏற்றுக்கொள்ளவேண்டும். நாம் இருதயத்தில் ஒன்று வைத்துக்கொண்டு, அவருடைய சித்தத்தின்படி ஒப்புக்கொடுத்துவிட்டேன் என்று உதட்டலவில் பேசுவது சரியான ஒப்புக்கொடுத்தலல்ல. ஆண்டவர் இயேசு ஜெபிக்கும்போது உம்முடைய சித்தத்தின்படியே ஆகட்டும் என்று ஜெபித்தார். நாமும் அந்தப்படியாக தேவனுடைய சித்தத்திற்கு முழுவதுமாக ஒப்புக்கொடுத்து ஜெபிக்க வேண்டியவர்களாயிருக்



கின்றோம்.

கர்த்தருக்குப்பிரியமானது நீதியும் நியாயமும் செய்வது. இன்றைக்கு நீதியையும் நியாயத்தையும் கைக்கொள்ளுகிறவர்கள் மிகவும் குறைவாக இருக்கிறார்கள். ஆகையால் பாவம் உலகத்தில் பெருகியிருக்கிறது. ''நீதிமான் தன் நீதியைவிட்டு விலகி, அநீதிசெய்து அதிலே செத்தால், அவன் செய்த தன் அநீதியினிமித்தம் அவன் சாவான்'' (எசே.18:26). நீதிமான் தன்னுடைய நீதியில் நிலைத்திருந்து, நீதிக்காக அவன் போராடவேண்டியவனாயிருக்கிறான். ஒருவேளை அவன் தன் நீதியைவிட்டு விலகி அநீதிசெய்தால் அதினாலே அவன் சாவான். கொஞ்சநாட்கள் நீதியாய் நடந்தானே என்று நாம் சொல்லலாம். பாவம் கொடிய விஷம் நிறைந்தது. இந்த பாவம் கொஞ்சமாக நம்முடைய வாழ்க்கையில் இருந்தாலும் பாவம் பாவம் தான். அதினாலே மரணம் நிச்சயம்.

சின்ன பாவம், பெரிய பாவம் என்று இல்லை எல்லாமே பாவம்தான். நீதிமான் தன்னுடைய நீதியை காத்துக்கொள்ள வேண்டியவனாக இருக்கிறான். அதைப்போல பரிசுத்தமாக்கப்பட்ட ஒரு விசுவாசி தன்னுடைய விசுவாசத்தைக் காத்துக்கொள்ளவேண்டிய வனாயிருக்கிறான். நாம் ஒருமுறை பரிசுத்த மாக்கப்பட்டு ஞானஸ்நானம் எடுத்துவிட்டோம் இனி கவலையில்லை நாம் எப்படிவேண்டுமானாலும் ஜீவிக்கலாம் என்பதல்ல. அவன் தன் விசுவாசத்தையும் தன்னுடைய பரிசுத்தத்தையும் இறுதிவரை காக்கவேண்டிய பொறுப்பு அவனுக்கு இருக்கிறது. இல்லையேல் அவன் உயிரோடிருந்தும் செத்தவனாயிருப்பான்.

அவனுக்குள் தேவனுடைய ஆவியானவர் வாசமாயிருப்பது எப்படி? அவன் தேவனோடு இசைந்தவனாக; அவருடைய வல்லமையுள்ள வசனத்தை தன்னுடைய இருதயத்தில் தரித்தவனாக இருக்கும்போது அவன் ஆவியில் அனலுள்ளவனாயிருக்கிறான். அப்படிப்பட்டவனை பாவம் அணுகாது ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது. ''நீதிமானுக்கு ஒரு கேடும் வராது; துன்மார்க்கரோ தீமையினால் நிறையப்படுவார்கள். பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள்; உண்மையாய் நடக்கிறவர்களோ அவருக்குப் பிரியம்'' என நீதி.12:21,22 வசனங்களில் வாசிக்கிறோம்.

நீங்கள் உண்மையுள்ள கிறிஸ்தவர்களாயிருப்பீர்களானால் அவருக்குப்பிரியமானவர்கள் என்று வசனம் சொல்லுகிறது. ஆனால் பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள். அப்படிப்பட்டவர்கள்மேல் கர்த்தர் பிரியமாயிரார். அவர் பொய்யை வெறுக்கிறார். அவர் பொய்யுரையாத தேவன் என காண்கிறோம். அப்படிப்பட்டவரை ஆராதிக்கிற ஒவ்வொருவரும் அவரைப்போலவே இருக்கவேண்டும்.

கர்த்தருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களில் சிலரால் அவருக்குப்பிரியமாயிருக்க முடியாமல்போய்விடுகிறது. அதற்கு முக்கிய காரணம்; விவாகம் என காண்கிறோம். பவுல் இதைக்குறித்து பேசும்போது; “நீங்கள் கவலையற்றவர்களாயிருக்க விரும்புகிறேன். விவாகமில்லாதவன் கர்த்தருக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று கர்த்தருக்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறான். விவாகம் பண்ணிவன் தன் மனைவிக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று, உலகத்திற்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறான். அதுபோல, மனைவியானவளுக்கும் கன்னிகைகளுக்கும் வித்தியாசமுண்டு விவாகமில்லாதவள் சரீரத்திலும் ஆத்துமாவிலும் பரிசுத்த மாயிருக்கும்படி, கர்த்தருக்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறாள்; விவாகம்பண்ணினவள் தன் புருஷனுக்கு எப்படிப் பிரியமாயிருக்கலா மென்று உலகத்திற்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறாள்” (1கொரி.7:32,-34).

விவாகம் பண்ணின கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் எப்படி அவரவருக்குப் பிரியமாயிருக்கலாமென்று உலகக்காரியங் களுக்காக கவலைப்படுகிறவர்களாயிருக்கிறார்கள். இவர்களால் கர்த்தரை பிரியபடுத்த முடியாமற்போய்விடுகிறது. ஆனால் விவாகமில்லாதவர்கள் இந்தவிதமான கவலையற்றவர்களாயிருப்பதால் கர்த்தருக்கு எப்படி பிரியமாயிருக்கலாம் என்று கர்த்தருக்கு ஏற்றகாரியங்களைக் குறித்து சிந்திக்கிறவர்களாயிருக்கின்றனர்.

நீங்கள் எப்படிப்பட்டவராயிரக்கிறீர்கள்? உலகக் காரியங்களில் சிக்குண்டு தவிக்கிறீர்களா? கர்த்தரைப் பிரியப்படுத்திக்கொண்டு, கர்த்தருக்காக வாழ்ந்துகொண்டு வருகின்றீர்களா? உங்களை முதலாது சீர்தூக்கிப்பாருங்கள்.



ஒரு துன்மார்க்கன் மனந்திரும்புவதையே தேவன் விரும்புகிறார். “துன்மார்க்கன் தான் செய்த துன்மார்க்கத்தைவிட்டு விலகி, நியாயத்தையும் நீதியையும் செய்வானேயாகில், அவன் தன் ஆத்துமாவைப் பிழைக்கப்பண்ணுவான். அவன் எச்சரிப்படைந்து, தான் செய்த எல்லா மீறுதல்களையும் விட்டுத் திரும்புகிறபடியினாலே அவன் பிழைக்கவே பிழைப்பான், அவன் சாவதில்லை” என எசே.18:27,28 வசனங்களில் படிக்கிறோம்.

பலருக்கு எச்சரிப்பின் சத்தம் கேட்கிறது. அப்படியிருந்தபோதும் அவர்கள் அதைக்கண்டுகொள்வதில்லை. துன்மார்க்க உலையில் நீடித்திருக்கிறார்கள். அதைவிட்டு விலகி நீதியையும் நியாயத்தையும் செய்யும்போது அவனுடைய ஆத்துமா அழிவிலிருந்து காக்கப்படுகிறது. இதைக் குறித்து சிந்திக்கிறவர்களும், உணர்ந்தவர்களும் தங்களை பொல்லாத வழியிலிருந்து காத்துக்கொள்ளுகிறார்கள். வேதாகமம் ஒவ்வொருநாளும் எச்சரித்துக்கொண்டே இருக்கிறது. எனக்கு ஒன்றும் தெரியாது என்று ஒருவரும் சாக்குபோக்கு சொல்ல இடமில்லை. இப்போது நீங்கள் இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிறீர்கள். கர்த்தருடைய வசனம் உங்களை எச்சரித்துப் புத்திசொல்லிக் கொண்டிருக்கிறது.

அதுபோல தொலைக்காட்சிகளிலும் மற்றும் மாத பத்திரிகைகள் மூலமாகவும் கைபிரதிகள் மூலமாகவும் அநேக சுவிசேஷர்கள் மூலமாகவும் தேவனுடைய வார்த்தை ஒவ்வொரு நாளும் பலவழிகளில் துன்மார்க்கத்தைக்குறித்து எச்சரித்துக்கொண்டிருக்கிறது. ஜனங்கள் எப்படி குடி குடியைக்கெடுக்கும் என்ற வாசகம் ஒட்டப்பட்ட லேபிளைப் பார்த்துக்கொண்டே ஒவ்வொருநாளும் அதைவாங்கிக் குடித்து, கெட்டுப்போகிறார்களோ, அதைப்போல எச்சரிப்பின் சத்தம் கேட்டும் அதற்கு செவிகொடாமல் செவிட்டு விரியனைப்போல இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள்.

“துன்மார்க்கருடைய பலி அருவருப்பானது; அதைத் துர்ச்சிந்தையோடே செலுத்தினாலோ எத்தனை அதிகமாய் அருவருக்கப்படும்” என நீதி.21:27-ல் படிக்கிறோம். தேவன் பலியைப் பார்க்கவில்லை பலி செலுத்தும் நபரைப் பார்க்கிறார். அந்த நபர் துன்மார்க்கராய் இருப்பாரென்றால் அவர் செலுத்தும் எதையும் கர்த்தர்

ஏற்கமாட்டார். ஆகையால் துன்மார்க்கனை கர்த்தர் வெறுக்கிறார் என்று அர்த்தமல்ல. “துன்மார்க்கன் சாகிறது எனக்கு எவ்வளவேனும் பிரியமோ? அவன் தன் வழிகளை விட்டுத் திரும்பிப் பிழைப்பது அல்லவோ எனக்குப் பிரியம் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்” (எசே.18:23).

ஒருவரும் கெட்டுப்போவது தேவனுடைய சித்தமல்ல எல்லோரும் மனந்திரும்பவேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார். ஒரு மனிதனுடைய வழி தவறாக இருக்கும்போது அவன் அந்த வழியை விட்டு திரும்பவேண்டுமென வேதம் போதிக்கிறது. அவன் பிழைக்கவேண்டுமானால் அவன் அந்த வழியை விட்டுவிட்டே ஆகவேண்டும். அப்பொழுதே அவன் ஆத்துமா ஜீவ வழியைக் கண்டுகொண்டு காக்கப்படும்.

எந்த ஒரு ஆத்துமாவும் கெட்டுப்போவது அவருக்குப்பிரியமல்ல என்பதை முதலவாது அறிந்துகொள்ளுங்கள். நமக்கு வேண்டுமானால் ஒருநபர் பிடிக்காமல் இருக்கலாம். ஆனால் பிதாவாகிய தேவன் எல்லோரையும் நேசிக்கிறார். எல்லோரும் மனந்திரும்பி பிழைக்கவே விரும்புகிறார். கர்த்தருக்குப்பிரியமான வழியைத் தெரிந்து கொள்ளுங்கள்.

### கேள்வி நேரம்

**ஒரு ஊழியன் யாருக்குப்பிரியமாய் இருந்து ஊழியம் செய்ய வேண்டும்?**

பொதுவாக ஊழியக்காரர்கள் அதிகமாக மனிதனைப் பிரியப்படுத்தவே முற்படுகின்றனர். ஏனெனில் மனிதன் முகத்தைப் பார்க்கிறான் தேவனோ இருதயத்தைப்பார்க்கிறார். முகத்தைப்பார்க்கிற மனிதனுக்கு முன்பாக நல்லவன்போல அவனைப்பிரியப்படுத்தும் படியாக அநேக வேலைகளைச் செய்கிறார்கள். அதில் உண்மையிருக்கிறதோ இல்லையோ அவர்களைப் பிரியப்படுத்தும் படியாக வேலைகள் நடைபெறுகிறது. அதினாலே மனிதனுடைய பார்வையில் நற்பெயரை சம்பாதித்துவிடுகிறார்கள். ஆனால் அப்போஸ்தலனாகிய பவுல் எபேசிய கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது; “மனுஷருக்குப் பிரிமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு



ஊழியஞ்செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள்” என வேலைக்காரர்களுக்கு எழுதியிருக்கிறார் (எபே.6:6). ஒவ்வொருவருடைய மனம் அவரவருக்கு தெரியும். ஆகையால் மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி ஊழியம் செய்யுங்கள். உங்களுடைய ஊழியம் கர்த்தருக்கா? அல்லது மனுஷரைப் பிரியப்படுத்தவா? நீங்கள் கொஞ்சநாட்கள் இவ்வுலகில் ஊழியம் செய்யப்போகிறீர்கள். அந்தநாட்களில் கிறிஸ்துவின் ஊழியக்காரர்களாக இருந்து ஊழியஞ்செய்யுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 47. அவருடைய தீர்மானம்
## His Purpose

உலகத்திலே அநேகர் ஜீவித்தபோதிலும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை நாம் காணமுடிகிறது. அப்படிப்பட்டவர்களுக்கு தேவன் எப்போதும் நல்லவராகவே இருக்கிறார். பவுல் சொல்லும்போது; “அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்” என்கிறார் (ரோ.8:28). ஆம் தேவன் எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்திருக்கிறார். அப்படிப்பட்டவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாகவே நடக்கிறது. இங்கே சகலமும் என்ற ஒரு வார்த்தையைக் காண்கிறோம்.

அவர்கள் கையிட்டு செய்யும் சகலத்தையும் ஆசீர்வதிக்கிறார். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு போன்ற முற்பிதாக்களைப் பாருங்கள். அவர்கள் செய்யும் எல்லாவற்றையும் கர்த்தர் முன்நின்று ஆசீர்வதித்தார். அவர்கள் செல்லும் இடங்களெல்லாம் ஆசீர்வாதமாக இருந்தது. ஒரு குறையுமின்றி அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். ஆபிரகாம் விசுவாசிகளின் தகப்பன் என்று ஆசீர்வதிக்கப்பட்டான். ஈசாக்கு விதை விதைத்தான் அவனை நூறு மடங்கு ஆசீர்வதித்தார். ஈசாக்கோடு கர்த்தர் இருக்கிறார் என்று அவனை எதிர்த்த ஜனங்கள் அறிந்துகொண்டு அவனோடு சமாதான வார்த்தைகளை பேசும்படியாக வந்தார்கள். அதைப்போல யாக்கோபு லாபானிடத்தில் வேலை செய்யும்போது; கர்த்தரால் யாக்கோபின் மந்தை ஆசீர்வதிக்கப்பட்டது. இதினாலே

யாக்கோபு பலத்தான். அவன் இஸ்ரவேல் என்று தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டான். இந்த மூன்று பிதாக்களும் அவருடைய தீர்மானத்தின்படியே தெரிந்துகொள்ளப்பட்டு தேவனால் ஆசீர்வதிக்கப் பட்டார்கள். அந்தப்படியாக யோசேப்பும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களில் ஒருவனாயிருந்தான். அவன் சொல்லும்போது; "நீங்கள் எனக்கு தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படி, அதை நன்மையாக முடியப்பண்ணினார்" என்றான் (ஆதி.50:20).

யோசேப்பின் சகோதரர்கள் அவனுக்கு விரோதமாக நினைத்து அவனை இஸ்மவேலரின் கையில் இருபது வெள்ளிக்காசுக்கு விற்றுப்போட்டார்கள். அவனோ எகிப்திலே கர்த்தராலே உயர்த்தப்பட்டு இருக்கும்போது தன் சகோதரர்கள் தானியங்கொள்ள சென்றிருந்தபோது அவர்கள் தன் சகோதரர்கள் என்று அறிந்து, அவர்களை பழிவாங்காமல் தேவன் அதை நன்மையாக முடியப்பண்ணினார் என்று சொல்லி அவர்களை நேசித்து அவர்களுக்கு வேண்டி தானியங்களை கொடுத்ததுமின்றி, தன் தகப்பனுடைய சுகசெய்தியை விசாரித்து அவர்களை அழைத்து எகிப்திலே தங்கவைத்தான். தேவன் இந்த யோசேப்பை அவருடைய தீர்மானத்தின்படி அழைத்தபடியால் அவனுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடைபெற்றது.

மேலும் "தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்" என்று பவுல் ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதியிருக்கிறார் ரோம.8:29. முன்னறிந்தவர்களை தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார் என படிக்கிறோம்.

தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அவருடைய சந்ததிகளாயிருக் கிறார்கள். இயேசுவைப்போல சாயலைப்பெற்றவர்களாயிருக்கிறார்கள். கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவினுடையவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறார்கள். சபையாக இருக்கிறார்கள். குமாரன் பிதாவைப்போல இருக்கிறார். குமாரனையுடையவர்கள் குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாகயிருக்கிறார்கள். பவுல் சொல்லுகிறர்; "தமது சித்தத்தின்



ஆலோசனைக்குத்தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மாத்தின்படியே, நாங்கள் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்துகொள்ளப்பட்டோம்" என்கிறார் (எபே.1:12). அப்போஸ்தலர்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். அவர்களை கர்த்தர் தம்முடைய ஊழியத்திற்கு ஏற்படுத்தினார். எல்லாரும் அப்போஸ்தலர்களா? எல்லாரும் தீர்க்கதரிசிகளா? என்று வாசிக்கிறோம்.

அப்போஸ்தலர்கள் பிரத்தியேச்சமாக முன்குறிக்கப்பட்டு அவருடைய தீர்மானத்தின்படி தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். இன்றைக்கு அந்த அப்போஸ்தலர்கள் இருக்கிறார்களா? அவர்கள் எழுதின புத்தகங்களை நாம் படிக்கிறோம். அவர்களுடைய உபதேசமாகிய கிறிஸ்துவின் உபதேசத்தில் நடக்கிறோம். "ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்" (எபே.2:10).

ஒவ்வொருவரும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள்ளாக சிருஷ்டிக்கப்படுகிறோம். எதற்காக, நற்கிரியைகளைச் செய்யும் படியாகவும், தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றும்படியாகவும், அவருடைய வல்லமையுள்ள வசனத்தின்படியாக நடக்கும்படியாகவும் நம்மை ஆயத்தம்பண்ணியிருக்கிறார். இந்த மேலான சத்தியத்தை ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் புரிந்துகொண்டு அதன்படியாக நடக்க தன்னை அநுதினமும் ஒப்புக்கொடுக்க வேண்டும். தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஒவ்வொருவரும் சுதந்தரவாளிகளாயிருக் கிறார்கள். பாவத்திற்கோ அல்லது எந்த ஒரு மனிதனுக்கோ அவர்கள் அடிமைகள் அல்ல. கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட சுதந்தரவாளிகளாயிருக்கிறார்கள்.

ஆகையால் தேவனால் முன்குறிக்கப்பட்டவர்கள் இயேசுவின் சாயலுக்கு ஒப்பாக மாற்றப்பட்டவர்கள். எனவே பவுல் சொல்லும்போது ஒருவனும் எனக்கு வருத்தம் உண்டாக்காதிருப்பானாக இயேசுவின் சாயலை என் சரீரத்திலே தரித்திருக்கிறேன் என்கிறார். நீங்களும் அவ்விதமாக இயேசுவைத் தரித்துக்கொண்டீர்களா?

மேலும், “எவர்களை முன்குறித்தரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்” (ரோம.8:30). இவ்வசனப்பகுதியில் பவுல் மிகத்தெளிவாக போதித்திருக்கிறதை நாம் காண்கிறோம். முன்குறித்தவர்களை அழைத்திருக்கிறார். ஆபிராகாம் ஈசாக்கு யாக்கோபு, அநேக ராஜாக்கள், அநேக தீர்க்கதரிசிகள் இவர்களை முன்குறித்த கர்த்தர் அழைத்தார்.

அதைப்போல முன்குறிக்கப்பட்ட அப்போஸ்தலர்களை தம்முடைய ஊழியத்திற்காக அழைத்துமிருக்கிறார். இப்படி முன்குறிக்கப்பட்டு அழைக்கப்பட்டவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார். அவர் பரிசுத்தராயிருக்கிறபடியால் தம்மால் அழைக்கப்பட்டவர்களையும் பரிசுத்தப்படுத்துகிறார் எனக் காண்கிறோம்.

ஆபிரகாமை அழைக்கும்போது; நீ உன் தேசத்தையும் உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப்போ” என்றார் (ஆதி.12:1). இந்த அழைப்பின் சத்தத்தைக் கேட்ட ஆபிரகாம் எந்தவிதமான சாக்குபோக்கான காரியங்களும் சொல்லாம் எல்லாவற்றையும் விட்டு தேவன் காண்பித்த தேசத்திற்கு போனான். அவன் அந்த தேசத்திற்கு போகும் முன் அவனுக்கு அந்த தேசத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது, ஒரு அடி இடம் கூட அவனுக்கு அந்த தேசத்தில் இல்லை. இருந்தபோதும் விசுவாசத்தோடு தம்மை அழைத்த தேவன் உண்மையுள்ளவர் என்று எண்ணி அவரை நம்பி தனக்கு சொந்தமான எல்லாவற்றையும் விட்டு சென்றான்.

“வேதவாக்கியம் என்ன சொல்லுகிறது? ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்று சொல்லுகிறது” (ரோம.4:3). அழைக்கப்பட்ட ஆபிரகாம் நீதிமானாக கருதப்பட்டான். அதற்கு அவனுடைய விசுவாசமே காரணமாயிற்று. விசுவாசத்தினாலே நீதிமானாக மாற்றப்பட்டான். இன்றைக்கு உங்களுடைய விசுவாசமும் என்னுடைய விசுவாசமும் எப்படிப் பட்டதாயிருக்கிறது. காணாததை விசுவாசிக்கிற நீங்களும் நானும்



விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாமோடு சேர்ந்து ஆசீர்வதிக்கப் படுகிறோம்.

மேலும் மகிமைப்படுத்தினார். “அநேக ஜாதிகளுக்கு உன்னைத் தகப்பனாக ஏற்படுத்தினேன் என்று எழுதியிருக்கிறபடி, அவன் தான் விசுவாசித்தவருமாய், மரித்தோரே உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைக்கிறவருமாயிருக்கிற தேவனுக்கு முன்பாக நம்மெல்லாருக்கும் தகப்பனானான்” (ரோ.4:17). ஆபிரகாமை முன்குறித்த தேவன் அவனை அழைத்தார், பின்பு நீதிமானாக மாற்றினார். அதன்பின்பு அவனை மகிமைப்படுத்தியுமிருக்கிறார் எனக்காண்கிறோம். இத்தனை ஆசீர்வாதங்களையும் தேவனுடைய சமுகத்தில் பெற்றுக்கொண்டவன் ஆபிரகாம். இந்த ஆபிரகாமைப்போல நீங்களும் தேவனுடைய சித்தங்களைப் புரிந்துகொண்டு அதன்படியாக உங்களை மாற்றியமைத்துக்கொண்டு ஆசீர்வதிக்கப்படுங்கள்.

ஆபிரகாமை தெரிந்துகொண்ட கர்த்தர் ஒவ்வொருவரையும் அவ்விதாகவே தெரிந்துகொள்ள சித்தமுள்ளவராயிருக்கிறார். “வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்” என்ற அழைக்கும் இயேசுவண்டை வாருங்கள் (மத்.11:28). இந்த அழைப்பு ஒரு சாராருக்கு மட்டுமல்ல, உலகத்தில் உள்ள அனைத்து தேசத்தாருக்கும், அனைத்து நிறத்தவருக்கும், அனைத்து மொழிபேசுகிறவர்களுக்கும் பொருந்தக்கூடியதாக இருக்கிறது. ஆகையால் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று அழைக்கிறார்.

இப்படி அழைக்கப்பட்டவர்களை நீதிமான்களாக்குகிறார்; “தேவன் பொறுமையாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங்களைத் தாம் பொறுத்துக்கொண்டதைக்குறித்துத் தம்முடைய நீதியைக் காண்பிக்கும்பொருட்டாகவும், தாம் நீதியுள்ளவரும், இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறவருமாய் விளங்கும்படி, இக்காலத்திலே தமது நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும்” என வாசிக்கிறோம் (ரோம.3:25). இயேசுவினிடத்தில் யாரெல்லாம் விசுவாசமாயிருக்கிறார்களோ அவர்களை நீதிமான்களாக்குகிறவர் கர்த்தர் என காண்கிறோம். பாவிகளை இரட்சிக்க மனுஷகுமாரனுக்கு

அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை நிரூபித்துக்காண்பிக்கும் படியாக திமிர்வாதக்காரனைநோக்கி உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட என்றார் அவன் உடனே தன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்தான். இதைக்கண்ட ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள். சிலர் தேவனை மகிமைப்படுத்தினார்கள். ''நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்'' (ரோம.8:17). அவரோடு கூட பாடுபடுகிறவர்கள் அவரோடேகூட மகிமைப்படுத்தப்படுவார்கள். இதை நீங்கள் விசுவாசித்தால் உங்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாகவே நடைபெறும்.

**கேள்வி நேரம்**

**அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களுக்கு பாடுகள் வராதா?**

நிச்சயமாக பாடுகள் வரும். ஒருவன் என்னைப்பின்பற்றி வரவிரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன் என்று சொன்ன ஆண்டவரின் வசனத்தை நினைவுகூருங்கள். பவுலைப்பற்றி அறியாதவர்களே இருக்கமுடியாது; ஒரு முறை சேனாபதி பவுலைநோக்கி: ''நான் மிகுந்த திரவியத்தினாலே இந்த சிலாக்கியத்தைச் சம்பாதித்தேன் என்றான். அதற்கு பவுல்: நானோ இந்தச் சிலாக்கியத்திற்குரியவனாகப் பிறந்தேன் என்றான்'' (அப்.22:28). ஒரு அரசியல் வாதியைப்போல சேனாபதி சொன்னான்; ஆனால் பவுல் இந்தப் பாடுகளை அநுபவிக்கிறதற்காகவே பிறந்தேன் என்றான்.

ஆம், அன்பானவர்களே, கிறிஸ்தவ வாழ்க்கை என்பது பாடுகள் நிறைந்த வாழ்க்கை. ஆனால் ஒன்று சகலமும் அப்படிப்பட்டவர்களுக்கு நன்மைக்கு ஏதுவாகவே நடக்கிறது என்பது உண்மையிலும் உண்மையாக இருக்கிறது. இதை அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்கள் தெரிந்துகொள்ளுவார்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



## 48. உங்கள் வாசல்களில்...
## In Your Gates...

**ந**ம்முடைய இல்லங்களில் நாம் எப்படி வாழ்ந்துகொண்டிருக்கிறோம். எப்படிவேண்டுமானாலும் வாழலாம் என்பது வாழ்க்கையல்ல. இப்படித்தான் வாழவேண்டுமென வேதாகமம் போதிக்கிறது. ''நீங்கள் செய்யவேண்டிய காரியங்கள் என்னவென்றால்; அவனவன் பிறனோடே உண்மையைப் பேசுங்கள்; உங்கள் வாசல்களில் சத்தியத்துக்கும் சமாதானத்துக்கும் ஏற்க நியாயந்தீருங்கள்'' (சகரி.8:16). இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேலுக்கு நல்லவராகவேயிருந்தார். அவர்களை தம்முடைய ஜனங்களாக தெரிந்துகொண்டிபடியினாலே தம்முடைய விருப்பத்தின்படி நடக்கவேண்டுமென அவர் எதிர்பார்த்தார். ஆகையால் அவனவன் பிறனோடே உண்மையைப் பேசுங்கள்; உங்கள் வாசல்களில் சத்தியத்துக்கும் சமாதானத்துக்கும் ஏற்க நியாயந்தீருங்கள்.

தேவனுடைய ஜனங்களுடைய வீடு சத்தியத்திற்கும் சமாதானத்துக்கும் சாட்சியுள்ள வீடாக இருக்க வேண்டும். பேசுவது வேதம் செயல்பாடுகளோ பாவம் என்று இருந்தால் எப்படியிருக்கும். தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். அவரைப் பின்பற்றுகிற, அவரை ஆராதிக்கிற ஒவ்வொருவரும் பிறனோடே உண்மையைப் பேசவேண்டும். ஒருபோதும் பொய்யுரையாத தேவனை ஆராதித்துக்கொண்டு சத்தியத்திற்கும் சமாதானத்துக்கும் விரோதமாக நடந்துகொண்டிருப்போமானால் தேவன் நம்மோடிருப்பது எப்படி? சண்டைக்காரர் வீடு என்றும், கலகக்காரர் வீடு என்று பெயர் எடுப்போமானால், நம்முடைய சாட்சி சமுதாயத்தின் மத்தியில் எப்படியிருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள்.

சத்தியத்தை பின்பற்றுகிற நீங்கள் உங்களுடைய வீடுகளில் சத்தியம் வெளிப்படவேண்டும். வழக்குக்கும், வாதுக்கும் விலகி கூடுமானால் யாவரோடு சமாதானமாயிருக்கும்படியாக நாடுங்கள். அப்பொழுது சமாதானக் கர்த்தர் உங்களோடிருப்பார்.

''அன்றியும், நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிற படியால், பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப்

பேசக்கடவன்'' (எபே.4:25). கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கிறவர்கள் கிறிஸ்துவின் சரீரமாக இருக்கிறார்கள். ஆனபடியால் அவர்கள் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறார்கள். ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் சரீரத்திலே சேர்ந்து பாடுபடுகிறது. ஒருஅவயவம் மற்ற அவயவத்திற்கு விரோதமாக செயல்படாது. ஆக நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறபடியால் பொய்யைக் களைந்து மற்றவர்களோடு உண்மையை பேசவேண்டும். இதை ஒவ்வொருவரும் செய்வார்கள் என்றால் உலகம் எப்படியிருக்கும், நாடும் வீடும் எப்படியிருக்கும், கிறிஸ்தவ மார்க்கம் எந்த அளவு வளர்ச்சிப்பாதையில் இருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள்.

''மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்ததுபோல, இவரும் தம்மை ஏற்படுத்தினவருக்கு உண்மையுள்ளவராயிருக்கிறார்'' (எபி.3:2). ஆறு லட்சத்திற்கும் அதிகமான ஜனங்களை வழிநடத்திக்கொண்டு சென்றவன் மோசே, அவன் தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்திருக்கிறான். அப்படியென்றால் ஒரு உக்கிராண உத்தியோகத்தைப் பெற்றவனாயிருந்தான்.

அந்நாட்களில் ஒவ்வொருவரிடமும் ஒரு ரூபாய் வசூல் செய்திருந்தாலும் அன்றைய நாட்களிலே மோசே ஆறு லட்சத்திற்கும் மேலாக பணத்தை வசூலித்திருப்பார். ஆனால் அவர் அவ்விதமாக செய்யவில்லை. இன்றை நாட்களில் ஆண்டவரின் பெயரைச்சொல்லிக் கொண்டு ஆயிரம் ரூபாய் கொடுக்கிறவர்கள் இரண்டாயிரம்பேர் தேவை, ஐயாயிரம் கொடுக்கிறவர்கள் பத்தாயிரம்பேர் தேவை என்று அடுக்கிக்கொண்டே போகிறார்கள். தங்களுடைய என்னங்களையும் இச்சைகளையும் நிறைவேற்றும்படியாக ஜனங்களிடத்தில் வசூல்வேட்டையாடுகிறார்கள்.

ஆண்டவரோ அவருடைய சீடர்களோ அல்லது பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளோ பணவசூல் வேலையில் இருந்ததாக எங்கும் நாம் வாசிக்க முடிவதில்லை. ஆனால் பெருவயிற்று சோம்பேரி ஊழியர்கள் கர்த்தருடைய நாமத்தைச் சொல்லி உண்மையில்லாதவர்களாக இருந்துகொண்டு ஜனங்களை வஞ்சிக்கிறார்கள்.



இரண்டாவது சமாதானத்துக்கு ஏற்க நியாயந்தீர்க்க போதிக்கப் படுகிறோம். சமாதானம், சமாதானம் என்று சொல்லுவார்கள் ஆனால் அங்கே சமாதானத்திற்கான அறிகுறிகளே காணப்படாது. கர்த்தர் தம்முடைய ஜனங்களை சந்திக்கும்போது உங்களுக்கு சமாதானமுண்டாவதாக என்றார். நாமும் ஒருவரையொருவர் சந்திக்கும்போது இவ்வார்த்தைகளை சொல்லலாம். சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள் என காண்கிறோம்.

ஒரு முறை இயேசுவினிடத்தில் ''விபசாரத்திலே கண்டு பிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீயை வேதபாரகரும் பரிசேயரும் அவரிடத்தில் கொண்டு வந்து, அவளை நடுவே நிறுத்தி: போதகரே, இந்த ஸ்திரீ விபசாரத்தில் கையும் மெய்யுமாய்ப் பிடிக்கப்பட்டாள்... இப்படி அவர்கள் ஓயாமல் அவரைக் கேட்டுக் கொண்டிருக்கையில், அவர் நிமிர்ந்து பார்த்து; உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன் என்று சொல்லி, அவர் மறுபடியும் குனிந்து தரையிலே எழுதினார்'' (யோவா.8:3,4,7,8). நடந்தது என்ன? ஒவ்வொருவராய் போய் விட்டார்கள். ஏன் எல்லோரும் பாவிகள் என்பதை ஒத்துக்கொண்டார்கள்.

இயேசுவும் அந்த விபசார ஸ்திரீயை நியாயந்தீர்க்காமல் போ இனி பாவம் செய்யாதே என்று அனுப்பிவிட்டார். சமாதானத்திற்கு ஏற்க அங்கே அவருடைய தீர்ப்பு இருந்தது. ஒருவேளை மன்னிக்காமல் கையும் களவுமாக பிடிபட்ட அவளை கர்த்தர் நியாயந்தீர்த்திருப்பாரென்றால் அவளுடைய நிலமை என்னவாயிருக்கும் என்பதை நினைத்துப் பாருங்கள். பழைய ஏற்பாட்டு காலத்தில் தேவன் இஸ்ரவேலின் பன்னிரெண்டு கோத்திர பிதாக்களின் நாமத்தை மகிமைப்படுத்தும்படியாக எருசலேமின் வாசல்களுக்கு அவர்களுடைய பெயரை தரிக்கும்படியாக சொன்னார்.

அந்தப்படியாக ''நகரத்தின் வாசல்கள் இஸ்ரவேல் கோத்திரங் களுடைய நாமங்களின்படியே பெயர் பெறக்கடவது''என எசே.48:31-ல் படிக்கிறோம். தேவன் கலகத்திற்கு தேவனல்ல சமாதானத்திற்கு தேவன் எனக்காண்கிறோம். பிள்ளைகள் பெற்றோருடைய பெயரைக் காப்பாற்றவேண்டும் என முதாதையர் எதிர்பார்ப்பார்கள். அதற்கு ஏற்றாற்போல இஸ்ரவேலின் கோத்திரப்பிதாக்களுடைய நாமம் எருசலேமின் வாசல்களுக்கு நாலாபக்கமும் தரிக்கப்பட்டது.

இன்றைக்கும் சிலருடைய பெயர்களை தெருக்களுக்கு வைக்கிறார்கள். அவர்கள் யார்? எப்படிப்பட்டவர்கள் என்று நாம் விசாரிக்கும்போது அந்த பகுதியில் சமாதானத்துக்கு ஏற்றகாரியங்களைப் பேசுகிறவராயிருந் திருப்பார்கள் ஆகையால் அவர்களுடைய பெயரை அந்த பகுதி மக்கள் விரும்பி வைத்திருப்பார்கள். அன்பானவர்களே, நாமும் நம்முடைய வாசல்களில் சமாதானத்துக்கேற்ற காரியங்களை பேசுவோம் அப்பொழுது சமாதானத்தின்தேவன் நம்முடைய வாசல்களை ஆசீர்வதிப்பார்.

மேலும் ‘‘ஒருவனும் பிறனுக்கு விரோதமாய்த் தன் இருதயத்தில் தீங்கு நினையாமலும், பொய்யாணையின்மேல் பிரியப்படாமலும் இருங்கள்; இவைகளெல்லாம் நான் வெறுக்கிற காரியங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்’’ (எசே.48:31). கர்த்தர் வெறுக்கிற காரியங்களை அவரைப் பின்பற்றுகிற நீங்களும் நானும் கட்டாயம் வெறுத்தே ஆகவேண்டும். அப்படியெல்லாம் என்னால் இருக்க முடியாது என்று சொல்லுவீர்களானால் நீங்கள் தேவனுடைய ஜனமாயிருக்க முடியாது. உங்களுடைய தொழுகையை தேவன் ஏற்றுக்கொள்ளார். ஒரு மனிதனுக்கு அவன் வீட்டார் சத்துரு என வேதம் போதிக்கிறது. ஆக, மனிதனுக்கு மனிதனே சத்துருவாயிருக்கிறான்.

நாட்டு மிருகங்களோ, காட்டுமிருகங்களோ மனிதனுக்கு விரோதமாக செயல்படுவதில்லை. மனிதனுக்கு ஒரு மனிதனே விரோதியாயிருக்கிறான். ஆகையால் அப்படிப்பட்ட விரோததைத்தை வைக்காமல் பிறனுக்கு விரோதமாய்த் தீங்கு நினையாதே என்கிறார். அதைப்போல பொய்யாணையிடுவது. சிலர் அடித்துச்சொல்லுவார்கள். கொஞ்சமும் பயமின்றி நான் அதைச் செய்யவில்லை சத்தியமாய் சொல்லுகிறேன் என்பார்கள். ஆனால் உண்மை அதை அவர்கள் தான் செய்திருப்பார்கள். இப்படிப்பட்ட பொய்களை கர்த்தர் வெறுக்கிறார். எனவே, ‘‘பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அவருவருப்பானவர் களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்’’ (வெளி.21:8). இந்த வசனத்தில் எட்டுவிதமான பாவத்தைச் செய்கிறவர்கள் முடிவிலே இரண்டாம் மரணமாகிய அக்கினியும்



கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என திருமறைபோதிக்கிறது. திருமறை யாரையும் பயப்படுத்துவதற்காக இதைச் சொல்லவில்லை. சத்தியத்திற்கு விரோதமாக செயல்படுகிற யாராயிருந்தாலும் அவர்களுக்கு தேவன் ஏற்படுத்தி வைத்திருக்கும் இடம் இதுதான். இந்த இடம் பிசாசுக்காகவும் அவனுடைய தூதர்களுக்காகவும் ஏற்படுத்தப்பட்ட இடம். அவனுடைய வஞ்சகத்தில் சிக்குண்டவர்களும், அவனுடைய வார்த்தைகளை ஏற்றுக்கொண்டவர்களும் அவனோடு சேர்ந்து எரிகிற கந்தகக்கடலிலே பங்கடைவார்கள். கொதிக்கிற எந்த ஒரு கொதிகளனுக்கு அருகாமையில் ஒருவரும் செல்ல முடியாது. ஏனென்றால் அந்த அனல் அவர்களை பற்றிக்கொள்ளும் அவர்கள் கருகிப்போவார்கள். அப்படியிருக்கும்போது அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைகிவர்கள் ஒருபோதும் எழும்ப முடியாது.

இதைப்போல தேவன் வெறுக்கிற ஏழு காரியங்களை சாலோமோன் நமக்கு நினைப்பூட்டுகிறார். ‘‘ஆறு காரியங்களைக் கர்த்தர் வெறுக்கிறார், ஏழும் அவருக்கு அருவருப்பானவைகள். அவையாவன: மேட்டிமையான கண், பொய்நாவு, குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்துங் கை, துராலோசனையைப் பிணைக்கும் இருதயம், தீங்கு செய்வதற்கு விரைந்தோடுங்கால், அபத்தம்பேசும் பொய்ச்சாட்சி, சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டுபண்ணுதல் ஆகிய இவைகளே’’ (நீதி.6:16-19).

மேட்டிமையான பார்வை அநேகரை மோசம்போக்கிக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்டவர்கள் தங்களுடைய பார்வையை மாற்றிக்கொள்வதில்லை. மனிதன் மேட்டிமைகொள்ளுவதற்கு என்ன இருக்கிறது. இல்லாதவைகளிலிருந்து அவனால் ஒன்றை உண்டாக்க முடியுமா? அப்படியிருக்கும்போது நாம் ஒன்றும் மேலானவர்கள் அல்ல என்பதை நினைவில் கொள்ளவேண்டும். பொய்நாவு: நாவு நல்லவைகளைபேசவும், நல்லவைகளை ருசிக்கவும் கொடுக்கப்பட்டது. இந்தநோக்கத்தை அறியாதவர்கள் வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசி முடிவில் தேவகோபத்திற்குள்ளாகிறார்கள். அதைப்போல கைகள்: நலமானதை செய்ய மற்றவர்களுக்கு விரோதமாக செயல்பட அல்ல. கூடுமானவரை நலமான காரியங்களை செய்யவேண்டும். இருதயம்: இருப்பதிலே மகா கேடுள்ளது, இதை கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்போ

மானால் அந்த இருதயம் சீர்படும். எட்டுவயதில் எட்டுவைக்கிறவன் எண்பது வயதானாலும் தன் வழியை மாற்றுவதில்லை. அவனுடைய வழியை கர்த்தர் சீர்தூக்கிப்பார்க்கிறார். அதைப்போல பொய்சாட்சி: சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டுபண்ணுதல் இவைகளை அரவே வெறுத்து புதிய மனிதனாக மாறி, உங்கள் வாசல்களில் சத்தியத்திற்கும், சமாதானத்திற்கும் ஏற்க நியாயந்தீருங்கள். அப்பொழுது நீங்களும் உங்களோடிருப்பவர்களும் கர்த்தரால் ஆசீர்வதிக்கப் படுவீர்கள்.

**கேள்வி நேரம்**

**வாசல்கள் யாருக்கு திறக்கப்படும்?**

எத்தனையோ வாசல்களை பார்க்கிறோம். அந்த வாசல்கள் வழியாய் சென்று வருகிறோம். ஆனால் நிலையான ஒரு வாசல் உண்டு. அந்த வாசல் யாருக்கு திறக்கப்படும் என்றால்; "சத்தியத்தைக் கைக்கொண்டுவருகிற நீதியுள்ள ஜாதி உள்ளே பிரவேசிப்பதற்காக வாசல்களைத் திறவுங்கள்" என்று சொல்லுகிறது (ஏசா.26:2). நீங்கள் அந்த ஜாதியில் இருக்கிறீர்களா? நாங்கள் அந்த ஜாதி, இந்த ஜாதி என்று ஜனங்கள் அடித்துக்கொள்ளுகிறார்கள்.

நாடுவிட்டு நாடுபோனாலும், வீடுவிட்டு வீடுபோனாலும் இந்த ஜாதிமட்டும்போவதில்லை. அது அவர்களுடைய இரத்தத்தில் கலந்த ஒன்றாகிவிட்டது. ஆனால் நித்தியமான வாசல் உங்களுக்குத் திறக்கவேண்டுமானால் நீங்கள் சத்தியத்தை கைக்கொண்டுவருகிற நீதியுள்ள ஜாதியோடு இணைந்தவர்களாயிருக்கவேண்டும். அப்பொழுது உங்களுக்கு அந்த வாசல் திறக்கப்படும். நீங்கள் சரியான பாதையை தெரிந்துகொள்ள தேவன் உதவிடுவாராக! ஜெபிக்கிறோம்.

## 49. உங்கள் பக்திவிருத்திக்காக...
## ...For Your Edifing

**உ**லகத்தில் வாழுகிறவர்கள் யாருக்காக வாழுகிறார்கள். ஒன்று அவர்களுக்காக வாழுகிறார்கள் அல்லது உறவினர்களுக்காக வாழுகிறார்கள். இதில் சிலரே கர்த்தருக்காகவும், தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றும்படியாகவும் வாழுகிறார்கள். வேதம்



சொல்லுகிறது; "அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக" (பிலி.2:4). பிறர் என்று சொல்லும்போது மற்றவர்கள். நமக்கு சம்பந்தப்படாதவர்கள். அவர்களுடைய தேவையை அறிந்து அவர்களுக்கு உதவிட போதிக்கப்படுகிறோம். அநேகர் எனக்கு எனக்கு என்று வாழுகிறார்கள். அப்படி அளவுக்கு அதிகமான செல்வத்தை குவித்து வைத்து என்னசெய்யப்போகிறார்கள் என்று அவர்கள் சிந்திப்பதில்லை. தேவனால் படைக்கப்பட்ட எல்லாமே ஏதோ ஒரு விதத்தில் மற்றவர்களுக்கு உதவும்படியாக சிருஷ்டிக்கப்பட்டுள்ளது.

நம்மை உண்டாக்கின தேவனும் அப்படிப்பட்டவராயிருக்கிறார். மனிதன் தன்னுடைய சித்தத்தை அறிந்துகொண்டு, நித்திய நித்தியமாக தன்னோடு இருக்கவேண்டுமென தேவன் விரும்பி மனிதனை சிருஷ்டித்தார். அவனை தம்முடைய சாயலில் சிருஷ்டித்தார். அவர் ஆவியாயிருக்கிறார் என்பதை நீங்கள் நினைவில் கொள்ளவேண்டும். பிறருக்கானவைகள் என்று சொல்லும்போது அநேக காரியங்கள் அதில் அடங்கியிருக்கிறது. நன்மையான காரியங்கள். மற்றவர்களுக்கு இடையூரு இல்லாத காரியங்கள். மற்றவர்களை பெலவீனப்படுத்தாத காரியங்கள் மேலும் பக்திவிருத்திக்கேதுவான காரியங்கள் இப்படி சொல்லிக்கொண்டே போகலாம்.

பவுல் கொரிந்திய சபையாருக்கு எழுதிய கடிதத்தில் "விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைக்குறித்த விஷயத்தில் நம்மெல்லாருக்கும் அறிவு உண்டென்று நமக்குத் தெரியுமே, அறிவு இறுமாப்பை உண்டாக்கும், அன்போ பக்திவிருத்தியை உண்டாக்கும்" (1கொரி.8:1). தேவனை அறிந்த ஒருநபர் விக்கிரகத்தை ஒரு பொருட்டாக எண்ணினால் கல்லாதவர்கள் என்ன நினைப்பார்கள். ஆகையால் பவுல் சொல்லும்போது; நம்மெல்லாருக்கும் அறிவு உண்டென்று நமக்குத் தெரியுமே என்கிறார். தேவன் ஒரு விக்கிரகமல்ல. அவர் ஜீவனுள்ளவர். அவருக்கு விரோதமாக பிசாசு ஜனங்கள் மத்தியில் களைகளை விதைத்து வைத்திருக்கிறான். அவனால் வஞ்சிக்கப்பட்டவர்கள் வீணான ஆராதனை விக்கிரகங்களுக்கு செய்து வீணாய்போய் கொண்டிருக் கிறார்கள். அப்படிப்பட்ட விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டவைகளை புசிக்கிற விஷயத்தில் அதில் ஏதோ ஒரு புதுமை இருக்கிறது என்றோ

அல்லது அதை சாப்பிடுவதால் வியாதி போகிறது, வேதனை நீங்குகிறது என்று அறியாதவர்கள் நம்பி அந்த விக்கிரகங்களுக்கு படைத்தவைகளைப் புசிக்கிறார்கள். கர்த்தரை அறிந்த அல்லது தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட நீங்கள் அவ்விதமாக அறியாத அஞ்ஞானிகள் மத்தியில் அவைகளை நீங்களும் புசித்தால் அவர்கள் இடறல் அடைவார்கள் அல்லவா?

ஆகையால் பவுல் மேலும் சொல்லும்போது; ‘‘எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது; எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் பக்திவிருத்தியை உண்டாக்காது. ஒவ்வொருவனும் தன்சுயபிரயோஜனத்தைத் தேடாமல், பிறனுடைய பிரயோஜனத்தைத் தேடக்கடவன்’’ என்கிறார் (1கொரி.10:23,24). சிலகாரியங்களை செய்ய அதிகாரம் இருந்தபோதும் அதை பவுல் செய்யாமல் அது தனக்கு தகுதியில்லாத செயல் என்று ஒதுக்குவதைப் பார்க்கிறோம். இப்படிச் செய்வதற்காக காரணம் என்ன? மற்றவர்கள் அதினிமித்தம் இடையூரடையாதபடி அப்படிச்செய்தார். இவ்விஷயத்தில் அநேகர் நான் ஏன் மற்றவர்களுக்காக வாழவேண்டும் என்று சொல்லி மற்றவர்களைக் குறித்து கவலையற்றவர்களாயிருக்கிறார்கள். ஒவ்வொருவனும் தன் சுயபிரயோஜனத்தைத் தேடாமல், பிறனுடைய பிரயோஜனத்தைத் தேடக்கடவன்.

இதுகுறித்து அவர் மேலும் போதிக்கும்போது; ‘‘நீங்கள் கூடிவந்திருக்கிறபோது, உங்களில் ஒருவன் சங்கீதம் பாடுகிறான், ஒருவன் போதகம்பண்ணுகிறான், ஒருவன் அந்நியபாஷையைப் பேசுகிறான், ஒருவன் இரகசியத்தை வெளிப்படுத்துகிறான், ஒருவன் வியாக்கியானம்பண்ணுகிறான். சகோதரரே, இது என்ன? சகலமும் பக்திவிருத்திக்கேதுவாக செய்யப்படக்கடவது’’ (1கொரி.14:26). இன்றைக்கு அநேக சபைகளில் இவ்விதமாக நடப்பதை நாம் காணமுடிகிறது.

மற்றவர்களைக்குறித்து அவர்களுக்கு கரிசனையில்லை. தாங்கள் தேவனை ஆராதித்தால்போதும் என்று நினைக்கின்றனர். ஆகையால் அவரவர் விருப்பப்படியும் தேவனை தொழுதுகொள்ள விரும்புகிறார்கள். வேதம் என்ன சொல்லுகிறது? வேதாகமத்தில் எப்படியாக தேவனை



ஆராதித்தார்கள், அவரைத் தொழுதுகொண்டார்கள். நாமும் அவ்விதமே தேவனை ஆராதிக்கவேண்டும், தொழுதுகொள்ளவேண்டும் என்று அநேகர் விரும்பாமல் சுயஇஷ்டாமான ஆராதனையில் துணிவாய் நுழைந்து செயல்படுகிறார்கள். தாங்கள் செய்யக்கூடிய காரியம் சரியானது என்று வாதிடுகிறவர்கள் அதிகமாயிருக்கிறார்கள். கர்த்தர் எனக்கு இதை வெளிப்படுத்தினார் ஆகையால் இப்படியாக செய்கிறோம் என்பார்கள். பிரியமான சகோதரனே, சகோதரியே, வேதமே நமக்கு வெளிச்சமாக இருக்கிறது. வேதாகமம் போதிக்கிறபடியாக மற்றவர்கள் பக்திவிருத்தி அடையும்படியாக நாம் செயல்பட போதிக்கப்படுகிறோம்.

‘‘இப்படியிருக்க, செய்யவேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம்பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன். இல்லாவிட்டால், நீ ஆவியோடு ஸ்தோத்திரம்பண்ணும்போது, கல்லாதவன் உன் ஸ்தோத்திரத்திற்கு ஆமென் என்று எப்படிச் சொல்லுவான்? நீ பேசுகிறது இன்னதென்று அவன் அறியானே. நீ நன்றாய் ஸ்தோத்திரம்பண்ணுகிறாய், ஆகிலும் மற்றவன் பக்திவிருத்தியடையமாட்டானே’’ (1கொரி.14:15-17). எனவே நாம் செய்யவேண்டுவதென்ன? மற்றவர்கள் பக்திவிருத்தியடையக்கூடிய காரியங்களை நாம் செய்ய முற்படுவோம். அது வேதாகமத்தின் போதனையாக இருக்கிறது. ஆகையால் அவனவன் தனக்கானவை களையல்ல பிறருக்கானவைகளையும் நோக்குவானாக என்ற வசனத்தின்படி உங்களை தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுங்கள். உங்களுடைய பக்தி மற்றவர்களுடைய பிரயோஜனத்திற்கு ஏதுவாக இருக்கட்டும்.

அதைப்போல சபையின் பக்திவிருத்திக்கேதுவாக ஒவ்வொருவரும் நடக்க போதிக்கப்படுகிறோம். ஏனெனில்; ‘‘அவராலே சரீரம் முழுவது, அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத்தக்கதாய்க் கிரியைசெய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது’’ (எபே.4:16). சபை கிறிஸ்துவின் சரீரமாகவும், சபையாகவும் இருக்கிறது. கர்த்தர் ஒவ்வொருவரையும் தமது சரீரமாகிய

சபையில் இணைக்கிறார். சரீரத்தில் ஒவ்வொரு அவயவமும் எப்படி இணைக்கப்பட்டிருக்கிறதோ அதைப்போல ஒவ்வொருவரும் அவருடைய சபையில் இணைக்கப்படுகிறார்கள். இணைக்கப்பட்டவர்கள் ஒரு அவயவத்திற்கு விரோதமாக செயல்பட முடியாது. எப்படி சரீரத்தில் இருக்கிற எல்லா அவயவங்களும் இணைந்து ஒன்றாய் பாடுபடுமோ அதைப்போல சபைக்கு பக்திவிருத்தியை உண்டாக்கக்கூடிய காரியங்களை சிந்திக்கவும் செயல்படுத்தவும் இணைந்துபாடுபட உங்களை ஒப்புக்கொடுங்கள். புதிய ஏற்பாட்டு காலத்தில் ‘‘யூதேயா கலிலேயா சமாரியா நாடுகளிலெங்கும் சபைகள் சமாதானம் பெற்று, பக்திவிருத்தியடைந்து, கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடும், பரிசுத்தஆவியின் ஆறுதலோடும் நடந்து பெருகின’’ என அப்.9:31 -ம் வசனத்தில் படிக்கிறோம்.

எருசலேமை சுற்றியுள்ள நாடுகளில் முதலாவது சபை பக்திவிருத்தியடைந்து சமாதானம் பெற்றது. நீ ஸ்திரப்படு பின்பு உன் குடும்பத்தை ஸ்திரப்படுத்த என்ற வார்த்தையின்படி சபையானது முதலாவது எருசலேமிலும் அதை சுற்றியுள்ள நாடுகளிலும் பக்திவிருத்தியடைந்தது எனக்காண்கிறோம். உங்களுடைய சபை எவ்விதமாக இருக்கிறது? உங்களுடைய சபையை உலகம் பார்த்துக்கொண்டிருக்கிறது. நீங்கள் எந்த அளவு கர்த்தருக்கு பயப்படும் பயத்தோடிருந்து தேவனை ஆராதிக்கிறீர்கள்.

முதல்நூற்றாண்டு சபையாரைப்போல சபையை நடத்த முடிவு எடுங்கள். அதனுடைய மாதிரியை நோக்குங்கள். மேலும் பவுல் சொல்லும்போது; ஆனபடியால் சமாதானத்துக்கடுத்தவைகளையும், அந்நியோந்நிய பக்திவிருத்தி உண்டாக்கத்தக்கவைகளையும் நாடக்கடவோம்’’ என்கிறார் (ரோ.14:19). சபையின் வளர்ச்சிக்கு அந்நியோந்நிய பக்திவிருத்தி மிகவும் அவசியம். ஆதிசபையார் ஒருமனப்பட்டவர்களாகவும் அந்நியோந்நியத்திற்கு அடையாளமாக வீடுகள்தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் தேவனை ஆராதித்து வந்திருக்கிறார்கள்.

இன்றைய சபைகளில் சபைக்கு வருகிறவர்களிடையே ஐக்கியம் இல்லை, ஒருவரையொருவர் பார்க்கும்போது காய்மாரத்தோடும், வண்கண்ணோடும் பார்த்து ஒருவருக்கு விரோதமாக ஒருவர் பேசி



தேவகோபத்திற்கு உள்ளானவர்களாயிருக்கிறார்கள். இப்படி ஒருவரை யொருவர் கடித்து பட்சிப்பீர்களானால் அழிந்துபோவீர்கள் என வேதம் எச்சரிக்கிறது.

கர்த்தர் எதற்காக சபையை ஏற்படுத்தினார்? ‘‘பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்’’ (எபே.4:12,13). இது தேவனுடைய திட்டம். இந்த திட்டத்தின்படியாக எருசலேமில் 3000 அங்கத்தினர்களோடு முதல் சபையானது ஆரம்பிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து மற்ற நாடுகளிலும் சபையானது எழும்பினது. ஒவ்வொரு சபையும் சுயாதின சபையாக இருந்தது. அந்தந்த சபை போதகர்கள் சபையை மேய்த்து வந்தார்கள் எனக்காண்கிறோம். சபையானது நாளுக்கு நாள் பக்திவிருத்தியடைந்து மக்கதோனியா சபை போன்ற சபைகள் மற்ற சபைகளுக்கு மாதிரிகளாக இருந்தன.

எனவே ‘‘நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார்’’ (எபே.4:14,15). எந்த ஒரு தகப்பனும் தன் குழந்தை வளர்ச்சியடையாவிட்டால் வேதனை கொள்ளுவான் அல்லவா? அதைப்போல நம்முடைய கர்த்தரும் சபையின் வளர்ச்சியை விரும்புகிறார்.

ஆகையால் நாம் சபை ஒரு அங்கமாக இருப்போமானால் சபைக்குறிய காரியங்களில் ஈடுபட்டு அது வளர்ச்சியடைய பாடுபடுவோம். நல்ல ஆலோசனைகளை சபையார் மத்தியில் எடுத்துச் சொல்லி ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை தேவ சமுகத்தில் பெற்று வளர்ச்சிப் பாதையில் செயல்படுவோம்.

### கேள்வி நேரம்

**ஒருவரையொருவர் கவனித்து பக்திவிருத்தி உண்டாகும்படி நாம் செயல்பட வேண்டியது அவசியமா?**

அவசியமில்லாத ஒன்றை வேதாகமம் நமக்குப்போதிக்காது. பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய ஆழங்களை எடுத்துரைக்கிறார். இவைகளை ஏற்றுக்கொண்ட முதல் நூற்றாண்டு சபையார் அதை அப்படியே ஏற்றுக்கொண்டு சுயமதக்கோட்பாடுகளையும், வீணான ஆராதனைகளையும் வெறுத்து தள்ளி ஆவிக்குரிய ஆராதனை செய்யும்படியாக தங்களையும், தங்களுடைய உடமைகளையும் கர்த்தருடைய பணிக்காக கொடுத்தார்கள். மேலும் மற்றவர்களுக்கு இடையூராக இருக்கும் காரியங்களை தங்களை விட்டு அகற்றிப் போட்டார்கள்.

யூதர்களில் அநேகர் இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள். யூதர்கள் பொதுவாக தங்களை மேன்மையாக என்னக்கூடியவர்கள். ஆனால் பாரம்பரிய சடங்குகளை விட்டு விட்டு பக்திவிருத்திக்கேதுவாக ஒருவரையொருவர் கவனித்தார்கள். இல்லாதவர்களுக்கு பகிர்ந்துகொடுத்தார்கள். எனவே அப்போஸ்தலனாகிய பவுல் தெசலோனிக்கேய கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது; ‘‘ஆகையால் நீங்கள் செய்துவருகிறபடியே, ஒருவரையொருவர் தேற்றி, ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாக்கும்படி செய்யுங்கள்’’ என்கிறார் (1தெச.5:11). உங்களுடைய சபையாரை நீங்கள் கவனிக்கிறீர்களா? கவனியுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 50.நான் வெட்கப்படேன்
## I Am Not Ashamed

**ஒ**ரு சிலர் ஒரு சில காரியத்தைக்குறித்து வெட்கப்படுகிறவர்களாக இருக்கிறார்கள். ஆனால் அப்போஸ்தலனாகிய பவுல் ‘‘கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது’’ என்கிறார் (ரோம.1:16). ஆம், சுவிசேஷம் ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் சந்தோஷத்தைக் கொண்டுவருகிறது. அவனை இரட்சிப்புக்கு நேரே வழிநடத்துகிறது.



ஆகையால் அதைக்குறித்து அவன் வெட்கப்படவேண்டிய அவசியமில்லை. பொதுவாக ஜனங்கள் வெட்கப்படுவதற்கான காரணம் என்னவென்று நாம் தியானிக்குபோது; ஒன்று அவர்கள் சமுதாயத்தில் தவறான காரியங்களில் ஈடுபட்டிருப்பார்கள் ஆகையால் அந்த அவமானம் தாங்கமுடியாமல் வெட்கப்படுவார்கள் அல்லது மாய்மாலம்பண்ணுகிறவர்கள் வெட்கப்படுவார்கள்.

இயேசு சொல்கிறார்; ‘‘விபசாரமும் பாவமுமுள்ள இந்தச் சந்ததியில் என்னைக் குறித்தும் என் வார்த்தைகளைக்குறித்தும் எவன் வெட்கப்படுவானோ, அவனைக்குறித்து மனுஷகுமாரனும் தமது பிதாவின் மகிமைபொருந்திரனவராய்ப் பரிசுத்த தூதர்களோடுங்கூட வரும்போது வெட்கப்படுவார் என்றார்’’ (மாற்.8:38). நாம் முன்னமே தியானித்தபடியாக சுவிசேஷம் ஒருவனை பாவத்திலிருந்தும் சாபத்திலிருந்தும் விடுதலையாக்குகிறது. இதை ஒருவன் நினைத்து தன் வாழ்வில் சந்தோஷம் அடையவேண்டும். மேலும் அவன் இந்த பொல்லாத சந்ததியில் கர்த்தருடைய வசனத்திற்கு சாட்சியாக வழ்ந்து காட்டவேண்டியவனாயிருக்கிறான். ஒரு சிலருக்கு வேதாகமத்தை எடுத்துக்கொண்டு சபைக்கு செல்வதில் வெட்கம். ஏனென்றால் யாராவது பார்த்து ஏன் இப்படி மாறிவிட்டாய் என்று நம்மை கேட்டுவிடுவார்களோ என்ற அச்சம்.

இன்னும் சிலர் தான் ஒரு கிறிஸ்தவன் அல்லது கிறிஸ்தவள் என்று சொல்லி ரேசன் கார்டில் பதிவு செய்வதில் பயம். சலுகைகள் எல்லாம் போய்விடுமோ! நாம் வேலையை இழந்துவிடுவோமோ என்று சொல்லி பயந்தவர்களாகவும், சுவிசேஷத்தின் நிமித்தம், அவருடைய வார்த்தைகளின் நிமித்தம், கிறிஸ்துவின் நிமித்தம் வெட்கப்படுகிறவர்களாகவும், பயப்படுகிறவர்களாகவும் இருக்கிறார்கள். கர்த்தர் மீண்டும் மகிமைபொருந்தினவராய் வரும்போது; பிதாவின் சமுகத்தில் இவர்களைக்குறித்து சொல்லும்போது; இப்படிப்பட்டவர்களை குறித்து தாமும் வெட்கப்படுவதாக சொல்லுகிறார் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

உண்மையுள்ள மனுஷன் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போகான். ஏனெனில் அவனுடைய இருதயத்தில் கர்த்தருக்கு ஒரு தனிஇடத்தை வைத்திருக்கிறான். பவுல் ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது;

“அதுமாத்திரமல்ல, உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும்,பரீட்சை நம்பிக்கையையும், உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம். மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவஅன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது” என்கிறார் (ரோம.5:3-5). அப்போஸ்தலர்களுக்கு வந்த உபத்திரவங்கள் உங்களுக்கு வந்திருக்க வாய்பில்லை.

மரணபரியந்தமும் உபத்திரவத்தை அனுபவித்தார்கள். அவைகள் அவர்களுடைய வாழ்க்கையில் பொறுமையையும், பரீட்சையையும், நம்பிக்கையையும் உண்டாக்கின. அதைப்போல உங்களுடைய வாழ்க்கையிலும் அவ்விதமான நம்பிக்கை ஏற்பட நீங்கள் சோர்ந்துபோகாமல் தேவனுடைய அன்பில் நிலைத்திருங்கள். பவுல் உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு சொன்ன புத்திமதியான வார்த்தைகள். “நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு” என்கிறார் (2தீமோ.2:15). எத்தனை ஊழியக்காரர்கள் தேவனுக்கு முன்பாக உத்தமனாக தன்னை நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிருக்கிறார்கள். அநேக ஊழியக்காரார்கள் வெட்கப்படுகிறார்கள்.

ஏன்? அவர்களுடைய மனசாட்சியே அவர்களை குற்றவாளிகளாக தீர்க்கிறது. ஆகையால் அவர்கள் வேதத்தை எடுத்து போதிக்க தகுதியற்றவர்களாக தேவ சமுகத்தில் நின்றுகொண்டிருக்கிறார்கள், எனவே வெட்கப்படுகிறார்கள். ஒரு போதகன் சத்திய வசனத்தை எடுத்து போதிக்கும் போதகனாக இருக்கிறான். அவன் பிடித்திருக்கும் பட்டயம் இரு புறமும் கருக்குள்ள பட்டயம். அது எதிராக இருப்பவர்களை மட்டுமல்ல அவனையும் வெட்டக்கூடியதாக இருக்கிறது. ஆகையால் அவன் ஜாக்கிரதையுள்ளவனாயிருக்கவேண்டும்.

பொதுவாக எவர்கள் வெட்கப்படுவார்கள் என நாம் பார்க்கும்போது; பரிசுத்த வேதம் சொல்லுகிறது; “திருடன் அகப்படுகிறபோது, எப்படி வெட்கப்படுகிறானோ, அப்படியே இஸ்ரவேல் வம்சத்தார் வெட்கப் படுவார்கள்; கட்டையைப் பார்த்து, நீ என் தகப்பன் என்றும்;



கல்லைப்பார்த்து, நீ என்னைப்பெற்றாய் என்றும் சொல்லுகிற அவர்களும், அவர்கள் ராஜாக்களும், அவர்கள் பிரபுக்களும், அவர்கள் ஆசாரியர்களும், அவர்கள் தீர்க்கதரிசிகளும் வெட்கப்படுவார்கள்” என எரே.2:26-ல் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப்படியாக பேசாத, நடக்காத, மூக்கிருந்தும் முகராத, கண்கள் இருந்தும் காணாத விக்கிரகத்தை நாடுகிறவர்கள் வெட்கப்பட்டார்கள். அதன் ஊழியர்கள் ஆசாரியர்கள் மற்றும் அதை நம்பின தீர்க்கதரிசிகள் வெட்கப்பட்டுப்போனார்கள். அதுவும் ஒரு திருடன் அகப்படுகிறபோது அவன் எப்படி வெட்கப்படுவானோ அதைப்போல அவர்கள் முகம் காணப்பட்டது. இது எத்தனை அவமானம்?

மேலும் ஏசாயா தீர்க்கன் சொல்லும்போது; “துரோகிகளும் பாவிகளுமோ ஏகமாய் நொறுங்குண்டு போவார்கள்; கர்த்தரை விட்டு விலகுகிறவர்கள் நிர்மூலமாவார்கள். நீங்கள் விரும்பின கர்வாலிமரங்களினிமித்தம் வெட்கப்படுவீர்கள்; நீங்கள் தெரிந்துகொண்ட தோப்புகளினிமித்தம் நாணமடைவீர்கள்” (ஏசா.1:28,29). இன்றைக்கும் இவைகளை நம்பி மோசம்போகிற கோடிக்கணக்கானோர் இப்பூமியில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் சகோதரனே, சகோதரியே, நீயும் அவர்களைப்போல கட்டையை நம்பி மோசம்போய் கொண்டிருக்கிறாயா? இன்றே அவைகளை விட்டு ஜீவனுள்ள தேவனுடைய சமுகத்திற்கு திரும்பு நீ ஒருபோதும் வெட்கமடையதபடி உன்னைக் காப்பார். அவருடைய சுவிசேஷம் உன்னை பாவமற கழுவும். நீ இரட்சிப்பின் பாத்திரமாக மாறுவாய். சந்தோஷத்தையும் சமாதனத்தையும் பெற்று நிம்மதியான வாழ்வுக்குள் வழிநடத்தப் படுவாய். நீ பாவத்தோடு இருந்துகொண்டு தேவனுக்கு பிரியமாக வாழமுடியாது என்பதை தெரிந்துகொள்.

லூக்கா 16:3-ல் ஒரு அநீதியுள்ள உக்கிராணக்காரனைக்குறித்து படிக்கிறோம். அவன் நான் என்ன செய்வேன், என் எஜமான் உக்கிராண விசாரிப்பிலிருந்து என்னைத் தள்ளிப்போடுகிறானே; கொத்துகிறதற்கு எனக்குப் பெலனில்லை, இரக்கவும் வெட்கப்படுகிறேன் என்றான். அவனுக்கு உக்கிராண உத்தியோகம் பரிபோகும்போது வெட்கம் உண்டானது. நீ வெட்கப்படாத ஒரு மனிதான இருக்கவேண்டுமானால் நீ

கர்த்தருக்கு பிரியமானதை செய்யும்படியாக உன்னை அவருடைய வசனத்திற்கு ஒப்புக்கொடு. அப்பொழுது அருடைய வசனம் உன்னை வெட்கப்படுத்தாது.

நாம் எப்பொழுது வெட்கப்படாதவர்களாக இருப்போம் என்றால்; அவரோடிருக்கும்போது, அவருடைய வசனம் நம்மில் நிலைத்திருக்கும் போது; சங்கீதக்காரனுடைய வாழ்க்கையில் அதை நாம் காண்கிறோம். "நான் கர்த்தரைத் தேடினேன், அவர் எனக்குச் செவிகொடுத்து, என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கிவிட்டார். அவர்கள் அவரை நோக்கிப்பார்த்துப் பிரகாசமடைந்தார்கள்; அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை, இந்த ஏழை கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார். கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப்பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்" (சங்.3:4-7).

நாம் கர்த்தரைத் தேடும்போது அவர் நம்மை சகல உபத்திரங்களிலும் மீட்டு இரட்சித்து வெட்கப்படாத அவயவமாக்குகிறார். சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும் ஆனால் கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது என்ற வசனத்தின்படி அவர்களை கர்த்தர் போஷிக்கிறார். அவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போகாதபடி தம்முடைய தூதர்களை ஆயத்தப்படுத்துகிறார். இயேசுவின் பிறப்பின்போது ஏரோது பிள்ளையை கொலைசெய்து போடும்படி கட்டளை பிறப்பிக்கப்பட்ட சமயம் தேவதூதனாலே எச்சரிக்கப்பட்டு யோசேப்பும் மரியாளும் நாசரேத்துக்கு கடந்து சென்றார்கள். இதைப்போல அநேகர் தேவதூதர்களாலே எச்சரிக்கப்பட்டு காக்கப்பட்டுள்ளதை நாம் வேதத்தில் வாசிக்கிறோம். தம்மைத்தேடுகிறவர் களுக்கும், பயந்தவர்களுக்கும் கர்த்தர் போதுமானவராக இருந்து அவர்களை இரட்சிக்கும்படியாக சூழப்பாளைமிறங்கி அவர்களை இரட்சிக்கிறார்.

மேலும் தாவீது இப்படியாக ஜெபிக்கிறார்; "நான் பிழைத்திருப்பதற்கு உமது வார்த்தையின்படி என்னை ஆதரித்தருளும்; என் நம்பிக்கை விருதாவாய்ப்போக என்னை வெட்கத்திற்கு உட்படுத்தாதேயும்" என்கிறார் (சங்.119:116). சிலவேளைகளில் சிலர் அதிகாரத்தோடு ஜெபிக்கிறார்கள். இந்த அதிகாரத்தை கொடுத்தவர் யார்? இப்படிப்பட்ட



அதிகாரம் எப்போது நமக்குக் கிடைத்தது? என்பதை அவர்கள் சிந்திப்பதில்லை. ஜெபத்தில் எப்போதுமே தாழ்மை இருக்கவேண்டும். தாவீது ராஜாவாக இருந்தும் சகல அதிகாரமும் அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தும். அவருடைய விண்ணப்பம் நான் பிழைத்திருப்பதற்கு உமது வார்த்தையின்படி என்னை ஆதரித்தருளும் என தாழ்மையோடு விண்ணம் செய்கிறார்.

என்னை நீர் ஆதரித்தேயாகவேண்டும் என்று அவர் அதிகாரத்தோடு அல்லது உரிமையோடு அவர் விண்ணப்பிக்கவில்லை என்பதை அறிந்துகொள்ளுங்கள். நம்பிக்கை வீண்போகாதிருக்க கர்த்தருடைய வார்த்தை மிகவும் முக்கியம். அந்த வார்த்தைக்கு நீங்கள் எந்த அளவு முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள். தாவீது முழுநாளில் அதிகமான நேரத்தை வேதத்திற்கு கொடுத்தவர். அநேகர் வேதம் வாசிக்கவே நேரம் இல்லை என்பார்கள். பவுலுடைய உறுதியான நம்பிக்கையின் இரகசியம் என்ன? என்று நாம் தியானிக்கும்போது; அவர் சொல்லுகிறார்; அதினிமித்தம் நான் இந்தப் பாடுகளையும் அனுபவிக்கிறேன். ஆயினும் நான் வெட்கப்படுகிறதில்லை; ஏனென்றால், நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்" என்றார் (2தீமோ.1:12).

இந்த வசனத்தில் பவுலுடைய விசுவாசம் கர்த்தர் மீது உள்ளது என்பதை நாம் அறிகிறோம். அதுமாத்திரமல்ல பவுல் ஓட்டத்தை முடித்து விசுவாசத்தை காத்துக்கொண்டு இயேசுவானவர் பிதாவின் கைகளில் ஆவியை ஒப்புக்கொடுத்ததைப்போல இவரும் அவரிடத்தில் தம்மை ஒப்புக்கொடுத்திருக்கிறார். அதை தேவன் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறார் என்று நிச்சயித்திருப்பதாக எழுதுகிறார். பவுலுடைய உறுதியான நம்பிக்கையை பார்த்தீர்களா? அன்பானவர்களே, நீங்களும் சுவிசேஷத்தைக்குறித்து வெட்கப்படாதவர் களாயிருந்து உங்களுடைய நம்பிக்கையில் உறுதியாயிருங்கள்.

**கேள்வி நேரம்**

**இஸ்ரவேலர்கள் வெட்கப்பட்டார்களா?**

இஸ்ரவேலர்களும் நம்முடைய முற்பிதாக்களும் விசுவாசத்தில் வல்லவர்களாயிருந்தார்கள் என எபிரெய ஆசான் குறிப்பிடுகிறார். வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், இராஜ்யங்களை ஜெயித்தார்கள். இப்படி இருந்தபோதும்; "அதிலும் மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள்; ஆகையால் தேவன் அவர்களுடைய தேவனென்னப்பட வெட்கப்படுகிறதில்லை; அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம்பண்ணினாரே" (எபி.11:16).

நீ உன் தேவனை அறிக்கையிட வெட்கப்படுவாயானால் தேவன் உன்னைக்குறித்து வெட்கப்படுவார். வேதாகமத்தில் முற்பிதாக்கள் துவங்கி இஸ்ரவேல் முதல் கொண்டு புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களும் அப்போஸ்தலர்களும் அவரை தங்களுடைய கர்த்தர் என்று சொல்ல வெட்கப்படவில்லை. நீங்களும் அவ்விதமாக இருந்து அவர்களைப்போல ஆசீர்வதிக்கப்படுங்கள். உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்.

## 51. மேய்ப்பரே கர்த்தருடைய வார்த்தையை கேளுங்கள்
## Shepherds, Hear the Word of the Lord

**பொ**துவாக கர்த்தருடைய செய்தி கர்த்தருடைய ஜனங்களுக்கும் கர்த்தரை அறியாதவர்களுக்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். இன்றை நாளிலே போதகருக்கு ஒரு போதகத்தை நாம் கேட்க இருக்கிறோம். இச்செய்தி மேய்ப்பருக்கு மிகவும் பிரயோஜனமாயிருக்குமென்று நம்புகிறேன். ஒரு மேய்ப்பனானவன் மந்தையின் மூப்பனாகவும், போதகனாகவும், சுவிசேஷகனாகவும் இருக்கிறான். மந்தையின் ஆடுகள் அவனை நம்பியிருக்கிறது.

பிரதான மேய்ப்பரும் அந்த மேய்ப்பனிடம் தமது மந்தையை நன்கு மேய்க்கும்படியாக கொடுத்திருக்கிறார். இப்படிப்பட்ட ஒரு மேய்ப்பன் தன் மந்தையை கவனியாதவனாகவும் தன் இஷ்டம்போல நடக்கிற வனாகவும் இருந்தால் அந்த மந்தையின் நிலைமை என்னவாகும்? ஆடுகள் சிதறடிக்கப்படுமல்லவா! ஆகையால் மேய்ப்பனானவனுக்கு



விரோதமாக கர்த்தருடைய வார்த்தை எழும்பி சகரியா தீர்க்கன் மூலமாக பிதாக்களின் காலத்திலே சொல்லப்பட்டது. "மந்தையைக் கைவிடுகிற அபத்தமான மேய்ப்பனுக்கு ஐயோ! பட்டயம் அவன் புயத்தின்மேலும் அவன் வலதுகண்ணின்மேலும் வரும்; அவன் புய முழுவதும் சூம்பிப்போம்; அவன் வலதுகண் முற்றிலும் இருள் அடையும் என்றார்" (சக.11:17). தேவன் மேய்ப்பர்களை பயமுறுத்துவதற்காக இதைச் சொல்லவில்லை. உக்கிராண உத்தியோகம் மேய்ப்பனானவனுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. ஆகையால் அவன் மந்தையை கைவிடாதிருந்து காக்கவேண்டிய பொருப்புள்ளவனாகயிருக்கிறான். மேய்ப்பர்களுக்கும் பாடுகள் பிரச்சனைகள் வருகிறது. அப்பொழுது சோர்ந்துபோய் மந்தையை கைவிடும்படியாக யோசிக்கிறார்கள்.

மாபெரும் தீர்க்கதரிசியாகிய எலியா ஒருமுறை; "அவன் வனாந்தரத்தில் ஒருநாள் பிரயாணம்போய், ஒரு சூரைச்செடியின் கீழ் உட்கார்ந்து, தான் சாகவேண்டும் என்று கோரி; போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும்; நான் என் பிதாக்களைப் பார்க்கிலும் நல்லவன் அல்ல என்று சொல்லி, ஒரு சூரைச்செடியின்கீழ்ப் படுத்துக்கொண்டு நித்திரைபண்ணினான்; அப்பொழுது ஒரு தூதன் அவனைத் தட்டியெழுப்பி: எழுந்திருந்து போஜனம்பண்ணு என்றான்" (1இரா.19:4,5). இந்த எலியாவுக்கு சோர்வு வந்ததைப்போல அநேக மேய்ப்பர்களுக்கும் வரும். அவர்களும் எலியா சொன்னதைப்போல சொல்லக்கூடும். மேய்ப்பர்களை தெரிந்துகொண்ட கர்த்தர் அவர்களை தமக்குச் சித்தமானபடி வழிநடத்துகிறார்.

எலியாவை அப்படியே விட்டுவிடவில்லை ஒரு தூதனை அனுப்பி அவனுக்கு உணவு கொடுத்து நீ போகவேண்டி தூரம் வெகுதூரம் எழுந்திருந்து புசித்து புறப்படு என்றார். அவன் எழுந்து சாப்பிட்டு இரவு பகல் நாற்பது நாள் ஒரேப் என்னும் தேவனுடைய பர்வதம் மட்டும் நடந்துபோனான். அன்பான மேய்ப்பரே, நீ சோர்ந்துபோகாதே, உன் தேவன் உன்னைப்பெலப்படுத்த வல்லவராயிருக்கிறார். அவர்கொடுக்கிற ஆலோசனைகளைக் கேட்டு உன் மந்தையின் மேல் கவனமாயிரு.

ஆடுகளைக் கெடுத்துச் சிதறடிக்கிற மேய்ப்பருக்கு என்ன சம்பவிக்கும்? கர்த்தர் சொல்லுகிறார்; "என் மேய்ச்சலின் ஆடகளைக் கெடுத்துச் சிதறடிக்கிற மேய்ப்பர்களுக்கு ஐயோ! என்று கர்த்தர்

சொல்லுகிறார்'' (எரே.23:1). மேய்ப்பனானவன் ஆடுகளுக்கு உரிமையானவன் அல்ல. அவன் எஜமானுடைய வேலைக்காரனா யிருக்கிறான். அவன் எஜானுடைய விருப்பத்தை நிறைவேற்ற கடமைப்பட்டவனாகவும் இருக்கிறான். ஆகையால் மந்தையைக்குறித்து அவ்வப்போது தன் எஜமானுக்கு தெரிவிக்கவேண்டியவனாகவும் இருக்கிறான். அப்படிப்பட்ட அவன் மந்தையை கெடுத்து, அது சிதறிப்போகும் அளவு அவன் மந்தையை கவனியாமலும், மந்தையை அடித்து சாப்பிடும் ஒரு ஓநாயைப்போலவும் செயல்படுவானேயானால் அவனுடைய நிலைமை ஐயோ! என வேதம் போதிக்கிறது.

''கர்த்தராகிய ஆண்டவராயிருக்கிற நான் என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்; மேய்ப்பன் இல்லாததினால் என் ஆடுகள் சூறையாகி, என் ஆடுகள் காட்டுமிருகங்களுக்கெல்லாம் இரையாய்ப் போயின; என் மேய்ப்பர்கள் என் ஆடுகளை விசாரியாமற்போனார்கள், மேய்ப்பர்கள் மந்தையை மேய்க்காமல் தங்களையே மேய்த்தார்கள்'' (எசே.34:8). வேலியே பயிர்களை மேய்ந்தால் எப்படியிருக்கும். அதைப்போல மேய்ப்பர்கள் மந்தையை மேய்க்காமல் தங்களை மேய்த்தார்கள். ஆகையால் கர்த்தருடைய வார்த்தை எசேக்கியேல் தீர்க்கன் மூலமாக மேய்ப்பர்களுக்கு விரோதமாக எழும்பிற்று. தேவனால் தம்முடைய மந்தையை எந்த சூழ்நிலையிலும் மேய்க்க முடியும் என்பதை மேய்ப்பர்கள் முதலாவது உணர்ந்துகொள்ளவேண்டும்.

எகிப்திலிருந்து கானான் தேசம் வரை நாற்பது வருஷங்கள் தேவதூதர்கள் சாப்பிடும் மன்னாவினாலே அவர்களை போஷித்து காப்பாற்றினார். ஆறுலட்சத்திற்கும் அதிகமான ஜனங்களை தேவன் ஒரு ஆட்டுமந்தையைப்போல தாகம் எடுக்கும் இடத்தில் தண்ணீர் கொடுத்து அவைகள் இளைத்துப்போகாதிருக்க மேகஸ்தம்பத்தினாலும், இரவில் அக்கிஸ்தம்பத்தினாலும் அவர்களை வழிநடத்திக்கொண்டு சென்றார். அந்த மந்தைக்கு விரோதமாக எழும்பிய எகிப்தின் ராணுவம் முழுவதும் சிவந்த சமுத்திரத்தில் மாண்டுபோனது. கர்த்தர் அவர்களுக்காக யுத்தம் செய்தார். அன்பான மேய்ப்பர்களே, உங்களை அல்லாமலும் மந்தையை கர்த்தர் மேய்க்கவும் முடியும் அதைப்போஷிக்கவும் முடியும் அதை நீங்கள் ஒருநாளும் மறந்துபோகாதிருக்க பாருங்கள்.



மேய்ப்பருக்கு விரோதமான கர்த்தருடைய கோபம் என்ன வென்றால்; ''சுரூபங்கள் அபத்தமானதைச் சொல்லிற்று; குறிசொல்லு கிறவர்கள் பொய்யைத்தரித்தார்கள்; சொப்பனக்காரர் வீணானதைச் சொல்லி, வியர்த்தமாகத்தேற்றரவுபண்ணினார்கள்; ஆகையால் ஜனங்கள் ஆடுகளைப்போலச் சிதறி, மேய்ப்பனில்லாததினால் சிறுமைப்பட்டார்கள். மேய்ப்பருக்கு விரோதமாக என் கோபம்மூண்டது, கடாக்களைத் தண்டித்தேன்; சேனைகளின் கர்த்தர் யூதா வம்சத்தாராகிய தமது மந்தையை விசாரித்து, அவர்களை யுத்தத்திலே தமது சிறந்த குதிரையாக நிறுத்துவார்'' (சகரி.10:2,3). முழுஅதிகாரமும் மந்தையின் எஜமானனுக்கு உண்டு என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

மந்தையை மேய்க்கும்படியாக கொடுத்த கர்த்தர் மந்தையின் நிலைமையை கண்ணோக்கிப்பார்க்கிறார். அந்த மந்தையை விசாரிக்கிறவராயிருக்கிறார். அந்த மந்தையின்மேல் கரிசனையுள்ள தேவனாயிருக்கிறார். தம்முடைய ஜனத்தை சிறந்தவர்களா மாற்றும்படியாக கர்த்தர் விரும்புகிறபடியால் குதிரைகளுக்கு ஒத்த பெலத்தை அவர்களுக்குக் கொடுக்கிறார்.

இயேசுவானவர் சொல்லும்போது; ''நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான். மேய்ப்பனாயிராதவனும், ஆடுகள் தனக்குச் சொந்தமல்லாதவனுமான கூலியாள் ஓநாய் வருகிறதைக் கண்டு ஆடுகளை விட்டு ஓடிப்போகிறான்; அப்பொழுது ஓநாய் ஆடுகளைப்பீறி, அவைகளைச் சிதறடிக்கும்'' (யோவா.10:11,12). அவர் தன்னை ஒரு நல்ல மேய்ப்பன் என்று சொல்லுவதற்கு பல காரணங்கள் இருக்கிறது. அவைகளில் சில: தேவன் அநேக மேய்ப்பர்களை அனுப்பிக்கொண்டிருந்தும் அவர்கள் தேவனுடைய சித்தத்தை அறியாமல் மந்தையை சிதறடிக்கும் மேய்ப்பர்களாக போய்விட்டார்கள். இன்னும் சிலர் மந்தையை சாப்பிடும் ஓநாய்களாக போய்விட்டார்கள்.

இவரோ, தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிறவராகவும் மந்தைக்காக தமது ஜீவனையே கொடுக்கிறவராகவும் வெளிப்பட்டார். அந்தப்படியாக மந்தைக்காக தமது ஜீவனையே கொடுத்து மந்தையை இரட்சித்தார் என காண்கிறோம். ஏசாயா தீர்க்கதரிசனத்தில் சொல்லப்பட்டபடியாக தமது மந்தையை மேய்த்தார். ''மேய்ப்பனைப்

போலத் தமது மந்தையை மேய்ப்பார்; ஆட்டுக்குட்டிகளைத் தமது புயத்தினால் சேர்த்து, தமது மடியிலே சுமந்து, கறவலாடுகளை மேதுவாய் நடத்துவார்'' (ஏசா.40:11). இந்த தீர்க்கதரிசன வசனங்களின்படியாக இயேசுவானவர் தம்மிடம் வந்தவர்களை நேசித்து அவர்களுக்கு ஒரு நல்ல மேய்ப்பராக இருந்தார். இன்றைக்கு இருக்கிற ஒவ்வொரு மேய்ப்பனும் பிரதான மேய்ப்பராகிய இயேசுவையும் அவருடை வழிநடத்துதலையும் கவனித்து மந்தைக்கு மாதிரிகளாக இருக்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

மேலும்; ''கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்; இதோ, நான் நானே என் ஆடுகளை விசாரித்து, அவைகளைத் தேடிப்பார்ப்பேன். ஒரு மேய்ப்பன் சிதறுண்ட தன் ஆடுகளின் நடுவே இருக்கிற நாளில் தன் மந்தையைத் தேடிக்கொண்டிருக்கிறதுபோல, நான் என் ஆடுகளைத்தேடி, மப்பும் மந்தாரமுமான நாளிலே அவைகள் சிதறுண்டுபோன எல்லா இடங்களிலுமிருந்து அவைகளைத் தப்பிவரப்பண்ணி, அவைகளை ஜனங்களிடத்திலிருந்து புறப்படவும் தேசங்களிலிருந்து சேரவும்பண்ணி, அவைகளுடைய சுயதேசத்திலே அவைகளைக் கொண்டுவந்து, இஸ்ரவேல் மலைகளின்மேலும் ஆறுகள் அண்டையிலும் தேசத்தின் சகல வாசஸ்தலங்களிலும் அவைகளை மேய்ப்பேன். அவைகள் நல்ல மேய்ச்சலிலே மேய்ப்பேன்; இஸ்ரவேலுடைய உயர்ந்த மலைகளில் அவைகளுடைய தொழுவம் இருக்கும்; அங்கே அவைகள் நல்ல தொழுவத்தில் படுத்துக்கொள்ளும், இஸ்ரவேலின் மலைகளின்மேல் நல்ல மேய்ச்சலை மேயும். என் ஆடுகளை நான் மேய்த்து, அவைகளை நான் மடக்குவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்'' (எசே.34:11-15).

மந்தையை தெரிந்துகொண்ட கர்த்தர் அந்த மந்தையை மேய்க்கவும் அறிந்திருக்கிறார். அவருடைய ஆடுகள் எந்த திசையில் இருந்தாலும் அவருடைய சத்தத்திற்கு செவி கொடுக்கும் அந்த ஆடுகளை அவர் பெயர்சொல்லி அழைக்கிறார். அவருடைய சத்தத்திற்கு அவைகள் செவி கொடுக்கும். அவைகளை நன்கு போஷிக்க அவர் அறிந்திருக்கிறார். அந்தப்படியாக இயேசுவானவர் சொல்லும்போது என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால் அவன் இரட்சிக்கப்படுவான் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக்கண்டடைவான் என்று சொன்ன வசனத்தின்



படியாக அவர்கள் சிறப்பாக வழிநடத்தப்படுவார்கள். நீங்கள் அவருடைய மந்தையின் ஆடுகளாயிருக்கிறீர்களா? அப்படியானால் சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும். நீங்கள் தேசத்தின் எந்த பகுதியில் இருந்தாலும் அவருடைய ஆடுகளாக இருக்கிறீர்கள். கர்த்தர் உங்கள் மேய்ப்பராயிருக்கிறார். ஆகையால் கவலைப் படாதிருங்கள். பிரதான மேய்ப்பர் இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது நீங்கள் அவரோடுகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு நித்திய நித்தியமாக நித்தியமானவரோடு என்றென்றுமாக நிலைத்திருப்பீர்கள்.

இச்செய்தியை வாசித்துக் கேட்டுக்கொண்டிருக்கும் அன்பு வாசகரே, மேய்ப்பர்களே, தேவனுடைய மந்தையின் ஆடுகளே நீங்கள் கர்த்தருடைய சத்தத்தை கேட்டீர்கள். கர்த்தர் தம்முடைய மந்தையை நேசிக்கிறார். அவர் தம்முடைய ஆடுகளுக்காக தமது ஜீவனையே கொடுத்திருக்கிறார். அவருடைய மந்தையின் ஆடுகளாகிய நீங்கள் பாக்கியவான்கள். அவருடைய ஆடுகளை மேய்க்கிற மேய்ப்பர்களாகிய நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.

நலமான வேலையை தெரிந்துகொண்டீர்கள். மந்தையை மேய்ப்பதற்கு உரிய கூலியை அவர் உங்களுக்குக் கொடுக்க அறிந்திருக்கிறார். ஆகையால் சோர்ந்துபோகாமல் மந்தையை மேய்த்து பிரதான ஆசாரியரும் மேய்ப்பருமாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவானவர் வெளிப்படும்வரை மந்தைக்கு மாதிரியாக இருந்து செயல்படுங்கள்.

**கேள்வி நேரம்**

**ஆடுகளின் நிலைமையை ஒரு மேய்ப்பன் அறிந்துகொள்ள வேண்டியது அவசியமா?**

ஆம், மிகவும் அவசியம். சிலர் இது அவசியமில்லையென்று நினைக்கலாம். ஆனால் வேதாகமம் அதை வலியுறுத்துகிறது. ''உன் ஆடுகளின் நிலைமையை நன்றாய் அறிந்துகொள்; உன் மந்தைகளின்மேல் கவனமாயிரு'' என்று (நீதி.27:23). மந்தை மேய்க்கிறவர்களுக்கு ஆடுகளைப் பற்றி அதாவது சபையின் விசுவாசிகளைப் பற்றித்தெரியும். இருந்தபோதும் உன் ஆடுகளின் நிலைமையை நன்றாய் அறிந்துகொள். பவுல் சபையில் இருக்கும்

பிரச்சனைகளை அறிந்து பரிசுத்த ஆவியானவருடைய உதவியோடு அநேக புத்திமதிகளையும் எச்சரிப்புகளையும் சொல்லி எழுதுவதை அநேக நிருபங்களில் காண்கிறோம். அவர் சபைகளை சந்திக்கும்போது அறிந்துகொண்டார். அதைப்போல ஒவ்வொரு மேய்ப்பனும் விசுவாசிகளின் சூழ்நிலைகளை அறிந்து போதிக்கவேண்டிய வனாயிருக்கிறான். ஏதோ வேதாகமக் கல்லூரியில் படித்ததை அப்படியே கொட்டி தீர்த்துவிடக்கூடாது. ஆகையால் மந்தையின்மேல் கவனமாயிருந்து செயல்படுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 52. உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செவ்வைப்படுத்துங்கள்
## Straight Paths for Your Feet

**மு**தலாவது ஒரு மனிதனுடைய வழி செவ்வையாய்யிருக்க அவன் செய்யவேண்டுவதென்ன? வேதம் போதிக்கிறது; "நெகிழ்ந்த கைகளையும் தளர்ந்த முபங்கால்களையும் நீங்கள் திரும்ப நிமிர்த்தி, மூடமாயிருக்கிறது பிசகிப்போகாமல் சொஸ்தமாகும்படிக்கு, உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செவ்வைப்படுத்துங்கள்" (எபி.12:12,13). நெகிழ்ந்த கைகளால் ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் அவைகளை திரும்ப நிமிர்த்தி மறுபடியும் பழைய நிலைமைக்கு கொண்டுவரும்போது மீண்டும் நாம் அதே வேலைகளை செய்யலாம்.

நெகிழ்ந்த கைகள் ஏற்படுவதற்கான காரணம் சோர்வு. சோர்வு வரும்போது நாம் தேவனிடம் பெலனை கேட்டு பெற்றுக்கொள்ளலாம். நெகேமியாவின் காலத்தில் சன்பல்லாத்து, தொபியா போன்றோர் அவர்களைப் பார்த்து ஏளனம் செய்தார்கள். நடந்தது என்ன? "என் தேவனுடைய கரம் என்மேல் நன்மையாக இருக்கிறதையும், ராஜா என்னோடே சொன்ன வார்த்தைகளையும் அவர்களுக்கு அறிவித்தேன், அப்பொழுது அவர்கள்; எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி, அந்த நல்ல வேலைக்குத் தங்கள் கைகளைத் திடப்படுத்தினார்கள்" (நெகே.2:18).

சோர்ந்துபோன வேளையில் நெகேமியாவின் வார்த்தைக்கு ஒருமனப்பட்டவர்களாக வாருங்கள் எழுந்து கட்டுவோம் என்று சொல்லி இஸ்ரவேலர் தங்கள் கைகளைத் திடப்படுத்தினார்கள். அது மட்டும்



அவர்கள் சோர்ந்துபோனவர்களாகவும், நம்மால் ஒன்றும் செய்ய முடியாது என்றும் நெகிழ்ந்த கைகளோடு இருந்தார்கள். உற்சாகமான நெகேமியாவின் வார்த்தைகள் அவர்களுடைய கைகளை திரும்ப நிமிர்த்தியது.

இஸ்ரவேலர் சோர்ந்துபோன வேளையில்; "நாங்கள் எகிப்திலே இருக்கும்போது, நாங்கள் எகிப்தியருக்கு வேலை செய்ய எங்களைச் சும்மா விட்டுவிடும் என்று சோன்னோம் அல்லவா? நாங்கள் வானாந்திரத்திலே சாகிறதைப்பார்க்கிலும் எகிப்தியருக்கு வேலை செய்கிறது எங்களுக்கு நலமாயிருக்குமே என்றார்கள். அப்பொழுது மோசே ஜனங்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நீங்கள் நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள்" (யாத்.14:12,13).

இன்றைக்கும் அநேகர் சொல்லும் வார்த்தைகள் இப்படித் தானிருக்கிறது. பழைய நிலைமையை எண்ணிப்பார்த்து அப்போது நாங்கள் நலமாகத்தானிருந்தோம். இப்போழுதோ இவ்விதமாக கஷ்டப்படுகிறோம் என்பார்கள். உண்மை என்னவென்றால்; முன்னே இருந்ததைக்காட்டிலும் சிறப்பாக இருப்பார்கள் ஆனால் அதை மறந்துவிட்டு பழை வாழ்க்கையே சிறப்பு என்பார்கள். தேவன் நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையில் எத்தனையோ காரியங்களை செய்கிறார். இஸ்ரவேலுக்கும் அதைச் செய்தார். அவர்கள் சோர்ந்துபோய் எங்களை சும்மா விட்டுவிடுங்கள் என்று எகிப்திலே சொன்னோம் அல்லவா? என்றார்கள் ஆனால் அப்பொழுது நடந்தது என்ன? அவர்கள் கண்களாலே எகிப்தின் ராணுவம் கடலில் முழ்கடிக்கப்பட்டதை கண்டார்கள்.

இன்றைக்கு நீங்கள் காண்கிற இந்த எகிப்திரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள் என்ற வார்த்தையின்படியே எகிப்தியருக்கு சம்பவித்தது. அன்பானர்களே, நீங்கள் உங்களுடைய நெகிழ்ந்த கைகளை முதலாவது திரும்ப நிமிர்த்துங்கள். ஐயோ அது ஒடிந்துவிடுமே என்று நினைக்காதிருங்கள். அதை கர்த்தர் பெலப்படுத்த அறிந்திருக்கிறார்.

**இரண்டாவது** தளர்ந்த முழங்கால்களையும் அவ்விதமாக திரும்ப நிமிர்த்த போதிக்கப்படுகிறோம். கைகள் நெகிழ்ந்துவிடுவதுபோல

கால்களும் தளர்ந்துபோகிறது. வெகுதூரம் நடப்பவர்கள் இந்த கஷ்டத்தை அறிவார்கள். அவர்களுடைய கால்கள் தளர்ந்துபோகும். நாம் அநேக வேளைகளில் உழைத்து, உழைத்து கால்கள் தளர்ந்தவர்களாக இனி என்னால் ஒரு அடிகூட எடுத்து வைக்கமுடியாது என்று சொல்லுவோம். ஆனால் கர்த்தருடைய வார்த்தை திரும்ப அதை நிமிர்த்துங்கள் என்று சொல்லுகிறது. எனக்கு ஒரு சகோதரனைத் தெரியும் அவருடைய வாழ்க்கையில் கஷ்டகாலம் துவங்கியது. அப்பொழுது தன்னுடைய சொந்த வாகனத்தை எடுத்துக்கொண்டு கடைகளுக்கு சரக்குப்போடும் படியான ஒரு வேலையை பெற்று தினமும் அந்த வேலையை செய்து கொண்டு வந்தார். அவர் தினமும் தானே வண்டியை ஓட்டிக்கொண்டு ஒவ்வொரு கடைகளிலும் சரக்குகளை அவரே எடுத்து தூக்கி ஒப்படைப்பார். இப்படி தினமும் பல மாதங்கள் செய்தார். இதனால் அவருடைய காலின் முழங்கள் எழும்பு தேய ஆரம்பித்தது. சிலவேளைகளில் முழங்கால் பந்துகின்ன மூட்டு அப்படியே விலகி வந்து விடுமாம் இதை அவர் சொல்லும்போது எங்களுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. இருந்தபோதும் அந்த மூட்டு விலகினாலும் அதை அவர் திரும்ப எடுத்து சரியான நிலையில் வைத்துக்கொண்டு வண்டியை ஓட்டிக்கொண்டு அந்தவேலையை தொடர்ந்தார்.

எதற்காக கிறிஸ்தவ ஒட்டத்தில் பொறுமையுடன் வரக்கூடிய கஷ்டங்களை பொருட்படுத்தாது இருக்குவேண்டுமென்பதற்காக. அன்பானவர்களே, ஏசாய சொல்லுகிறார்; ‘‘தளர்ந்த கைகளைத் திடப்படுத்தி, தள்ளாடுகிற முழங்காலகளைப் பலப்படுத்துங்கள். மனம் பதறுகிறவர்களைப் பார்த்து; நீங்கள் பயப்படாதிருங்கள், திடன்கொள்ளுங்கள்; இதோ, உங்கள் தேவன் நீதியைச் சரிக்கட்டவும், உங்கள் தேவன் பதிலளிக்கவும் வருவார்; அவர் வந்து உங்களை இரட்சிப்பார் என்று சொல்லுங்கள்’’ (ஏசா.35:3,4). இந்த வசனங்கள் இஸ்ரவேலைப் பெலப்படுத்தினது. அதைபோல தளர்ந்துபோன உங்களுடைய முழங்கால்களை பெலப்படுத்தும் என்று நான் நம்புகிறேன். மேலும் நாம் சோர்ந்துபோகாதிருக்க திருமறையானது; ‘‘நீ காலாட்களோடே ஓடம்போதே உன்னை இளைக்கப்பண்ணினார் களானால், குதிரைகளோடே எப்படிச் சேர்ந்து ஓடவாய்? சமாதானமுன்ன தேசத்திலேயே நீ அடைக்கலம் தேடினால், யோர்தான் பிரவாகித்து



வரும்போது நீ என்னசெய்வாய்?’’ (எரே.12:5). நாம் யாவரும் சிந்திக்கவேண்டிய ஒரு வசனமாக இது இருக்கிறது. இப்பொழுது இருக்கிற நாட்களில் சமாதானத்தோடு வாழ்கிறோம். ஆனால் நாம் அடைக்கலம் தேடிக்கொண்டிருக்கிறோம். சின்ன சின்ன காரியங்களுக்குக்கூட ஐயோ என்னால் முடியவில்லை என்கிறோம். ஒருவேளை இன்னும் பெரிய பெரிய காரியங்கள் கஷ்டமான சூழ்நிலைகள் உண்டானால் என்னசொல்லுவோம் என்பதை சிந்தித்துப்பாருங்கள். தேவன் நமக்கு தொடந்து பயிர்ச்சி கொடுத்து வருகிறார். நாம் இப்பொழுது காலாட்களோடு சேர்ந்து ஓடிக்கொண்டிருக்கிறோம் என்பதை மறந்துபோகாதிருங்கள். குதிரைகளோடு சேர்ந்து ஓடும் காலம் நமக்கு வரப்போகிறது. எப்படி குதிரைகளோடு சேர்ந்து ஓடமுடியும் என்று சொல்லாதிருங்கள்.

எத்தியோப்பிய மந்திரி ரதத்திலே போய்க்கொண்டிருக்கும்போது பிலிப்புவைப் பார்த்து கர்த்தர் அந்த ரதத்துடனே சேர்ந்துகொள் என்று சொல்லி அவனை அனுப்புகிறார். அவன் அந்த ரதத்தை ஓடிப்பிடித்திருக்கவேண்டும். அவனுக்கு இருந்த பெலன் எத்தனை அதிகமானது என்று எண்ணிப்பாருங்கள். அந்தவிதமான பெலத்தை கர்த்தர் கொடுக்கும்படியாக தளர்ந்துபோன உங்களுடைய முழங்கால்களை நிமிர்த்துங்கள்.

**மூன்றாவது:** முடமாயிருக்கிறது பிசகிப்போகாமல் என வாசிக்கிறோம். ஏற்கனவே முடமாயிருக்கிறது அதை எப்படி பிசகிப்போகமல் பாதுகாப்பது என்ற கேள்வி உங்களில் எழும்பும் ‘‘கர்த்தராகிய தேவனுடைய ஆவியானர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும், கர்த்தருடைய அநுக்கிரகவருஷத்தையும், நம்முடைய தேவன் நீதியைச் சரிக்கட்டும் நாளையும் கூறவும், துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்யவும், சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்படுத்தவும், அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும் துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும், அவர் என்னை அனுப்பினார்; அவர்கள் கர்த்தர்

தம்முடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்க ளென்னப்படுவார்கள்'' (ஏசா.61:1-3). இந்த பகுதியை ஆண்டவர் இயேசு ஜெபஆலயத்தில் வாசித்தார். இவ்வசனங்கள் அன்றை தினம் நிறைவேறியது. ஏனெனில், இந்த பகுதி அவரைப்பற்றியது. முடமாயிருக்கிறது பிசகிப்போகாமல் காயங்கட்டும்படியாக கர்த்தர் வந்தார். புதிய ஏற்பாட்டில் முதல் நான்கு புத்தகங்களில் அவருடைய ஊழியத்தைப் பற்றியும் அவருடைய அற்புதமான செய்கைளையும் வாசிக்கிறோம்.

அதைத் தொடர்ந்து அப்போஸ்தலர்களும் இந்தவிதமான ஊழியங்களை செய்தார்கள். தேவாலயத்தில் ஒரு சப்பானி பிச்சை கேட்டுக்கொண்டிருந்தான் அவனை பேதுரு யோவானும் உற்றுப்பார்த்து ''வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை; என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்; நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று சொல்லி; அவனைத் தூக்கி விட்டார்கள்'' (அப்.3:6) அவன் குதித்தெழுந்து நடந்து தேவனை துதித்துக்கொண்டே தேவலாயத்திற்கு சென்றான். சரீரத்தில் முடமாயிருக்கிறவர்களும் நன்மை பெற்றார்கள், ஆவியில் முடமாயிருக் கிறவர்களும் நன்மை பெற்றார்கள். அவைகள் பிசகிப்போகாமல் சரிசெய்யவேண்டியது ஊழியக்காரர்களுடைய வேலையாயிருக்கிறது.

நான்காவது உங்கள் பாதைகளை செவ்வைப்படுத்துங்கள் என்கிறார் எபிரெய ஆசான். அநேகருடைய பாதைகள் தாறுமாறாக இருக்கிறது. அவர்களுடைய வழி அவர்களுக்கே பிடிக்கவில்லை இருந்தபோதும் அந்த வழியாகவே போய்க்கொண்டிருக்கிறார்கள். ''இயேசு சொல்கிறார்: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்'' என்றார் (யோவா.14:6). இந்த உலகத்தில் ஒரே வழி இயேசுவானவரே வழியாக இருக்கிறார். எத்தனையோ மகான்கள் தோன்றினாலும் அவர்களுடைய பிறப்பு மனிதனுடைய வம்சாவழியை சார்ந்ததாக இருக்கிறது மேலும் அவர்களுடைய கல்லறைகள் இப்பூமியில் இருக்கிறது. இவைகளுக்கு எல்லாம் அப்பாற்பட்டவர் நம்முடைய ஆண்டவராகிய இயேசு. அவருடைய பிறப்பு கன்னியின் வயிற்றில். வானத்திலிருந்து வந்தவர். வம்சாவழியில் வரவில்லை, ஆனால் யூதா கோத்திரத்தை தன்னுடைய



பிறப்பிற்காக தெரிந்துகொண்டார். அவருடைய கல்லறை பூமியில் திறந்திருக்கிறது. ஏனெனில் அவர் வானத்திலிருந்து வந்தார் வானத்துக்கே எடுத்துக்கொள்ளப்பட்டார். அவர் ஒருவரே வழியாகவும் ஜீவனாகவும் இருக்கிறார்.

ஏசாயா தீர்க்கன் சொல்லுகிறார்; ''அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும்; அது பரிசுத்த வழி என்னப்படும்; தீட்டுள்ளவன் அதிலே நடந்துவருவதில்லை; அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசைகெட்டுப் போவதில்லை. அங்கே சிங்கம் இருப்பதில்லை; துஷ்டமிருகம் அங்கே போவதுமில்லை, அங்கே காணப்படவுமாட்டாது; மீட்கப்பட்டவர்கள் அதில் நடப்பார்கள். கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக்களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேலிருக்கும்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்'' (ஏசா.35:8-10). நீங்கள் கர்த்தரால் மீட்கப்பட்டவர் களாயிருப்பீர்களானால் கர்த்தருடைய வழியிலே தொடர்ந்து நிலைத்திருங்கள்.

## கேள்வி நேரம்

**நீதிமானுடைய பாதை எப்படியிருக்கிறது?**

''நீதிமானுடைய பாதை செம்மையாயிருக்கிறது; மகா நீதிபரராகிய நீர் நீதிமானுடைய பாதையைச் செம்மைப்படுத்துகிறீர்'' என ஏசாயா தீர்க்கன் குறிப்பிடுகிறார் (ஏசா.26:7). நீதிமான் தேவனுடைய வழியை தெரிந்துகொண்டவன். ஆகையால் அவனுடைய வழி செம்மையாக இருக்கிறது. பாவத்தை தண்ணீரைப்போல பருகுகிறவனுடைய வழிகள் பொல்லாத வழிகளாகவும் மரணத்தை நோக்கிப்போகும் வழியாகவும் இருக்கிறது. அவன் தண்டனைக்கு தப்பான். மகா நீதிபரராகிய தேவன், நீதிமான் தவறான வழி சென்றாலும் அவனுக்கு தம்முடைய வார்த்தைகளைக்கொண்டு போதித்து, புத்திமதிகளை கொடுத்து அவனை செம்மைப்படுத்துகிறார். அவன் சரியான பாதைக்கு திருப்பப்படுகிறான். நீங்கள் ஒரு நீதிமானா? உங்களை கர்த்தருக்கு ஒப்புக்கொடுங்கள். ஜெபிக்கிறோம்.